கீத்.:பீலிங்

இங்கிலாந்து வரலாறு

மூன்றும் பாகம்

தமிழாக்கம் N. J. இராஜகோபால்

TNSDA
04365

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு-அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—102

இங்கிலாந்து வரலாறு—III

(ஆங்கிலேயர் வருகையிலிருந்து 1918 வரை
நான்கு பாகங்களில்)

(A HISTORY OF ENGLAND—III)

(From the coming of the English to 1918—In Four Parts)

ஆசிரியர்
சர் கீத் ஃபீலிங்

தமிழாக்கம்
என். ஜே. இராஜகோபால், எம்.ஏ.,
வரலாற்றுசிரியர், அரசினர் கலைக் கல்லூரி
கோவை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு — அரசாங்கம்

First Edition—March, 1966.

B.T.P. No. 102

© Bureau of Tamil Publications

A HISTORY OF ENGLAND—III

Sir Keith Feiling

Translation

N. J. RAJAGOPAL

Price Rs. 8–00

This book 'A History of England' by Keith Feiling is copyright in all countries which are signatories to the Berne Convention.

This translation of 1959 edition 'A History of England' by Keith Feiling is published by arrangement with Sir Keith Feiling.

Printed by

Elangovan Printers,

23, Muthu Mudali Street,

Royapettah, Madras-14.

அணிந்துரை

(திரு எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்கள் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகின்றது.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'இங்கிலாந்து வரலாறு–III'** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 102ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 137 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

பொருளடக்கம்

பக்கம்

மடல் VI

தொழிலும் பேரரசும்
1760–1852

1. புதுயுகத்தின் பணித்திட்டம் 1
2. மூன்றும் ஜார்ஜின் ஆட்சி, 1763–1782 33
3. புத்தாக்கம், 1782–1792 73
4. புரட்சியும் போரும், 1792–1801 111
5. நாட்டின் வாழ்வுப் போராட்டம், 1801–1815 ... 151
6. அரசியல் அமைப்பு, 1815 201
7. மக்களுடைய நிலை, 1815 214
8. லிவர்பூல் அரசாங்கம், 1815–1825 232
9. கேனிங், விடுதலை, சீர்திருத்தம், 1825–1832 ... 249
10. விக்குகளும் உரிமை சாசனவாதிகளும், 1832–1841 ... 279
11. பேரரசியும், சர் ராபர்ட் பீலும், 1837–1850 ... 305
12. பிரிட்டனும் ஐரோப்பாவும், 1827–1852 330
13. புதிய பேரரசு, 1815–1852 344
14. அயர்லாந்து, 1815–1848 385
15. சிந்தனையும் சமயமும், 1830–1860 396

கலைச் சொல்லகராதி

ஆங்கிலம்–தமிழ் 408

தமிழ்–ஆங்கிலம் 411

பொருட்குறிப்பு அகராதி 414

படங்கள்

1. இந்தியா, 1765–1857 (வண்ணப்படம்) 96
2. கனடா, 1791–1914 355

மடல் VI

தொழிலும் பேரரசும்
1760–1852

1. புதுயுகத்தின் பணித்திட்டம்
(Framework of a New Age)

பழைய திட்டம் தடுமாறியது; மேன்மேலும் கடல் கடந்த புதிய நாடுகளைப் பெற்றபோதும், உள்நாட்டில் பொருளாதார நெருக்கடி தோன்றியபோதும் அப் பழைய அமைப்பு ஆட்டங் கண்டது. சமயச் சீர்திருத்த இயக்கச் சூருவளி தோன்றிய போதும், இரு புரட்சிகள் எழுந்த காலத்தும் வீழாது பணியாற்றிய அவ் அமைப்புகளில் பலர் நம்பிக்கை இழந்தனர். அரசியல் கட்சிகளில் ஒரு பொருளற்ற தன்மை காணப்பட்டது. சமயக் கருத்துகளில் தரக்கேடு தோன்றியது. அமைதியும் மகிழ்ச்சியான வாழ்க்கையும் தவிர மற்றவற்றில் பயனேதும் உளதா என்ற ஐயப்பாடு தோன்றியது. மேலும், கடல் கடந்த வாணிபத்தின் பயனைப் புதிய வரம்பினைத் தொட்ட பொருள் வளம், பழைய பண்ணையாளர், கிராமங்கள், அங்காடி நகரங்கள் ஆகியவை தேய்ந்து மறையுமாறு செய்தது. சுருங்கக் கூறுமிடத்து இங்கிலாந்து வலிமைமிக்க நாடாக வளர வேண்டுமானால் புரட்சி தோன்றவேண்டும். புதிய அரசாங்கம், புதிய சமயம், புதிய சமுதாயமுறைகள் வளர்ந்தாகவேண்டும். அத்தகைய புரட்சி அமைதியான சீர்திருத்த வழியிலோ, தலைதடுமாற்றத்திலோ வருவதும், இழப்பீடு இன்றி உரிய காலத்தில் மரபு உரிமையாக வருவனவற்றை ஒப்படைக்கும் முறையில் அமைவதோ ஆண்டவன் செயல்; அல்லது நிகழ்ச்சிகளின் போக்கைப் பொறுத்ததாக இருக்கும். நீண்டிருந்த மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில் தேவையான மாறுதல்களில் ஒரு

பகுதியாவது நடைபெற்றிருப்பின், அதற்குரிய அடையாளம் 1788-க்கு முன்னரே காணப்பெற்றிருக்கும். அரசாங்கத்தில் 1788-க்குப் பிறகு அரசியலில் அவருடைய பிடி தளர்ந்துவிட்டது.

பாராளுமன்ற முடியாட்சியானது, தொழிற் புரட்சியின் விளைவுகளால் தோன்றிய நடுத்தர வகுப்பாரின் முதலுரிமை ஆட்சியாக மாறியது. வெளிப்படையான ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது, ஜார்ஜ் மன்னர்கள் காலத்திய இங்கிலாந்து செல்வம் கொழித்த நாடாக இருந்தது. அது பிளென்ஹீமில் (Blenheim) எழுந்த வான்புரூவின் அரண்மனைகள், ஹோவார்டு காப்பரண், அரண்மனை போன்ற எண்ணிறந்த மாளிகைகள் தோன்றிய காலம். மாளிகைகள் சிப்பண்டேல் (Chippendale), ஆடம்ஸ் (Adams) ஆகியவரின் கைவண்ணத்தால் அணி செய்யப்பெற்று இருந்தன. ஆளும் வர்க்கத்தினரின் மகிழ்ச்சிக்காக 'பாத்' (Bath) நகரத்தினை உட்டும் (Wood) அவரது மகனும் கட்டி முடித்தனர். பூங்காக்களும் கானகங்களும் மிகுதியாகத் தோன்றின. சலவைக் கல்லுக்காகவும் அழகிய படங்களுக்காகவும் இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளைத் துருவி ஆராய்ந்த பாக்ஸ், ஒரு முறை சூதாட்டத்தில் ஆயிரக் கணக்கில் இழக்கும் அவர்தம் மகன் சார்லஸ் போன்ற செல்வர்கள் வாழ்ந்திருந்தனர். செல்வருடைய நாட்டமெல்லாம் நிலம் வாங்குவதிலும், குதிரை வளர்ப்பதிலும், அரசியலிலும் இருந்தது. ரேனல்ட்ஸ் (Reynolds), கெயின்ஸ்பரோ (Gainsborough) போன்ற ஓவியர்களை அவர்கள் போற்றி ஆதரித்தார்கள். பகுத்தறிவை நம்பிய அவர்களுக்கு நவீனகால பாரிஸும், பழங்காலத்திய ரோமும்தாம் ஆன்மீகக் கேந்திரங்களாக விளங்கின. பல புதுப் பணக்காரர்களும், ஷிராப்ஷயரில் பாதிக்கும் மேலான பரோக்களை விலைக்கு வாங்கிய கிளைவ் போன்ற இந்திய நவாப்புகளும் பாண்ட்ஹில் (Fonthill) நகரத்தை அமைத்து, மூத்த பிட்டிற்குத் துணையாக நின்ற ஆல்டர்மேன் (Alderman) போன்ற மேற்கிந்திய நவாப்புகளும் வாழ்ந்து வந்தனர்.

எனினும், மூன்றாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வருவதற்கு முற்பட்ட அரைநூற்றாண்டில் நாட்டின் முன்னேற்றம் சீரானதாக இல்லாததுடன் மந்தமாகவும் இருந்தது. 1689-ல் 5½ மில்லியனாக இருந்த இங்கிலாந்தின் மக்கள்தொகை 1760-ல் 6¾ மில்லியன் அளவிற்குதான் உயர்ந்தது. 1700ஆம் ஆண்டில் 6,75,000 ஆக இருந்த லண்டன் மக்கள்தொகை அடுத்த தலைமுறையிலும் மாறாமல் இருந்தது. கிளாஸ்கோ நகரமோ 30,000

வரம்பைக் கடக்கவில்லை. துறைமுகங்களில் கப்பல்கள் 8,00,000 டன்னுக்குமேல் ஏற்றிச் செல்லவில்லை. 1700 முதல் 1770 வரையில் ஏற்றுமதிகளின் மதிப்பு ஏறக்குறைய இரண்டு மடங்காகியது. என்றாலும் இறுதியாக இருந்த ஏற்றுமதிகளின் மதிப்பு 15 மில்லியன் பவுனுகத்தான் இருந்தது. அதே சமயத்தில் வியாபாரச் சட்டங்களினால் பிரிட்டனின் மூன்றில் ஒரு பகுதி வாணிபத்தைக் குடியேற்றநாடுகளோடு நடத்தவேண்டுமென்று வகுத்தனர். பிரெஞ்சுப் புரட்சிக்கு முற்பட்ட இறுதி ஆண்டாகிய 1789-ல் அரசாங்கத்தின் வருவாய் 15 மில்லியனுக இருந்த சிறிய அளவைக் கொண்டு பிரிட்டிஷ் நாட்டின் செல்வநிலையை அறியலாம்.

மக்களின் வாழ்க்கைமுறை பழைய நிலையில் இருந்ததுதான் இவ்வாறு முன்னேற்றம் குறைந்த அளவினதாக இருந்தமைக்குக் காரணமாகும். பழங்காலத்திய போக்குவரத்துச் சாதனங்கள் உள்நாட்டு வாணிபத்திற்குத் தடையாக இருந்தன. முக்கிய நெடுஞ்சாலைகளில் வழிச்சுங்கம் பெற்று அவைகளைப் பொறுப்பாளர்மூலமாகச் செம்மை செய்வதற்கு ஏற்பாடு செய்யப் பெற்று இருந்தது. எனினும், மற்றச் சாலைகள் பாரிஷ்களின் மேற்பார்வையில் விடப்பட்டிருந்தன. டியூடர் காலச் சட்டங்களின்படி கட்டாய சேவையின்மூலமாகப் பாரிஷ் மக்கள் சாலைகளைச் செப்பனிடவேண்டும் என்னும் வழக்காறு இருந்தது. அதனால் பல சாலைகள் வெறும் மண்பாதைகளாகவே இருந்தன. அவைகள் மாரிக்காலத்தில் வெள்ளக்காடாகவும் சதுப்பு நிலங்களாகவும் மாறி, வண்டிகளைத் தரை தட்டச் செய்தன. மேலும், கோச்சு வண்டிகளின் அச்சுகள் முறிந்தன. பல சமயங்களில் திருச்சபையில் அடிக்கும் மணிகளின் உதவியைக் கொண்டே ஜான் வெஸ்லி தம்முடைய பிரயாணங்களில் வழிதவறிவிடாமல் சென்றார். எனவே, தானியங்கள், நிலக்கரி ஆகியவை உள்ளிட்ட வாணிபத்தின் பெரும்பகுதி பொதிக் குதிரைகளைக் கொண்டு நடத்தப்பட்டது. வேகமான வண்டிகளும் மான்செஸ்டரிலிருந்து லண்டன் வந்து சேர மூன்று நாட்கள் ஆயின.

அரசாங்கம் காலத்திற் கொவ்வாததாக இருந்ததோடு, அதன் மையக் குவிமுக ஆட்சி பெரிதும் செயலற்ற நிலையில் இருந்தது. டியூடர், ஸ்டூவர்டுகளின் திட்டங்களை எதிர்த்த பாராளுமன்றம், இடைவெளியை நிரப்புவதற்கு ஒன்றும் செய்யவில்லை. லாக் (Locke) காலத்திற்குப் பிறகு வந்த விக்குகளின் அரசியல் எண்ணங்களும், முன்னிலை ஆட்சிக்குப் பிறகு வாழ்ந்த பெட்டி (Petty), தேவனண்ட் (Davenant) போன்ற பொருளாதார

மேதைகளும், காமன்ஸ் சபையிலிருந்த செல்வாக்குப்பெற்ற வியாபாரிகளும் தனிப்பட்டவர் சொத்து அடிப்படையில் உரிமை இருக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டனர்; அரசாங்கத்தின் தலையீட்டை அவர்கள் எதிர்த்தனர். காவற்படை, உடல்நலத் துறை, கல்வி ஆகியவற்றிற்காக அரசு ஒன்றும் செலவிடாத தோடு, ஒரு காலத்தில் ஆற்றிவந்த பணிகளையும் கைவிட்டது. எலிஸபெத் காலத்தில் இருந்த ஊதிய மதிப்பீடு செய்யும் பழக்கம், பட்டு நெசவு போன்ற ஒருசில தொழில்களைத் தவிரப் பிறவற்றில் கைவிடப்பெற்றது. வால்போலும், பெல்ஹாம்களும் இயற்றிய சட்டங்களினால், தொழிலாளர் தங்களுடைய ஊதி யத்தை உயர்த்தவேண்டிச் சங்கங்களில் சேருவது தடை செய்யப் பட்டது. பாரிஷைச் சார்ந்த பரம ஏழைச் சிறுவர்கள் தவிர மற்றையோருக்குத் தொழிற்பயிற்சி அளிக்க வேண்டுமென்பது வற்புறுத்தப்படவில்லை. விலைக் கட்டுப்பாட்டிற்காக இருந்த ரொட்டிச்சட்டம் (assize of bread) போன்ற பழங்காலச் சட்டங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின. ந் சதவீத வட்டி சட்டப்படியான உச்சவரம்பாக இருந்தாலும், நடைமுறையில் அதனைப் பெரும்பாலும் புறக்கணித்தே வந்தனர். இவைகளையெல்லாம் விஞ்சக்கூடிய வகையில் அமைதிகாண் நீதிபதிகளிடமும் நகரசபைகளிடமும் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

இத்தகைய தல ஆட்சிமுறை பிளான்டாஜினெட்டினரால் (Plantagenets) உருவாக்கப்பெற்று, டியூடர் காலத்திலேயே பொறுப்புகளின் சுமை தாங்க முடியாது தத்தளித்தது. அந் நிலையில் நவீனகாலச் சிக்கல்களைச் சமாளிக்கமுடியாமல் தடுமாறியது. திறந்த வயல்முறை இருந்த ஊர்களில் பொரு ளாதாரத்தைப் பயனற்ற மேனர் நீதிமன்றங்களே கட்டுப் படுத்தின. லண்டன் நகரைத் தவிர மற்ற இடங்களில் ஊதியம் பெற்ற காவலாளர் பணி புரியவில்லை. கவுன்டியின் அமைதிகாண் கணக்கர் (clerk of the peace), இரவலரின் மேற் பார்வையாளர் ஆகியோரைத் தவிர மற்றெந்த அதிகாரிகளும் இல்லை. என்றுமே பரந்த நோக்கமில்லாத ஸ்கொயர் என்னும் கனவான், ஊர்குரு, ஒருசில குடியானவர் ஆகியோர் அடங்கிய குழுவிடமே பாரிஷ் தல ஆட்சி ஒப்படைக்கப்பட்டு இருந்தது. டியூடர், ஸ்டூவர்டு கால உரிமைப் பத்திரங்களினால் பல பரோக் களில் தல ஆட்சி குறுகியதாக இருந்தது. அவைகளிலிருந்த நகராட்சிமன்ற உறுப்பினரும், மரபுரிமையால் வந்த தனியுரிமை நகர உறுப்பினர்களும் தங்களுடைய சொந்த நலனுக்காகக் கொள்ளையிடுவதில் நாட்டம் செலுத்திவந்தனர். ஒருசில

மாஜிஸ்டிரேட்டுகள், குறிப்பாக குருமார்கள் உண்மையிலேயே நல்லவர்களாக இருந்தனர் எனினும், அவர்கள் கள்ள வேட்டையாடுபவர்களிடமும் மெதாடிஸ்டுகளிடமும் (Methodists) கடுமையாக நடந்துகொண்டார்களேயன்றி, பொருளாதாரத் துறையில் புகுந்த மாற்றத்தைப் புரிந்துகொண்டார்களில்லை. லண்டன் நகர்ப்புறங்களில் சாராயக் கிடங்குகள், வீடுகள், இரவலர் ஆகியோரைக் கண்காணிக்க, கூலிக்காக உழைக்கும் கீழ்த்தரப் பணியாளரை அமர்த்திய வாணிப நீதிபதிகள் இழி பெயரெடுத்தனர். அவரைப் போன்ற வேறு சிலரும் மக்களால் வெறுக்கப்பட்டனர். சட்டத்தையும் அமைதியையும் காக்க வேண்டிய படையினரே நாட்டு மக்களின் பண்புக்கேட்டிற்குக் காரணமாயினர். படைவீரர் பாளையங்களைக் கிராமவெல்லைச் சார்ந்தவையென்றும், கொடுங்கோலாட்சியைச் சேர்ந்தவை என்றும் கருதியதால், படைவீரரைச் சாராய விடுதிகளில் தங்கு மாறு பணித்தல் பெரு வழக்காக இருந்தது. மிகக் குறைந்த ஊதியம் பெற்றும், கசையடிபட்டும், கொடுமைக்குள்ளான இப் படை வீரர்கள் தாங்கள் தங்கி இருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கத்தைக் கெடுத்தனர். அப்பாவிகள் நாவாய்ப் படையில் சேர வற்புறுத்தப்பட்டனர். தங்களுடைய பண்ணையாளருடன் ஆண்டுதோறும் உலவிவர கனவான்களுக்கு அனுமதி தந்த இரண்டாம் சார்லஸின் இராணுவச் சட்டம் ஒரு கேலிக்கூத்தாகும். 160 குற்றங்களுக்குமேல் மரணதண்டனை விதிக்கப் பெற்றது. அவைகளில் பல அண்மைக் காலத்தில் இணைக்கப் பெற்றவை. அதிலிருந்தே பணக்காரரின் பீதியும், ஏழைகளின் இழிநிலையும் எளிதில் புலப்படுகின்றன. அதே சமயத்தில் யூதர்களுக்கெதிராகவும், சுங்கச் சாவடித் தீர்வைகள், ரொட்டியினப் பதுக்கி வைத்தல் ஆகியவற்றிற்கெதிராகவும் ஓயாது நடைபெற்ற கலகங்களின் விளைவாக அமைதிக்குலைவு அதிகமாயிற்று. நாடு படைவீரரை நம்பியிருந்தது. ஆனால், நாட்டு மக்களோ, கள்ளக் கடத்தல்காரர்களையும், வழிப்பறிக் கொள்ளையிடுவோரையும் வீரர்களாக மதித்தனர்.

நம்முடைய பண்டைக்காலப் பொருளாதாரமுறை பெரும் பாலும் மாறுமலே இருந்தது எனலாம். 1700ஆம் ஆண்டு ஏற்று மதிப் பொருள்களில் பாதியளவு துணியாக இருந்தது. துணி வியாபாரிகளின் நலனைப் பாதுகாக்கவேண்டிக் கம்பள ஏற்றுமதி முழுதும் தடை செய்யப்பட்டது. அதே நோக்கத்துடன் இந்தியப் பட்டுகளும், கள்ளிக்கோட்டைத் துணியும் (calico) இறக்குமதி செய்வது மறைமுகமாகத் தடை செய்யப்பெற்றது. 1736ஆம் ஆண்டுவரையில் அச்சடித்த பினன் துணிகளும்,

கலப்புப் பருத்தி ஆடைகளும் நெய்வதற்கு மான்செஸ்டர் நகரத்திற்கு அனுமதியில்லை. பொருளாதார வல்லுநரின் வாதங்களும் வால்போலின் சலுகைகளும் வாணிபக் கட்டுப்பாட்டினை அழிக்க முடியவில்லை. உதாரணமாக, பிரான்சுடன் கொண்ட வாணிபத் தொடர்பு அற்றுவிட்டது என்றே சொல்லலாம். பாய்மரத்துணி போன்ற ஏற்றுமதிகளும், சில குடியேற்ற நாட்டு இறக்குமதிப் பொருள்களும் நன்கொடைகளினால் ஊக்கமடைந்தன. குறிப்பாகக் கப்பல்களுக்கு வேண்டிய தார் (tar), பாய்மரங்கள் போன்ற பொருள்கள் அரசின் நன்கொடையைப் பெற்றன. இது வரையில் தானியங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து போட்டியில்லை. அதற்கு மாறுகப் பிரிட்டன் பேரளவில் தானியங்களை ஏற்றுமதி செய்தது. எனினும், பயிர்த்தொழிலைப் பாதுகாப்பதற்காகச் சில சட்டங்களும் எழுந்தன. ஏற்றுமதியான ஒவ்வொரு குவார்ட்டர் தானியத்திற்கும் நன்கொடை வழங்கவேண்டுமென்று விதித்த 1689ஆம் ஆண்டுச் சட்டம், நீண்ட காலத்திற்கு விலைகளை ஒரு நிலையில் வைத்திருக்க உதவியது. 1764ஆம் ஆண்டோடு முடிவடைந்த ஐம்பது ஆண்டுகளில் கோதுமையின் சராசரி விலை 34 ஷில்லிங் 11 பென்சாகவே இருந்தது. ஆனால், பெருகி வரும் மக்கள் கூட்டத்திற்கு உணவளிக்க வேண்டியிருந்ததால் கோதுமையின் விலை 48 ஷில்லிங் மட்டத்தை எட்டியபோது, நார்த் பிரபு (Lord North) ஏற்றுமதி நன்கொடையை 1773-ல் ரத்து செய்தார். மேலும், பெயரளவிற்கு வரி விதித்துத் தானியங்களின் இறக்குமதியை அவர் அனுமதித்தார்.

இக்காலத்தில் தோன்றிய முன்னேற்றங்களையும், குறைபாடுகளையும் பயிர்த்தொழில் தெளிவாக வெளிப்படுத்தியது. நிலச் சொந்தக்காரர்கள் அரசியல் செல்வாக்கும் பொருள் வளமும் மிகுதியாகப் பெற்றிருந்தனர். ஸ்டூவர்டு காலத்தில் பிரபுக்களும் பண்ணையாளரும் ஒருமித்து செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஏற்பட்ட நில அடைப்புகள் தொடர்ந்து வந்தன. 1700ஆம் ஆண்டிற்குப் பிறகு நிறைவேறிய பல தனியார் சட்டங்களினால் அவை உறுதி செய்யப்பட்டன. இம் முறை எத்துணை வேகமாக வளர்ந்தது என்பதை 1702ஆம் ஆண்டிற்கும் 1760ஆம் ஆண்டிற்கும் இடையில் 280 ஆக இருந்த நில அடைப்பு சார்ந்த சட்டங்கள் அடுத்த 20 ஆண்டுகளில் நாலாயிரத்திற்கும் மேலாக அதிகரித்ததிலிருந்து தெளிவாகின்றது. பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பு 2 மில்லியன் ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டபோதிலும், அதனுடைய விரிவு படிப்படியாகத் திரண்டு வளர்கின்றதாக இருந்ததே தவிரப் புரட்சிகரமானதாக இல்லை. சில பகுதிகளில் குறிப்பாகப் பொது நிலங்களும் தரிசு நிலங்களும் நில அடைப்பு

முறையின்கீழ் வந்ததால், சிறு நிலச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை பெருகியது. ஆனால், சீர்தூக்கிப் பார்க்கும்போது திறந்த வயல்முறை நிறைந்த மத்தியப் பகுதியிலும், யார்க்ஷயரிலிருந்து டார்செட் (Dorset) வரையிலுமுள்ள நடு கீழ்ப் பகுதியிலும் அத்தகையோரின் எண்ணிக்கை குறைந்தது. சிலர் குத்தகைக்காரர்களாக மாறினர். சிலர் தொழில்களில் ஈடுபட்டனர். வேறு சிலர் நில அடைப்பு முறையின் செலவினைச் சமாளிக்கமுடியாமலும், முதலீடு செய்யப்பட்ட பயிர்த்தொழிலை மேற்கொள்ளமுடியாமலும் வெளியேறினர். நிலத்தின்மீது பணத்தைச் செலவு செய்வது இலாபகரமானதாக இருந்ததோடு நாகரிகமாகவும் கருதப்பட்டது. பெருகிய மக்கள் தொகையைப் போர், புரட்சி ஆகியவை தோன்றிய காலத்தில் காப்பதற்கு வேண்டிய உணவுப் பெருக்கத்தைக் கொண்டுவந்தவர்கள் பெரு நிலக்கிழார்களேயாவர்.

இத்தகைய முன்னேற்றங்கள் நவீனகாலப் பயிர்த் தொழிலுக்கு வித்திட்டன. டவுன்ஷண்ட், பெட்போர்டுகள் போன்ற செல்வர்கள் டர்னிப் (turnip) கிழங்கு, இலவங்கம், செயின்பாய்ன் (sain foin) எனும் கால்நடைகளுக்கான பயிர் ஆகியவற்றை மிகுதியாகப் பயிரிட்டனர். இது பயிர்களின் புதிய சுழற்சி ஒன்றைத் தோற்றுவித்தது. இடைக்காலத்தில் நிலத்தைப் பயிரிடாமல் தரிசாக விட்டதனால் ஏற்பட்ட சேதத்தைத் தவிர்த்து அதனோடு அவர்கள் மாரிக் காலத்தில் மாடுகளைக் கொல்லாமல் உயிருடன் வைத்திருந்து, அதனால் கிடைத்த எருவினைக் கொண்டு நிலத்தை வளமாக்கினர். லீசெஸ்டரைச் சார்ந்த பாக்வெல் (Bakewell) என்பவர் கம்பளத்திற்காகவும் தோலுக்காகவும் அன்றி, இறைச்சிக்காகவென்றே விஞ்ஞான முறைப்படி ஆடுமாடுகளைப் பேணி வளர்த்து வந்தார். பெர்க்ஷயரைச் சார்ந்தவரான ஜெத்ரோ டல் (Jethro Tull) நிலத்தில் முறையாக விதைத்துக் களையெடுப்பதற்கு வாய்ப்பாக இருந்த குதிரைக் கலப்பையும், விதை தூவுவதற்கான சிறு சாலைக் கண்டுபிடித்து, பயிர்த்தொழிலுக்கான இயந்திரங்கள் செய்வோருக்கு முன்னோடியாக விளங்கினர். பிரான்சில் காணப்பட்டதைப் போலவே இங்கிலாந்திலும் நிலமெனும் நல்லாள் வற்றுத வளத்திற்கும், வாழ்க்கை நலத்திற்கும் உற்றவள் எனும் தத்துவம் தலைகாட்டியது. பேராற்றல் படைத்த சீர்திருத்தக்காரரான ஆர்தர் யங் (Arthur Young) என்பவர் திறந்த நில முறையை ஆதரித்த 'கோத்கள், வெண்டால்கள்' (Goths and Vandals)

ஆகியோருக்கு எதிராக நில அடைப்பு முறையையும் பெரும் பண்ணைகளையும் புகழ்ந்து தொடர்ச்சியாக வெளியிட்ட குறிப்பு களில் முதல் குறிப்பினை 1768ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இப் புதிய பண்ணைமுறையின் கூட்டாளியாகத் தொழிற் புரட்சி தோன்றியது. பரந்த முறையில் பார்க்கும்பொழுது தொழிற்புரட்சி முன்னூறு ஆண்டுகளாக ஏற்பட்ட ஒன்று எனக் கூறலாம். ஆயின், இயந்திரங்கள், போக்குவரத்து, இயக்கும் சக்தி ஆகியவற்றின் வெற்றி, அப் புரட்சியின் தோற்றம் ஆகியவை 1760ஆம் ஆண்டு என்று கொள்ளத் தூண்டுகின்றது. நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து வந்த தொழிற்புரட்சியின் வேகம் சில சமயங்களில் விரைவாக இருந்தபோதிலும் பொதுவாக இது மெதுவாகவே தோன்றியது எனலாம். விக்டோரியா இராணி யாரின் ஆட்சிக்காலத்தின் இடையிலும் பழைய முறையும் புதிய முறையும் ஒருங்கிணைந்து இருப்பதைக் காணமுடியும். ஒரு குறிப் பிட்ட காலத்தில் சில போக்குகளில் வெற்றி கிடைத்தது என்பதைத்தான் நம்மால் கூறமுடியும். 1960ஆம் ஆண்டளவில் பல தொழில்களையும், ஏற்றுமதி வாணிபத்தின் பெரும்பகுதி யையும் முதலாளிகள் கைப்பற்றினர் என்றும், சிறு குழுக்களும் சிறு முதலாளிகளும் இருந்த இடத்தில் கம்பெனிகளும், வீடுகளில் உற்பத்தியும், ஊதியத்திற்கு வேலை செய்வோரும் பெருகினர் என்றும், புதிய தொழில்களினாலும், கண்டுபிடிப்புகளினாலும் ஏற்பட்ட மக்களின் இடப்பெயர்ச்சிபற்றியும் முன்னரே பார்த்தோம்.

நாம் எடுத்துக்கொண்ட இக் காலப்பகுதியில் இந்த இயக்கங்கள் மிக வேகமாக முன்னேறின. ஆனால், பழைய சமுதாய அமைப்பைக் கடந்து சென்றுள்தான் எல்லையற்ற விரிவு ஏற்படமுடியும் என்பது உறுதி. எலிசபெத் காலத்தவருக்கு மாறாக இப்போதிருந்த ஆங்கிலேயர் தங்கள் நாட்டின் மக்கள் தொகை மிகக் குறைவு என்றே நம்பினர். அதன் காரணமாக அவர்கள் கையாண்ட தாராளக் குடியேற்றக்கொள்கை பெரு நன்மைகளை அளித்தது. உதாரணமாகப் பதினான்காம் லூயியிட மிருந்து தப்பி வந்த 30,000 யூக்நோக்கள் பல வழிகளில் உதவினர். பிரான்சின் தீவிரப் போட்டி காரணமாகத் தோன்றிய புதிய கண்டுபிடிப்புகள், துணி ஆலைத் தொழிலையே மாற்றி அமைத்தன. 1718ஆம் ஆண்டில் நார்விக்கில் வாழ்ந்த லாம்பே (Lombe) சகோதரர்கள் பட்டு செய்யும் இயந்திரத்தை இத்தாலி யிலிருந்து கடனாகப் பெற்றனர். அதுவே பிற்காலத்தில் மாக்லஸ் பீல்டையும் (Macclesfield), டர்வென்ட் (Derwent) சமவெளியையும்

உருவாக்கியது. பருத்தி நெசவில் லங்காஷையரைச் சேர்ந்த ஜான் கே (John Kay) என்பவர் 1733ஆம் ஆண்டில் நெசவின் வேகத்தை இருமடங்காக்கிய, விரைந்து செல்லும்' தறி ஓடத்தைக் (fly-shuttle) கண்டுபிடித்தார். யூக்நோவாகிய பால் (Paul) சிக்குவாரி இயந்திரம் (carding machine) ஒன்றிற்கு உரிமை வாங்கினர். அதையே பீல் (Peel) என்பார் லங்காஷயரில் காலிகோ துணி நெய்வதற்குப் பயன்படுத்தினர். ஆனால், நெசவிற்கு வேண்டிய நூலை அளிப்பதற்காக நூற்புத் தொழிலில் முன்னேற்றம் கண்டால் ஒழிய நெசவுத் தொழிலில் முன்னேற முடியாது. பாலும் (Paul) பிறரும் கண்டுபிடித்தவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பிரஸ்டனைச் (Preston) சார்ந்த துணிகர ஆற்றல் படைத்த ஆர்க்ரைட் (Arkwright) என்பவர் 1769ஆம் ஆண்டில் தம்முடைய நீர்ச் சட்டத்தையும் (water-frame) சக்தியினால் இயங்கும் நூற்பு இயந்திரம் ஒன்றையும் கண்டுபிடித்தார். அடுத்த ஆண்டில் பிளாக்பர்னைச் சார்ந்த (Blackburn) ஹார்கிரேவ்ஸ் (Hargreaves) நூற்கும் பொறிக் கருவி ஒன்றிற்கு (spinning-jenny) உரிமைப்பத்திரம் பெற்றார். 1799ஆம் ஆண்டில் சாமுவல் கிராம்டன் (Samuel Crompton) என்பவர் ஆர்க்ரைட், ஹார்கிரேவ்ஸ் ஆகியோருடைய முறைகளை இணைத்து 'மியூல்' (mule) எனும் நூற்கும் பொறியைக் கண்டுபிடித்தார்.

ஆர்க்ரைட் (Arkwright) என்பவர் தமது நெசவுச் சட்டத்திற்குப் பெற்றிருந்த உரிமைப்பத்திரம் 1785ஆம் ஆண்டில் முடிவடைந்தது. அதனால் அவரது சட்டம் தாராளமாகப் பலராலும் பயன்படுத்தப்பட்டது. அதனைடு நீராவியால் இயங்கும் நூற்புப் பொறி முதன்முறையாக அமைக்கப்பெற்ற அக்காலம்தான் பருத்தி ஆலைத்தொழிலின் வரலாற்று எல்லையாக அமைகிறது. ஒவ்வொரு கண்டுபிடிப்பும் தொழில் நுணுக்கத் துறையில் முன்னேற்றம் காணுமாறு செய்தது. உதாரணமாக ஆர்க்ரைட்டின் சட்டத்தின்மூலமாக உறுதியான பாவுநூல் செய்ய முடிந்ததால் கலப்பற்ற பருத்தி ஆடைகள் நெய்யப்பட்டன. 1774ஆம் ஆண்டுச் சட்டத்தினால் முதன்முறையாக அவ்வாடைகள் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டன. கிராம்டனின் 'மியூல்' எனும் நூற்புப் பொறியினால் நேர்த்தியான நூல் நூற்கப்பட்டதால் மஸ்லின் (muslin) தொழில் தோன்றியது. இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்ததனால் விளைந்த சமுதாயப் பயன்களினால்தான் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. ஏனெனில், ஆர்க்ரைட்டின் பொறிகள் தொழிற்சாலைகளில் குவிந்தன. ஆனால், ஜென்னி (jenny) எனும் நூற்கும் பொறியும் 'மியூல்' என்னும் பொறியும் வீட்டுத் தொழிற் கருவிகளாகப் பயன்பட்டன. 1790ஆம் ஆண்டுவரையில்

நெசவுத் தொழிலின் பொறிகளை இயக்குவதற்குச் சக்தியினைப் பயன்படுத்துவதில் அதிக வெற்றி கிடைக்காததால், அத் தொழிலில் இயந்திரங்களும் மனிதர்களும் சமநிலையிலேயே பயன் படுத்தப்பட்டனர். சக்தியினால் இயங்கும் தறிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படும் நிலை தோன்றுவதற்கு முன்பிருந்த இவ் விடைக்காலமே லங்காஷயரின் முதல் பருத்தி யுகமாகும். அப் போது ஒவ்வொரு குடிசையிலும் ஜென்னி நூற்புக்கருவி இயங் கியது. ஊதிய தினத்தன்று நெசவாளர் ஐந்து பவுன்கள் பெற்றுச் சென்றனர். அவர்தம் மனைவியர் ஸ்ட்ராபோர்ட்ஷயர் பீங்கான் கோப்பைகளில் டீ அருந்தினர். ஆயிரக்கணக்கான குடியானவர் களின் முதல், பெருலாபமடைவதற்காக நகரங்களுக்குச் சென்றது.

பல புதிய கண்டுபிடிப்புகள் தோன்றுவதற்கு ஊக்கமளித்த பருத்தித்தொழில் தொழிற்புரட்சியின் முதல் கட்டமாகக் காட்சி யளித்தது. இத் தொழிலின் செய்முறை உள்நாட்டுப் போர் ஏற்படு முன்னரே டச்சு அகதிகளால் கொண்டுவரப்பட்டது என்றாலும், இது நீண்ட காலமாகப் போராடி வந்த தொழி லாகவே இருந்தது. துணி போலல்லாது இத் தொழிலின் மூலப்பொருளாகிய பதம் செய்யப்படாத பருத்தி லெவாண்ட், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய இடங்களிலிருந்து இறக்குமதி யாகவேண்டும். அதே சமயத்தில் லினன் நூலுக்காக ஹாம்பர்க்கையும் அயர்லாந்தையும் எதிர்பார்க்க வேண்டி யிருந்தது. இத் தொழிலுக்கு இந்திய ஆடைத்தொழிலில் இருந்து கடும் போட்டி தோன்றியது. ஆயின், ஆப்பிரிக்க நீக்ரோக்களுக்கும் அமெரிக்கத் தோட்டத் தொழிலாளருக்கும் ஏராளமான துணிகள் ஏற்றுமதியாயின. நாளடைவில் சாதாரணத் துணி நெய்தல் கைவிடப்பட்டது. அதற்குக் காரணம், அது விலை மலிவானது என்பதுதான். நெசவாளர் கிழக் கிந்தியப் பொருள்களிலிருந்து தூய நயமான ஆடைகள் நெய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். ஆன் இராணியார் இறப்பதற்கு முன்பே லங்காஷயர் நெசவாளர்கள் பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்தனர்; மேலும், பிறரிடமிருந்தும் பெற்றுப் பயனடைந்தனர். கருநிற மணித்துவாலைகள், காலிகோ துணிகள், அச்சடித்த லினன்கள், கட்டமிட்ட துணிகள், செயற்கை மென்பட்டு வகைகள், மஸ்லின் துணிகள் ஆகியவை நெய்யப் பெற்றன. எல்லா வகுப்பைச் சார்ந்த மக்களின் தேவைக்கேற்ற வகையில் முந்தானை முதல் மேலாடை வரையிலும், பாத் நகர மண்டப ஆடம்பர அலங்காரத் துணிகள் முதலான பல வகைத் துகில்கள் உற்பத்தியாயின. இத் தொழிலின் அமைப்பிலும் புது யுகத்தின் பொலிவு காணப்பட்டது. முதலிலிருந்தே

முதலாளித்துவ மேற்பார்வை தோன்றியது. குறுகிய நோக்கங் கொண்ட குழுக்கள் இருந்த இடத்தில், வீடுகளில் உற்பத்தி செய்வோர் பெருகினர். மேலும், தடையில்லாச் சூழ்நிலையில் இத் தொழில் வளர்ந்தது. மான்செஸ்டர் நகரம் சட்ட முறையாகச் சுதந்திரம் பெற்றதிலிருந்தும், இங்கிலாந்தின் நெசவுத் தொழிலுக்குப் பழைய போட்டியாக இருந்துவந்த இந்தியத் தொல்லைகளால் துவண்டதாலும், இத் தொழில் மிக வேகமாக முன்னேறியது. 1750ஆம் ஆண்டில் 3 மில்லியன் பவுனாக இருந்த இறக்குமதி 1791ஆம் ஆண்டளவில் 28 மில்லியன் பவுனாகப் பெருகியது. அதே காலப் பகுதியில் ஏற்றுமதியோ பத்து மடங்காகப் பெருகியது.

பருத்தி நெசவுத் தொழிலில் தோன்றிய புதிய கண்டுபிடிப்பு ஆர்வம் பிற தொழில்களையும், மற்றப் பகுதிகளையும் பாதித்தது. சட்டப்படி திறந்த ஊராக இருந்து, வந்த எல்லோரையும் வரவேற்ற பர்மிங்ஹாம் (Birmingham) தொழிற்பயிற்சியாளராலும் குடியேற்றச் சட்டத்தினாலும் எப்பொழுதுமே தொல்லைகளுக்காளானதில்லை. இரும்பு, நிலக்கரி ஆகியவை எளிதாகக் கிடைக்குமிடத்திற்கருகில் இருந்ததாலும், பொருள்களை வெளிக் கொண்டுசெல்ல வசதியாக செவர்ன் ஆறு இருந்ததாலும் இப் பகுதியில் குண்டூசி செய்தல் அல்லது பொத்தான்கள் செய்தல் ஆகிய உலோகத் தொழில்களில் உழைப்புப் பங்கீட்டினை அதனுடைய எல்லைக்கே கொண்டுசெல்ல உதவிய புதிய கண்டுபிடிப்புகள் தோன்றின. பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து மிட்லண்டில் கம்பளத் துணித் தொழிலிலும் நெசவுச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. அவைகளைப் பெரு முதலாளிகள் வாடகைக்கு அளித்தனர். மிட்லண்டிலும் அதைக்காட்டிலும் அதிகமாக லங்காஷயரிலும் வீட்டுத் தொழில் சீர்குலைந்தது. குடிசைக் கைத்தறிகளும், நூற்புக் கருவிகளும், சிறு உலைக்களங்களும், ஆணிக் கடைகளும் ஏராளமாக இருந்தன என்றாலும், இவைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் தங்களுடைய நிலங்களை விற்றனர். நவீனகால சக்திகளின் விளைவாகப் பழைய முறையிலேயே வாழ்ந்த யார்க்ஷயர் நெசவாளர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. அவர்கள் தங்களுடைய குடும்பங்களோடு சென்று ஹாலிஃபாக்ஸில் (Halifax) குடியேறினர். அவர்கள் சாராயம் காய்ச்சுதல், மலையோர நிலங்களைப் பயிரிடுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டனர். பட்டு ஆலைகளும், நூல் தக்களிகளையுடைய நூற்புப் பொறிகளும், நீர்ச்சட்டங்களும் ஆலைத் தொழிலை முதலாளிகளின் கண்காணிப்பின் கீழ் ஒருமுகமாக்கின.

இருந்தபோதிலும் உண்மைத் தொழில் யுகம் இன்னும் தோன்றவில்லை. தொழில் நுணுக்க முன்னேற்றம் அரைகுறையாக இருந்ததுமட்டும் அதற்குக் காரணமன்று. உதாரணமாகக் கம்பள நெசவுத் தொழில் பருத்தி நெசவிற்குப் பின்தங்கியது. ஆனால், தொழிலின் அமைப்பு முதலாளித்துவ அமைப்பாக இருந்தபோதிலும், மூலப்பொருள்களும் பெரும்பான்மைக் கருவிகளும் பெரும் பணக்காரர் கையில் இருந்தன என்றாலும், இத் தொழில்களில் தொழிற்சாலை முறை தோன்றவில்லை. இக் காலத்தில் தரகர் குடிசைத் தொழிலாளருக்கு வேலை தந்தனர். பொருள்களைச் சிறு கடைகளில் சேகரித்து வைத்தனர். நகர நாகரிகம் வளரவில்லை. 1700ஆம் ஆண்டிற்கும் 1770ஆம் ஆண்டிற்கு மிடையே லங்காஷயர், வெஸ்ட் ரைடிங் (West Riding) ஆகிய பகுதிகளின் மக்கள் தொகை இரட்டித்தபோதிலும், 1770ஆம் ஆண்டளவில் மான்செஸ்டரில் 30,000 பேருக்குக் குறைவாகவும், லீட்ஸில் 20,000 பேருக்குக் குறைவாகவும் இருந்தனர். பால் (Paul) முதலில் நிறுவிய நூற்புப் பொறியை இரு கழுதைகள் இயக்கின. 1790ஆம் ஆண்டுவரையிலும் விரைந்து செல்லும் தறி ஓடத்தைப்பற்றி மேற்குப் பகுதி மக்கள் அறியவில்லை. இவ்வாறு தொழிற்புரட்சி இயக்கமானது நாட்டுப்புறத்தைச் சார்ந்ததாக இருந்ததோடு, தொழில் அடிப்படையைவிட வாணிப அடிப்படையில் அமைந்ததாகக் காணப்பட்டது. மான்செஸ்டர் அல்லது லங்காஷயர் தொழில்மயமாவதற்கு முன்பே, லிவர்பூலும் (Liverpool) கிளாஸ்கோவும் (Glasgow) செல்வம் கொழிக்கும் நகரங்களாகத் திகழ்ந்தன. இதுவரையில் இவ்விரு தலைநகரங்களும் தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தன என்று சொன்னால் அதில் தொழிலதிபர்களைக் காட்டிலும், வணிகர்கள்தாம் பெரும் பங்கு பெறுகின்றனர். அவர்கள் அடிமை வியாபாரத்திலும், மேற்கிந்தியத் தீவுகளில் ஏற்றுமதிக்கான மார்க்கெட் பிடிப்பதிலும் முதலீடு செய்தனர். ஆயினும், போக்கு வரவு சாதனங்களும் இயக்கு சக்தியும் இல்லையெனில் தொழில்கள் வளரமாட்டா.

இந் நூற்றாண்டின் இடைக்காலம்வரையிலும் இரும்பும் நிலக்கரியும் பின்தங்கிய தொழில்களாக இருந்தன. குறிப்பாகத் தெற்குப் பகுதியில் டீன் (Dean) காட்டில் இருந்ததைப் போன்று சுரங்கத் தொழில் ஒரு நாட்டுப்புறத் தொழிலாகவே இருந்து வந்தது. அங்கே 90 தரைமட்டக் குழிகளிலிருந்து வாரத்திற்கு சராசரி 20 டன் நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டது. 600 அடி ஆழச் சுரங்கப்பாதைகள் இருந்த டைன் (Tyne), வேர் (Wear) போன்ற பகுதிகளிலும் நீரை வெளியேற்றுதற்குச் சரியான இயந்

திரங்கள் கிடையா. ஈரம், தீக்காற்று ஆகியவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றுமளவிற்கு விஞ்ஞான வளர்ச்சியில்லை. சுரங்கக் கருவிகள் மிகச் சாதாரணமானவையே. காற்று வரும் வாயில்களைச் சிறுவர்கள் காத்து நின்றனர். பெண்கள் நீண்ட ஏணிகளின் மீது நிலக்கரியைக் கூடைகளில் சுமந்துகொண்டு வந்தனர். நிலக்கரியைச் சிறிது தொலைவில் தள்ளுவதற்கு சாய்தளமாக அமைக்கப்பெற்ற மரச்சட்டங்கள் பயன்பட்டன. கடல் வழி தவிர மற்றப் போக்குவரத்துச் சாதனங்கள் தொழிலை அழிக்குமளவிற்குச் செலவு மிக்கவையாக இருந்தன. மாரிக் காலத்தில் சாலைகளின் வழியாக உள்நாட்டில் பொருள்களின் போக்குவரத்து நின்றது. 1700ஆம் ஆண்டில் 2½ மில்லியன் டன்களும், 1770ஆம் ஆண்டில் 6 மில்லியன் டன்களும் உற்பத்தியானது. சிறிய அளவு உற்பத்திக்கு மேலே கூறியவை சில காரணங்களாக உள்ளன. ஆனால், இரும்புத் தொழிலில் இதை விட அதிகமான தடை இருந்தது.

ரோமானியர் காலத்திலிருந்து சஸ்ஸக்ஸ் வீல்டு (Sussex Weald), கிளாசெஸ்டர்ஷயர் போன்ற பகுதிகளில் கையாளப் பெற்றதைப் போன்று இரும்புத் தொழிலில், தாதுவை வார்ப்பிரும்பாக்குவதற்கும், வார்ப்பைத் தண்டுகளாக மாற்றுவதற்கும் அடுப்புக்கரி ஊதுலைகள், மரத்தையே நம்பியிருந்தன. ஆயின், நாட்டில் மரக்கட்டைகள் தீர்ந்துவிட்டதால், 1720ஆம் ஆண்டு 20,000 டன் வார்ப்பிரும்பு மட்டுமே உற்பத்தியானது. உலைக்களங்கள் தங்களுடைய இரும்புத் தண்டுத் தேவைகளில் மூன்றில் இரண்டு பங்கிற்குப் பிற நாட்டு இறக்குமதிகளைக் குறிப்பாக ஸ்வீடன் நாட்டு இறக்குமதியை எதிர்பார்த்தன.

இரும்பை உருக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தினால், அதனால் வரும் ஆவியினால் இரும்பு எளிதில் உடையும் தன்மை பெறும் என்பதால், பல தலைமுறைகளாக நிலக்கரி பயன்படுத்தப் படவில்லை. ஆனால், கோல்ப்ரூக்டேலில் (Coalbrookdale) 1709ஆம் ஆண்டு ஆப்ரஹாம் டர்பி (Abraham Darby) என்பவர் கல்கரி (coke) ஊதுலைகளைப் பயன்படுத்தியதிலிருந்து, இத் தடை நீங்கியது. பெரும்பாலும் அதே சமயத்தில் டிவோன்ஷயரைச் சேர்ந்த கொல்லராகிய நியூகோமன் (Newcomen) என்பவர் தீயணைக்கும் இயந்திரத்தைத் திருத்திச் செம்மையாக அமைத்தார். முதலில் அது சுரங்க நீரை வெளியேற்றப் பயன்பட்டது. பிறகு வன்மையான ஊதுலைக் காற்றிற்கான நீர்ச் சக்கரத்திற்காக உபயோகிக்கப்பெற்றது. 1740ஆம் ஆண்டில் ஹண்ட்ஸ்மேன் (Huntsman) எனும் யார்க்ஷயரைச் சார்ந்த கடிகாரம் செய்வோர்

இரும்பையும் கரியையும் கலந்து எஃகு போன்ற உறுதியான இரும்பினைச் செய்ய, புடக்குகை முறையைக் கண்டுபிடித்தார். இக் காலத்திலிருந்து இரும்பும், நிலக்கரியும், அவைகளிலிருந்து வந்த நீராவியும் எஃகும் புதிய கண்டுபிடிப்பு, தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று உதவியாக இருந்தன. 1788ஆம் ஆண்டில் வார்ப்பிரும்பின் அளவு 68,000 டன்களாக உயர்ந்தது. உருக்கினைத் தேனிரும்பாகச் செய்வதற்கு மலிவான எரி பொருளைப் பயன்படுத்திப் பெருமளவில் உற்பத்தி செய்யும் முறையினை வகுக்கப் புதிய கண்டுபிடிப்புகள் பிற்காலத்திலே தான் தோன்றின. அப்போதுதான் உருக்குத்தொழில் முழு வளர்ச்சி அடைந்தது. கடற்படைப் பணியாளரான ஹென்றி கோர்ட் (Henry Cort) என்பார் 1784ஆம் ஆண்டில் குழி நிலக் கரியை எரிபொருளாக உபயோகித்து வார்ப்பிரும்பைத் தூய்மை செய்யும் முறைக்கான உரிமைப்பத்திரம் வாங்கினர். அதே ஆண்டில் சம்மட்டியால் அடிக்கும் வேகத்தைப் பல மடங்காக்கு வதற்கும், பல வகையான உருவங்களில் இரும்பினை உற்பத்தி செய்வதற்கும் உருளை இயந்திரத்தைப் பயன்படுத்தினர். நிலக் கரியும் நீர்வழியும் அருகில் அமைந்ததால் ஜோஸய்யா வெட்ஜ்வுட் (Josiah Wedgwood) என்பார் 1739ஆம் ஆண்டிலிருந்து மண் பாண்டத் தொழிலைப் பெருந்தொழிலாக விரிவு செய்தார். இரும்பு கிடைக்குமிடத்திற்கும், நீர்ச் சக்திக்கும் அருகில் இருக்கவேண்டு மென்பதற்காக, கார்ரன் (Carron) தொழிற்சாலை போர்த் நதியின் கரையில் 1760ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது.

ஒரு தலைமுறையைச் சார்ந்த இரும்புத்தொழில் அதிபர்கள் அத் தொழிலில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்திப் பெரும் புரட்சியை விளைவித்தனர். மூன்றும் டர்பி இரும்புத் தண்ட வாளங்களைச் செய்து, செவர்ன் ஆற்றின்மீது இரும்புப் பாலம் அமைத்தார். கார்ரன் தொழிற்சாலையைச் சார்ந்த ரோபக் (Roebuck) ஈயதுலை அனற்காற்றைப் பயன்படுத்தி உற்பத்தியை நான்கு மடங்காக்கினர். பேகனும் கிராஷேயும் (Crawshay) டௌலேஸ் (Dowlais), மெர்திர் டிட்வில் (Merthyr Tydvil) ஆகிய தொழிற்சாலைகளை அமைத்தனர். நிலக்கரிச் சுரங்கங்களையும் தகரச் சுரங்கங்களையும் கட்டுப்படுத்திய வில்கின்சன் (Wilkinson) இரும்புப் படகுகளைச் செய்வதில் ஈடுபட்டதோடு, பாரிஸ் நகருக் கான தண்ணீர்க் குழாய்களையும் வார்த்துக் கொடுத்தார். அவர் இறந்ததும் அவரது உடல் இரும்பினாலான பிணப்பெட்டியில் அடைக்கப்பெற்றது. சுத்திக்கும் லேத்திற்கும் (lathe) நீராவியைப் பயன்படுத்தியதன் மூலமாகவும், நீராவி இயந்திரத்தின் உருளை

யினைக் (cylinder) குடைந்து தந்ததன்மூலமாகவும் வாட் (Watt) என்பவரின் வெற்றிக்கு வழி வகுத்தவரும் அவரேயாவர்.

முதல் தொழில் யுகத்தின் இறுதி வெற்றியாக நீராவி வந்தது. நியூகோமனும், அவருக்குப் பின்வந்தவர்களும் செய்த தீயணைக்கும் இயந்திரங்களினால் எரிபொருளும் வெப்ப சக்தியும் வீணாயின. நீர் இறைக்கும் இயந்திரங்களைக்காட்டிலும் அவை ஒருவகையிலும் சிறந்தவையல்ல. கிரீநாக்கைச் (Greenock) சார்ந்த ஜேம்ஸ் வாட்டின் (James Watt) மேதைத் தன்மையினாலும், அவர்தம் கூட்டாளியும் சோஹோ (Soho) தொழிற்சாலையின் தலைவருமான போல்டன் (Boulton) என்பவரின் தொழில் திறமையாலுமே உண்மையான நீராவியுகம் தோன்றியது. வாட் 1769ஆம் ஆண்டில் தம்முடைய புதிய நீராவி இயந்திரத்திற்கான உரிமைப் பத்திரத்தைப் பெற்றார். அதில் சிலிண்டரையும் (cylinder) கண்டென்சரையும் (condenser) பிரித்துச் சுடுபடுத்துவதில் சிக்கனத்தை ஏற்படுத்தினர். அதனோடு பிஸ்டனைச் (piston) செலுத்தக் காற்று மண்டல அழுத்தத்திற்கு மாறுக நீராவியைப் பயன்படுத்தினர். அவர் பலவித உபயோகத்திற்கும் பயன்படும் இயந்திரங்களைச் செம்மையாகச் செய்யும்வரையில் தம்முடைய துணைவர்களோடு பதின்மூன்றாண்டுகள் அயராது ஆராய்ச்சிகள் நடத்தினர். நிலக்கரிச் சுரங்கங்கள், கார்னிஷ் தகரச் சுரங்கங்கள், நியூ ரிவர் கம்பெனி (New River Company) இரும்புத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிலெல்லாம் அவரது நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. 1782ஆம் ஆண்டில் வெட்ஜ்வுட்டின் தொழிற்சாலையில் அவரது இயந்திரம் பயன்பட்டது. மூன்றாண்டுகள் கழிந்து முதல் நீராவி நூற்பு ஆலை நிறுவப்பெற்றது.

நீர்ச் சக்தியைப் பயன்படுத்தும் நிலை நீராவியினால் மாறியது. புதிய தொழிலுக்கு நீர்நிலைகள் போக்குவரத்துக்கு வேண்டிய உதவி அளித்தன. வடபகுதியில் வாழ்ந்த வணிகப் பெருமக்கள் ஆறுகளைச் செம்மைப்படுத்தும் ஆர்வம் கொண்டிருந்தபோதிலும், இத் துறையிலேயும் நிலக்கரி வாணிபம்தான் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது. பிரிட்ஜ்வாட்டர் (Bridgewater) பிரபு தம்முடைய வொர்ஸ்லி (Worsley) சுரங்க நிலக்கரியை மான்செஸ்டருக்குக் கொண்டுசெல்வதற்காக ஒரு கால்வாய் அமைப்பதற்கென்று 1759ஆம் ஆண்டில் பிரிண்ட்லி (Brindley) எனும் பொறியியல் வல்லுநரை அமர்த்தினர். லிவர்பூலுக்கும் மான்செஸ்டருக்கும் இடையே அகழ்ந்தெடுக்கப்பெற்ற கால்வாய்மூலம் பொருள் கொண்டுசெல்வதால், செலவு பாதியாகக் குறைந்தது.

ட்ரெண்ட்–மெர்ஸி (Trent-Mersey) கால்வாய் 1777ஆம் ஆண்டில் வடக்கிலிருந்து ஐரிஷ் கடலுக்கு நேரடியாகச் செல்லுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியது. பிரிண்ட்லி கட்டிய முன்றுவது கால்வாய் கறுப்பு நாட்டையும் (Black Country) செவன்னுடு இணைத்தது. இவ்வாறு அமைத்த கால்வாய்களினால் புதிய பகுதி களுக்கு நிலக்கரி கொண்டுவரப்பட்டது. அதனால் பர்மிங்ஹாமில் நிலக்கரியின் விலை பாதியாகக் குறைந்தது. மண்பாண்டத் தொழி லுக்குக் கார்ன்வாலிலிருந்து (Cornwall) களிமண் எளிதாகக் கிடைத்தது. வாட், ஸ்மீடன் ஆகியோர்களுடைய சீடர்களான பொறியியல் வல்லுநர்கள் புதிய பொருள்களைக் கால்வாய் கட்டும் சோதனையில் பயன்படுத்திச் சோதனை செய்தனர். புதிய முறைகளைக் கண்டுபிடித்தனர். அப் பொருள்களையும் முறை களையும் 1790ஆம் ஆண்டிற்குப் பிறகு டெல்ஃபோடும் (Telford) ரென்னியும் (Rennie) நெடுஞ்சாலைகளை அமைப்பதிலும், பாலங்கள், நீர் வாய்க்கால்கள் கட்டுவதிலும் தாராளமாகப் பயன்படுத்தினர். இதற்கு முன்பே மூன்றும் ஜார்ஜ் மன்னரின் ஆட்சிக்கால முதல் பத்தாண்டுகளில் நிறைவேறிய சுங்கச்சாவடிச் சட்டங்களாலும், சொந்தத் திறமையினாலே முன்னுக்குவந்து வெஸ்ட்ரைடிங் நகரை மாற்றியமைத்த குருடரான ஜான் மெட்கால்ஃப் (John Metcalfe) என்பவரைப் போன்ற பொறியியல் வல்லுநர்களாலும் சாலைப் போக்குவரத்தின் வேகம் இருமடங்காகியது.

இவைகளே நிறைவேறுது நின்ற புரட்சியின் அம்சங்களாகும். தொழிலின் ஒரு பகுதிமட்டும் ஆலைகள், இயந்திரங்கள் ஆகியவற் றினால் பயனடைந்தாலும், நீராவி சக்தியை உபயோகித்தல் ஆரம்ப நிலையில் இருந்ததாலும், புரட்சி முழுமையான தன்று என்று குறிப்பிடப்படுகின்றது. அதேபோன்று பொருளாதாரத் திட்டம் ஒருமுகப்படுத்தப்பெறவில்லை. பர்மிங்காம் இரும்புத் தொழி லதிபர்களாகிய லாய்ட்கள் (Lloyds) போன்றோரது தல பாங்குகள் பணிபுரிந்தபோதிலும், அதுவரையில் இங்கிலாந்து பாங்கே இணையிருப்புக் கம்பெனிகளுடைய செயற்பாடுகள்மீது தனி யுரிமைகொண்டிருந்தது. 1773ஆம் ஆண்டில் தனது அதிகார பூர்வமான அலுவலகத்தை ஸ்டாக் எக்சேஞ்ஜ் (Stock Exchange) துவங்கியது என்றாலும், 1720ஆம் ஆண்டு 'குமிழி' (Bubble) சட்டத்தின்படி வணிகச் சூதாட்டம் தடை செய்யப்பெற்றது. எவ்வாறு இருப்பினும், தொழிற்புரட்சியினால் ஏற்கெனவே சிறப்புமிக்க பயன்கள் சில உண்டாயின. இவ் விளைவுகளை 1801ஆம் ஆண்டில் நிகழ்ந்த முதல் கணக்கெடுப்பு புலப்படுத் தியது. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 1700ஆம் ஆண்டில் ஏறக் குறைய 6 மில்லியனாகவும், 1750ஆம் ஆண்டில் சுமார் 6½ மில்லிய

ஞகவும் இருந்த மக்கள்தொகை 1801ஆம் ஆண்டில் 9 மில்லியன் அளவை எட்டியது. 1700ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மக்கள்தொகை மிகுந்த ஐந்து கவுன்டிகளில் மிடில்செக்ஸ் ஒன்றுகத் தொடர்ந்து இருந்துவந்தது. லண்டன் மாநகர மக்கள்தொகை 6,75,000-லிருந்து 9,00,000 ஆக உயர்ந்தது. ஆனல், சாமர்செட், கிளொசெஸ்டர், வில்ட்ஸ் (Wilts), நார்த்தாம்டன் ஆகியவற்றின் இடங்களே லங்காஷயர், யார்க்ஷயர், ஸ்டாஃபோர்டு, வார்விக் ஆகிய பகுதிகள் பிடித்துக்கொண்டன. இத்தகைய குடியேற்றம் முழுவேகத்தை அடைந்துவிட்டது எனக் கூறுவதற்கில்லே. நாட்டுப்புற மக்கள் பக்கத்திலுள்ள நகரங்களில் அதிகமாகக் குடியேறினர். எனினும், இதைத் தொடர்ந்து பழைய கட்டுப்பாடுகள் முறிந்ததனல் பல தீமைகள் தோன்றின. அத் தீமைகள் மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தை ஒரு புரட்சியுகமாக மாற்றின. தீமைகள் மிகுந்து காணப்பெற்ற இந் நூற்றண்டில் சமுதாய முன்னேற்றம் காணப்பெற்றதேயன்றி, சமுதாயச் சீர்கேடுகள் உண்டாகவில்லே. சமுதாயம் முன்னேறியது என்பதற்கு ஆதாரங்களாக விலேவாசிகள் நிலேயாக இருந்ததையும், ஊதிய விகிதத்தில் சிறிது உயர்வு தோன்றியதையும், கோதுமை ரொட்டியும் தேயிலேயும் பெருமளவில் நுகரப்பெற்றதையும் குறிப்பிடலாம். இவைகளேவிட 1790ஆம் ஆண்டுவரை பிறப்பு விகிதம் சிறிதளவு உயர்ந்தும் இறப்புவிகிதம் தொடர்ந்து மிகுதியாகக் குறைந்தும் வந்தது. மற்றத் தலேமுறையினரைக் காட்டிலும் ஒரு தலேமுறையைச் சார்ந்தவர்கள் அதிக அல்லற் பட்டனர் என்று கூறினல், அவர்கள் 1720ஆம் ஆண்டிற்கும் 1750ஆம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்த இளேஞர்களே ஆவர். ஆயின், புரட்சி யுகம் முழுவதிலும் தடுக்கக்கூடிய தீமைகளினல் பல வகுப்பினர் துன்புற்றனர்.

லண்டன் நகரத்தில் ஏழை மக்கள் வாழ்ந்ததை ஒரு வாழ்க்கையென்றே கூறமுடியாது. 1750ஆம் ஆண்டுவரையில் இருவர் பிறந்தால் மூவர் மடிந்தனர். அந்த ஆண்டில் வெஸ்ட் மினிஸ்டரில் இருந்த செயின்ட் மார்க்கரட்டின் தொழிற் சாலேயில் இருந்த 106 பேரில் 83 பேர் இறந்தனர். 1730ஆம் ஆண்டுமுதல் 1749ஆம் ஆண்டுவரை லண்டன் நகரில் பிறந்த குழந்தைகளில் சராசரி 74 சதவீதம் இறந்தன. இக் காலத்தில் ஜின் எனும் தேறல் மலிவாகக் கிடைத்தது. அதனே மளிகைக் கடைக்காரரிடமிருந்தோ, பழக்காரரின் வண்டியிலிருந்தோ எளிதாகப் பெறமுடிந்தது. 1790ஆம் ஆண்டிற்குமுன் அதிக முன்னேற்றம் காணப்பெற்றபோதிலும், நச்சுக் காய்ச்சலும் (typhus) சிறைக்காய்ச்சலும் லண்டன் நகரில் பரவின. இவ்

வாறு மக்கள் அதிகமாக மடிந்ததற்குக் காரணம் அவர்களைச் சிறு அறைகளிலும், தனியறைகளிலும் வாழுமாறு செய்த பண்டைக்கால விதிமுறைகளும், குறுகிய காலக் குடிக்கூலி முறையுமாகும். துப்புரவின்மை, பிணங்கள் குவிந்த இடுகாடுகள், தெருக்களில் குவியலாகப் போடப்பட்ட மலம், தொத்துநோய் உயிரணுக்கள் நிறைந்த சாக்கடைக் குழிகள் ஆகியவை இந்த அவலநிலைக்குப் பெரிதும் காரணமாயின. மேலும், பலகணிவரியும், கடனுக்காகச் சிறையிடும் அநாகரிகச் சட்டங்களும், அயர்லாந்திலிருந்து வந்து குடியேறியவர் உழைப்பு ஊதிய வீதத்தைக் குறைத்ததும் ஓரளவு மக்களுடைய வாழ்க்கையைப் பாதித்தன.

பதினெட்டாம் நூற்றாண்டு இங்கிலாந்தில் தீமைகளும் கொடுமைகளும் மிகுந்திருந்தன. அக்கால ஏடுகள் மக்களுக்கு இழைக்கப்பெற்ற கொடுமைகளைக் குறிப்பிடுகின்றன. தொழிற் பயிற்சியாளர் அடிபட்டதோடு கொல்லப்பட்டனர். குழந்தைகளுக்குத் திருடக் கற்றுக்கொடுத்தனர். அவர்களை மேற்கிந்தியத் தீவுகளில் விற்றனர். டைபர்னில் (Tyburn) குற்றவாளிகளைத் தூக்கிலிடும் நாளில் மக்கள் கூட்டமாக வந்து திருவிழாப்போல் கண்டு களித்தனர். மக்கள் மதுவில் மயங்கினர்; பாரிஷ் அதிகாரிகள் இரவலர் வரியை நிர்ணயித்தபோது அதனைக் கொண்டாடினர். மதுக்கடைகளில் ஊதியம் அளிக்கப்பெற்றது. தொழிற் சங்கங்களும் தங்களுக்கென்று மது அருந்தும் விடுதிகளை வைத்திருந்தன. பிற வகுப்பாரைப் போலவே தொழிலாளரின் பொழுதுபோக்கு விளையாட்டுகளும், முரட்டுத்தனமானவையாக இருந்தன. உதாரணமாக, ஒல்டாம் நிலக்கரிச் சுரங்கத்தினருக்கும், மான்செஸ்டர் நெசவாளருக்கும் இடையேயான மூன்று நாள் கோழிச்சண்டை விளம்பரப்படுத்தப்பெற்றது. மக்கள் கூட்டங்கள் எத்துணை இழிந்த முறையில் நடந்துகொண்டன என்பதற்கு லங்காஷயரில் 'காலால் உதைக்கும்' போட்டிகளும், தேம்ஸ் ஆற்றங்கரையில் மாலுமிகளுக்கும் நிலக்கரி கொண்டுவருவோருக்குமிடையே நடந்த கைகலப்புகளும், வெஸ்லியன் பிரசாரகர் மீது மாரியென வந்து வீழ்ந்த கற்களும், உணவுப் பொருள்களின் விலை குறித்து எழுந்த கலகங்களும் (1740ஆம் ஆண்டில் சுரங்கத் தொழிலாளர் நியூகாசில் குழு மண்டபத்தினை அழித்ததைப்போன்ற), இயந்திரங்களை அழித்ததும் (ஆர்க்ரைட்டின் இயந்திர ஆலை அழிக்கப்பெற்றது) சான்றுக அமைந்தன. ஸ்டுவர்ட் காலத்திலிருந்து ஆரம்பக் கல்வி வளர்ச்சியடையாது இருந்தது நன்கொடையால் தோன்றிய பள்ளிகளிலும், பெரிய பாரிஷ்களில் தொழில்மனைகளால் நடத்தப்பெற்ற பள்ளிகளிலும் கல்வி அளிக்கப்பெற்றது.

எனினும், இக் காலத்தில் வள்ளன்மை வளர்ந்தது. பிரிஸ்டல், லண்டன் ஆகிய நகரங்களைச் சேர்ந்த தனிப்பட்ட மனிதர்கள் தொழில் மனைகளைத் தொடங்கிவைத்தனர். தாமஸ் கோரம் (Thomas Coram) என்பவர் 1745ஆம் ஆண்டில் ஃபௌண்டிலிங் (Foundling) மருத்துவமனையை நிறுவினர். ஜெனரல் ஆக்லி தோர்ப் (Oglethorpe) என்பவர் சிறைகளில் காணப்பெற்ற குறை பாடுகளை அம்பலப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தை நடத்திச் சென்றார். மேலும், தம்முடைய கட்டுப்பாட்டில் இருந்த ஜார்ஜியாவிற்கு ஏழைக் கடன்காரரைக் குடியேற அழைத்துச் சென்றார். 1773ஆம் ஆண்டிலிருந்து ஜான் ஹோவார்ட் (John Howard) இப் பணியைத் தொடர்ந்து செய்தார். சிறைக்காவலர் கட்டணத்தை நீக்குமாறு பாராளுமன்றத்தை வற்புறுத்தினர். சிறைச்சாலைகளைச் சென்று கண்டதிலிருந்தும், ஐரோப்பிய நாடு களில் பிரயாணம் செய்த அனுபவத்தைக் கொண்டும் நாட்டு மக்களுக்கு ஏராளமான செய்திகளை வழங்கினர். ஜோனஸ் ஹான்வே என்பவர் 1767ஆம் ஆண்டுச் சட்டத்தை நிறை வேற்றத் தூண்டியதன்மூலமாக ஆயிரக்கணக்கான உயிர்களைக் காத்தார். இச் சட்டத்தின்படி லண்டன் பாரிஷ் குழந்தைகளைப் போதுமான உணவிற்கான மானியத்தோடு நாட்டுப் புறங்களுக்கு அனுப்பவேண்டுமென்பது வற்புறுத்தப் பெற்றது. 1719ஆம் ஆண்டிற்கும் 1752ஆம் ஆண்டிற்கும் இடையே கத்தோலிக்கராலும் டியூடர்களாலும் நிறுவப்பெற்ற மருத்துவ மனைகளாகிய வெஸ்ட்மினிஸ்டர், கை (Guy's), செயின்ட் தாமஸ், மிடில்செக்ஸ், குயின்சார்லோட்டி, படுக்கைகள் உள்ள மருத்துவ மனை ஆகியவற்றோடு பல புதிய மருத்துவமனைகளும் தோன்றின. அதன் பிறகு மருந்தகங்கள் வளர்வதற்கான இயக்கம் ஒன்று தோன்றியது. ஆனால், இத்தகைய மனிதத்தன்மை வாய்ந்த செயல்கள் பலனளிக்க நீண்ட காலம் தேவைப்பட்டதோடு, பழுதடைந்த சமுதாய அமைப்பில் வெற்றிபெறுவதே கடினமான தாகவும் இருந்தது.

இந் நூற்றாண்டு எலிசபெத் இராணியாரின் காலச் சமுதாயத் திட்டம், தந்தையின் கட்டுப்பாடு, கிராமப்புற பாரிஷ்கள், குடும்பத் தொழில் ஆகியவற்றைக்கொண்டு தொடர்ந்து நடந்துவந்தது. ஆனால், முதலில் குறிப்பிட்ட தந்தையர்க் கட்டுப்பாடு நீங்கிவிடவே, மற்றக் கூறுகள் பெரு மளவில் முன்னேறிய சமுதாயத்திற்கு ஒவ்வாதனவாக இருந்தன. ஊதியத்தை மாஜிஸ்ரேட்டுகள் நிர்ணயிக்கும் நிலை மாறியதால், ஊதியங்கள் போட்டி அங்காடிகளை நம்பியிருந்தன. நார்த்தம் பர்லண்டு மரம் வெட்டுவோரைப்போன்று தனியுரிமை அல்லது

தனித்திறமையால் சில தொழில்களில் ஈடுபட்டோரின் ஊதியம் குறையாமல் ஒரே சீராக இருந்தது என்ருலும், வீட்டுக் கைத் தொழில்களுக்கு ஊதியம் மிகக் குறைவாக அளிக்கப்பெற்றது. அதே சமயத்தில் லண்டன் போன்ற நகரங்களில் பணி புரிவோர் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. பயிர்த் தொழிலில் தரப்பட்ட ஊதியம் அதிக மாக வேறுபட்டது. 1770ஆம் ஆண்டளவில் அடிப்படை வீதம் நாளொன்றிற்கு 1 ஷில்லிங் 2 பென்ஸிலிருந்து 10 பென்ஸ்வரை யிலும் இருந்தது. அதனல் பயிர்த் தொழிலாளருக்கு ஒன்றும் மிஞ்சவில்லை; லீட்ஸ் நகரத்து நெசவாளியோ அல்லது லண்டன் நகரத் தொழிலாளியோ தன்னுடைய குடும்பத் தினரின் உதவியைப் பெற்ருல், வாரத்திற்குக் கூலியாகக் கிடைக்கும் 10 ஷில்லிங்கை வைத்துக்கொண்டு வாழ்க்கையைச் சமாளிக்கமுடியும். ஆனல், நாளொன்றிற்கு 5 அல்லது 6 பென்ஸ் கூலிக்கு நூற்புவேலை செய்த பெண் தொழிலாளி புதிய முதலாளித்துவத்தின் கேட்டினை விளக்கினுள். ஊதியம் மிகக் குறைவாக இருந்ததால், பெண்களும் சிறுவரும் வேலை செய்ததில் புதுமையொன்றும் இல்லை. வடக்குப் பகுதியில் நீண்டகாலமாகக் கம்பளப் பருத்தித் தொழில்களில் சிறுவர் பயன்படுத்தப் பெற்றனர். கிராம்ப்டன் கம்பெனி ஆரம்பகாலத்தில் முதன் முறையாக நீரில் ஊறவைத்த பருத்தியினைக் காலால் மிதிப்பதற்குச் சிறுவர்களை அமர்த்தியது. தெற்கில் அதிகமாக இல்லையென்ரு லும், ஸ்காட்லாந்து சுரங்கங்களில் எப்போதும் பெண்கள் வேலை செய்தனர். தூரத்திலிருந்த சமவெளிகளில் நீர்ச்சக்தி கொண்டு தொழில்கள் நடைபெற்றபோது; சிறுவர்களின் வீட்டுவேலை யானது பத்து அல்லது பதினன்கு மணிநேர ஆலைப்பணியாக மாறியது. இவ்வாருகச் சிறுவரின் வாழ்க்கை கொடுமை நிறைந்ததாகக் காணப்பெற்றது. நார்த்தம்பர்லண்டில் சிறுவர் 7 வயதிலிருந்தும், லண்டன் நகரப் புகைபோக்கிகளில் 6 வயதி லிருந்தும் பணிபுரிந்தனர். லண்டன் நகரத் தையற்காரர்கள் காலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரையிலும் தொழில்புரிய வேண்டுமென்று பாராளுமன்றம் எதிர்பார்த்தது. தொழிலாளர் குடும்பங்கள் வாரத்திற்கு 1 ஷில்லிங் வாடகையில் சிறிய அறை களில் வசித்தன.

மேலும், இரவலர் சட்டத்தின் நிலை பெருந்தீமைகளுக்குக் காரணமாக இருந்தது. வாணிபம் வளர்ச்சியுற்ற காலமாகிய 1695ஆம் ஆண்டில் ஏறக்குறைய 6,95,000 பவுனாக இருந்த இரவலர் தீர்வை 1756ஆம் ஆண்டில் 1½ மில்லியன்களாக உயர்ந் ததைக் கண்ட மக்கள் ஆத்திரங்கொண்டனர். அவர்கள் இரு

விதத் திட்டங்களின் மோதல் காரணமாகக் குழப்பமடைந்திருந்தனர். உள்நாட்டுப் போரின் போதும், 1688ஆம் ஆண்டிலும் ஒவ்வொரு மனிதனும் சொந்த முயற்சியால் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும் என்பதே சிறப்புமிக்கதாகப் போற்றப்பட்டது. இரவலர் ஒழுக்க நெறியோடு வாழ்ந்து வேலை செய்தால், தடையற்ற வாணிபத்தினால் வளம் பெருகும் என்று வற்புறுத்திய தனியுரிமைக் கோட்பாடு போற்றப்பெற்றது. ஆனால், இக் காலத்தில் நடைமுறையில் டியூடர்கால அரசின் கட்டுப்பாட்டினை நீக்கி, அவர்தம் பாரிஷ் அப்படியே வைத்துக்கொள்ளப்பெற்றது. மாஜிஸ்ட்ரேட்டுகளின்மீது இருந்த கட்டுப்பாடு குறைந்த நிலையில், அவர்கள் பாரிஷ் மேற்பார்வையாளரை அவரவர் விருப்பப்படி நடக்கவிட்டனர். பாரிஷ் மேற்பார்வையாளர்கள் ஊதியம் பெறுத நிலையில் ஊழல் மிகுந்தவராக இருந்தனர். சில சமயங்களில் கொடுங்கோலாட்சியும் நடத்தினர். அவர்களுடைய நோக்கமெல்லாம் இரவலர் தீர்வையிலிருந்து குறைவான தொகையையே செலவிட வேண்டுமென்பதுதான். அதற்காக இரவலரைக் கண்ட்ராக்டர்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் தங்கள் விருப்பம்போல் இரவலரைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இரவலருக்கான உதவி அவர்கள் வாழ்ந்த வீடுகளிலேயே அளிக்கப்பெறுதல் வேண்டுமென்ற அடிப்படையில் எழுந்த அதிகாரத்தினைப் பாரிஷ் மேற்பார்வையாளர் தவறுகப் பயன்படுத்தினர். இந்த இடைக்கால ஏற்பாட்டின் விளைவாக நெகிழ்தல் மிகுதியாக இருந்த இக் காலத்தில், 1662ஆம் ஆண்டு உரிமை நிர்ணயச் சட்டமும், அதன் திருத்தங்களும் மேற்பார்வையாளருக்கு மேலும் சில அதிகாரங்களை வழங்கின. அதன்படி தலத்தைச் சேராதவர்களுக்கும் ஆண்டொன்றிற்கு 10 பவுன் பெறுமானமுள்ள நில உரிமை நிர்ணயமோ, தொழிற் பயிற்சியோ, ஓராண்டிற்கு வேலையோ பெறுது இருந்தவர்களுக்கும் உதவி அளிக்காதிருக்க மேற்பார்வையாளருக்கு அதிகாரம் வழங்கப் பெற்றது. புதிதாக வருபவர்கள் இரவலர் நிதியிலிருந்து உதவி பெறுதவாறு செய்ய பாரிஷ்களெல்லாம் பாடுபட்டன. அதற்கான குறுக்கு வழிகள் சிலவற்றைக் கையாண்டு அவை சட்டத்தை மீறி நடந்தன. உதாரணமாக, ஓராண்டிற்குக் குறைவான காலத்திற்கே வேலையளித்தன. குடிசைகளை அழித்தன. சூல் கொண்ட மாதரையும் மாடுகளைப்போல் வெளியே விரட்டின. பிச்சைக்காரரை வெளியேற்றுவதிலும் வழக்குகளிலும் பொதுப் பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான பவுன்கள் விரயமாயின. ஒரு பகுதியில் வாழ்ந்த பிச்சைக்காரர் பிற பகுதி

க்களில் சென்று கசையடி பெறுவதைக்காட்டிலும், திரும்பப் பழைய பகுதிக்கே விரட்டப்படுவதைக்காட்டிலும், தங்களுடைய இடத்திலேயே பிச்சையெடுத்து உயிர் வாழ்வது நல்லது என்று கருதினர். அதனால் ஏழ்மையான பகுதிகள் ஏழ்மையாகவே இருந்தன. இரவலர் திருமணத்திற்குத் தடைகள் எழுந்தன. அதேபோன்று வீடு கட்டிக்கொள்வதற்கும் தடை இருந்தது. ஏழைக் குழந்தைகளைத் தொழிற் பயிற்சி பெற அனுப்பவேண்டுமென்ற எலிசபெத் இராணியார் காலத்து விதியினை விபரீதமாகப் பயன்படுத்தியது. இவற்றையெல்லாம்விட மிக மோசமாக இருந்தது. எலிசபெத்தின் காலத்தில் இச் சட்டத்தின்மூலமாக இரவலர் குழந்தைகள் கல்விபெற்ற மதிப்பு வாய்ந்த குடிமக்களாக மாறவில்லை; அதற்கு மாறாக, இரவலர் தீர்வையைக் குறைக்கும் கருவியாகப் பயன்பட்டது. பாரிஷின் சுமையைக் குறைப்பதற்காக, ஏ பவுன் பரிசுப் பணத்திற்கு ஆசைப்பட்ட நெசவாளி, புகைபோக்கி சுத்தம் செய்வோரிடம் ஏழைச் சிறுவரை ஒப்படைத்தனர். அவர்கள் [ஸ்பிட்டால்ஃபீல்ட்ஸ் (Spitalfields) பட்டுத்தொழில் அல்லது மிட்லண்டு கம்பளத் தொழில்போன்ற] கடினமான தொழில்களில் ஈடுபடுத்தப்பெற்றனர்; நூற்றுக் கணக்கில் வடநாட்டு ஆலைகளுக்குக் கொண்டுசெல்லப் பெற்றனர். 1778ஆம் ஆண்டுச் சட்டம் பரிசுப் பணத்தை இரு முறையாக அளிக்க வழிசெய்தது. எனினும், தொழிற் பயிற்சியாளர் ஓடிப்போவது, பட்டினியால் வதைக்கப்படுவது, கொடுமைக்குள்ளாவதுபோன்ற செய்திகள் மிகுதியாக வெளிவந்தன.

எலிசபெத் இராணியாரின் சட்டத்தில் வயது முதிர்ந்தோருக்கும் நோயாளிகளுக்கும் உதவி, இளையவருக்குத் தொழிற் பயிற்சி, உடலுழைப்போருக்கு வேலை ஆகியவை வற்புறுத்தப் பெற்றன. அந்த மூன்றினுள் முதல் இரண்டும் சில சமயங்களில் நாட்டுப்புற பாரிஷ்களில் நடைமுறையில் ஓரளவு வெற்றியுடன் செயற்பட்டன. சிறு பகுதிகளாகிய பாரிஷ்களில் குறைந்த ஊதியம் பெறுவோருக்கு உதவியாக சிறு மானியம், வீட்டு வாடகை, நிலக்கரி அல்லது ஓய்வூதியம் ஆகியவற்றைத் தீய விளைவுகள் தோன்றுதவாறு அளிக்க முடிந்தது. ஆனால், பெரு நகரங்களிலும் தொழில் வளம் மிகுந்த பகுதிகளிலும் பெரிய அளவிலான அமைப்புகளும் முறைகளும் தேவைப்பட்டன. பல செயலாய்வுகளுக்குப் பிறகு தொழில் மனைகளே சோம்பலைப் போக்கும் மருந்தாகவும், வேலை வாய்ப்பளிக்கும் கேந்திரங்களாகவும் மாறின. தனியார் சட்டங்களின் மூலமாகப் பல தொழில்மனைகள் நிறுவப்பட்டன. மற்றவை 1723ஆம் ஆண்டுச் சீட்டத்தின் அடிப்படையில் தோன்றின. தொழில் மனைக்கு வர

மறுப்பவருக்கு உதவிப் பணம் கிடையாது என்று அச் சட்டம் கூறியது. சில இடங்களில் இரவலர் தீர்வை மிகுதியாகக் குறைந்தது. ஆனல், தொழில்மனைச் சோதனையில் திறமையான ஆட்சி முறை தேவைப்பட்டது. அத்தகைய ஆட்சிமுறை 18ஆம் நூற்றாண்டில் இல்லாத காரணத்தால் தொழில்மனை பழிப்பிற் குள்ளாகியது. இச் சட்டம் அனுமதி வழங்கும் முறையில்தான் இருந்தது. மேலும், இச் சட்டம் அனுமதி தந்ததால், சில பாரிஷ்கள் மற்றவையோடு இணைந்து ஒரு குறிப்பிட்ட பொருளாதார வட்டத்தில் தொழில்மனையை அமைத்தன. பெரும்பாலான தொழில் மனைகளில் வயது முதிர்ந்தோரும், இளைஞரும், குடிகாரரும், ஒழுக்கம் நிறைந்தவரும், ஊர்சுற்றிகளும், வேலையற்றோரும் தாறுமாறுகக் குவிந்திருந்தனர். நூற்றல், நார் எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு இருந்தனர். அவர்களிடையே ஊழல், ஒழுக்கக்கேடு, அசுத்தம் ஆகியவை குடிகொண்டிருந்தன. ஏழைத் தொழிலாளர் தமக்குத் தேவையான ஊதியம் பெற வில்லை. ஆனல், தொழில்மனை இல்லாத இடங்களிலும், அவை சிறியவாக இருக்குமிடங்களிலுமே வெளிப்புற உதவி கிடைத்தது. அதே சமயத்தில் பண்பார்ந்த மக்கள் குடும்பங்களின் சிதைவு பற்றியும் பிணியாளர், அறிவிலி ஆகியோர் துன்பங்கள்பற்றியும் கண்டித்தனர்.

இவ்வாறு தொழிற் பெருக்கமும் பொருள்களின் விலையேற்றமும் தோன்றி வாழ்க்கைச் சூழ்நிலையை மாற்றிய இக் காலத்தில், ஆர்வமிக்க சீர்திருத்தக்கார உறுப்பினரான தாமஸ் கில்பர்ட் (Thomas Gilbert) என்பவர் தமது பெயரால் சட்டமொன்றை நிறைவேற்றினர். அது தொழில்மனைகளில் வயோதிகரும், பிணியாளரும், அனைதைச் சிறுவருமே இடம்பெற வேண்டுமென்று அச் சட்டம் வற்புறுத்தியது. அதே சமயத்தில் உடலுரமிக்க இரவலருக்கு வேலை தேடித்தரும் பொறுப்பு பாரிஷைச் சார்ந்தது என்றும், தேவைப்பட்டால் அத்தகையோர் போதிய ஊதியம் பெறச் செய்வதற்காக மானியம் வழங்கவேண்டுமென்றும் விதித்தது.

இத்தகைய மாற்றங்களுக்கிடையே வளர்ந்தவர்கள் சுரங்கத் தொழிலாளர்களையும் ஆலைத் தொழிலாளர்களையும் நாகரிக மற்றவர்கள் என்று இகழ்ந்தனர். 1720ஆம் ஆண்டிற்கும் 1750ஆம் ஆண்டிற்கும் இடையில் ஆங்கில கிறித்துவ சமயம் மிகத் தாழ்ந்த நிலையை அடைந்தது. ஏழைத் தொழிலாளர் புரட்சியில் இறங்காது இருந்ததற்குத் திருச்சபை காரணமன்று. உண்மையில் அது சமய ஒறுப்புச் செய்யும் எண்ணத்தையும் திறமையையும்

இழந்திருந்தது. சோதனைச் சட்டங்களும் நகர ஆட்சி மன்றச் சட்டங்களும் இணங்காதாரைப் பெயரளவில் பதவிகளிலிருந்து நீக்கிவைத்தபோதிலும், தேர்ந்தெடுக்கப்பெற்ற இணங்காதாரை இழப்பீட்டுச் சட்டங்கள் காத்தன. அதே சமயத்தில் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேற்றப்பெற்ற இணங்காதார், தங்கள் சொந்த முயற்சியால் தோன்றிய தலைசிறந்த கலைக்கழகங்களில் பணியாற்றினர். ஆயின், திருச்சபை முதலிரண்டு ஜார்ஜ் மன்னர்களின் காலத்தில் நல்ல காரியங்களில் ஈடுபடமுடியாது மெலிந்திருந்ததற்கு இரு காரணங்கள் உண்டு. தேவைகள் பெருகி வந்த காலத்தில் திருச்சபை பழைய தீமைகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தது: சமயச் சீர்திருத்தத்தினால் அத் தீமைகள் அதிகமாயினவே தவிரக் குறைந்தபாடில்லை. சமயகுருமாரில் பெரும்பாலோர் மிகுந்த ஏழ்மை நிலையில் வாடினர். அவர்களுக்கென்றிருந்த மானியங்களில் 6,000-க்கு மேற்பட்டவை 50 பவுன் அல்லது அதற்கும் குறைவான வருமானத்தையே கொடுத்தன. இத்தகைய ஏழ்மை நிலையின் விளைவாய்ப் பல பதவி ஏற்கும் முறைமை தோன்றியது. அதனால் குருமார் தங்கள் தலத்திலே அதிகமாகத் தங்கியிருப்பதில்லை. எனவே, நூற்றுக்கணக்கான பாரிஷ்களில் சமயகுருமார் இல்லாத நிலை ஏற்பட்டது. வளர்ந்துவரும் நகரங்களில் திருச்சபைக் கட்டடங்கள் புறக்கணிக்கப்பட்டன. பிஷப்புகளின் எண்ணிக்கையை உயர்த்தவோ, பிஷப்புகளின் ஆட்சி எல்லை வருமானத்தைச் சமன் செய்யவோ எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. எனவே, இன்னும் லிங்கனில் 1,300 பாரிஷ்கள் இருந்தன. டர்ஹாம் 6,000 பவுன்களைப் பெற்ற அதே சமயத்தில் ஆக்ஸ்ஃபோர்டு 500 பவுன்களையே பெற்றது.

ஆங்கிலிகன் திருச்சபையின் அரசியல் மூலக்கூறு அதன் உச்சநிலையை அடைந்தது. விக்குக் கட்சி அரசாங்கங்கள் ஸ்காட்டிய பிரபுக்களை நம்பியிருந்ததைப்போல, 26 பிஷப்புகளின் வாக்குகளையும் நம்பியிருந்தன. அதன் விளைவாகப் பெரும் பாலான பிஷப்புகள் ஏறக்குறைய அரையாண்டிற்குமேல் தங்களுடைய ஆட்சி எல்லைக்கு வெளியிலிருந்தனர். சிலர் தங்கள் பகுதிகளுக்குச் செல்வதேயில்லை. இங்ஙனம் பிஷப் ஹோட்லி (Hoadly) என்பவர் எட்டு ஆண்டுகளுக்குத் தமது ஹெர்ஃபோர்டையும் (Hereford), பங்கோரையும் (Bangor) காணவேயில்லை. சமயம் சார்ந்தவருக்கு ஆதரவு தந்து அதன்மூலமாக நன்மையடைவதை நியூகாசில் பிரபு ஒரு பெருங்கலையாகவே கொண்டார். அரச சாப்லெயின்கள் பதவி உயர்வு பெற்றமை குறித்தும், பிஷப்புகளும் டீன்களும் நிலைமாற்றமடைந்ததைக் குறித்தும், சமய குரு

மார் தேர்தல்களில் பயன்படுத்தப்பெற்றனர் என்பது குறித்து மான செய்திகளும் அவரது கடிதங்களிலுல் தெளிவாகத் தெரி கிறது. விக்குக் கட்சியின் கொள்கையைப் பின்பற்றுதல், பெருங் குடும்பத்தில் ஆசிரியராகப் பணிபுரிதல், சில பண்டைக் கால கிரேக்க இலக்கியத்தின் அழகிய பதிப்புகளை வைத்திருத்தல் ஆகியவை திருச்சபையில் பதவி உயர்விற்குப் போதுமான தகுதி களாக இருந்தமையால், பெருங்குடிகளைச் சார்ந்தோரின் உறவினர் பெரும்பதவிகளைப் பெற்றனர். நார்த், கெப்பல் (Keppal), கார்ன்வாலிஸ் (Cornwallis) போன்றோர் இப் பழக்கத் திற்குச் சான்றுக விளங்கினர். வேக் (Wake) இறந்த பிறகு பெருங்குடி சார்ந்த இடைத்தரமானவரே கான்டர்பரி ஆர்ச்பிஷப் பாகப் பணியாற்றினர்.

கரோலின் (Caroline) குருமாரின் கத்தோலிக்கப் போதனை களும் அவர்களுடைய அரசியல் கொள்கையும் மறுக்கப்பெற்றன. அதனுல் மூன்றும் வில்லியம் காலத்து பிஷப்புகளின் பரந்த நோக் கங்களும் லாக்கின் (Locke) தத்துவமும் திருச்சபையைப் பெரிதும் கவர்ந்தன. கடவுளின் விருப்பப்படி இடையறாது மரபு முறையில் வந்த தெய்வீக அடிப்படை கொண்ட சமுதாயமே திருச்சபை என்ற கருத்தும், அது முறையாக வந்த திருத்தொண்டரால் உரு வாக்கப்பெற்றது என்ற கருத்தும் மறைந்தன. புதிய தலைமுறை யினர் கிறித்துவ சமயத்திற்கும் புது யுகத்தின் மாற்றங்களுக்கும் இடையில் சமாதானம் செய்துவைக்கும் முறையில் அச் சமயத் திற்குப் பகுத்தறிவு அடிப்படையை வற்புறுத்தினர். டின்டால் (Tindal) என்பவர் தம்முடைய நூலில் குறிப்பிட்டதைப்போல கிறித்துவ சமயம் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து வந்த பழைமையான ஒன்று என்றும், அது 'இயற்கை'ச் சமயத்தின் ஒரு வழியே என்றும் கருதப்பெற்றது. மூன்றும் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்த பிறகு, நீதிபதிகளுள் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் படைத்தவரும், போப்பாண்டவரின் உற்ற நண்பருமான வார் பர்ட்டன் (Warburton), திருச்சபையானது நாட்டில் ஒழுக்கத்தைக் காக்கும் காவற்படையே என்று போதித்தார். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில உயர் திருச்சபையினரும் உறுதிமொழி யளிக்க மறுத்த சில குருமாரும் பழைய நோக்கத்தினையே கைக் கொண்டபோதிலும், பொதுவாகச் சமயச் சொற்பொழிவுகள் ஆன்ம மீட்பளித்தல், சமயச் சடங்கு ஆகியவற்றில் மேலும் நம்பிக்கை வைத்திருந்தனவாகத் தெரியவில்லை.

அவைகள் பாவத்திற்குப் பதிலாகப் பழிச்செயல்களையே கண்டித்தன. பொது அறிவே அவைகளின் தத்துவ சாரமாக

அமைந்தது. அவைகளில் அடங்கியிருந்த சமய சித்தாந்தம் திரு விவிலியாடலில் போலிகளோடு நின்றது. பட்லர் (Butler) என் பவரின் தலைசிறந்த ஆங்கிலிக சமய நூலான 'அனலஜி ஆப் ரெலிஜின்' (Analogy of Religion) எனும் நூலில், நிகழக் கூடிய கோட்பாடும் திருச்சபைக்காக இயற்கையில் காணப் பெறும் சிறந்த சான்றுகளும் தரப்படுகின்றன. இவ்வாறான சமயத் தளர்ச்சியும், சமய ஆர்வத்தில் நம்பிக்கையின்மையும் வெளிப்புற ஏற்பாடுகளில் தெளிவாகத் தெரிந்தன. திருக் கோயிற் சுவர்கள் வெள்ளையடிக்கப்பட்டமை, விளக்கின்றியிருந்த பலிபீடம், தனியாரின் கனமான திருக்கோயில் இருக்கை, தினத் தொழுகை புறக்கணிக்கப்பட்டது போன்றவை மக்களிடையே சமய ஆர்வம் குறைந்ததற்குச் சில சான்றுகளாக அமைகின்றன. சாதாரணச் சமயச் சொற்பொழிவுக்கும் குவார்ட்டர் செஷன்ஸில் பெரும் ஜூரிக்கு ஆகும் செலவும் ஒன்றாகவே இருந்தன.

அதே சமயத்தில் இணங்காதாரின் பழைய சமயப் பிரிவுகளும் எண்ணிக்கையில் குறைந்தன. பியூரிட்டன் சமயத்திற்கு ஊக்க மளித்த கால்வினிய சமயம் தனது செல்வாக்கினை இழந்திருந்தது. இயற்கைச் சமயவாதிகளின் போதனையின் விளைவாகவும், அப் போதனையில் இயற்கையே ஆண்டவன் அளித்த சமயம் என்பது வற்புறுத்தப்பெற்றதாலும் பல பியூரிட்டானியர் ஒருமைக் கோட் பாட்டினராக (Unitarians) மாறினர். அரசியல் தலைவர்களிடம் சமயப் பற்று பெரும்பாலும் மறைந்துவிட்டது. பெர்முடாவில் (Bermuda) கிறித்துவக் கல்லூரி நிறுவவேண்டுமென்ற பிஷப்பான பெர்க்லியின் (Berkeley) எண்ணத்தை உலோகாயதவாதியான வால்போல் எதிர்த்தார். அவருடைய மகன் ஹோரேஸ் (Horace) சமயப் பற்றுச் சிறிதும் இல்லாதவர்; பாலிங்புரோக் (Bolingbroke) என்பவர் இயற்கைவாதியாக இருந்தார். இந்த நூற்றாண்டின் தலைசிறந்த அறிஞராக விளங்கிய டேவிட் ஹியூம் (David Hume), லாக் (Locke), அடிசன் (Addison) போன்றோரின் செறிவுமிக்க தத்துவக் கருத்துகள் விட்டுச் சென்ற உயர்தனிப் பொருளைச் சிதறடித்தார்; தத்துவத்தைச் சமயப் பற்றற்ற நிலைக்குக் கொண்டுவந்தார்.

இத்தகைய அமைதியான சூழ்நிலையில் 1730ஆம் ஆண்டிற்குப் பிறகு எவான்ஜெலிகல் (Evangelical) இயக்கம் அறிஞர் குழுக்களிடையே செல்வாக்குப் பெற்றது. எக் காலத்தும் சமயப் புத்துணர்வு தோன்றுமாதலால், நேர்மையான கிறித்துவ சமய முயற்சி அடியோடு மறைந்துவிடாது புதிய செயல்களில் வெற்றிபெற்றது எனக் கூறலாம். மாபெரு நகரங்

களில் ஒழுக்கச் சீர்திருத்தச் சங்கங்கள் தோன்றின. அவைகள் சமயப் பற்றின்மையையும் குடிமயக்கத்தையும் கண்டித்தன. அதே சமயத்தில் 1696ஆம் ஆண்டு தோன்றிய கிறித்துவ அறிவைப் பாதுகாக்கும் சங்கத்திலிருந்து (Preservation of Christian Knowledge) இலவசப் பள்ளி இயக்கமும் வெளிநாடுகளில் திருமுறையைப் பரப்புதற்கான சமயப் பிரச்சாரச் சங்கமும் எழுந்தன. இவ்விதமான கிறித்துவ சமய வாழ்க்கை எல்லாச் சமயப் பிரிவினரிடமும் காணப்பட்டது. கடுந்துறவிகளைப் பின்பற்றியதைப்போன்று, நார்த்தாம்டன்ஷயரில் ஆசிரமத்தை அமைத்து உறுதிமொழி எடுத்துக்கொள்ள மறுத்தவரான வில்லியம் லா (William Law) என்பவர் எழுதிய 'புனித வாழ்விற்குத் தம்மை அர்ப்பணிக்க ஓர் அறைகூவல்' (Serious Call to a Devout and Holy Life) என்ற நூல் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. 17ஆம் நூற்றாண்டில் நல்லவைகளுக்குத் துணையாக இருந்தவருள் தலைசிறந்து விளங்கிய வில்சன் (Wilson), சோடார் (Sodor), மான் (Man) ஆகிய பகுதிகளின் பிஷப்பாக (1698–1755) இருந்தார். அவர் எளிமையும் நல்லறிவும் கொண்ட சமயத்தவரின் தலைவராக விளங்கியவர். அவரது துதிப்பாடல்கள் ஆங்கில மொழியின் சிறப்பானவற்றுள் சிலவாகும். அவர்தம் வாழ்க்கை மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. இவற்றைவிட சமய வாழ்க்கையில் மற்றொரு புறத்திலிருந்து வலிமைமிக்க விளைவுகள் தோன்றின. உதாரணமாக, இணங்காதவரான ஐசாக் வாட்ஸ் (Isaac Watts) இயற்றிய 'கடவுளே, கடந்த காலத்தில் எங்கள் துணை' (O God, our Help in Ages Past), 'அற்புதமான சிலுவையை நான் நோக்கும் பொழுது' (When I Survey the Wondrous Cross) போன்றவற்றை உள்ளிட்ட பனுவல்கள் பெரும் பயன் விளைவித்தன. திருச்சபை அமைப்பின் உள்ளும் புறமும் தோன்றிய இத்தகைய புத்துயிர்ப்பு தடைகளைக் கடந்து சென்றது.

வெஸ்லிகள் தங்கள் வேலையைத் தொடங்குவதற்கு முன்பே கிரிஃபித் ஜோன்ஸ் (Griffith Jones) எனும் பாதிரியாரின் போதனைகளும் அவர் நிறுவிய பள்ளிகளும் வேல்ஸில் ஒருவித சமயப் புரட்சியைத் தோற்றுவித்து, அதன் காரணமாகப் பலரை ஆங்கிலத் திருச்சபையிலிருந்து வெளியேறுமாறு செய்தன. சமயம் சாரா ஹோவெல் ஹாரிசும் (Howell Harris) சமய குருவான டேனியல் ரோலண்ட்ஸ் (Daniel Rowlands) என்பவரும் ஜோன்ஸின் செயல்களினால் ஊக்கம் பெற்று, வேல்ஸில் கால்வினிய மெதாடிஸ்ட் சமயத்தினைத் (Methodism) தோற்றுவித்தனர்.

ஆங்கிலத் திருச்சபைக்குள்ளிருந்தே வெஸ்லிகளும் தோன்றினர். அவர்கள் இறக்கும்வரையிலும் அச் சமயத்தைச் சார்ந்தவர்களென்றே கூறிக்கொண்டனர். அவர்களுடைய தந்தை சாமுவேல் (Samuel) என்பவர் லிங்கன்ஷயரில் உள்ள எப்வொர்த் (Epworth) என்னுமிடத்தில் சமயகுருவாக இருந்தவர். அவரும் இணங்காதார் குடும்பத்தில் தோன்றியவரானபோதிலும், திருச்சபையின் வலதுசாரிக் கட்சியிலிருந்துவந்த உயர் திருச்சபையாளராக விளங்கினர். புகழ்மிக்க வெஸ்லி சகோதரர் இருவரும் ஆக்ஸ்போர்டில் கல்வி பயின்று, கல்லூரியில் ஒன்றுகப் பட்டம் பெற்றனர். இருவரும் சமய குருமாராகப் பதவியேற்றனர்; தாமஸ் கெம்பிஸ் (Thomas Kempis), வில்லியம் லா ஆகியவருக்குப் பெரிதும் கடைமைப்பட்டவர்கள். இவையவரான சார்லஸ் முதல் மெதாடிஸ்டுகளை ஒன்றுசேர்த்தார். ஆக்ஸ்போர்டைச் சார்ந்த இந்த இளைஞர்கள் கிறித்துவ சமயத்தின் பழைய கடமையெனக் கருதிக் கூட்டமாகச் சேர்ந்து தொழுதல், படித்தல், சிறையிலடைபட்ட கைதிகளைச் சென்று காணுதல், பட்டினி கிடத்தல், முறையாகத் தவற்றை ஒப்புக்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் புதிய வழியைக் கடைப்பிடிக்க உறுதி பூண்டனர். மூத்த சகோதரரான ஜான் (1702–91) இவ்வியக்கத்தைத் தலைமை தாங்கி நடத்துதற்காக வந்து சேர்ந்தார். ஜார்ஜ் வொயிட்ஃபீல்டும், (George Whitefield) இவ்வியக்கத்தாரோடு இணைந்துகொண்டார். இவ்வியக்கத்தாரிடையே மாறுபட்ட கருத்துகள் இருந்தன. திருச்சபையைப் பொறுத்தவரையில் சார்லஸ் பழைமைப் பண்பு கொண்டவராக இருந்தார்; ஆங்கிலத் துதிப்பாடல் எழுதுவோரில் தலைசிறந்து விளங்கினர். செயல் வீரராக இருந்தபோதிலும் அவர் காரியவாதியல்ல. உரமிக்கவரான வொயிட்ஃபீல்டு புறவெளிப் பேச்சாளரில் முதல்வராகவும், மெதாடிஸ்டுகளில் தலைசிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார். நுணுக்க நயம் வேண்டிய வெஸ்லி சகோதரர் தோல்வி கண்ட அமெரிக்காவில் வொயிட்ஃபீல்டு வியக்கத்தக்க வெற்றி பெற்றார். ஆனால், மெதாடிஸ்ட் சமயத்தவர் வலிமைபெற்று நிலையான சமுதாயமாக மாறியதற்கு ஜான் வெஸ்லியின் பெருந்தன்மையும் அவரது நிர்வாகத் திறமையும் முக்கியக் காரணங்களாக அமைந்தன.

அவரது குடும்பத்தவரிடம் காணப்பெற்ற கொந்தளிக்கும் மனப்பான்மையும் மூட நம்பிக்கைகளும் அவரிடமும் காணப் பெற்றன. அதே சமயத்தில் அவர் பலரை, பொதுவாகப் பெண்களின் மனத்தைப் புரிந்துகொள்ளாது, அவர்களைக் கையாளுவதில் அவ்வளவு புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவில்லை.

அவர் மனத்தில் விநோதமான எண்ணங்களைக் கொண்டிருந்தார். ஸ்காட்டிய மேரியின்மீது நம்பிக்கை வைத்திருந்தார். கடுமையான கட்டுப்பாடு அயர்லாந்தைக் காக்கக்கூடும் என்று எண்ணினர். அவரிடம் இருந்த பழைமைப் பண்பு அமெரிக்கப் புரட்சியாளருக்கும் பிரெஞ்சுத் தீவிரவாதிகளுக்கும் எதிராக அரசருக்கு ஆதரவு தருமாறு செய்தது. ஆயின், வெல்லமுடியா உணர்ச்சியின் மேன்மையும், கொண்ட கொள்கையில் உறுதியும், இரக்கமற்ற தீர்மானமும் அவரிடம் இருந்தன. அவர் வயது முதிர்ந்தோரிடத்தும் செல்வாக்கு மிகுந்தோரிடத்தும்கூட முரட்டுத்தனமாகவும் பிடிவாதமாகவும் நடந்துகொண்டிருக்கின்றார். அவரது கடுஞ்சொற்கள் பிறரைத் தீவிரமாகப் பாதிக்கும். ஒரு முறை அமைதி நிறைந்த அவருடைய சகோதரிகளுள் ஒருவருக்குப் 'பரத்தையரும் கொலைகாரரும் தலையாய பாவிகள்' என்று எழுதினர். அவரிடம் காணப்பெற்ற நெகிழாத் தன்மையினால், சமயப் புத்துயிர்ப்பின்போது திருந்திய திருத்தம் கெட்டு விழுவோரும் போலி சமயத்தலைவரும் வெளிக்கொணரப் பெற்றனர். அத்தகையோர் இவ்வியக்கத்திலிருந்து 'தீவிர நடவடிக்கையின்மூலமாக வெளியேற்றப்பெற்றனர். தனிப்பட்டோர் பேரின்பம் அடைதல் எனும் அடிப்படையில் இவ்வியக்கம் அமைந்தது. இவற்றின் இடதுசாரியாக கால்வினிஸம் திகழ்ந்தது. அது அறமுறைக் கட்டுப்பாட்டை ஏற்காத பிரிவாக இருந்தது. அதில் தனியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர் எனும் செருக்குக்கொண்டோர் இருந்தனர். வலது பக்கத்தில் மறை பொருளில் நம்பிக்கையும் அமைதிச் சமயமும் திகழ்ந்தன. இவைகளில், அமைப்பின்மீது வெறுப்பும் அருள் நுகர்வும் மிகுதியாகப் போற்றப்பெற்றன. ஜெர்மன் மொரேவியப் பிரிவினர் (Moravians) திருச்சபை அமைப்பின்மீது வெறுப்புக்கொண்டதனால் ஜான் அவர்களுடன் சண்டையிட்டார். தலைவிதியால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர் என்ற கொள்கை அடிப்படையில் வொயிட்ஃபீல்டுடனும் வெல்ஷ் தலைவர்களுடனும் முரண்பட்டார். அதன் விளைவாக மெதாடிஸம், கால்வினிய மெதாடிஸ்ட் பிரிவு என்றும் கால்வினியத்தைச் சாராத மெதாடிஸ்ட் பிரிவு என்றும் பிளவுற்றது.

அவர் வொயிட்ஃபீல்டின் உதாரணத்தைப் பின்பற்றி, 1739ஆம் ஆண்டில் புறவெளிச் சொற்பொழிவு முறையைத் தொடங்கிய தோடு செபெல் என்னும் தொழுமிடங்களையும் நிறுவினர். முதலில் ஃபின்ஸ்பரி (Finsbury), பிரிஸ்டல், நியூகாஸில் ஆகிய இடங்களில் அதிகக் கவனம் செலுத்தினர். கட்டுப்பாட்டை வளர்த்த ஆணைகள், சிறு கூட்டங்களாகப் பிரித்தல், தனிப்பட்

டோர் புலனுய்வு, பிணியாளரைச் சென்று பார்த்தல் போன்ற அடிப்படைக் கூறுகளை வேகமாக உருவாக்கினர். தம்முடைய சீடர்களுக்குச் சமய சித்தாந்த நூல்களை அளித்ததோடு மருத்துவ உதவியும், கடன்களும், குருமார் ஊதியமும் அளித்தார். 1744ஆம் ஆண்டில் மாநாடு ஒன்றை அவர் கூட்டியபோது, நாட்டுத் திருச்சபையிலிருந்து பிரிந்துசெல்வதற்கு எதிராகத் தீர்மானம் ஒன்று அதில் நிறைவேற்றப்பட்டது. அவருடைய சீடர்கள் திருச்சபைக் சடங்குகளில் கலந்துகொள்ள வேண்டு மென்று வற்புறுத்தப்பட்டது. ஆனல், சமயகுருமார் மெதாடிஸ்டு கள் பலிபீடத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கவில்லை. அவருடன் சமய குருமார் எவரும் சேரவில்லை. எனவே, நடை முறைக் காரணங்களும், எது வரினும் வரட்டுமென்று தம்முடைய கொள்கையில் ஜான் விடாப்பிடியாக இருந்ததும் அவர் வெறுத்த பிளவினைத் தோற்றுவித்தன. அவருடைய சமயம் சாராப் பிரச்சாரகர் சமயச் சடங்குகளைக் கொண்டாடினர். அவரும் அமெரிக்காவிற்கு அனுப்புவதற்காக குருமாருக்குப் பதவியளிக்க வேண்டியதாயிற்று. ஆரம்ப காலத்திலிருந்த பகைமையும் வெறுப்புணர்ச்சியும் குறைந்திருந்தபோதிலும், திருச்சபை அமைப்பு விரிவடையாவிட்டால் மோதல் ஏற்படுவது உறுதி யாயிற்று. மேலும், திருச்சபையைச் சேர்ந்தவராகவோ அல்லது புறச்சமயத்தவராகவோ இல்லாது இருந்த ஒரு கூட்டத்தினரை சட்டம் ஏற்பது கடினமாயிற்று.

இத்தகைய மோதல் தோன்றுவது நிச்சயம் என்பது மெதாடிஸ்ட் பிரிவிலிருந்து எவான்ஜெலிகல் இயக்கம் ஆங்கிலிகத் திருச்சபைக்குப் பரவியதிலிருந்து புலனுகியது. ஜான் வெஸ்லியின் புகழ்மிக்க சீடர் சிலர் திருச்சபைப் பதவிகளை வகித்துவந்தனர். பிலெட்சர் (Fletcher) என்பவர் ஷராஃப் ஷயரில் (Shrofshire), மாட்லி (Madley) என்னும் ஊரில் குருவர்கத் திகழ்ந்தார். அவரைச் செல்வச் சீமாட்டியாகிய ஹண்டிங்டன் (Huntingdon) பிரெகனில் (Brecon) டிரிவெக்கா (Trevecca) என்னு மிடத்தில் தாம் நிறுவிய பயற்சிக் கல்லூரியின் தலைவராக நியமித் தார். ஆனல், அச் சீமாட்டியார் கால்வினியப் பூசலினல் வெஸ்லியிடமிருந்து பிரிந்து சென்றார். அவர்தம் சமயக் குழுவிற் காக அமைந்த தொழுகைக் கூட்டங்கள் சட்டமுரணனவை என்ப தால், பல எவான்ஜெலிகல் குருமார் சமய நிறுவனத்திலேயே இருந்துவிடத் தீர்மானித்தனர். 1770ஆம் ஆண்டில் அரசியலில் கூட அவர்களுடைய செல்வாக்கு மிகுதியாக இருந்தது. வென்ஸ் (Venns) போன்ற சமயப் பற்றுக்கொண்ட குருமாரும் தார்ன்

டன்கள் (Thorntons) போன்ற வணிகரும், கிளாஃபாம் (Clapham) பிரிவினரை நடத்திச் சென்றனர். இப் பிரிவினர் சமய வரலாற்றிலும் மக்கட் பணி வரலாற்றிலும் சிறந்த இடம் வகித்தவர்களாவர்.

வெஸ்லி 1791ஆம் ஆண்டு நாடறிந்த நல்லவராக இறந்த போது, இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 75 சமய போதகர் சுற்றி வரும் வட்டார எல்லைகளையும், 70,000 சீடர்களையும் விட்டுச் சென்றார். அவர் கால் மில்லியன் மைல்கள் சுற்றுப்பிரயாணம் செய்து 40,000 சொற்பொழிவுகளை ஆற்றியவராவர். எங்கெல்லாம் இழிந்த வாழ்க்கையும் அபாயகரமான எதிர்ப்பும் காணப் பட்டனவோ, அங்கெல்லாம் ஜோன்ஸும் அவரது போதகரும் வெற்றி கண்டனர். உதாரணமாக, மெண்டிப்ஸ் (Mendips), டைன் சுரங்கத் தொழிலாளரிடையேயும், பிளிமவுத் (Plymouth) துறை முகத் தொழிலாளரிடையேயும், கார்னிஷ் கப்பலுக்கும் பாறை களுக்குமிடையேயும் பணியாற்றி வெற்றி கண்டனர். அறியாமை இருளில் சிக்கி ஆதரவற்று இருந்தவரிடையே சென்று போதனை செய்தார். எப்வொர்த்திலுள்ள தமது தந்தையின் கல்லறை மீது நின்றும், மின்னலும் புயலும் மலிந்த சதுப்பு நிலங்களிலும், தம்மீது கல்மாரி பொழிந்த கூட்டத்தாரிடையேயும் ஓயாது அறவுரைகள் நிகழ்த்தினர். 'இஸ்ரேல் மாளிகையே, நீ ஏன் இறக்கவேண்டும்?' (Why will ye die, O House of Israel?) என்னும் பாடல் அவருடைய சொற்பொழிவுகளின் சாரமாக அமைந்தது. அதைப்போலவே மனிதரிடமும் ஆண்டவரிடமும் அன்பு பாராட்டு வோருக்குக் கண் இமைக்கும் நேரத்தில் என்றே ஒரு நாள் 'நம்பிக்கை' பிறக்கும் என்றும், ஒழுக்கத்தின் அடிப்படையில் வரும் இன்பம் மனத்திலேயே சொர்க்கத்தைத் தோற்றுவிக்கும் என்றும் விளக்கினர். தொடக்க காலத்தில் களிப்புப் பாடல் களும், 'ஆண்டவரின் அன்புக் கணைகளால் தாக்குண்டவரின் புலம்பல்களும், கூச்சலும், மயங்கி விழுதலும் இவ்வியக்கத்தில் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன. சமயம் சாரா போதகர்கள், தலைவர்களின் அனுமதியின்றித் திருக்கோயிலின் வெளியில் ஆரவாரம் செய்ததையும், இராக்காலங்களில் அன்பு விருந்துகள் நடத்தியதையும் மக்கள் அறவே வெறுத்தனர். ஆயின், தற்காலிகமாக இவ்வுணர்ச்சிப் பெருக்கம் காணப்பெற்ற போதிலும், இவ்வியக்கத்தார் ஆற்றிய செயல் அருமையும் பெருமையும் வாய்ந்ததாகக் காணப்பட்டது. தம்முடைய பல்கலைக்கழகத்தில் இறுதி முறையாக உரைநிகழ்த்திய ஜான் வெஸ்லி, அத் தலைமுறையில் வாழ்ந்த சிறுதரத்தாரைப்பற்றிக் குறிப்பிட்டார். ஒழுக்கத்தின் உயர்வை அவர்களிடையே

உணர்த்தி, அதனுடைய இன்றியமையாத் தன்மையை உணரும் அறிவையும் ஊட்டினர். மேலும், அவர் தொழிற் புரட்சி காரணமாகப் புறக்கணிக்கப்பெற்று, ஒடுக்கப்பெற்ற வகுப்பாரிடையேயும் பகுதிகளிலும் இத்தகைய உணர்வு ஆழப் பதியுமாறு செய்தார்.

அவர் அரசியல் ஏற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. பணிவுடைமையே உண்மைக் கிறித்துவனின் கடமையென்று போதித்தார். இச் சூழ்நிலையில் அவரது இயக்கம் ஜனநாயக அடிப்படையில் எழுந்த ஒன்று அன்று எனினும், தொழிலாளரிடையேயும் நடுத்தர வகுப்பாரிடையேயும் தன்மான உணர்ச்சியும் நேர்மைக்காகப் போராடும் ஆர்வமும் வளர்ந்து, புதிய சமுதாயம் ஒன்று தோன்றுதற்கு அவரது தொண்டு உதவியாக இருந்தது. இது நமக்கு ஒரு சிறந்த உண்மையை உணர்த்துவதாக இருக்கின்றது. அதாவது, பிரஞ்சுப் புரட்சி தோன்றுதற்குமுன் இருந்த தலைமுறை முழுவதிலும் காணப்பெற்ற சீர்திருத்த இயக்கத்தின் ஒரு பகுதியாகவே வெஸ்லியன் இயக்கம் திகழ்ந்தது. இவ்வியக்கம் ஒரு வகையில் அரசவைக்கு எதிராக இருந்த பழைய 'நாட்டுக் கட்சியி'லிருந்து தோன்றியது எனலாம். அது பதவியாளரையும் ஓய்வூதியத்தையும் எதிர்த்தது. கிளர்ச்சி செய்யும் வகையில் தீவிரமாகத் தாக்கி எழுதிய பாலிங்புரோக்கைப்போல, இவ்வியக்கத்தைச் சேர்ந்த வேறு சிலர் பாராளுமன்றச் சீர்திருத்தம் வேண்டுமென்று கோரினர். வெஸ்லியன் இயக்கத்திற்குச் செல்வருடைய வள்ளன்மை துணையாக இருந்தது. மேலும், இரவலர் சட்ட எதிர்ப்பும் பத்திரிகைகளும் அதற்குத் துணை புரிந்தன. லங்காஷயர் தொழிலாளர் போன்றவர்கள் பெரு நகரங்களில் பெருகியிருந்த பத்திரிகைகளில் தங்களுடைய துன்பங்களையும் துயரங்களையும் எடுத்துக் கூறினர். பணியாளர் நட்புச் சங்கங்களும் தொழிற் சங்கங்களும் தோன்றின. அயர்லாந்து பாராளுமன்றத்துடனும் அமெரிக்கச் சட்டசபைகளுடனும் ஏற்பட்ட மோதல்களினால் உண்மையான அரசியற் கருத்து மீண்டும் உருவாகியது. சுருங்கக் கூறுமிடத்து, தீவிரவாதிகள் பல்வேறு காரணங்களினால் விக்குக் கட்சியின் இடதுசாரியினராகத் தோன்றினர்.

இங்ஙனம் இருந்த அமைதியற்ற ஒரு கட்டுக்கோப்பிற்குள் தான் பிரிட்டனின் வெளிநாட்டுப் பொறுப்புகளையும் அரசியல் கட்சிகளின் வளர்ச்சியையும் பொருத்திக் காணவேண்டும்.

2. மூன்றும் ஜார்ஜின் ஆட்சி
(The Government of George III)
1763–1782

1763ஆம் ஆண்டுமுதல் 1782ஆம் ஆண்டுவரை இருந்த மூன்றும் ஜார்ஜின் தனியாட்சிக் காலம், நமது வரலாற்றில் மிகவும் பழிப்புக்குரியதாகும். மெக்லன்பர்க்கைச் (Mecklenburg) சார்ந்த சார்லொட்டி என்பவரை ஜார்ஜ் மணந்துகொண்டது, முதலில் இன்பம் பயப்பதாக இருந்தது. அத் திருமணத்தோடு, அவர்தம் குணங்களும் குற்றங்களும் தெரிந்தன. சோம்பித் திரிந்த அவர், அரசியலில் ஜுரவேகத்தில் ஈடுபட்டு ஓயாது உழைக்கத் தலைப்பட்டார். அரசியல் கட்சியின் கொரடாவைப் (party whip) போன்று வாக்குரிமை அளிப்பதை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அரசரின் செல்வாக்கைப் பயன்படுத்தி நாட்டுக் கனவான்களை அமைச்சரைப் பின்பற்றுமாறு வற்புறுத்தும் முறை இரண்டாம் சார்லஸின் காலத்திலேயே தோன்றியதாகும். அம் முறையினை ஜார்ஜ் செம்மை செய்தார். திருச்சபையிலும் குடியேற்றங்களிலும் அயர்லாந்திலும் ஆதரவு அளித்தல், இராணுவத்தில் பதவி உயர்வு அளித்தல், ஓய்வூதியம் அல்லது தலத்தில் பதவி வழங்குதல், அரசவையில் கடுநோக்குகள் ஆகியவற்றின் மூலமாக இம் முறை வளர்ந்தது.

ஜார்ஜ் கடமையுணர்வும் ஒழுக்கநெறியுங் கொண்டவர். கல்வியறிவில் ஆர்வமும் பயிர்த் தொழிலில் ஊக்கமும் மிகுந்தவர். இவையெல்லாம் இருந்தும் அவர் கேடு பயக்கும் அரசனாக விளங்கினர். தனிப்பட்ட பகைமையைப் பொதுவாழ்விலும் அவர் கர்ட்டத் தொடங்கினர். அதன்விளைவாக சாத்தம் (Chatham) பிரபுவின் சடலத்திற்கு அரசாங்க மரியாதை வழங்குவதையும் எதிர்த்தார். அவ்வாறு மரியாதை செய்வது தம்மை அவமதிப்பதற்கு ஒப்பாகும் என்று கூறித் தீவிரமாக எதிர்த்தார். அதேபோன்று மந்திரிசபைகளில் விசுவாசமின்மையைத் தூண்டிவிட்டு, அவை

களின் வலிமையினைக் குறைத்தார். முடிவெடுக்கும் திறமை பெற்றிருந்தபோதிலும், எப்போதும் தவறான முடிவுகளையே அவர் மேற்கொண்டார். அவரது மெலிந்த மனம் நெருக்கடி நேரத்தில் கொந்தளிப்படைந்து, இறுதியில் தடுமாறியது. பழைமைப் பண்பு மிகுதியாகப் பெற்ற அவருக்குத் தீவிரவாதம், தொழிற் பூசல்கள், அமெரிக்கப் புரட்சி ஆகியவையெல்லாம் தமது நிறை யுடை அரசாங்கத்தை வேண்டுமென்றே தாக்க எழுந்தவையே என்னும் எண்ணம் ஏற்பட்டது.

நியூகாசிலின் முயற்சியால் 1761ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பெற்ற பாராளுமன்றம் தான் கலைவதற்குமுன் நான்கு மந்திரி சபைகளைக் கண்டது. 1761ஆம் ஆண்டுமுதல் 1763வரையில் பூட் (Bute) அதனை நடத்திச் சென்றார். 1763-லிருந்து 1765வரையில் கிரன்வில்லும், 1765முதல் 1766வரை ராக்கிங்ஹாமும் (Rockingham), அதன் பிறகு சாத்தம் பிரபுவும் (Chatham) மந்திரிசபைகளை அமைத்தனர். 'வெட்டுகளும் மாறுதல்களும்' நிறைந்த ஆண்டுகள் என்று நார்த் (North) பிரபு வருணித்த இந்த ஆண்டுகளில் காணப் பெற்ற அவலநிலைக்கு அரசர்மட்டும் காரணமல்லர்; கட்சிகள் பழைய நிலையில் இல்லை. யாகோபியர் மறைந்தனர். திருச் சபைக்கும் புறச்சமயத்திற்கும் உள்ள வேற்றுமை அத்துணைத் தீவிர பிரச்சினையாக இல்லை. தாங்களாகவே தேர்ந்தெடுத்துவந்த செல்வம் மிகுந்த பெருங்குடியினரைச் சமுதாய வேற்றுமைகள் பிரிக்கவில்லை. அப்படியே வேற்றுமைகள் தோன்றினாலும், அது சில வாக்காளர்களையே கொண்ட பாக்கட் பரோக்களைக் கடந்து வரவேண்டும். தன்னுடைய விவாதங்களைப் பிரசுரிக்க அனுமதி தராத காமன்ஸ் சபைவரை எட்டவேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில் உண்மையான டோரி உறுப் பினர்கள் ஏறக்குறைய நூறு பேர்களே இருந்தனர். அவர்கள் கவுன்டிகளிலும் பெரிய நகரங்களிலும் சுதந்திரமான தொகுதி களில் பாதியளவிற்குக் கைப்பற்றியிருந்தனர். உண்மையில், 'சுதந்திரம்' ஒன்றுதான் அவர்களிடம் இறவாது இருந்த கொள்கை. அதுவும் அமைச்சரும் பதவியாளரும் பெருமிதங் கொண்ட சுதந்திரமாக இருந்தது. எனவே, விக்குகள் 'டோரிகள்' என்று பழித்துக் கூறிய பூட் (Bute), கிரன்வில் போன்றோரின் ஆதரவாளருக்கும் உண்மை டோரிகளுக்கும் நிறைய வேற்றுமை உண்டு. 'கதிரவனைளிக் கனவான்கள்' என்று பர்க்கினல் (Burke) அழைக்கப்பெற்ற இவர்கள் உண்மை யில் டோரிகளல்லர்; விக்கு பிரிவினரே ஆவர்.

உண்மையில், பழைய விக்கு கட்சி, தான் கொண்ட வெற்றியின் விளைவாகவே அழிந்தது. யாகோபியத்தினால் டோரிகள் பதவிக்கு வர முடியாமற்போகவே, 'புரட்சிக் குடும்பங்கள்' (Revolution families) அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றின. அதனால் 1770ஆம் ஆண்டுவரையில் பதவியிலிருந்த அனைவரும் விக்குகளேயாவர். நியூகாசிலும், அவரது எதிரிகளான பிட்டும், கிரன்வில்லும் மட்டுமன்றி பூட்டும், அவரது செயலரும், அரசரின் நண்பர் குழாத்தினை அமைத்தவருமான ஜெங்கின்சனும், முதலில் நியூகாசிலின்கீழ் பதவியேற்ற நார்த் பிரபுவும் விக்கு கட்சியைச் சார்ந்தவரேயாவர். விக்கு கட்சியின் கொள்கைகள் பொதுப் பண்பு கொண்டவையாக இருந்ததால், அக் கட்சி பல சிறு குழு நலன்களாகவும் கூட்டிணைப்புக் குழுக்களாகவும் பிரிந்தது. அவைகளில் சில செல்வர்களிடையே காணப்பெற்ற போட்டி அடிப்படையில் தோன்றியவை; அரசாங்க ஆதரவு பெற்று ஒருங்கிணைக்கப்பெற்று இருந்தவையாகும். நியூகாசில் குழுவினருடைய அரசாங்கத்தின் இறுதியாண்டுகள் வெறுக்கத்தக்கனவாக இருந்தன. அதிலும் அக் குழு, பிற்கால விக்கு கட்சியினின்றும் பெரிதும் மாறுபட்டு விளங்கியது. பிட்டினுடைய போர்க்கொள்கையைப் பிடிவாதமாக எதிர்த்த பிறகு, அவர்களால் ஜெர்மனியுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளைப் புறக்கணிக்க வேண்டுமென்ற பூட்டின் கொள்கையை ஏற்கமுடியவில்லை. பிட்டினை மந்திரிசபையிலிருந்து வெளியேற்றுதற்குப் பூட்டிற்கு அனுமதிதந்த அவர்கள் தாங்களே விரித்த வலையில் வீழ்ந்து துன்புற்றனர். மூன்றும் ஜார்ஜ் அவர்களை முறியடித்தார், அவர் அவர்களுடைய முன்னாள் கூட்டாளிகளான பாக்ஸ்போன்றோரையே பேராட்களாகக்கொண்டிருந்தபோதிலும், அவரது அமைச்சரை டோரிகள் என்று பழித்தனர். அவர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காக இரண்டாம் ஜார்ஜை எவ்வித வழிகளைப் பின்பற்றி மாறுவற்புறுத்தினார்களோ, அதே வழியை அவர்களுக்கு எதிராக மூன்றும் ஜார்ஜ் பயன்படுத்தினர். இங்ஙனம் 1763ஆம் ஆண்டுச் சமாதானத்திற்குப் பிறகு வால்போல், பெல்ஹாம் ஆகியோரின் ஆதரவாளர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பெற்றனர். ஜார்ஜ் மன்னர் விக்குகளைவிட அதிகமாகக் கையூட்டு அளிக்கவில்லை; பதவியாளரையும் ஸ்காட்டிய உறுப்பினரையும் பயன்படுத்தவில்லை.

பதவியிலிருந்து நீக்கப்பெற்ற நியூகாசில் கும்பலுக்குத் தம் கட்சியை வளர்க்கும் எண்ணம் இல்லை. ஹார்டுவிக் (Hardwicke) 'போன்ற அனுபவம் மிக்க அரசியல் வல்லுநர் 'வகுத்தமைத்த எதிர்க்கட்சியை' ஏற்க மறுத்தனர். அமைச்சர் பட்டியலை

அளித்தும், குறிப்பிட்ட திட்டத்தை வகுத்தும், அரசரை எதிர்ப்பதற்கு அக் கால வழக்கில் 'அரசரின் தனிப் பேட்டியறையைத் தாக்குதல்' என்று அழைக்கப்பெற்றது. எனவே, பணமும் பதவியளிப்பும் அரசரின் ஆதரவாளருடைய எண்ணிக்கையை நிர்ணயிக்கவில்லை. நன்கு அமைந்த அரசியல் கட்சியும், அதனுடைய குறிக்கோளும், சுதந்திரத் தன்மையும் இல்லாதது மன்னரின் கை மேலோங்குமாறு செய்தது. தற்காலிகமான சூழ் நிலையும் சிறந்த மனிதரின் செல்வாக்கும் இத்தகைய நிலை தொடர்ந்து வருதற்குக் காரணமாக அமைந்தன.

முதல் முறையாக வந்தவரில் வயது நிரம்பிய வேல்ஸ் இளவரசர் ஹனேவிரிய அரசகுலத்தில் இல்லை. அதனால் அரசருக்கு எதிராக ஓர் இளவரசர் கட்சி எழவில்லை. அதோடு நியூகாசில் முறையில் தனிப்பட்ட திறமையின்மையினால் எதிர் விளையும் தோன்றியது. யாகோபியக் குடும்பத்தினரும் சுயேச்சை டோரிகளும் புதிய நம்பிக்கையோடு இருந்தனர். பூட்டின் ஆதரவாளரும் அடிமையான அரசவையினரல்லர். அவர்களில் திறமை வாய்ந்த இளைஞரான ஷெல்பர்ன் (Shelburne), மின்டாஸை (Mintos) நிறுவிய கில்பர்ட் எலியட் (Gilbert Elliot) போன்ற சீரிய எண்ணங்கொண்ட ஸ்காட்டியரும் ஜென்கின்சன், காமன்ஸ் சபைக் கணக்கராகிய டைசன் (Dyson) போன்ற அரசியலில் பொது நிர்வாகத் திறமைகொண்ட பேரறிஞர்களும் இருந்தனர். அத்தகையோர் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பது மன்னரும் பிட்டும் இணைந்து வேலை செய்வார்களா என்னும் கேள்விக்குரிய விடையைப் பொறுத்திருந்தது.

மேன்மையுற்ற பொதுமகனரான பிட் முடியாட்சியை மிகுதியாக ஆதரித்தார். உறுப்பினர் கட்சியாக இணைவதை அரசர் வன்மையாகக் கண்டித்ததைப்போலவே, பிட்டும் அரசியற் கட்சிகளை அழிப்பதாக வாக்குறுதி தந்தார். அவருக்கு அதிக ஆதரவு அளித்தவர்களிற் சிலர் பழைய டோரிகள் ஆவர். அவர் 1761–1762ஆம் ஆண்டுகளில் பூட்டை வன்மையாகத் தாக்கிய போதிலும், ஓரிரு ஆண்டுகளுக்குள் அவரது செல்வாக்கைப் பயன்படுத்திக் கூட்டிணைப்பு அரசாங்கத்தை ஏற்படுத்தினர். நியூகாசிலின்கீழ் மறுபடியும் பணியாற்ற விரும்பவில்லை. சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்பவரும் முக்கியமான வருமான பெட்ஃபோர்டிடமிருந்து (Bedford) பிரிந்திருந்தார். அதே சமயத்தில் ராக்கிங்ஹாமின் தலைமையின்கீழ் இருந்த இளைய விக்குகளை வெறுத்தார். அவர்களுடைய பிடிவாதமான கட்சிக் கருத்தினை வெறுத்தார். அவர் அரசரிடம் மதிப்பும் ஜனநாயகப்

பற்றும் மிக்கவர். ஒரு மேதையானதால் இரு கட்சிகளிலிருந்தும் சீடர்களைப் பெற்றார். ஷெல்பர்னும் இளைஞரான கிராஃப்டனும் (Grafton) அவரது சீடர்களாயினர். ஆயின், அவர் விக்கு கட்சியோடு இணைந்து வேலை செய்ய முடியாமையே சில ஆண்டுகளாக இருந்த குழப்பநிலைக்கு அடிப்படைக் காரணமாகும். எனினும், இந்த ஆண்டுகளில் விக்கு கட்சியும் டோரி கட்சியும் உறுதியடைந்து உருப்பெற்று வளர்ந்தன.

மறைந்திருந்த பூட்டிற்குப் பதிலாக கிரன்வில் பெயரளவில் தலைவராக இருப்பார் என்று எதிர்பார்த்து அரசர் ஏமாந்தார். ஏனெனில், எத்துணைதான் ஆரவாரப் பிரியராகவும், உணர்ச்சியற்றவராகவும், குடிப்பெருமை போற்றுபவராகவும் இருப்பினும், கிரன்வில் இழிந்த மனிதரல்லர். காமன்ஸ் சபைமீது அவர் கொண்ட பற்றும், சிக்கனத்திலும் சமாதானத்திலும் அவருக்கிருந்த ஆர்வமும் பழைமைப் பண்பாளரின் ஆதரவைத் தேடித் தந்தன. கருவூலமும் (Treasury) வாணிப ஆட்சிக் குழுவும் அவரிடம் காணப்பெற்ற அமைப்பு முறை ஆர்வத்தைப் பாராட்டின. அவர் தமது பொறுப்பற்ற ஆதரவாளருக்கு அடிபணிய மறுத்தார். 1763ஆம் ஆண்டு இறுதியில் எக்ரிமான்ட் (Egremont) இறந்தபோது, பிடிவாதமாக போதனையளிக்கும் இந்த அமைச்சரை நீக்க முதல் முறையாக மன்னர் முயன்றார். ஆனால், பிட்டை மீண்டும் மந்திரி சபையில் கொண்டுவர பூட் துணியாததால் விக்குகள் ஒன்றுக இணைந்தனர். பெட்ஃபோர்டின் துணையுடன் உறுதிபெற்று கிரன்வில் திரும்பவும் பதவியேற்றார். ஸாண்ட்விச்சும் (Sandwich) அவரை ஆதரித்தார். ஸாண்ட்விச் நல்ல திறமையும் அனுபவமும் பெற்றவராக இருந்தபோதிலும், அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் காணப்பெற்ற ஒழுக்கக்கேடு அரசாங்கத்திற்கு இழுக்குத் தேடித் தந்தது. ஆயின், மேன்மையுற்ற 'புரட்சிக் குடும்பத்தின்' தலைவர் என்ற முறையிலும் ஒரு காலத்தில் கம்பர்லண்டின் ஆதரவாளர் என்ற முறையிலும் கிரன்வில்லையும் விக்குகளில் வலதுசாரியினரையும் ஒன்றுக இணைத்து விக்கு கட்சியை மறுபடியும் ஐக்கியப்படுத்த பெட்ஃபோர்ட் எண்ணினர்.

பிற்காலத்தில் பெட்ஃபோர்டையும் கிரன்வில்லையும் மன்னரது கூட்டாளிகளாகச் செய்த பிரச்சினைகள் இரண்டு ஏற்கெனவே தோன்றியபோதிலும், அவர்களை வீழ்த்த அரசர் துடித்துக் கொண்டிருந்தார். முதல் பிரச்சினை அயில்ஸ்பரியின் (Aylesbury) பாராளுமன்ற உறுப்பினரும், நியூகாசிலுக்கு எதிராக பிட்டின் முன்னாள் கூட்டாளியாக இருந்தவருமான ஜான் வில்க்ஸைப்

(John Wilkes) பற்றியதாகும். ஸாண்ட்விச்சுடனும் வேறு சிலருடனும் மெடன்ஹாம் மடத்தில் (Medenham Abbey) நடத்திய மதிப்புக்கேடான களிவெறியாட்டங்களினுல் இழிபெயரைத் தேடிக்கொண்டபோதிலும், வில்க்ஸ் அறிவு, வீரம், நயம் ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற துணிகர வீரராவர். சமீப காலத்தில் ஒழுக்கங் கெட்ட, ஆனல், திறமைமிக்க கவிஞரான சர்ச்சிலோடு (Churchill) இணைந்து பூட்டிற்கு எதிராகப் பத்திரிகைக் கிளர்ச்சி ஒன்றை நடத்தினர். டோரியினர் செல்வாக்குப் பெற்றிருந்த கவுன்டிகளைப் பாதிப்பதாக இருந்த சைடர் (cider) என்ற ஆப்பிள் பழரச மதுவின் மீதான வரியைக் கண்டித்து எழுதினர். அவர் பிரஷ்யாவை ஆங்கில அரசாங்கம் கைவிட்டதையும் கடுமையாகத் தாக்கினர். 1763ஆம் ஆண்டில் தம்முடைய 'நார்த் பிரிட்டன்' (North Briton) பத்திரிகையில் 45 ஆம் இதழில் அரசரின் வாயிலாகச் சமாதானத்தைப் புகழ்ந்து பேசிய அமைச்சரின் ஆணவத்தைக் கண்டித்தார். ஜார்ஜினுல் தூண்டப் பெற்ற அமைச்சர்கள், 'பொதுப் பற்ருணை' (general warrant) மூலமாக வில்க்ஸைக் கைது செய்தனர்.. உள்துறைச் செயலர் பிறப்பித்த அவ்வாணை, பெயரைக் குறிப்பிடாது பலரைக் கைது செய்யுமாறு விதித்தது. அதனுடைய துணைகொண்டுதான் வில்க்ஸும் அவருடன் ஐம்பது பேர்களும் கைது செய்யப் பெற்றனர். சட்ட எதிர்ப்பு அவதூறு குற்றத்திற்காக (seditious libel) வில்க்ஸ் டவர் கோட்டைச் சிறைக்கு அனுப்பப்பெற்ருர். ஆனல், அவர் டெம்பிளின் (Temple) துணைகொண்டு ஹேபியஸ் கார்பஸ் ஆணை கோரினர். பரிவு காட்டும் நீதிபதியான பிராட் (Pratt) என்பவரிடம் மிகுந்த திறமையாக முறையிட்டார். அரசத் துரோகம், அடாப்பழி, அமைதி குலைத்தல் ஆகிய குற்றங்களுக்கும் பிற குற்றங்களுக்குமாகப் பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்தல் சட்ட முரணனது என்றும் பொதுப் பற்ருணைகள் முறை கேடானவை என்றும் நீதிபதி பிராட் தீர்ப்பு வழங்கினர். மிகுந்த களிப்பு ஆரவாரங்களுக்கிடையே வில்க்ஸ் விடுதலையானர். உள்துறைச் செயலர் பணிமனை, வில்க்ஸிற்கும் காவல்துறை, மற்றும் சிறையிடப்பெற்ற மற்றையோருக்கும் இழப்பீடு அளிக்க வேண்டுமென ஜூரிகள் விதித்தனர்.

1763–64ஆம் ஆண்டு மாரிக்காலத்தில் மந்திரிசபை நீதிமன்றங்களின் மறுத்தலினுல் தோன்றிய நிலையிலிருந்து பாராளுமன்றத்தின்மூலமாக மீள முயன்றது. விக்கு கட்சியினர் பிளவுபட்டு நின்றனர். ஹார்டுவிக்கும் சட்டத் தலைமை முதல்வராக இருந்த அவர்தம் மகனரான சார்லஸ் யார்க்கும் (Yorke), வில்க்ஸ் கைதுசெய்யப்பட்டதை ஆதரித்ததால், பிட் சீற்றமடைந்தார்,

தங்களது உரிமைகளிலில் அவதூறு குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அடங்கவில்லையென்று காமன்ஸ் சபையினர் தீர்மானித்தனர். அதே சமயத்தில் வில்க்ஸிடமிருந்து கைப்பற்றப்பட்ட பத்திரிகைகளில் 'பெண்களைப்பற்றிய கட்டுரையில்' (An Essay on Women) கடவுள் மறுப்புக் கருத்துகள் காணப்பெற்றதால், அவரைக் குற்றஞ்சாட்டித் தண்டிக்கவேண்டுமென்று பிரபுக்கள் சபை கோரியது. ஒற்றர்களாலும் கூலிக் கொலைஞராலும் தொடரப் பெற்ற வில்க்ஸ், பூட்டின் ஆதரவாளர் ஒருவரோடு நிகழ்ந்த கைகலப்பில் காயமுற்றார். அதன் பிறகு அவர் பிரான்ஸிற்குத் தப்பிச் சென்றார். இங்ஙனம் அவர் இங்கிலாந்தில் இல்லாத போது அவரை நாடுகடத்தியதோடு, பாராளுமன்றத்திலிருந்தும் வெளியேற்றினர்.

தீவிரவாதக் கட்சியினர் 'வில்க்ஸும் சுதந்திரமும்' என் பதையே போர் முரசாகக் கொண்டிருந்தனர். ஜார்ஜின் தனி யாட்சிக்கு லண்டன் நகரில் எதிர்ப்பு மிகுதியாக இருந்தது. மாநகராட்சி மன்றமும் மன்னரின் அந்தரங்க ஆலோசனையும் இளவரசியாரையும் கேலிசெய்யும் வகையில் ஜாக் பூட்டுகளையும் (jack-boots) பாவாடைகளையும் கொளுத்திய மக்கட் கூட்டத்தினரும் எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், பிராட்டின் செல்வாக்கு பெரும் ஆபத்தின் அறிகுறியாக இருந்தது. அதாவது, நாட்டு மக்களுக்கும் அவர்தம் பிரதிநிதிகளுக்குமிடையே பிளவு காணப் பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் அவரது வழக்கிற்கு விளக்கம் தந்து அரசரின் மனநிறைவிற்காகத் தங்களுடைய உரிமையை விட்டுக்கொடுத்தனர். அரசர் நெருக்கியதால், காமன்ஸ் சபையினர் இத்தகைய கேடு பயக்கும் வழிகளைப் பின் பற்றினர். பொதுப் பற்றுணைச் சட்டத்திற்கு முரணது என்னும் தீர்மானம் 14 பேர்களையே பெரும்பான்மையாகப் பெற்று முறியடிக்கப் பெற்றது. ஆனால், பராளுமன்றத்தில் வேல்ஸிலிருந்தும் ஸ்காட்லாந்திலிருந்தும் வந்த கூலி உறுப்பினர், ஒன்றுக இணைந்திருந்த நாட்டுப்புறக் கனவான்களைவிட எண்ணிக் கையில் மிகுந்திருந்தனர். ஷெல்பர்ன், விக்கு கட்சியில் செல் வாக்குப் பெற்றிருந்த கான்வே (Conway) போன்ற சிறுபான்மைக் கட்சியினர் படைப்பதவிகளிலிருந்து அரசரின் ஆணையின்மூல மாக நீக்கப்பெற்றனர்.

விக்கு கட்சியினர் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக்கொண்ட சமயத்தில், நீண்ட காலமாக நிரந்தர அதிகாரிகள் வற்புறுத்தி வந்த பிரச்சினை ஒன்றைக் கிரன்வில் எடுத்துக்கொண்டார். அமெரிக்கக் குடியேற்றங்கள் தற்காப்பிற்காக ஒன்றுடொன்று

இணையவில்லையென்பது அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாகும். 1763ஆம் ஆண்டில் டெட்ராய்ட்டிலிருந்து (Detroit) ஓஹியோவரையில் பாண்டியாக்கைச் சார்ந்த இந்தியரின் கலகங்கள் இத்தகைய அனுபவத்தை உண்மையென்று நிரூபித்தன. இத்தகைய உள்நாட்டு இடரையும் பிளாரிடாவில் இருந்த ஸ்பானியரின் தாக்குதலையும் சமாளிக்கவேண்டி அமெரிக்காவில் 10,000 ஆங்கிலப் படையினர் தங்கியிருக்கவேண்டுமென்று, பூட் மந்திரி சபைக் காலத்தில் ஒப்பந்தம் தோன்றியது. பிரிட்டனின் நாட்டுக் கடன் அமெரிக்காவைக் காப்பதற்கான போரினால் இரட்டிப்பானதாலும் இங்கிலாந்தில் நிலவரி அப்போதும் பவுனுக்கு 4 ஷில்லிங்காகவே இருந்ததாலும், காவற்படையின் செலவில் ஒரு பகுதியை அமெரிக்கா ஏற்கவேண்டுமென்று ஏற்பாடாகியிருந்தது. வணிகச் சட்டங்கள் முறையாக மீறப்பட்டன என்பது போரின் விளைவாகத் தெரியவந்தது. குறிப்பாக, மஸாச்சுசெட்ஸ், பகைவருடன் வாணிபம் செய்தே பிழைத்து வந்தது. அதே சமயத்தில், அநேகமாக தலத்தில் இல்லாத ஏராளமான அதிகாரிகளாலும் அமெரிக்கக் குடியேற்றங்களிலிருந்து கிடைக்கும் பொருளீக்காட்டிலும் செலவு மிகுந்திருந்தது.

குடியேற்றங்களின் ஆட்சியில் நீண்ட நாட்கள் அனுபவம் பெற்றிருந்த ஹாலிபாக்ஸ், தம்முடைய நண்பரான கிரன்வில்லிடம் இத்தகைய இழிநிலை மறையவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர்.

கிரன்வில்லும் அதனை ஏற்றுக்கொண்டார். அமெரிக்காவிலிருந்து அதிகப்படியான வருமானம் பெறுதல் நேர்மையானது, இன்றியமையாதது எனும் அடிப்படையில் பல சட்டங்கள் கொண்டுவரப்பெற்றன. அவைகளில் சர்க்கரைத் தீர்வையைக் குறைக்கும் சட்டம், வரி தண்டுதலைத் தீவிரப்படுத்தும் சட்டம், படையினரைப் பொதுமக்கள் வீடுகளில் வைத்துக் காப்பதற்கான சட்டம் ஆகியவை இவற்றுள் அடங்கும். இவற்றோடுகூட அமெரிக்காவிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் முத்திரைப் பத்திர வரி (stamp duty) விதிக்கும் அதிகாரம் வழங்கும் சட்டமும் கொண்டு வரப்பெற்றது. இதற்குப் பதிலாக வேறு ஏதாவது இருக்குமா என்று குடியேற்றங்களைக் கலந்து ஆலோசிப்பதற்காக கிரன்வில் முத்திரைப் பத்திர வரியைத் தள்ளிவைத்தார். ஆனால், வேறு வகையான வரி ஏதும் கிடைக்காமற்போகவே, 1765ஆம் ஆண்டு முத்திரைப் பத்திரச் சட்டத்தைக் (Stamp Act) கொண்டுவந்தார். ஒருசில வணிகரைத் தவிர மற்றையோர் இச் சட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால், அமெரிக்காவில் சட்டசபைகள் கண்டனத்

தீர்மானங்களை இயற்றின. மக்கள் ஆங்கிலப் பொருள்களை நிராகரித்தனர். முத்திரைப் பத்திரங்களை எரித்தனர். ஆனால், இத்தகைய செய்திகள் விளக்கமாக இங்கிலாந்திற்கு எட்டு முன்னரே, வேறு காரணத்திற்காக ஆகஸ்டு மாதத்தில் அமைச் சரவை வீழ்ந்தது

புதிய பக்கிங்காம் அரண்மனையில் கிரன்வில் கையாண்ட சிக்கனத்தினாலும், நம்பிக்கைத் துரோகம் செய்ததாகத் தம்மை பெட்ஃபோர்டு வெளிப்படையாகவே தாக்கியதாலும், அவர்களிரு வரும் பூட்டிற்கு (Bute) எதிராக இணைந்ததாலும் எல்லையில்லாச் சீற்றமடைந்த அரசர், ஒரு காலத்தில் வெறுக்கப்பெற்ற உறவின ரான கம்பர்லண்டு பிரபுவின் உதவியை நாடினார். அதே ஆண்டில் மன்னர் நோய்வாய்ப்பட்டார். தமது அமைச்சர்கள் அரசமாதா காப்பாளராக வருவதைத் தடைசெய்யும் நோக்கத் துடன் காப்பாளர் ஆட்சி மசோதாவைக் கையாண்ட முறையினால் அவர் ஒருவகையான முடிவிற்கு வந்தார். பூட்டை முதன் மந்திரி யாக்கும் மன்னரின் முதல் முயற்சி பிட்டின் உறுதியினால் குலைந்தது. ஆனால், அமைச்சர்கள் அவரது ஆதரவாளருக்கு எதிராக வேலை செய்தது, அவரை விரைந்து செயலாற்றத் தூண்டியது மேலும், லண்டன் மாநகரில் தொழில் நெருக்கடி தோன்றியது. ஸ்பிட்டல்ஃபீல்ட்ஸ் (Spitalfields) நெசவாளரைக் காக்கும் மசோதா ஒன்றை பெட்ஃபோர்டு எதிர்த்ததற்காக மக்கள் கூட்டத்தினர் அவரைத் தாக்கினர். இத்தகைய நிகழ்ச்சி யினால் அரசர் தமக்கு மக்களுடைய ஆதரவு கிடைக்குமென்பதைக் கண்டுகொண்டார். அமைச்சரவையை அமைப்பதற்காக இரண் டாம் முறையாக அவர் நடத்திய பேச்சுகளில் வில்கஸ், அமெரிக்கா ஆகியவற்றில் சில சலுகைகளை அளிப்பதாகக் கூறினர். எனினும், பிரபுக்கள் சபையில் டெம்பிள் தமக்கு ஆதரவைத் தேடித்தருவார் என்று பிட் நம்பியிருந்தார். ஆனால், டெம்பிளோ தமது சகோதரரான ஜார்ஜ் கிரன்வில்லுடன் சேர்ந்துகொண்டார். அவருடைய உதவியின்றி பிட் தம் விருப்பத்தை நிறைவேற்ற முடி யாது நின்றார். அதன் பிறகே நம்பிக்கையிழந்த நிலையில் ஜார்ஜ் இறுதிக் கருவியாக விக்குகளின் பக்கம் திரும்பினர்.

இங்ஙனம் விக்கு செல்வர்களைக்கொண்ட ராக்கிங்ஹாமின் (Rockingham) முதல் மந்திரிசபை தோன்றியது. வயோதிகத்தை யடைந்த நியூகாசிலுக்காட்டிலும் முன்னேறிவந்த கிராஃப்டன் (Grafton), போர்ட்லண்டு (Portland), ஜான் கேவண்டிஷ் (John Cavendish), கான்வே (Conway) ஆகியோர் அதிகச் செல் வாக்குப் பெற்றிருந்தனர். ஆனால், அவ்வமைச்சரவை அரச

ருடைய விருப்பப்படியன்றி இன்றியமையாத் தன்மையால் உருவாகியது என்பதாலும் பிட் அதில் சேர மறுத்துவிட்டதாலும், அஃது இரண்டு விதத்திலும் மெலிவடைந்தது. ராக்கிங்ஹாமிஸ்ட் ஷெல்பர்ன்போன்ற தமது துணைவர்களைச் சேர்த்துக் கொள்ளமுடியவில்லை. அதே சமயத்தில் சார்லஸ் டவுன்ஷெண்ட் போன்ற பேராசை பிடித்த அரசியல்வாதிகள், அழிவுப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அமைச்சரவையோடு ஒட்டிக்கொண்டிருக்கவில்லை. எனவே, ராக்கிங்ஹாமின் சான்சலரான நார்த்திங்டன் (Northington) திறமை படைத்தவராக இருந்தும், கசப்பு மிகுந்தவரான எக்மான்ட் (Egmont) போன்ற அரசரது நண்பர்கள் உதவியின்றி அரசாங்கம் நடத்தமுடியவில்லை.

எனினும், ராக்கிங்ஹாம் வாதத்தில் வல்லவராக இல்லாத போதிலும் அனுபவமற்றவராக இருந்தபோதிலும், அவரது அமைச்சரவை ஓராண்டிற்கும் குறைவாகவே வாழ்ந்திருந்த போது, நேர்மையும் சூதுவாதற்ற தன்மையும் கொண்ட அவரது செய்கையால் ஃபாக்ஸ், கிரேபோன்ரூர் உருவாக்கிய விக்கு கட்சி தோன்றியது. அவரது அமைச்சரவை பெருங்குடியினரையே கொண்டிருந்தது ஒரு குறைபாடு உடையதாக இருந்தது உண்மையே. ஆயினும், அக் கால நிலையில் பெருங்குடியினரே மன்னரை எதிர்த்து நிற்கமுடியும். ராக்கிங்ஹாமின் செயலரான எட்மண்ட் பர்க்கின் (Edmund Burke) எழுத்து வன்மையாலும் செல்வாக்கினாலும் விக்கு கட்சியினர் புதிய நிலை அடைந்தனர். ஒருவர்மீது ஒருவர் பற்றுறுதிகொண்டிருப்பதாகத் தீர்மானித்தனர். தாங்கள் ஒன்றிவாழ்வதோ அல்லது வீழ்வதோ ஆகிய செயற்பாடுகளை அறிவித்தனர். அவைகளை நிறைவேற்றுவதற்கு மன்னரின் ஆதரவை எதிர்நோக்காது மக்களை நம்பியிருந்தனர்.

அவர்களின் செயல்கள் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவனவாக இருந்தன. பிராட், காம்டன் பிரபுவானர். பொதுப் பற்றுணையைச் சட்டமுரணானது என்று ஒரு சட்டம் அறிவித்தது. மற்றொன்று ஸ்பிட்டால்ஃபீல்டு நெசவாளரின் நலத்தைப் பேணியது. சைடர் மதுத்தீர்வை (Cider-tax) நீக்கம்பெற்றது. ஆனால், கம்பர்லண்டு இறந்ததால் அரசவையில் விக்குகளுக்கு ஆதரவு குறைந்தது. அரசரது ஆட்கள் அவர்களுக்கெதிராக காபினெட்டில் வேலை செய்தனர். உதாரணமாக, அமைச்சரவையில் பிட் சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்றால் தம் பதவியிலிருந்து விலகிவிடுவதாகக் கிராஃப்டன் பயமுறுத்தினர். ஆனால், பிட்டோ

முதன்மையதிகாரம் அளித்தால்தான் அமைச்சரவையில் சேருவேன் என்றார். அதிலும் அமெரிக்காபற்றிய தமது ஆலோசனைகளை ராக்கிங்ஹாம் கட்சியினர் ஏற்க மறுக்கவே, பிட் பிடிவாதமாக இருந்தார்.

எனினும், 1766ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சட்டமுறையான அதிகாரத்தை அழிக்காத வகையில் அமெரிக்க எதிர்ப்பிற்கு ஒரு முடிவு காண உடன்பாட்டிற்கு வந்தனர். அரசரும் அமைச்சரில் பலரும் முத்திரைப் பத்திரத்தைத் திருத்தவே விரும்பினர். ஆனால், பிட்டின் பேச்சுவன்மையாலும் வணிகரின் வற்புறுத்தலினாலும் பெரும்பான்மையினர் அச் சட்டத்தை நீக்க ஒப்புக்கொண்டனர். இருப்பினும், அமெரிக்காவில் வரிவிதிக்கும் உரிமை ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு உண்டு என்பதை வற்புறுத்தும் தெளிவற்ற விளக்கமசோதா ஒன்றினை அதனோடு இணைத்தனர். கிரன்வில்லின் ஆதரவாளரான டெம்பிள், பெட்ஃபோர்டு, பூட்போன்றவர்களும் அரசருடைய நண்பர்களும் அடங்கிய வலிமைமிக்க வலதுசாரிக் கட்சியொன்று, முத்திரைப் பத்திரச் சட்டநீக்கத்தைத் தீவிரமாக எதிர்த்தது. வலதுசாரியினரிடையேயும் இடதுசாரியினரிடையேயும் அலைப்புண்ட அமைச்சரவை ஆற்றல் அழிந்தது. கிராஃப்டனும் பதவியைவிட்டு நீங்கினர். இச் சமயத்தில் பிட், தாம் டெம்பிளோ அல்லது வேறெந்தக் கட்சியோ இன்றித் தனியாகச் செயலாற்ற முடியுமென்று அறிவித்தார். ஜூலைத் திங்களில் ராக்கிங்ஹாமைச் சார்ந்தவர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இங்ஙனம் கிராஃப்டனைப் பெயரளவில் தலைவராகக்கொண்ட அமைச்சரவையை பிட் அமைத்தார். இச் சபையை பர்க், பல்வண்ணமமைந்த மேடையுடன் ஒட்பிட்டுப் பேசினர். இப்போது அரசரும் அமைச்சரான பிட்டும் அரசியல் கட்சிகளை எவ்வாறு தங்களிடையே பிரித்துக் கொண்டனர் என்பது தெளிவாகியது.

ஆயின், பிட் சாத்தம் பிரபுவாக காமன்ஸ் சபையைவிட்டு நீங்கிப் பிரபுக்கள் சபைக்குச் சென்றதால், அவரது செல்வாக்கிற்குப் பெருங்கேடு நேர்ந்தது. இதைக்காட்டிலும் பேரிடியினை ஊழ்வலி கொண்டுவந்தது. 1766ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 1769ஆம் ஆண்டு ஜூலை மாதம்வரையில் முடக்குவாத நோயினால் பீடிக்கப்பெற்ற அவர் வெளிவரமுடியாது தவித்தார். பிரைட்டின் நோயும் பயனற்ற மருத்துவ யோசனையும் அவரைப் பித்துப் பிடித்தவர்போலாக்கின. மக்களின் குரலைக் கேட்க அஞ்சி இருளிலே அமர்ந்தார். ஹாம்ஸ்டெடில் இருந்த வீட்டைத் திருத்தியமைப்பதற்காகப் பல்லாயிரக் கணக்கில் செலவழித்தார்.

ஹேய்சில் முன்பு விற்ற தமது வீட்டையே திரும்ப வாங்குவதற்கு மேலும் பல ஆயிரங்களைச் செலவழித்தார். அவரில்லாது போகவே எளிதில் பிளவுறும் வகையில் அமைந்திருந்த அமைச்சரவையில் மேலும் குழப்பம் மிகுந்திருந்தது.

கட்சியைப் பொறுத்தவரையில், பிட் கொண்டிருந்த எண்ணம் காலத்திற்கொவ்வாததாக இருந்தது. அரசரின் நண்பர்களில் நார்த்திங்டன் மட்டுமே மந்திரிசபையில் இருந்தார். ஆனால், சாத்தம் பிரபுவும் அவரது குழுவினரான கிராஃப்டன், காம்டன், ஷெல்பர்ன் போன்றோரும் கான்வே, கிரான்பி (Granby), டவன்ஷெண்ட் போன்ற விக்குகளின் உதவியைப் பெற்றனர். ஒவ்வொரு குழுவினரும், பிட் நீங்கலாக அமைச்சரவையில் இருந்த தத்தமது நண்பர்மீது செல்வாக்குச் செலுத்தினர். அதே சமயத்தில் ராக்கிங்ஹாம்மீதும் பர்க்மீதும் பிட் தடையுத்தரவு போடவே, போர்ட்லண்டும் கேவண்டிஷ் குழுவினரும் தங்களுடைய பதவிகளை இராஜினமா செய்தனர். பெட்ஃபோர்டினரை சாத்தம் பிரபு வெளியேற்றினர். அவர் ஒருசிலரைப் பிரிக்க எண்ணியபோது அவர்களின் பற்றுறுதி குறைந்தது. அதனால் சீற்றமடைந்த சாத்தம், கீழ்ப்பதவிகளில் அரச ஆதரவாளர்களை நியமித்தார். அவர் நோய்வாய்ப்படும்போது விஷயம் இவ்வாறு இருந்தது. அவர்தம் துணைவரான கிராஃப்டன், கடமையை மறந்து நியூமார்க்கெட் பந்தயங்களுக்குச் செல்வதும் குடிசையில் காதல்புரியச் செல்வதுமாக இருந்துவந்தார். இத்தகைய இழிவான தலைவர்கள் இருந்த காரணத்தால், பிட்டினுடைய புகழைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டி மன்னர் அவரது விருப்பம்போல் நடந்தார்.

1767ஆம் ஆண்டு முடிவிற்குள் சாத்தம் பிரபு பெரிதும் போற்றிய பெருங்கொள்கைகள் அநேகமாக மறைந்தன. கிரன்வெல்லின் தலைமையில் இருந்த எதிர்க்கட்சியினர் வரவுசெலவுத் திட்டத்தைச் சின்னபின்னப்படுத்தினர். சாய்சியுல் (Choiseul) ஃபிரெஞ்சுப் படைகளைப் பெருக்கிவந்தார். ஆனால், பூட் தம்மைக் கைவிட்டதை மறக்காத மாமன்னர் பிரடரிக், ருஷ்யாவைப் போலவே போர்போன் ஆதிக்கத்திற்கு எதிராகக் கூட்டொன்றை அமைப்பதைக்காட்டிலும் போலந்தை அழிப்பதிலேயே அக்கறை காட்டினர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவின் பகுதிகளைக் கைப்பற்றியதையும் பழிச்செயல்கள் புரிந்ததையும் மனத்தில் கொண்டு, தீவிர விசாரணை செய்து, கம்பெனியின் அதிகாரங்களை அரசாங்கத்திற்கே மாற்றியளிக்க சாத்தம் எண்ணியிருந்தார். ஆனால், மந்திரி

சபையிலேயே இருந்த ஒரு பிரிவினர் கம்பெனி சீர்திருத்தத்தை இலாப ஈவுத் தொகைப் பங்கீட்டோடு நிறுத்திக்கொண்டனர். இப் பிரிவின் தலைவராக விளங்கியவர் பிற்காலத்தில் புகழ முடியாத அளவிற்குப் பெயர் பெற்ற டவுன்ஷெண்டேயாவர். அவர் விக்குகளை ஒன்றுசேர்க்க வேண்டுமென்ற ஆவல் கொண்ட வராக இருந்தார். இறுதியாக காபினெட்டின் எதிர்ப்பிற் கிடையே அமெரிக்காவின்மீது அதிக வரி விதிக்கவேண்டு மென்பதைக் காமன்ஸ் சபையினர் ஏற்குமாறு செய்தார். சாத்தம் பிரபு எப்போதும் முத்திரைப் பத்திரச் சட்டம்போன்ற நேரடி வரிகளையும் பேரரசு வாணிபத்தை ஒன்றுபடுத்தவேண்டிக் காப்புவரிகளையும் வேறுபடுத்தினர். அமெரிக்கர்கள் இந்த வேற்றுமையை ஏற்றுக்கொண்டனர். இத்தகைய ஒப்புதலை டவுன்ஷெண்ட் முழுதும் நம்பினர். எனவே, 1767ஆம் ஆண்டு அவர் கொண்டுவந்த சட்டம் புதிய சுங்கவரி நிர்வாகக் குழுவினை நியமித்தது. அமெரிக்கர்மீது பல புதிய வரிகளைத் திணித்தது. குறிப்பாகத் தேயிலை வரி விதிக்கப்பெற்றது. இத்தகைய வரிப் பணம் மன்னரின் மாளியத்திற்காகவும் காவற்படையின் காப்பிற் காகவும் என்று கூறப்பட்டது. இத்தகைய சொத்தினைத் தமக்குப் பின்வந்தோருக்களித்து செப்டம்பர் மாதத்தில் டவுன்ஷெண்ட் இறந்தார்.

பயனுள்ள மந்திரிசபை அமையவேண்டுமானால், ஒன்று, எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்றுக இணைந்து அரசாங்கத்தை மாற்றி அமைக்கவேண்டும்; அல்லது ஏதாவது ஒரு கட்சி கிராஃப்டனுடன் சேரவேண்டும். பெட்ஃபோர்டினருக்கும் பழைமைப் பண்பு கொண்ட ராக்கிங்ஹாம்களுக்குமிடையே கிழக் கிந்தியக் கம்பெனி, அமெரிக்காவில் முதன்மையதிகாரம் ஆகிய வற்றில் பொதுவான கருத்துகள் நிலவியபோதிலும், விக்கு கட்சியில் காணப்பெற்ற உணர்ச்சியற்ற தன்மை இவர்களிடையே பிளவினைத் தோற்றுவித்தது. பெட்ஃபோர்டுகள், மக்களால் விரும்பப்படாத கிரன்வில்லோடு மேலும் இணைந்திருக்க விரும்ப வில்லை; மந்திரிசபையை முழுவதுமாக மாற்றியமைக்கவேண்டு மென்ற ராக்கிம்ஹாமின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவுமில்லை. அதற்கு மாறுக கிராஃப்டனுடனும் சேர்ந்தனர்: அவர் சாத்தம் பிரபுவின் நிலை மாறுமல் பார்த்துக்கொண்டதோடு, பல கட்சி களும் சமநிலையில் இருக்குமாறு மந்திரிசபையை அமைத்ததால், அவரிடம் இணங்கிப்போகும் தன்மையைக் கண்டனர். டவுன் ஷெண்டிற்குப் பதிலாக நார்த் பிரபு கருவூல முதல்வராக வந்தார். அவர் டோரி கட்சியைச் சார்ந்த அரச ஆதரவாளர் குடும்பத்தில் தோன்றியவர் என்றபோதிலும், ராக்கிங்ஹாம் அவருக்குப் பதவி

வழங்கினர். ஷெல்பர்னின் ஆளான வழக்கறிஞர் டன்னிங்கும் (Dunning) ராக்கிங்ஹாமின் விக்கு ஆதரவாளரான 'டாம்மி' (Tommy) என்றழைக்கப்பெற்ற டவுன்ஷெண்டும் அமைச்சரவையில் இடம் பெற்றனர். அதேபோன்று பெட்ஃபோர்டினரான கோவர் (Gower) என்பவரும் வேமவுத் (Weymouth) என்பவரும் காபினெட்டிலும், சாண்ட்விச்சும் (Sandwich) ரிக்பியும் (Rigby) வெளியிலும் பதவியேற்றனர்.

1768ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்தது. அதற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும் வகையில் காபினெட் சபையினர் விக்கு கட்சித் தலைவர்களுள் ஒருவரான போர்ட்லண்டிற்கு இடர் விளைத்தனர் போர்டரில் பரோவின் சொந்தக்காரர் என்ற வகையில், அவர் பூட்டின் மருமகனை லோதரின் (Lowther) முக்கிய எதிரியாக இருந்தார். அதன் காரணமாக அவருடைய சொத்துரிமையில் தகுதியான குற்றத்தினைச் சட்ட அதிகாரிகள் கண்டுபிடித்தனர். எதிர்க்கட்சியினர் இதற்கு எதிராக 'நல்லம் டெம்பஸ்' (Nullum Tempus) என்னும் மசோதாவைக் கொண்டுவந்தனர். அதன்படி ஒருவர் 60 ஆண்டுகள் நிலத்தை வைத்திருந்தால் அதன்மீது அரசர் உரிமை கொண்டாடக்கூடாது என்று கூறினர். ஆனால், இம் மசோதா முதலில் தோல்வியுற்றது. அடுத்த ஆண்டுதான் நிறைவேறியது. அந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல் 18ஆம் நூற்றாண்டுத் தேர்தல்கள் பலவற்றைப்போலவே செலவு மிகுந்ததாக இருந்த போதிலும், கட்சிகளின் நிலையை அதிகமாக மாற்றவில்லை. எனினும், 164 புதிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பெற்றது, காமன்ஸ் சபையில் பாதி உறுப்பினருக்குமேல் வந்தமர்ந்து பணியாற்றியது, நியூகாசிலின் மரணம் ஆகியவை புதிய நிலை தோன்றியதற்கான அறிகுறிகளாகும். நாடுகடத்தப்பெற்றிருந்த பழைய உறுப்பினரான ஜான் வில்க்ஸ் இங்கிலாந்து திரும்பி, மிடில்செக்ஸ் தொகுதியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது வருகை அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வித்திட்டது.

பொதுமக்கள் அரசாங்கத்தை வெறுத்தனர். தேசியத் தலைவரான சாத்தம் பிரபுவும் மறைந்தார். அவருக்குப் பின் வந்தோர் ஜினேவா எஜமானருக்கு எதிராகக் கலகம் செய்வதில் ஈடுபட்டிருந்த கார்சிகாவைக் கைப்பற்றவேண்டுமென்று கருதிய பிரான்சிற்குப் பணிந்துபோயினர் என்று மக்களிடையே பேச்சு எழுந்தது. அமெரிக்காவில் ஏற்பட்ட குழப்பத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் மிகுதியானது. சென்ற போருக்குப்பிறகு வாணிபம் தலையெடுக்கவேயில்லை. மோசமான அறுவடைகளும்

விலைவாசிகளின் உயர்வும் தொடர்ந்து வேலை நிறுத்தங்களைத் தூண்டின. லங்காஷயர் மோசமாக இருந்தது. ஆயின், லண்டன் மாநகரத்தின் நிலையோ சொல்லுந்தரமன்று; படைக் கலைப்பினால் வேலையற்றிருந்த படைவீரரும், ஐரிஷ் குடியேறி களும், வேலையிழந்த தொழிற் பயிற்சியாளரும், நெசவாளரும் லண்டன் நகரில் குழுமினர். அவைகளின் விளைவாக வில்க்ஸைத் தேர்ந்தெடுத்த கீழ்த்தர வகுப்பினர் ஒவ்வொருவர் வீட்டிலும் விளக்கேற்றிவைக்கவேண்டுமென்றும் 'வில்க்ஸும் சுதந்திரமும்' என்று கதவுகளில் எழுதவேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

கிளர்ச்சித் தலைவரான வில்க்ஸ் கர்வமிக்கு இருந்தாரென்றால், அரசாங்கம் ஆற்றலற்று இருந்ததோடு, சட்டத்திற்கு முரணான தாகவும் இருந்தது; பழைய குற்றங்களுக்குப் பழிவாங்கும் விதத்தில் வில்க்ஸிற்குத் தண்டனையளித்தது. வில்க்ஸ் அடை பட்டிருந்த செயின்ட் ஜார்ஜ் ஃபில்ட்ஸில் (St. George Fields) சிறைக்கு வெளியே வெறுப்புக்குள்ளாகியிருந்த ஸ்காட்டிய காவற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருபது பேர் கொல்லப்பெற்றனர். சில காயமுற்ற மாலுமிகளும், நிலக்கரி எடுக்கும் ஐரிஷ்காரரும், தையற்காரரும் வேலை நிறுத்தம் செய்தனர். நெசவாளர் தறிகளை உடைத்தனர். பொது வாக லண்டன் நகரமுழுவதுமே கலகத்தில் ஈடுபட்டது என லாம். கரோனர்கள் (Coroners) கொலைக்குற்றங்களில் தீர்ப் பளித்தனர். சேனையில் கலகம் தோன்றுமோ என்னும் அச்சம் இருந்தது. இடைத்தேர்தல் ஒன்றில் வில்க்ஸின் வழக்கறிஞர் மிடில்செக்ஸ் தொகுதியொன்றில் வெற்றி பெற்றார். வில்க் சைக் காமன்ஸ் சபையிலிருந்து வெளியேற்றுமாறு அரசர் கோரினர். தம்முடைய ஆட்சி பெரிதும் அச் செயலை நம்பி யிருந்தது என்று அரசர் கூறினர். பல மாதங்கள் தயங்கிய பிறகு அரசருடைய கோரிக்கையைக் காபினெட் ஒப்புக்கொண்டது. 1769ஆம் ஆண்டு தொடக்கத்தில் காமன்ஸ் சபை வில்க்ஸை வெளியேற்றியது. இச் செயலை ஆதரித்து 219 உறுப்பினரும் எதிர்த்து 137 பேரும் ஓட்டளித்தனர். சாதகமாக வாக்களித்த வரில் பாதிக்குமேல் ஸ்காட்டிய உறுப்பினரும் வெல்ஷ் உறுப் பினருமேயாவர். அவர்மீது சாட்டப்பெற்ற குற்றங்களில் இரண்டு 'எண் 45' (No. 45)ம், 'பெண்களைப்பற்றிய கட்டுரையும்' (Essay on Woman) ஆகும். தேவைப்பட்டால் படைகளின் உதவியை நாடத் தயங்கவேண்டாமென்று மாஜிஸ்ட்ரேட்டுகளை வேண்டிய உள்துறைச் செயலராகிய வேமவுத்தைத் தாக்கியது மூன்றுவது குற்றச்சாட்டாகக் கொண்டுவரப்பெற்றது. இக் குற்றங்களில் எதுவும் காமன்ஸ் சபையினருக்கு எதிராகச்

செய்யப்பெறவில்லையென்றாலும், முன்பு தண்டனை வழங்கப்பெற்ற குற்றங்களுக்கே திரும்பவும் தண்டனை வழங்கினர் என்று கூறலாம். மேலும், 'அவதூறு' என்பதற்கு விளக்கமும் தந்தனர். வில்க்ஸை வெளியேற்ற அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால், வில்க்ஸ் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பெற்றபோது, தங்களால் வெளியேற்றப்பெற்றதால் அவர் பாராளுமன்றத்தில் பணி புரிய முடியாது என்ற தீர்மானம் முறையானதன்று. வில்க்ஸ் மூன்றும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றபோது அவருடன் போட்டியிட்ட லட்டரல் (Luttrell) என்பவர் குறைந்த வாக்குகளே பெற்றிருந்தபோதிலும் அவரே முறையாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர் என்று ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்றம் தீர்மானித்தது. இத் தீர்மானம் பாராளுமன்றத்தின் அடிப்படையையே தகர்ப்பதாக இருந்தது.

மக்கள் மனத்தைக் கவர்ந்த திறமை மிக்க வில்க்ஸ் சிறையில் வாடியபோது, நாட்டில் நீதியும் ஒழுங்கும் மறைந்தன. விக்குகள் நாட்டு மக்களோடு மீண்டும் தொடர்புகொள்ளத் தொடங்கினர். தீவிரவாதம் பிறந்தது. செயின்ட் ஜேம்ஸ் அரண்மனைக்கு வெளியே கிளர்ச்சியாளர் சண்டையிட்டனர். டெவோனில் (Devon), பெட்ஃபோர்டு தீவிரமாகத் தாக்குண்டார். லண்டன் நகர மாந்தர் 'இரகசிய. இடர் விளக்கக்கூடிய' செல்வாக்கைப் பற்றி எச்சரிக்கும் வகையில் விண்ணப்பங்களை வழங்கி, அரசர் அவைகளைச் செவிசாய்க்குமாறு செய்தனர். சாத்தமின் நண்பரான பெக்ஃபோர்டை (Beckford) மேயராகவும், வில்க்ஸை ஷெரீஃபாகவும் (Sheriff) தேர்ந்தெடுத்தனர். பர்க், சர் ஜார்ஜ் செவில் (Sir George Savile) போன்றோரால் உரம்பெற்ற விக்கு கட்சியினர் நிதானமாகச் சீர்திருத்தக் கூட்டங்களை நடத்தினர். இத்தகைய கட்சியின் புத்துணர்ச்சியில் இணங்காதார் வலிமையுற்றிருந்தனர். தீவிரவாதிகளிடையே ஒப்பற்ற தலைவராக விளங்கியவர் ஹார்ன் டூக் (Horne Tooke) என்பவர். பிரன்ஃபோர்டின் பாதிரியான அவர் மிடில்செக்ஸ் முழுவதும் கிளர்ச்சி மனப்பான்மையைத் தோற்றுவித்தார். 'உரிமைகள் மசோதாவின் ஆதரவாளர்' (Supporters of the Bill of Rights) என்னும் புதிய சங்கத்தினர், வாக்குரிமையை விரிவுபடுத்த வேண்டுமென்றும் குறுகியகாலப் பாராளுமன்றங்கள் வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்தனர். கீழ்த்தரமான பத்திரிகைகள் எல்லாக் குறைபாடுகளையும் துன்பங்களையும் வெளிக்கொணர்ந்தன. 1768ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து மூன்றாண்டுகளுக்கு அச்சமூட்டிய 'ஜூனியஸின்' (Junius) பேனாவலிமையால் மன்னர், கிராஃப்டன், பெட்ஃபோர்டுகள் ஆகியோர் மக்களின்

வெறுப்பிற்குள்ளாயினர். பெயரை வெளியிடாது இருந்ததால் 'ஜூனியஸின்' ஆற்றல் மிகுந்திருந்தது. எனினும், இவைகளை யெல்லாம் எழுதியவர் அப்போது போர்த்துறை அலுவலகத்தில் கணக்கராக இருந்த பிலிப் ஃபிரான்சிஸ் (Philip Francis) என்பவர் தாம் என்பதில் ஐயமில்லை. அவர் ஜனநாயக உணர்வு இன்றி எழுதினர், திறமையின்மையை வெறுத்தும் சட்டத்தை மதியா மலும் எழுதினர்; இவற்றைக் காட்டிலும் தம்முடைய தாக்கு தலுக்கு இரையானவரைப் புண்படுத்துவதில் தனி இன்பங் கொண்டார்.

பாராளுமன்றம் பேச்சுரிமையற்றுக் கிடந்தபோது, ஏழு லண்டன் நகர நாளிதழ்கள் எண்ணச் சுதந்திரத்தைக் காக்க எழுந்தன. அவதூறு என்பதற்கு அரசாங்கம், தனது விருப்பம் போல் விளக்கம் தந்ததால், எண்ணச்சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு கிடைக்கவில்லை. இச் சுதந்திரத்தைப் பேணவேண்டி 1777ஆம் ஆண்டளவில் செய்தித்தாள்களின் எண்ணிக்கை பதினேழாகப் பெருகியது. செய்தித்தாள்களுக்கு எதிரான வழக்குகளை கிராண்ட் ஜூரிகளின்றியே தீர்க்கும் வகையில் சட்ட அதிகாரிகள் செய்திகளைத் தருவது வழக்கமாக இருந்தது. அது போதா தென்று தலைமை நீதிபதி மான்ஸ்ஃபீல்டு, தமது முன்னோரைப் பின் பற்றி, அவதூறு எது என்று நிர்ணயிக்கும் வேலை சிறிய ஜூரி களுக்குக் (petty jury) கிடையாது என்றார். அவர்கள் அவதூறான செய்திகள் வெளியானதைப்பற்றிய செய்திகளை விசாரித்தறிய வேண்டும். இதன் காரணமாக அரசாங்கத்தின்மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பு நீதிபதிகளின்மீதும் திரும்பியது. லண்டன் ஜூரிகள் அவதூறுக்காக யாரையும் தண்டிக்க முடியாது.

1771ஆம் ஆண்டில் காமன்ஸ் சபையினர் பத்திரிகைகளோடு மோதினர். அதேபோன்று மறுபடியும் லண்டன் நகரத்திற்கும் பொதுச் சட்டத்திற்கும் எதிராக வேலைசெய்தனர். பாராளுமன்ற விவாதங்களை வெளியிட்டோரைக் கைது செய்யத் தங்களுடைய தூதர்களையே அனுப்பினர். ஆனால், நகரத்தின் உரிமைகளை மீறியதற்காக அத் தூதர்களே கைதாயினர். வில்க்ஸைக் கைது செய்ய அஞ்சிய காமன்ஸ் சபையினர், நகரமன்ற உறுப்பினர்களை டவர் கோட்டைச் சிறைக்கு அனுப்பினர். மேலும், நகர நீதி மன்றத்தின் தீர்ப்பைத் தம் விருப்பப்படி தள்ளுபடி செய்தனர். கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தினர் வெஸ்ட்மினிஸ்டர் அரண் மனையைச் சூழ்ந்துகொண்டனர். ஒரு முறை நார்த் பிரபுவை அநேகமாகத் தோலுரித்தனர். மேலும், பாராளுமன்ற விவா தங்கள் வெளியிடப்படுதலைத் தடைசெய்ய முடியவில்லை.

அதனால் அமெரிக்காவிற்குப் பயணமாக இருந்த படைகளும், மேலும் பல படையினரும் லண்டன் நகரத் தெருக்களில் காவல் புரிந்தனர். அரசரின் தனியாட்சி முறை இத்தகைய தாழ்ந்த நிலைக்கு வந்தது. அதைப்பற்றி சாத்தம் பிரபு குறிப்பிடுகையில், 'நீதி வழங்கமுடியாத நடுவர், தேர்ந்தெடுக்கமுடியாத வாக்காளர், விண்ணப்பம் செய்துகொள்ளும் உரிமையற்ற துன்பத்திலாழ்ந்த குடிமக்கள்' ஆகியோர் நிறைந்த அழகான அமைப்பு என்று நையாண்டி செய்தார்.

இதற்கிடையில் கிராஃப்டனின் காபினெட் வீழ்ந்தது. பெட்ஃபோர்டுகள் காபினெட்டில் நுழைந்ததாலும், அமெரிக்காவைப் பற்றிய கருத்து வேற்றுமை தோன்றியதாலும் 1768ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலேயே ஷெல்பர்ன் பதவியிலிருந்து நீக்கப் பெற்றார். 'பர்க்லி சதுக்கத்தின் (Burkeley Square) ஜெகூட்' என்று குறிப்பிடப்பெற்ற அவருடன் யாரும் இரண்டாம் முறை பணிபுரிய விரும்பவில்லை. அவர் திறமை மிக்கவராக இருந்த போதிலும், தொடர்ந்து காபினெட்டில் பணிபுரிய முடியவில்லை. அவரது தலைவரான சாத்தம் அதே சமயத்தில் பதவி துறந்தார். ஆயினும், அவர் 1769ஆம் ஆண்டு இறுதியில் மெலிந்த உடலுடன், ஆனால், உறுதியான உள்ளத்துடன் பொதுமக்களிடையே பேச வந்தார். அந்த மாரிக்காலத்தில் அவருடைய சொற்பொழிவுகளின் மூலமாக அரசாங்கம் கவிழ்ந்தது. பதவிக்குப் 'புதிய வரான' கிராஃப்டன் சாத்தமைக் கைவிட்டார். மிடில்செக்ஸ் தேர்தல், சுதந்திரத்தின் ஆணிவேரையே வெட்டுவது போன்றிருந்தது. காமன்ஸ் சபையினரின் தாந்தோன்றித்தனமான அதிகாரத்தைக் குறைக்கவேண்டுமென்று பிரபுக்கள் சபையினர் உறுதி பூண்டனர். அரியணையின் பின்னாலிருந்த ஏதோ ஒரு சக்தி அரசரை 'இங்கிலாந்தில் ஒரு புதியவர்' போன்று செய்தது. ஆனால், பழைய பிரயமைச் (Priam) சுற்றியிருந்ததைப்போன்று மன்னரைச் சுற்றியிருந்த திரையைக் கிழித்தெறிந்து, அவரது டோரிக் கட்சியில் பாதி அழிந்தது என்பதை உணர்த்தும் வகையில் அறிகுறி தோன்றியது.

இத்தகைய சூழ்நிலையில், பயந்த மனங்கொண்ட காம்டன் பதவியிலிருந்து விலகினர். அதைத் தொடர்ந்து தீரமிக்க வீரரான கிரான்பியும் (Granby) பதவியிலிருந்து விலகினர். அரசரின் வற்புறுத்தலின்பேரில் விக்கு கட்சியினரான சார்லஸ் யார்க் (Charles Yorke) என்பவர் சான்சலர் பதவியை (Chancellorship) ஒப்புக்கொண்டார். அவர் தம்முடைய ஆயுட்காலக் கனவாகக் கொண்டிருந்த பதவியை அடைந்தார். எனினும், தமது

நண்பர்களின் சீற்றத்தைப் பொறுக்கமுடியாது, தமது உயிரையே ஒரு வாரகாலத்தில் துறந்தார். பத்து ஆண்டுச் சண்டைக்குப் பிறகு ஜார்ஜ் கிரன்வில்லும் சாத்தமும் சமாதானம் செய்து கொண்டனர். அவர்கள் அரசாங்கத்தை எதிர்த்த ராக்கிங் ஹாம்கள் முதல் ஜூனியஸ்வரையுள்ள அனைவருடனும் இணைந் தனர். எனவே, 1770ஆம் ஆண்டில் கிராஃப்டன் பதவியிலிருந்து விலகினர். எனினும், இத்தகைய அரசியற் புயல் வீசி ஓய்ந்ததும், நார்த் பிரபு பன்னிரண்டு ஆண்டுகள் அதிகாரத்திலிருந்தார். அரசருடைய ஆட்சிமுறை எப்போதும்போலவே வலிமை மிகுந்த தாகத் தோன்றியது.

இந் நிலைக்குக் காரணமாக இருந்தது அறிவுக்கூர்மையும், விரும் பத்தக்க தன்மையும், வேடிக்கைப் பேச்சும் நிறைந்தவரும் தலை சிறந்த பேச்சாளருமான நார்த் பிரபுவைத் தேர்ந்தெடுத்ததே யாகும். அவர் கிரன்வில்லைப்போன்று பழைமைப் பண்பும் சிக் கனத்தில் ஆர்வமும் கொண்டு விளங்கினர். ஆனால், அமைச்சர்கள் தனித்தனியே அரசருக்குக் கட்டுப்பட்வடர்கள் எனும் கொள்கை யினால், கட்சியின் வெறுப்பிற்குள்ளானார். அரசரின் உறுதிப் பாட்டின்முன் பணிந்து நின்றார். உதாரணமாக, அரசர் தமது சொந்தக் கடனுக்காக 20,000 பவுன் அளிக்க இடமளித்தது பெருங் குறையாகும். நெருக்கம் வந்தபோதெல்லாம் புயற்காற்றில் வளையும் நாணல்போல் வளைந்துகொடுத்து ஒவ்வொரு துறையும் அதன் வழியே செல்லவிட்டார். அரசரின் ஏஜன்டாக (agent) இருந்த ஜெங்கின்சனோடு நெருங்கி வேலைசெய்த கருவூலச் செயலரான ஜான் ராபின்சனுடைய செல்வாக்கிற்குட்பட்டு இருந்தார்.

தீவிரவாதமும் அமெரிக்கப் பிரச்சினையும் காபினெட்டை அழுத்தவே, அது வலதுசாரியினர் பக்கம் திரும்பியது. 1770ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிரன்வில் இறந்ததும், ஆற்றல் அதிக மற்ற அவரது சீடரான சஃபோக் (Suffolk மந்திரிசபையில் சேர்ந் தார். அதன்பிறகு கிராஃப்டனும் (பின்னாளில் அமெரிக்காவைப் பற்றிய விவாதத்தில் பதவியிலிருந்து நீங்கியபோதிலும்) சேர்ந்து கொண்டார். பெட்ஃபோர்டு பிரபு இறந்துவிட்டபோதிலும், அவரது ஆதரவாளர் காபினெட்டில் வலிமையுற்று விளங்கினர். அவர்களிடையே கோவர் புத்திசாலியாகவும் மக்களிடம் செல் வாக்கு மிகுந்தவராகவுமிருந்தார். வேமவுத் என்பவர் திறமை மிக்க கயவர். கடற்படைத் தலைவராக இருந்த சாண்ட்விச் அனுபவம் மிக்கவராக இருந்தபோதிலும், ஒரு கட்சியைச் சார்ந்து இருந்ததால், கடற்படையில் பிளவுகள் தோன்றின. இப்

பதவிகளைக் காட்டிலும் ஜார்ஜ் ஜெர்மெய்ன் அமெரிக்கச் செயலர் பதவியேற்றது மிக மோசமானதாகும். முன்னளில் சாக்வில் (Sackville) என்றழைக்கப்பெற்ற அவர் செயல்வீரர் என்று கருதப் பெற்றார். நார்த் பிரபுவுடன் உறவு கொண்ட டார்ட்மவுத் (Dartmouth) என்பவருக்குப் பதிலாகத்தான் அமெரிக்கச் செயலர் பதவியேற்றார். மிகுந்த திறமை படைத்த சுயநலமி களான தர்லோ (Thurlow), ஹென்றி டண்டாஸ் (Henry Dundas) போன்ற 'பெட்ஃபோர்டினரும்', வெட்டர்பர்ன் (Wedderburn) போன்ற 'கிரன்வில்லினரும்', ஈடன் (Eden) போன்ற அரசரது ஆட்களும் காபினெட்டிற்கு வெளியே பதவி வகித்திருந்தனர்.

மக்கள் கூட்டத்தின் வெறிச்செயல்கள், கீழ்த்தரமான பத்திரிகைகள் ஆகியவற்றினால் எழுந்த எதிர்வினை அமைச்சர் களுக்கு நன்மையளித்தது. மற்றையோரைக் காட்டிலும் ராக்கிங் ஹாமைச் சார்ந்த விக்குகள், தங்களது உளப்பாங்கு காரணமாக வும் பரோ நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் தீவிர வாதிகளை அதிகமாக எதிர்த்தனர். வில்க்ஸை அவர்கள் கலகக் காரராக எண்ணியதோடு,குறுகிய காலப் பாராளுமன்றங்களையும், விரிந்த அடிப்படையிலான வாக்குரிமையையும் வன்மையாகக் கண் டித்தனர். அவர்கள் 'சிக்கனத்திற்கான சீர்திருத்தம்' என்பதன் மூலமாக அரசருடைய வருமானத்தைக் குறைக்க எண்ணினர். அரசரை எதிர்த்து நிற்கும் ஆற்றல்கொண்ட பெருங்குடியினரின் கருவியாகக் கட்சியைப் பயன்படுத்தினர். அப்போது 8,00,000 பவுன் அரசரின் செலவுப் பணமாக அளிக்கப்பெற்றது. அவரது குடும்பம் பெரியதாகவும் செலவு மிகுந்ததாகவும் இருந்ததால், பாராளுமன்றம் அவரது கடன்களை இரு முறை அடைத்தது. பாராளுமன்றத்தில் அரசாங்க காண்ட்ராக்டர்களின் செல்வாக்கு காணப்பெற்றது. ஆயத்தீர்வை கொள்வோர், நிதித்துறை அதிகாரிகள் ஆகியோரின் செல்வாக்கு தொகுதிகளில் மிகுந் திருந்தது. தேர்தலின்போது பதவியாளர், கைக்கூலி, அரசாங்கப் பணம் செலவிடுதல் ஆகியவை பெல்ஹாம்களின் காலத்திலிருந்ததைப்போன்றே இருந்தன. ஆனல், புதுப் பணக் காரரும் நவாப்களும் போட்டியிட்டதால், பரோக்களில் தேர்தல் செலவு பன்மடங்காகப் பெருகியது. இத்தகைய கேடுபயக்கும் செல்வாக்கினை அழித்தால்தான் உண்மையான கட்சி ஆட்சி தோன்றமுடியும். ஆனல், ராடிகல்களோடு (Radicals) இணை வதைத் தீவிரமாக எதிர்த்த ராக்கிங்ஹாமினர் அதற்கு மேலும் அடிப்படை மாறுதல் செய்ய விரும்பவில்லை. மற்றொரு புறத்தில் கிராஃப்டனின் வீழ்ச்சியோடு, அவர்கள் சாத்தம் பிரபுவுடன் கொண்டிருந்த கூட்டுறவு முடிவடைந்தது. அவருடைய கூட்டுறவு

இருந்திருக்குமானால், கவுன்டி தொகுதிகளை அதிகப்படுத்துவதன் மூலமாகவும், மூவாண்டுப் பாராளுமன்றங்களின் மூலமாகவும் சீர்குலைந்த அரசியலை அவர் ஓரளவு செம்மை செய்திருப்பார். மேலும், அவர் அவதூறு வழக்குகள்பற்றி மான்ஸ்ஃபீல்டு அளித்த தீர்ப்புகளைப் புறக்கணிக்கும் வகையில் சட்டம் ஒன்றினைக் கொண்டுவர விரும்பினர். இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தை விக்கு கட்சியினர் ஆதரித்துப் பேசினர். ஆனால், சாத்தம் பிரபுவோ இந்தியப் பகுதிகள் அரசாங்கத்தினால் ஆளப்பெறுதல் வேண்டுமென்று விரும்பினர். அயர்லாந்து ஸ்தலத்தில் உறையா நிலப்பிரபுக்கள் பலர் ராக்கிங் ஹாம் கட்சியிலிருந்தனர். பிட் ஐரிஷ் பாராளுமன்றத்தின் உரிமைகளுக்காக வாதாடினர். இங்ஙனம் ராக்கிங்ஹாமினர் கட்சியை அரசருக்கு எதிராகப் பயன்படுத்தும் பெருஞ் செல்வர்களாக இருந்தார்களென்றால், சாத்தம் பிரபுவோ வலிமை மிக்க அரச ராட்சியில் நம்பிக்கை கொண்ட தேசியவாதியாக விளங்கினர். அவர் தமது எதிரிகளைத் 'தோப்புப் பறவைகள்' என்று ஏளனமாகப் பேசினர். ஆயின், ராக்கிங்ஹாம்களிடையே வருவதுரைப் பவராக இருந்த பர்க் (Burke) மனிதரைத் தாக்காது நடவடிக்கைகள்பற்றிய வெறும் பேச்சை வன்மையாகத் தாக்கினர். சாத்தம் பிரபுவை 'ஏமாற்றுக்கலையின் ஏந்தல்' என்றும், அரசரின் திட்டங்களை நிறைவேற்றும் வேட்டைக் குதிரை என்றும் பழித்தார்.

எனவே, நார்த் பிரபு, பிளவுபட்ட எதிர்க்கட்சியினரையும் எளிதில் கும்பலாட்சியாக மாறிய தீவிரவாதிகளின் இயக்கத்தையும் எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. ஆயின், அவர் வெறும் பிற்போக்குவாதியல்லர். அதைப்போலவே 1770ஆம் ஆண்டிற்கும் 1780ஆம் ஆண்டிற்குமிடையே கூடிய பாராளுமன்றத்தினரும் வெறும் பிற்போக்காளர்களல்லர். பழைமைப் பண்பு கொண்டவர்களாக இருந்தபோதிலும், சமயப் பிரச்சினைகளில் அவர்கள் பழைய டோரிகளைக்காட்டிலும் தாராள மனப்பான்மை கொண்டிருந்தனர். ஏனெனில், 'அரசரும் திருச்சபையும்' வேண்டுமென்ற கட்சி ஃபிரெஞ்சுப் புரட்சி ஏற்படும்வரை வலிமையிழந்து இருந்தது. 1772ஆம் ஆண்டில் பரந்த நோக்கமுடைய திருச்சபைக் குழுவொன்று முப்பத்தொன்பது விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதிலிருந்து சமயக் குருமார்களுக்கு விடுதலை அளிக்கவேண்டுமென்று விண்ணப்பம் விடுத்தது. இந்த முயற்சி தோல்வியுற்றபோதிலும், புறச்சமயிகளுக்கு இத்தகைய விடுதலை வழங்கும் விதத்தில், 1779ஆம் ஆண்டில் நார்த் பிரபு ஒரு சட்டத்தை நிறைவேற்றினர். அவருடைய காபினெட்

கத்தோலிக்கரிடம் தாராள மனப்பான்மை காட்டியது. போப்பின் சமயம் கூடாதென்று சாத்தம் பிரபு எழுப்பிய தகுதியற்ற கூக்குரலைப் புறக்கணித்து, கியூபெக்கில் (Qubec) கத்தோலிக்கத் திருச்சபை நிறுவப்பட்டது. 1778ஆம் ஆண்டில் செவிலின் (Sevile) சட்டம் நிறைவேறுதற்குத் துணைபுரிந்தனர். அச் சட்டம் பிரிட்டனில் இருந்த சமய ஒறுப்பு விதிகள் சிலவற்றை ரத்து செய்தது. உதாரணமாக, கத்தோலிக்கர்கள் நில உரிமை பெறவும், பள்ளிகளை வைத்து நடத்தவும் அனுமதிக்கப்பெற்றனர்.

இவ்விரு பாராளுமன்றங்களும் சமுதாயச் சீர்கேடுகளைப் பார்த்துக்கொண்டு சும்மாவிருக்கவில்லை. ஸ்பிடால்ஃபீல்ட்ஸ் (Spitalfields) சட்டத்தைப் போன்று நெசவாளரின் ஊதிய நிர்ணயச் சட்டம் நிறைவேறியது. 1773ஆம் ஆண்டில் மேலும் தாராளத்தன்மை பொருந்திய தானியச் சட்டம் வந்தது. 1782ஆம் ஆண்டில் இரவலர் சட்டம் ஒன்று வெளியானது. இவை யெல்லாம் இந்தப் பாராளுமன்றங்களின் பரந்த நோக்கிற்கும் தாராளத் தன்மைக்கும் சான்றுக விளங்குகின்றன. விக்கு கட்சி யினரின் எதிர்ப்புக்கிடையே, 1773ஆம் ஆண்டில் இந்தியாவிற் கான ஒழுங்குமுறைச் சட்டமும் (Regulating Act), 1774ஆம் ஆண்டில் கியூபெக் சட்டமும் நிறைவேற்றப்பெற்றன. இவை இரண்டும் ஆக்கச் சார்பான சட்டங்களாகும். வில்க்சும் ஜூனியசும் எழுப்பிய புயல் பாராளுமன்றத்திற்கும் பொது மக்களுக்குமிடையே இருந்த உறவினை மாற்றியமைத்தது. தமது இறுதிச் செயலாக 1770ஆம் ஆண்டில் தேர்தல் விண்ணப்பங்களை விசாரிக்கும் முறையில் சீர்திருத்தம் செய்யும் சட்டமொன்றை கிரன்வில் கொண்டுவந்தார். அதன்படி தேர்தல் வழக்குகளில் பெரும்பான்மைக் கட்சியினர் தீர்ப்புக் கூறுவதற்குப் பதிலாக வாக்குச் சீட்டின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற குழுவினரே தீர்ப்பளிக்க வேண்டுமென்றுயிற்று. மற்றச் சட்டங்களினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளி லிருந்து தங்களுக்குப் பாதுகாப்பு வழங்கியதைத் தவறுகப் பயன் படுத்திக்கொள்ளும் பழக்கத்தைப் பெரிதும் குறைத்தன. அதைப்போலவே அவர்களுடைய பணியாளர்களைச் சிறைசெய்த லாகாது என்பதையும் நீக்கின. பாராளுமன்ற விவாதங்களை வெளியிடும் உரிமையைப் பத்திரிகையுலகம் பெற்றது. மேலும், 1774ஆம் ஆண்டில் வில்க்ஸ் எதிர்ப்பேதுமின்றிப் பாராளுமன்ற உறுப்பினரானார்.

எதிர்க்கட்சியினர் மிகுதியாகப் பயன்படுத்திய அரசரது செல்வாக்கைக்கொண்டு பாராளுமன்றத்தை அதன் விருப்பத்

திற்கு மாறுகக் கொண்டுசெல்ல முடியவில்லை. மேலே குறிப் பிட்ட சட்டங்களிலிருந்து பாராளுமன்றத்தில் எத்தனை சுயேச்சை உறுப்பினர் இருந்தனர் என்பது வெளிப்படுகின்றது. 1772ஆம் ஆண்டு அரசரின் ஆணையின்பேரில் கொண்டுவரப்பெற்ற அரசத் திருமணச் சட்டமும் இதையே குறிப்பிடுகின்றது. தமது சகோதரர் களான கம்பர்லண்டு பிரபுவும், கிளவ்செஸ்டர் பிரபுவும் இரகசியமாக சாதாரணக் குடிப்பெண்களை மணந்துகொண்டதன் விளைவாக அரசர் இச் சட்டத்தைக் கொண்டுவர விரும்பினர். இத்தகைய செய்திகளில் அரசர் மறுக்கும் உரிமையைப் பெற்றதும், தனியான அரச வகுப்பார் எனும் ஜெர்மானியக் கருத்தும் ஆங்கில உணர்ச்சியை அவமதிப்பனவாக இருந்தன. அதனால் இச் சட்டம் காரசாரமான விவாதத்திற்குப் பிறகு குறைந்த அளவு பெரும்பான்மை வாக்குகளைக்கொண்டே நிறை வேறியது. சுருங்கக் கூறுமிடத்து, பாராளுமன்றத்தில் பெரும் பான்மையினரைப் பகைத்துக்கொள்ளாதவரையில்தான் அரசர் வெற்றியடைந்தார். அமெரிக்கப் போர் இங்கிலீக்கு மிகச் சிறந்த சான்றாக அமைகின்றது..

இங்கிலாந்தில் முன்னாளில் இருந்ததைப்போன்றதும், கான டாவில் பின்னாளில் இருந்ததைப் போன்றதுமான இரண்டக நிலை அமெரிக்காவில் முதலிலிருந்தே காணப்பெற்றது. மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபைகளுக்கும் மத்திய நிர்வாகக் குழுவிற்கும் இடையே இத்தகைய இரண்டகநிலை தோன்றி யிருந்தது. தனியுரிமையாக அரசாங்கம் இருந்த பென்சில் வேனியாவிலிருந்து ஏறக்குறைய ஜனநாயக அரசாங்கத்தைப் பெற்றிருந்த ரோட் தீவுவரையில் பலவகையான அமைப்புகள் காணப்பெற்றபோதிலும், பொதுவாக எல்லாக் குடியேற்றங் களிலும் அரசரால் நியமிக்கப்பெற்ற கவர்னர்கள் இருந்தனர். கவுன்சில் ஒன்று நிர்வாகச் சபையாகவும், மேல் சட்டசபை யாகவும், சில சமயங்களில் உயர் நீதிமன்றமாகவும் பணி யாற்றியது. இங்ஙனம் கவுன்சிலின் உதவியைப் பெற்ற கவர்ன ருக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற சபைகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இத்தகைய போராட்டத்தில் மக்கள் சபையின் கைமேலோங்கியிருந்தது அதற்குக் காரணம் பொது நிதியும், அதிகாரிகளின் சம்பளமும் மக்கள் சபையின் மானியம் வழங்கும் அதிகாரத்திற்குட்பட்டு இருந்ததும்தாம். ஆயின், மக்கள் சபையின் வளர்ச்சி, உரிமைப் பத்திரங்கள், வழக்காறு, கவர் னரின் ஆணைகள் ஆகியவற்றினால் தடைபட்டது. அது மட்டு மன்றிக் குடியுரிமையளித்தல், குற்றவாளிகளை நாடுகடத்துதல், நாவாய்ப் படைக்காக மரங்களைக் கைப்பற்றுதல் ஆகியவற்றில்

பேரரசுப் பாராளுமன்றம் அமெரிக்காவிற்காகத் தாராளமாகச் சட்டங்கள் செய்தது. வாணிபச் சட்டங்களுக்குப் புறம்பாக அமெரிக்கர்மீது வரிசுமத்தும் உரிமையைக் கொண்டாடியது. உதாரணமாக, பேரரசு அஞ்சல் அலுவலகத் திட்டமொன்றை வகுத்தது. கிரீன்விச் (Greenwich) மருத்துவமனைக்காக அமெரிக்காவில் வரியொன்றை விதித்தது. குடியேற்ற நாட்டுச் சபையில் நிறைவேறும் சட்டங்கள் கவர்னரின் தள்ளுரிமைக்கு (Veto) உட்பட்டவை. அப்படியே அவைகள் கவர்னரால் தள்ளுபடி செய்யப்பெறுது இருப்பினும், அரசர் அவைகளுக்கு அனுமதி வழங்க மறுக்கலாம். மேலும், இங்கிலாந்து நீதிமன்றத்தில் மேன்முறையாக வரும் வழக்குகளில் அச் சட்டங்கள் ஆங்கில நாட்டுச் சட்டங்களுக்கோ அல்லது பொதுச் சட்டடத்திற்கோ முரணனவை என்பது வெளிப்படுமானால், அவைகள் தடைசெய்யப்பெற்றன. ஆனால், குடியேற்ற நாடுகளில் உள்ள மக்கள் மன்றங்கள் போலிச் சாக்குப்போக்குகள் கூறி அநேகமாகத் தங்கள் விருப்பப்படியே நடந்துகொண்டன. இங்ஙனம் இங்கிலாந்திற்கும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குமிடையே இருந்த மனத்தாங்கல், உறவு முறியுமளவிற்கு முற்றியது.

இப்போது அமெரிக்காவில் பிரிட்டிஷ்காரரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இரண்டு மில்லியனுக்கும் மேலாக இருந்த மக்களில் பலர் அங்கியர்கள். தெற்கில் ஃபிரெஞ்சு யூக்நோக்கள் வலிமை பெற்று இருந்தனர். பென்சில்வேனியாவில் ஜெர்மானியர் ஆதிக்கம் மிகுந்திருந்தது. அதே சமயத்தில் புரட்சிக் கலகங்களுக்குப் பிறகு வந்த வேல்ஸ் பகுதியைச் சார்ந்த குவேக்கர்களும், ஹைலாந்தியரும், பிரிட்டிஷ் சட்டத்தினால் சீரழிந்த ஐரிஷ்காரரும் பிரிட்டனில் இருந்துவந்தவர்கள் என்றாலும், பெருந்துன்பங்களை அனுபவித்தவர்கள். இவ்வாறு மக்கள் வேகமாக வந்து குடியேறியதால், புரட்சிக்குள் மற்றொரு புரட்சி தோன்றியது. பழைய கடற்கரைக் குடியேற்ற நாடுகளும், அவைகளை ஆண்ட பெருங்குடியினரும் பிரிட்டனோடு பலவிதப் பூசல்களும் பிணக்குகளும் கொண்டிருந்தபோதிலும், அவர்களிற் பலர் வரப்போகும் போரில் அரச ஆதரவாளராக இருந்தனர். குறிப்பாக, குடியேற்ற நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினரைக் கொண்ட நியூ இங்கிலாந்து, இங்கிலாந்திற்கு ஆதரவாக இருந்தது. ஆனால், மேற்கு எல்லையில் குடியேறியவர்களின் நிலை அதற்கு நேர்மாறாக இருந்தது. அவர்கள் பழைய உலகையும் பழைய அமெரிக்கரையும் வெறுத்தனர். விரைவான நில உரிமை நிர்ணயமும், தீவிரச் சட்டங்களும், தங்களுடைய கடன்களை அடைக்கவேண்டிக் காகித நாணயமும்

வேண்டினர். மேலும், அவர்கள் பேரரசின் பேராட்களின் பாது காப்பைப் பெற்ற இந்தியரின் ஆட்சி எல்லைக்குள் அடாத முறையில் நுழைந்தனர்.

இந்த எல்லைச் சிக்கல் 1763ஆம் ஆண்டிற்குப் பிறகு ஓர் அவசரப் பிரச்சினையாக மாறியது. அந்த ஆண்டில் அரசரது தனியுரிமைப் பேரறிக்கை அப்பலேச்சியன் (Appalachian) மலைகளை எல்லைக்கோடாக வைத்து, அதற்கு அப்பால் இருந்த இந்திய ருடைய நிலத்தைத் தனிப்பட்டவர் வைத்துக்கொள்வதைத் தடை செய்தது. இது பல் குடியேற்ற உரிமைப் பத்திரங்களுக்கு முரணாக இருந்தது, மேலும், நிலவியாபாரச் சூதாட்டக் கம்பெனி களையும் தடைசெய்தது. ஆயின், 'உள்நாட்டுக்' குடியேற்றங்கள் வாணிபச் சட்டங்களை மீறின. அதே சமயத்தில் இந்தியரின் நலன் களைப் பாதுகாக்க எண்ணியவரோடு மாண்ட்ரியலைச் சேர்ந்த ஃபர் (Fur) வணிகரும், பாதுகாப்பிற்காகக் கனடாவின் எல்லையைத் தெற்கில் விரிவடையச் செய்ய வேண்டுமென்ற படைவீரரும், கார் லிடனும் இணைந்தனர். இக் கொள்கை கியூபெக் சட்டத்தின் மூல மாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அச் சட்டத்தினால் கனடாவின் எல்லைகள் மிஸ்ஸிஸிப்பி, ஓஹியோ ஆகிய ஆறுகள்வரையில் கொண்டுவரப்பெற்றன.

அமெரிக்கக் குடியேற்றங்கள் விரிவடைவதைத் தடுத்து நிறுத்தியதால், அமெரிக்கரிடையே வெறுப்பு வளர்ந்தது. அதிலும் கனடாவைச் சார்ந்த கத்தோலிக்கருக்குச் சலுகை அளித்தது, நியூ இங்கிலாந்தில் பழைய சமய உணர்ச்சியைத் தூண்டியது. பிற புறச்சமயத்தினரைக் காட்டிலும் சமய வெறி கொண்ட நியூ இங்கிலாந்து சமயக்குருமார்கள், மத்தியக் குடி யேற்றங்களிலும், தென்குடியேற்றங்களிலும் உள்ள பல எபிஸ் கோபலியருக்கு மேலாக, பிஷப்புகளை அமர்த்துவதற்கு முன்பு நடைபெற்ற விவாதங்களினால் வெறுப்படைந்தனர். ஆயினும், அமெரிக்கப் புரட்சிக்குச் சமயம் காரணமன்று; இரு சமுதாயங் களுக்குமிடையே வளர்ந்துவந்த முரண்பாடுதான் இப் புரட்சியின் அடிப்படைக் காரணமாக அமைந்தது.

வாணிபச் சட்டங்கள் பேரரசினை இணைத்துவைத்தன என்ப தையும், அமெரிக்கா தன்னுடைய பாதுகாப்பிற்காகப் பணம் வழங்கவேண்டும் என்பதையும் தற்கோள்களாகக் கொள்வதனால், நான்கு மாற்று வழிகள் இருந்தன. ஒன்று, தனித்தனியாகப் பதின்மூன்று மக்கள் மன்றங்களிடம் விண்ணப்பிக்கும் பழைய பழக்கத்தையே தொடர்ந்து மேற்கொள்வது. ஆனால், அதன்படி

பணமும் நிறைய கிடைப்பதில்லை. படைவீரரும் போதிய அளவு கிடைப்பது கடினமாக இருந்தது. அதற்கு மேர் எதிராக இருந்தது. ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அமெரிக்கருக்குப் பிரதி நிதித்துவம் அளிப்பது. சில கவர்னர்கள் இக் குறிக்கோளைக் கொண்டிருந்தனர். ஆடம் ஸ்மித் (Adam Smith) உள்ளிட்ட சில அறிஞரும் இதனை ஆதரித்தனர். ஆனால், இதனை அமெரிக்கர் எவரும் விரும்பவில்லை. பர்க் அறிவித்ததைப்போல இயற்கையே இதற்கு எதிராக இருந்தது. ஆரம்ப காலத்தில் அடிக்கடி குறிப்பிடப்பெற்ற மூன்றாவது திட்டத்தினை 1754ஆம் ஆண்டு அல்பனி (Albany) மாநாட்டில், ஒப்பற்ற அமெரிக்கரும், பென்சில்வேனியாவைச் சார்ந்த விஞ்ஞானியுமான பெஞ்சமின் ஃபிராங்க்ளின் (Benjamin Franklin) மறுபடியும் வெளியிட்டார். அத் திட்டத்தின் படி பாதுகாப்பிற்காகக் குடியேற்றங்களின் ஐக்கியம் ஏற்பட வேண்டும். ஆனால், அதனை ஒரு குடியேற்றமும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, பேரரசுப் பாராளுமன்றத்தின் மூலமாக வரி விதிப்பதுதான் நான்காவது வழிதுறையாக இருந்தது.

பொதுவாகப் பேசுமிடத்து, செயல்முறையில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், எல்லா மந்திரி சபைகளும் ஒரே மாதிரியான செயலில் ஈடுபட்டன. பத்திர முத்திரைச் சட்டம் தள்ளுபடியானபோதிலும், அடிப்படைகள் மாறுமலேயே இருந்தன. அமெரிக்கரைத் திருப்தி செய்வதற்காகத் தீர்வைகளைக் குறைத்தல், ஆனால், வாணிபச் சட்டங்களின் மூலமாக நிதி வேண்டுதல், அந்தச் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தல், திரட்டிய நிதியை அமெரிக்கர் நலனுக்கே பயன்படுத்துதல், பொதுமக்கள் வீடுகளில் படையினரை வைத்துக் காப்பதற்கான சட்டங்களை இயற்றி சேனையை வைத்திருத்தல் ஆகியவைகள் அடிப்படைகளாக இருந்தன. நார்த்தின் காபினெட் மேலும் சில சலுகைகளை அளித்தது. சந்தடியின்றிப் படைகளை மக்கள்வாழ் பகுதிகளில் கொண்டு நிறுத்துவதற்கான சட்டங்களை கைவிட்டதோடு, தேயிலை தவிரப் பிற பொருள்களின்மீது டவுன்ஷண்ட் விதித்த தீர்வைகளையும் அகற்றியது. சட்டமுறையான கொள்கைக்காகத் தேயிலை வரி மட்டும் வைத்துக்கொள்ளப்பெற்றது. நிதியைப் பெருக்க மேலும் எவ்வித வரியும் விதிப்பதில்லையென்று குடியேற்றங்களுக்கு அறிவிப்பு அனுப்பியது. ஆனால், இப் பிரச்சினை, குறைபாடுகளாக இருந்தது மாறிக் கொள்கையளவிற்கு வந்தது.

உண்மையிலேயே பொருளாதாரத் துறையில் அமெரிக்கர் பட்ட துன்பங்கள் ஏராளம். வாணிபச் சட்டங்களினால் ஏற்பட்ட சுமை நன்கொடைகள் வழங்குவதன் மூலமாகக் குறைந்த

போதிலும், தென் ஐரோப்பிய நாடுகளுக்குத் தாராளமாக ஏற்றுமதி செய்யக் குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பெற்ற போதிலும் இச் சட்டங்கள் அமெரிக்க உற்பத்தியாளர்களைத் தடைசெய்தன. உதாரணமாக, 1750ஆம் ஆண்டுச் சட்டம், இரும்புக் கனி ஏற்றுமதிக்கு ஊக்கம் அளித்தபோதிலும், குடியேற்ற நாடுகள் இரும்பு ஆலைகள் நிர்மாணிப்பதைத் தடுத்தது. அமெரிக்கருடைய முக்கிய மார்க்கெட்டான பிரிட்டனுக்கே பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டியிருந்ததால், இறக்குமதிகளுக்குப் போதிய பணமின்றி அமெரிக்கர் தவித்தனர். நீண்ட காலக் கடன்களினால் அல்லலுற்ற அவர்கள் பாதகமான நாணய மாற்று முறையினால் மேலும் துன்புற்றனர். போரையடுத்துத் தோன்றிய தொழில் மந்தத்தின்போது கிரென்வில் சில சட்டங்களைக் கொண்டுவந்தார். அவைகள் நியூ இங்கிலாந்து பிரிட்டிஷ் இறக்குமதிப் பொருள்களுக்கும் ஆப்பிரிக்க அடிமை வாணிபத்திற்கும் பொருள் வழங்குவதற்கு வாய்ப்பாக இருந்த மேற்கிந்தியத் தீவுகளுடன் மும்முனை வாணிபத்தை அழிப்பதாக அச்சுறுத்தின. வெறுப்பை வளர்த்த மற்றொரு சட்டம் 1765ஆம் ஆண்டில் நிறைவேறியது. அதன்படி நியூ இங்கிலாந்தியர் காகித நாணயம் வெளியிடுதல் தடைசெய்யப்பெற்றது.

எனினும், அமெரிக்கர்மீது இருந்த பொருள் சார்ந்த சுமை இலேசானதாகவே இருந்தது. உதாரணமாக, தேயிலையின் விலை இங்கிலாந்தின் விலையில் பாதியளவுதான் இருந்தது. அதனால் அமெரிக்கர் நிதி திரட்டக் கொண்டுவந்த சட்டங்களினால் புரட்சி செய்யவில்லை. ஆயின், 'புதிய தனியுரிமை யதிகாரம்' வளர்வதற்கான அறிகுறிகளை எதிர்த்தே புரட்சியிலிறங்கினர். பேரரசு வாணிப வளர்ச்சிக்காக வரும் சட்டங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளத் தயார் என்று அமெரிக்கத் தலைவர்கள் சொன்னார்கள். ஆனால், அப்போது கொண்டுவரப்பெற்ற சட்டங்கள் நிதி திரட்டுவதைக் குறியாகக் கொண்டவை என்றும், உண்மையிலேயே நிதி திரட்டப்பெற்றது என்றும், ஆகையினால்தான் எதிர்க்கிறோம் என்றும் வாதாடினர். பிரிட்டிஷ் சுங்க அதிகாரிகள் அடங்கிய மத்திய நிர்வாகக் குழு, நிதி திரட்டுவதற்காக நாவாய்ப் படையினரைப் பயன்படுத்துதல், அதைச் சார்ந்த வழக்குகளை ஜூரிகளின்றி விசாரணை செய்தல், நிலைப்படை வைத்திருத்தல் ஆகியவை தங்களுடைய பண்டைய உரிமைகளுக்கு முரணானவை என்று கண்டித்தனர். மேலும், நீதிபதிகளையும் அதிகாரிகளையும் மக்கள் மன்றங்களின் பொருளாதாரக் கட்டுப்பாட்டிலிருந்து

விடுவித்த அரசாங்கஅமைப்பினையும், தனியார் வீடுகளைச் சோதனை யிடுவதற்கான 'உதவி ஆணைகள்' (writs of assistance) வெளியிடப் பெற்றதையும் வன்மையாகக் கண்டித்தனர்.

அவர்கள் 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிறித்துவப் பாதிரி யார்களிடத்திலிருந்து வந்த உரிமைக் கோட்பாடுகளைக் கொண் டிருந்தனர். குறிப்பாக, ஜான் லாக் (John Locke) என்பவரின் உரிமைபற்றிய கருத்துகளைப் போற்றி ஏற்றுக்கொண்டனர். முதலில் தங்களுக்கு அளிக்கப்பெற்ற உரிமைப் பத்திரங்களில் கண்டவற்றையே பற்றி நின்றனர். காலப்போக்கில் பியூரிட்டன் களைப்போலவே அரசியல் சட்டத்தில் அடிப்படைக் கருத்துகள் இருப்பதாகக் கொண்டனர். அதனால் பொதுச் சட்டத்தில் 'அடிப்படை உரிமைகளும்' 'இயற்கை நியதியும்' பொதிந்து கிடந்தன என்று கூறினர். பென்சில்வேனியா குடியேற்றத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் 'சுதந்திர' அரசாங்கத்தை மரபுவழி யாகப் பெற்றதாகக் கூறினர். வர்ஜீனியாவைச் சேர்ந்தவர்கள் பத்திர முத்திரைச் சட்டம், 'அரசியல் சட்டத்தையே அழிக்க வல்லது' என அறிவித்தனர். 'உதவி ஆணைகளுக்கு' எதிராக வழக்காடிய மெஸாசுசெட்ஸைச் சேர்ந்த ஜேம்ஸ் ஓட்டிஸ் (James Otis) என்பவர், அரசியல் சட்டத்திற்கு முரணான எச் சட்டமும் செல்லாது என்று சொன்னார். இத்தகைய கொள்கைகளைக் கொண்ட குடியேற்றக்காரர்கள், தங்களது சட்டசபைகள் கீழ டங்கிய மன்றங்கள் என்பதை ஏற்க மறுத்ததில் வியப்பில்லை. அவர்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்தையும் 'பேரரசுக்' கருத்தினையும் படிப்படியாக ஏற்க மறுத்தனர். இறுதியில் ஒருவித இறுக்கமற்ற கூட்டரசை உருவாக்க எண் ணினர். அங்கே அரசருக்குப் பணிந்தபோதிலும், அமெரிக்கச் சட்டசபைகளையும் ஐரிஷ் சட்டசபைகளையும் தங்களுடைய நிலப் பரப்பில் நிகரற்றுத் தனியுரிமை செலுத்தவேண்டும் என்றனர். அமெரிக்கக் குடியேற்றங்கள் தோன்றிய விதத்தினால், பிரிட்டிஷ் குடிகள் பாராளுமன்றத்தில் நேரடியான பிரதிநிதித்துவம் பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதற்குப் பணியவேண்டு மெனும் கருத்து எடுபடவில்லை. 'பிரதிநிதித்துவம்' என்றால், பரந்த வெளியில் பாடுபட்டு அமைத்த நகரங்கள், கவுன்டிகள் ஆகியவற்றில் நிலச் சொந்தக்காரருக்கு வாக்குரிமையும் உண்மை யான தலப்பிரதிநிதியும் கொண்ட ஜனநாயக அமைப்பு என அமெரிக்கர் கொண்டனர். ஆனால், விட்டுக்கொடுத்து சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று தீவிரமாகப் பேசிய சாத்தம்

பிரபு, பர்க்போன்ற ஆங்கிலேயரே பாராளுமன்றத்தின் இறை மையை விட்டுக்கொடுக்கவோ, 'பிரதிநிதித்துவத்தை' அமெரிக் கர்கள் கொண்ட பொருளில் ஏற்றுக்கொள்ளவோ இசையவில்லை.

நியூ இங்கிலாந்திலாவது 1765ஆம் ஆண்டுமுதல் சுதந்திரத் திற்காக வேலைசெய்யும் சிறு கூட்டம் ஒன்று இருந்தபோதிலும், நெருக்கடிக் காலத்தில் தோன்றும் அமைதியற்ற நிலைக்கான அறி குறிகளே பொதுவாகக் காணப்பெற்றன. 'சுதந்திரத்தின் புதல்வர்கள்' என்று அழைக்கப்பெற்றவர்கள், அதிகாரிகளைப் போன்று பொம்மைகள் செய்து அவைகளைத் தூக்கில் தொங்க விட்டனர். வரி தண்டுவோரின்மீது தாரைப் பூசினர்; அவர்களை அல்லற்படுமாறு செய்தனர். பிரிட்டிஷ் பொருள்களை வாங்க மறுத்தனர். பாஸ்டன் நகர மாதர், தேநீர் அருந்த மறுத்தனர். இத்தகைய அறிகுறிகள் கும்பலாட்சியைத் தோற்றுவித்தன. முத்திரைப் பத்திரச் சட்டத்திற்கு எதிராக நடந்த கலகங்களுக் கான இழப்பீட்டை மெஸாசுஸெட்ஸ் தர மறுத்தது. நியூயார்க் குடியேற்றமோ படைவீரரை வைத்துக் காக்க மறுத்தது. பாஸ்டன் நகரத்தில் மக்கள் கூட்டங்கள் படைவீரரைச் சுடத் தூண்டின. குடியேற்றங்களிடையே ஒரு புதிய ஒற்றுமை ஏற்பட்டது என்பதற்குக் கடிதப் போக்குவரத்துக் கமிட்டிகள் சான்று பகர்ந்தன. அதே சமயத்தில் வாணிபச் சட்டங்களை எதிர்க்கவேண்டி மெஸாசுஸெட்சுடன் இணைவதற்காகப் பல மக்கள் மன்றங்கள் கூலைக்கப்பெற்றன.

1770–72ஆம் ஆண்டுகளில் நிதி தண்டுவோர்மீதான தாக்குதல்கள் சில நீங்கலாக ஒருவித அமைதி நிலவியது. ஏனெனில், டவுன்ஷெண்டின் சட்டத்தின் ஒரு பகுதி தள்ளுபடி யானதால், இறக்குமதி செய்யக்கூடாது என்றிருந்த தடை நீங்கியது. மேலும், ஏற்கெனவே பெரும் இழப்பிற்கு உள்ளாகி யிருந்த அமைதியான வணிகர்கள், அமைதியற்ற நிலை வருமோ என அஞ்சினர். ஆயின், எப்போதும்போலவே, தவறான ஆலோசனைகளைக் கேட்ட நார்த் பிரபு, கிழக்கிந்தியக் கம்பெனியை பணநொடிப்பிலிருந்து காப்பாற்றவேண்டி, 1773ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தேயிலை விற்கும் தனியுரிமையைத் தாற்காலிகமாக அக் கம்பெனிக்கு வழங்கினர். அதனால், வழக்கமான வியாபாரிகள் பாதிக்கப்பெற்றனர். கள்ளக் கடத்தல்காரர்களைக் காட்டிலும் குறைந்த விலைக்குத் தேயிலை விற்பனையாகியது. மக்க ளனைவரும் மறுப்புத் தெரிவித்து, தேயிலைக் கப்பல்களைத் திருப்பி யனுப்பினர். பாஸ்டன் நகரக் குடிகளில் சிலர் இந்தியர்களைப் போன்று வேடமணிந்து சென்று, கப்பல்களில் உள்ள

தேயிலையைக் கடலில் வீசி எறிந்தனர். இச் சிறிய வன்முறைச் செயல் பெரும்போர் மூளுவதற்குக் காரணமாக அமைந்தது. அமைதியற்ற நிலையினால் பொறுமையிழந்த ஆங்கில அரசாங்கம் மக்கள்கூட்டமே அதிகாரஞ்செலுத்தியதையறிந்து மெஸாசுசெட்ஸ் குடியேற்றத்தைத் தண்டிக்கத் தீர்மானித்தது. 1774ஆம் ஆண்டுச் சட்டங்கள், இழப்பீடு கட்டும்வரை பாஸ்டன் துறைமுகம் திறக்கப்படுதல் கூடாது என்பதோடு, உரிமைப் பத்திரத்தைத் திருத்தியமைத்தன. இத் திருத்தங்களினால் கவர்னருடைய கவுன்ஸிலும் ஜூரிகளும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பெற்றவராயினர். மேலும், பொதுக்கூட்டங்களைக் கூட்டும் உரிமையை நீக்கின. கியூபெக் சட்டம் தற்செயலாக அச் சமயத்தில் நிறைவேறியது. அதனால் தங்களைச் சுற்றிலும் போப்பின் சமயத்தைச் சார்ந்த இராணுவ அரசாங்கத்தினர் இருந்தனர் என்று அமெரிக்கர் நம்புதற்கிடமாயிருந்தது.

மெஸாசுசெட்ஸைத் தனியாகப் பிரித்துவிட முடியும் என்னும் அடிப்படையில்தான் பிரிட்டிஷாரின் கொள்கை அமைந்திருந்தது. இக் கொள்கைக்குத் தந்த பதில்போன்று செப்டம்பர் மாதத்தில் பெருநிலக் காங்கிரஸ் (Continental Congress) பிலடெல்ஃபியாவில் (Philadalphia) கூடியது. 'மாற்ற முடியாத இயற்கைச் சட்டங்களின் பெயராலும், ஆங்கில அரசியல் சட்டக் கொள்கையின் பெயராலும்' பாஸ்டன் சட்டங்களையும், கியூபெக் சட்டத்தையும், மூன்றும் ஜார்ஜ் மன்னராட்சியில் நிறைவேறிய நிதிச் சட்டங்கள் அனைத்தையும் தள்ளிவிடுமாறு பிலடெல்ஃபியா காங்கிரஸ் வற்புறுத்தியது. மேலும், நீதிபதிகளைக் கட்டுப்படுத்தும் உரிமையும், அமைதிக் காலத்தில் சேனையின்மீதான அதிகாரமும் அமெரிக்க மன்றங்களுக்கு அளிக்கப்பெறுதல் வேண்டுமென்றும் வாதாடியது. அட்லான்டிக் மாகடலின் இரு மருங்கிலும் தீவிர உணர்ச்சிகள் மேலோங்கி நின்றன. அப்போது நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் அமெரிக்கருக்கு எதிரான கொள்கையின் செல்வாக்கு மிகுந்து காணப்பெற்றது. அதே சமயத்தில் நியூ இங்கிலாந்து கொடுஞ் செயலாளர்கள், அரசரிடம் பற்றுறுதி கொண்டோரை வெளியேற்றினர். அத்துடன் நீதிமன்றங்களை நிலைகுலையச் செய்தனர். நெருக்குவதன்மூலமாக மாற்றுரைப் பணியவைத்துவிட முடியுமென்று இருதரப்பினரும் எண்ணினர். வாணிபத் தடையிலும் சாத்தம் பிரபுவின் செல்வாக்கிலும் அமெரிக்கர் நம்பிக்கைவைத்தனர். ஆங்கிலேயரோ, அமெரிக்கரிடம் காணப்பெற்ற ஒற்றுமையற்ற நிலையைப் பெரிதாக எண்ணியிருந்தனர். மேலும், அமெரிக்கர் படை இழிந்த நிலையிலுள்ள மெலிந்த படையென்று வாதிட்டனர். இதற்கிடையில் சிலர்

சமாதான முயற்சியிலீடுபட்டனர். பர்க்கு, தமது பேருரையில், நிதிச்சட்டங்களை ரத்து செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர்; அதனோடு முன்னுள் இருந்ததைப்போலவே தனித்தனியான அமெரிக்க மக்கள் மன்றங்கள் விளங்கவேண்டுமென்று வேண்டு கோள் விடுத்தார். அமெரிக்கப் பிரச்சினையின் அடிப்படையை உணர்ந்த சாத்தம் பிரபு, அமெரிக்கரின் காங்கிரஸே வரி விதிக்கும் உரிமைகொண்ட அமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பர்க்கு கூறினர். இந்த இரண்டு வழிகளையுமே ஏற்க மறுத்த நார்த்தின் பெரும்பான்மைக் கட்சியினர், 1775-ல் தற்காப்பிற்கு வழி செய்துகொண்டு, மன்னரது செலவுப் பட்டியலுக்கு நிதியளிக்கும் குடியேற்றத்தின்மீது வரி விதிக்கவேண்டியதில்லை என்னும் நார்த்தின் தீர்மானத்தைத் தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டனர். ஆனால், இத் தீர்மானம் காலந்தாழ்த்தி நிறைவேற்றப்பட்டதாகும். ஏனெனில், ஏப்ரல் மாதத்தில் ஜெனரல் கேஜ் (General Gage) என்பார் பாஸ்டனை முற்றுகையிட்டுப் போர்த்தளவாடங்களைக் கைப்பற்ற ஒரு படையினை அனுப்பினர். லெக்சிங்டனில்தான் (Lexington) முதன்முதலில் சுருதி சிந்தப்பட்டது. கனடிய எல்லைக் காவல் நிலைகளை அமெரிக்கர் கைப்பற்றினர். பாஸ்டனில் இருந்த பிரிட்டிஷார் பிரதானமாக இருந்த பங்கர் குன்றினைக் (Bunker's Hill) கைப்பற்றினர். ஆனால், ஆயிரம் வீரர்களைப் பலியாகத் தந்தே இந்த வெற்றியைப் பெற்றனர். இங்ஙனம் நார்த்தின் மந்திரிசபையையும், மன்னருடைய நிறை செல்வாக்கையும், பழைய பேரரசையும் அழித்த போர் தொடங்கியது.

இறுதி மோதலை மற்றுமோர் ஆண்டிற்குத் தவிர்க்கவே மிதவாதிகள் விரும்பினர். ஆயினும், நம்பிக்கையிழந்த நிலையில் வெளிநாட்டு உதவியைப் பெறவேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டதால், ஆங்கிலத் தீவிரவாதியான தாமஸ் பெய்ன் (Thomas Paine) என்பவரின் நூலாகிய 'காமன் சென்ஸில்' (Common Sense) வெளியிட்ட வாதங்கள் வலிமைபெற்று விளங்கின. 1776ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் தேதி சுதந்திரப் பேரறிக்கையைக் (Declaration of Independence) காங்கிரஸ் நிறைவேற்றியது.

அமெரிக்கப் போரானது முதல் நிலையில் உள்நாட்டுப் போராகவே விளங்கியது. நடு இராச்சியங்களில் வாழ்ந்த மேல்வகுப்பைச் சார்ந்த அமெரிக்கரில் பெரும்பான்மையோர் தாய்நாட்டிடம் பற்றுக் கொண்டிருந்தனர். அமெரிக்கச் சேனையில் பதினான்கு பிரிவுகள் (regiments) அரசருக்காகப் போரிட்டன. பல்லாயிரக் கணக்கானவர் பணிவதைவிட நாட்டைவிட்டு வெளி

யேறுதல் ஏற்புடைத்து எனக் கருதினர். மற்றொரு பக்கத்தில் சில ஆங்கில அதிகாரிகள் அமெரிக்கருக்கு எதிராகப் போரிட மறுத்தனர். அமெரிக்கருக்கு ஆதரவாகத் தீவிர வாதிகள் வெளிப்படையாகவே விவாதித்தனர். இத்தகைய கொள்கை அளவினதான போர், பிரிட்டிஷ் கட்சிக்குப் புத்துயிர் அளித்தது. 'அமெரிக்கருக்கு ஆதரவாக இருந்த கட்சியினரை' நார்த்தின் ஆட்கள் கடுமையாகத் தாக்கிய சமயத்தில், குடியேற்ற மக்களுக்கு ஆதரவாக இருந்த 'புகழ் மிக்க விக்கு கொள்கையை'ச் சாத்தம் பிரபு பெரிதும் பாராட்டினர். சார்லஸ் ஜேம்ஸ் பாக்ஸ் என்பவரின் தலைமையில் இருந்த விக்குகள், அமெரிக்கரின் மஞ்சள், நீலவண்ண உடையினையே தங்கள் கட்சி யினரின் உடையாகக் கொண்டனர்.

இங்கிலாந்தில் இரண்டாண்டுகளாக நாட்டு மக்களில் பெரும் பான்மையினர் அரசரை ஆதரித்தனர். திருச்சபையாளரும் ஸ்கொயர் என்னும் கனவான்களும்மட்டுமன்றி, வெஸ்லியின் தலைமையில் இருந்த புறச்சமயத்தவரில் பலரும் அரசருக்கு ஆதரவளித்தனர். தொழிற் புரட்சி காரணமாக அமெரிக்கா தவிர வேறு அங்காடிகளும் கிடைத்ததால், பல வணிகரும் மன்னர் பக்கமிருந்தனர். படை சார்ந்த வெற்றிகள் இத்தகைய எண்ணம் நீடித்திருக்கச் செய்தன. மாண்ட்ரீல் நகரம் தற்காலிக மாக வீழ்ந்தது. எனினும், மிக விரைவிலேயே அந் நகரை மீட்டின சார்லிடன் (Carleton) கனடா முழுவதையும் காத்து நின்றார். ஃபிரெஞ்சு கனடியரும் இந்தியரும் பிரிட்டிஷாரையே அதிகமாகச் சார்ந்திருந்தனர். பாஸ்டன் நகரைவிட்டு வெளி யேறியது பகுத்தறிவுச் செயலாகும். நமது புதிய படைத் தலைவரான ஹோ (Howe) 1776-ல் நியூயார்க்கைக் கைப்பற்றினர். ஆனால், அடுத்த ஆண்டில் ஏற்பட்ட தோல்விகள் பிரிட்டிஷாரின் மனமாற்றத்திற்குக் காரணமாயின.

பிரிட்டிஷ் படைத்துறை வரலாற்றிலே வேறெந்தப் போரும் இத்துணை மோசமான வகையில் நடத்தப்பெறவில்லை எனலாம். படைவீரர்களையும் போர்த்தளவாடங்களையும் பொறுத்த வரையில் பிரிட்டிஷார் ஆயத்த நிலையிலில்லை. மேலும், உள் நாட்டுப் போரில் ஜெர்மானியக் கூலிப்படைகளைப் பயன் படுத்தியது கீழ்த்தரமான செயலாகும். அமெரிக்கர் எத்துணை தான் ஆத்திரமூட்டியபோதிலும், தலைமயிரைப் பிய்க்கும் சிவப் பிந்தியர்களைப் பயன்படுத்தியதும், தெற்கில் நீக்ரோக்கள் படையைத் திரட்டியதும் பிரிட்டிஷாரின் இழிசெயல்களாகவே கருதப்பெற்றன. நம்முடைய படைத்தலைவர்களில் பர்காயின்

(Burgoyne) திறமையாளரெனினும் முரண்பாடுடையவர். ஹோ என்பவரோ தமது காலங்கடத்தும் தன்மையினால் தமக்குக் கிடைத்த பல அரிய வாய்ப்புகளைப் பயன்படுத்தாது விடுத்தார். நார்த் பிரபுவின் மெலிந்த தன்மையினால் காபினெட் சிதறுண்டது. கடற்படை கொண்டு முற்றுகையிடுதலே நமது உண்மையான கொள்கையென்று படைத்தலைவர்கள் வாதிட்ட போதிலும், தரைப்படையானது மாண்ட்ரீலிலிருந்து பிளாரிடா வரையிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் பரவலாகச் சிதறிக் கிடந்தது. ஜெர்மெய்ன், ஓயிட்ஹாலிலிருந்துகொண்டு படைச் சூழ்ச்சித்திறத்தை அறிவிக்க முயன்றார். அதே சமயத்தில் பல கடற்படைத் தளகர்த்தர்கள் ஒருவர்பின் ஒருவராக சாண்விச்சின் தலைமையில் பணிபுரிய மறுத்தனர்.

இவற்றைவிடப் படைத்துறை சார்ந்த பிரச்சினையே மிகச் சிக்கலாக இருந்தது. ஏனெனில், பெரிய நகரங்களைக் கைப்பற்றுவதாலோ, பரந்துகிடந்த நாட்டில் அணிவகுத்து முன்னேறுவதாலோ இறுதியான பயனேதும் கிட்டவில்லை. இதற்குக் காரணம், தன்னிறைவு பெற்ற குடியேற்றங்கள், பிரிட்டிஷ் படை வரும்போது காடுகளிற் புகுந்து, பிறகு வெளிப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கமுடியும் என்பதுதான். இதற்கிடையில் நீண்டு உடைபட்டிருந்த கடற்கரையில் கடலோடிகளிலேயே வலிமைமிக்க இனத்தைச் சார்ந்தவர்கள் அரசியல் ஆதரவுபெற்ற தனிப் போர்க் கப்பலாட்களாக வந்து குடியேறினர். அமெரிக்கர் கட்சியிலோ வாஷிங்டனுடைய நம்பமுடியாத சேனை தலைமைகள், பொருமை ஆகியவற்றால் மேலும் சிதைந்தது. மேலும், அது குறைந்த ஊதியம் பெற்று, படைக்கலன்கள் போதுமான அளவிற்கின்றித் துன்புற்றது. குறுகியகால அடிப்படையில் திரட்டப்பெற்ற அப் படையிலிருந்து பலர் அவ்வப்போது விலகிச் சென்றனர். இங்ஙனம் இங்கிலாந்திற்கு இறுதியில் வெற்றிபெறும் வாய்ப்பு இருந்தது. ஆனால், அவ் வாய்ப்பு இரண்டு நிபந்தனைகளைச் சார்ந்திருந்தது. முதலில் நியூ இங்கிலாந்து தனியாகப் பிரிக்கப் பெறுதல் வேண்டும்; இரண்டாவதாக, நாம் கடலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தவேண்டும்.

வாஷிங்டன் நியூயார்க்கிலிருந்து தப்பிச் செல்வதற்கு ஹோவின் சோம்பலே காரணமாக அமைந்தது. வாஷிங்டனைத் தெற்கில் டிலாவேர்வரையிலும் தொடர்ந்து சென்றபோதிலும். 1776 ஆம் ஆண்டின் இறுதியில் டிரெண்டன் எனுமிடத்தில் பிரிட்டிஷ் படை தோல்வி கண்டது. கனடாவில் இருந்த பர்காயின் சாம்ப்லெய்ன் ஏரி வழியாக அல்பனிக்கு வந்து

நியூயார்க்கிலிருந்து வரும் தாக்கும் படையுடன் இணைவதே 1777ஆம் ஆண்டின் திட்டமாகும். ஆனால், திட்டத்தில் இறுதி நேர மாற்றம் ஒன்றிற்கு ஜெர்மெய்ன் அனுமதி தந்தார். அதன் படி கிளின்டன் நியூயார்க்கில் விட்டுவிட்டு, ஹோ தமது பிரதான படையுடன் ஜூலை மாதத்தில் பென்சில்வேனியாவைக் சென்றடைந்தார். அம் மாதத்தில் டிகோண்டிரோகாவைக் கைப் பற்றிய பர்காயின், அல்பனிக்கு நாற்பது கல் தொலைவில் வந்து கொண்டிருந்தார். ஆனால், அவருக்குப் போர்த்தளவாடங்களின் அளிப்பு தடைபட்டது. நியூ இங்கிலாந்து பெரும்படையைத் திரட்டியது. சூழ்ந்திருந்த பகைவரை முறியடிப்பதில் கிளின்டன் தோல்வி கண்டார்.

ஹோ, சீசாபீக் வளைகுடாவிற்குச் சென்று வாஷிங்டனை பிராண்டிவைன் (Brandywine) என்னுமிடத்தில் முறியடித்த போதிலும், பிலடெல்ஃபியாவை மீண்டும் கைப்பற்றியபோதிலும், அக்டோபரில் பர்காயின் சாரடோகாவில் (Saratoga) சரண டைந்தது போரின் இறுதியாக இருந்தது. ஏனெனில், இத் தோல்வி ஃபிரெஞ்சுக்காரரைத் தலையிடுமாறு தூண்டியது. இத் தலையீட்டினால் பிரிட்டிஷார் தங்களது கப்பல்களையும், படைவலிப் பெருக்கத்தையும் அமெரிக்காவிலிருந்து பிற போர்க்களங் களுக்குத் திருப்பவேண்டியதாயிற்று. ஹோ பதவியிலிருந்து நீங்கினர். ஃபிலடெல்பியாவிலிருந்த கிளின்டன் 1778ஆம் ஆண்டு ஜூலையில் அவ்விடத்தைக் காலி செய்து நிலவழியாக நியூயார்க் நகருக்குப் பின்வாங்கினர். மற்றொரு பிரிட்டிஷ் படை ரோட் தீவினைப் பாதுகாத்து நின்றது. மூன்றாவது படை ஜார்ஜியாவில் வெற்றிகரமாக முன்னேறியது. கனடாவிலும் சாரடோகாவிலும் வெற்றிவீரராகத் திகழ்ந்த பெனிடிக்ட் ஆர்னல்டு (Benedict Arnold) உள்பட பல தலைசிறந்த அமெரிக்க வீரர்கள் நம்பிக்கை இழந்து, பிரிட்டிஷ்காரருடன் சூழ்ச்சி செய்யத் தொடங்கினர். பிரிட்டிஷ் வரலாற்றில் எப்போது தோன்றினும் இடர்விளைத்த காரணக்கூறாகிய கடலாதிக்கத்தின் வீழ்ச்சி, அடுத்த ஆண்டி லிருந்து ஆபத்து விளைவித்தது.

சாத்தம் பிரபுவின் பழைய பகைவரான சோய்சியூல் இங்கி லாந்தைப் பழிவாங்கும் போர் ஒன்றை நிகழ்த்துதற்காகப் ஃபிரெஞ்சுக் கடல் வலியைப் பெருக்கினர். அவரது வாரிசான வெர்கனஸ் (Vergennes) செயின்ட் லாரன்ஸ் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையோடு மேற்கிந்தியத் தீவுகளை மீட்கும் வாய்ப் பினை அமெரிக்கா அளிக்கக் கூடுமெனக் கருதினர். ஸ்பானிய அரசரான மூன்றாம் சார்லஸின் அசையாத நட்பினைப் பெற்றார்.

இந்த இரு வல்லரசுகளும் 1778-ல் ஆங்கிலக் கால்வாயை அச்சுறுத்தின. கெப்பல் எனும் தளகர்த்தர் உஷான்டிற்கு (Ushant) அருகில் வெற்றி தோல்வியற்ற கைகலப்பில் ஈடுபட்டார். 1779ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுக்காரருக்குப் படைவலிப் பெருக்கம் அளித்த ஸ்பானியக் கப்பற்படை இங்கிலாந்தின்மீது படையெடுப்பதாக பயமுறுத்தியது; ஜிப்ரால்டரை முற்றுகையிட்டது.

இந் நிகழ்ச்சிகளின் விளைவுகள் வேகமாக அட்லான்டிக் கடலைக் கடந்து அமெரிக்காவை அடைந்தன. ஆங்கிலப் படைகள் இங்கிலாந்திலேயே தங்கிய அதே சமயத்தில் வாஷிங்டனுக்குத் துணையாக ஃபிரெஞ்சுக் கப்பல்கள் படைகளைக் கொண்டு குவித்தன. மேலும், மேற்கிந்தியத் தீவுகளில் இருந்த பிரிட்டிஷ் காவற்படைகளை வெளியேற வொட்டாமல் செய்தன. டோமினிகா, செயின்ட் வின்சென்ட், கிரினடா ஆகியவை வீழ்ந்தன. அதன் பிறகு ரோட் தீவிலிருந்த துறைமுகங்களும் பகைவர் கையில் சிக்கின. 1780-ல் ஃபிரெஞ்சுக்காரரின் மேம்பாட்டைக் கண்டு அஞ்சியதால் கிளின்டனின் தெற்குத் தாக்குதல் கைவிடப் பெற்றது. மேலும் கரோலினைக்களைக் கொள்ளும் பொறுப்பினை கார்ன்வாலிஸிடம் விட்டு கிளின்டன் வெளியேறினர். ஏற்கெனவே, இடருற்று, இழிநிலையெய்திய நமது செயல் நோக்கத்தைப் புதிய பகைவரும் தாக்கத் தொடங்கினர். ஸ்டுவர்டு ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போலவே நடுநிலைமை நாட்டுக் கப்பல்களைச் சோதனையிடும் நமது பழக்கத்தை ஒப்புக்கொள்ள டச்சுக்காரர் மறுத்தனர். எனவே, ஹாலந்திற்கு எதிராகப் போர் அறிவிக்கப் பெற்றது. அதே சமயத்தில் டச்சுக்காரருடன் போர் நிகழ்வதற்குக் காரணங்கள், ரஷ்யாவையும் ஸ்காண்டினேவிய நாடுகளையும் 'படையுடன் கூடிய நடுநிலைமை'க் கொள்கையில் ஒன்றுக இணையுமாறு செய்தன.

ராட்னி (Rodney) தாம் இறுதியாக வென்ற வளம் மிகுந்த செயின்ட் யூஸ்டேஷியஸ் (St. Eustatius) என்னும் டச்சுக்காரர் களுக்குச் சொந்தமாய் இருந்த தீவைக் காத்து நின்றபோது 1781-ல் டி கிராஸ் என்பவரின் தலைமையில் இருந்த ஃபிரெஞ்சுக் கடற்படையொன்று அவரை ஏமாற்றிவிட்டு, ஆகஸ்ட் மாதத்தில் சீசாபீக்கில் படைகளை இறக்கியது. இச் செயலினால் வாஷிங்டன் நியூயார்க்கைத் தாக்குவதை விடுத்து காரன்வாலீஸின் படையினைத் தாக்கத் துணிந்தார். அது சமயம் காரன்வாலீஸின் படை சில காவல் அணிகளைப் பின் நிறுத்தி, வடக்கிலிருந்த வர்ஜீனியாவிற்குள் மிகுந்த இடருடன் புகுந்தது. அவ்வாறு புகுந்த படையினை சீசாபீக் வளைகுடாவில், யார்க்டவுன் என்னுமிடத்தில்

வாஷிங்டன் முற்றுகையிட்டார். அவ்விடத்தில் ஆறு வாரங்கள் போர் புரியாது சோம்பியிருந்த கார்ன்வாலீஸின் படைக்குக் கடல் வழியாக உதவி சரிவரக் கிடைக்கவில்லை. இங்கிலீயில் இரு மடங்கு எண்ணிக்கையுள்ள பகைவர் படையினால் சூழப்பெற்ற கார்ன்வாலீஸ் அக்டோபர் மாதத்தில் சரணடைந்தார்.

எனினும், நியூயார்க்கில் கிளின்டன் 30,000 படைவீரரைத் தம்மிடம் வைத்திருந்தார். டி கிராஸ் பயணமானபோது அமெரிக்கர் எப்போதும் போலவே வலிமையற்றிருந்தனர். மேலும், ஆங்கிலேயர் அமெரிக்காவை இழந்தார்கள் என்றால் அது யார்க்டவுனில் அன்று. அதற்கு மாறாக அலைகடலின் மேல்தான் என்பது தெளிவு. செயின்ட் யூஸ்டேஷியஸ் தீவைத் திரும்பக் கைப்பற்றிய ஃபிரெஞ்சுக்காரர், டெபாகோவையும், செயின்ட் கிட்ஸையும் இணைத்துக்கொண்டனர். ஸ்பானியப் படையொன்று பிளாரிடாவைக் கைப்பற்றியது. மற்றொன்று 1782-ல் மைனர்க்காவைப் பிடித்தது. ஜெனரல் எலியட்டின் (General Elliott) ஒப்பற்ற வீரத்தினால் வீழாதிருந்த ஜிப்ரால்டர் மூன்றும் ஆண்டு முற்றுகையைச் சமாளிக்கவேண்டியிருந்தது. ஹைதர் அலிக்குச் சென்ற உதவிப்படை ஃபிரெஞ்சுக் கடற்படையினால் காக்கப்பெற்றது. இப் பெருங் கூட்டிணைப்பு பிரிட்டனின் ஆதிக்கத்தை இந்தியாவினின்றும் அகற்றுவதாக அச்சுறுத்தியது. நமது கப்பற்படை எப்போதும் போல் எண்ணிக்கையில் குறைந்திருந்ததோடு, போதுமான சாமான்களும் இன்றி இடருற்றது. அதன் காரணமாக வாணிபப் பயணங்களில் இழப்பு ஏற்படுவதை நமது கப்பற்படையினால் தவிர்க்க முடியவில்லை. கெம்பன்பெல்டும் (Kempenfeldt) அவரது கொடிக்கப்பலான இராயல் ஜார்ஜும் (Royal George) பழுதுற்ற மரம் காரணமாகக் கடலில் மூழ்க வேண்டியதாயிற்று. 3,000 பிரிட்டிஷ் வணிகரைப் பகைவர் பிடித்துக்கொண்டனர். நாட்டுக் கடனில் 100 மில்லியன் டாலர் கூடியது. அடிமை வாணிபம் அழிந்ததால் தொழில்வளமிக்க வடபகுதியும், லிவர்பூலும் அழிவுற்றன. பிரிட்டிஷ் மக்கள் 'பித்தம் கொள்ளுமளவிற்குச் சினங்கொண்டனர்' என்று வெஸ்லி விளக்கினர். அயர்லாந்தில் ஆங்கிலப்படையினர் வெளியேறியதால், அந் நாட்டவர் நமது வாணிபத்தைப் புறக்கணித்தனர். தன்னிச்சை இயக்கம் என்னும் பெயரால் சுயாட்சி கோரினர். வாதத்திறமை பெற்ற அயர்லாந்தியர் ஒருவர் 'அமெரிக்கக் குரலொன்று சுதந்திரத்தை நோக்கி எழுந்தது' என்று குறிப்பிட்டார்.

சமீப காலம் வரையில் வலிமை மிகுந்திருந்த பேரரசு, பிடிவாதமும், சோர்வும், நலிவும் பெற்றிருந்தமையால் அத்தகைய ஆபத்தான நிலைக்கு வந்தது. 1763ஆம் ஆண்டிற்குப் பிறகு வந்த சட்டங்களனைத்தையும் தள்ளிவிடுவதாகக் கூறி, 1778-ல் நார்த் பிரபு சமாதானம் பேச முன்வந்தார். ஆனால், அதுபோது அமெரிக்கரும், ஃபிரெஞ்சுக்காரரும் இணைவது நிச்சயமாகியதால் நார்த்தின் முயற்சி காலங்கடந்ததாக இருந்தது. ஆயினும், போர் நீடித்தது என்றால் அதற்கு அரசரே பொறுப்பானவர். சாத்தம் பிரபுவை ஆதரித்து நாடு முழுதுமே குரலெழுப்பியபோதும், 'அந்த வஞ்சகரைத்' தமது அமைச்சராகக் கொள்ளமுடியாது என்று அரசர் பிடிவாதமாக இருந்தார். 1778ஆம் ஆண்டில் 'பழமையான, மாண்புமிக்க முடியாட்சி சீர்குலைவதற்கு' எதிராகப் பிரபுக்கள் சபையில் வாதிட்டபோது வாதநோயினால் பாதிக்கப் பெற்று மே மாதத்தில் அவர் மறைந்தார். இராஜினமா செய்யப் போவதாக நார்த் பிரபு கூறியபோது கடமையை மறந்த நிலையில் அரசர் அவரைக் கண்டித்தார். ஜெர்மெய்னையும், சான்ட்விச் சையும் பதவியிலிருந்து நீக்கவில்லை. 'தமது உடலையும், கொள்கைகளையும், பேரரசுப் பகுதிகளையும்' விட்டுக்கொடுப் பதைவிட முடிதுறக்கத் தயார் என்று அரசர் அறிவித்தார்.

1779-ல் வேமவுத்துடன் (Waymouth) கோவரும் (Gower) இராஜினமா செய்தார். அவர் பதவியிலிருந்து நீங்கும்போது 'நாட்டிலோ, சேனையிலோ, நாவாய்ப்படையிலோ' கட்டுப்பாடு சிறிதும் இல்லையென்றும், அழிவு காத்திருப்பதைத் தாம் கண்ட தாகவும் கூறினர். கோவர் கூறியதைத் தாம் ஏற்றுக்கொள்வ தாக அரசரிடம் கூறிய துரதிருஷ்டசாலியான நார்த் பிரபு சில பதவியாளருடன் சந்துசெய்துகொண்டு காலத்தை ஓட்டினர். அவருக்கிருந்த பெரும்பான்மை ஆதரவு சிறிது சிறிதாக மறைந்தது. சீர்திருத்தம் வேண்டுமென்ற கூக்குரல் எழுந்தது. பதவியாளரையும், கான்ட்ராக்டர்களையும் நீக்கவேண்டுமெனக் கோரி கவுன்டிக் கூட்டங்கள் தீர்மானங்கள் இயற்றின. காமன்ஸ் சபையில் மசோதாக்கள் கொண்டுவரப்பெற்றன. யார்க்ஷயரைச் சேர்ந்த ஸ்கொயரான விவில் (Wyvill) என்பார், மக்கள் கையொப்பமிட்ட ஏராளமான விண்ணப்பங்களை அரசாங்கத்திற்கு அனுப்பினர். சீர்திருத்தக்காரர்கள் கவுன்டி சங்கங்களைத் தோற்றுவித்தனர். தீவிரவாதிகளோ வயதுவந்தோர் வாக்குரிமைக்கான சங்கங்களை அமைத்தனர். பொது மக்களின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் புதிய தலைவர்கள் தோன்றினர்கள். உதாரணமாக, பர்மிங்காம் நகரைச் சார்ந்த ஒருமைப்பாட்டு அறிஞரான ப்ரீஸ்ட்லி (Priestly), மன்னர் கடற்படை

அதிகாரியும், நீண்டநாட்கள் வாழ்ந்த சீர்திருத்தத்தின் தந்தையுமான கார்ட்ரைட் (Cartwright) போன்ற தலைவர்கள் தோன்றினர். 1780ஆம் ஆண்டில் 'அரசரின் செல்வாக்கு அதிகமாகிவிட்டது, அதிகமாகிக்கொண்டே வருகின்றது, அது குறைக்கப்படுதல் வேண்டுமெனும் தீர்மானத்தை ஷெல்பர்னின் (Shelburne) சீடரான டன்னிங் (Dunning) என்பார் கொண்டுவந்தார். சுயேச்சை உறுப்பினரில் பெரும்பான்மையோர் அதனை ஆதரித்து நிறைவேற்றிவைத்தனர்.

அவ்வாண்டு கடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப்பின் நார்த் பிரபு நீடித்திருப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு. பழைய பகைவராகிய ஃபிரெஞ்சுக்காரருக்கு எதிராகத் தூண்டப்பெற்ற நாட்டுப்பற்று மிகுந்த மக்கள் பேரரசை இழக்க விரும்பவில்லை. எதிர்க்கட்சியினர் எப்போதும்போல் பிளவுபட்டு நின்றனர். தீவிரவாதிகளுக்கும், ஷெல்பர்னின் தலைமையில் இருந்த சாத்தம் விக்குப் பிரிவினருக்கும் எதிராக, ராக்கிங்ஹாம்கள் விளங்கினர். ஆனல், கோர்டன் (Gordon) புரட்சிக் கலகத்தின் விளைவாகத் தோன்றிய குழப்பநிலையே நார்த்திற்குப் பெரிதும் உதவியது.

நாட்டு மக்களின் உணர்விலே ஒன்றிவிட்டதாகவும், எப்போதும் இடர் தோன்றுதற்கான எளிய காரணமாகவும் இருந்த போப் சமய மறுப்பு மறுமுறையும் தலைதூக்கியது. சமீப காலத்தில் கத்தோலிக்கருக்கு அளிக்கப்பெற்ற சலுகைகளினல் தோன்றிய இந்த எதிர்ப்பு, ஸ்காட்லாந்தில் வன்முறைச் செயல்களுக்கு வித்தாக அமைந்தது. அத்தகைய செயல்கள் 1780-ல் லண்டன் நகரில் ஏற்பட்டது. அந்த எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரான கோர்டன் வெறுக்கத்தக்க பண்புடையவர், தொப்பியில்லாத, நீல நிறச் சூட்டு அணிந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டமாகச் சென்று பாராளுமன்றத்தைச் சூழ்ந்து கொண்டார். வெறுப்பிற்குள்ளான உறுப்பினரைத் தாக்கினர்; கத்தோலிக்கக் கோயில்களைச் சூறையாடினர்; தனியார் வீடுகளுக்குத் தீயிட்டனர்; நியூகேட்டை அழித்ததோடு, சிறையிலிருந்தோரை விடுவித்தனர். பாங்கினைக் கொள்ளையிட்டுக் கொளுத்த முயன்றனர். நடுக்கங் கொண்ட நகர மாஜிஸ்டிரேட்டுகளினல் தங்கள் வழியே சென்ற கிளர்ச்சியாளர், அரசரின் தீவிரமான முனைப்பினல் உந்தப்பெற்ற அமைச்சர்கள் படையினரைப் பயன்படுத்தியதால் அடங்கிவிட்டனர். ஆயின், டவுனிங் சாலையில் குதிரைப்படையினர் தாக்குதலைத் தொடங்கியபோது லண்டன் நகரமே நெருப்புக்கும் வாளுக்கும் இரையானது

போல் தோன்றியது. இத்தகைய புரட்சிக் கலகத்திற்கு இயல்பாக எழுந்த எதிர்வினையை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது.

எனினும், யார்க்டவுன் வீழ்ந்தபோதும், கடல்களெல்லாம் நம்மைக் கைவிட்டபோதும், இந்த எதிர்வினையோ அல்லது தேர்தல் செலவோ அரசாங்கத்திற்குப் பெரும்பான்மையினரின் ஆதரவைத் தேடித்தரவில்லை. ஃபாக்ஸ் (Fox) வெஸ்ட்மினிஸ்டர் தொகுதியின் உறுப்பினரானார். அப்போது சாத்தம் பிரபுவின் மகனாகிய வில்லியம் பிட்டும் பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருந்தார். அவர் கொடிய அமெரிக்கப் போரை அறவே வெறுத்தார். அதே சமயத்தில் புதிய உறுப்பினர்களான ஷெரிடன், வில்பர்ஃபோர்ஸ் (Wilberforce) போன்றவர்கள் காபினெட்டிற்கு வெளியிலிருந்த டண்டாஸ் (Dundas) போன்றவர்களோ ஆதரித்தனர். அவர்கள் அனைவரும் போர் முடியவேண்டுமென்றும், நார்த் பிரபு பதவியிலிருந்து விலகவேண்டுமென்றும் வற்புறுத்தினர். அமெரிக்க சுதந்திரத்திற்கும், பொருளாதாரச் சீர்திருத்தத்திற்குமான உறுதிமொழி தராதவரையில் பதவி ஏற்கமுடியாதென்று ராக்கிங்ஹாம் கூறினர். ராக்கிங்ஹாமிடமிருந்து ஷெல்பர்ன் பிரிந்து வர மறுத்தார். 1782ஆம் ஆண்டில் சுயேச்சை உறுப்பினர் செய்த புரட்சியின் விளைவாக நார்த்பிரபு இராஜினமா செய்தார். கடுமையான எதிர்ப்பிற்குப் பின் 'தவிர்க்க முடியாத அந்த நாள்' அரசர் காணநேர்ந்தது. பழைய அமைச்சர்களில் நார்த்தை வெறுத்தவரும். குற்றமே காணும் சான்ஸலரு மான தர்லோ (Thurlow) ஒருவரைத்தான் அரசரால் வைத்திருக்க முடிந்தது. ஷெல்பர்னை நடுவராகப் பயன்படுத்தி, ராக்கிங்ஹாமின் இரண்டாவது மந்திரிசபையை மூன்றும் ஜார்ஜ் ஏற்றுக் கொண்டார்.

சமகால நிகழ்ச்சிகள்

1764 திட்டமிடப்பெற்ற முத்திரைக் காகிதச் சட்டத்திற்கெதிராக அமெரிக்கா கிளர்ச்சி செய்தல்.
மதாம் தி பாம்பதூரின் மறைவு. விங்கில்மண் (Winckelmann) எழுதிய பண்டைக்காலக் கலையின் வரலாறு.

1765 இந்தியாவில் கிளைவின் இரண்டாவது ஆட்சி.
பிளாக்ஸ்டோன் (Blackstone) எழுதிய 'Commentaries on the Laws of England'.
—*1790*. பேரரசர் இரண்டாம் ஜோசப்பின் ஆட்சி.

1766 ஃபிரான்ஸ் லோரைனைப் பெறுதல். கோல்டுஸ்மித் (Goldsmith) எழுதிய 'Vicar of Wakefield'.
லெஸ்ஸிங் (Lessing) எழுதிய 'Laocoon'.

1768 கார்சிகாவைப் ஃபிரான்ஸ் பெறுதல். பாடனி வளை குடாவை (Botany Bay) காப்டன் குக் (Captain Cook) காணுதல். இராயல் அகாடமி (Royal Academy) நிறுவப் பெறல்.

1769 நெப்போலியன் போனபார்ட்டின் (Napoleon Bonaparte) பிறப்பு.
ஜூனியஸின் (Junius) கடிதங்கள்.

1770 டாபின் இளவரசருக்கும் (Dauphin) மேரி அண்டாயினத்திற்கும் திருமணம்.
வொர்ட்ஸ்வர்த்தின் (Wordsworth) பிறப்பு.

1772 போலந்தின் முதலாம் பிரிவினை.
வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) வங்காளத்தின் கவர்னராதல்.

1774 துர்கோ (Turgot) தலைமைக் கணக்குத் தணிக்கையாளராக வருதல் (controller-general).
குட்சக்-கெய்னர்ட்ஜி (Kutchuk-Kainardji) உடன் படிக்கை.
கதே (Goethe) எழுதிய 'Sorrows of Werther'.

1775 பங்கர்க் குன்று சண்டை. ஷெரிடன் எழுதிய 'The Rivals'.

1776 துர்கோவிற்குப் பதிலாக நெக்கர் (Necker) பதவியேற்றல்.
ஆடம் ஸ்மித் (Adam Smith) எழுதிய 'The Wealth of Nations'.
கிப்பன் (Gibbon) எழுதிய 'The Decline and Fall' என்னும் நூலின் முதல் பகுதி வெளிவரல்.

1778 சாத்தம் பிரபு, ரூஸோ (Rousseau), வால்டேர் ஆகியோரின் மறைவு.

1779 டெஸ்சென் (Teschen) சமாதானம்.
ஜான்சன் (Johnson) இயற்றிய 'Lives of the Poets'.

1780 கால்வனியின் (Calvani) மின்சாரக் கண்டுபிடிப்புகள்.
ஹைதர் அலி கர்னாடகத்தைக் கைப்பற்றுதல்.
பென்தாம் (Bentham) இயற்றிய 'Principles of Morals'.

1781 நெக்கர் (Necker) பதவியிலிருந்து நீக்கப்பெறுதல்.
கான்ட் (Kant) எழுதிய 'Critique of Pure Reason'.

1782 சால்பாய் உடன்படிக்கையும் ஹைதர் அலியின் மரணமும்.
திருமதி சிட்டன்ஸ் (Mrs. Siddons) லண்டன் நகரில் தோன்றுதல்.

3. புத்தாக்கம்
1782–1792
(Reconstruction, 1782–1792)

நார்த் பிரபுவின் வீழ்ச்சிக்குப் பிறகு, மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தின் முதற் பாதிக்குள் அவருடைய ஆதிக்கம் மிகுதியாகக் குறைந்தது. அமெரிக்காவுடன் சமாதானம் செய்து கொள்ளுதல், அயர்லாந்துடன் அமைதியாக ஓர் ஏற்பாட்டினைச் செய்துகொள்ளுதல், நாவாய்த் திட்டத்தை அழியாமல் மீட்பதற்காகப் பொருளாதாரச் சீர்திருத்தம் மேற்கொள்ளல், இந்தியாவில் மறுசீராக்கம் செய்தல், உள்நாட்டில் அரசவையினரின் ஆதிக்கத்தை அழிக்கவும், தொழில் சார்ந்த புதிய சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பெற்றுவந்த பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான வேலை இறுதியில் தொடங்கப்பெற்றது.

இத்தகைய பிரர்ச்சினைகளைத் தீர்த்து வைக்கும்போது எழக்கூடிய சிக்கல்களை ஆராய இரு கட்சிகள் இன்னும் தோன்றவில்லை எனலாம். 1782ஆம் ஆண்டில் மன்னருக்கு எதிராக இருந்தது உறுதியற்ற கூட்டிணைப்பே. காபினெட்டின் ஒரு பாதியை ராக்கிங்ஹாமும் பாக்ஸும் கட்டுப்படுத்தினர். மறு பாதியை ஷெல்பர்னும் காம்டனும் கட்டுப்படுத்தினர். முதல் நிலையில் ஃபெட்போர்டு விக்குகளாக இருந்த தர்லோவும் டண்டாசும் முறையே சான்சலராகவும் அட்வகேட் பிரபுவாகவும் (Lord Advocate) தொடர்ந்து பணியாற்றினர். அவர்களுடைய தலைவரான கோவர் தமது மனமார்ந்த ஆதரவினைத் தந்தார். தம்மை 'ஒரு சுயேச்சை விக்கு' என்று அழைத்துக்கொண்ட இளையபிட், காபினெட் அமைச்சர் பதவிக்குக் கீழான எப் பதவியையும் ஏற்க மறுத்தார். ஆனால், அப் பதவியில் அவரை ஏற்றுக்கொள்ளராக்கிங்ஹாம்கள் தயாராக இல்லை.

இருவித நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பெற்றன. கிராட்டன் வெளியிட்டபடி, அயர்லாந்தியக் கோரிக்கைகள் அனைத்தையும் ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டனர். பாய்னிங் சட்டத்தில் அயர்லாந்தை இங்கிலாந்து பிரிவி கவுன்சிலுக்குப் பணியவைக்கும் பகுதி நீக்கப்பெற்றது. அயர்லாந்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இறைமையை நிலைநாட்டும் 1719ஆம் ஆண்டுச் சட்டத்தையும், மேல்முறையாக வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான பிரபுக்கள் சபையின் உரிமையையும் தள்ளுபடி செய்தனர் பிற நடவடிக்கைகளில் அயர்லாந்திற்கான கலகச் சட்டம் குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்கருக்கு மிக்க துன்பம் அளித்த சட்டங்கள் ரத்து செய்யப்பெற்றன. மேலும், ஃபாக்ஸும் பர்க்கும் விழைந்த பொருளாதாரச் சீர்திருத்தங்களில் பெரும்பாலானவை சட்டங்கள் வடிவில் வெளிவந்தன. உதாரணமாக, அரசாங்க காண்ட்ராக்டர்கள் பாராளுமன்ற உறுப்பினராவதைத் தடை செய்யவும், ஆயிரக்கணக்கான காப்புவரி கொள்வோரும், நிதித் துறை அதிகாரிகளும் வாக்குரிமை இழப்பதற்குமான சட்டங்கள் வந்தன. அதே போன்று சட்டங்களின் மூலமாக அரசக் கொடையிலிருந்து நாற்பது இடங்கள் நீக்கப்பெற்றன. ஓய்வூதியப் பட்டியலும், இரகசியப் பணிக்கான நிதியும் குறைக்கப்பெற்றன.

எனினும், நீண்டகாலத்திற்கு அச்சுறுத்துவதாக இருந்த பிளவு ஜூலை மாதத்தில் ராக்கிங்ஹாமின் மரணத்தோடு தொடங்கியது. அவருடைய ஆட்கள் ஷெல்பர்ன் அரசரது அமைச்சராகக் கருதினர். அதே சமயத்தில் பரம்பரைப் பூசலை ஃபாக்ஸ் தொடர்ந்தார். எல்லா முக்கியப் பதவிகளிலும் தங்களுடைய ஆட்களை அமர்த்துவதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. உதாரணமாக, இந்தியாவில் ஹேஸ்டிங்ஸிற்குப் பதிலாகத் தீய சிந்தனையாளரான ஃபிலிப்ஃபிரான்ஸிசைப் பதவியிலமர்த்த எண்ணினர். குறிப்பாகக் கட்சி வெறி கொண்ட பர்க், தமது ஐரிஷ் உறவினரைப் பதவிகளில் நுழைக்கவே முயன்றார். பிரதம மந்திரியை அரசரல்லாமல் காபினெட்டின் பெரும்பான்மையினரே அமர்த்தவேண்டும் என்று கோரிய ஃபாக்ஸ் கும்பல், செல்வாக்கற்ற போர்ட்லண்டு பிரபுவின் தலைமையில்தான் பணியாற்ற முடியுமென்றனர். இதனால் ஃபாக்ஸின் ஆதிக்கம்தான் ஏற்படும். இதனை அரசர் இறுதிவரை எதிர்த்தார். சாதாரணமாகப் பட்டத்து இளவரசர் அரசருக்கு எதிராக வருதல் போலவே, வேல்ஸ் இளவரசர் மூன்றும் ஜார்ஜுக்கு எதிராக இருந்தார். சூதாட்டம், கூடாவொழுக்கம் ஆகியவற்றில் இளவரசரும் பாக்ஸும் இணைபிரியாதவர்களாக இருந்துவந்தனர். இந்தக் காரணத்திற்காகவேனும் ஃபாக்ஸ் பதவிக்கு வருவதை மன்னர்

எதிர்த்தார். ராக்கிங்ஹாமிற்காகப் பிரதமர் பதவியை நான்கு மாதங்களுக்குமுன் விட்டுக்கொடுத்த ஷெல்பர்ன் இப்போது பிரதம மந்திரியானர். கருவூல முதல்தலைவராகப் (Chancellor of the Exchequer) பதவியேற்ற பிட்டுடன் அவர் தம் மைத்துனர்களாகிய டெம்பிளும் வில்லியம் கிரன்வில்லும் காபினெட்டில் இடம் பெற்றனர். அச் சமயத்தில் விக்குத் தலைவர்களான ஃபாக்ஸ், பர்க், போர்ட்லண்டு, காவண்டிஷ், ஷெரிடன் ஆகியோர் பதவியிலிருந்து விலகினர்.

ஷெல்பர்ன் என்பவர் அரசியல் உலகு அதிகமாகக் காண முடியாத அறிவுலக மேதையாக விளங்கியவர். அவரது குடும்பத்தின் வளத்திற்கு வித்திட்ட வில்லியம்பெட்டி என்பவர் பொதுநலக் குடியரசு அரசாங்கத்திலும், முன்னிலை மீட்சிக்குப் பிறகு வந்த அரசாங்கங்களிலும் பொருளாதார ஆலோசகராக இருந்தார். தமது காலத்திய தெளிந்த சிந்தனையாளர் வரிசையில் ஒருவராக இருந்த அவர், தமது வாரிசான பெண்ணை அயர்லாந்தைச் சார்ந்த பிட்ஸ்மாரீஸ்கள் குடும்பத்தில் மணமுடித்திருந்தார். ஷெல்பர்ன் தலைசிறந்தவராக விளங்கினர் என்றால், ஹனோவிரிய அமைச்சர்களில் அற்பமான ஆங்கில மனப்பான்மையைப் பெறுதது காரணம் எனலாம். ஆட்சித்துறை சார்ந்த கூரிய அறிவில் ஷெல்பர்ன் தமது பகைவரை விஞ்சி நின்றார். வாணிப ஆணைக்குழுவில் பெற்ற அனுபவம், சாத்தம் பிரபுவிடம் சீடராக இருந்தது, பிரிஸ்ட்லி, பயனீட்டுக்கொள்கையாளர் இயக்கத்தைத் (Utilitarians) தோற்றுவித்த பென்தாம் (Bentham), பிராங்ளின் போன்ற தலைசிறந்த ஐரோப்பிய அறிஞருடன் கொண்ட நட்பு ஆகியவை ஷெல்பர்னுக்கு அறிவு, கொள்கை, தாராள மனப்பான்மை போன்றவற்றை அளித்தன. ஃபாக்ஸைச் சார்ந்த விக்குகளைப் போலல்லாது அவர் கட்சியை வெறுத்ததோடு, பெருங்குடியினரையும் நம்பவில்லை. பாராளுமன்றச் சீர்திருத்தத்திற்கான மசோதா ஒன்றினை ஏற்கெனவே பிட் கொண்டுவந்தார். பர்க்கைச் சார்ந்த விக்குகளும், நார்த்தின் ஆட்களும் ஒன்றாக இணைந்தே அம் மசோதாவை முறியடித்தனர். ஆயினும், பிட்டின் முயற்சிக்கு மற்றுமொரு வாய்ப்பினை நல்க ஷெல்பர்ன் தயாராக இருந்தார். ஃபாக்ஸ் கும்பலிடமிருந்து எங்கெல்லாம் முரண்பட்டு நின்றாரோ, அங்கெல்லாம் தமது அரசியல் மேதைத் தன்மையில் சிறந்து விளங்கினர். அயர்லாந்தைப் பொறுத்தவரையில் பழைய முறை வீழ்ந்த பிறகு இரு நாடுகளையும் ஒரு வகையில் இணைப்பதற்கான தளை உடனடியாகத் தேவையென்று கருதினர். அமெரிக்காவிற்குச் சுதந்திரம் அளிக்கத் தான் வேண்டுமென்றால் அவ்வாறே செய்திருப்பார். அவ்வாறு

சுதந்திரம் வழங்காததற்குக் காரணம், அவர் முடியுமென்று தாம் கருதிய கூட்டாட்சித் தொடர்பினையோ, அல்லது குறைந்தது நெருங்கிய வாணிப ஒப்பந்தத்தையோ ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்ததுதான். பழைமைப் பண்பாளரான பாக்ஸைப்போலன்றி பிரான்சுடன் நல்ல உறவு கொள்ளமுடியுமென நம்பினர். பிரஷ்யா, ரஷ்யா ஆகியவற்றின்மீதும், ஃபிரான்ஸிற்கு எதிராக எழும் கூட்டில் இணையக்கூடிய நாடுகளின்மீதும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை.

அவரை வீழ்த்துவதற்குக் கருவியாகப் பயன்பட்ட சமாதானத்தை அவர்தம் எதிரிகள் அதைவிடச் சிறந்த முறையில் அமைத்திருக்கமுடியாது. எதிர்பார்த்ததைவிட அதிக நலன்களை அவர் பெற்றுத் தந்தார். டோமினிகாவின் (Dominica) அருகிலிருந்த செயின்ட்ஸ் தீவுகளுக்கருகில் ராட்னி (Rodney) வெற்றி பெற்று (1782ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்) கிராஸ்ஸியின் கடற்படையை அழித்ததும், ஜிப்ரால்டரில் தங்கியிருந்த எலியட், இறுதியாக வந்த தாக்குதலை செப்டம்பர் மாதத்தில் முறியடித்துப் பெருவெற்றி பெற்றதும், மீட்புக் கப்பல்களை ஹோ கொண்டு சென்றதும் ஷெல்பர்னுக்குப் பெருந்துணையாக இருந்தன. ஏனெனில், நமது கடலாதிக்கம் மீட்கப்பட்டதோடு, நாட்டு மக்களிடம் போரிடும் உணர்வும் ஏற்பட்டது. ஆனால், ஷெல்பர்னின் அதிர்ஷ்டமெல்லாம் பகைவரிடையே காணப்பெற்ற பிளவுகளைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதில் அடங்கியிருந்தது. தங்களது கூட்டாளிகளை அமெரிக்கர் சந்தேகித்ததில் நியாயம் உண்டு. மீன்பிடிப்புத் துறைகளிலிருந்து அமெரிக்கரை நீக்கிவிடுவது என்றும், ஸ்பெயினுடன் சேர்ந்து மிஸிஸிபிப் பகுதியைத் தம் கையில் வைத்துக் கொள்வது என்றும் ஃபிரெஞ்சுக்காரர் தீர்மானித்தனர். அதே சமயத்தில் ஜிப்ரால்டரை ஸ்பெயினுக்கு மீட்டுத் தருவதற்காகப் போரை நீடிக்க முடியாது என்பதை ஃபிரெஞ்சுக்காரரின் நிதி நிலையும், அரசியல் தந்திரமும் வெளிப்படுத்தின. ராக்கிற்காகப் பெருத்த ஈட்டுப் பணத்தை ஷெல்பர்ன் ஏற்றுக்கொண்டிருப்பார். ஆனால், பகைவருடைய நீண்ட கோரிக்கைகளை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உதாரணமாக, அமெரிக்கர் கனடா முழுவதையும் கோரினர். ஃபிரெஞ்சுக்காரர் இந்தியாவில் முழு முன்னிலை மீட்சி வேண்டுமென்றனர். நவம்பர் மாதத்தில் அமெரிக்கருடன் அவர் செய்துகொண்ட தனிப்பட்ட உடன்படிக்கை அரசியல் தந்திரத்தின் வெற்றியாக அமைந்தது. இங்ஙனம், 1783ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் போர் நிறுத்த

ஒப்பந்தமாக இருந்தது செப்டம்பரில் வெர்செயில்ஸ் சமாதான உடன்படிக்கையாக வெளிவந்தது.

இந்த உடன்படிக்கையின் மூலமாக அமெரிக்கர் சுதந்திரம் பெற்றனர். 1774-ல் கனடாவிற்கு என்று ஒதுக்கப்பெற்ற ஓஹியோ, மிஸ்ஸிஸிபி ஆறுகளுக்கு இடையிலுள்ள நிலப்பகுதியையும் பெற்றனர். செயின்ட் லாரன்ஸ் வளைகுடாவிலும், நியூபவுண்ட்லண்டு கரைகளிலும் மீன்பிடிக்கும் உரிமை அவர்களுக்குக் கிடைத்தது. அதே சமயத்தில் அவர்களுடைய நாட்டுடை எல்லைபற்றிய சமாதான ஏற்பாடு ஒன்றும் ஏற்பட்டது. அதன்படி வடஎல்லை ஃபண்டி வளைகுடாவிலிருந்து (Bay of Fundy) செயின்ட் லாரன்ஸ் ஆற்றின் வடகரையில் அமைந்த மேட்டு நிலத்தின் வழியாக மேற்கு நோக்கிப் பெரிய ஏரிகளின் வழியாகச் சென்றது. அரசரிடம் பற்றுறுதி கொண்டோரைப் பற்றிய மனக் கசப்பை வளர்த்த சிக்கலைப் பொறுத்தவரையில், பல அமெரிக்க அரசுகள் அத்தகையோரை நேர்மையாக நடத்த முயல்வதாக வாக்குறுதி அளித்தன. இதைத் தவிரப் பயன்படும் வகையில் வேறெதையும் பிரிட்டன் பெற முடியவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளில் டொபாக்கோவைத் (Tobago) தவிர வேறெந்தப் பகுதியையும் ஃபிரெஞ்சுக்காரர் பெறவில்லை. நியூபவுண்ட்லண்டில் சிறிது அதிகமான மீன் பிடிக்கும் உரிமையைப் பெற்றனர். அதனோடு மிகியூலன் (Miquelon), செயின்ட் பையரி (St. Pierre) ஆகிய தீவுகளைத் தங்களிடமே வைத்துக்கொண்டனர். ஆப்பிரிக்காவில் 1763ஆம் ஆண்டில் இழந்த செனிகாலைத் (Senegal) திரும்பப் பெற்றனர். இந்தியாவிலும் அதே ஆண்டில் பெற்றிருந்த கோட்டைகளையும் வணிகக் களங்களையும் மீட்டுக்கொண்டனர். ஸ்பெயின் மைனர்க்காவை மீட்டுக்கொண்டதோடு, பிளாரிடா முழுவதையும் பெற்றது. ஆனால், இறுதியில் ஹாண்டூராஸில் (Honduras) ஆங்கிலேயருடைய உரிமைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. டச்சுக்காரருடன் கொண்ட உரிமைக்கட்டுப்பாடுகளிலிருந்து அவர்கள் தனித்துவிடப்பெற்ற நிலையும், நமது வலிமையும் வெளிப்படுகின்றன. இந்தியாவின் தென்கிழக்குக் கரையில் தலைசிறந்து விளங்கிய துறைமுகமாகிய நாகப் பட்டினத்தை விட்டுக்கொடுக்குமாறு வற்புறுத்தப்பெற்றனர். மேலும், இரண்டு நூற்றாண்டுகளாக அவர்கள் மறுத்துரைத்த கிழக்கிந்தியத் தீவுகளுடன் நமது வாணிப உரிமையினை ஏற்றுக் கொண்டனர்.

ஆனல், காமன்ஸ் சபையினர் பதினறு வாக்குகள் வித்தியாசத்தில் இத்தகைய முன்னேற்பாடுகளைக் கண்டித்ததால், சமாதானத்தைச் செய்துகொண்டவர்கள் 1783ஆம் ஆண்டில் பதவியிலிருந்து வெளியேற்றப்பெற்றனர். ஷெல்பர்னின் பிடிவாதமும் ஒளிவுமறைவும் அவருடைய காபினெட்டை அவமதிப்பதாக இருந்தன. அவர் அரசரின் ஆதரவைப் பெற்றது விக்குகளை இகழ்வதாக இருந்தது. அவரது சீர்திருத்தத் திட்டம் பழைமைப் பண்பாளர்களைப் பயமுறுத்தியது. அதே சமயத்தில் ஃபிரான்ஸிற்கு அளிக்கப்பெற்ற சலுகைகளும், யாவற்றையும்விட அமெரிக்க அரச ஆதரவாளருடைய துன்பங்களும் உரிமைக் கட்டுப்பாடுகளை மக்கள் வெறுக்குமாறு செய்தன. தெளிவான பெரும்பான்மை ஆதரவு பெறுத ஷெல்பர்ன், கூட்டிணைப்பின் மூலமாகத்தான் நிலைமையைச் சமாளிக்க முடியும். ஆனல், அப்போது அவருடன் பணி புரிந்தவர்கள் பிளவுபட்டு நின்றனர். டண்டாஸும், அரசரது நன்பரான ஜெங்கின்சனும் (Jenkinson) நார்த் பிரபுவுடன் கூட்டுச்சேரவேண்டுமென்று ஆலோசனை கூறினர். பிட்டும் கிராஃப்ட்னும் ஃபாக்ஸைப் பதவியில் வைத்துக் கொள்ள முயன்றனர். ஆனல், அவர் மறுபடியும் ஷெல்பர்னுடன் பணிபுரிய மறுத்தார். சில ஆண்டுகளுக்கு முன் கருதியதைப் போல நார்த் பிரபுவுடன் இணைந்து பணிபுரியத் தயாராக இருந்தார். நார்த்தைப் பொறுத்தவரையில் சபை கலையக் கூடுமென்று அஞ்சினர். அதே சமயத்தில் சீர்திருத்தத்தையும், அமெரிக்காவைப் பறிகொடுத்தவரைத் தண்டிக்க வேண்டுமென்பதையும் கோரும் பிட், ஃபாக்ஸ் கூட்டிணைப்பு ஏற்பட்டுவிடுமோ என்னும் அச்சமும் நார்த்திடம் காணப்பெற்றது.

இங்ஙனமாகத் தாம் அரசத் துரோகக் குற்றஞ் சாட்டுவதாக அச்சுறுத்திய நார்த்துடன் ஃபாக்ஸ் கூட்டிணைப்பினை உருவாக்கினர். ஒருபுறம் பர்க்கினலும், மறுபுறம் நார்த்தின் கையாள்களான ஈடன், வெடர்பர்ன் (Wedderburn) ஆகியோரினலும் தூண்டப் பெற்றதால், இத்தகைய செயலில் ஈடுபட்டார். இது அரசருடைய நண்பர்களுக்கும் பகைவர்களுக்குமிடையே ஏற்பட்ட கூட்டிணைப்பாகவும்; அமெரிக்காவுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்பவர்களுக்கும், இறுதிவரை அமெரிக்காவுடன் போராட வேண்டுமென்பவர்களுக்குமிடையே தோன்றிய கூட்டுறவாகவும், அமைந்தது. பதவி ஏற்குமாறு அரசர் வற்புறுத்தியதை பிட் மறுத்ததன் விளைவாகவே இக் கூட்டிணைப்பு ஏற்பட்டது. அவ்வாறு பதவி ஏற்க பிட் மறுத்ததற்குக் காரணம், அவர் நார்த்துடன் எவ்விதத் தொடர்பும் கூடாது எனத் தீர்மானித்ததும், அத்தகைய கூட்டிணைப்பு

நிலைத்து நிற்கக்கூடிய வாய்ப்பு மிகக் குறைவாக இருந்தமையுமே யாகும். அரசரின் கட்டுப்பாட்டிற்குப் பதிலாக, காபினெட் ஆட்சியைக் கொண்டு வருவதற்கும், பொருளாதார பார்லிமென்டு சீர்திருத்தங்களைக் கைவிடுவதற்கும் உரிய அவர்களது உரிமைக் கட்டுப்பாடுகள் அரசரையும் சீர்திருத்தக்காரரையும் ஒருங்கே பகைவர்களாக்கின. அதே சமயத்தில் பொதுமக்களின் கருத்தும் அவர்களுக்கு எதிராக இருந்தது. புதிய பிரதம மந்திரியாக வந்த போர்ட்லண்டு மதிப்பேது மற்றவர். பர்க்கோ உறுதியற்ற உள்ளமும், ஒருதலைச் சார்பும் கொண்ட அமைச்சராக இருந்தார். பாராளுமன்றச் சீர்திருத்தத்திற்காகவும், ஆட்சித்துறையில் தோன்றிய அநீதிகளுக் கெதிராகவும் கொண்டுவரப்பெற்ற பிட்டினுடைய மசோதாக்களைப் புதிதாக வந்த பெரும்பான்மையினர் தள்ளிவிட்டனர். பாராளுமன்றத்தின் அனுமதியுடன் கூடிய 1,00,000 பவுன் வருவாய் வேல்ஸ் இளவரசருக்குக் கிடைக்க வேண்டுமென்ற அருவருக்கத்தக்க தீர்மானம் ஒன்றினை மன்னரே தலையிட்டுத் தடுக்க வேண்டியதாயிற்று.

தவிர்க்கமுடியாத இந்தியப் பிரச்சினைபற்றிய விவாதத்தினை இரண்டாவது அமைச்சர்கள் மேற்கொண்டபோது, தாம் எதிர்பார்த்த வாய்ப்பு பிட்டிற்குக் கிடைத்தது. ஏனெனில், இதுபோது பிரிட்டிஷ் இந்தியாவானது நிலைபெறுவதற்குக்கூட மைசூருடனும் மராத்தியருடனும் கடுமையான போரில் ஈடுபட வேண்டியிருந்தது. ஹேஸ்டிங்ஸிற்கும், அவர்தம் கவுன்சிலர்களுக்குமிடையே இருந்த பூசல் அரசாங்கத்தை ஆற்றலற்றதாகச் செய்தது. மேலும், 'நவாப்கள்' (nabobs) தீய வழிகளில் தேடிய செல்வம் உள்நாட்டில் ஆங்கிலேயரைச் கடுஞ்சினம் கொள்ளச் செய்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய ஆதரவும் கட்டுப்பாடும் வருந்தத்தக்க நிலையில் ஒரு கட்சியுடன் இணைந்திருந்தன. இந் நிலையில் பாராளுமன்றம் தன்னுடைய மேலுரிமையை நிலைநிறுத்துவது அவசியமாயிற்று. ஆனால், ஃபாக்ஸின் இந்திய மசோதாவை ஹேஸ்டிங்ஸிடம் தோல்வியுற்ற ஃபிரான்சிஸுடன் இணைந்த பர்க் வரைந்தார். அதன்படி கம்பெனியின் நிர்வாகத்திற்கென ஏழு கமிஷனர்கள் நியமிக்கப் பெறுதல் வேண்டும். அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கலாம். கம்பெனியின் ஆட்சியும் ஆதரவும் அவர்களிடமே நான்கு ஆண்டுகளுக்கு ஒப்படைக்கப்பெறுதல் வேண்டும். அந்த நிர்வாகிகள் எழுவரும், ஃபாக்ஸ் அல்லது நார்த்தின் ஆதரவாளர்களாக இருந்தனர். இத்தகைய மாறுதல்கள் கம்பெனியின் நிர்வாகத்தைக் கட்சியின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவனவாக இருந்தன. இம் மசோதாவைக் காமன்ஸ்சபை 102 வாக்கு

களினால் நிறைவேற்றியபோதிலும், கம்பெனியும் லண்டன் நகரமும் பட்டயமாகப் பெற்ற உரிமைகளைக் காப்பதற்கென்று ஒரு கிளர்ச்சியைத் தூண்டின. அரசரின் ஆலோசகர்களான தர்லோவும் டெம்பிளும் பிரபுக்களைத் தமது பக்கம் இழுப்பதன் மூலமாக அம் மசோதாவைப் பிரபுக்கள் சபையில் தள்ளிவிடலாம் என்று யோசனை கூறினர். பிட்டும் டண்டாசும் காபினெட்டை அமைக்க ஆயத்தமாக நின்றனர். டிசம்பர் மாதத்தில் இந்தப் 'பாராளுமன்றம் முரணானதும் கவிழ்க்கும் தன்மை கொண்டதுமான' மசோதாவை ஆதரிக்கும் எவரையும் அரசர் நண்பராகக் கருத மாட்டார் என பிரபுக்களிடையே அறிவிக்குமாறு டெம்பிளுக்கு அதிகாரம் வழங்கப்பெற்றது. மேலும், இந்தியா அலுவலகமும் (India House), கோவரும் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தினர். பல பிரபுக்கள் ஃபாக்ஸைக் கைவிட்டனர். அவருடைய மசோதாவைப் பிரபுக்கள் சபை 19 வாக்குகளில் தோற்கடித்தது.

அதுபோது கையாளப்பெற்ற முறைகள் அந் நாளைச் சேர்ந்தவை அல்லது வால்போலின் காலத்தவை. உதாரணமாக, பிட்டினுடைய மைத்துனரான டெம்பிள் அரசரைத் தூண்டினரென்றும், வாக்களிப்பதற்காக வேல்ஸ் இளவரசரைப் ஃபாக்ஸ் கொண்டுவந்தார். ஆயின், இந்த நெருக்கடி அரை நூற்றாண்டுக் காலத்திற்கு அரசியலின் எதிர்காலத்தை நிர்ணயித்தது. நார்த்தை நீக்கிவிட்டு, மசோதாவைத் திருத்துவதனால், தாம் ஃபாக்ஸுடன் இணைந்து வேலை செய்வதாக பிட் கூறினார். ஆனால், முதற்படியாக வந்த இந்த விண்ணப்பம் உடனடியாகப் புறக்கணிக்கப்பெற்றது. இரண்டாம் முறையாக பிட் மேற் கொண்ட முயற்சியும் தோல்வியுற்றது. ஏனெனில், அவருடைய தந்தையின் ஆதரவாளர்களான கிராஃப்டனும் (Grafton), காம்டனும் (Camden) அவருடன் பணிபுரிய மறுத்தனர். டெம்பிள் அச்சங்கொண்டு பதவியை விட்டு விலகினார். இத்தகைய நம்பிக்கை இழந்த தருணத்தில் நெருக்கடிகால காபினெட் ஒன்றை பிட் அமைத்தார். பெட்ஃபோர்டைச் சார்ந்த விக்குகளும், நார்த்தைத் துறந்தவர்களும், தர்லோவும், கோவரும், கடலோடியான ஹோவும் (Howe), தீவிரவாதியான ரிச்மாண்ட் பிரபுவும், பிட்டின் சில இளைய நண்பர்களும் பதவியேற்றனர். அதில் டண்டாஸும் பிட்டுமே திறமை வாய்ந்த காமன்ஸ் சபையினர். இத்தகைய நலிவுற்ற கட்சியைக் கொண்டே 1783-4ஆம் ஆண்டு மாரிக் காலம் முழுவதும் பகை மிகுந்த பெரும்பான்மையினரைப் பிட் எதிர்த்து வந்தார்.

இந்த நெருக்கடியினால் முன்னேற்றம் தோன்றியது என்றாலும், அரசியல் சட்டம் சார்ந்த நிலை ஜனநாயகத்திற்கு வெகு

தொலைவில் இருந்தது. காமன்ஸ் சபையில் பெரும்பான்மையினரே முதலுரிமை கொண்டவர் என்றும், அவர்களே அமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கருத்துக்கொண்ட ஃபாக்ஸின் எண்ணத்தை ஏற்றுக்கொள்வார் யாருமில்லை. இக்கருத்தோடு காரண காரியத் தொடர்புடைய வாக்காளரிடமே மேல்முறையாக எடுத்துச் செல்லவேண்டும் என்பதை ஃபாக்ஸே ஏற்க மறுத்தார். விதிவிலக்கான 1715ஆம் ஆண்டைத் தவிர எக் காலத்திலும் இல்லாத முறையில் பாராளுமன்றம் கலைக்கப் பெற்றது. ஃபாக்ஸ் இவ்வாறு செய்ததன் நோக்கம் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை மன்னருக்கு மறுப்பது என்பதோடு, பிட்டைப் பதவியிலிருந்து வெளியேற்ற வற்புறுத்துவதுமாகும். ஆனால், ஃபாக்ஸின் செயல் அவரது எதிரிகளுக்குச் சாதகமாக அமைந்தது. 1761 முதல் 1763 வரையிலும் அல்லது 1768 முதல் 1770 வரையிலும் நேர்ந்ததைப் போலவே மறுபடியும் காமன்ஸ் சபையினரில் பெரும்பாலோர் பதவிவகித்த அமைச்சர்கள் பக்கமே திரும்பினர். சிறிது காலமும், போதுமான பணமும் இருந்தால் எண்பது ஸ்தானங்களைப் பெறலாம் என்று ஒருகாலத்தில் நார்த்தின் தேர்தல் நிபுணராக இருந்த ஜான் ராபின்சன் (John Robinson) என்பார் பிட்டிடம் ஆலோசனை கூறினர்.

நன்றி நவிலும் கூட்டங்களிலிருந்து மக்களின் மனமாற்றம் நன்கு வெளிப்பட்டது. ஃபாக்ஸும் பிட்டும் சேர்ந்த கூட்டணியை ஏற்க மறுத்த விக்கினர்மீது சுயேச்சை உறுப்பினர் கடுஞ்சினங் கொண்டனர். அவர்களுடைய அரசியல் சட்டம் சார்ந்த கொள்கையின் அடிப்படையில் அரசரது அமைச்சர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பெறுதல் வேண்டுமென்று வாதிட்டனர். இங்ஙனம் 1784ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் பாராளுமன்றத்தை இறுதியாக பிட் கலைத்தார். அதன் பிறகு அவர் பெற்ற பெருவெற்றிக்கு அரசரின் பணத்தைவிட மக்களின் ஆதரவே முக்கிய காரணமாக இருந்தது. ஈடன் (Eden), நார்போக்கின் கோக் போன்ற தலைவர்கள் உள்பட ஃபாக்ஸின் கட்சியைச் சேர்ந்த எழுபது உறுப்பினர் தங்கள் ஸ்தானங்களை இழந்தனர். ஃபாக்ஸிற்கும், இந்தியாவின் 'ஏழு அரசர்களுக்கும்' எதிரான தாக்குறுதி பொதுவாக மக்களிடம் காணப்பெற்றது. பிட்டினுடைய பெயரையடுத்து, சன்னி தலைக்கேறியது போன்ற நிலையையும் காணமுடிந்தது. இந் நிலை வாணிபத்தொழில் உலகைச் சார்ந்தவர்களிடமும், யார்க்ஷயர்; மிடில்செக்ஸ் போன்ற பகுதிகளில் வாழ்ந்த சீர்திருத்தக்காரரிடமும் காணப்பெற்றது. ஆனால்,

அரசரின் செல்வாக்கும், பொது மக்களின் கருத்தும் தற்செயலாக ஒன்றுகவே இருந்தன என்று சொன்னால், அந் நிலை நீண்ட காலத்திற்கு நிலைப்பதற்கில்லை.

பிட்டின் முதல் அரசாங்கம் பதினேழு ஆண்டுகள் நீடித்திருந்தது. அவருக்கும் ஃபாக்ஸுக்கும் இடையே தோன்றிய போட்டி 1806ஆம் ஆண்டில் அவர்களுடைய மரணத்தோடு ஓய்ந்தது. தற்கால அரசியல் கட்சிகளுக்கு அடிகோலுவதற்கென்று இரு தலைவர்களைப் பெற்றது பிரிட்டனின் பாக்கியமே. அவர்களுடைய பகைமைப் போட்டியின் சாயல் வரலாற்றில் காணக் கூடிய ஒன்றாகும். அவர்கள் இருவருமே அமெரிக்கப்போரை வெறுத்தனர். பாராளுமன்றச் சீர்திருத்தத்தில் நம்பிக்கைகொண்டனர்; ஐரிஷ் கத்தோலிக்கருக்குச் சலுகைகள் வழங்கி, அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்றனர். அடிமை வாணிபத்தை அறவே வெறுத்தனர். இத்துணை ஒற்றுமை இருந்தும் அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து வேலை செய்யாதது ஊழ்வினைப் பயனேயாகும். ஆனால், ஃபிரெஞ்சுப் புரட்சியினால் தோன்றிய நெருக்கடி காலம் முழுவதிலும் பதவியிலிருக்கின்ற சீர்திருத்தவாதிக்கும், எதிர்க்கட்சியில் இருக்கின்ற சீர்திருத்தவாதிக்குமிடையே உள்ள வேற்றுமை இந்த இருவருக்குமிடையே இருந்துவந்தது. அதனோடு மனப்பாங்கிலும், இயற்கைத் திறங்களிலும் அவர்கள் மாறுபட்டு நின்றனர். அவர்களுடைய தந்தையரும் அரசியலிலும் குணநலத்திலும் முரண்பட்டு இருந்தனர். அவ்வாறு வாழ்ந்தவர்கள் தங்களது பேரன் பிற்குப் பாத்திரமான மக்களை வெவ்வேறான முறையில் வளர்த்தனர். தமது தந்தையாரின் அன்பைப் பெற்றிருந்தவரை, தாம் விரும்பியதையெல்லாம் ஃபாக்ஸ் பெற்றார். தமக்குச் சொந்தமான செல்வத்தையும் பிறருடைய செல்வத்தையும் செலவழித்தார். குடிப்பது, சூதாடுவது போன்ற பழக்கங்களைக் கொண்டிருந்தார். ஆனால், உயர்ந்த, உள்ளார்ந்த ஒழுக்க உணர்வு கொண்டவராகப் பிட் வளர்ந்தார். தம்முடைய ஒழுக்கத்திலும், 'உரிமை வேட்கையிலும்' நேர்மையான செருக்குக் கொண்டிருந்தார். ஆரவாரமான இன்பங்களை வெறுத்துக் கடுமையாக உழைத்தார். அகமகிழ்வு கொண்டோரிடம் அன்பு பாராட்டாத பிட், வில்பர்போர்ஸ் போன்ற ஒருசில இலட்சியவாதிகளுடனும், டண்டாஸ் போன்ற நெருங்கிய உடன்பணியாளருடனும் உறவினராகிய கிரன்வில்களுடனும், கானிங் (Canning) போன்ற இளஞ் சீடர்களிடமும் அவர் நட்புடன் பழகினார். ஃபாக்ஸ், வேல்ஸ் இளவரசர், ஷெரிடன், எண்ணிறந்த மங்கையர், ஏராளமான நண்பர்கள் எனப் பலரிடம் நெருங்கிப் பழகினர். உழைப்பு, எதிர்

நோக்குதல், நம்பிக்கை வைத்தல் ஆகியவை பிட்டிடம் காணப் பெற்ற அதே சயத்தில் அன்பு செலுத்துதல், அருவருப்புக் கொள்ளுதல், ஆயாசமடைதல் ஆகியவை ஃபாக்ஸிடம் அடுத் தடுத்துத் தோன்றின. நகைச்சுவை, உயிர்ச்சக்தி, கவர்ச்சியான பண்புகள் ஆகியவையே ஒருவர் தலைவராக வருவதற்குப் போதுமானால், வெற்றி பெறும் வாய்ப்பு நிச்சயமாக ஃபாக்ஸிற் குத்தான் அதிகமிருந்தது. ஒருவர் எப்போதும் 'சார்லஸாகவே' இருந்தார். மற்றவர் 'திருவாளர் பிட்டானர்' (Mr. Pit). பிட்டிடம் காணப்பெற்ற உணர்ச்சியற்ற கிரன்வில் போக்கைவிட, கிராட் டன் (Grattan) குறிப்பிட்ட ஃபாக்ஸின் 'கவனியாதிருந்த மேன்மை' பலருடைய உள்ளங்களைக் கவர்ந்தது.

இருவருமே சிறந்த நாவன்மை படைத்தவர்கள். அக் கலையில் என்றுமே தோல்வி காணுத பிட் சில சமயங்களில் எட்டமுடியாத உயர் நிலைக்குச் சென்றார். ஆனால், ஆண்டுகள் செல்லச்செல்ல பல சமயங்களில் அவரது பேச்சுத் தகுதியானதாக இருந்த போதிலும், இயந்திரமயமாகவும் சலிப்பூட்டுவதாகவும் மாறியது. மேம்பாடு கொண்டதாகவும் வலிமையுடையதாகவும் இருந்த ஃபாக்ஸின் பேச்சு, பல சமயங்களில் அறிவிற்குப் புறம்பானதாக இருந்தபோதிலும் எப்போதும் சிறந்து விளங்கியது. நீண்ட காலத்திற்குப் பதவியிலிருந்து ஃபாக்ஸ் விலக்கப்பெற்றது ஏதோ தற்செயல் நிகழ்ச்சியன்று. நார்த்துடன் கூட்டாக இணைந்தது, 1788-ல் இளவரசரைக் கட்டுப்பாடற்ற பாதுகாப்பாளராகச் செய்யவேண்டுமென்று ஆர்வம் காட்டியது ஆகிய தவறுகள் அவருடைய சிறப்பியல்புகளைப்போலவே பெரியவை. அவர் இகழார்ந்த வகையில் ஒருதலைச் சார்பானவராக இருந்தார். நெஞ்சங்கவர் பிரிட்டிஷ் உரிமைகளுக்காகத் திட்டமொன்றைத் தெளிவாகக் கண்டு அதனை உறுதியுடன் காப்பதில்தான் அவரது சக்தி அடங்கி இருந்தது. ஆனால், சில சமயங்களில் அவர் வேறெதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. அமெரிக்கர் கொண்ட வெற்றியில் மகிழ்ச்சி கொண்டு, தேசிய உணர்விற்கு ஒரு முறை ஊறு செய்த அவர் ஃபிரெஞ்சுத் தோல்விகளுக்காகத் துயர்கொண்டு மறுமுறையும் அவமதிப்பதுபோல் நடந்துகொண் டார். பிட்டிடம் மிகுதியாகக் காணப்பெற்ற பொருளாதார அறிவு ஃபாக்ஸிடம் சிறிதும் இல்லை. உண்மையில் சில முக்கிய மான பிரச்சினைகளில் ஃபாக்ஸ் பிற்போக்குவாதியாக இருந்தார் என்றால் பிட் முற்போக்குவாதியாக விளங்கினர்.

இத்தகையோரைப் பற்றிய தீர்ப்பு வழங்கும்போது, அவர்கள் தற்கால அமைச்சர்களைப்போன்று திட்டமான செயலுரிமை

அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்பதையும் நாம் மறந்துவிடுதல் கூடாது. பர்க்கினுடைய சீர்திருத்தங்களும் புதுப்பணக்காரரின் போட்டியும் அரசருடைய செல்வாக்கைக் குறைத்தன. இங்ஙனம் 1760ஆம் ஆண்டில் இருந்த பதவியாளர்களில் பாதி எண்ணிக்கையினர்கூட 1800ஆம் ஆண்டில் இல்லை. ஆனால், அரசர் அதிகாரமற்ற பொம்மைத் தலைவராக இல்லை. குறிப்பாகப் பெருங்குடி மக்கள் அத்தகைய நிலையிலில்லை. இந்த உண்மையை வலியுறுத்த ஓர் உதாரணம் போதும். 1738ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினரின் பெரும்பான்மைக் கட்சியை ஆராய்ந்தபோது, அதில் 52 பிட்டினரும் (Pittites), 15 கிழக்கிந்தியரும், 10 ஸ்காட்டியரும், 9 ஷெல்போர்ன் ஆதரவாளர்களும், 9 லோன்ஸ்டேல் (Lonsdale) ஆதரவாளர்களும், 108 சுயேச்சையினரும், 185 'அரசகட்சியினரும்' இருந்தனர் என்று பிட்டின் செயலர் பகுத்துக் காட்டினர். இறுதியில் குறிப்பிடப்பெற்றவர்கள்தாம் 1801-ல் கத்தோலிக்கர் விடுதலையை மறுத்து, பிட்டிற்கு எதிராக இருந்த அரசரை ஆதரித்தனர்.

இங்ஙனம் ஃபிரெஞ்சுப் புரட்சியினால் பிட் இரண்டாவது டோரிக்கட்சியை நிறுவியவராக விளங்கியபோதிலும், அவர் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அல்லர். அவர் டோரியாக இருந்ததுமில்லை. விரைவிலேயே வயதான காம்டனே மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டார். கிராஃப்டனே திரும்பக் கொண்டுவரவும் நேர்மையான விக்கு ஆட்சிப் பொறுப்பாளரான கார்ன்வாலிஸிற்கு இந்தியாவிலும் அயர்லாந்திலும் அடுத்தடுத்துப் பதவி அளிக்கவும் முயன்றார். அவரது இறுதியாண்டுகளில் ஃபாக்ஸுடன் ஆன கூட்டிணைப்பு அரசாங்கத்தை அமைக்க அனுமதியளிக்கவேண்டுமென்று அரசரிடம் இருமுறை முயன்று பார்த்தார். இங்ஙனம் அவர் நிறுவிய கட்சி முழுமையான வளர்ச்சி பெறவில்லை. கானிங்போன்ற பிட்வகை தாராள வாதிகள், அரசர்களுடைய நண்பர்களேப்போன்ற பழைமைப்பண்பாளர் அல்லது வலதுசாரி விக்குகள் ஆகியோரிடையே அது எப்போதும் பிளவுபட்டு நின்றது. இறுதியாக அது 1827ஆம் ஆண்டில் இரண்டாகப் பிரிந்தது.

குறைபாடுகள் பல கொண்டது என்றபோதிலும், பிட்டின் மந்திரிசபை முதலாவது மந்திரிசபையாக விளங்கியது. அவர் பதவிக்கு வந்தவுடன் இழிந்த ஊழல்களுக்குமட்டும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை; ஆண்டொன்றுக்கு 3,000 பவுன் வருமானம் உள்ள பெல்ஸ் (Pells) கணக்கர் வேலையையும் பிட் ஏற்க மறுத்தார்.

அதே வேலையை அவருக்குப் பின் பதவி வகித்த அட்டிங்டன் என் பவர் தமது மகனுக்கென ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், பிட் அரசாங்கக் கடன்களைத் தமது அரசியல் நண்பர்கள் மூலமாகக் கொள்ளாது, பொது டெண்டருக்கு (tender) விட்டார். இங்ஙனம் செய்தவரே பிரதம மந்திரியின் பாகத்தை உருவாக்கியவராவார். தீவிர மூலைக்கோளாறு முதன்முறையாக அரசரைப் பீடித்ததிலிருந்து அரசருடைய செயற்பாடு குறைந்தது. மேலும், ஃபாக்ஸிற்கும் இளவரசருக்கும் எதிராக அரசருக்குற்ற ஒரே துணையாக விளங்கியவர் பிட். அதனல் கட்சி அடிப்படையில் இல்லாவிட்டாலும், காபினெட்டானது தலைவரின்கீழ்க் கட்டுப் பாடாகப் பணியாற்றியது. பிட்டிடம் பற்றுறுதி கொண்டவரான அவர்தம் சகோதரர் சாத்தம் கடற்படைத் தலைமைப் பொறுப் பேற்றார். ஸ்காட்லாந்தின் நிர்வாகியாகவும், கடற்படை நிதியாள ராகவும், திட்ப உறுதியாக இந்தியாவை ஆட்சி புரிபவராகவும், இறுதியாக, பிட்டின் உறவினருமான கிரன்வில் லீட்ஸின் வாரி சாக வெளிநாட்டு உறவுத் துறையில் பதவியேற்று, 1792-ல் பிரபுக்கள் சபையின் தலைவராக வந்தபோது, உள்துறைச் செயல ராகவும் பணியாற்றிய டண்டாஸ் காமன்ஸ் சபையில் பிட்டின் வலக்கை போன்று விளங்கினர். நீண்டகாலமாகப் பற்றுறுதி அற்றவராக இருந்தார் என அரசருக்குச் சிறிது எச்சரிக்கை விடுத்து, பிறகு சான்சலரான தர்லோவைப் பதவியிலிருந்து பிட் நீக்கினர். பிற பதவிகளை வழங்கியபோது கட்சி அடிப்படையில் இல்லாது பதவிக்கு வருவோரின் தகுதி அல்லது நடை முறைக்கு ஒத்துவருதல் ஆகியவற்றின் அடிப்படையில் செயலாற் றினர். அவரது நண்பரான வெல்லெஸ்லி கருவூலத்திலிருந்து இந்தியாவின் கவர்னர்ஜெனரல் பதவி ஏற்றுச் சென்றார். திருத்தியமைக்கப்பெற்ற வாணிப நிர்வாக சபையின் தலைவராக, அரசரின் நண்பரான ஜெங்கின்சன் என்பவரைப் பிட் அமர்த் தினர். பிற்காலத்தில் முதல் லிவர்பூல் பிரபுவாக வந்த ஜெங்கின் சன் பொருளாதாரத் துறையில் வல்லவராக விளங்கினர். முதலில் நார்த்தின் ஆதரவாளராக இருந்தவரும், பின்னாளில் ஆக்லண்டு பிரபு எனப் பட்டம் பெற்றவரும், சுயநலம் மிகுந்து, ஆனல், அறிவுக் கூர்மையுடையவருமான ஈடன் வாணிப ஒப்பந்தங்களைப் பேசி முடிக்கப் பயன்பட்டார்.

பிட்டினுடைய அதிகாரம் காமன்ஸ் சபையைச் சார்ந் திருந்தது. அவர் தமது முதல் மந்திரி சபையிலேயே 77 ஐரிஷ் பிரபுக்களுக்கு மேலும் 95 புதிய பிரபுக்களை நியமித்ததால் பெருங் குடியினர் பெருஞ் சீற்றமடைந்தனர். புதிதாகப் பிரபுக்களாக நியமிக்கப்பெற்றவர்களில் சிலர் பிட்டிற்கு ஆதரவு தந்தனர்.

அவர்கள் வாணிப, தொழில் துறைகளைச் சேர்ந்தவர்கள். உதாரணத்திற்கு பாங்கரான இராபர்ட்ஸ்மித்தைக் குறிப்பிடலாம். சீர்திருத்தம், தொழில் வளம், கொடை ஆகியவற்றால் தோன்றிய புதிய இங்கிலாந்து, போர் தொடங்கும் வரையிலும் பிட்டினருக்கே ஓட்டளித்தது. வில்பர்போர்ஸ், பேங்ஸ் (Bankes) போன்ற பிட்டின் நண்பர்களின் தலைமையில் இருந்த 'புனிதர்களும்' (Saints), கிளாப்ஹாமைச் (Clapham) சார்ந்த தார்ன்டன்கள் (Thorntons) போன்ற எவாஞ்சலிகர்களும் அவர்களுள் அடங்குவர்.

மேலும், தற்கால ஆட்சிமுறை பிட்டிடமிருந்து வந்தது எனலாம். அவர் முன்னுக்குக் கொண்டுவந்த இளைஞர்களான கானிங், ஹஸ்கிஸ்ஸன், இரண்டாம் ஜெங்கின்சன் போன்றவர்களின் மூலமாக அந்த ஆட்சிமுறை பீலுக்கும் (Peel), அவர்தம் சீடரான கிளாஸ்டனுக்கும் (Glastone) கிடைத்தது. ஷெல்பர்னின் உதாரணத்தைப் பின்பற்றிய பிட், அரசாங்கத் துறை ஒவ்வொன்றிலும் விசாரணைக் குழுக்களை நியமித்தார். கட்டணங்களுக்குப் பதிலாகச் சம்பளம் அளித்தார். விக்கு அரசியல் வாதிகளின் வாழ்வை ஆனந்தமயமாக்கிய, முடிவற்ற ஊதியம் மிகுந்த, பயனற்ற பதவிகளை ஒழித்தார். லண்டன் நகர மாஜிஸ்ட்ரேட்டுகள் நோய்களை எதிர்த்துக் காப்பீடு செய்யும் சங்கங்கள், விவசாயச் செயலாண்மைக் குழு போன்ற இக்கால அரசியல் அமைப்புகள் பிட்டிற்கும், ஜெங்கின்சன் அல்லது ஜார்ஜ் போன்ற அவரது அதிகாரிகளுக்கும் கடமைப்பட்டவையாகும். எல்லாவற்றைக் காட்டிலும் அவர் தொடர்ந்து சமர்ப்பித்த பதினெட்டு வரவு செலவுத் திட்டங்கள் பொதுநிதித்துறையில் புரட்சியைத் தோற்றுவித்தன.

பிட் பதவிக்கு வந்தபோது பொது நிதியில் முதலீடு செய்யப் பெற்ற கடன் 238 மில்லியன் பவுனாகும். அநேகமாக அவை முழுதும் மூன்று சதவீத வட்டி கொண்ட கன்சோல்களாக (consols) இருந்தன. அவைகளின் விலை 54 ஆகச் சரிந்தது. வட்டியோ வருமானத்தில் முக்கால் பகுதியை விழுங்கியது. அமெரிக்காவை இழந்ததனால் வாணிபம் சீர்குலைந்தது; காலத்திற் கொவ்வாத காப்புவரித் திட்டம் இருந்தது; ஒருவகையான சாமான்கள் பத்துவகையான வீதவரி அளிக்கவேண்டுமளவிற்கு சிக்கல் மிகுந்ததாக இருந்தது. அதிகமான வரிகளினால் (தேயிலையின்மீது சராசரியில் 119 சதவீதம் வரி விதிக்கப்பெற்றது) வாணிபம் தடுமாறியது. அதனால், கள்ளக்கடத்தல் ஆயுதம் தாங்கிச் செய்யும் வலிமை மிக்க தொழிலாக இருந்தது. நிர்ண

யிக்கப்பெற்ற வரிகளைக் கொள்ளும் அரசியல் அமைப்புக் குழப்பம் மிகுந்ததாக இருந்தது. மேலும், ஒவ்வொரு பிரதான அலுவல் துறையும் தனித்தனிக் கருவூலத்தைக் கொண்டிருந்தது. இவற்றை யெல்லாம் மரபுரிமையாகப் பெற்ருர் பிட். புரட்சியும் போரும் தமது வேலையில் குறுக்கிடுவதற்கு முன் அவர் கன்சோல்களின் மதிப்பை 90 ஆக மீட்டுத் தந்தார். வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை உயர்த்தினர். கப்பற் படையைத் திருத்தி வலிவடையச் செய்தபோதிலும் கடனில் 11 மில்லியன் பவுனைத் திருப்பித் தந்தார். அவர் பிற்காலச் சீர்திருத்தங்களுக்கான அடிக்கல்லை நாட்டினர்.

கிளாஸ்கோ நகரைச் சார்ந்த அறிவுநலஞ்சான்ற பேராசிரியரான ஆடம்ஸ்மித், தமது 'தேசங்களின் செல்வம்' (Wealth of Nations) எனும் நூலில் உரிமையே வளத்திற்கு வழி எனக் கண்டார். அன்னருக்குத் தாம் கடமைப்பட்டிருப்பதாக பிட் ஒப்புக் கொண்டார். இறக்குமதி வரியைக் குறைத்தும், வால்போல் எண்ணியதைப் போல் காப்புவரியை மதுவகைக்கும், புகையிலைக்கும், வேறு பல பொருள்களுக்கும் விரிவுபடுத்தினர். காப்புவரித் திட்டத்தைப் புதுமையாக்குவதற்காக 1789ஆம் ஆண்டில் மட்டும் 2,500 தீர்மானங்களைக் கொண்டுவந்தார். அதுவரையில் இருந்த அரசாங்கம் எதுவும் வருமானவரி போன்ற கடுமுறைமை வாய்ந்த எதையும் கருத்தில் கொள்ளாத நிலையில், பிட், நேர்முக வரி விதிப்பிற்காக நிலவரியையும், வேலைக்காரர், வண்டிகள், குதிரைகள் போன்ற சில செலவினங்களின் மீதான வரிகளையும் நம்பியிருக்க வேண்டியிருந்தது. அவைகளை 'மதிப்பீடு செய்யப்பெற்ற வரிகள்' (assessed taxes) என்ற ஒரு துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்தார். சாளர வரியிலிருந்து தப்புவதற்காக சாளரங்களின் எண்ணிக்கையை ஏழுக்கும் குறைவாகக் கொண்டுவர வேண்டுமென்ற மக்களின் முயற்சிக்கு, இன்றும் அடைபட்டுக் கிடக்கும் சாளரங்கள் சான்றாக அமைகின்றன. இணைப்பு நிதியைத் (Consolidated Fund) தோற்றுவித்துத் தற்கால வரவு செலவுத் திட்ட முறையை பிட் வகுத்தார். நிரந்தரமான வரிகள் அந் நிதியில் சேர்க்கப்பெற்றன. நாட்டுக்கடனுக்கான வட்டி, அரசரின் செலவுப்பட்டியல் ஆகிய நிரந்தரமான செலவினங்களுக்கு அதிலிருந்தே நிதி அளிக்கப்பெற்றது. கணக்குகளை முழுத் தணிக்கை செய்வதற்கான ஆரம்பம் பிட்டினால் தோற்றுவிக்கப் பெற்றது. பின்னாளில் உரிமைபெற்ற உயர் அதிகாரியாகிய காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் என்னும் தலைமைத் தணிக்கையாளரிடம் கணக்குகள் ஒப்படைக்கப்பெற்றன.

நம்பிக்கையை மீட்பதற்காகப் பொதுக்கடன் குறைய வேண்டுமென்பது பொது மக்களின் கருத்தாகும். அதனால், 1786ஆம் ஆண்டில் கடன் தீர்க்க உதவும் நிதி ஒன்றை பிட் ஏற்படுத்தினார். வால்போல் செய்ததைப்போல் அந் நிதியைக் கொள்ளையிடாத வாறு செய்யவேண்டிய பாதுகாப்புகளை ஏற்படுத்தினர். ஆண்டுதோறும் பாராளுமன்றம் அளிக்கும் பணத்தில் ஒரு மில்லியன் பவுன்களை உரிமை பெற்ற உயர் ஆணையாளர் குழு ஒன்று அரசாங்க இருப்புகளில் முதலீடு செய்ய வேண்டும். கிடைக்கின்ற வருவாயை மீண்டும் மீண்டும் முதலீடு செய்து, நான்கு மில்லியன் பவுன் கிடைக்கும் வரையில் அந்த அரசாங்க இருப்பினை வைத்திருக்கவேண்டும். அதன் பிறகு விலைக்கு வாங்கிய கடன்களையெல்லாம் அடைத்துவிடவேண்டும். போர்க் காரணமாக நிறையக் கடன் கொள்ளவேண்டிய அவசியம் நேர்ந்ததால் இத்தகைய நம்பிக்கைக் கோட்பாடு குலைந்தது என்றாலும், பிட்டினுடைய கடன் தீர்க்க உதவும் நிதி ஒரு மருட்சியே எனக் கொள்வது தவறாகும். அந்தக் கொள்கையே நாணயக் கடனுக்குக் கிடைத்த நயமான வழியாகும். மேலும், 1813ஆம் ஆண்டில் 238 மில்லியன் பவுன் கடன் அடைக்கப்பெற்றது.

புதிய கோட்பாடு கொண்ட நிதியமைச்சர்களில் முதல்வராக விளங்கும் பிட், கட்டுப்பாடுகள் குறைந்த அங்காடிகள் மூலமாக வளத்தினை மீட்க முற்பட்டார். ஷெல்பர்ன் மந்திரி சபையில் அவர் கருவூலத் தலைவராக இருந்தபோது, பிரிட்டிஷ் குடியேற்றங்களாக இருந்தபோது அமெரிக்கர் பெற்றிருந்த சலுகைகள் அனைத்தையும் வழங்கும் மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். ஆனால், நாவாய் நலன்கள் அதனை எதிர்த்தன. போர்ட்லண்டின் அரசாங்கம் அமெரிக்கக் கப்பல்களைக் கானடாவிலிருந்தும் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் விலக்கியது. மேலும், வேறு சில பூசல்களினால் பிரிட்டிஷ் அமெரிக்க உறவுகளில் பகைமை வளர்ந்தது. உதாரணமாக, அமெரிக்கர் அரச ஆதரவாளருக்குத் தடைகள் விதித்தனர். கடனைத் திருப்பிக் கொடுக்காததால் ஏரிகளுக்குத் தெற்கிலுள்ள கோட்டைகளைக் காலி செய்ய பிரிட்டிஷார் மறுத்தனர். கனடியர் இந்தியரைத் தூண்டிவிட்டனர். இறக்குமதியாகும் பொருள்களில் 90 சதவீதத்தினை இங்கிலாந்திலிருந்தே பெற்று, நமது வாடிக்கை நாடுகளில் சிறந்த ஒன்றாக அமெரிக்கா விளங்கியது. ஃபிரெஞ்சுப் போர் நெருக்கியதால்தான் பிரிட்டிஷார் அத்தகைய நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தீர்மானித்தனர். இங்ஙனம் தலைமை நீதிபதியான ஜே (Jay) என்பவர் கிரன்வில்லுடன் பேசி முடித்த உடன்படிக்கை 1794-ல் கையெழுத்தாயிற்று. அது சாதாரணமாக ஜேயின் பெயராலேயே

அழைக்கப்படுகின்றது. ஆயின், அது அமெரிக்காவில் அதிக வெறுப்பிற்குள்ளாகியது. இறுதியில் டெட்ராய்ட் என்னுமிடத்தையும், விவாதத்திற்குரிய பிற கோட்டைகளையும் பிரிட்டிஷார் விட்டுக்கொடுத்தபோதிலும், இரு நாட்டு உயர் ஆணைக் குழுக்களும் இணைந்து எல்லைகளைச் சீராக வகுத்தபோதிலும், அந்த உடன்படிக்கை அமெரிக்கக் கப்பல்களை கானடாவிலிருந்தும் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் விலக்கியே வைத்தது. இதை விடப் பெரிய பிரச்சினையாகக் கடலில் நடுநிலை நாட்டு உரிமைகள் போர்மூலம் பெறவேண்டியவையாக விடப்பெற்றன.

ஃபாக்ஸ் கட்சியினரால் தூண்டப்பெற்ற குழு நலன்கள், பிட்டின் நிதி சார்ந்த நடவடிக்கைகளிற் பலவற்றைப் பயனற்றவையாக்கின. ஒரு குவார்ட்டர் தானியத்தின் விலை 50 ஷில்லிங்கிற்குக் குறைந்தால் இறக்குமதியைத் தடைசெய்வதாக இருந்த பிட்டினுடைய 1791ஆம் ஆண்டு தானியச் சட்டம், போதுமான பாதுகாப்பு அளிக்கவில்லை என விக்குக் கட்சியினரால் குறை கூறப்பட்டது. மேலும், அவர் வாரிசுரிமை வரியைக் கொண்டுவந்தார். ஆனால், நாட்டுப்புற கனவான்கள் அவ்வரியை நிலத்திற்கு விதிக்க ஒப்பவில்லை. பிரிட்டனுக்கும் அயர்லாந்திற்குமிடையே குறைந்த காப்புவரிக்கான ஒப்பந்தம் செய்துகொள்வதற்காக பிட் கொண்டுவந்த தீர்மானத்தைப் பெருந் தொழில் தலைவர்களும், கருநாட்டைச் சார்ந்த (Black Country) வெட்ஜ்உட்டும் (Wedgewood), இரும்புத் தொழில் தலைவரான போல்கினும் பருத்தி நிறுவனங்களும் ஒன்றுக இணைந்து நிராகரித்தனர். பன்னாட்டு வாணிபத்தில் பிட் பெற்ற பெரு வெற்றி, ஈடன் மூலமாகப் பேச்சுவார்த்தை நடத்தி 1786-ல் ஃபிரான்சுடன் செய்துகொண்ட உடன்படிக்கையாகும். அதன்படி இரு நாடுகளிலும் கம்பளம், பருத்தி ஆகிய பொருள்களின்மீதும், இரும்புத் தொழிற்கருவிகள்மீதும், மண்பாண்டங்கள்மீதும் மிகுதியாகக் குறைக்கப்பெற்ற 10 அல்லது 12 சதவீத வரியே செலுத்தவேண்டும். இத்தகைய சரிநிகரான நிலையில் ஃபிரெஞ்சுக்காரரை மிஞ்சிவிட முடியுமென்று பிரிட்டிஷ் வணிகர் நம்பிக்கை கொண்டனர். ஃபிரான்சிலிருந்து வந்த மதுவகைகளுக்கு போர்ச்சுக்கல்லிலிருந்து வந்தவற்றைவிட அதிக வரி விதிப்பு இல்லை. ஆனால், ஃபிரெஞ்சுப் பட்டு இறக்குமதிக்குத் தடையிருந்தது. இவ்வாறான உறுதியான நன்மைகளும், அமெரிக்காவை இழந்ததற்கு ஈடாகக் கிடைத்த பரந்த அங்காடியும், எத்துணைதான் ஃபிரான்ஸ் பழங்காலப் பகைநாடு என்று ஃபாக்ஸ் போட்ட கூக்குரலை அர்த்தமற்றதாக்கின. ஆனால், ஃபிரான்சில் தொழிலதிபர்கள் புரட்சி செய்தனர். ஃபிரான்சின் புரட்சிக்கால அரசாங்கம் இந்த உடன்படிக்கையை 1793-ல் ரத்து செய்தது.

பிட் மற்றொரு பெரும் பிரச்சினைக்கு நீண்டகால அடிப் படையில் தீர்வு ஒன்றைக் கண்டார். கலகம் (mutiny) தோன்றும் வரையில் அடிப்படைச் சட்டமாக இருந்த 1784ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டத்தினால் அத் தீர்வு காணப்பெற்றது. ஆயின், இங்கே பிரிட்டிஷ் அரசியலில் இந்தியா எவ்வாறு புகுந்தது என்பதை நினைவுகூர்தல் அவசியமாகிறது.

பிரிட்டனே, கிழக்கிந்தியக் கம்பெனியோ நாடு பிடிக்கச் சென்றன என்று நினைப்பதைப்போன்ற தவறு வேறொன்றும் இருப்பதற்கில்லை. 'இடரும் விநோதமும் நிறைந்த பாதைகள்' என்று வாரன் ஹேஸ்டிங்ஸ் குறிப்பிட்டது நாம் வகுத்துக்கொண்ட வழியன்று. கடைசி மொகலாயப் பேரரசர் 1707ஆம் ஆண்டு இறந்த பிறகு இந்தியா தலைவர் இல்லாத நாடாகத் தவித்தது. அவுரங்கசீப் இறப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே முஸ்லிம் கொடுமைக்காளான இந்துக்களிடம் எதிர்வினை தோன்றியது. அந்த எதிர்வினை இயக்கத்தின் தலைவராக விளங்கியவரும், மராத்தியர் ஆதிக்கத்தை நிலைநாட்டியவரும் சிவாஜியே. அவரது குலத்தில் உதித்தவர்கள் தக்காணத்தில் உள்ள சதாராவில் தொடர்ந்து ஆட்சிபுரிந்து வந்தனர். ஆனால், பிற்காலத்தில் பீஷ்வாக்கள் என்று அழைக்கப்பெற்ற அரண்மனை அதிகாரிகள், சதாரா அரசர்களை வலியிழக்குமாறு செய்தனர். பூனாவில் அவர்களுடைய செல்வாக்கு மிகுந்திருந்தது. இம் மறக்குல மக்களின் மற்றத் தலைவர்களான கெய்க்வாரும் (Gaekwar), குவாலியரில் சிந்தியாவும், இந்தூரில் ஹோல்கரும் தங்களுடைய ஆதிக்க எல்லையை விரிவுபடுத்தினர். மேற்குக் கரையிலிருந்து மத்திய இந்தியா வழியாக அவர்களின் அதிகார எல்லை விரிவடைந்தது. பஞ்சாபிலிருந்து வந்த மற்றொரு கண்டிப்பான இந்து எதிரியான சீக்கியத் தலைவர் டெல்லியை மற்றொரு புறத்திலிருந்து அச்சுறுத்தினர். இதற்கிடையில் முஸ்லிம் பேரரசின் அதிகாரிகள் தங்களுடைய பதவிகளை, மரபுரிமையால் வரும் பீடங்களாக மாற்றினர். உதாரணமாக, ஹைதராபாத்தின் நிஜாம், அயோத்தியின் நவாப், வங்காள நவாப் ஆகியோரைக் குறிப்பிடலாம். மேலும், முஸ்லிம் படைவீரர்கள் இந்துக் குடிகளை அடக்கியாள முற்பட்டனர். குறிப்பாக, மைசூரில் ஏழாண்டுப் போருக்குப் பிறகு ஒழுக்கச் சார்பற்ற திறமை கொண்ட ஹைதர் அலி தம்முடைய ஆட்சியை நிறுவினர். அவருடைய ஆதிக்கம் பம்பாயை அச்சுறுத்தியது. சென்னையின்மீது சூல்கொண்ட மேகம்போல் கவிந்திருந்தது. இறுதியாக, வலுவிழந்த இந்தியாவில் எப்போதும் நடப்பதைப் போலவே வடமேற்கு எல்லைப் புறத்திலிருந்த கணவாய்களின் வாயில்கள் புதிய படையெடுப்பாளருக்கும் திறந்தே இருந்தன.

ஆஃப்கானிய ரோஹிலர்கள் (Rohillas) கங்கையாற்றின் வடக்கில் குடியேறினர். பாரசீகத்தைச் சார்ந்த நாதிர்ஷா 1739ஆம் ஆண்டில் பலரைக் கொன்று குவித்து, பெரும் பொருளைச் சூறையாடிச் சென்றார். ஆஃப்கானியரான அஹமதுஷா பஞ்சாபை இணைத்துக் கொண்டார். 1761ஆம் ஆண்டில் தமது நான்காவது படையெடுப்பில் டெல்லிக்கு வெளியே பானிபட் எனுமிடத்தில் மராத்தியரின் படைகளை அழித்தார்.

இத்தகைய வலுவந்தச் செயலும் முறைகேடும் மலிந்த சூழ்நிலையில் ஐரோப்பிய வணிகர் தற்காப்பிற்காகப் படைக்கலன் ஏந்திப் போரிட வேண்டிய நெருக்கடி இருந்துவந்தது. பேராசை பிடித்த கவர்னர்கள் இந்தியப் போர்களில் தலையிட்டுக் கோட்டைகளுக்காகவும், அங்காடிகளுக்காகவும் பேரம் பேசினர். மேலும், கணக்கரும் வணிகரும் ஏராளமாகப் பொருள்பெற எல்லையற்ற வாய்ப்புகள் இருந்ததாகக் கண்டனர். ஃபிரெஞ்சுக் காரருக்குச் சொந்தமான இடங்கள் இந்துமாகடலில் உள்ள மரீஷியல் (Mauritius) தீவிலிருந்து கல்கத்தாவிற்கு மேலே உள்ள சந்திரநாகூர்வரை பரவிக்கிடந்தன. ஆனால், பாண்டிச்சேரியே அவர்களின் தலைமை இடமாக இருந்தது. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின்போது அங்கிருந்தே ஃபிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை வலிமையடையச் செய்ய டுப்ளே (Dupleix) முனைந்தார். ஐரோப்பாவில் சமாதானம் ஏற்பட்டபோதும் இந்தியாவில் போர் தொடர்ந்து நடந்தது. அந்நிலையில் இந்திய அரசர்கள் அரியணையில் அமர்த்தப்படுவதும் நீக்கப்படுவதுமாக இருந்தனர். இறுதியில் இப் போரானது ஏழாண்டுப் போரில் கலந்தது. ஃபிரெஞ்சுக் கம்பெனியின் கையாலாகாத் தன்மையாலும், அது தன்னுடைய பணியாளர்களான டுப்ளே, ஹைதராபாத்தை நீண்ட காலத்திற்குக் கைப்பற்றிக் காத்த புஸ்ஸி (Bussy), பாண்டிச்சேரியைக் காத்த லாலி (Lally) போன்றோருடன் கொண்ட பூசல் காரணமாகவும், ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். அதைவிட ஆங்கிலேயரின் கடலாதிக்க மேம்பாடும், இந்தியாவின் பிரதான குருதிக்குழாய் போன்ற கங்கையின்மீது கொண்ட ஆதிக்கமும் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தன. வங்காளத்திலிருந்து கடல் வழியாகப் படைகளை அனுப்பி சென்னையையும் பம்பாயையும் அவர்களால் காக்க முடிந்தது. இறுதியாக, சென்னையில் கம்பெனியின் பணியில் கணக்கராக இருந்த ராபர்ட் கிளைவ் (Robert Clive) எனும் செயல்வீரரைக் கண்டனர். அவர் முப்பது வயது நிரம்பா முன்பே 1751ஆம் ஆண்டில் ஆர்க்காட்டைக் காத்து, முதல் முறையாக அழியாப் புகழடைந்தார்.

இங்ஙனம் ஆங்கிலக் கம்பெனி ஓர் அரசியல் ஸ்தாபனமாக மாறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதிலும் 1756-ல் இளைஞரான சிராஜ் உத் தௌலா (Siraj-ud-Daulah) வங்காளத்தின் நவாபாகப் பதவியேற்றபோது அத்தகைய மாறுதலுக்கான வாய்ப்பு நெருங்கியது. உணர்ச்சிகளுக்கும் அச்சத்திற்கும் அடிமையான நவாப், இந்து நிதியாளரிடமும், முஸ்லிம் படைவீரரிடமும் ஒருங்கே சண்டையிட்டார். ஐரோப்பியர் வலுத்தாக்குதலில் ஈடுபடுவார்களோ என ஐயுற்று, ஜூன் மாதத்தில் கல்கத்தா நகரைத் தாக்கினர். அந் நகரின் காப்பரண்கள் கேலிக்கிடமானதாக இருந்தன. ஆங்கிலக் கவுன்சிலர்களில் பலர் கோழைகளாக இருந்தனர். அதனால், நான்கு நாள் முற்றுகையில் அவர்கள் பணிந்தனர் அன்றிரவு ஏறக்குறைய 150 போர்க் கைதிகள் 'இருட்டறையில்' அடைக்கப்பட்டனர். அது கல்கத்தா கோட்டையில் உள்ள 20 சதுர அடிக்கும் குறைவான சிறைக்கூண்டாகும். அடைபட்டவர்களில் 23 பேரே உயிர் பிழைத்தனர்.

தங்களுடைய நகரத்தை ஃபிரெஞ்சுக்காரர்கள் தாக்குவது நிச்சயம் என அறிந்திருந்தும், சென்னை கவுன்சிலர்கள் கிளைவையும் அட்மிரல் வாட்சனையும் வங்காளத்தை மீட்க அனுப்பினர். 1757 ஆம் ஆண்டு ஜனவரியில் கிளைவும் வாட்சனும் கல்கத்தாவை மீட்டனர். அதன்பிறகு சந்திரநாகூரைக் கைப்பற்றினர். ஃபிரெஞ்சுக்காரருடன் சேர்ந்து நாவப் செய்த சூழ்ச்சி களைப்பற்றித் தெளிவாக அறிந்து, குடிமக்கள் நவாபை வெறுத்தனர் என்பதை உணர்ந்து, அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவர்தம் உறவினரான மீர்ஜாபர் (Mirjaffar) என்பவரை அரியணையில் அமர்த்துதற்காக ஜூன் மாதத்தில் செயற்படத் தொடங்கினர். ஜூன் மாதம் 23ஆம் தேதி பிளாஸி என்னுமிடத்தில் 800 ஐரோப்பியர் உள்பட 3,000 வீரர்களைக் கொண்ட கிளைவ், 50,000 வீரர் அடங்கிய நவாபின் படையினை முறியடித்தார். காட்டிக் கொடுக்கப்பெற்ற சிராஜ் உத் தௌலா கொல்லப்பட்டார். இப் புரட்சியின் விளைவாக கல்கத்தாவில் ஆங்கிலேயரின் முதலுரிமை ஏற்றுக்கொள்ளப்பெற்றது. நகருக்கு வெளியில் பெரும் பகுதியில் 'ஜமீன்தாரி' (zemindari) அல்லது நிலவரி கொள்ளும் உரிமையை ஆங்கிலேயர் பெற்றனர். தாம் இந்தியாவைவிட்டு நீங்குமுன்பே கிளைவ் வங்காளத்தில் டச்சுக்காரரின் ஆதிக்கத்தை அழித்தார். வங்காளத்திற்கும் சென்னைக்கும் இடையில் நிலவழிச் செய்தித் தொடர்பு கொள்ள வாய்ப்பாக இருக்கும் கிழக்குக் கரையோரப் பகுதியான வடசர்க்கார் (Northern Circars) பகுதியைக் கைப்பற்றவேண்டி ஒரு படையை அனுப்பினர். அவரைப்போன்று

வேறெந்த ஆங்கிலேயரும் இந்திய சிப்பாய்களுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கவில்லை. அவருடைய தீரமும் தீர்மானமும் எப் போதும் பொய்த்ததில்லை. ஆனால், ஒப்பந்தங்களில் பொய்க் கையெழுத்திடுவது உள்பட எந்தக் கருவியையும் பயன்படுத்த அவர் தயங்கியதில்லை. அதே சமயத்தில் அவரது பேராசை காரணமாகத் தொடங்கிய ஊழல் புதிய வங்காளம் முழுவதிலும் பரவியது.

1760ஆம் ஆண்டில் லாலி என்னும் ஃபிரெஞ்சு தளகர்த்தருக்கு எதிராகக் கூட் (Coote) வந்தவாசியில் பெற்ற வெற்றியும், பாண்டிச்சேரியின் வீழ்ச்சியும், 1763ஆம் ஆண்டுச் சமாதானமும் ஆங்கிலேயர் வென்ற நிலப்பரப்பை விரிவுபடுத்தின. வங் காளத்தில் தோன்றிய புரட்சி, படுகொலை, ஊழல் ஆகியவை மொகலாயப் பேரரசருடனும் அயோத்தியுடனும் ஒரு போரைக் கொண்டுவந்தன. 1764ஆம் ஆண்டில் பக்ஸார் என்னுமிடத்தில் ஹெக்டர் மன்ரோ (Hector Munro) என்பவர் மற்றொரு முடிவான வெற்றியைப் பெற்றுத்தந்தார். ஒழுங்கீன நிலைநாட்ட வேண்டி கிளைவை மறுமுறையும் இந்தியாவிற்கு அனுப்பினர். அவர் அதிக வெற்றி பெறவில்லை என்றாலும், அவருடைய நடவடிக்கைகள் இன்றியமையாதனவாக இருந்தன. மேலும், சில பகுதிகளை முதலுரிமையோடு அளித்த மொகலாயப் பேரரசர் வங்காளம் முழுவதற்குமான 'திவானி' அல்லது நிதி திரட்டி அதனுடைய ஆளும் உரிமையைக் கம்பெனிக்கு அளித்தார். அப்போதிருந்த ஆங்கிலேயர் தமது கைப்பாவை போன்ற நவாப்பின்கீழ் இந்திய அதிகாரிகளின் மூலமாக முதலுரிமை செலுத்தினர்.

1767ஆம் ஆண்டில் கிளைவ் இறுதியாக இந்தியாவைவிட்டுப் புறப்பட்டபிறகு, இந்தியப் பிரச்சினையானது பிரிட்டிஷ் அர சாங்கம் எதுவும் புறக்கணிக்க முடியாத அளவிற்குப் பெரும் பிரச்சினையாகியது. கிளைவின் அளவிடற்கரிய செல்வமும், இந்திய அலுவலகத்தின் (India House) மீது ஆட்சியதிகாரம் பெறப் பல அரசியல் கட்சிகளிடையே தோன்றிய போட்டிகள், வாணிபக் கம்பெனி வெற்றியடைந்த பெரும்போர்கள், இந்தியாவி லிருந்து திரும்பி வந்த 'நவாப்'கள் (nabobs) பகட்டாகக் காட்டிய செல்வம் ஆகிய அனைத்தும் பொது மக்களின் கோபத்தைக் கிளறியதோடு, தனிப்பட்டோர் பகைமையையும் வளர்த்தன. கர்நாடக நவாப்பிற்கு மிக உயர்ந்த வட்டி வீதத்தில் கடனளித்த சென்னை மாகாண ஆங்கிலப் பணியாளர்கள் ஹைதராபாத், மராத்தியர், மைசூர் ஆகியவற்றுடன் நவாப் தொடர்ந்த போர் களில் பங்குகொள்ளவேண்டியதாயிற்று. டெல்லியில் இருந்த

மொகலாயரைத் தங்கள் கருவியாகச் செய்த மராத்தியர், ரோஹில்லரை நெருக்கினர். மேலும், வங்காளத்தின் புற அணை போன்ற அயோத்தியையும் அச்சுறுத்தினர். பீஷ்வாவின் குடும்பத்தில் தோன்றிய பதவிகளினால் ஊக்குவிக்கப்பெற்ற பம்பாய் அரசாங்கம் மேலும் சில வணிகத் தலங்களைப் பெறும் நம்பிக்கையோடு அவைகளில் தலையிட்டது. 1767-ல் கம்பெனியிடமிருந்து பெரும் பொருளைப் பெற்றுக்கொண்டு முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பாராளுமன்றம் தயங்கியது. ஆனால், 1770ஆம் ஆண்டில் வங்காளத்தில் தோன்றிய கடுமையான பஞ்சம் மூன்றில் ஒரு பகுதி மக்களைப் பலி கொண்டது. இந்திய இருப்புச் சரிந்தது. மூன்று மாகாணங்களும் போரை எதிர்நோக்கி நின்றன. பாராளுமன்றத்திடம் கம்பெனி கடன் வேண்டியது.

இவற்றின் முதல் விளைவாக 1773-ல் ஒழுங்குமுறைச் சட்டம் வந்தது. அது பாராளுமன்றத்தின் முதலுரிமையை நிலைநாட்டும் முதலாவது பெரிய நடவடிக்கையாகும். கம்பெனியின் கணக்குகளும், கடிதங்களும் பாராளுமன்றத்தைச் சார்ந்த அமைச்சர்களின் பார்வைக்குக் கொண்டுவரவேண்டுமென்று அச் சட்டம் வற்புறுத்தியது. வங்காளத்தில் ஒரு கவர்னர் ஜெனரலையும், நான்கு பேர் அடங்கிய கவுன்சில் சபையையும் அமைத்தது. சாதாரணச் சூழ்நிலைகளில் அவர்கள் சென்னை, பம்பாய் ஆகியவற்றின் அந்நிய நாட்டு உறவுகளைக் கட்டுப்படுத்தவேண்டும். 'மாட்சிமை தங்கிய மன்னரின் குடிகளின்'மீது அதிகாரங்கொண்ட உயர் நீதிமன்றம் ஒன்றை வங்காளத்தில் நிறுவியது. முந்தைய ஆண்டில் வங்காளத்தில் கவர்னராக இருந்த வாரன்ஹேஸ்டிங்ஸையே கவர்னர் ஜெனரலாக நியமித்தது.

உண்மையில், அந்த ஆண்டிற்கும் அவர் இறுதியாகத் தாய்நாடு திரும்பிய ஆண்டான 1785-க்கும் இடைப்பட்ட காலத்தில் தான் பிரிட்டிஷ் இந்தியா உருவாகியது. பதவிக்கு வந்தபோது அவர் வாரிசுரிமையாகப் பெற்றதெல்லாம் முறையான அமைப்பின்மையும், இயல்திறத்தின் குழப்பமும், பரவலாக இருந்த ஊழலுமேயாகும். தமது அனுபவத்தினால் அவர் அடிப்படைகளுக்கே சென்றார். எல்லாவற்றிற்கும் மேலான அரசாங்கமின்றி இந்தியா வாழ முடியாது என்று கண்டார். வேறெந்த அரசியல் ஆதிக்கமும் இல்லாத நிலையில் பிரிட்டிஷ் ஆதிக்கம் அந்த இடத்தைப் பெறவேண்டுமென்றார். இந்திய முறைகளின் மூலமாகவும், இந்தியச் சட்டத்தின் மூலமாகவும் ஆளுவதனால் பிரிட்டிஷ் இந்தியா ஒரு கிழக்கிந்திய அரசாங்கமாக இருக்கவேண்டுமென்றும், இந்தியக் குடியானவருக்கு நியாயம் வழங்கவேண்டு

மென்றும் எண்ணினர். இத்தகைய இந்திய அரசாங்கம் இங்கிலாந்தில் உள்ள கட்சிப் பூசல்கள், மாற்றங்கள் ஆகியவற்றினின்றும் காக்கப்பெறுதல் வேண்டுமென்றும் கருதினர். முக்கிய அரசாங்கச் சட்டங்கள் இன்றி அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏராளம். இந்தியச் சட்டத் தொகுப்பு, பஞ்சநிவாரணம், நாட்டுப் படம்வரைவோர்பெற்ற ஊக்கம், திபேத்திற்கான ஆய்வுப் பயணம், ஆசிய சங்கத்திற்கு (Asiatic Society) அடிக்கல் நாட்டுதல், கல்கத்தாவில் முகமதியக் கல்லூரிக்குக் கால்கோளிடல் ஆகியவை வாரன்ஹேஸ்டிங்ஸினுடைய குறிக்கோள்களின் பரப்பையும், தன்மையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. நார்த் பிரபுவின் இகழார்ந்த அமைச்சரவை இருந்த காலத்தில் அநேகமாக ஹேஸ்டிங்ஸ் ஒருவர்தான் பிரிட்டிஷ் இந்தியாவையும், பண்பு நலனையும் காத்தவர். அவருடைய வெற்றிகள் மிகப் பெரியவையாகவும், அவர் பட்ட துன்பங்கள் மிகக் கொடியவையாகவும் இருந்ததனால், 'நான் உங்களுக்கு யாவற்றையும் அளித்தேன். அதற்குக் கைம்மாறுகச் சொத்தினைப் பறிமுதல் செய்து, இழிவையும் குற்றவிசாரணை நிறைந்த வாழ்க்கையையும் எனக்கு அளித்தீர்கள்' என்று கூறிய அவரை மன்னித்துவிடலாம்.

இள வயதில் இந்தியாவிற்கு வந்த ஹேஸ்டிங்ஸ், நிலைமை மோசமான காலத்திலும் தூய உள்ளத்துடன், கறைபடியாத கைகளுடன் முன்னேறினர். ஆனால், பிற்காலத்தில் அவரைத் தாக்குதலுக்கு ஆளாக்கிய பயன்கள் இல்லாமலில்லை. அவர் தம்முடைய சமகாலத்தவரைப்போன்று துணிகரமான திட்டங்கள் வகுத்தார். ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவிட்டார். இங்கிலாந்தில் கையூட்டு என்று கருதப்பெற்றதை, கிழக்கு நாடுகளின் பொருளில் கண்டு, நிறையப் பணம் பெற்றார். கடுமையான எதிர்ப்பும், அவருக்கு வேலை தந்தோரிடம் நன்றி மறந்த தன்மையும் அவரை இரக்கமற்றவராகவும் விடாப்பிடியராகவும் செய்தன. மேலும், அவரை உயர்ந்த குறிக்கோளை அடையக் குறுக்கு வழிகளைக் கடைப்பிடிக்கும் வல்லவராகச் செய்தன.

ஒழுங்குமுறைச் சட்டம் இந்தியாவை வந்தடைவதற்குமுன் இரண்டு ஆண்டுகளில் நிலைத்து நிற்கக்கூடிய முக்கிய காரியங்களை ஹேஸ்டிங்ஸ் செய்தார். கிளைவினுடைய இரட்டையாட்சியை நிர்வாகக் குழுவினரின் ஆணையின்பேரில் அழித்தார். நவாப் ஓய்வூதியம்பெற்ற பொம்மைத் தலைவரானார். கல்கத்தா ஆங்கிலேயரின் தலைநகரமாயிற்று. தல வருவாயை ஆங்கிலக் கலெக்டர்கள் கண்காணித்தனர். நீதித்துறையில் நிதி நிர்வாகச் சபையும், மேல்முறையீட்டு நீதிமன்றங்களும் நிலைத்திருந்தன. நிதி

கொள்வதற்கான பழைய முறைகளை ஆராய்ந்து அறியாத நிலையில் மொகலாய ஆட்சியில் முக்கிய வருவாயாக இருந்த நிலவரியை ஐந்து ஆண்டுகளுக்கு நிர்ணயித்தார். அது உயர்ந்த வீதத்தில் இருந்தது வருந்தத்தக்கதே. மேலும், அவர் அரசாங்கத்தின் கடமைகளை வாணிப நிர்வாகத்திலிருந்து பிரித்தார். பேரரசர் மராத்தியரின் கருவியாக இருந்ததைக் கண்ட அவர் கிளைவின் ஒப்பந்தத்தை ரத்து செய்து, மேலும் கப்பம் செலுத்த மறுத்தார். அயோத்தியை விரிவுபடுத்தி, அந் நாட்டுச் செலவிலேயே ஒரு பிரிட்டிஷ் படையை அங்கு நிறுத்தி, அந் நாட்டை வங்காளத்தின் அரணாக அமைத்தார். இத்தகைய ஏற்பாடுகளினால் 1774ஆம் ஆண்டு ரோஹில்லரை அழிக்க அயோத்திய நவாப் ஆங்கிலேயரின் துணை நாடியபோது, ஏற்பட்ட போரில் நேரடியான தொடர்பு கொள்ளச் செய்தன. மராத்தியர் ஆங்கில எல்லையில் வராதவாறு தடுக்கவோ அல்லது அவர்களுக்கு எதிராகப் பயனுள்ளவகையில் பணியாற்றவோ ரோஹில்லர்களால் முடியாது எனக் கண்ட ஹேஸ்டிங்ஸ் அயோத்தியின் கோரிக்கைக்கு இணங்கினர். பிரிட்டிஷாரின் உதவியுடன் ரோகில்கண்டு அயோத்தியுடன் இணைக்கப்பெற்றது. அரசாங்கத்தில் எல்லாத் துறைகளிலும் ஹேஸ்டிங்ஸ் செயலாய்வு செய்துகொண்டிருந்தார். ஆயின், இந்த ஆண்டின் இறுதியில் ஒழுங்குமுறைச் சட்டத்தினாலும், தாய்நாட்டு அரசாங்கத்தின் பயனற்ற தன்மையாலும், பம்பாயிலும் சென்னையிலும் காணப் பெற்ற தவறுகளினாலும், பெரும்போர் ஒன்றினாலும் அவரது வேலை தடைபட்டது. பகைமை ஏற்கெனவே இருந்ததென்றாலும் ஒழுங்கு முறைச் சட்டமே பெருங்கேட்டிற்கு வழி வகுத்தது. அது கவர்னர் ஜெனரலுக்கு புறக்கணிக்கும் அதிகாரமளிக்காது; முடிவு வாக்கையே (casting vote) அளித்தது. வங்காளத்திற்கு முதற்படியினை வழங்காது, பம்பாய், சென்னை ஆகியவற்றின்மீது தெளிவற்ற தள்ளுரிமையை அளித்தது. நெருக்கடியின் பெயரால் அவைகள் அந்த உரிமையையும் புறக்கணிக்க முடிந்தது. உயர் நீதிமன்றத்திற்கும், கவுன்சில் சபைக்குமுள்ள உறவு நிலையையும் அந் நீதிமன்றம் பயன்படுத்த வேண்டிய சட்டத்தையும், அதனுடைய ஆட்சியெல்லைக்குட்பட்ட குடிகள் யார் என்பதையும் அது தெளிவாக விளக்கவில்லை.

அதிக வாக்குகள் பெறமுடியும் என்ற நார்த்தின் நம்பிக்கை, கம்பெனி ஆட்சியின்மீது கிளைவிற்கு இருந்த வெறுப்பு, நாடு பிடிக்கும் போர்களில் நிர்வாகக் குழுவினரில் பலர் கொண்ட வெறுப்புப்போன்ற பலவகையான செல்வாக்குக் கூறுகளால் தூண்டப்பெற்ற மூன்று புதிய கவுன்சில் உறுப்பினர்கள் இங்கிலாந்திலிருந்து வந்தனர். ஹேஸ்டிங்ஸிற்கும், அவரது



Copyright, Edward Stanford, Ltd.

செயல்கள் எல்லாவற்றிற்கும் எதிரான கருத்துகளைக் கொண்ட அவர்கள், ஹேஸ்டிங்ஸிற்கு எதிராக ஓட்டளித்து அவரது செயல்களைப் பயனற்றவையாகச் செய்ததோடு அரசாங்கத்தையும் செயலற்ற நிலைக்குக் கொண்டுவந்தனர். அவர்களில் இருவர் மட்டமான சுயநலமிகுந்த படைவீரர்கள். மூன்றாமவரான ஃபிரான்ஸிஸ் ஃபிலிப் (Francis Philip) என்பவர் தன்னலமே உருவானவர் என்றாலும், புது எண்ணங்கள் கொண்டவராக விளங்கினர். 'லெட்டர்ஸ் ஆஃப் ஃபூனியஸ்' (Letters of Funius) என்னும் தமது எழுத்துகளில் காட்டிய தீராப் பகைமையையும் ஆணவத்தையும் அவர் இப்போது இந்தியாவில் காட்டினர். அந்நாட்டின் கவர்னர் ஜெனரலாக வரவேண்டுமென்று குறியாக இருந்தார். அந்த நாட்டைக் காக்கவே தம்மை அனுப்பியதாகக் கருதினர். இக்கெடுமதி படைத்த ஃபிரான்ஸிஸ், ஹேஸ்டிங்ஸை அழிக்கவும், தமது பேராசையைப் பூர்த்திசெய்துகொள்ளவும் எதையும் செய்யத் தயாராக இருந்தார். கவர்னர் ஜெனரலின்மீது பழி சுமத்துமாறு இந்திய நாட்டவரைத் தூண்டினர்; இந்திய அலுவலகத்தில் இருந்த கட்சியைக் கிளறினர். கம்பெனியில் எல்லையற்ற ஊழல் மலிந்து கிடப்பதாகவும், மில்லியன் கணக்கான ஏதுமறியாத இந்திய மக்களை ஹேஸ்டிங்ஸ் கொடுமைப்படுத்தியதாகவும், கம்பெனியின் முன்னாள் ஆதரவாளராக இருந்த பர்க்கை நம்புமாறு செய்தார். அவருடைய கருத்துகள், கிளைவிடமிருந்து பெற்றவை என்றும், ஓரளவு அவரது அறியாமை காரணமாகக் கொள்ளப்பெற்றவை என்றும் கூறலாம். அவர் வங்காளத்தில் ஆங்கில முதலுரிமையை ஏற்படுத்தவேண்டுமென்றார். ஆனால், அது கப்பங் கொள்ளும் அதிகாரமாகவே இருக்கவேண்டுமென்றார். மொகலாய ஆட்சி முறையில் வரிகொள்வோராக இருந்த ஜமீந்தார்களைப் பரம்பரையாக வந்த பெருங்குடியினர் எனக் கொண்டார். அவர்களுடன்தான் நாம் தொடர்புகொள்ள வேண்டுமென்றும், அவர்கள் அளிக்கவேண்டிய நிதியை நிரந்தரமான அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டுமென்றும் கருதினர். முறை வழங்குதல், குடியானவரைக் காத்தல் ஆகிய பொறுப்புகளிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டும். அதே சமயத்தில் கம்பெனி வணிகச் செயல்களில் அதிகமாக ஈடுபடவேண்டும். வங்காளத்தில் இத்தகைய முதலுரிமை கொள்வதானால், இந்தியாவின் மற்றப் பகுதிகளில் நாம் தலையிடக்கூடாது. நம்முடைய நண்பரும் பகைவரும் தங்களுக்குள்ளே போரிட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இத்தகைய இழிவான பாகத்தை நாம் ஏற்கமுடியுமென்று ஃபிரான்ஸிஸ் எண்ணியதோடு, பல ஆண்டுகளாக உழைத்தும், வெறுப்பை வெளியிட்டும் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளின் மனத்தில் அவைகளைப் பதியவைத்தார்.

எளிதிலே பதவியைத் துறப்பவரல்லர் ஹேஸ்டிங்ஸ். கைகலப்புவரையிலே சென்ற அவர்களது பூசல், கல்கத்தாவிற்கு அவமானத்தைத் தேடித்தந்தது. கவர்னர் ஜெனரலின் கவுன்சில் சபை உறுப்பினரில் பெரும்பான்மையோரின் தூண்டுதலால் வாரன் ஹேஸ்டிங்சிற்கு எதிராக வந்த குற்றச்சாட்டுகளில் சில, அவர் கையூட்டு (bribery) வாங்கியதாகக் கூறின. இருபது ஆண்டு களுக்கு ஏளனத்திற்குரியவராக இருந்த நந்தகுமார் (Nuncumar) என்னும் பிராமண அதிகாரி, கையூட்டுக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்தார். நந்தகுமார் பொய்க்கையெழுத்திட்டதாக இருந்த குற்றச்சாட்டு உயிர்ப்பிக்கப்பெற்றதும், அவருக்கு எதிராக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பும், அதன் அடிப்படையில் அவர் கொல்லப்பெற்றதும் எளிதில் தன்னிலை விளக்கம் தரக்கூடியவை யாக இருந்தபோதிலும், அவைகள் தற்செயலாக ஹேஸ்டிங்ஸைக் காத்ததனால், மிகுந்த ஐயப்பாடு எழுந்தது. கவுன்சில் சபையில் பெரும்பான்மையினர் ஹேஸ்டிங்ஸின் அதிகாரிகளைப் பதவியி லிருந்து நீக்கினர். அயோத்தியுடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தத்தினைக் குலைத்தனர். ஒருமுறை ஹேஸ்டிங்ஸ் ராஜினமா செய்துவிட்டதாகக் கூறிக் கல்கத்தா கோட்டையைக் கைப்பற் றினர். ஃபிரான்சிஸின் கூட்டாளிகள் இறந்த பிறகும் அவருடைய பழிவாங்கும் எண்ணம் மறையவில்லை. 1780-ல் பெரும்போர் உச்சகட்டத்தில் இருந்தபோது, கவர்னர்ஜெனரல் தமது பிரதான கவுன்சிலருடன் மற்போர் புரிந்தார். உயர்நீதிமன்றத் திற்கும் கவுன்சில் சபைக்குமிடையே கீழ்த்தரமான வாக்கு வாதங்கள் தொடங்கின. ஓரளவு அறிவுக்குப் பொருத்தமான ஏற்பாடு ஒன்றினால் இவைகள் முடிவுற்றன. ஆனால், அந்த ஏற் பாடு மேலும் இழிவானதாகவே இருந்தது. அதன்படி உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய எலிஜா இம்பே (Elijah Impey) என்பவர் கம்பெனியின் சாதாரண நீதிமன்றங் களுக்கும் தலைவரானார். நந்தகுமாரைத் தூக்கிலிட்டு வாரன் ஹேஸ்டிங்ஸை அழிவிலிருந்து காத்ததற்காக, இது இம்பேயிக்கு அளிக்கப்பெற்ற பரிசாகும் என ஹேஸ்டிங்ஸின் எதிரிகள் முணு முணுத்தனர்.

அச் சமயத்தில் பிரிட்டிஷ் கட்டுப்பாடு உறுதியற்றும், இழிந்த தாகவும் இருந்தது. நார்த்தும், அவருடன் இருந்த பிற அமைச்சர்களும் ஃபிரான்ஸிலின் கும்பலைத் தூண்டினர். கம்பெனியின் உரிமையாளர்கள் ஹேஸ்டிங்ஸைத் திரும்ப அழைக்க மறுத்தனர். அதே சமயத்தில் இங்கிலாந்திலிருந்து சென்ற தூதர்கள் மகாராட்டிரத்தின் அரசியலில் தலையிட் டனர். கர்நாடக நவாபிற்குக் கடன் கொடுத்தவர்கள் பாராளு

மன்றத்தில் தங்களுடைய பகர ஆட்களை வைத்திருந்தனர். சென்னை கவர்னர் ஒருவரைச் சிறையிடுமளவிற்கு வலிமை பெற்று விளங்கினர். இத்தகைய குழப்ப நிலையையும், தாய் நாட்டிலிருந்து வந்த முரணை ஆணைகளையும் சாதகமாகக் கொண்டு சிறிய மாகாணங்கள் போரில் ஈடுபட்டன. பூனாவில் தமது தேர்வாளரைப் பதவியில் அமர்த்துவதற்காகப் பம்பாய் அரசாங்கம் அனுப்பிய படை படுதோல்வியடைந்தது. சென்னையரசாங்கம் மராத்தியருடன் காலந் தாழ்த்தியதால் ஹைதர் அலியை அவமதித்தது. அதே சமயத்தில் கர்நாடக நவாப்பிடம் காட்டிய தனிப்பற்றினாலும், வடசர்க்காரில் உரிமை மீறியதாலும் ஹைதர் அலியையும், ஹைதராபாத் அரசாங்கத்தையும் இகழ்ந்தது. 1778ஆம் ஆண்டில் ஃபிரான்ஸுடன் போர் தொடங்கும் முன்னரே நிஜாமும் (Nizam) மராத்தியரும் தங்களது படைவீரர்களுக்குப் பயிற்சியளிக்க பிரஞ்சு அதிகாரிகளைப் பயன்படுத்தினர். பெருங் கூட்டுறவு ஒன்று சென்னையை அச்சுறுத்தியது. 1780-ல் ஹைதர் நமது படைகளைப் பின்வாங்குமாறு செய்தார்.

இத்தகைய ஆண்டுகளில் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவைக் காத்தார். வங்காளத்திலிருந்து இந்தியாவின் குறுக்காக மேற்குக் கடற்கரைக்கு கோடார்ட் என்பவரின் தலைமையில் ஒரு படையை ஹேஸ்டிங்ஸ் அனுப்பினர். போஃபாமின் (Popham) தலைமையில் இருந்த மற்றொரு படை குவாலியரில் உள்ள சிந்தியாவின் கோட்டையை அழித்தது; பாண்டிச்சேரி கைப்பற்றப்பட்டது. தாய்நாட்டில் கம்பெனி முதலீடு செய்வதைத் தடுத்த ஹேஸ்டிங்ஸ்; சென்னை அரசாங்கத்தை விலக்கிவைத்தார். அம் மாகாணத்தைக் காப்பதற்காக அயர் கூட்டை (Eyre Coote) அனுப்பினர். 1782ஆம் ஆண்டில் சால்பாய் உடன்படிக்கை செய்துகொண்ட மராத்தியரைத் தமது அரசியல் தந்திரத்தினால் அவர் மெதுவாகப் பகைவரிடமிருந்து பிரித்தார். மேலும், ஹைதராபாத்திடமிருந்த நட்புறவினைத் திரும்பப் பெற்றார். இங்ஙனம் மைசூர் தனித்து நிற்கவேண்டியதாயிற்று. அதே ஆண்டில் ஹைதர் இறந்தார். ஃபிரெஞ்சுக் கடற்படைத் தளகர்த்தரான சஃப்ரீன் (Suffrein) என்பவரிடமிருந்து காக்க சரியான நேரத்தில் வெர்ஸாயி உடன்படிக்கை வந்தது. ஹைதரின் மகன் திப்பு 1784ஆம் ஆண்டில் சமாதானம் செய்துகொண்டார்.

ஹேஸ்டிங்ஸ் அயராது உழைத்த சமயத்தில், புறக்கணிக்கப் பெற்ற படைப்பிரிவு அதிகாரிகள் வீரத்துடன் போர் புரிந்த சமயத்தில் மாகாணங்கள் சச்சரவிட்டன. வயோதிகரான கூட்டும், படைத்தலைவர்களில் பலரும் தகுதியற்றவர்களாக

இருந்தனர். இந்தியாவைவிட்டு ஃபிரான்ஸிஸ் சென்ற பிறகும் உள் ஆலோசனைக் குழுக்களில் பிளவுகள் நிறைய இருந்தன. இத் தகைய புயல்களுக்கிடையே பிற்காலத்தில் தம்மீது தீவிரக் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்த நடவடிக்கைகள் சிலவற்றை ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்டார். பண்ணையாள் என்று தாம் கருதிய காசியரசர் செயித் சிங் (Chait Singh) என்பவரிடம், பணத்தட்டுப் பாடு காரணமாகவும், நம்பிக்கைக்கேடு நேருமென்ற ஐயத்தாலும் பெருந்தொகைகள் கோரினர். அதனைக் காசியரசர் எதிர்க்கவே அவரைச் சிறைப்பிடிக்கச் சென்றார். அதனால் தோன்றிய புரட்சிக் கலகத்தில் அவருடைய உயிருக்கே ஆபத்துத் தோன்றியது. ஆனால், அதிலிருந்து தப்பிப் பிழைத்தார். அயோத்தியிலிருந்து கிடைத்த படை உதவிப் பணத்திற்காகப் புதிதாகச் செய்துகொண்ட ஒப்பந்தம் நவாப்பின் உறவினர்களான பேகம்களிடம் கடுமையான கோரிக்கைகள் வர வழிவகுத்தது. பெருநிதிக்கு உரிமையாளராக இருந்த பேகம்கள், செயித் சிங்குடன் சூழ்ச்சி செய்ததாக சந்தேகம் எழுந்தது. 1783–84ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கைகளினால் ஹேஸ்டிங்ஸிற்கும் சென்னை கவர்னரான மக்கார்ட்னே (Macartney) என்பாருக்கும் கடுமையான போராட்டம் நடந்தது.

இத்தகைய பெரியதும் சிறியதுமான, நல்லதும் கெட்டதுமான உண்மைக் கூறுகள் 1782ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்றக் குழுக்களின்முன் வைக்கப்பெற்றன. ஹேஸ்டிங்ஸைத் திருப்பி அழைக்குமாறு காமன்ஸ் சபையினர் கேட்டுக்கொண்டனர். கம்பெனி உரிமையாளர்கள் அவர்களை எதிர்த்து நின்றனர். தீவிரமான சீர்திருத்தமும், புதிய கவுன்சில் சபையும் தேவை என்ற எண்ணம் பொதுவாகக் காணப்பெற்ற ஒன்றாகும். ஆனால், டண்டாஸைச் சார்ந்தவர்கள் விட்டுக்கொடுத்து மதிப்புக் கெடாத வகையில் சமாதானம் செய்துகொள்ள நினைத்த ஒன்றை, பர்க்கின்மீது ஃபிரான்ஸிஸ் கொண்ட செல்வாக்கு ஒரு கட்சிப் பூசலாக் மாற்றியது. 'கொடியவர், நம்பிக்கை இழந்தவர்' என்பது ஹேஸ்டிங்ஸிற்கு எதிராக எழுந்த போர் நடவடிக்கையாக மாற்றியது.

1784-ல் நிறைவேறிய பிட் இந்தியச் சட்டம், ஃபாக்ஸினுடைய சட்டத்தினின்றும் இரண்டு அடிப்படை வேற்றுமைகளைக் கொண்டிருந்தது. முதலாவதாக, அது கம்பெனியின் ஒப்புதலோடு வரையப்பெற்றது. அடுத்தபடியாகக் கம்பெனியின் ஆதரவு, நியமனங்கள் ஆகியவற்றை அதனிடமே விட்டது. எனினும், இரு காபினெட் அமைச்சர்களை உள்ளிட்ட மேற்பார்வைக் குழுவை

(Board of Control) அமைத்ததன் மூலமாக அரசாங்கத்தை முதன்மையடையச் செய்தது. கம்பெனியின் அரசியல் சார்ந்த எல்லாக் கடிதங்களும் அந்தந்த அமைச்சர்களின் அனுமதி பெறவேண்டும். நிர்வாகிகளின் இரகசியக் குழுவின் மூலமாகவே அந்த அமைச்சர்கள் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். ஹேஸ்டிங்ஸிற்கு இடர் விளைத்த குறைபாட்டிலிருந்து இந்திய அரசாங்கத்தை விடுவித்தது. வங்காளம் மற்ற மாகாணங்களின்மீது மேலதிகாரம் செலுத்த வேண்டும். 1786ஆம் ஆண்டில் அடுத்து வந்த சட்டமொன்று தமது கவுன்சில் சபையை மீறி நடக்கும் உரிமையைக் கவர்னர் ஜெனரலுக்கு அளித்ததோடு படைப் பெருந்தலைவராக நியமித்தது. இங்ஙனம் அடுத்த எழுபது ஆண்டுகளுக்கு அரசாங்கமும் கம்பெனியும் ஒருங்கிணைந்து வேலை செய்யக் கூட்டாளிகளாகச் சேர்ந்தன.

ஆயின், நிலத்தை வெற்றிகொள்வதும், ஆட்சியெல்லையை விரிவுபடுத்துவதும் 'இந்த நாட்டின் விருப்பத்திற்கும், மதிப்பிற்கும், கொள்கைக்கும் பகையானது' என்று அச் சட்டம் அறிவித்தது, பிரிட்டிஷ் உரிமைகளை அச்சுறுத்தும் போர் உண்மையில் தோன்றுதவரையில் இந்திய அரசுகளுக்கிடையில் தலையிடுவதைத் தடுத்தது. மேலும், ஃபிரான்ஸிஸ் போற்றிய ஜமீன்தார்களுக்கு ஆதரவாகவும், அவர் ஆதரித்த நிதிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அம் மசோதா அமைந்திருந்தது. அச் சட்டம் தம்மைக் கண்டிப்பதாகக் கண்ட ஹேஸ்டிங்ஸ் பதவியிலிருந்து நீங்கி, 1785-ல் தம் நாடு திரும்பினர். ஃபிரான்ஸிஸும் பர்க்கும் கொண்டுவந்த அரசத் துரோகக் குற்ற விசாரணையை எதிர்த்தார். ஆயின், பிட், டண்டாஸ் ஆகியோரின் எதிரான வாக்குகள் காசி, அயோத்தி சார்ந்த குற்றச்சாட்டுகளை உறுதி செய்தன. வாரன் ஹேஸ்டிங்ஸின் வழக்கு விசாரணை 1788-லிருந்து 1795 வரையில் தொடர்ச்சியாக நடைபெறவில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் அது கட்சிப் பூசலாக மாறியது. இறுதியில் குற்றச்சாட்டின் எல்லா முக்கியச் செய்திகளிலும் குற்றமற்றவர் எனப் பிரபுக்கள் சபை அவரை விடுவித்தது. 70,000 பவுன் வழக்கிற்காகச் செலவிட்ட வாரன் ஹேஸ்டிங்ஸ் வறியராஞர். ஆனால், இடையிலே காணப்பெற்ற இந்திய வரலாறு அவருடைய பிரதானக் கொள்கையை நேர்மையானது என்று நிரூபித்தது. 1818ஆம் ஆண்டிற்கு முன் அவர் இறப்பதற்குள், பின்னாளில் வந்த காமன்ஸ் சபை அவருடைய நேர்மையை எடுத்துக்காட்டியது. எனினும், ஃபிரான்ஸிஸின் வன்மமே யாவற்றிற்கும் காரணம் எனக் கூறமுடியாது. அருவருக்கத்தக்க அளவில் உயர்த்திக் கூறியபோதிலும், பர்க்

உணர்ந்த சில செயல்களும், குற்றம் நீக்கமுடியாது என்று பிட் கண்ட செயல்களும் பேராபத்தில் இருந்த பெரிய மனிதரிடம் காணப்பெற்றதால், மன்னித்துவிடக்கூடியவையாக இருக்கலாம்; ஆனால், ஆங்கில ஆட்சியின் மரபமைதியாகக் கொள்ளமுடியாது.

கனடாவும் தற்கால வரலாற்றில் முதலடியெடுத்து வைத்த தற்குப் பிட்டின் அரசாங்கத்திற்கே கடமைப்பட்டது. அமெரிக் காவிலிருந்த பற்றுறுதியாளர் கனடாவில் குடியேறியதால், 1783ஆம் ஆண்டு உடன்படிக்கை பிரச்சினையை மாற்றியது. ஏனெனில், 35,000 பேர் எல்லையைக் கடந்து நோவாஸ்கோஷியாவிற்குள் புகுந்தனர். அவர்களுடைய கோரிக்கைகளின் விளைவாக நியூபிரன்ஸ்விக்கில் மற்றுமொரு குடியேற்றம் உருவாகியது. அதே சமயத்தில், மேலும் 20,000 அமெரிக்கர் கனடாவிற்குள்ளே புகுந்தனர். மாண்ட்ரீலில் இருந்த பிரிட்டிஷ் வணிகர்களின் கையை வலுப்படுத்திய இந்த நியூயார்க் மக்களும், மேற்குப் பகுதி முனைவர்களும், ஹைலாந்தியரும், கியூபெக்கில் வாழ்ந்த ஃபிரெஞ்சுக்காரர் பெற்ற அல்லது பெற விரும்பியதைவிட தாராளமான சுய ஆட்சி வேண்டுமென்று வற்புறுத்தினர். இப்போது டோர்செஸ்டர் பிரபுவாக இருந்த, அனுபவம் மிகுந்த கவர்னரான கார்ல்டன் என்பவருடன் நீண்ட ஆலோசனைகளை நடத்திய பிட்டும், கிரன்வில்லும் கனடாவை, மேல் அல்லது பிரிட்டிஷ் மாகாணம் என்றும், கீழ் அல்லது ஃபிரஞ்சு மாகாணம் என்றும் பிரிக்கத் தீர்மானித்தனர். ஒவ்வொரு மாகாணத்திலும் தனித் தனியான தேர்ந்தெடுக்கப்பெற்ற மாற்றங்கள் இருக்கவேண்டு மென்றும் தீர்மானித்தனர். இத் திட்டம் ஓர் இடைக்கால நடவடிக்கை என்பதிலும், இனப்பூசலைத் தவிர்த்தது என்ற வகையில் சில நன்மைகளைப் பெற்றிருந்தது. ஆயினும், மனநிறை வற்ற பிரிட்டிஷ் சிறுபான்மையினரை கியூபெக்கில் விட்டு வைத்தது, இரு மாகாணங்களுக்கிடையே இருந்த மோசமான பொருளாதாரப் போட்டியையும் நீக்கவில்லை. எனினும், 'அதனுடைய தன்மையும் சூழ்நிலையும் அனுமதிக்குமளவிற்கு கனடாவின் அரசாங்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஒத்ததாகக் கொண்டுவரவேண்டும்' என்ற தமது விருப்பத்தை, பிட் வெளிப் படையாகவே கூறினர். இங்ஙனம் சுய ஆட்சி தோன்றக்கூடிய காரணகாரியங்கள் தாமாகவே எழுந்தன.

அயர்லாந்துடனை வாணிப ஒப்பந்தம், பெருந்துறைமுகங்களை அரண்செய்தல் போன்ற பல பிரச்சினைகளுக்குப் பாராளு மன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு பெறத் தவறியதும், இந்தியாவைப்பற்றி எழுந்த தீவிர எதிர்ப்பும் பிட் எல்லாவற்றிலும்

வல்லவராக இல்லை என்பதை அறிவிக்கின்றன. இருபெரும் பிரச்சினைகளில் அவர் பின்வாங்க நேர்ந்தது. ஏமாற்றமடைந்த சீர்திருத்தவாதிகள் அவரைக் 'கொள்கை துறந்தவர்' என்று தூற்றினர். ஆனால், பிட்டினுடைய நிலையை அறியத் தெளிவான விளக்கம் கிடைக்கின்றது. பிட்டிடம் போதுமான அதிகாரம் இல்லை என்பதோடு, எளிதில் மாறும் அவரது இயல்பும் இணைந்து கொண்டது. மேலும், உடல்நலக் குறைவு காரணமாக அவர், டண்டாஸ் முழங்கியதைப்போல 'எப்போதும் மச்சு அறை அல்லது சிறு அறையிலேயே' தங்கிவிட்டார். 1785ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சீர்திருத்த மசோதா ஒன்றைக் கொண்டுவருவதன் மூலமாகத் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினர். அந்த மசோதாவிற்காகப் பலருடைய ஆதரவை வேண்டினர். அரசரை நடுநிலைமை வகிக்குமாறு வற்புறுத்தினர். வரம்பற்ற கருத்துகளைப் புறக்கணித்த பிட், இம் மசோதாவின் மூலமாகப் படியுரிமை நிலத்தவர்களான ஒரு சிறு வகுப்பாருக்கு வாக்குரிமை அளிக்கவேண்டுமென்றும், முப்பத்தாறு ராட்டன் பரோக்களை (Rotten Boroughs) வாங்கி, அவைகளுக்கு இருந்த பிரதிநிதித்துவத்தை லண்டன் நகருக்கும், சில கவுன்டிகளுக்கும் பங்கிட்டளிப்பது என்றும் தீர்மானித்தார். மேலும், வருங்காலத்தில் சில பரோக்களின் பிரதிநிதித்துவத்தை அவைகளின் ஒப்புதல் பெற்று நீக்குகின்றபோது ஈட்டுப் பணம் அளிப்பதற்கான நிதி ஒன்றை உருவாக்க வேண்டுமென்றார். நார்த்தின் ஆதரவாளர்களும், பர்க்கும், பழைமைப் பண்புபெற்ற விக்குகளும், அவருடைய காபினெட்டில் பாதிப்பேரும், அவரது கட்சியினரில் பாதிக்கு மேற்பட்டவரும் அம் மசோதாவிற்கு எதிராக ஓட்டளித்தனர். அதனால் எழுபத்துநான்கு ஓட்டுகள் வித்தியாசத்தில் அவர் தோற்றார். உண்மையில் அத்தகைய மசோதாவிற்காகப் பொது மக்கள் உரிமைக் கோரிக்கை எழுப்பவில்லை. அந்த நிலை மாறும் வரையில் 'புதுமையைப் புகுத்துதல்' என்னும் பழியை மறுமுறையும் ஏற்க பிட் விரும்பவில்லை.

இதைப்போன்றே அடிமை வாணிப ஒழிப்பு என்னும் பிரச்சினையும் கட்சியின் நோக்கங்கள், புரட்சியின் பீதி போன்ற வற்றிலே சிக்கித் தடுமாறியது. 1713ஆம் ஆண்டு ஆஸ்ஸியண்டோ ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து பல மில்லியன் ஆப்பிரிக்கரை பிரிட்டிஷ் கப்பல்கள் கொண்டுசென்றன. அமெரிக்காவை இழந்த பிறகும் ஆண்டொன்றிற்குக் குறைந்தது 40,000 அடிமைகளை அவை ஏற்றிச்சென்றன. லிவர்பூல், பிரிஸ்டல் ஆகியவற்றின் செல்வ வளத்திற்கு அடிப்படையாயிருந்த இந்த வாணிபம் ஒரு வலிமைமிக்க குழு நலனாக விளங்கியது. சாத்தம்

பிரபுவின் காலம்வரை குவேக்கர்களைத் தவிர வேறு யாரும் இவ் வாணிபத்தை எதிர்த்துப் பேசவில்லை. ஆனல், மக்கட் பணியின் புதிய ஆன்மாபோன்ற ஜான் வெஸ்லியின் (John Wesley) கண்டனமும், எவாஞ்சலிகல் இயக்கமும் ஒரு புதிய மாற்றத்தைத் தோற்றுவித்தன. பிரிட்டிஷ் மண்ணில் அடிமை உரிமை பெறுகின்றன் என்பதை 1772ஆம் ஆண்டில் சாமர்செட்டின் வழக் கிற்கு அளிக்கப்பெற்ற மான்ஸ்ஃபீல்டின் (Mansfield) தீர்ப்புத் தெளி வாகக் கூறியது. அதே சமயத்தில் 1780 முதல் 1789ஆம் ஆண் டிற்குள், குறிப்பாகக் குவேக்கரின் ஆதரவோடு அடிமை வாணிப ஒழிப்பாளர் சங்கத்தைத் (Abolitionist Society) தோற்றுவித்த தாமஸ் கிளார்க்சனும் (Thomas Clarkson), கிரான்வில் ஷார்ப்பும் (Granville Sharp) பிரசாரத்திலீடுபட்டனர். தமது சொந்த விசாரணைகளுக்குப் பிறகு அவர்களுடன் இணைந்துகொண்ட வில்பர்ஃபோர்ஸ் (Wilberforce) பிட்டின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராவர். அவருடன் சேர்ந்த பிட் இப் பிரச்சினையை 1788ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்தார். அரசர், பல காபினெட் உறுப்பினர், மேற்கு இந்தியா, நாவாய் நலன்கள், சீர்திருத்த மறுப்பாளர்கள், ஒரே சமயத்தில் ஃபிரான்சும் ஸ்பெயினும் நடவடிக்கை எடுக்க மறுத்ததை எடுத்துக்காட்டிய வர்கள் ஆகியோரிடமிருந்து பலமான எதிர்ப்பு வந்தது. அடிமைகளை ஏற்றிச் சென்ற கப்பல்களின் மோசமான நிலையைச் சீர்திருத்தவேண்டுமென்ற சிறிய மசோதாவைக்கூடத் தாம் ராஜி னமா செய்துவிடுவதாக அச்சுறுத்தியே பிட்டினல் நிறைவேற்ற முடிந்தது. அதே சமயத்தில் இப் பிரச்சினையில் முக்கிய விசாரணை முடிவுறுவதற்கு முன்பே சமத்துவக் கருத்துகளை ஃபிரெஞ்சுப் புரட்சி மேற்கிந்தியத் தீவுகளில் பரப்பியது. இக் கருத்துகள் அடிமைகளிடையே கிளர்ச்சியைத் தோற்றுவித்தன. அடிமை வாணிபத்தைப் படிப்படியாக ஒழிப்பதற்காக டண்டாஸ் கொண்டு வந்த மசோதாவை, பிட்டையும் ஃபாக்ஸையும் எதிர்த்த பாராளு மன்றம் 1792ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. 1794-ல் வலதுசாரி விக்குகள் பிட்டுடன் கூட்டாக இணைந்தபோது உடனடியான நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற அவர்களது விருப்பத்திற்கு இணங்கினர். குடியேற்ற நாட்டு மன்றங்களின் எதிர்ப்பினலும், போரின்போது அடிமைக் குடியேற்றங்களை வெற்றிகொண்ட தாலும் அடிமை ஒழிப்பை ஒத்திப்போடவேண்டுமென்ற கட்சி வலுவடைந்தது. அடிமை ஒழிப்பு என்பது 'யாகோபியக் கொள்கை சார்ந்ததாகக்' (Jacobinical) கூறப்பெற்றது.

இவற்றையெல்லாம்விட ஒரு நிகழ்ச்சி, ஆற்றல்மிகுந்த இந்த அமைச்சரின் அதிகாரம் நிலையற்றதாக இருந்தது என்பதை

எடுத்துக்காட்டியது. தமது தந்தையாருடன் வேல்ஸ் இளவரசர் கொண்ட பூசல் பெருகியது. அவருடைய குணத்தைத் திருத்த முடியாதுபோல் தோன்றியது. அவர் அரை மில்லியன் பவுன் கடன்பட்டிருந்தார்; உண்மையில் அவர் திருமதி பிட்ஸ் ஹெர்பர்ட் என்பவரை 1785ஆம் ஆண்டில் மணந்துகொண்டதைப் பற்றிய வதந்திகள் உலவின. அரசத் திருமணச் சட்டத்திற்கும் ரோமன் கத்தோலிக்கரை மணந்த இளவரசர் பட்டத்திற்கு வருவதைத் தடைசெய்த அரசுரிமை நிர்ணயச் சட்டத்திற்கும், எதிராக உயர்குணம் படைத்த அம் மாதை இளவரசர் மணந்து கொண்டார். அதைப்பற்றி அறியாத ஃபாக்ஸ் வதந்திகளை மறுத்தார். ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு உண்மையை அறிந்திருந்த கிரேயும் ஷெரிடனும் அதனை மறுமுறை மறுத்தபோது, அது ஒரு பெரும் நெருக்கடியின் பகுதியாக மாறியது.

1788ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1789ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்வரையில் சுய அறிவை இழந்த மூன்றாம் ஜார்ஜ் தீவிர வெறியரானார். எனினும், அவர் குணமடையக்கூடும் என்று மருத்துவர் ஒப்புக்கொண்டனர். அக் கருத்தின் அடிப்படையில் பிட்டினுடைய காபினெட் தமது காப்பாளர் மசோதாவை வரைந்தது. அதன்படி பாராளுமன்றத்தினால் ஒழுங்கு செய்யப் பெற்ற காப்பாளர் ஆட்சி ஏற்படவேண்டும். பிரபுக்களை நியமித்தல், புதிய பதவிகளைத் தோற்றுவித்தல், அரண்மனை மீதான மேற்பார்வை ஆகியவற்றில் காப்பாளர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்பெற்றன. அதனால் தமது நோயிலிருந்து அரசர் மீளும்போது அரசாங்கத்தின் மீதான அவரது செல்வாக்கை நிலைநாட்டும் வழிகள் அனைத்தையும் மீட்டல் எளிதாகும். இரு சபைகளாலேயே உருவாக்கப்பெற்ற உயர் ஆணையாளர் குழுவின் பெரு முத்திரை கொண்டு நிறைவேறிய இம் மசோதா, அளவை இயல் (Logic), சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும்போது புதுமையானதாகத் தோன்றினாலும், பொது மக்களைப் பொறுத்தவரையில், தொடர்ந்து பல தவறுகளை இழைக்கும் தன்மையுள்ள எதிர்க்கட்சியினர் கொண்ட பொது வழக்கு சாராத எண்ணத்தைவிட, அரசியல் சட்டத்தின் உணர்விற்கு நெருங்கிய ஒன்றாகவே காணப்பெற்றது. ஏனெனில், சட்டப்படி மன்னர் இறந்துவிட்டாரென்றும், இறைமையின் முழு அதிகாரத்தையும் தம்முரிமையால் இளவரசர் பெற்றுவிட்டார் என்றும் எதிர்க்கட்சியினர் கூறினர். மேலும், இங்கிலையில் பதவி மாற்றத்திற்கான நாள் குறிப்பிடுவதைத் தவிர பாராளுமன்றம் ஒன்றும் சொல்வதற்கில்லையென்றும் வாதிட்டனர். பொதுமக்கள் தம்மை ஆதரித்ததற்கான பல சான்றுகளின் துணைகொண்டு எதிர்க்கட்சி

யினரை விக்குக் சட்சியிலிருந்து நிரந்தரமாக நீக்கிவிடுவதாக உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிட், கட்டுப்பாடுகள் கொண்ட இத் திட்டத்தை மூன்று ஆண்டுகளுக்குக் கொண்டு சென்றார். ஆனல், பலர் அவரைக் கைவிட்டனர். தர்லோ இளவரசருடன் சூழ்ச்சி செய்தார். புதிய அமைச்சர் பட்டியல்களும், புது பிரபுக்களின் பெயர்களும் அடிபட்டன. ஃபாக்ஸின் கருத்தினை ஐரிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது. பர்க் பயன்படுத்திய கடுஞ் சொற்கள் அவருடைய அறிவு தடுமாறியதோ எனத் தோன்று மாறு செய்தன. இளவரசரின் தன்மான உணர்வில்லாதவரின் உணர்ச்சியினைப் புண்படுத்துவதாக இருந்தது. எல்லாம் முடிந்து விட்டதைப்போல் தோன்றியது. வழக்கறிஞர் கழகத்திற்குத் திரும்பிச் செல்வதற்குப் பிட் தயாராக இருந்தார். அதுபோது மன்னர் தம் பிணி நீங்கினர். 1790-ல் நடைபெற்ற தேர்தலில் அமைச்சரவை மற்றைய காலங்களைவிட உறுதியுடன் நின்றது என்பது வெளிப்பட்டது.

அமைச்சரவையின் புதுப்பிக்கும் பணிக்கு, அமைதி இன்றியமையாது தேவைப்பட்டது. ஆனல், ஐரோப்பாவில் போர் வதந்திகள் மலிந்தன. 1786–7-ல் அனுபவ அறிவின் இரு தூண்களாக இருந்த மாமன்னர் ஃபிரடரிக்கும், ஃபிரெஞ்சு அமைச்சரான வெர்கன்னஸும் (Vergennes) திறமையற்ற வாரிசுகளை விட்டு மறைந்தனர். மற்ற ஐரோப்பிய சக்திகளில், தன்னலமும் சூழ்ச்சியுமுடைய மகா காதரைன் ரஷ்யாவை ஆட்சி புரிந்தார். துடுக்கான, உறுதிக்கோட்பாட்டினரான இரண்டாம் ஜோசப் ஆஸ்திரியப் பேரரசை ஆண்டுவந்தார். 1772ஆம் ஆண்டில் தொடங்கிய போலந்து நாட்டுப் பங்கீட்டை அவர் மேலும் வலியுறுத்தவும், கான்ஸ்டான்டிநோபிளை ரஷ்யாவிற்கு அளிக்கவும் ஆன திட்டத்திற்கான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். பெல்ஜியத்திற்கு மாருக பவேரியாவை அடையும் ஜோசப்பின் திட்டம் ஜெர்மானியரின் எதிர்ப்பால் நிறைவேருமற் போன போதிலும், அவருடைய ஒருமுகப்படுத்தும் திட்டங்கள் செருக்கு மிகுந்த ஹங்கேரியரை அலைக்கழித்தன; பிளாண்டர்ஸின் பழைமையான சுதந்திரத்தை அச்சுறுத்தின. அதே சமயத்தில் 'இயல்பான உரிமைகள்' என்னும் அடிப்படையில் தடை நில உடன்படிக்கைகளைப் புறக்கணித்ததோடு ஷெல்டை (Scheldt) டச்சுக்காரர் கட்டுப்பாடு செய்வதையும் எதிர்த்தார்.

பிட் முதலில் பதவிக்கு வந்தபோது பிரிட்டன் தனித்து நின்றது. ஸ்பெயினல் தொடரப்பெற்ற ஃபிரான்ஸ் புதிய குடியேற்றப் பொருளாதார நோக்கங்களைக் கொண்டிருந்தது.

மற்றொரு கூட்டாளியான ஆஸ்திரியா, அதன் மூலமாக செயின்ட் பீட்டர் பர்க்குடன் தொடர்பு கொண்டது. அமெரிக்கப் போரின் போது நமது கடற்படையின் உரிமைக் கோரிக்கைகளினால் ரஷ்யா சீற்றங்கொண்டது. அதே சமயத்தில் அந் நாட்டின் கிழக்கு நாடுகளைப்பற்றிய பேராசைத் திட்டங்கள், நமது மத்தியதரைக் கடல் வாணிபத்தைப் பயமுறுத்தின. மேலும், அவைகள் இந்தியாவை அடையக்கூடும். ஆஸ்திரியா பகைவர் பக்கம் சென்றதாலும், எப்போதும்போல ஆரஞ்சு கட்சி, ஆம்ஸ்டர்டாம் கட்சி என பிளவுபட்டு நின்ற ஹாலந்தில் செல்வாக்கு மிகுந்த கட்சி, ஜோசப்பிற்கு எதிராகப் பாதுகாப்பைப் பெற ஃபிரான்ஸைச் சார்ந்திருந்ததாலும், பழைய விக்குகளுடைய ஃபிரான்ஸிற்கு எதிரான திட்டம் வீழ்ந்ததைப்போல் தோன்றியது.

அமைதியே பிட்டின் அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும், அவர் நிதி நிலைமையைச் சீர்படுத்தவும், கப்பற் படையைப் புதுப்பிக்கவும் அதிக அக்கறை காட்டினார். மத்தியக் கிழக்குடன் பிரிட்டனுக்கு நேரடித் தொடர்பு இல்லையென்றாலும், தாழ்நாடுகளில் ஏற்படும் மாற்றம் எதையும் எதிர்க்கும் கடமை தங்களுக்கு உண்டு என்று பிட் அமைச்சரவையினர் கருதினர். இந்தியாவிற்கு எதிராக ஃபிரான்ஸும் டச்சுக்காரரும் இணைந்து செயலாற்றும் வாய்ப்புகள் இருந்தன. துருக்கியைத் தாக்குமாறு கிழக்கத்திய வல்லாட்சியாளருடன் ஃபிரான்ஸ் பேரம்பேசி, தனக்கு எகிப்தைப் பரிசாகக் கோருவதற்கான வாய்ப்பும் காணப் பெற்றது. இரண்டாம் வில்லியம் ஃபிரடரிக், பிரஷ்ய அரியணையில் ஏறியபோதுதான், ஃபிரான்ஸை எதிர்க்கும் முதல் வாய்ப்புத் தோன்றியது. ஹாலந்தில் இருந்த ஃபிரெஞ்சுக்காரரின் மேலாதிக்கத்தை ஃபிரடரிக் வெறுத்தார். மேலும், தமது சகோதரியான ஆரஞ்சு இளவரசிக்கு நேர்ந்த அவமானத்தை அவர் விரும்பவில்லை. 1787-ல் ரஷ்யாவின்மீது துருக்கி போர் தொடுத்ததால், நெதர்லாந்துகளில் ஃபிரான்ஸ் தனித்து நின்றே போராட வேண்டியதாயிற்று. பிரஷ்யப் படைகள் ஹாலந்தில் புகுந்தன. 1788ஆம் ஆண்டில் பிரஷ்யாவும், பிரிட்டனும், ஹாலந்தும் முக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. பெரும்பாலும் ஃபிரான்ஸின் சீர்குலைந்த நிதிநிலை காரணமாக ஏற்பட்ட இத்தகைய அரசியல் தோல்வியைத் தொடர்ந்து, அடுத்த ஆண்டில் புரட்சி தோன்றியது. அப் புரட்சி சக்திவாய்ந்த ஃபிரெஞ்சுப் பேரரசைச் சிறிது காலத்திற்குச் சீரழித்ததைப் போல் தோன்றியது.

ஆனால், இந்தக் கூட்டுறவு பிட்டிற்குத் தொல்லைகள் தந்தது. கொடுங்கோலராகவும், பண அவாவுள்ளவராகவும், நிலையற்றவராகவும் இருந்த மூன்றாம் கஸ்டாவஸ் என்னும் ஸ்வீடனின் மன்னர், நீண்டகாலத்திற்கு முன்பு ரஷ்யா கைப்பற்றிக்கொண்ட பகுதிகளைத் திரும்பக் கொள்வதற்காகப் போரிலீடுபட்டார். இதனால் பால்டிக் போரினைத் தடுக்கவேண்டிய கடமை பிரிட்டனுக்கு ஏற்பட்டது. பாதுகாப்பு உடன்படிக்கையைப் பகுதிகளாக மாற்றும் திட்டமாகப் பிரஷ்யா செய்தது இடர்மிகுந்த ஒன்றாக இருந்தது. அதன்படி உண்மையில் டான்ஸிக்கையும், வேறு சில பகுதிகளையும் பிரஷ்யா போலந்திடமிருந்து பெறவேண்டும். இந்த ஏற்பாடு இறுதியில் துருக்கியின் நலனைப் பாதிப்பதாகும். ஆனால், பாதுகாப்பையே பிரதானமாகக் கருதிய பிட், ரஷ்யாவைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. அதேபோன்று ஜோசப்பின் சீர்திருத்தங்களினால் 1789-ல் தோன்றிய பெல்ஜியப் புரட்சியினால் லாபமடையவும் நினைக்கவில்லை. ஏனெனில், வெற்றிகொண்ட பெல்ஜிய ஜனநாயகம் ஃபிரான்ஸுடன் சேர்ந்துகொள்ளக்கூடும். அதனுடைய தோல்வி ஒரு பெரும் போருக்குக் காரணமாகலாம்.

1790ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜோசப் மறைந்து அவரைவிடப் பகுத்தறிவுமிக்க அவர்தம் சகோதரரான இரண்டாம் லியோபால்டு பட்டத்திற்கு வந்தபோது, பழைய நிலையைத் திரும்பக் கொணரவேண்டுமென்ற நோக்கமுடைய பிட்டிற்குக் கூட்டாளி ஒருவர் கிடைத்தார். அவர்களிருவரும் சேர்ந்து நெருக்கியதால் பிரஷ்யர்கள் தயங்கினர். அதே சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியுடன் நின்றதால், பெல்ஜியப் புரட்சியாளருக்கு நேர்மையான சலுகைகள் அளிக்கவேண்டிய கட்டாயம் லியோபால்டிற்கு ஏற்பட்டது. பிரிட்டிஷ்காரரின் புகழை உயர்த்திய மற்றொரு நிகழ்ச்சி இந்த ஆண்டில் ஏற்பட்டது. தங்களுடைய பழைய தனியுரிமைக் கோட்பாடுகளுக்கிணங்க ஸ்பானியர் வாங்குவர் தீவிலுள்ள (Vancouver Island) நூட்கா சவுண்டு (Nootka Sound) என்னும் துறைமுகத்தில் தங்கியிருந்த பிரிட்டிஷ் கப்பல்களைச் சிறைப்படுத்தினர். அதனால், இரு நாடுகளும் போருக்குத் தயாராயின. ஃபிரெஞ்சு தேசிய சபையிடம் (French National Assembly) ஸ்பெயின் உதவியைக் கோரியது. நம்முடைய படைக்குவிப்புகளின் வலிமையும், பாரிஸ் நகரில் அளிக்கப்பெற்ற கையூட்டுகளும் வெற்றி தேடித்தந்தன. பசிஃபிக் பகுதியில் நாவாய் செலுத்தும் நமது உரிமையை முதன் முறையாக ஸ்பெயின் ஒப்புக்கொண்டது.

எனினும், 1791-ல் பிரிட்டிஷ் கொள்கை தீவிரமாக மறுதலிக்கப்பட்டது. ரஷ்யாவின் பேரறிவுபடைத்த படைத்தலைவரான சுவரோஃப் (Suvoroff), துருக்கியருக்கெதிராக முடிவான வெற்றிகளைப் பெற்றார். நூட்கா சவுண்டு பிரச்சினையில் பிரஷ்யா நம்மைப் பற்றுறுதியோடு ஆதரித்ததால், இப்போது டான்ஸிக்கின்மீது அவர்கள் உரிமை கொண்டாடியதை பிட் ஆதரித்தார். ஆனால், எந்தவித சலுகையும் அளிக்க போலந்தியர் மறுத்தனர். எனவே, தனது போலந்து திட்டத்தை ரஷ்யா ஆதரிப்பதால் துருக்கியைக் கைவிட பிரஷ்யா தயாராக இருந்தது. மேலும், ஐரோப்பா முழுவதையும் ஃபிரெஞ்சுப் புரட்சி பாதித்தது. முடியாட்சியை நிலைநாட்டுவதற்கான போருக்கு ஆயத்தம் செய்யும் வகையில் மூன்றாம் கஸ்டாவஸ் (Gustavus) ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆஸ்ட்ரியாவில் பேரரசரின் உரிமைகளைப் பாதிக்கும் புரட்சி சார்ந்த ஆணைகளும், ஜெர்மனியின் எல்லையில் தங்கிய ஃபிரெஞ்சு அரச ஆதரவாளர்களின் படையும், தமது உடன்பிறந்தவரான மேரியா அந்தாய்னிட்டேயிடமிருந்து வந்த விண்ணப்பங்களும் பேரரசரைத் தலையிடுமாறு தூண்டின. மற்றொரு போலந்து பங்கீட்டிற்கான ஒப்பந்தம் ஒன்றின்மூலமாக பிரஷ்யாவுடன் இருந்த பகையைப் புதைக்க முடியும் என்றும், தம்மை ரஷ்ய நெருக்குதலிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியுமென்றும் பேரரசர் கருதினர்.

எனவே, அளவுக்கு மீறிய நம்பிக்கை கொண்ட வெளிநாட்டுத் தூதுவர்களின் யோசனையின்பேரில், தான் வெற்றிகொண்ட பகுதிகளில் கிரீமியாவைத் தவிர மற்றவற்றைக் குறிப்பாக டிநீஸ்டருக்கும் (Dniester) பக்கிற்கும் (Bug) இடையிலமைந்த ஒக்ஸாகோஃப் (Oczakoff) கோட்டையை ரஷ்யா விட்டுக்கொடுக்க வேண்டுமென்று பிட் கோரியபோது, அவரது கூட்டாளிகள் எதிர்த்தனர்; காபினெட் பிளவுபட்டது; பாராளுமன்றம் பீதியடைந்தது; எதிர்க்கட்சியினர் தீவிரமாக இருந்தனர். இங்கிலாந்து தனது திட்டத்தை வலியுறுத்த முடியாத நிலையில் இருந்தது என்பதை பாக்ஸினுடைய நண்பரான அடேர் (Adair) என்பவரின் பயணம், காதரைனை நம்பவைத்தது. பிட் பின்னடைய வேண்டியதாயிற்று. இச்செயலில் தமது வெளிநாட்டு உறவு அமைச்சரான லீட்ஸை இழந்தார். லீட்ஸின் இடத்தில் வந்த கிரன்வில் நடுநிலைமைக் கொள்கையில் உறுதியாக நின்றார். பிட் பின்வாங்கியது போலந்தின் அழிவைக் குறிப்பதாகவும், அநேகமாக ஃபிரான்ஸிற்கு எதிராக எழுந்த வல்லரசர் கூட்டமைப்பைத் தோற்றுவிப்பதாகவும் இருந்தது.

சமகால நிகழ்ச்சிகள்

1783 வெர்சேல்சு உடன்படிக்கை (Versailles).
கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றுதல்.

1784 ஷெல்டைத் திறந்துவிடுமாறு இரண்டாம் ஜோசப் கோரினர்.

1785 மொஸார்ட் எழுதிய 'Marriage of Figaro'.
பாலி (Paley) எழுதிய 'Moral Philosophy'.

1786 மாமன்னர் ஃபிரடரிக்கின் மறைவு.
பர்ன்ஸ் எழுதியு 'Poems'.

1787 ஃபிரான்சில் முக்கியமானவர் (Notables) கூட்டம்.
ஹேஸ்டிங்ஸின்மீதான அரசத் துரோகக் குற்ற விசாரணைத் தொடக்கம்.

1788 பிரிட்டன், பிரஷ்யா, ஹாலந்து ஆகியவற்றின் முக்கூட்டு ஒப்பந்தம்.
ஸ்பெயினில் கோடோய் (Godoy) என்பவரின் முதலுரிமை.
ரஷ்யரும் ஆஸ்திரியரும் துருக்கியின்மீது படையெடுத்தல்.
'The Times' பத்திரிகையை ஜான் வால்டர் (John Walter) நிறுவியது.

1789 எஸ்டேட்ஸ் ஜெனரல் (Estates General) என்னும் ஃபிரெஞ்சுப் பாராளுமன்றம் கூடுதல்.
ஆஸ்திரிய நெதர்லாந்துகளில் புரட்சி.
வாஷிங்டன் அமெரிக்க ஜனாதிபதியாதல்.
பிளேக் (Blake) எழுதிய 'Songs of Innocence'.

1790 இரண்டாம் லியோபால்டு, இரண்டாம் ஜோசப்பிற்குப் பிறகு அரசு எய்தல்.
பர்க் எழுதிய 'Reflections on the Revolution in France'.
கதே எழுதிய 'Faust'.

1791 மிராபூவின் மரணம் (Mirabeau); சட்டசபைக் கூட்டம்.
பெய்ன் (Paine) எழுதிய 'Rights of Man'.

1792 நேசநாடுகளை ஃபிரான்ஸ் முறியடித்தல்.
கன்வென்ஷன் (Convention) என்னும் சபைக்கூடடம்.
ஷெல்லி (Shelley) பிறத்தல்.

4. புரட்சியும் போரும்
1792–1801
(Revolution and War, 1792–1801)

இன்றைய நிலைபோன்று எப்போதுமே பதினைந்து ஆண்டுகளுக்குச் சமாதானத்தை எதிர்நோக்கக்கூடிய காரணம் ஐரோப்பாவிற்கு இருந்ததில்லை எனக் கூறிய பிட், 1792ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வரிகளைக் குறைத்தார்; படைக்குறைப்புச் செய்தார்; போலந்தை அக்கறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். என்றாலும், ஒரு முறை சூடுபட்டதனால், அப் பிரச்சினையில் தலையிட அவர் விரும்பவில்லை. ஆங்கில முறையில் ஃபிரான்ஸில் தாராளச் சீர்திருத்தம் வேண்டுமென விரும்பினார். இங்ஙனம் ஐரோப்பாவும். அதனுடைய தலைசிறந்த அரசியல் வல்லுநரும் தவறான முடிவு கொண்டிருந்தனர்.

ஏனெனில், ஃபிரெஞ்சுப் புரட்சித் தீயானது அண்டை நாடுகளிலும் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. அது இருபதாண்டுப் போர் ஒன்றில் இங்கிலாந்தைச் சிக்கவைத்தது. பிட்டினுடைய அமைதியான தாராளக் கொள்கையை முடிவுறச் செய்ததோடு, நாட்டை இரு கட்சிகளாகப் பிரித்தது. அப் போர் முடிவுற்ற போது உள்நாட்டுப் புரட்சியை பிரிட்டன் தவிர்த்தது. அயர்லாந்தில் தோன்றிய உள்நாட்டுப் போர், கத்தோலிக்கருக்குப் பாதகம் விளைக்கும் வகையிலிருந்த ஐக்கியத்தை வற்புறுத்தியது. தொழிற் புரட்சியின் வேகம் இரட்டிப்பாகியது. துன்பங்களும் மக்களின் மனவெழுச்சியும் புதிய ஜனநாயகத்தை உருவாக்கி, எல்லா அமைப்புகளையும் ஆட்டங்காணுமாறு செய்தன.

1789ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாஸ்டில் (Bastille) சிறைக்கூடம் வீழ்ந்தபோது, 'இந்த உலகில் நேர்ந்த மிகப் பெரியதும், மிகச் சிறந்ததுமான நிகழ்ச்சி' என்பதாக ஃபாக்ஸ் கொண்ட உணர்ச்சி ஆர்வத்தைப்போன்ற ஒன்றை ஆங்கிலேயரில் பலர் பெற்றனர். தேசிய சபையானது நிலமானிய உரிமைகளை

அழித்தல், திருச்சபை அமைப்பினைக் குலையச் செய்தல், ஜன நாயகத்தை அரியணையிலேற்றுதல் போன்றவற்றைச் செய்த போது, அதிலும் மனித உரிமைகளின்பேரால் இம் மாற்றங்களைச் செய்தபோது, இளைஞர்களும் முற்போக்குவாதிகளும் இத்தகைய கொள்கைகளுக்கு விடுத்த விண்ணப்பத்தினால் இன்பத்திலாழ்ந் தனர். சீர்திருத்தவாதிகள் கண்ட கனவுகளெல்லாம் இங்கே நினைவுகளாக மாறியனபோல் தோன்றின. இப் 'பொற்காலத்தில் வாழ்வது பெரும்பேறு' என இளம் புலவர்களான வேர்ட்ஸ் வொர்த் (Wordsworth), கோல்ரிட்ஜ் (Coleridge), சதே (Southey) ஆகியோர் கண்டனர். இவ்வுலகில் நேர்மையை மீட்கவல்ல புதிய யுகம் வானவில்லைப்போன்று தோன்றியதாகவும் கண்டனர். 1688ஆம் ஆண்டுப் புரட்சியைக் கொண்டாடிய பழைய அரசியற் சங்கங்கள் மீண்டும் தழைத்தோங்கின. அதே சமயத்தில் தாராள மனப்பான்மையும் தொழிலும் விளங்கிய எல்லா இடங்களிலும், லண்டனிலும், ஷெஃபீல்டிலும் (sheffield), மாஞ்செஸ்டரிலும் ஃபிரான்ஸைப் போற்றவும், சீர்திருத்தம் வேண்டுமென்று கோரவும் புதிய சங்கங்கள் தோன்றின. ஆனல், இரத்தவெறி பிடித்த பாரிஸ் மக்கள் கூட்டங்கள் அரண்மனைகளைக் கொள்ளை யிடல், திருச்சபையினரை ஒறுத்தல் ஆகியவற்றினாலும், வறியராக வந்த அகதிகளினாலும், பழமைப் பண்பும் சமய ஆர்வமும் கொண்ட இங்கிலாந்து பீதியடைந்தது. அதனல் பாராளுமன்றச் சீர்திருத்தத்திற்கும், சோதனைகளை ரத்துசெய்வதற்குமான மசோதாக்களை முடிபாக நிராகரித்தது. இங்ஙனம் நாட்டிலே தோன்றிய பிளவு விக்குக் கட்சியை வீழ்த்துவதாக இருந்தது. அக் கட்சியைப் புதுப்பித்தவரான எட்மண்ட் பர்க்கினலேயே கட்சிப் பிளவு பெருகியது.

எட்மண்ட் பர்க்கின் வாழ்க்கை (1729–97) பதினெட்டாம் நூற் ருண்டிற்கும் தற்காலத்திற்கும் இடையே இருக்கும் வேற்றுமை யைக் குறிக்கவந்த மாற்றங்களைத் தன்னுள் கொண்டிருந்தது. ஆங்கிலத் தீவுகளில் அரசியலில் ஈடுபட்ட மற்றையோரைக் காட்டிலும் பரந்த அறிவு படைத்த அவர், வேறெந்தத் தனி மனிதரும் செய்யாத அளவிற்கு அவ்வித மாறுதல்களை விளைவித்து விளக்கிக் கூறினர். அவருடைய மேதைத் தன்மைக்கும் பண் பிற்கும் பெரிய வேற்றுமை காணப்பெற்ற காரணத்தால், பலர் அவரைப் பைத்தியக்காரர் என்றனர். சிலர் துணிகரச் செயல் புரிபவர் என்று எண்ணினர். தாம் பெறமுடியாத சொத்து களைப் பெற, பர்க் கடன் வாங்கியது வருந்தத்தக்கது. அவர் இந்தியாவிற்காகச் சட்டமியற்றியபோது அவரைச் சுற்றியிருந்த உறவினர்கள் இந்திய வணிகச் சூதாட்டத்தில் ஆழ்ந்திருந்தனர்.

அமெரிக்காவை ஆதரித்து அதற்காகப் போராடிய அவர் நியூ யார்க் இராச்சியத்தின் ஊதியம் பெற்ற பேராளராக இல்லாதிருந் தால், அவரது செயல் சிறந்திருக்கும். வாரன் ஹேஸ்டிங்ஸைப் பற்றிய பிரான்ஸின் பகைமைக் கூற்றை அவர் அப்படியே ஏற்றுக் கொண்டார். மேலும், அந்த அரசத் துரோகக் குற்ற விசா ரணையின்போதும், காப்பாளர் நெருக்கடி நேர்ந்தபோதும் அவருடைய பேச்சுகள் வெறிகொண்டவையாக இருந்தன. இறுதியில் 'கொலைகாரர்களால் துரத்தப்பெற்ற ஒருவருடைய பார்வையை'க் கொண்ட முகத்தை அவர் பெற்றபோது, தமது பயத்தின் பிம்பத்திலிருந்து அவரால் தப்பமுடியவில்லை. எனினும், அவரது பேச்சுகள்; செயல்கள், கடிதங்கள் எல்லாம் அவர் பேரறிவின் நிழலைச் சின்னமாக விளங்கினர் என்பதையும், அறத்தில் ஆர்வம் மிகுந்தவர் என்பதையும் பறைசாற்றுகின்றன. தமது வாழ்வை வளப்படுத்தவேண்டி அயர்லாந்திலிருந்து வந்த அவர், பத்திரிகையாளராக இருந்து, ராக்கிங்காமின் செயலராக வும், விக்குக் கட்சியைப் புதுப்பித்த அறிவின் இருப்பிடமானவராக வும் விளங்கினர். புரட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்த புனிதராக வும், டோரிகளின் இரண்டாம் கட்சிக்கு ஊக்கமளித்த உத்தம ராகவும் இறந்தார்.

இத்தகைய முரண்பாடு கொண்டிருந்தபோதிலும், பழைமைப் பண்புடைய ஒழுக்க நெறியாளருடைய நம்பிக்கை அவரிடம் தொடர்ந்து நிரந்தரமாக நிலைத்து நின்றது. இயற்கை நிலையைப் புகழ்ந்து பேசியவர்களுக்கு எதிராகப் பொது சமுதாயத்தைக் காப்பதாக அமைந்தது அவரது முதல் விளக்கவுரை. அவர் எழுதிய 'Present Discontents' என்னும் நூல் (1770) பூட்டின் முறையைக் கண்டித்தது. 1688ஆம் ஆண்டையும் பிரிட்டிஷ் உரிமைகளையும் புகழ்ந்து பாடியது. சுதந்திரத்தைக் காக்கும் கருவியாகக் கட்சி விளங்குவதால் முதன் முறையாக ஆதரிக்கப் பெற்றது. 1778–82-ல் அவர் கொண்டுவந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அடிப்படையை நிலையாது பழைய முறையின் கட்டுமானத்தையே கலைக்க முற்பட்டன. ஏனெனில், பாராளு மன்றச் சீர்திருத்தம், சம வாக்குரிமை, அல்லது வாக்காளர் உரிமைக் கட்டளையிடும் உரிமை ஆகியவற்றிற்கு அவர் செவி சாய்க்க மறுத்தார். அமெரிக்காவிற்கு ஸ்தல சுய ஆட்சி அளிப் பதே தகுந்த பரிகாரமாகும் என்றார். ஆங்கிலேயர் வெற்றி பெற்று அடைந்த உரிமைகளை அமெரிக்கரும் பெறவேண்டு மென்றார். அதைப்போலவே கத்தோலிக்க விடுதலையின் மூல மாகப் பழைமைப் பண்புகொண்ட ஐரிஷ் பெருங்குடியினரை உரு வாக்கலாம் என நம்பினர். தமது வாழ்க்கையின் முதல் பகுதியில்

அரசாங்கத்தின் பறிமுதல் கொள்கையென்று தாம் கருதியதற்கு எதிராகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சூழ நலனைக் காத்தார். இரண்டாவது பகுதியில் ஊழல் மலிந்த கம்பெனிக்கு எதிராக இந்தியரின் உரிமைகளையும் நன்மதிப்பிற்குரிய சமயங்களையும் காப்பதாக எண்ணினர். பல சமயங்களில் அவர் ஆர்வத் துடிப்பு மிக்கவராக இருந்தார் அல்லது தவறான பாதையில் சென்றார் என்றாலும், அவரது அறிவுமுனை எப்போதும் ஒரேவிதமான உண்மைகளையே நோக்கி நின்றது.

பதினேழாம் நூற்றாண்டில் பெற்றிருந்ததைவிடப் பரந்த ஒன்றில் அவர் தெய்வீக உரிமையைக் கண்டார். அதாவது, ஆண்டவர் அளித்த நிலையில், இயற்கைத் தத்துவத்தில் அதனைக் கண்டார். அரசு என்பது வாழ்கின்ற மக்களிடையே ஏற்படும் பருப்பொருள் தன்மையுடைய கூட்டமைப்பு அன்று. ஆனால், இருப்பவர்க்கும் இறந்தவர்க்குமிடையேயான 'எல்லாவற்றிலும் நிறைவு கொண்ட கூட்டமைப்பேயாகும்' என்று அவர் கருதினர். மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றிருந்தனர். ஆனால், அந்த உரிமைகள் எல்லாம் மரபாக வந்தவையே. அரசியல் என்பது ஏதோ அனுபவம் அல்லது அறிவிலிருந்து உய்த்துணர்ந்த விதிகளைப் பொறுத்த கருத்தியலான உரிமைகள் பற்றியது அன்று; அது ஓர் ஒழுக்கக் கலையே. உண்மையில் மக்கள் கிராமம், கோயில், ஷயர் என்று சிறு சூழுக்களாக வாழ்கின்றனர். குடும்பப் பற்று, பெற்றோர், பிள்ளை, கணவன், மனைவி என்று இருக்கின்ற உடல் சார்ந்த கட்டுகள், ஆன்மீகத் தளைகளாக மாறுகின்றன. அறிவினை ஆட்டையிட்டு மறைப்பது போலிருக்கும் விருப்புவெறுப்புகளும், சொத்து, பெருங்குடி, தங்களுடைய சமமில்லாத வேற்றுமைகளை நிருபிக்கின்ற மக்களுடைய அமைப்புகளும் காணக்கிடக்கின்றன. காலதேவன் அளித்த கணக்கிலடங்காப் பொருள்கள், இன்பம் தரவிருக்கின்ற பொருள்கள், 'ஒழுங்குடன் தொடர்புகொண்ட உரிமை' ஆகிய அனைத்தும் இருக்கின்றன. இவையெல்லாம் கடவுளின் திட்டப்படி அமைந்தவையாகும். இத் திட்டம் ஒரு மறைபொருள் சார்ந்த மக்களினச் சங்கமே. அதனைத் திருத்துவதற்குமுன் மதி சார்ந்த எச்சரிக்கை தேவை. 'இயற்கை ஒன்றைக் கூறுகின்றது; பகுத்தறிவு மற்றொன்றைக் கூறுகின்றது என்பது எப்போதும் இல்லாத ஒன்று'. இத்தகைய நீண்ட காலத்திற்குச் சோதனைக்குட்பட்ட சமுதாய அமைப்பினை வேண்டுமென்றே அழிக்கின்ற உரிமையை எந்த மனிதனும், எந்தப் புரட்சியும் பெற்றிருக்கவில்லை.

'Reflections' என்னும் தமது புகழ் பெற்ற நூலில், பர்க் இதே உணர்வோடு பிரெஞ்சுப் புரட்சியின் வேலை அணுத்தையும் கண்டித்தார். மற்றொரு நூலான 'Appeal From The New To The Old Whigs' என்பதில் புரட்சியை ஆதரித்த ஆங்கிலேயரைக் கண்டித்தார். பிரெஞ்சு அரசியல் சட்டத்திடமிருந்து தப்பியோடு மாறு காமன்ஸ் சபையினரிடம் வற்புறுத்திக் கூறினர். ஃபாக்ஸின் முறையீட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் நண்பர்களை இழக்க வேண்டியிருக்கின்றது என்று கூறினர். பழைய பிரெஞ்சு அரசாங் கத்தை அளவுக்குமீறிப் புகழ்ந்தார். அவர் தந்த விளக்கங்களில் தவறுகள் காணப்பெற்றன. எனினும், வருங்கால நோக்குடன் ஒரு கொள்கையினை வகுத்தார். இது பிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகளின் மோதலே என்றார். பாரிஸில் காணப்பெறும் இந்த விநோதமான, பெயரற்ற, தீவிர ஆர்வப் பெருக்குடன் ஒத்துப்போதல் கூடாது என்றும், லாவெண்டியில் (Lavendee) எதிர்த்துப் போராடும் கத்தோலிக்கக் குடியானவர்கள் 'கிறித் துவப் படை' என்றும் கூறினர். இங்ஙனம் தாம் இறக்கும்வரை புரட்சிக்கு எதிரான போரைப் பறைசாற்றி ஃபிரெஞ்சு அரச ஆதரவாளர்களுக்காகக் கடைசிச் சக்தியையும் பயன்படுத்தினர்.

'முரடான மக்கள் கூட்டத்திற்கு' எதிரான அவரது தாக்குதலுக்கு, ஆங்கிலத் தீவிரவாதிகள் பல துண்டுப் பிரசுரங் களின் மூலம் பதிலளித்தனர். ஆனால், வெகு விரைவிலேயே தாமஸ் பெய்ன் (Thomas Paine) என்பவருடைய 'மனிதனின் உரிமைகள்' (Rights of Man) என்னும் நூலைத் தங்களுடையதாக ஏற்றுக்கொண்டனர். அந் நூல் மலிவுப் பதிப்பாகப் பத்தாயிரக் கணக்கில் விற்பனையாயிற்று. பெய்னிடம் ஆங்கில உணர்வு சிறிதும் இல்லையென்பதை அவரது அமெரிக்க வாழ்க்கையும் பின்னணியிலிருந்த அவரது வாழ்க்கையும் தெளிவாக எடுத்துகாட்டு கின்றன. ஆனால், அவர் நல்ல தெளிவான ஆங்கிலத்தில் பர்க்கைக் கடுமையாகத் தாக்கினர்; ஃபிரெஞ்சு மக்களைப் புறக் கணித்துவிட்டு மன்னரவையை பர்க் புகழ்ந்தார் என்றும், இறக்கும் பறவையை மறந்து அதனுடைய எழில்மிகு இறகினிடம் இரக்கங்காட்டினர் என்றும் குறிப்பிட்டார். வாழ்பவர்களுக் காகத்தான் அரசாங்கமே ஒழிய, இறந்தவர்களுக்கன்று என்றும், அதனை மாற்றுதற்கு ஒவ்வொரு தலைமுறையினருக்கும் உரிமை உண்டு எனவும் அவர் வாதாடினர்; தமது நூலின் இரண்டாம் பகுதியில் குடியரசு வேண்டுமென்று கோரினர். ஜனநாயக நாடு களான பிரான்சுடனும், அமெரிக்காவுடனும் கூட்டுச் சேரவேண்டு மென்றார்; செல்வர்களிடம் தண்டனை வரி பெறவேண்டுமென்று வற்புறுத்தினர்.

இத்தகைய வேற்றுமைகள் 1791ஆம் ஆண்டில் கலகங்களாக மாறின. பர்மிங்காம் நகரத்துக் கும்பல், சீர்திருத்தக்காரர் விருந்தொன்றைத் தாக்கியது. புறச்சமயத்தவரின் கோயில்களை அழித்ததோடு பிரிஸ்ட்லி (Priestley) என்னும் தீவிரவாதத் தத்துவ அறிஞரை நகரத்தைவிட்டு ஓட்டியது. 1780-ல் இருந்த தீவிரவாதக் கொள்கையின் எச்சமாக அரசியல் சட்டம் சார்ந்த செய்திகள் சங்கம் (The Society for Constitutional Information) புதுப்பிக்கப்பெற்றது. லண்டன் புரட்சிச் சங்கம் (London Revolution Society) ஃபிரான்ஸின் பல பாகங்களிலுமுள்ள சங்கங்களோடு கடிதத் தொடர்புகொள்ளத் தொடங்கியது. மிதியடி செய்பவரான தாமஸ் ஹார்டி (Thomas Hardy) என்பவர் 1792ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 'லண்டன் நகரக் கடிதத் தொடர்புகொள்ளும் சங்கம்' (Corresponding Society) என்ற ஒன்றை நிறுவினர். வாரத்திற்கு ஒரு பென்ஸ் சந்தா கொள்ளும் அச் சங்கத்தின் மாகாணப் பிரிவுகளில், பல்லாயிரக்கணக்கான அங்கத்தினர் இருந்தனர். அது யாவருக்கும் ஓட்டுரிமை என்னும் திட்டத்தைக் கொண்டிருந்தது. இவைகளின் மூலமாகவும், ஷெஃபீல்டு, நார்விச், டண்டி போன்ற இடங்களில் இருந்த தொழிலாளர் சங்கங்களின் மூலமாகவும் பெய்னின் கருத்துகளும் ஃபிரெஞ்சுப் பிரசாரமும் குடிசை வாழ்வோர், நெசவாளர், கரங்கத் தொழிலாளர் ஆகியோரிடம் பரவின.

போர் நெருங்கியபோது இத்தகைய உணர்ச்சி ஆர்வம் உச்ச நிலையெய்தியது. 1791ஆம் ஆண்டு ஜூலையில் பாரிஸ் நகரை விட்டு வாரன்ஸ் (Varennes) நகருக்குச் சென்ற பதினோரும் லூயியைக் கைதியாகத் திரும்பக் கொண்டுவந்தபோது, தங்களைக் காத்துக்கொள்வதற்கும், அந்நிய அரசுகளுடன் சூழ்ச்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பெற்ற முடியாட்சியை முடிவிற்குக் கொண்டுவருவதற்கும் போரிட வேண்டுமென்று ஜிராண்டின்கள் (Girondins) தீர்மானித்தனர். 1792ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தாம் இறப்பதற்குச் சற்று முன்னரே பேரரசர் லியோபால்டு, நீண்ட காலத் தயக்கத்திற்குப் பிறகு ஃபிரெஞ்சுக்காரரின் சவாலை ஏற்றார். பிரஷ்யா தீவிரமாக இருந்தது. ரஷ்யாவோ தமது பகைவரின் கவனத்தைப் போலந்திலிருந்து திருப்ப ஆவல்கொண்டிருந்தது. ஏப்ரல் மாதத்தில் பேரரசின்மீது ஃபிரான்ஸ் போர் தொடுத்தது.

அப் படையெடுப்பு ஃபிரெஞ்சு அரசரை அழிப்பதாக இருந்தது. ஏனெனில், அதனால் ஜனநாயகத்தைக் காக்கத் தொண்டர்கள் விரைந்தனர். டான்டன் (Danton), மக்கள் கூட்டத்தினரைக்

கொதிப்படையச் செய்தார். மேலும், செப்டம்பர் மாதத்தில் பாரீஸ் நகரச் சிறைச்சாலையில் நடந்த படுகொலையுடன் பயங்கர ஆட்சி ஆரம்பமானது. குடியரசை நிறுவுவதற்காகப் பிரத்தியேக சபை (Convention) ஒன்று கூட்டப்பெற்றது. அர்கோனில் (Argonne) உள்ள வால்மியில் (Valmy) செப்டம்பர் 20ஆம் தேதி படையெடுப்பாளரை ஃபிரெஞ்சுக்காரர் தடுத்து நிறுத்தினர். ஜெர்மானியப் புரட்சியாளர்கள் அவர்களை மெய்ன்ஸ் (Mainz) பகுதிக்குள் வரவேற்றனர். லியோபோல்டினல் நசுக்கப்பெற்ற பெல்ஜியப் புரட்சி மறுபடியும் தலைதூக்கியது. நவம்பரில் ஜெமாப்பஸ் (Jemappes) என்னுமிடத்தில் ஆஸ்திரியரை முறியடித்த ஃபிரெஞ்சுப் படைகள், பிரசெல்ஸ் (Brussels) நகரில் புகுந்தன. போப்பின் மானியமாக இருந்த அவிக்னன் (Avignon) மட்டுமன்றி சவாயும் நீஸும் (Nice) இணைக்கப்பெற்றன என்பது அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு வெற்றியடைந்த புரட்சியும், ஆங்கிலத் தீவிரவாதமும் ஒன்றுக இணைந்தன. ஃபிரெஞ்சு வெற்றிகள் பிரிட்டனில் சொக்கப்பனைகளுடனும் மூவர்ணக் கொடிகளுடனும் கொண்டாடப்பெற்றன. பிரிட்டன் தனது படைகளை ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராகப் பயன்படுத்தாது எனக் கூட்டங்களிலும், பேராட்கள்மூலமாகவும் உறுதி அளிக்கப்பெற்றது. பெய்னும் பிரிஸ்ட்லியும் கன்வென்ஷன் சபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். ஃபிரஞ்சு மாதிரியைப் பின்பற்ற சில சீர்திருத்தக்காரர்கள் தயாராக இருந்தனர். புதிதாக நிறுவப்பெற்ற 'ஐக்கிய ஐரிஷ்காரர்' சங்கத்தின் உரையைக் கேட்டபிறகு, ஒரு ஸ்காட்டிய கன்வென்ஷன் சபை 'உரிமையுடன் வாழ்வது அல்லது மடிவது' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டது.

பிட், கிரன்வில், டன்டாஸ் ஆகியோர் தாங்கள் கொண்ட நடுநிலைமைக் கொள்கையில் பிறழாது, செப்டம்பர் மாதம்வரையிலும் பிரான்ஸிடமிருந்தும் அதன் பகைவர்களிடமிருந்தும் வந்த விண்ணப்பங்களைப் புறக்கணித்துவந்தனர் 'தீர்ப்பளிக்கும் நாள் வரையிலும் இங்கிலாந்து இதேபோன்றுதான் இருக்கும் என அறிவித்த பிட், அவதூறு சட்டத்தைக் கொண்டுவர ஃபாக்ஸிற்கு உதவினர். அது அரசியல் விவாதங்களின் வரம்பினைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை ஜூரிகளுக்கு அளித்தது. ஆனால், பெருகிவந்த ஆர்வம், இரு கட்சிகளும் ஈடுபட்ட கலகங்கள், குறிப்பாக ஸ்காட்லாந்தில் தோன்றிய கலகங்கள், பெல்ஜியத்திலிருந்த ஃபிரெஞ்சுப் படை ஆகியவை அவர்களைக் காப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு வற்புறுத்தின. அரசத் துரோகமான எழுத்து

களுக்கெதிராக வந்த உரிமைப் பேரறிக்கை, அரசியல் குற்றச் சாட்டுகள், குறிப்பாக பெய்ன்மீதான குற்றச்சாட்டுகள் (அவர் ஃபிரான்ஸிற்குத் தப்பி ஓடிவிட்டார்), பிரிட்டனில் இப்போதிருந்த ஆயிரக்கணக்கான நாடுகடத்தப்பெற்றவர்களைக் கட்டுப்படுத்த வந்த அந்நியர் சட்டம் (Aliens Act), நாட்டுப் படையின் ஒரு பகுதி யைத் திரட்டுதல் ஆகியவை காப்பு நடவடிக்கைகளிற் சிலவாகும். ஃபாக்ஸினால் எதிர்க்கப்பெற்று, ஆனால், பெரும்பாலான விக்கு களினால் ஆதரிக்கப்பெற்ற இவையெல்லாம் போரை மூட்டுவன அல்ல; அல்லது பதினாறும் லூயி (1793ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21ஆம் நாள்) தூக்கிலிடப்பெற்றதால் ஏற்பட்டவையு மல்ல. இது ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் செயல்களின் விளைவே யாகும்.

1792ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஃபிரெஞ்சு அரசாங்கம் வெளியிட்ட ஆணைகள், உரிமைகளை மீட்க விரும்பும் மக்கள் அனைவருக்கும் உதவி அளிப்பதாகக் கூறியது. ஃபிரெஞ்சுப் படைகள் எங்கெல்லாம் செல்கின்றனவோ அங்கெல்லாம் புரட் சிக்கு எதிரான அமைப்புகளை அழிக்குமென்று அறிவித்தன. ஷெல்ட் ஆற்றையும் மியூஸ் ஆற்றையும் இயற்கைச் சட்டங்களின் (Laws of Nature) அடிப்படையில் நாவாய்கள் செல்ல அனுமதிக்கப் பெற்றதாக அறிவித்தன. பல உடன்படிக்கைகளைக் கிழித் தெறிந்த இத்தகைய ஆணைகள், பெல்ஜியத்தையும் செவாயையும் கைப்பற்றியது நேர்மையென்றே குறிப்பிட்டன. நம்முடைய நட்பு நாடான ஹாலந்தைத் தங்களது பிரச்சாரத்தினால் வீழ்த்த முடியுமென்று பிரெஞ்சுக்காரர் நம்பினர். மேலும், ஹாலந்து விவகாரத்தில் பிரிட்டன் தலையிடுவதை பிரிட்டிஷ் ஜனநாயக வாதிகள் தடுத்துவிடுவார்கள் என்றும் நம்பினர். ஆனால், நமது அமைச்சர்கள் தெளிவான எச்சரிக்கைகளை விடுத்தனர். ஃபிரெஞ்சு அரசாங்க அமைப்பில் தலையிடும் திட்டம் எதையும் அவர்கள் தூண்டவில்லை. ஆனால், ஃபிரெஞ்சுக்காரர் 'மற்ற அரசாங்கங்களை அவமதிக்காது, அவைகளுடைய அமைதியைக் குலைக்காது, அவைகளுடைய உரிமைகளை மீறாது' தங்களுடைய தாக்கும் படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தினர். ஃபிரான்ஸின் மு டி வே ா வேறு விதமாக இருந்தது. டான்டனின் கூற்றுப்படி, பிற அரசர் களிடையே ஃபிரெஞ்சு அரசரின் தலையைக் கொய்வதன்மூலம் அறைகூவிவிட்டுக் கன்வென்ஷன் சபை, பெல்ஜியம் ஃபிரான்சுடன் இணைந்ததாகக் கூறி, பிரிட்டனுடனும் ஹாலந்துடனும் போர் என்று அறிவித்தது.

'போர்க்கோலங்கொண்ட கருத்துகளுக்கு எதிரானது' என்று பிட் குறிப்பிட்ட இப் போர் பண்டைக் காலப் போர்களி னின்றும் மாறுபட்டது. அது பிரிட்டிஷ் அரசியலை அழிக்கும் பயன்களைக் கொண்டிருந்தது. மூன்றும் ஜார்ஜை வெறுத்ததைப் போலவே, ஐரோப்பிய மன்னர்களையும் ஃபாக்ஸ் வெறுத்தார், அவர் பிட்டின்மீது அவநம்பிக்கை கொண்டார். விக்குக் கட்சியின் உரிமையில் மிகுந்த விருப்பங் கொண்டிருந்தார். ஃபிரான்ஸ் சுதந்திரத்திற்காகப் போராடியது என நம்பினர். ஆனால், விக்குகளில் பெரும்பாலோர் ஃபிரெஞ்சுக் கொள்கைகளை வெறுத்து, போரைப்பற்றிப் பிட்டின் கருத்தையே கொண்டிருந்த தால், கூட்டிணைப்பிற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கின. முதலில் வெட்டர்பர்ன் தற்போது லாஃப்பரோ பிரபு (Lord Loughborough) கருவூலத் தலைவராகப் பிட்டுடன் இணைந்தார். போர்ட் லண்டு, விண்டாம், ஸ்பென்சர் ஆகியோர் 1794-ல் பிட்டின் காபி னெட்டில் பதவியேற்றனர். அதே சமயத்தில் ஃபிட்ஸ்வில்லியம் (Fitzwilliam), அயர்லாந்தின் துணைப் பிரபுவாகப் (Lord-Lieutenant) பதவியேற்றார். பர்க்கின் நாவன்மை அவர்களுக்கு ஆதரவாக இருந்தது. அவர்களில் பலர் புரட்சியினல் பீதியடைந் திருந்தனர். டோரிகளைக் காட்டிலும் ஃபிரான்ஸின் பகைவர்க ளாக இருந்தனர். கட்சிகள் வலிமைபெற்றன. ஒரு கட்சி ஒழுங் கற்ற கூட்டத்தைப்பற்றிப் பேசியபோது, மற்றொன்று 'கொடுங் கோலரைப்'பற்றியும் அரசாங்கத்தின் ஆதரவும் ஊதியமும் பெற்ற வரைப்பற்றியும் கண்டித்தது. வர்க்கப் போராட்டம் முதன்முறை யாக அரசியலைப் பாதித்தது. இத்தகைய சூழ்நிலையில் சீர்திருத் தத்தில் புரட்சிக் கறை படிந்தது. எனவே, புயற்காற்று வீசும் பருவத்தில் நமது வீட்டினைப் பழுதுபார்த்தலாகாது என்ற விண்டாமின் வாதத்தை ஏற்றுக்கொண்டனர். இங்ஙனம் பாராளு மன்றச் சீர்திருத்தத்திற்காக கிரே கொண்டுவந்த மசோதா, பெருவாரியான ஓட்டுகள் வித்தியாசத்தில் தள்ளப்பெற்றது. வில்பர்ஃபோர்ஸ், பாக்ஸ், பிட் ஆகியோர் ஆதரித்தபோதிலும், 1793-ல் அடிமை வாணிப ஒழிப்பினை ஏற்கப் பாராளுமன்றம் மறுத்தது.

மக்களிற் பலர் ஃபிரான்ஸிற்கு எதிராக இருந்தனர் என்பதை நிரூபிக்கும் வகையில், சங்கங்களிலும் உரைகளிலும் தங்களுடைய பற்றுறுதியை வெளிப்படுத்தியதோடு, தம்மிஷ்டப்படி படையில் சேர்ந்தனர். அதனல் அத்தகைய பீதி காரணமற்றதாகும். எனினும், இந் நிலைக்குச் சீர்திருத்தவாதிகள் ஓரளவு பொறுப் பாயினர். போர் மூண்ட பிறகும் சிலர் ஃபிரான்சுடன் தொடர்ந்து கடிதத் தொடர்பு கொண்டிருந்தனர். பாராளுமன்றப் பிரதிநிதித்

துவமும் பொருளாதார நிலையும் மிக மோசமாக இருந்த ஸ்காட்லாந்தில் உள்நாட்டுப் போர் எழக்கூடிய வாய்ப்பு மிகுதியாக இருந்தது. கடுமையான நாடு கடத்தல் முதலிய தண்டனைகளை ஸ்காட்டிய நீதிபதிகள் வழங்கினர். எனினும், தண்டனை அடைந்தவர்களில் ஒருவரான மியூர் (Muir), பகைவருடைய தலைநகரமான பாரிஸில் தங்கிக் குடியரசிற்காகத் திட்டமிட்டிருந்த ஜரிஷ்காரருடன் ஸ்காட்டிய இயக்கத்தை இணைத்தார். அவருடன் தண்டனை அடைந்தவரான பால்மர் (Palmer) என்பவர், ஃபிரெஞ்சுக்காரரின் உரிமையுடன் இருந்தார்கள் என்ற காரணத்திற்காகவே அவர்களுக்கு எதிராக இப் போர் நடக்கின்றது எனத் தாம் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் கண்டித்தார். இரண்டாம் முறையாகக் கூடிய எடின்பரோ கூட்டம் ஒன்று, கலைவதற்குமுன் சில தீர்மானங்களை இயற்றியது. அவற்றின்படி மறுபடியும் கூடப் பாராளுமன்றம் தடை விதித்தாலும், ஹேபியஸ் கார்பஸை தள்ளிவைத்தாலும், இரகசியமாகக் கூட்டங்கள் கூட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஹனோவிரியப் படைகள் வந்து இறங்குவதைத் தடை செய்வதாக லண்டன் நகரப் பொதுக் கூட்டங்களில் உறுதிமொழிகள் எடுக்கப்பெற்றன. மேலும், ஒடுக்கும் சட்டங்களை பலாத்காரத்தினால் தடுக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. படைக்கலன்களைப் பயன்படுத்த வேண்டுமெனச் சில வெறியர்கள் வற்புறுத்தினர். ஷெஃபீல்டில் ஈட்டிகளைச் செய்தனர். இத்தகைய காரணங்களினால் 1794-ல் ஹேபியஸ் கார்பஸைத் தள்ளிவைக்கவும் ஹார்டி, ஹார்ன் டூக் (Horne Tooke) போன்றவர்களின்மீது குற்றஞ்சாட்டவும் அரசாங்கம் தீர்மானித்தது. ஆனால், லண்டன் ஜூரிகள் குற்றஞ்சாட்டப்பெற்றவர்களை முடிவாகவும் நேர்மையுடனும் விடுவித்தனர். மோசமான அறுவடைகள், விலைவாசிகளின் உயர்வு, நாட்டுப் படைச்சட்டத்தின்கீழ்க் கட்டாயப் படைப்பெருக்கு ஆகியவை துன்பத்தை மேலும் வளர்த்தன. 1795ஆம் ஆண்டில் 'உணவு வேண்டும், போர் வேண்டா', 'அரசர் வேண்டா, பிட் வேண்டா' என்று கூட்டங்கள் கூக்குரலெழுப்பின. அரசர்மீது கற்களை வீசினர். எனவே, 'வாய்ப்பூட்டு' (gagging) போடும் இரு மசோதாக்களை பெரும்பான்மையினர் நிறைவேற்றினர். அவைகளின்படி, ஐம்பது பேர்களுக்கு மேற்கொண்ட கூட்டங்களுக்கு மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதி பெற வேண்டுமென்பதோடு, அத்தகைய கூட்டத்தில் அவர் இருக்க வேண்டும். இத்தகைய அடக்குமுறைகளும் மாஜிஸ்ட்ரேட்டுகள், சொத்துரிமை கொண்டவர்கள், விடுதிக் காப்பாளர்கள் ஆகிய சமுதாய அமைப்பும் சங்கத்தினர் பதுங்கி இரகசியமாக வேலை செய்யக் காரணமாக அமைந்தன. இச் சங்கங்களின் சீர்குலை

விற்கு வேறு இரு கூறுகளும் காரணங்களாயிருந்தன. முதலாவ தாக நாத்திகத்திற்கும் (atheism), பகுத்தறிவின் ஆட்சிக்கும் (reign of reason) திருச்சபைகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இரண்டாவதாகப் புரட்சியிலேயே தோன்றிய மாற்றம், அதாவது, ஃபிரெஞ்சுப் புரட்சியானது முதலில் பயங்கர ஆட்சியாக மாறி, 1797ஆம் ஆண்டிற்குப் பிறகு பிற நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்தும் படைசார்ந்த வல்லாட்சியாக மாறியது. சுதந்திரத் தின்பேரால் செய்யப்பெற்ற குற்றங்களை ஏற்கும் கொள்கை வாதிகளை இங் நிலை சோர்வடையச் செய்தது.

இந்த ஆண்டுகளில் கொடூரமான, கேடுகள் நிறைந்த போர் நடந்துகொண்டிருந்தது. அப் போரில் புகழ்பெற்ற கார்நாட் (Carnot) என்பவரால் ஒழுங்கு செய்யப்பெற்று, மதிநுட்பம் மிகுந்த படைத்தலைவர்களால் நடத்திச்செல்லப்பெற்ற ஃபிரெஞ்சு சுக்காரர்கள் நேசநாட்டினரினும் மேம்பட்டிருந்தனர். பிரஷ் யர்கள் தங்களது படைகளைப் போலண்டிற்கு வேகமாகப் பின்னுக் கிழுத்துக்கொண்டனர். 1795ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சமாதானம் [பேசல் (Basel) உடன்படிக்கை] செய்துகொண்டு, ரைன் ஆற்றிற்கு மேற்கிலுள்ள அனைத்தையும் கைவிட்டனர். அதற்கு முன்பே அல்ஸாசிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் ஆஸ்திரியர் வெளியேற்றப்பெற்றனர். யார்க்கோமகனின் படை முதலில் டன்கிர்க்கிலிருந்தும் (1793), அதன் பிறகு பிளாண்டர்ஸி லிருந்தும் வெளியேற்றப்பெற்றது. இறுதியாக (1794) ஹனே வரின் எல்லைக்கே திருப்பி விரட்டப்பெற்றது. அதே சமயத்தில் ஹாலந்தை ஃபிரெஞ்சுக்காரர் கைப்பற்றினர். ஃபிரெஞ்சு அரச ஆதரவாளர்களுக்கு உதவவேண்டுமென்று பிரிட்டிஷ்காரர்கள் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. ஹூடையும் (Hood) பிரிட்டிஷ் கடற்படையையும் டூலோன் வரவேற்றது. ஆனால், நம்முடைய போர்போன் நட்பு நாடுகளான ஸ்பெயினும் நேபிள்ஸும் திறமை யற்றவைகளாக இருந்தன. ஆஸ்திரியப் படைவலிப் பெருக்கங் களும் கைகூடவில்லை. 1793ஆம் ஆண்டு இறுதிக்குள் அத் துறை முகத்தை ஃபிரெஞ்சுக்காரர்கள் திரும்பக் கைப்பற்றிக்கொண் டனர். பிரிட்டானியிலும் லோய்ரிக்கு நேர் தெற்கேயுள்ள லா வெண்டியிலும் (La Vendee) புரட்சி எதிர் இயக்கம் தோன்றிய தால், பிரான்ஸில் பிளவினை ஏற்படுத்த மற்றுமொரு வாய்ப்புக் கிடைத்தது. அந்த எதிர் இயக்கத்தினை பர்க்கும் விண்டாமும் தங்கள் பலம் கொண்டமட்டும் வற்புறுத்தினர். ஆனால், அரச ஆதரவாளர்களும், இளவரசர்களும், தலத்திருந்த தலைவர்களும் கடுமையாகப் பிரிந்திருந்ததனால், பிரிட்டிஷ் படைகளை ஒன்று திரட்டுவதற்குமுன்பே லா வெண்டி 1793-ல் வீழ்ந்தது. 1795ஆம்

ஆண்டில் கியூபராவுக்குப் படையெடுத்துச் சென்றது ஒரு கேலிக் கூத்தாகவே முடிந்தது.

போரை நடத்துவதில் பிரிட்டிஷார் வருந்தத்தக்க மாபெருந் தவறுகளைச் செய்தனர். எப்போதும்போல் முன்பின் யோசியாது படைக்குறைப்புச் செய்யப்பெற்றது. தளவாடங்கள் குறைவாக இருந்தன. தேவையான திட்டமின்றி அவசரமாகப் படையில் சேர்க்கப்பெற்ற புதுப்படைவீரரைக்கொண்ட புதிய படைப்பிரிவுகள் எழுந்தன. பதில் ஆளுக்காக ஊதியமளிக்கும் உரிமை, நாட்டுப்படை வாக்களிப்பினைக் குலைத்தது. யார்க் கோமகனுர் கடுமையான உழைப்பும் தீரமும் கொண்ட இளவரசர் என்றாலும், அனுபவமும் அறிவுக்கூர்மையும் அற்றவர். கடற்படையில் இருந்த பிட்டின் சகோதரரான சாத்தம் ஊக்கமற்றவராக இருந்தார். கூட்டிணைப்பு ஏற்பட்டதுடன் 1794-ல் முன்னைவிடச் சிறந்த மேற்பார்வை தொடங்கியது. போர்ட்லண்டினுல் உள்துறை அலுவலக வேலையிலிருந்து விடுவிக்கப்பெற்ற டண்டாஸ், போர்த்துறை, குடியேற்றங்கள் ஆகியவற்றின் செயலரானர். அதே சமயத்தில் சிறந்த ஆட்சியாளர்களான ஸ்பென்சரும் கார்ன்வாலிஸும் முறையே கடற்படைத் தலைமையையும் படைக்கலப் பணித்துறைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். இங்கிலாந்தில் படைமுதல் தலைவராக இருப்பதற்காக யார்க்கைக் கொண்டுவரவேண்டுமென்று பிட் வற்புறுத்தினர். படைவீரர்களின் நலனில் அவர் காட்டிய ஆர்வம் அவரைப் பயனுள்ள பொதுப் பணியாளராகச் செய்தது. ஆனல், கொள்கையில் ஏற்பட்ட கோளாறுகளை ஆள் மாற்றங்களினுல் ஈடுசெய்ய முடியவில்லை.

பிளாண்டர்ஸ், மேற்கு பிரான்ஸ், மத்தியதரைக் கடல், கடற்போர் என்று நான்கு போர்முனைகள் வாய்ப்பாக இருந்தன. ஒவ்வொரு முனையைப்பற்றியும் சிறப்பாகச் சில கூறமுடியும். ஆனல், இவை அனைத்திலும் படைகளைச் சிதறவிட்டு இருந்ததைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. காபினெட்டில் வலிமைமிக்கு இருந்தவர்கள், முரண்பட்ட கருத்துடையவர்களாக இருந்து வந்தனர். கிரன்வில் சக்திச் சமநிலையைப்பற்றியே மிகப் பெரிதாக எண்ணினர். இந்தியாவைப்பற்றியும் குடியேற்றங்களைப்பற்றியுமே டண்டாஸ் அதிக அக்கறை கொண்டார். வாணிபத்தில் அக்கறை கொண்டதால், பிட்டும் அவர் பக்கம் சாய்ந்தார். நமது கூட்டாளிகளுக்கு உதவி மானியங்கள் வழங்குவதன்மூலம் ஐரோப்பாவில் போர் வருமென்பது பிட்டின் தந்தையாரின் கொள்கையாகும். மேலும், பிரான்ஸ் ஒரு நீண்ட

போரைத் தாங்காது என்று அவர்கள் அனைவரும் நம்பினர். சமாதானம் செய்துகொள்வதற்கு பேரம் பேசும் வாய்ப்புகளைப் பெறுதல்பற்றியே மிகுதியாக எண்ணினர். கடலிலும் குடியேற்றங்களிலும் கருத்தை ஒருமுகப்படுத்தியதற்கு வேறு சில தூண்டுதல்களும் இருந்தன. ஃபிரான்ஸிடம் ஹாலந்து சிக்கியபோது, ஆரஞ்சு இளவரசர் இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தார். பகைவருக்கும், அவர்கள் மைசூரில் திப்புவுடன் செய்த சூழ்ச்சிகளுக்கும் டச்சுப் பேரரசு துணையாக நிற்பதைத் தடுக்கவேண்டுமாதலால், உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இங்ஙனம், 1795-ல் நன்னம்பிக்கை முனையையும் (Cape of Good Hope) ஈழத்தையும் (Ceylon) கைப்பற்றிய படையெடுப்புகள் மேற்கொள்ளப்பெற்றன.

மேற்கிந்தியத் தீவுகளிலிருந்துதான் மிகுந்த உழைப்புச் சேதம் ஏற்பட்டது. அங்கே குறிப்பாக ஹைட்டியில் (Haiti) நீக்ரோக்களிடையே ஃபிரெஞ்சுப் புரட்சிப் பிரசாரம் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது. சான் டோமிங்கோவின் (San Domingo) பாதி, ஃபிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்தது. எல்லா பிரிட்டிஷ் தீவுகளையும் ஒன்றுசேர்த்துச் செய்த வாணிபத்தைவிட அதிக வாணிபத்தை அந்த ஃபிரெஞ்சுக் குடியேற்றம் செய்தது. மேலும், ஃபிரான்ஸிற்கு வேண்டிய மூலப் பொருள்களை மேற்கிந்தியத் தீவுகளால் தடைசெய்யமுடியும் என்பதோடு, அவைகள் அட்லான்டிக் பகுதியில் போர்முறைத் திறம் மிகுந்து இருந்தன. ஃபிரெஞ்சுத் தோட்டத் தொழிலதிபர்களின் விண்ணப்பங்களுக்கு இணங்க, 1794-ல் பிரிட்டிஷ் படைகள் ஹைட்டியின் துறைமுகங்களைக் கைப்பற்றின. விரைவில் காடிலோப் நீங்கலாகவுள்ள ஃபிரெஞ்சுத் தீவுகளனைத்தையும் கைப்பற்றின. பிரெஸ்ட்டிற்கு (Brest) மேற்கே முந்நூறு கல் தொலைவில் ஹோ (Howe), புகழ்பெற்ற ஜூன் மாதம் முதல் நாளன்று ஃபிரெஞ்சுக் கப்பல்களை வழிமறித்து, அவற்றுள் கால் பங்கு போர்க்கப்பல்களை அழித்தார். எனினும், இத் துணிகரச் செயல்களினால், ஐரோப்பாவில் ஒரு முடிவினைத் தேடித் தந்திருக்கக்கூடிய படைகள் பயன்படாமற்போயின. மேலும், கடுமையான தட்பவெப்பமும் நோயும், மூன்றாண்டுகளில் 40,000 பிரிட்டிஷ்காரரைப் பலிகொண்டன. அதே சமயத்தில் அடிமைப் பிரச்சினையைத் தீர்க்க மறுத்ததால், நீக்ரோக்களின் புரட்சிக் கலகம் பரவியது. 1798ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஹைட்டியைக் காலிசெய்தனர். ஆனால், அதற்கு முன்பே அதன் காரணமாக ஸ்பெயினுடன் பூசல் தோன்றியது.

இது ஒரு முக்கியமான பேரிழப்பாகும். பிளாண்டர்ஸைக் கைவிட்டபோது, ஸ்பெயின், நேபிள்ஸ், சார்டீனியா ஆகிய வற்றின் உதவியோடு மத்தியதரைக் கடலிலிருந்து ஃபிரான்ஸை அடக்குதல் இன்றியமையாததாயிற்று. ஆனால், நாம் 1794ஆம் ஆண்டில் ஹைட்டியையும் கார்ஸிகாவையும் கைப்பற்றியது, ஸ்பானியரைச் சினங் கொள்ளச்செய்தது. அதே சமயத்தில் இழிந்த அரசர்களை அடக்கி ஆண்டுவந்த கோடோய் (Godoy), போர்ச்சுகலில் கொள்ளைப் பொருளில் பங்கு தருவதாகக் கூறிய ஃபிரெஞ்சுக்காரரின் வார்த்தையில் மயங்கினர். 1795-ல் ஃபிரான்ஸுடன் ஸ்பெயின் செய்துகொண்ட உடன்படிக்கை சார்டீனியாவை போனபார்ட்டினுடைய இடித்தாக்குதலுக்கு இலக்காக்கியது. இங்ஙனம் சார்டீனியா 1796-ல் போரினின்றும் வெளியேற வேண்டியதாயிற்று. போனபார்ட்டின் (Bonaparte) இத்தாலிய வெற்றிகளால் ஸ்பெயின் ஃபிரான்சின் பக்கம் சேர்ந்தது. அதனுடன் பிரிட்டிஷ்காரர் மத்தியதரைக் கடலை விட்டு வெளியேற நேர்ந்தது. இத்தாலியில் இழக்கும் போரில் ஈடுபட்டு இருந்த ஆஸ்திரியாவைத் தவிர, பிரிட்டன் தனித்து நின்றது. கடலின் சுற்றுப்புறத்தில் நமது ஆதிக்கம் மேலோங்கி யிருந்தது உண்மையே. பாண்டிச்சேரியும் ஃபிரெஞ்சு இந்தி யாவும் வீழ்ந்தன. 1796–97ஆம் ஆண்டுகளில் செயின்ட் லூஸியா வையும் (St. Lucia), அநேகமாக எஞ்சியிருந்த எல்லா மேற் கிந்தியத் தீவுகளையும், ஸ்பானிய டிரினிடாட்டையும் (Trinidad), டச்சு டெமராராவையும் (Demarara), ஜெனரல் அபர்க்ரோம்பி யையும் (General Abercromby) கைப்பற்றினர்.

போரின் முதற் பகுதியில் நெருக்கடி ஆண்டுகளான 1797–98, போரின் தன்மை மாறுவதற்கு வழிவகுத்தன. தாழ்நாடுகளின் துறைமுகங்களிலிருந்தும், ஃபிரான்ஸிலிருந்தும், ஸ் பெ யி னி லிருந்தும் வரும் படையெடுப்புகள் நம்மைப் பயமுறுத்தின. ஐரிஷ் அகதிகளின் ஆலோசனையின்பேரில், 1796ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 16,000 வீரர்களுடன் ஹோசியை (Hoche) ஃபிரெஞ்சுக் காரர்கள் அயர்லாந்திற்கு அனுப்பினர். அக் கப்பற்படை நமது கடற்படையை ஏமாற்றிச் சென்றது. பிரிட்டன்மீது இரக்கம் காட்டுவதுபோன்று வந்த ஒரு மாதப் புயற்காற்று ஃபிரெஞ்சுப் படையெடுப்பினைச் சிதறடித்தது. அதனால் பாண்ட்ரீ வளைகுடாவை (Bantry Bay) அடைந்த ஃபிரெஞ்சுக் கப்பல்கள் படைகளைக் கரையில் இறக்க முடியவில்லை. 1797ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் படையெடுப்பின் இரண்டாம் பகுதியாக அமைய விருந்த ஸ்பானியக் கப்பல்களை, ஜெர்விஸும் (Jervis) நெல்ஸனும் (Nelson) காடிஸிற்கு அருகில் செயின்ட் வின்சென்ட் (St. Vincent) முனைக்கப்பால் முறியடித்தனர்.

போரின் விளைவாக நாடு பழுதுபட்டது. மோசமான அறுவடைகளும் பால்டிக் அங்காடி இழப்பும், 1795-ல் கோதுமையின் விலையைப் பஞ்சகால வீதமான 1 குவார்ட்டர் 108 ஷில்லிங்கிற்கு உயர்த்தின. ஒருசில ஆண்டுகளுக்குப் பிறகு சில சமயங்களில் 120 ஷில்லிங்காகவும் இருந்தது. அதே சமயத்தில் பொதுவாக ஏறக்குறைய 100 சதவீதத்திற்கு விலைகள் உயர்ந்தன. வேகமாக வந்த நில அடைப்பாலும், பருத்தி, இரும்புத் தொழிற் சாலைப் பகுதிகளில் ஏராளமான மக்கள் குடியேறியதாலும் சிறு தர பழைய இங்கிலாந்தின் இணைவு குலைந்தது. இறக்குமதியான தானியங்களின்மீது அளிக்கப்பெற்ற ஊக்க ஊதியம், கோதுமையினால் செய்யப்பெறுத ரொட்டியை உண்ணுமாறு மக்களைத் தூண்டுதல்போன்ற சிறு கழுவாய்களோடு, முக்கியமான சட்டம் ஒன்றைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. 'ஸ்பீன்ஹாம்லண்டு' மேஜிஸ்டிரேட்டுகள், பிற மேஜிஸ்டிரேட்டுகளைப்போலவே சில சமயங்களில் இருந்த வழக்கமான தீர்வையிலிருந்து நிதி அளிப்பதன் மூலமாகக் கூலியை உயர்த்தும் பழக்கத்தை நீட்டித்தன. அதனால் அச் சட்டம் 'ஸ்பீன்ஹாம்லண்டு' (Speenhamland) சட்டம் என்று பரிகாசப் பெயர் பெற்றது. இந்தச் சட்டம் புரட்சி வராமல் தடுத்தது என்று சொன்னால், அது இரவலர் தீர்வையை இரட்டிப்பதற்கும் உள அமைதியைக் குலைப்பதற்கும் அளிக்கப்பெற்ற விலையாகும்.

இச் சமயத்தில் 100 மில்லியன் பவுன் போர்க்காலக் கடனைப் பிட் திரட்டினார். ஆனால், படையெடுப்புப் பயம், பீதியைக் கிளப்பியது. அதிகத் தங்கம் வெளிநாடுகளுக்குச் சென்றது. நாட்டு பாங்குகள் முறிந்தன. இங்கிலாந்து பாங்கின் சேமிப்புகள் அபாயகரமான அளவிற்கு மிகக் குறைந்திருந்தன. அதன் விளைவாக 1797ஆம் ஆண்டில் ஒரு பவுனுக்கு மேற்பட்ட தொகையை நாணயமாக அளிக்க மறுப்பதற்கு அந்த பாங்கு அதிகாரம் பெற்றது. மேலும், 1819ஆம் ஆண்டுவரை நீடித்திருந்த காகிதச் செலாவணிக் (Paper Currency) காலம் தொடங்கியது. மக்களிடையே பணம் மீதமாக இருந்தது என்பதைப் பலவகையான நாட்டுப் பற்றுக் கடன்கள் விளக்குகின்றன. ஆனால், நேர்முக வரிகளைக் கொள்வதற்குச் சரியான அமைப்பு இல்லை. மேலும், வரி கொடாது தப்பும் முறை பெருகியிருந்தது. எனினும், 1797-98ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் வரிச்சுமையை உறுதியான முறையில் மாற்றிப் பங்கிட்டன. மதிப்பிடப்பெற்ற வரிகளை பிட் மும்மடங்காக்கினார். நிலவரியை ஒரு பவுனில் 4 ஷில்லிங் என்று நிரந்தரமாக்கினார்; (மீட்சி உரிமையோடு) வருமான வரியைப் புகுத்தினர். அது 60 பவுன் வருமானத்

திலிருந்து தொடங்கி மேலே சென்று 200 பவுனும், அதற்கு மேற் பட்ட வருமானத்திற்கு வரிவீதம் 2 ஷில்லிங்குமாக உயர்ந்தது.

1797ஆம் ஆண்டு தோன்றிய பேரிடரான நாவாய்க் கலகங் களுக்கு வறுமை ஓரளவு காரணமாகும். அதன் விளைவாக கான் சோல்கள் (Consols) 48 ஆகக் குறைந்தன. அதனால் பகைவருக் கெதிரே நம்மைப் பாதுகாப்பற்றவர்களாக்கியது. எனினும், கலகங்களுக்கு வறுமைமட்டும் காரணமன்று நாவாய்ப் படை நடத்தப்பெற்ற விதம் நாட்டை உருக்குலைப்பதாக இருந்தது. சமாதான காலத்தில் கப்பலாட்களை முறையாகப் பாராளுமன்றம் குறைத்தது போர்க்காலத்தில் ஆள்திரட்டும் குழுக்களின் மூலமாக அவ்வித ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொண்டது; அல்லது சிறைச்சாலைகளைக் காலிசெய்வதன் மூலமாக ஆட்களைக் கொண்டது. இரண்டாம் சார்லஸின் ஆட்சிக் காலத்தில் திறமை யுள்ள கடலாளுக்கு அளிக்கப்பெற்ற மாத ஊதியமான 22 ஷில்லிங் 6 பென்ஸ் மாறுமலே இருந்தது. இச் சிறு தொகையும் கப்பலுக்குப் பணம் அளிக்கப்படும்வரையில் நிறுத்தி வைக்கப்பெற்றது. இதற்கிடையில் கடலோடிகளின் மனைவி மக்கள் பட்டினியால் வாட வேண்டியதாயிற்று. அவர்களுக்கு அளிக்கப்பெற்ற உணவுப் பொருள்கள் மிகக் கேவலமாக இருந்தன; மோசடி மலிந்திருந்தது. கரையைவிட்டு நீங்குதல் போன்ற மிகச் சாதாரண உரிமைகளும் அநேகமாக அளிக்கப் படவில்லை. தனிப்பட்ட விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பெற்ற போது, ஸ்பிட்ஹெட்டில் (Spithead) இருந்த கப்பற் படைப் பிரிவினர் ஏப்ரல் மாதத்தில் முறையாகத் திட்டமிட்டுச் செய லாற்ற முற்பட்டனர். அவர்கள் கடலில் செல்ல மறுத்தனர். பல அதிகாரிகளைச் சிறைப்படுத்தி, பேச்சுவார்த்தை நடத்துவதற் காகப் பிரதிநிதிகளை நியமித்தனர். நடுத்தரமான அமைதி வழியில் இப் பிரிவினர் நடந்துகொண்டனர். தங்களது அன் பிற்கும் ஆதரவிற்கும் உரியரான 'பிளாக் டிக்' (Black Dik) எனச் செல்லமாக அழைக்கப்பெற்ற ஹோவின் (Howe) மூலமாகத் தங்களது முக்கியக் கோரிக்கைகள் நிறைவேறியவுடன் அவர்கள் வேலைக்குத் திரும்பினர்.

ஆனல், முன்னாள் கப்பல் அதிகாரியும் இயல்பான புரட்சி யாளருமான ரிச்சர்டு பார்க்கர் (Richard Parker) என்பவரால் நடத்திச் செல்லப்பெற்ற நோரிலிருந்த (Nore) கப்பற்படைப் பிரிவினர் சிலர், லண்டன் நகர ஆதரவாளர்களின் தூண்டுதலால் கிளர்ச்சி ஆர்வம் கொண்டிருந்தனர். அவர்களது அறிக்கைகள், அறிவு யுகத்தைப்பற்றியும் உடன்பிறந்தார் உணர்வுக் கருத்துகள்

பற்றியும் அதிகமாகப் பேசின. அவர்களிடையே ஐரிஷ்காரர்கள் நிறைய இருந்தது, இத்தகைய நிலைக்குக் காரணமாக இருந்திருக்கலாம். யார்மவுத்தைத் (Yarmouth) தளமாகக்கொண்டிருந்த வடகடல் கப்பற்படையினரில் ஏறக்குறைய எல்லோரும் நோர் கலகக்காரருடன் இணைந்ததால், டெக்ஸலுக்கு அருகே இருந்த டன்கன், இரு கப்பல்களைக்கொண்டே அந்நியப் படையெடுப் பினைத் தடுத்து நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இது பயங் கரமான ஆபத்தாகும். குடும்ப வாக்குறிமை மசோதா கொண்டு வர இச் சமயத்தைத் தேர்ந்தெடுத்த ஃபாக்ஸும் கிரேயும் நிலைமையைச் சீர்படுத்தவில்லை. மோசமான தோல்வி கண்டதால், அவர்கள் இருவரும் பாராளுமன்றத்திலிருந்து விலகுவதாக அறிவித்தனர். ஆனால், கப்பலாட்களின் துயரங்களைத் துடைத்தது னலும், கடுமையான நடவடிக்கைகளாலும், அவர்களுக்கெதிராக மாறிய பொது மக்கள் கருத்துகள் ஆகியவற்றினாலும் பத்தில் ஒன்பது மாலுமிகள் மறுபடியும் வேலைக்கு வந்தனர். அக்டோ பரில் அவர்களை நடத்திச்சென்ற டன்கன், காம்பர்டவுனில் (Cam-perdown) டச்சுக் கடற்படையை அழித்தார். கொள்ளையிடுதல், கொடுஞ்செயல் புரிதல் ஆகியவற்றால் பல டச்சுக் கப்பல்கள் மூழ்கின. எஞ்சியிருந்த ஒரு சிறு கூட்டமே ஃபிரான்ஸிற்குத் தப்பியோடியது. அதே சமயத்தில் பர்க்கும் அவரைப்போன்ற பலரும் மரணதண்டனை அடைந்தனர்.

இந் நிகழ்ச்சி 1795ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்ட பிட்டின் அமைதிக்கான முயற்சிகள் இறுதியாக முறிந்ததோடு தற் செயலாக இணைந்தது. தெர்மிடோரியன் (Thermidorian) எதிர் வினைக்கும் ஃபிரஞ்சு அரச ஆதரவாளர்களின் தோல்விக்கும் பின்னர், நிலையான ஃபிரெஞ்சு அரசாங்கத்துடன் சமாதானம் செய்துகொள்ளும் வாய்ப்பு அதிகமிருந்ததாகக் காணப்பெற்றது. பிரஷ்யாவின் வீழ்ச்சி, ஸ்பெயினின் பகைமை, ஆஸ்திரியாவின் தோல்வி, நம்மிடை ஏற்பட்ட பணநெருக்கடி ஆகியவற்றால் சமா தானம் செய்துகொள்ளுதல் இரட்டிப்பு அவசரமாகியது. நமது முதல் யோசனைகளை ஃபிரெஞ்சு 'செயலாண்மைக் குழு' (Directory) மதிப்பற்ற முறையில் நிராகரித்தது. 1797-ல் நாம் மேலும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தோம். ஏனெனில், அப்போது ரஷ்யாவில் காதரைன் இறக்க, வெறியரான பால் பட்டத்திற்கு வந்தார். அவரை நம்புதற்கில்லை. பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியா விற்கும் இடையே இருந்த பூசலைத் தவிர்க்கச் செய்த நம்முடைய முயற்சிகள் வீணாயின. காம்போ ஃபோர்மியோ (Campo Formio) உடன்படிக்கை செய்துகொண்ட ஆஸ்திரியா, போனபார்ட்டிற்குப் பணிந்தது. அவ் வுடன்படிக்கையின்படி, வெனிஸ் போர்க்

கொள்ளைப் பொருளில் ஒரு பங்கிற்காக, ரைன் ஆற்றிக்கு மேற்கே இருந்த அனைத்தையும் அது தியாகம் செய்தது.

நமது எதிர்ப்பைப் பொருட்படுத்தாது செய்துகொள்ளப் பெற்ற இந்த உடன்படிக்கை, ஃபிரெஞ்சுக்காரருடன் ஒரு தனிப் பட்ட உடன்படிக்கை செய்துகொள்ள பிட்டைத் தூண்டியது. நன்னம்பிக்கை முனையும் டிரினிடாடும் தவிர, வெற்றிபெற்ற மற்றெல்லாப் பகுதிகளையும் விட்டுக்கொடுப்பதாகவும், பெல் ஜியம், லக்ஸம்பர்க் (Luxembourg) ஆகிய பகுதிகளை ஃபிரஞ்சுக் காரரே வைத்துக்கொள்ள அனுமதிப்பதாகவும் அவர் அறிவித் தார். ஆனல், போனபார்ட்டின் பேரவாவும் யாகோபியக் கட்சி யினரின் அதிகாரவெறியும், ஃபிரக்டிடார் (Fructidor) புரட்சியின் (1797ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்) மூலமாகச் சமாதானக் கட்சியை வீழ்த்தின. 'செயலாண்மைக் குழு'வினர் இத்தாலியை அழித்துக் கவர்வதற்கும் போனபார்ட்டிடம் பணிவதற்கும் ஆன அறிகுறியாகவும் திருப்புமுனையாகவும் இப் புரட்சியமைந்தது. 1798-ல் ஃபிரெஞ்சுக்காரர் ரோமின்மீது படையெடுத்தனர்; போப்பாண்டவரைச் சிறையிட்டனர்; ஸ்விட்ஸர்லாந்தின் சுதந் திரத்தைப் பறித்ததன்மூலமாக இறுதி ஜனநாயக மாயையை அழித்தனர். கடற்படையின் ஆதிக்கம் இன்றி இங்கிலாந்தின் மீது படையெடுப்பது இயலாது என்று அறிந்து அதனை ஒத்திப்போட்ட போனபார்ட், கோடைக்காலத்தில் மால்ட்டா வைக் கைப்பற்றி, எகிப்திற்கு முன்னேறினர். இதனல் மத்தியதரைக் கடலில் மறுபடியும் புகுவது என்று ஆங்கிலேயர் முடிவுகட்டினர். இருமுறை போனபார்ட்டைச் சந்திக்கத் தவறிய நெல்சன் (Nelson), அவரை ஆகஸ்ட் மாதம் முதல் தேதியன்று எகிப்தில் வளைத்துக்கொண்டார். நைல் போரில் மணல்திட்டு களுக்கிடையே போனபார்ட்டின் நாவாய்ப் படையை அவர் நாச மாக்கினர். அளவுக்கு மீறிய நம்பிக்கைகொண்ட நேபிள்ஸ் அரசர், இந்த நைல் வெற்றியைச் சாதகமாக்கிக்கொண்டு ரோம் நகர்மீது படையெடுத்துச் சென்றார். அதே சமயத்தில் நமது தலைசிறந்த படைவீரர்களில் ஒருவரான சர் சார்லஸ் ஸ்டுவர்ட்டு (Sir Charles Stuart) மைனர்காவைத் திறமையாகக் கைப் பற்றினர்.

இங்ஙனமாக, இரண்டாம் கூட்டிணைப்புப் போர் தொடங் கியது. மாயை நீங்கித் தன் தவற்றிற்காக வருந்திய ஆஸ்திரியா, ஆங்கிலப் பணத்தைக்கொண்டு புதுப் படைகளைப் பெருக்கி, ஃபிரெஞ்சுக்காரரை ரைன் ஆறுவரைத் துரத்தியது. மத்தியக் கிழக்கைத் தமக்குச் சொந்தமாகக் கருதிய ரஷ்யப் பேரரசரான

பாலும் (Paul) அதுபோன்ற செயல்களில் ஈடுபட்டார். அவரது ஒப்பற்ற படைத்தலைவரான சுவோரோஃப் (Sovoroff), பகைவரை இத்தாலியிலிருந்து விரட்டினர். ஒருமுறை சிசிலிக்குத் துரத்தப் பெற்ற போர்போன் அரசாங்கம் விரைவில் நேபிள்ஸுக்குத் திரும்பியது. புரட்சியாளரைக் கொடுமைப்படுத்த அந்த அரசாங் கத்திற்கு நெல்ஸனின் பெயர் துணையாக இருந்தது. ஆனால் இத்தகைய நம்பிக்கைகள் மிகவிரைவிலேயே நாசமாயின. ஆஸ்திரியாவின் வெறும்சுயநலத்தை பிறரைப்போல ரஷ்யாவும் கண்டது. இடர்மிகுந்த ஆல்பைன் போர்களில் சுவோரோஃப் தனித்துப் போராடிக் கலைப்படையுமாறுவிட்ட ஆஸ்திரியர், அதே சமயத்தில் பிரஷ்யாவை விஞ்சவும், பீட்மான்டைத் (Piedmont) தங்களுக்காகக் கைப்பற்றவும் திட்டமிட்டனர். எனவே, ஒத்துழைப்பிற்கான பாவனை அனைத்தும் மறைந்தன. எதிர்பார்த்த ஆரஞ்சு முன்னிலை மீட்சி தோன்றுததால், ஹாலந்தின் மீதான ஆங்கிலோ-ரஷ்யப் படையெடுப்பு படுதோல்வியடைந்தது. மறுபடியும் வாய்ப்பற்ற படைத் தலைவராக இருந்தவர் யார்க் கோமகனுரேயாவர். அவர் அல்க்மார் (Alkmaar) உடன்படிக்கையின் மூலமாக தமது படையை வெளியேற்ற இசைந்தார்.

வெற்றி, தோல்விகள் மாறிமாறிவந்த நிலை 1799ஆம் ஆண்டு அக்டோபருடன் முடிவடைந்தது. அப்போது எகிப்திலிருந்து திரும்பிவந்த போனபார்ட், டிசம்பர் மாதத்தில் தோன்றிய ப்ருமேயர் (Brumaire) புரட்சியினால் கான்ஸலாகப் பதவியேற்றார். பிரிட்டனுடன் சமாதானம் செய்துகொள்ள அணுகினர். அவரது பதவிக்காலம் நீடித்து இருக்குமென்பதில் நம்பிக்கை கொள்ளாத தாலும், ஒரு ஃபிரெஞ்சுப் படை ஜினேவாவிலும், மற்றொன்று எகிப்திலும் முடங்கிக் கிடந்ததைக் கண்டும், ஆஸ்திரியாவுடனை கூட்டுறவை நம்பியும்; தமது காபினெட் சமாதானப் பேச்சை நிராகரித்தது. இச் செயலுக்குக் காரணமில்லாமலில்லை. ஆனால், போர்போன் முன்னிலை மீட்சியே சமாதானத்திற்கான சிறந்த உறுதி என பதிலளிக்கும் தவற்றைச் செய்தனர். போனபார்ட் டின் தன்னியல்பான சக்தியையும், ஃபிரெஞ்சுக்காரரின் மனவுறுதி மீண்டதையும் நமது வெளிநாட்டு அலுவலகம் அறியாதிருந்தது. ஃபிரான்ஸில் அரச ஆதரவாளர் கிளர்ச்சிகள் தோன்றுமென்ற கனக்கனையும், உறுதியான பெல்ஜியம், ஃபிரெஞ்சு முன்னிலை மீட்சி ஆகிய நமது இரு முக்கியக் குறிக்கோள்களைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத ஆஸ்திரியாவையும் அதிகமாக நம்பியது. 1800ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுக்காரர் பெற்ற பெரு வெற்றிகள் நமது தப்புக் கணக்கை அம்பலப்படுத்தின.

ஆஸ்திரியாவின் இத்தாலியப்படைகளைப்போனபார்ட் முறியடித்த களமான மாரென்கோவும் (Marengo), ஹோஹென்லிண்டனும் (Hohenlinden) வியன்னாவிற்கான வழியைத் திறந்துவிட்டன. 1801ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஏற்பட்ட லூனேவில் (Luneville) உடன்படிக்கையினால் ஆஸ்திரியா போரினின்று விலகியது. ஜெர்மனியைத் திருத்தியமைக்கும் பொறுப்பை வெற்றியாளரான போனபார்ட்டிடமே விட்டது. சிஸால்பைன் (Cisalpine), லிகூரியன் (Ligurian), ஹெல்வீடியன் (Helvetian), படேவியன் (Batavian) குடியரசுகள் இணைக்கப்பெற்றதால் போனபார்ட்டின் வலிமை பெருகியது. இதற்கிடையில் இத்தாலியில் ஆஸ்திரியக் கோரிக்கைகளும், ஹாலந்தில் நடந்த தோல்வியும், மால்டாவின் எதிர்காலத்தைப்பற்றிய பிரிட்டிஷாரின் தயக்கமும், ரஷ்யப் பேரரசர் பாலை ஆத்திரமடையச் செய்தன. பிரஷ்யாவுடன் நெருங்கிய அவர், கீழ்நாடுகளைப் பிரான்சுடன் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புக் கூறுகளை ஆராயவும், பிரிட்டிஷ்காரரின் ஐரோப்பிய முற்றுகையை முறியடிப்பதற்காக ஒரு புதிய வடக்குச் சங்கத்தை அமைப்பதற்காகவும் பொறுத்திருந்து செயலாற்றத் துணிந்தார்.

இத்தகைய இருளடைந்த, இடர் மிகுந்த ஆண்டுகளில் நாடு என்னும் நாவாய், புயலில் பழுதுருதபடி காத்தவர் பிட். வாய்ப்புக்கேடும் தவருன முடிவுகளும் காணப்பெற்ற போதிலும், பிட்டின் நிலை பிற சமயங்களைக் காட்டிலும் இப்போது மேம்பட்டு விளங்கியது. 1796ஆம் ஆண்டு தேர்தலினாலும், கானிங், காஸில்ரே, பர்ஸிவெல், ஹஸ்கிஸ்ஸன் போன்ற, பிற்காலத்தில் தமக்கு வாரிசாகவந்த இளைஞர்களின் ஆதரவினாலும் அவரது வலிமை பெருகியது. ஸ்விட்ஸர்லாந்தியரும் இத்தாலியரும் செய்த கொடுமையானது பிரிட்டிஷ் ஜனநாயகவாதிகளில் பெரும் பாலோரை மாற்றமடையச் செய்தது. ஆனால், அவர்கள் உள்ளங்களில் இடர் மிகுந்த அச்சம் குடிகொண்டிருந்தது. கடிதத் தொடர்பு சங்கத்தின் (Corresponding Society) எச்சமாக இருந்த 'ஐக்கிய ஆங்கிலேயர்' (United Engishmen), பிரான்ஸிலும், அயர்லாந்திலும் இங்கிலாந்தின் மீது படையெடுக்கும் திட்டத்தை வகுத்தவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். 1799-ல் புதிய சட்டங்கள் சில சங்கங்களை அழித்தன. கைதியைக் கொண்டு வரும்படி நடுவர் இடும் ஆணை மறுபடியும் தள்ளிவைக்கப் பெற்றது. இதைப் பயன்படுத்திப் பல ஜனநாயகவாதிகள் கைது செய்யப்பெற்று, விசாரணையின்றியே சிறைபிடிக்கப் பட்டனர். அதே ஆண்டில் அரசியல் அச்சங்களினாலும், பொருளாதாரக் கொள்கை அடிப்படையிலும், செயற் கூட்டுறவுகள்

(Combinations) அல்லது தொழிற்சங்கங்களுக்கு எதிராகச் சட்டம் ஒன்று வந்தது. உள்நாட்டுப் போரைப்போன்று கட்சிகள் ஒன்றையொன்று மூர்க்கமாக எதித்துக்கொண்டன. விக்கு கட்சியினரான டையர்னே (Tierney) பொதுப் பணியைத் தடை செய்வதாகப் பிட் குற்றம் சாட்டினர். மேலும், அவருடன் புட்னே காமன் (Putney Common) என்னுமிடத்தில் கையில் துப்பாக்கியேந்தி, சட்ட வரம்பிற்குட்பட்ட இருவர் போரில் ஈடுபட்டார். பொதுப் பெரு விருந்தொன்றில் 'மக்களின் இறை மைக்கு' வாழ்த்துரை வழங்கியதற்காக ஃபாக்ஸினுடைய பெயர் பிரிவு கவுன்சிலிலிருந்து நீக்கப்பெற்றது.

பிற நாடுகளின் உரிமைகளுக்குப் பகையாக இருந்தது புரட்சி யென்பது வெளிப்பட்டது. புரட்சி எதிர்ப்புணர்ச்சியானது, வில்பர்போர்ஸ் போன்றவர்களுடைய சமாதான முயற்சியைப் புறக்கணித்தது. புகழ்வாய்ந்த பத்திரிகையாளரான வில்லியம் காப்பட் (Cobbet) என்பாரின் தலைமையில், போர்ச் சார்புடைய மலிந்த பத்திரிகைகள் வெளிவந்தன. கானிங்கும், அவரது நண்பர்களும் 1798-ல் 'Anti Jacobin' என்னும் இதழை வெளி யிட்டனர். அதில் உலகப் பற்றுடைய கொடையாளர்; அல்லது தோல்விஅடிப்படையிலெழும் சமாதானம் போன்றவைகளுக்கெதி ராக நகைச்சுவையும், நெருப்பு உமிழும் கண்டனங்களும் நிறைந் திருந்தன. உறுதி உள்ளம் படைந்த சிறு நாடாகிய பிரிட்டனின் பாதுகாப்பில் உணர்ச்சியோடு அது தீவிரப் பங்குகொண்டது. ஒவ்வோராண்டும் எல்லோருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய சீர்திருத்தத்தில் இடர்பற்றியும், நாடுகளிடையே மிதமானதாக இருக்கும் மகிழ்ச்சி மிகுந்த பிரிட்டனில் ''சுதந்திரமும், சட்டமும் ஐக்கியமடைதல்'' கருத்தியலான விதிமுறைகளின் அழிவுத் தன்மை, இடுக்கணை ஏற்று, அதனை எதிர்த்து நிற்பதன் நன்மைகள் ஆகியவைபற்றியே பிட்டின் உரைகள் அமைந்தன.

ஐரோப்பா வீழ்ச்சி யுற்றதனால் ஆங்கிலேயருக்கு உள்ள உறுதி இன்றியமையாத் தேவையாக இருந்தது. பிரிட்டானியி லிருந்து ரிவீர்ா (riviera) வரையிலுள்ள கடல்முனை முழுவதிலும் கொண்டுசென்ற பயனற்ற படையெடுப்புக்களினால் 1800ஆம் ஆண்டில் நிகழ்ந்த நமது போர் முயற்சி பாழ்பட்டுப்போனது. மைனர்கா அல்லது சிசிலியிலிருந்து கொண்டு ஃபிரெஞ்சு செய்தித் தொடர்பினை அறுப்பயதற்கு நாம் ஒன்றும் செய்யவில்லை என்று ஆஸ்திரியர் குறை கூறியதற்குக் காரணம் இருந்தது. காபினெட் சேர்ந்து பிளவுபட்டு இருந்தது. டண்டாஸும், கிரன்வில்லும் போட்டிப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கினர். உடன்படிக் கையின் உரிமைக் கட்டுப்பாடுகளில் காபினெட் உறுப்பினர்

முரண்பட்டு நின்றனர். மன்னரும், கிரன்வில்லும், விண்டாமும், போர்ட்லண்டும் பகைவருக்கு விட்டுக்கொடுக்கக்கூடாது என்ற கட்சிக்குத் தலைமை வகித்தனர். எனினும், பிரிட்டன் தனது சரியான மூல முதற்பொருள்களில் வெல்லமுடியாததாக இருந்தது என்பதை தனிப்பட்ட பெரு வெற்றிகள் வெளிப்படுத்தின. மைசூரின் ஆதிக்கத்தை வெல்லெஸ்லி அழித்தார். ஸ்ரீரங்கப் பட்டணத் தாக்குதலில் திப்பு தம் உயிரையே இழந்தார். அதனால் வெல்லெஸ்லி, பிரிட்டிஷ் பகுதியை ஒரு கடலிலிருந்து மற்றொரு கடல்வரை கொண்டுசென்றார். 1800-ல் மால்டா நம் கையில் சிக்கியது. 1801-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரால்ப் அபர்க் ரோம்பி தம்முயிரை இழந்தார். எனினும், ஃபிரெஞ்சுக்காரர் எகிப்தை ஒப்படைக்குமாறு செய்த அபோகிர் (Aboukir) வெற்றியைத் தேடித்தந்தார். ஸார் மன்னர் பாலின் வெறிச்செயல்களால் சோர்வுற்ற அவரது அரசவையினர் அவரைக் கொன்றனர். அவரது மகனரான முதலாம் அலெக்ஸாந்தர் நடுநிலைமையை நாடினர். நமது நாவாய்ப் படையின் நாடிபோன்ற பால்டிக் பகுதியிலிருந்து வரும் உணவுப் பொருள்களை அழிக்கும் கருவியாகப் ஃபிரெஞ்சுக்காரர்களால் பயன்படுத்தப்பெற்ற வடக்கு சங்கம் கோபன்ஹேகனில் (Copenhagen) நெல்சன் பெற்ற வெற்றியின் விளைவாக, ஏப்ரல் மாதத்தில் அழிக்கப்பட்டது. அரண்மிகுந்த குறுகிய கடலில் தமது கடற்படையைச் செலுத்தி, தமது மங்கிய கண்ணில் தொலைநோக்கியை வைத்து, தமது படைத்தலைவர் பின்வாங்கும்படி குறிப்பிட்டபோது, நெல்சன், டேனிஷ் கப்பல்களைத் தனது படைக்கும், கரைப்பீரங்கிகளுக்கும் இடையே தள்ளினர். நயமும் பயமும் காட்டி டேனியர்களைப் பணியவைத்தார்.

இத்தகைய வெற்றிகள் முடிவடைவதற்குள், பிட்டின் மந்திரி சபை கவிழ்ந்தது. டியூடர் (Tudor) காலத்திலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தில் எக்கிலசின் (Achilles) குதிகால்போன்றிருந்த அயர்லாந்தினால் வீழ்ந்தது.

ஐரிஷ் பிரச்சினை 1782–1801

1778–82ஆம் ஆண்டுகளில் வீசிய அரசியற் புயலினால் நார்த், ராக்கிங்காம் ஆகியவருடைய அரசாங்கத்திலிருந்து வற்புறுத்திப் பெற்ற சீர்திருத்தங்களினாலோ, அவைகளுக்குப் பின்வந்த கிராட்டனின் (Grattan) பாராளுமன்றத்தினாலோ அடிப்படையான மாறுதல் ஒன்றும் தோன்றவில்லை. சமயம், வாணிபம் ஆகிய இரண்டிலும் இருந்த குற்றமுறைச் சட்டங்கள் மறைந்தது

உண்மையே. புராடஸ்டண்டு புறச்சமயத்தவரைப் பொறுத்தவரையில் 1704ஆம் ஆண்டுச் சோதனைச் சட்டம் பின்வாங்கப்பெற்றது. அதேசமயத்தில் அயர்லாந்து பாராளுமன்றம், நீதிமன்றங்கள் ஆகியவற்றின் இறுதிமேலாண்மை உரிமையை ஏற்றுக்கொண்டதோடு, பாய்னிங்கின் சட்டம் ரத்து செய்யப்பெற்றது. அதனால், அயர்லாந்து பெயரளவில் அரசருக்கு அடங்கிய டொமினியனாக விளங்கியது. எனினும் ஆங்கிலேயேர், ஐரிஷ்காரர் உறவில் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்த இம் மாறுதல்கள், அயர்லாந்தின் புதிய காய்ச்சலோயோ, நெடுங்காலமாக இருந்துவந்த நோயையோ குணப்படுத்தவில்லை.

1650ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்துவந்த ஆங்கில ஆட்சி, அயர்லாந்தின் வளத்தைக் கொடூரமாகத் தடை செய்தது. மேலும் மூன்றில் இரண்டு பங்கு, ஐரிஷ் மக்களின் நியாயமான வாழ்க்கையைப் பறித்தது ஐரிஷ் நாட்டிலிருந்து ஆவினம், வெண்ணெய், கம்பளங்கள் ஆகிய இயற்கைப் பொருள்களை ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பெற்றது. குடியேற்ற நாடுகளுடன் இந்நாடு கொண்ட நேரடி வாணிகத் தொடர்புகள் துண்டிக்கப்பெற்றன. பொருளாதாரப் பொச்சாப்பு ஆரம்பித்து வைத்ததைச் சமய வெறுப்பு நிறைவேற்றி வைத்தது. வெற்றி அல்லது குடியேற்றங்களிலை வெளியேற்றப்பெற்றக் கத்தோலிக்கர்கள், நிலம் வாங்குதல், நீண்டகாலக் குத்தகை நிலம் வைத்திருத்தல், உயில் ஏற்படுத்துதல், நகரமன்றத்தில் உரிமைக்குடிமகனாதல், 5 பவுனுக்கு மேற்பட்ட மதிப்புள்ள குதிரையைப் பெற்றிருத்தல், ஆயுதங்களைத் தாங்குதல் ஆகிய அனைத்தும் சட்டத்தினால் தடுக்கப்பெற்றன. ஓட்டளித்தல், வழக்கறிஞர் சங்கம், மாஜிஸ்ட்ரேட் பதவி, பல்கலைக் கழகம் ஆகியவற்றினின்றும் ஐரிஷ் மக்கள் நீக்கப்பெற்றனர். பள்ளிகள் வைத்திருக்க அவர்களுக்கு அனுமதி இல்லை கத்தோலிக்கர்களின் வாழ்க்கையின் கூறுகள் அத்துணையையும் ஆங்கிலச்சட்டம் பாதித்தது; உதாரணமாக புராட்டஸ்டண்ட் சமயத்தைத் தழுவிய மூத்தமகன் சொத்து முழுவதையும் அடையவேண்டுமென்று வகுத்தது. கலப்பு மணங்கள் சட்ட முரணானவையாயின. உரிமைப் பத்திரப் பள்ளிகள் எழுந்தன. அவைகள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதுடன் அவர்களைப் பஞ்சத்திலிருந்தும் காத்தன. ஆனால் அவர்கள் புராட்டஸ்டண்ட் சமயத்தைச் சேரவேண்டுமென்றும், தாய் தந்தையரைப் பார்த்தல் கூடாது என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பெற்றன.

நாட்டு மக்களனைவரும் இத்தகைய தீமையினால் ஒழுக்கக் கேடுற்றனர். தொழிலிலோ, வாணிபத்திலோ சட்டமுறையான அல்லது வரம்பற்ற வாய்ப்பு ஐரிஷ்காரர்களுக்கு இல்லாததால் அவர்களால் முதலை மிச்சப்படுத்த முடியவில்லை. கத்தோலிக்க நிலப்பிரபுக்கள் எளிய வழியென்று கருதி, தங்களுடைய பன்னைகளை ஆடு மாடுகளை வளர்ப்பதற்காக விட்டனர். இறைச்சி அல்லது சிறிதளவு கம்பளம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து பிழைத்தனர் தங்களுடய பண்ணைகளிலிருந்து கூடுமான வரை எல்லா மக்களையும் வெளியேற்றினர். தலத்தில் தங்காத ஏராளமான ஆங்கில நிலச் சொந்தக்காரர்கள், தரகர்கள் மூலமாக ஏறக்குறைய ஒரு மில்லியன் பவுன் குத்தகைகளாகப் பெற்றனர். மலைப்பகுதிகளில் சிறுசிறு நிலங்களைப் பெற்று, உரிமைக்காலம் வரையறுக்கப்படாது இருந்த சிறு குடியானவரும் உழவர்களும், போட்டிபோட்டு, மட்டுமிஞ்சிய வாடகையை மேலும் உயர்த்தினர். ஆனால், நிலத்தைச் செம்மை செய்ய வேண்டுமென்ற நோக்கம் அவர்களிடமில்லை. உருளைக்கிழங்கைத் தவிர அதிகமாகப் பயிரிட அவர்களிடம் பணமில்லை. அப் பயிர் பலன் தராதபோது நூற்றுக்கணக்கானவர் பட்டினியால் மடிந்தனர். எனினும் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் இழிந்ததாக இருந்ததாலும் அவர்களது சமயம் உண்மையானதாக இருந்ததாலும் இனப்பெருக்கம் மிகுதியாக இருந்தது. 1700-ல் ஏறக்குறைய இரண்டு மில்லியனாக இருந்த மக்கள் தொகை, நூறு ஆண்டுகளில் இரு மடங்கிற்குமேல் பெருகியது.

இத்தகைய பிச்சைக்கார சமுதாயத்தினர் வாடகைகள், ஆங்கிலிகச் சமயக் குருமாருக்கு அளித்த கோவில் மகன்மை, கத்தோலிக்கக் குருமாருக்குத் தந்த கட்டணங்கள் ஆகியவற்றினால் அவதியுற்றனர். இவைகளின் தாக்குதல் ஒவ்வொன்றும் சட்டத்திற்கு எதிராக எழுமாறு அவர்களைத் தூண்டிற்று, தங்களுடைய சிறு குடிசைகளில் எழும் புகையினால் கண்பார்வை மங்கிய பாணர்கள், ஐரிஷ் கத்தோலிக்கரின் தலைவர்களாக இருந்தனர். கொள்ளைக் கூட்டத்தினரும் கள்ளக் கடத்தல் செய்வோர்களும், 'காட்டு வாத்து' அல்லது ஸ்பெயின் ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் படைச் சேவகஞ் செய்த நாடு கடத்தப்பெற்ற போர்வீரர்களும், அவர்களுக்குத் தலைவராயினர் வாடகை, கோவில் மகன்மை, நிலஅடைப்பு ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆவினங்களின் கால்களைக் கட்டியும், வீடுகளை எரித்தும் வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட 'வெள்ளைச் சிறுவர்களும்' (white Boys), மற்றையோரும் அவர்களால் போற்றப் பெற்றவர்களாவர்.

அல்ஸ்டரில் வாழ்ந்த மக்கள் புராட்டஸ்டண்ட் சமயத்தைத் தழுவியதாலும், அவர்களுடைய முரட்டு லினன் துணிகளை ஆங்கிலச் சட்டம் ஆதரித்ததாலும், அவர்களுடைய குத்தகை உரிமை நிலத்தைச் சீர்படுத்த அனுமதித்ததாலும் அவர்கள் நல மாகவும் வளமாகவும் வாழ்ந்தனர். ஆனல், அவர்களும் கடுந் துன்பங்களை அனுபவித்தனர். 1780ஆம் ஆண்டுவரை எல்லாப் பதவிகளிலிருந்தும், பாராளுமன்றத்திலிருந்தும் அவர்கள் விலக்கப்பெற்றனர். குடியுரிமைக்குரிய வாழ்க்கையில் தாழ்த்தப் பெற்றிருந்தனர். அதனல் நிலத்தைவிட்டு வெளியேற்றுதல், கீழ்க்குத்தகைக்கு விடுதல், வாணிபச் சட்டங்கள் ஆகியவற்றினல் பலர் அமெரிக்காவிற்குச் சென்று குடியேறினர்.

இடைக்காலத்தில் இருந்ததைப்போலவே அந்நியப் படையின் ஆதிக்கம் அங்கே இருந்தபோதிலும், அப்படையே உயர் தலைமைக்குப் பணிந்திருந்தது ஐரிஷ் பாராளுமன்றம் கையும் காலும் கட்டிப்போட்டதுபோன்று உரிமையற்று இருந்ததோடு, இங்கிலாந்தில் இருந்த அடிப்படை உரிமைகள் அயர்லாந்தி லில்லை. கைதியைக் கொண்டுவரும்படி நடுவர் இடும் ஆணையோ (Habeas corpus) கலகச் சட்டமோ அன்றைய இங்கிலாந்தில் இல்லை. அரசருடைய விருப்பப்பொறுத்தே நீதிபதிகள் பதவி வகித்தனர். 1768ஆம் ஆண்டு எட்டு ஆண்டுச் சட்டம் (Octennial) இயற்றப்படும்வரையில், அரசரின் ஆட்சிக்காலம் முழுதும் பாராளுமன்றம் அமர்ந்திருந்து பணியாற்றியது. ஏறக் குறைய நூறு நிலச் சொந்தக்காரர்களின் மேற்பார்வையிலிருந்த சிறு பரோக்களின் பிரதிநிதிகளே காமன்ஸ் சபையினரில் மூன்றில் இரண்டு பங்கினராக இருந்தனர். மற்றையோர் பதவியிலுள்ளோரும், அரசாங்கத்தின் ஓய்வு சம்பளம் பெற்றோரு மாவர். ஓய்வூதியப் பட்டியல் 80,000 பவுனுக்குமேல் உயர்ந்தது. வருமானத்தில் பெரும் பகுதி பாராளுமன்ற வாக்கிற்குக் கட்டுப் படாத வகையில் நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பிரிட் டனின் நலனுக்காக 12,000 படைவீரருக்கு அயர்லாந்து ஊதியப் பணம் அளித்தது. சாதாரணமாக மிகக் குறைந்த ஊதியம் பெற்ற சுமார் 800 ஆங்கிலக் குருமார் பாழடைந்த நிலையிலுள்ள கோயில்களில் மக்கள் தொகையில் ஒரு சிறு பகுதியினருக்காகப் பணி புரிந்தபோதிலும், ஆங்கிலேயர்களான 22 பிஷப்புகள் அதிக வருமானத்தைப் பெற்றவர்களாக வாழ்ந்துவந்தனர்.

பண்டைக்காலத்தைப் போலவே அந்நிய ஆட்சியானது, இரு இனங்களிலும், எல்லாச் சமயத்தவரிடையேயும் ஒரு 'ஐரிஷ் நலனை' வளர்த்தது. டப்ளின் பல்கலைக் கழகத்திற்கான

உறுப்பினர் மோலினெக்ஸ் (Molyneux) என்பவர் 1698-ல் எழுதிய புகழ்வாய்ந்த நூலில், அயர்லாந்திற்கு ஒன்று, பழைய உரிமைகளை வழங்கவேண்டும் அல்லது ஓர் ஐக்கியத்தில் சம உரிமைகள் கொடுக்கவேண்டுமென்று கோரினர். ஐரிஷ் விக்குகளின் இக் கிளர்ச்சி, 1722-ல் உச்சநிலை அடைந்தது. ஐரிஷ் டோரிகளில் தலை சிறந்து விளங்கிய ஸ்விப்ட் (Swift) என்பவர் தமது 'Drapier's Letters' என்னும் நூலில் குடிமக்களின் உடன்பாடின்றி நடக்கும் ஐரிஷ் அரசாங்கம், அடிமைத்தனத்திற்கும் சிறந்த இலக்கண மாகும் என்று எழுதினர். 'உட்ஸின் அரை பென்ஸ்' என்னும் மிக இழிந்த வழக்கையே அவர் அவதூறு என்று தாக்கினர். இங்கே அரசருடைய காமக்கிழத்தியாகிய கெண்டால் (Duchess of Kendal) கோமகளுக்காகப் பதவி நிரந்தரமாக்கப்பெற்றதோடு தேவையற்ற செப்பு நாணயமுறை அழி மிகுதி விதத்தில் அயர் லாந்தின்மீது சுமத்தப்பெற்றது. இக் காசு முறையைப் புழக் கத்தில் இருந்து திருப்பிப் பெற்றுக்கொள்ளுமாறு திருக்கோயில் மேல் முறையிட்டு, நீதிமன்ற நடுவர் வற்புறுத்தினர். அச்சமயத்தி லிருந்து அரசியல் சட்டம் சார்ந்த எதிர்ப்புத் தொடர்ந்து வளர்ந்து வந்தது. அதே சமயத்தில் 1688ஆம் ஆண்டிருந்த புராட்டஸ்டண்ட் சமயத்தவரின் ஓரவஞ்சகம் மிகவும் குறைந்தது. பாயில்கள் (Boyles), பான்சோன்பிகள் (Ponsonbys) பிரஸ் போர்டுகள்போன்ற பெருங்குடியினரும் ஆட்சிப் பொறுப்பை 'மேற்கொண்டவரும்' (Undertakers), சுயநலவாதிகளேயென் ருலும் சாதாரணமாக அரசர் நலத்தையே நாடிய ஆர்ச்பிஷப்பு களைக் கண்மூடித்தனமாகப் பின்தொடரத் தயாராக இல்லை. 1750–70 ஆண்டுகளுக்கிடையில், நிதி மசோதாக்களின்மீது அதிக அதிகாரம் வேண்டுமென்றும், குறுகிய கால பாராளுமன்றங்களுக் காகவும், ஐரிஷ் மக்களுக்கு அதிக பதவிகள் தரவேண்டுமென்றும் பொதுச்சபை உறுப்பினர்கள் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சி யில்தான் கிராட்டன், பிளட் (Flood), போன்ற பின்னர் தலைவர்கள் பணித்துறைப் பயிற்சியைப் பெற்றனர். ஆனல் இக்கிளர்ச் சியை ஒடுக்குவது இயலாததாயிற்று. உழுது பயிரிடும் நிலப் பரப்பு உயர்ந்து, மிகுந்த வளம் பெருகியதால் உரிமை உணர்வு மேலும் பெருகியது. டப்ளின் நகரத்தில் கண்கவர் மாளிகைகள், வீடுகள், தீவிரமான பத்திரிகை, வலிமை வாய்ந்த ஐரிஷ் வழக் கறிஞர் சங்கம், பிரிட்டிஷாரிடையே பெயர்பெற்று விளங்கிய பர்க், கோல்டுஸ்மித்போன்ற மேதைகளான ஐரிஷ் மக்கள் ஆகிய அனைவரும் புதியதொரு தேசிய உணர்ச்சி தோன்றியதற்குச் சான்றுகத் திகழ்ந்தனர்.

எனினும், அமெரிக்கரைப்போல ஐரிஷ் மக்களின் உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடவில்லை அப் போரின் வீரனாக

அங்காடிகள் இழக்கப்பெற்றதால் பொருளாதாரத்துறையில் சீர்குலைவு ஏற்பட்டது. இங்கிலாந்து தனது படைகளைத் திரும்ப மீட்டுக்கொண்டதால் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தாங்கள் கோரியதை அமெரிக்கர் பெற்றதைக்கண்ட அயர்லாந்தியருக்கு, ஒரு போர்க் கீதம் கிடைத்தது. அல்ஸ்டர் தனிப்பட்டமுறையில் உறுதியுடன் இருந்தது. இளைய காசில்ரே போன்ற பாராளுமன்றத் தொடர்புகொண்ட குடும்பங்கள் முதல், பிரஸ்பீடீரிய குடியானவர்வரை, உறுதியான உள்ளத்துடன் இருந்தனர். நாட்டுப் படைக்கு ஊதியம் அளிக்கப் போதிய நிதி அரசாங்கத்திடம் இல்லாததால், ஃபிரெஞ்சுப் படைகளுக்கும் தனிப்பட்ட அமெரிக்கப் போர்க் கப்பல் உரிமையாளருக்கும் எதிராக அயர்லாந்தைக் காக்கத் தயாராக முன்வந்தவர்களின் சேவையை மறுப்பது இயலாததாயிற்று. அயர்லாந்து முழுதும் சார்ல்மான்ட் (Charlemont) போன்ற புராட்டஸ்டண்ட் தலைவர்களின் கீழ் தன்னிச்சைத் தொண்டர்கள் இயக்கத்தில் ஒன்றுக இணைந்தது. ஏறக்குறைய 80,000 பேர் என அவ்வியக்கத்தினர், அதிக உரிமை கொண்ட அரசாங்கமும், தடையற்ற வாணிபமும் வேண்டுமென்று கோரினர். அதே சமயத்தில் கத்தோலிக்கருக்கு விடுதலை வழங்க வேண்டுமென்று புராட்டஸ்டன்டான கிராட்டன் கோரினார். 1778ஆம் ஆண்டு சிறு சலுகைகள் அளித்ததையும், 1780–83ஆம் ஆண்டுகளில் பெரும் சலுகைகள் அளித்ததையும், வணிகர்கள் எதிர்த்தபோதிலும், அயர்லாந்தில் தடுக்கமுடியாத சக்தி உருவாகியதாலும், பிரிட்டிஷ் பொருள் புறக்கணிக்கப் பெற்றதாலும், அரசாங்கம் செயல்படவேண்டியதாயிற்று. 1783ஆம் ஆண்டு இறுதியில் பிரிட்டன் தனது சட்டமியற்றும் மேலுரிமையைத் துறந்தது. குடியேற்ற வாணிபத்தை ஐரிஷ் மக்களுக்கு திறந்துவிட்டது; அயர்லாந்தின் பல பொருள்களைத் தன்னுடைய அங்காடிகளில் கொண்டு வந்துவிற்க, அனுமதி அளித்தது. கிராட்டனின் பரந்த பற்றுதியும், ஷெல்பர்னின் மிக்க அறிவுடைமையும் இந்தகைய மாற்றம் துரிதமாகவும் அமைதியாகவும் தோன்றியதற்குக் காரணங்களாக அமைந்தன.

ஆனால், அறுநூறு ஆண்டுகளாக இருந்த பிரச்சினையையும், இறுநூறு ஆண்டுகளாக இருந்துவந்த குற்றச் செயல்களின் தொகுதிகளையும் அவ்வளவு எளிதாக தீர்த்துக்கட்ட முடியாது. இங்ஙனம் பெரும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருந்தன. அமெரிக்கரின் உரிமைப் போராட்டமும், அதன் தொண்டர்களும் பாராளுமன்றச் சீர்திருத்தத்திற்காகக் கூக்குரல் எழும்பக் காரணமாய் அமைந்தனர். சமீப காலத்தில் நிலம் வாங்கவும், பள்ளிகளை வைத்து நடத்தவும் கத்தோலிக்கர் அனுமதிக்கப்

பெற்ற போதிலும், அவர்களுடைய குருமார்கள் பல தடைகளிலிருந்து விடுவிக்கப்பெற்றபோதிலும், முழு விடுதலைக்கான கூக்குரல் ஒன்று எழுந்தது. இவை இரண்டும் நில உரிமை என்னும் மூன்றாவது பிரச்சினையால் கட்டுப்படுத்தப்பெற்றன. இறுதியாக எத்தகைய உருவினை அயர்லாந்து எடுத்தபோதிலும், பிரிட்டனுடனை அதனுடைய சட்ட முறையான உறவு, முன்பு இருந்ததைப்போன்று விடப்படும் என்பதை எந்த ஆங்கில அரசியல் நிபுணரும் நம்பத் தயாராக இல்லை. இத்தகைய இடர்மிகுந்த நிச்சயமற்ற நிலையை ஏதோ ஒரு ஒப்பந்தமோ ஐக்கியமோ முடிவிற்குக் கொண்டுவர வேண்டும். அதன் மூலமாக உரிமை வாய்ந்த இரு பாராளுமன்றங்கள் மாறுன முடிவுகளை எடுக்க முடியும் என்ற நிலை உண்டாயிற்று.

1783-9 ஆண்டுகளுக்கிடையே இருந்த அடுத்த கட்டம், அவலமானதாக இருந்தது. உணர்ச்சியைத் தூண்டும் வகையில் ஐக்கியம், விடுதலை, சீர்திருத்தம் ஆகிய பெரும் பிரச்சினைகளை ஒத்திப்போட்ட பிட், பாதுகாப்பிலும், வாணிபத்திலும் இரு மக்களையும் இணைக்க எண்ணினர் என்பதையும்; கப்பற் படைக்காக ஐரிஷ்காரர் நிரந்தர உதவி அளிப்பதற்குப் பிரதியாக அவர்களுடைய பொருள்களுக்குக் குறைந்த வரி கொள்ளும் திட்டத்தை உருவாக்கும் அவருடைய 1785ஆம் ஆண்டு கருத்துரைகளையும் கண்டோம். இவைகள், பிரிட்டிஷ் தொழில் நலன்களிலும், பணக் கப்பத்திற்கு எதிராக எழுந்த ஐரிஷ் மக்களின் சீற்றத்திலும் முறியடிக்கப்பெற்றன. இந்த இரு நோக்கங்களையும் எதிர்க் கட்சியினரான விக்குகள் தனித்தனியே தூண்டிவிட்டனர். 1788ஆம் ஆண்டு காப்பாளர் நெருக்கடியில், ஐரிஷ் பாராளுமன்றம் ஃபாக்ஸையும், வேல்ஸ் இளவரசரையும் பின்பற்றிய போது, அதே பொச்சாப்பும், கட்சியின் தீய வினைவும் காணப் பெற்றன. முன்னலும் பின்னலும் இருந்த வரலாறு நிரூபித்ததைப்போல, அரை அடிமைத்தனத்திலும், அரைச் சுதந்திரத்திலும் தொடர்ந்து அயர்லாந்து வாழமுடியாது. அதைப் போன்றே பொறுப்பற்ற அந்நிய செயற்குழுவும், முதலுரிமை பெற்ற பாராளுமன்றமும் ஒருங்கிருக்க இயலாது. கையூட்டு அளிப்பதன் மூலமாகத்தான் ஆங்கில அரசாங்கம் தன்வழியே நடக்க முடியும். அடுத்தடுத்து வந்த அயர்லாந்து துணைப் பிரபுக்கள், இங்கிலாந்தின் அரசியல் கட்சிகளை எதிர் நோக்குமாறு ஐரிஷ் போட்டிக் கும்பல்களுக்குக் கற்பித்தனர். இதற்கிடையில் உள்நாட்டு நிலை பின்னேக்கிச் செல்லத் தொடங்கியது. நில உடைமை சார்ந்த போரும் கலகமும் தொடர்ந்துவந்த அதே சமயத்தில், சமய அடிப்படையில் இரகசியச் சங்கங்கள் தோன்ற

ஆரம்பித்தன. உதாரணமாக கத்தோலிக்கப் 'பாதுகாப் பாளருக்கு' எதிராக புராட்டஸ்டண்ட் 'காலை முதற்கதிரொளிப்' (peep-of-day) பையன்கள் எழுந்தனர்.

அதன் பிறகு ஃபிரெஞ்சுப் புரட்சி ஒவ்வொரு பொரியையும் சுடரொளியாக்கியது. வட பகுதியில் குடியரசு இயக்கம் வலுப் பெற்றது சொத்து உரிமைகள் நிலமனைத்திற்கும் உரிமை கொண்டாட வாய்ப்பளித்ததால், கத்தோலிக்கர் விடுதலை கோரினர். அவர்களுடைய கோரிக்கையில் பரிவு கொண்டும், அரசாங்கத்தில் தனக்குப் பதவி கிடைக்குமென்ற நம்பிக்கை நாச மாகியதால் நிராசை கொண்டும் இருந்த உல்ப்டோன் (Wolfe Tone) என்னும் புராட்டஸ்டண்ட் வழக்கறிஞர், 1791-ல் ஐக்கிய ஐரிஷ் மக்கள் சங்கத்தை நிறுவினர். பெயரளவில் பாராளு மன்றச் சீர்திருத்தத்தின் மூலம் வற்புறுத்தும் நோக்கத்தோடு தோன்றிய இச் சங்கம், உண்மையில் சுதந்திரத்திற்காக வேலை செய்யவே நிறுவப்பெற்றது. 1792ஆம் ஆண்டில் அது பிரிட்டிஷ் ஜனநாயகச் சங்கங்களுடனும் ஃபிரெஞ்சு கன்வென்ஷன் சபை யுடனும் தொடர்புகொண்டது. அதே சமயத்தில் பர்க்கினல் பெரிதும் தூண்டப்பெற்ற கத்தோலிக்கப் பெருங்குடியினர் குழு ஒன்று, அரசருக்கு விண்ணப்பம் விடுத்தது.

பேரர் முடியும்வரை கத்தோலிக்க விடுதலையைத் தள்ளிப் போட விரும்பியபோதிலும், அதனைக் கால வரையறையின்றி மறுக்க முடியாது என்பதை பிட்டும், டண்டாசும் ஏற்றுக் கொண்டனர். மேலும், ஃபிரான்ஸுக்கு எதிரான பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்று அவர்கள் முடிவு செய்த ஐக்கியத் தோடு, இப் பிரச்சினை இரண்டறக் கலந்திருந்தது. ஐரிஷ் பாராளுமன்றத்தில் விடுதலை அளித்தால் அது இரு சமயங்களி லிருந்தும் சீர்திருத்தத்திற்கு ஆதரவு தரும் ஜனநாயக வாதிகளை ஒன்று சேர்த்துவிடுமென்றும், அதனால் அரசரின் செல்வாக்கு அழிவதோடு ஐக்கியத்திற்கும் தடை யேற்படுமென்றும், ஐரிஷ் அதிகாரிகள் அறிவித்தனர். எனவே, அவர்கள் காலத்தைக் கடத்த ஏண்ணிச் சில சலுகை அளித்து, ஒரளவு விட்டுக்கொடுத் தனர். சில உண்மையான நலன்களை அயர்லாந்திற்கு அளித் தனர். கிழக்கு இந்திய வாணிகத்தில் பங்கும், ஆங்கிலச் சட்டத் தைப்போன்ற அவதூறு சட்டம் ஒன்றையும் இயற்றினர். 1793ஆம் ஆண்டில் விருப்பமற்ற ஐரிஷ் அரசாங்கத்தின்மீது திணிக்கப்பெற்ற இச் சலுகைகள் அரசர் செலவுப் பட்டியலைக் குறைத்தபோதிலும், பதவியாளரை விலக்கியபோதிலும் சிதை வுற்ற பரோக்களைச் சீர்படுத்தவில்லை. கத்தோலிக்கர்களுக்குப்

பாராளுமன்றத்தில் இடமும் பதவிகளும் மறுக்கப்பட்டபோதிலும், நாற்பது ஷில்லிங் மானிய நிலம் படைத்த கத்தோலிக்கருக்கு வாக்குரிமை வழங்கப்பெற்றது. அதைப்போன்றே கத்தோலிக்க குருமார்களுக்கு அரசு ஊதியம் அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வரவில்லை யென்றாலும் மேநூத் என்னும் இடத்தில் (Maynooth) சமயப் பள்ளியை நிறுவ மானியம் வழங்கப்பெற்றது.

நம்பிக்கையிழந்த போரின் வேதனையால் காபினெட்டின் சுமைகள் பெருகி இருந்தன. ஆனால், அது காலந்தாழ்த்திய தற்குக் காரணம் பிளவுபட்டு நின்றதுதான். மேலே குறிப்பிட்ட தைப்போன்ற அரைகுறை நடவடிக்கைகளால் அவர்கள்து தொல்லைகள் மிகுத்தன. புராடஸ்டண்டுகளின் மேலாதிக்கம் இன்றேல் அயர்லாந்தை இழப்பது நிச்சயமென்று அங்கிருந்த துணைப் பிரபுவான வெஸ்ட்மோர்லண்டு (Westmoreland) உறுதி யாகக் கூறினர். பின்னாளில் கிளேர் பிரபுவாக (Clair) வந்தவரும் மன உறுதிபடைத்த கருவூலத் தலைவராக இருந்தவருமான பிட்ஸ்கிப்பன் (Fitzgibbon) என்பவரின் தலைமையில் இருந்த ஐரிஷ் புராட்டஸ்டண்ட் அதிகாரிகள், தங்களுடைய மேலாதிக் கத்தை அழிக்கக்கூடிய சீர்திருத்தத்தை எதிர்த்தனர். மற்றொரு புறத்தில், பாராளுமன்றத்தில், இடமும், பதவியும் இல்லாமல் வாக்குரிமையால் மட்டும் அமைதியுறும் கத்தோலிக்கர் எவரு மில்லை. அதே சமயத்தில் இந்த அரைகுறை நடவடிக்கை பழைமைப் பண்புடைய கத்தோலிக்கப் பெருங்குடியினருக்கு அதிகாரம் வழங்காது, வாக்காளர்களிடையே ஊழலை வளர்த்தது.

இங்ஙனம் தனித்தனியாகத் தோன்றிய கூறுகளை, ஒன்றுக இணைத்ததன் மூலமாகப் புரட்சியும் போரும், கிராட்டன் போன்ற பற்றுறுதி கொண்ட விக்குகளின் நிலையைக் குலைத்தன. புராட் டஸ்டண்டுகளால் நிறுவப்பெற்ற ஐக்ய ஐரிஷ் மக்கள் சங்கம், சீர்திருத்தம் மறுக்கப்பெற்றதால் சீற்றங்கொண்டு, புரட்சியில் பேரார்வம் காட்டிய டப்ளினிலும் அல்ஸ்டரிலும் வாழ்ந்த நடுத்தர வகுப்பாரையும், புறச்சமயத்தவரையும் தன்னுடைய கொள்கை களை ஆதரிக்கச் செய்தது. போருக்கு எதிராகப் பொருமிய அல்ஸ்டர், பெயினின் போதனைகளால் பாதிக்கப்பட்டது. பெல் பாஸ்ட் நகரம், லபாயத் (Lafayatte), பிராங்ளின் (Franklin) ஆகி யோரின் படங்களை, அணிவகுத்து ஏடுத்துச்சென்று பாஸ்டில் சிறையின் வீழ்ச்சியைக் கொண்டாடியது, ஆயின் இத்தகைய அரசியல் இயக்கத்தோடு இயற்கையானதும் அதிக இடர் மிகுந்தது மான நில உரிமைப் பூசலும் இணைந்தது. பட்டினியின் ஓரத்திலே நின்ற குடியானவர்களுடைய ஓயாத நில உரிமைப்போர் 1782க்குப்

பிறகு மீண்டும் எழுந்தது. கத்தோலிக்கக் 'காப்பாளர்கள்' ஆயுதங்களைக் கைப்பற்றி, இரவிலே பண்டப்பயிற்சி பெற்றனர். அவர்களுக்கெதிராக புராட்டஸ்டண்டுகள் போர்க்கலந்தாங்கி நின்றனர். சட்டத்தை மீறுதல் அர்மாகிலிருந்து (Armag) தெற்கு நோக்கிப் பரவியது. உயர்ந்த விலைகளும், உயர்ந்த வாடகையும் இத் தொல்லைகளைத் தீவிரமாக்கின. நிலம், சமயம் ஆகிய வற்றின்மீதான தலப் பூசல்களில் ஐக்கிய ஐரிஷ் மக்களின் கொள்கைகள் பரவிநின்றன.

கத்தோலிக்கத் திருச்சபை, பெருங்குடியினர், ஆகியோருடைய ஆதரவைப் பெறக்கூடிய சிறு வாய்ப்பு ஒன்று ஆங்கிலேயருக்கு 1795ஆம் ஆண்டுவரையிலும் இருந்தது. டப்ளினைச் சார்ந்த ஐக்கிய ஐரிஷ் மக்கள் வீழ்ச்சியுற்றனர். குறையேற்பினால் ஆதரவிழந்த டோன், வேறு சிலருடன் நாடு கடத்தப் பெற்று அமெரிக்காவிற்குச் சென்றார். ஆனால், கட்சி அரசியல் இக் கிடைத் தற்கரிய வாய்ப்பினை அழித்தது. 1794-ல் பிட்டுடன் சேர்ந்த விக்குகள் கிராட்டனுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதில் கருத்தாய் இருந்தனர். அவர்களுடைய ஆளும், அயர்லாந்தின் புதிய துணைப் பிரபுவுமான பிட்ஸ்வில்லியம் (Fitzwilliam) என்பார், தாம் வந்திறங்கிய ஒரு மாதகாலத்திற்குள், முதன்மையான புராட்டஸ்டண்ட் அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கியும் கத்தோலிக்க விடுதலை மசோதாவைக் கொண்டுவர ஊக்குவித்தும் கொள்கை மாற்றத்தைக் கொண்டுவந்தார். காபினெட்டின் கருத்தினை மீறிய அவரைத் திரும்ப அழைத்தனர். இச் செயல் அயர்லாந்தின் அமைதிக்குப் பெருங்கேடு விளைவித்தது. விடுதலை அளிப்பது அரசருடைய பதவியேற்புப் பிரமாணத்திற்கு முரணானது என்று பிட்ஸ்கிப்பனும், அவரது நண்பர்களும் அரசரை நம்பவைத்தனர். பிட்டைச் சார்ந்தவர்களும் ஐக்கியம் இன்றி விடுதலை அளித்தல் ஆபத்தானது என்று கருதினர். ஏமாற்றமடைந்த கத்தோலிக்கர், சூழ்ச்சியிலிறங்கியபோது, புராட்டெஸ்டெண்டுகள் ஒரு வலிமை வாய்ந்த பிரிவினராகக் கூடினர். தொண்டர் இயக்கத்தில் எஞ்சியிருந்தவர்களும், அர்மாக் குடியானவர்களும் 1795-ல் ஆரஞ்சு சங்கத்தை நிறுவினர் (Orange Order) ஐரிஷ் இனக்கொள்கை, புதியகத்தோலிக்க வாக்காளர் ஆகியோரின் முன்னிலையில், வடபகுதியில் வாழ்ந்த விக்குகள் தங்களுடைய ஆரம்பக் கொள்கைகளுக்கே திரும்பச் சென்றனர். புராட்டெஸ்டெண்ட் சமயமே பிரிட்டனுடனை ஐக்கியத்திற்கு ஆன தலை என்றும், தங்களுடைய மேலாதிக்கத்தின் முத்திரை என்றும் அவர்கள் கருதினர். புதிதாக எழுந்த வீரவேளாண் படையில் (yeomanry) ஏராளமாகச் சேர்ந்த

அல்ஸ்டர் மக்கள், அப்படையினை ஒரு பயங்கரக் கருவியாக்கினர். அவர்களுடைய அச்சுறுத்தல்களினால் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் மேற்குப் பகுதிகளுக்கு ஓடினர்.

இத்தகைய புராட்டஸ்டெண்ட் சமயப்போர், ஐக்கிய ஐரிஷ் மக்களின் எண்ணிக்கையைப் பெருக்கியது. அதுவரையில் ஆரஞ்சு சங்கத்தார் செய்துவந்ததை ஆதரித்தல் தங்களுடைய தற்காப்பிற்கு வேண்டற்பாலது என்று அரசாங்கம் எண்ணியது இடர்மிகுந்த ஒன்றாகும். இழப்பீடுமசோதா ஒன்றும் சட்டத்தின் செறிவுமிக்க கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. 1796ஆம் ஆண்டு கிளர்ச்சிச் சட்டம் சில மாவட்டங்களை அறிவிக்கவும் அவைகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கவும், இரவில் வீடுகளைச் சோதனையிடவும், குற்றம் சாட்டப்பெற்றவரை விசாரணையின்றியே நாவாய்ப்படையில் பணிபுரிவதற்காகக் கப்பலில் ஏற்றவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கியது. 1797ஆம் ஆண்டில் படையாட்சிச் சட்டம், படைக்கலம் அகற்றல், மறியல் செய்தல், புறக்கணித்தல், வீடு எரித்தல், மரண ஊர்வலம் அல்லது உருவக்கிழங்கு சாகுபடி போன்ற சாக்குப்போக்கில் கூடிய பெருங்கூட்டங்கள், பச்சைநாடாக்களுக்கெதிராக ஆரெஞ்சு இறகு ஆகியவை, அரசிலா நிலை தெற்கிலே பரவி, உள்நாட்டுப் போராக உருவெடுத்ததைக் குறிப்பனவாகக் காணப்பெற்றன. அமெரிக்காவிலிருந்து ஃபிரான்ஸிற்குத் திரும்பிவந்த டோன், ஹோச்சியின் (Hoche) வெற்றிபெறுத படையெடுப்பிற்குத் தூண்டுதல் அளித்தார். அதே சமயத்தில் எட்வர்டு பிட்ஸ்ஜிரால்டு பிரபுவும் (Fitzgerald), ஆர்தர் ஓ கானரும் (Arthur O'Connor) ஃபிரெஞ்சுப் பிரதிநிதிகளுடன் ஹாம்பர்கில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தலைவர்கள் கைது செய்யப்பெற்றதால் ஒழுக்கக் கேடுற்ற நிலையில், கடுமையான படைக்குறைப்புக் காரணமாக, 1798ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புரட்சிக் கலகம் தோன்றியது. ஃபிரான்ஸிற்குச் செல்லும் வழியில் ஓ கானர் சிறைப்பட்டார். திடீர்த்தாக்குதல் ஒன்றினால் லீன்ஸ்டர் (Leinter) குழுவினர் கைதாயினர். ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பெற்ற பிட்ஸ்ஜிரால்டு நம்பிக்கை இழந்த போராட்டத்தில் படுகாயமுற்று இறந்தார். ஒற்றுமை அற்றநிலையில் நம்பிக்கையின்றிச் சாதாரண வீரர்கள் மே மாதத்தில் புரட்சியிலிறங்கினர். அவர்களுக்குப் ஃபிரஞ்சு உதவிகிடைக்கவில்லை. டப்லினைக்கைப்பற்றும் அவர்களது திட்டம் அம்பலமாகியது. அல்ஸ்டரும், கன்னாட்டும் புரட்சியில் இறங்கவில்லை. இங்ஙனம் உண்மையில் லீன்ஸ்டர்

வெக்ஸ்போர்டு போன்ற பகுதிகளோடு இப்புரட்சி நின்று விட்டது. சமயக் குருமார்களே பெரும்பாலும் தீவிரத்தலைவர் களாக இருந்தபோதிலும், முதன்மையான கத்தோலிக்கத் தலைமைக்குருமார்களும் கனவான்களும் புரட்சிக்கெதிராக இருந் தனர். இங்ஙனம் இப்போரைச் சமயப்போர் என்று கூறுவதை விடச் சமயவெறியினாலும், நம்பிக்கையை இழந்த நிலையிலும் ஏற்பட்ட ஒன்று எனலாம். ஆரஞ்சு சங்கத்தினர், கத்தோலிக் கரை அழிக்கக் கங்ணம் கட்டிக்கொண்டனர் என்ற நம்பிக் கையில் பலர் புரட்சியிலீடுபட்டனர். படைஆட்சிச்சட்டத் தினாலும் தங்களுடைய வீடுகளைப் பறிகொடுத்ததாலும், அல்லது படைக்கலன்களை ஒப்படைப்பதற்காக கசையடிபட்டதனாலும் மேலும் பலர் இதில் பங்குகொண்டனர். வேறு சிலர் கொள்ளை யிடும் நோக்கத்தோடு இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர். அதனால் இப்புரட்சி விரைவிலேயே முரட்டுதனமும், அரைகுறை யாக ஆயுதந்தரித்த குடியானவர்கள் செய்த படுகொலைகளும் நிறைந்த ஒன்றாக மாறியது. ஒரு சிறந்தபடை அவர்களை எளிதில் அழித்துவிடக்கூடும். தெற்கில் எதிர்ப்பின் மையமாக இருந்தவர்கள் வினிகர் குன்றில் (Vinegar Hill) முறியடிக்கப் பெற்றனர். ஹம்பர்டின் (Humbert) தலைமையில் ஆயிரம் ஃபிரஞ்சு வீரர்கள் ஆகஸ்டுமாதத்தில்தான் மாயோ (Mayo) வில் உள்ள கிள்ளலா வளைகுடாவை வந்தடைந்தனர். காஸில் பாரில் (Castlebar) இருந்த நாட்டுப்படையினர் அவர்களின் துப்பாக்கி முனைத்தாக்குதலுக்கு இறையாயினர் என்றாலும், அடுத்தமாதத்திலேயே அவர்கள் சரணடைய வேண்டியதாயிற்று. அக்டோபர் மாதத்தில் லோக் ஸ்விள்ளி (Lough Swilly) யில் வந்த பிரெஞ்சுப் படையொன்று முறியடிக்கப் பெற்றது. பிடிபட்டவர் களில் ஒருவரான டோனுக்குப் படைத்துறை முறைமன்றம் மரண தண்டனை அளித்தது. ஆனால் அவர் தாமே ஏற்படுத்திக்கொண்ட காயங்களினாலேயே இறந்தார்.

புரட்சி உச்சநிலையில் இருந்தபோது தாராளமும் நேர்மையு முடைய மனம் படைத்தவர் என்று இந்திய நிலைச் சான்றுகளால் நிரூபிக்கப்பெற்ற காரன்வாலீஸ், துணைப்பிரபுவாகவும் படைமுதற் தலைவராகவும் பதவியேற்று வந்தார். கிராட்டனின் கட்சியைச் சார்ந்த ஐரிஷ் சீர்திருத்தவாதியான காசில்ரே (Castlereagh) காரன்வாலிஸின் முக்கிய செயலாளராக இருந்தார். எரிந்த வீடுகளும், பாழடைந்த நகரங்களும் நிறைந்து, கடன்சுமை மிகுந்து இருந்த நாட்டினையே அவர்கள் கண்டனர். குறைந்தது 12,000 புரட்சிக்காரர்கள் போரில் மடிந்திருக்கின்றனர். பலர் தூக்கி விடப்பெற்றனர் அல்லது நாடுகடத்தப்பெற்றனர், படையின்

கட்டுப்பாடு பெரிதும் அழிந்தது. நாட்டுப்படையானது வெறுப்பை வேரூன்றச் செய்தது, இரக்கங் காட்டுவதற்கெதிராக ஆட்சியாளர் கூக்குரலிட்டனர்.

ஐக்கியம் ஒன்றே அயர்லாந்துப் பிரச்சினைக்குற்ற கழுவாய் என்பதையும், அதுவே அந்நாட்டைப் படையெடுப்பினின்றும் காக்கக்கூடியது என்பதையும் காபினெட் ஏற்கெனவே தீர்மானித்திருந்தது. தமக்குமுன்பிருந்த ஷெல்பர்ணப்போலவே பிட்டும், 1782ஆம் ஆண்டு நிர்ணய ஏற்பாடு நிரந்தரமாகாது என்பதை எப்போதும் உணர்ந்திருந்தார். இப்பாடத்தினைக் காப்பாளர் நெருக்கடி விளக்கியது என்றால், போர் இதனை மேலும் வலியுறுத்தியது. ஆங்கிலச் செல்வம் ஒன்றே அயர்லாந்தின் புண்களை ஆற்றும் அருமருந்து என்பதை நம்பியவர் பிட். தங்களுடைய கொள்கையும், படைத்துறைச் சார்ந்த ஏற்பாடுகளும், இரு பாராளு மன்றங்களுக்கும் உண்மையில் பொறுப்பற்று இருந்த ஐரிஷ் அதிகாரிகளின் விருப்பப்படி அமையும் நிலை நீடிக்க முடியாதுஎன்று பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் கூறினர். இத்தகைய காரணங்களினால் ஐக்கிய ஏற்பாடுகள் வெஸ்ட்மினிஸ்டரில் எளிதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றன. ஆனல் டப்ளினில் வழக்கு விவரம் மோசமாகத் தயாரிக்கப்பெற்றது. 1799ஆம் ஆண்டில் இம்மசோதா முதல் முயற்சியிலேயே தோல்வியுற்றது.

அமெரிக்கப் போரிலிருந்து அரசியல் உணர்வு அதிகரித்தால் புராட்டஸ்டெண்ட் அயர்லாந்தின் பெரும் பகுதி, ஐக்கியத்தைத் தீவிரமாக எதிர்த்தது. டப்ளின் சிறப்பு மிகுந்த சமுதாயத்தைக்கொண்ட தலைநகரமாகும். அப்போதுதான் வெற்றியின் சுவையைக்கண்ட அல்ஸ்டர் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட விரும்பியது. ஆனல் ஐரிஷ் புராட்டஸ்டெண்டியம் ஐக்கியத்தை விரும்பவில்லையானல், கத்தோலிக்கரைச் சமாதானப்படுத்துதல் மூலமாகத்தான் அதனை அடையமுடியும் என்பது புலனாகியது. கத்தோலிக்க விடுதலை புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதியாக அமைய வேண்டுமென்று பிட்டும், டான்டாஸும் அதைப்போன்றே கார்ன்வாலிஸும், காசில்ரேயும் நம்பினர். அப்போதுதான் பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள், தங்களுடைய குறிக்கோள்களை அடைவதற்கான சிறந்த வழி ஏற்படலாம் என்று கருதி ஐக்கியத்தை ஆதரிப்பார்கள் என்று நம்பினர். ஆனல் பிற காரணங்களுக்காக ஐக்கியத்தை ஆதரித்த கிளேர் (Clare) போன்ற அதிகாரிகளும், ஐரிஷ் பாராளுமன்றமும் கத்தோலிக்கர் விடுதலையை இறுதிவரை எதிர்க்கத் தீர்மானித்தன. அதுபோது அரசரின் தயக்கம் தீமை விளைவிப்பதாயிற்று. பிட்டினுடைய

கட்சியில் புராட்டஸ்டெண்டினருடைய அலறல் ஏற்கெனவே கேட்கத் தொடங்கிவிட்டது, எனவே இப்போதைக்கு ஐக்கியத் திற்காக மட்டும் ஆவன செய்வது என்று அமைச்சர்கள் தீர்மானித்தனர். அதே சமயத்தில் அரசாங்கத்தின் நல்லெண்ணங்களை கத்தோலிக்கருக்கு உறுதியாக எடுத்துக் கூறப்பெற்றன. ஐக்கியப் பாராளுமன்றத்தில் கத்தோலிக்கரின் விடுதலைக்காக முயற்சி செய்யப்படலாம் என்பதற்குப் பிட்டும் அவருடைய ஆலோசகர்களும் உடன்பட்டனர்.

அடக்குமுறையால் திகைப்படைந்து, வறுமையில் வாடிய பொதுமக்கள், எப்பக்கமும் அக்கறை காட்டாதிருந்தனர். ஆனால் அயர்லாந்திலிருந்த 45,000 படைவீரர்களால் ஒழுங்கினை நிலைநாட்ட முடியவில்லை. மேலும் ஃபிரெஞ்சுக் கடற்படை வந்தது என்ற வதந்தியினால் பழைய குழப்பநிலை மீண்டும் தோன்றியது. ஐக்கியம் அரசியல் வகுப்பாரிடையே சிறிது சிறிதாக ஆதரவுபெறத் தொடங்கியது. குறிப்பாக கத்தோலிக்கத் தலைமை குருமார்களின் ஆதரவு உறுதியாக இருந்தது. சமயக் குருமார்களுக்கு அரசாங்கம் ஊதியம் அளிக்குமானால், பிஷப்புக்களின் நியமனத்தில் மறுத்தலைச் செய்யும் உரிமை அதற்கு இருக்கும் என்ற காசில்ரேயின் கருத்தினை அவர்களும் ஏற்றுக்கொண்டனர். விரிவடையும் வாணிபத்தில் நம்பிக்கை வைத்த கார்க்நகரும், பொதுவாகக் கத்தோலிக்கர் நிறைந்த மன்ஸ்டரின் பெரும் பகுதியும் ஐக்கியத்தை ஆதரித்தன. ஐக்கிய ஐரிஷ் மக்களில் கூடச் சிலர் பழைய பாராளுமன்றத்தைவிட ஐக்கியம் மேல் என்று கருதினர். புராட்டஸ்டெண்டுகளில் ஆரஞ்சு சங்கத்தார் பிளவுபட்டிருந்தனர். ஆனால் அல்ஸ்டரில் வாழ்ந்த லினன் வணிகர்கள் பொதுவாக ஆதரவு காட்டினர். எனினும் டப்ளின் மட்டும் இணங்க மறுத்தது. புராட்டஸ்டெண்டுகளின் கோட்டையாகத் திகழ்ந்த டிரினிடி கல்லூரியோ அல்லது வாணிகத்திலும், வாழ்க்கைத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்த கத்தோலிக்கரோ ஐக்கியத்தை ஆதரிக்கவில்லை. அப்போது கத்தோலிக்கரிடையே இளைஞரான டானியல் ஓகானல் என்பவருடைய உணர்ச்சி முனைப்புடைய குரல் எழுந்தது. ஐரிஷ் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட முதல் தோல்விக்கு ஈடு செய்வதே ஆங்கில அரசாங்கத்தின் முதல் வேலையாக இருந்தது. அதற்காக அரசாங்கம் தன்னுடைய செல்வாக்கு முழுவதையும் செலவிட்டது. ஐக்கியத்தினால் வரிவிதிப்பு உயரும், தலத்திருந்து பணி புரியாதவர் எண்ணிக்கை உயரும்; நிலச் சொந்தக்காரர்களுக்கும், பண்ணையாட்களுக்கும் இடையேயுள்ள பிளவு விரிவடையும், தங்களுடைய அதிகாரத்தை

விட்டுக்கொடுக்காத பரோ சொந்தக்காரர்கள் தொல்லை தருவார்கள் என்றெல்லாம்கூறி அதனை எதிர்த்தவர் வாதிட்டனர். ஆனல் குறுகிய சுயதேர்தலினல் வந்த பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரை, அரச ஆதரவாளர் எப்போதும் கையாளும் கையூட்டு முனையினல் இணங்கவைக்கும் நிலை இங்கும் இருந்து வந்தது.

1800ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஐக்கிய மசோதா, டப்ளின் பாராளுமன்றத்திற்கு வந்தபோது, காமன்சபையில் ஏறக்குறைய ஐம்பது வாக்குகளை அதிகமாகப் பெற்று, அரசாங்கம் வெற்றியடைந்தது. ஐரிஷ் ஆங்கிலத் திருச்சபையை நிரந்தரமாக அமைக்கவேண்டுமென்ற ஒரு புதுக் கட்டுரையால் ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் ஆதரவு கிடைத்தது. பல அரசியல்வாதிகளின் ஆதரவை இரு குறிப்பிடத்தக்க சலுகைகள் தேடித்தந்தன. அவைகளாவன, ஒன்று கவுண்டி ஸ்தானங்களின் எண்ணிக்கைக் குறைக்கப் பெறுதது; மற்றொன்று இரு உறுப்பினர் கொண்டபரோ முழுப்பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடுமானல் அது 15,000 பவுன் இழப்பீடு பெறும். ஆயினும் இழிந்த வழிகளிலேயே பெரும்பான்மையினர் ஆதரவு கிடைத்தது. பத்திரிகைகளுக்குப் பெரும்பொருள் கையூட்டாகத் தரப்பெற்றது. இப்போட்டியில் எதிர்க்கட்சியினரின் பிரசார நிதிக்கு எதிராக அரசாங்கம் வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம் அது கவுரவத்தின் பிறப்பிடமாக இருந்ததுதான். சுமார் நாற்பது புதிய பிரபுக்கள் அல்லது பதவி உயர்வுகள் அளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பெற்றதால் பல ஆதரவாளர்கள் ஐக்கியத்தை எதிர்த்தவர்களுக்குப் பதிலாக அதனை ஆதரித்தவர்களை ஆர்வத்தோடு நிறுத்தினர்.

அச்சட்டம் அரசரின் சம்மதத்தை ஆகஸ்டு மாதம் பெற்றது. அரசரது செங்கோல், அரசப்பெரு முத்திரை, வாரிசுரிமை ஆகியவற்றில் இரு அரசுகளையும் ஒன்றுக்கிய அச்சட்டம் 4 சமயப் பிரபுக்களையும், பிரபுக்களால் வாழ்நாள் முழுவதும் பதவி வகிக்கும் 28 சமயம் சாராப்பிரபுக்களையும், 100 காமன்ஸ் சபையினரையும் பேரரசுப் பாராளுமன்றத்திற்கு அனுப்பவேண்டுமென்று விதித்தது. அந்த நூறு காமன்ஸ் சபையினரில் மூன்றில் இரு பங்கினர் கவுண்டிகளின் பிரதிநிதிகளாவர். அரசத் தனியுரிமைக்கு வரம்பிடப்பெற்றது. அதனல் ஐரிஷ் பிரபுக்களின் எண்ணிக்கை 100-க்கு மேற்படாமல் குறைக்கவேண்டும். எனினும் ஐரிஷ் பிரபுக்கள் காமன்ஸ் சபையில் இடம் பெறலாம். மேலும் அச்சட்டம் மாற்றம் ஏற்படும் காலத்தில் காணக்கூடிய பொருளா

தார அதிர்ச்சியிலிருந்து அயர்லாந்தைக் காத்தது. நாட்டுக் கடன், வரிவிதிப்பு ஆகியவற்றில் இருநாடுகளிலும் இருந்த தனித் தனியான முறைகள் இருபது ஆண்டுகளுக்கு நீடித்திருக்க வேண்டும். இதற்கிடையில் பேரரசின் செலவுகளுக்காக 15க்கு 2 என்ற வீதத்தில் அயர்லாந்து நிதி வழங்கவேண்டும். கொள்கை யளவில் தடையிலா வாணிபம் நிறுவப்பெற்றது. ஆனால் கம்பளத் தொழில்கள், பருத்தித் தொழில்கள்போன்ற முக்கிய ஐரிஷ் தொழில்கள் சில ஆண்டுகளுக்கு ஆங்கிலப்போட்டிக்கு எதிராகப் பாதுகாப்புப் பெறவேண்டுமென்று வேண்டப்பட்டது.

ஐக்கியம் தோன்றிய ஒரு மாதத்திற்குள் தங்களுடைய நேர்மைக் கடன்களை நிறைவேற்றுதற்கும், ஐக்கியத்தை முழுமை யாக்குதற்கும் ஒரு மசோதாவைக் காபினெட் விவாதித்துக் கொண்டிருந்தது. அதன்படி கத்தோலிக்கர்களும், பிறபுறச் சமயத்தவரும் திருத்தப்பெற்ற பற்றுறுதிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதன்மூலம் பாராளுமன்றத்திலும் பதவிகளிலும் அனு மதிக்கப் பெறுதல்வேண்டும். அவர்களுடைய குருமார்கள் அரசாங்கத்திடமிருந்து சிறிது மானியம் பெறவேண்டும். கோவில் மகன்மைமுறை மாற்றியமைக்கப் பெறுதல் வேண்டும். ஆனால் இம்மசோதாவை லோக்பரோ என்னும் கருவூலத் தலைவர் அரச ரிடம் அம்பலப்படுத்தினர். அதன் காரணமாக முடிசூட்டு விழா உறுதிமொழிபற்றிய அவரது பழையவெறி மறுபடியும் தலைதூக் கியது. பதவிக்காகச் சூழ்ச்சி செய்யும் ஆக்லண்டுபோன்றவர்கள் அதனைப் பயன்படுத்திக்கொண்டனர். ஆர்ச் பிஷப்புக்களும் தீவிரமாக இருந்தனர். புராட்டஸ்டெண்ட் கிளர்ச்சியும், அரசரின் விருப்பும் போர்ட்லண்டையும் ஜெங்கின்சன்களையும், காபினெட்டி லிருந்த உரமற்றவர்களையும் நீக்கின. அரசர் பொது இடங்களில் நடுநிலைமை வகிப்பதானால், சிந்திப்பதற்கான அவகாசம் அவருக்கு அளிக்க பிட் தயாராக இருந்தார். அதே நிபந்தனையின்பேரில் அமைதியா? போரா? என்ற பிரச்சினை தீரும்வரை பதவியிலிருக் கவும் தயாராக இருந்தார். ஆனால் 'கொள்கையில் முழு சுதந் திரம்' அளிப்பதோடு, ''அமைச்சர்'' என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரம் குறைக்கப் பெறுதல் கூடாதென்றும் அவர் கோரினர். அக்காலத்தில் அவரது செய்கைபற்றி இருவகையான கண்ட னங்கள் எழுந்தன. அவை பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டன. எல்லோரும் அறிந்த அரசரது அச்சத் தயக் கத்தை, போக்கப் போதுமான நடவடிக்கைகளை பிட் ஏன் எடுக்க வில்லை என்ற கேள்வி எழுந்தது. ஒருவகையில் அதற்கு விடை யிறுக்கப்படவேண்டும் அவரே வீழும் நிலையில் இருந்தார். மேலும் பேரளவில் ஒன்றுபட்டு நின்ற காபினெட்டை அடுத்த ஆண்டு

வரை கொண்டு செல்லலாம் என்று நம்பினர். ஆனால் அவர் ஏன் பதவியில் நீடித்து நிற்காமல் ராஜினமா செய்தார் என்று காரன்வாலீஸ் அப்போதே கேட்டார். அதன்பிறகு பிற்காலத்தவர் அதே கேள்வியைக் கேட்டனர். ஏனெனில் அப்போது விக்கு, டோரி ஆகிய இரு கட்சியைச் சேர்ந்த வலிமை மிக்கவர்கள் அவருடன் இருந்தனர். உதாரணத்திற்கு கிரன்வில்லியும், டண்டாஸையும், ஸ்பென்ஸரையும், வீண்டாமையும், கானிங் கையும் காஸில்ரேயையும் குறிப்பிடலாம். இதற்குமாறுக சிலவற்றைக் குறிப்பிடலாம். அமைச்சர்கள் அரசரால் தேர்ந் தெடுக்கப் பெற்றவர்கள் என்ற கொள்கையை அவர் தமது வாழ்நாள் முழுதும் கொண்டிருந்ததைக் கூறலாம். மேலும் எதிர்க்கட்சியினர் திடமாக இருந்ததோடு, பிரபுக்கள் சபையில் தோல்வியுறுவதற்கான வாய்ப்பிருந்தது. அவருடைய காபினெட் பிளவுபட்டு நின்றது. அவரது கட்சியின் நிலையும் அதுவே. இறுதியாக போர் நெருக்கடியில் அரசர் விக்குகளின் பக்கம் திரும்பலாம், அதன்மூலமாகத் திருப்தி அளிக்காத வகையில் பிரான்ஸிடம் பணியலாம். இத்தகைய ஆராய்ச்சியின் மதிப்பு எத்தகையதாக இருந்தபோதிலும், அதன் பயனக பிட்டினுடைய ராஜினமாவை ஏற்றுக்கொண்டு சபாநாயகரான அடிங்டனை (Addington) பிரதம மந்திரியாக நியமிப்பது மூன்றும் ஜார்ஜிக்கு எளிதாயிற்று.

இங்ஙனம் பிட்டின் அரசாங்கம் முடிவுற்றது. அதனோடு அயர்லாந்திற்கான நேர்மையான நிர்ணயம் ஏற்படும் இறுதி நம்பிக்கையும் மறைந்தது. காசில்ரே கூறியதைப்போல, அயர்லாந்தில் காவற்படைக் கொள்கை தொடர்ந்து வருமாறு விடப் பெற்றது. ஏனெனில் மூன்றும் ஜார்ஜ் இப்போதும் நினைத்ததைச் செய்யக்கூடவில்லை. அரசாங்க மாற்றம் தோன்றிய உடனே 1801ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மறுபடியும் அவர் இறந்துவிடுவார் என்ற அச்சம் இருந்தது. அத்தகைய முடிவிற்கோ, காப்பாளர்சபை ஏற்படுவதற்கோ காரணமாக அமையாத பிட், அரசர் உயிருடன் இருக்கும் வரையில் கத்தோலிக்க விடுதலைப் பிரச்சினையை எழுப்புவதில்லை என்ற உள்ளத்தைத் தொடும் உறுதிமொழியளித்தார். அது அப்படியிருக்க, அவர் பதவியேற்கவேண்டுமென்று அவரது நண்பர்களான டண்டாஸும், குறிப்பாகக் கானிங்கும் வற்புறுத்தினர். அடிங்டன் அரசரது மனத்திற்கிசைந்தவராகவும், அதிகாரத்தில் இன்பம் கண்டவராகவும் இருந்தார். அதே சமயத்தில் அவர்களோ நெருக்கவும், கத்தோலிக்கரை கைவிட்டார் என்ற பழிச்சொல்லையேற்கவும் பிட் விரும்பவில்லை.

அடிங்டனின் காபினெட்டில் போர்ட்லண்டினுல் நடத்திச் செல்லப்பெற்றவர்களும், பழைய அரசாங்கத்தில் இருந்தவர்களு மான புராட்டஸ்டெண்டுகள், அவர்களுக்கு அரணுக, பதவி உயர்வுபெற்ற திறமை வாய்ந்தவர்களான கருஹல முதற் தலேவர் எல்டனும் (Eldon), பெர்ஸிவலும் (Perceval), வான்சிடார்ட் போன்ற (Vansittart) அடிங்டனின் சாதாரண திறமையுடைய நண்பர்களும் பதவி வகித்தனர். போரைத் தொடர்ந்து நடத்து வதா அல்லது முடிவற்ற ஒரு சமாதானத்தைச் செய்துகொள் வதா என்பதை அடிங்டனின் திறனற்ற அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். இங்கிலேயில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்த அரசு களில் காணப்பெற்ற வெறுக்கத்தக்க மெலிந்த தன்மை, அவைகளே அச்சம் காரணமாகவே ஃபிராஸின் பிடியில் சிக்க வைத்தது என்று கிரன்வில் எழுதினர்.

சமகால நிகழ்ச்சிகள்

1793 பெரும்போர் தொடக்கம்.
போலந்தின் இரண்டாவது பிரிவினை. விட்னியின் (Whitney) பருத்திவிதையைப் பிரித்தெடுக்கும் கருவி கண்டுபிடித்தல்.

1794 டாண்டனைத் தூக்கிலிடல். அதன் பிறகு ராபஸ்பியர் (Robespierre) அதேகதியடைதல்.
டோசெயிண்ட எல் ஓவர்ச்சர் (Toussaind L'Ouverture) ஹைடியை கிளர்ந்தெழச் செய்தல்.

1795 பேஸல் சாமாதானம்.
போலந்தின் மூன்றும் பிரிவினை. பாராளுமன்றத்தின் ஸ்பீன்ஹாம்லண்டு சட்டம் (Speenhamland Act).
கீட்ஸும் (Keats), தாமஸ்கார்லேலும் (Thomas Carlyle) பிறத்தல்.

1796 இத்தாலியில் போனபார்ட்.
ஸ்பெயினில் கோயா (Goya) ஓவியம்.
அம்மை குத்துவதை ஜென்னர் (Jenner) புகுத்தினர்.

1797 காம்போ பார்மியோ உடன்படிக்கை (Campo Farmio).
பர்க்கின் மறைவு,

1798 எகிப்தில் போனபார்ட்.
மால்தஸ் (Maltus) எழுதிய ஜனத்தொகையைப்பற்றிய கட்டுரை "Essay on Population".
வோர்ட்ஸ்வொர்த்தும் கோலிரிட்ஜும் எழுதிய "Lyrical Ballads",

1799 இத்தாலியில் சுவரோஃபும், (Souroff) நெல்ஸனும். மைசூரில் திப்பு கொல்லப்படுதல்.
புரூமேர் (Brumaire).
ராயல் சங்கத்தில் பாங்ஸும் டேவியும் (Davy).

1800 மாரங்கோ, ஹோஹன்லின்டன் (Hohen Linden) போர்கள்.
ஜெஃபர்சன் (Jefferson) அமெரிக்க ஜனதிபதியாதல்.
பீதோவனின் (Beethoven) முதல் இசைப் பொருத்தம்.

1801 லூனிவில் (Luniville) உடன்படிக்கை பிரான்ஸிற்கும் போப்பிற்கும் இடையேயான ஒப்பந்தம் (Concordat).
பிரிட்டனில் முதல் மக்கட் கணிப்பு (Census).
—*1825* ரஷ்யப்பேரரசர் முதலாம் அலெக்ஸாந்தரின் ஆட்சி.

5. நாட்டின் வாழ்வுப் போராட்டம். 1801–1815

1801ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இறுதியாக அடிங்டன் பதவியில் நிலைத்தபோது, போர் ஒரு செயலற்ற நிலைக்கு வந்தது. அதுபோது, ஃபிரான்ஸ் நில ஆதிக்கத்தையும், பிரிட்டன் கடலாதிக்கத்தையும் கொண்டு விளங்கின. எனினும், ஆஸ்திரியா அழிந்துவிட்டதைப்போன்று தோன்றியபோதிலும்; இழப்பீடுகளுக்காகப் பிரஷ்யா பேரம் பேசிக்கொண்டிருந்தபோதிலும், சார் மன்னர் பாலே (Zarr Paul) புறங்கண்ட புரட்சி, ரஷ்யாவைத் துணையாகக் கொள்ளும் நெப்போலியனின் நம்பிக்கையை நாசமாக்கியது. அதன் காரணமாகவும், கோபன்ஹேகனில் நெல்சன் பெற்ற வெற்றியினாலும், நம்முடைய கப்பல்களுக்கு வட ஐரோப்பியப் பகுதிகளைக் காவல் புரியவேண்டிய நெருக்கடி நீங்கிற்று. அதே சமயத்தில் எகிப்தில் ஃபிரெஞ்சுக்காரர் சரண் புகுவது எந்த நேரத்திலும் எதிர்பார்க்கப்பெற்றது. மேலும் மால்டாவை இழந்ததால், கிழக்குமுகமாக முன்னேறும் வழிகளும் அடைபட்டன. மேலும் வேறு சில நோக்கங்களுக்காகவும் நெப்போலியன் ஓர் இடைக்கால அமைதியை நாடினர். அரச ஆதரவாளர்களுக்கும், குடியரசுவாதிகளுக்கும் எதிராகத் தமது நிலையை உறுதி செய்துகொள்ளவும், ஃபிரெஞ்சுத் தொழில்களை மீட்கவும் விரும்பினர். ரோமுடன் உடன்படிக்கை செய்து கொள்வதன்மூலமாக ஃபிரான்ஸில் வாழ்ந்த பழைமைப் பண்பினரின் ஆதரவைப் பெறவும், இத்தாலிக்காக ஹாலந்திடமிருந்து பெற்ற தாக்குமுனைகளை வலுப்படுத்தவும், பிரிட்டனுடன் போர் புரியும் சக்திவாய்ந்த கப்பற்படையைக் கட்டுதற்கும் அவகாசம் தேவையென்று அவர் எண்ணினர்.

பிரிட்டன் துணையின்றி தனித்து நின்றது. போரின் விளைவாக நாட்டுக் கடன் 290 மில்லியன் பவுன் கூடுதலாயிற்று. 3500க்கு மேற்பட்ட வணிகக் கப்பல்களை இங்கிலாந்து இழந்திருந்தது. மற்றபடியும் ரொட்டியின் விலைகள் பஞ்ச காலத்தை

நினைவூட்டின. அயர்லாந்தில் மனநிறை வின்மை அபாய அளவை எட்டியது. போரினால் வந்த சோர்வு, அமைதி வேண்டுமென்ற வணிகர்களின் வற்புறுத்தல், ஆகியவை நமது கொள்கையை அடிக்கடி மாற்றியதால் தனித்து வாழவேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. அதன்படி பிரிட்டன் தனது நலனிலேயே அக்கறை காட்டவேண்டும். ஐரோப்பாவைக் காப்பதற்காக மேலும் தனது குருதியையும், நிதிக்குவியலையும் செலவிடக்கூடாது.

எனினும் பிட் வாதிட்டதைப்போன்று மூச்சுவிடச் சிறிது அவகாசம் தேவையென்றால், சமாதானப் பணியில் போனபார்ட் ஒத்துழைப்பாரா என்பதைச் சோதனையிடுதல் சாலச்சிறந்தது என்றால், அடிங்டன், அவருடைய வெளிநாட்டு விவகாரச் செயலர் ஹாகஸ்பரி[1] (Hawkesbury), அவருடைய முழு உரிமை பெற்ற தூதுவரான காரன்வாலிஸ் ஆகியோர் செய்து முடித்த அமீன்ஸ் (Amiens) உடன்படிக்கை மிக மெலிந்த ஒன்றாகும். மால்டாவை வைத்துக் கொள்ளுதல், அதனுடன் எல்லா டச்சுக் குடியேற்றங்களையும் வைத்திருத்தல், இத்தாலியில் முன்னிலை மீட்சி முழுவதும் ஏற்படுதல் ஆகியவை அவர்களுடைய முதல் திட்டத்தில் அடங்கி இருந்தன. ஆனால் 1802ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த உடன்படிக்கை இறுதியாகக் கைச்சாத்திடப் பெற்றபோது ஏறக்குறைய எல்லாப் பாதுகாப்புகளும் மறைந்தன. ஈழம், டிரினிடாட் ஆகியவை மட்டுமே பிரிட்டனுக்குக் கிடைத்தன நன்னம்பிக்கை முனை ஹாலந்திற்குத் திரும்பக்கிடைத்தது. மேற்கிந்தியத்தீவுகள் பிரான்ஸிற்கும், மைனர்கா ஸ்பெயினுக்கும் கிடைத்தன. துருக்கி எகிப்தை மீட்டுக்கொண்டபோதிலும், போனபார்ட் அதனை உடன்படிக்கையில் இணைக்கவில்லை. பிரிட்டிஷ் கப்பல்களுக்கு போர்ச்சுகல்லின் துறைமுகங்களில் இடமளிக்கக்கூடாது என்று வற்புறுத்தப்பெற்றது. ஆனால் பெயரளவில் அந்நாட்டின் உரிமை மீட்கப்பெற்றது. செயின்ட் ஜான் வீரர்களின் (Knights of St. John) வலிமையற்ற ஆட்சிக்கே மால்டா திரும்பச் சென்றது. தெற்கு இத்தாலியிலிருந்த ஃபிரெஞ்சுக்காரர் வெளியேறியபோதிலும், சார்டினியாவைப் பற்றியோ, வடபகுதிபற்றியோ ஒன்றும் கூறப்படவில்லை. ஆரஞ்சு இளவரசருக்கு இழப்பீடு அளிப்பதாக தெளிவற்ற ஆசை வார்த்தை காட்டப்பெற்றபோதிலும் ஹாலந்து, ஜெர்மனி ஆகியவற்றின் வருங்காலத்தைப்பற்றி மௌனம் சாதிக்கப் பெற்றது. பிரிட்டிஷ்காரர் மிகுதியாக மதித்த ஃபிரான்ஸுடனை வாணிக உடன்படிக்கைபற்றி ஒன்றுமே பேசப்படவில்லை.

[1] பின்னாளில் இரண்டாம் லிவர்பூல் (Liverpool) பிரபுவாக வந்தவர்.

கட்சிப் பூசல்களின் நிழல் தீக்குறியைக் காட்டும் இச்சமாதானத்தின்மீது படிந்தது. பூட்டின் காலத்தைப்போலவே, அரசரது விருப்பப்படி உருவான வலியற்ற காபினெட்டை அமைதியொன்றே காக்கமுடியும். 1801ஆம் ஆண்டு முழுவதிலும் அரசருடைய அறிவுநிலை தடுமாறியதால் நிலை மேலும் மோசமாகியது. எனவே அடிங்டனை வீழ்த்தி, அரசரின் நிலையை ஆபத்திற்குள்ளாக்கவோ, அல்லது இந்த உடன்படிக்கையின் உரிமைக் கட்டுப்பாடுகள் ஃபிரான்ஸிற்கு "புகழ்தேடித் தருபவை" என்று இறுமாந்த ஃபாக்ஸிற்கு அதிகாரம் வழங்கக் கூடிய காப்பாளர் சபையை அமைக்கவோ, பிட் மறுத்தார். உடன்படிக்கையை ஆதரித்துத் தமது நெருங்கிய ஆதரவாளர்களின் ஆத்திரத்திற்கு ஆளானார். பாராளுமன்றத்தில் பெருவாரியானவர் அந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டனர்.

போர் மறுபடியும் தொடர்வதற்கு முன்னால் அங்கியர் அச்சுறுத்தல்களும், உள்நாட்டில் பிளவும் நிரம்பிய பதினொரு குறுகிய மாதங்கள் நமக்கு ஓய்வாகக் கிடைத்தன. தாம் உருவாக்கிய கட்சியைத் தமது செய்கைகளாலேயே அழித்தவர் பிட். கத்தோலிக்க விடுதலை அவரை அரசரிடமிருந்தும், புராடஸ்டன்ட் சமய உணர்வு கொண்டோரிடமிருந்தும் பிரித்தது. 1802ஆம் ஆண்டுத் தேர்தல் அடிங்டன் அசைக்க முடியாதவாறு நிலை பெற்றார் என்பதை வெளிப்படுத்தியது. உடன்படிக்கையின் உரிமைக் கட்டுப்பாடுகள் 'இழிவானவை' என்று கிரன்வில் தீவிரமாகக் கண்டித்துக் 'களிப்புமிகுந்த பிரிட்டனின் காக்கும் ஆண்வாத்து' (guardian gander) என்று பிரதம அமைச்சரைக் கானிங் கடுமையாகத் தாக்கிக் கேலி செய்தார். ஆனால் உண்மையில் படைக்கலப்பும்; வருமானவரி நீக்கமும் அடிங்டனின் செல்வாக்கை வளர்த்தன. இறுமாப்புடைய பிட்டைக் காட்டிலும், அவருடன் பழகுவது எளிது எனக் கனவான்கள் உணர்ந்தனர். தற்போதைக்கு பிட் திரும்பப் பதவிக்கு வருவதையும், போர் மீண்டும் தொடங்குவதையும் தடுக்கவே அடிங்டனை ஃபாக்ஸ் ஆதரித்தார். அவரது ஆதரவாளரான டையர்னே (Tierney) 'டாக்டருடன்' பதவிகூட வகித்தார்.

எனினும் போரில் செய்து முடிக்காததைப் படைக்கலந் தாங்கிய சமாதானத்தின்மூலம் முடிப்பதே போனபார்ட்டின் திட்டமென்பது விரைவிலேயே தெளிவாகியது. அவர் 'இழிவு என்னும் குவளையில் இறுதித்துளி இருக்கும் வரையில் நம்மை அருந்தச் செய்வார்' என்ற கிரேயின் முன்னறிவிப்பினை நிறைவேற்றினர். செயின்ட் டோமிங்கோவைத் (St. DominGo)

திரும்பக் கைப்பற்ற படையை அனுப்பியதும், ஸ்பெயினிடமிருந்து லூஸியானாவைக் கைப்பற்றியதும், நமது அட்லான்டிக் குடியேற்றங்களை அச்சுறுத்துவதாக இருந்தன. மேலும் தாம் ஆஸ்திரியாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் சிறு குடியரசுகளுக்குச் சுதந்திரம் வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தபோதிலும் அவைகள் சீர்குலைக்கப்பெற்றன. ஹாலந்தில் ஃபிரெஞ்சுக் காவற் படைகளை நிறுத்தினர். ஸ்விட்ஸர்லாந்தில் புதிய அரசாங்கம் ஒன்றை ஃபிரெஞ்சுப்படை தேர்ந்தெடுத்தது. பிரிட்டிஷ் தாராளவாதிகளின் கோபத்தைக் கிளறுவதாக இருந்தது. போனபார்ட் சிஸால்பைன் நாட்டிற்குத் தலைவரானர், பீட்மாண்டும், எல்பாவும் நேரடியாக இணைக்கப்பெற்றன. இதற் கிடையில் அறிவியல் புத்தாய்வுக் குழுவொன்று ஆஸ்திரேலியாவில் ஆராய்ச்சி நடத்தியது. இந்திய அரசர்களைத் தூண்டுதற் காகப் படைசார்ந்த தூதுக்குழு ஒன்று சென்றது. ஃபிரெஞ்சுப் பிரதிநிதிகள் கிரீஸில் சுற்றினர். அதே சமயத்தில் எகிப்து ஃபிரெஞ்சுக்காரர்களின் கையில் விழத் தயாராக இருந்தது என்று போனபார்டின் லெவான்ட் உயர் ஆணையாளரின் அறிவிப்பு, அதிகாரபூர்வமான செய்தித்தாளில் வெளியாகியது. ஹனோவரை பிரஷ்யாவிற்குக் கைக்கூலியாகத் தருவதாக நெபோலியன் ஆசை காட்டினர். துருக்கியைப் பங்கிட்டு அளிப்பதாக ரஷ்யாவிற்கு ஆசைகாட்டினர். பிரிட்டனைப் பொறுத்தவரையில் அதனை அச்சுறுத்திப் போரைத் துணிந்து செய்யாதவண்ணம் ஆரவாரம் நிறைந்த அறிக்கைகளையும், ஃபிரான்ஸும் பிரிட்டனும் இணைந்து உலகை ஆளலாம் என்னும் குறிப்புக்களையும் மாறிமாறி வெளியிட்டார்.

அதிகமாக அமைதியை நாடுவோரும் நம்பும் அளவிற்கு போனபார்ட், குற்றங்களைச் செய்து குவிக்கும் வரையில் தாம் காத்திருக்க வேண்டுமென்று அடிங்டன் அறிவித்தார். ஃபாக்ஸ், ஸ்விட்ஸர்லாந்தில் அல்லது எகிப்தில் நாம் செய்வதற்கொன்று மில்லை என்று உறுதியாக அறிவித்தார். ஆனல் கிரன்வில், டண்டாஸ், கானிங் போன்றவர்கள் இத்தகைய வலிமையற்ற மந்திரிசபை ஒழியவேண்டுமென்றும், பிட் திரும்பவும் பதவிக்கு வரவேண்டுமென்றும் வாதிட்டனர். ஆனல், தேசிய அரசாங்கம் ஏற்படுவதற்கான நம்பிக்கை, அரசரானும், கட்சிப் பிளவுகளினல் நாசமாகியது. டண்டாஸையும் தற்போது மெல்வில் பிரபு (Melville) கிரன்வில்லையும் தனிப்பட்ட பூசல் பிரித்துவைத்தது. மேலும் கிரன்வில் எதனை ஒத்துக்கொள்கின்றாரோ அதனை மெல்வில் பிரபு எதிர்த்து பாக்ஸுடன் சேர்ந்து கொள்வார். நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 1803ஆம் ஆண்டின்

ஆரம்பத்தில் பிட்டின்கீழ்ப் பணிபுரிவதாக அடிங்டன் பண்பற்ற வகையில் கூறினர். ஆனல் அவரும் அவரது ஆதரவாளர்களும், கிரன்வில்லையும், விண்டாமையும் நிராகரித்தனர். உடல்நிலை கெட்டு, கட்சிகளிடையே அலைக்கப்பெற்ற பிட், கட்சிகளின் பழி தீர்க்கும் எண்ணத்தில் கலந்துகொள்ளாதிருந்தார். ஆனல் அவர் துணிந்து கடைப்பிடித்தவழி கேடுபயப்பதாக இருந்தது. அடிங்டனுடைய மெலிந்த கொள்கையும், மோசமான நிதிநிலையும் ஒருபுறமிருக்க, மற்றொருபுறத்தில் பிட் தம்மைத் திடப்படுத்திக் கொண்டு, மிக உயர்ந்த பதவியையேயேற்றுக்கொள்ளமுடியு மென்றார். எனினும் அரசரை 'வற்புறுத்த' அவர் விரும்பவில்லை. அத்தகைய வற்புறுத்தலினல் அரசரது அறிவு பிறழ்ந்து விடலாம். பாக்ஸினுடைய அரசாங்கம் உருவாகலாம் அதே சமயத்தில் அச் செயலினல் பலரைக்கொண்ட காபினெட்டை அரசர் விடாப் பிடியாக மறுக்கக்கூடும். மேலும் கிரன்வில்ல விலக்க வேண்டு மென்ற நிபந்தனையை ஏற்க பிட் மறுத்தார். அதைப்போன்றே ஹாக்ஸ்பரி, காசில்ரே போன்றவர்களை விலக்கவும் முடியாது. சமாதானம் செய்துகொண்ட அனைவர்மீதும் பழிசுமத்தவும் முடியாது. அதனல் அவர் கிரன்வில்லுடன் சேர்ந்து புதிய அரசாங்கத்தைக் கோரினர். கத்தோலிக்கப் பிரச்சினையை வெளிப்படையான ஒன்றுகச் செய்யத் தயாராக இருந்தார். சிறந்த காபினெட் சபையை அமைப்பதற்கு முழு உரிமை தமக்கு வேண்டுமென்று கோரினர். கொள்கை காரணமாகவும், புத்தி சாதுரியத்தின் அடிப்படையிலும், தமது தந்தையார், ஷெல்போர்ன் ஆகியோருடைய எண்ணங்களுக்கு ஏற்றவகையில் அரசரிடம் பணிவாக நடந்துகொண்டார்.

நெப்போலியனின் மறைமுகமான வெற்றிகளுக்கெதிரான நடவடிக்கை எடுக்குமாறு நாட்டு மக்களிடையே தோன்றிய உணர்ச்சி காபினெட்டைத் தூண்டியது. எகிப்தையும், நன்னம் பிக்கை முனையையும் விட்டு அவர்கள் வெளியேறியபோதிலும் ஐரோப்பாவில் தலையிடப்பிரிட்டனுக்கு உரிமையில்லையென்று நெப்போலியன் ஆணையிட்டதை வன்மையாக எதிர்த்தனர். உடன்படிக்கைக்குப் பிறகு நெப்போலியனின் வன்முறைத் தாக்கு தல்களுக்கு ஈடாகப் பத்து ஆண்டுகளுக்கு மால்டாவை நாம் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினர். அதே சமயத்தில் ஃபிரஞ்சுக்காரர் ஹாலந்திலிருந்து வெளியேற வேண்டுமென்றும், சார்டினியாவிற்கு இழப்பீடு அளிக்க வேண்டும் என்றும் வற்புறுத் தினர். ஆனல், காய்ச்சல்காரணமாகத் தமது மேற்கிந்தியப் படையினர் மடிந்ததைக் கண்டு, லூஸியானுவை அமெரிக்காவிற்கு விற்பதன் மூலமாக மேற்குத் திட்டங்களைக் கைவிட்டதைக் குறிப்

பாலுணர்த்திய நெப்போலியன், மால்டாவை நம்மிடமே விட்டுத் தமது மதிப்பைக் குறைத்துக் கொள்ளமாட்டார். கிழக்கில் கொண்ட ஆசைக்கனவுகளையும் கைவிடமாட்டார். உடன்படிக்கைகளை மீறியதாகப் பிரிட்டனைக் கண்டித்து, முற்றுகையிடுவதன் மூலமாக அதனைப் பணியவைக்க முற்படுவார்.

1803ஆம் ஆண்டில் மே மாதத்தில் போர் மீண்டும் தொடர்ந்திலிருந்து மற்றுமொரு ஆண்டிற்கு அடிங்டனின் அரசாங்கம் எண்ணற்ற இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் இடையே போராடியது. அதே சமயத்தில் ஹேஸ்வரை நெப்போலியன் கைப்பற்றினர்; நேபிள்ஸின் மீது படையெடுத்துச் சென்றார்; பிரிட்டனைத் தாக்க ஆயத்தமாக நின்றார். பிட்டிற்காக மேலும் காத்திருக்க மறுத்த கிரன்வில் கட்சியினர், அடிங்டனை வீழ்த்த வேண்டுமென்றும் அகன்ற அரசாங்கத்தை நிறுவுவது என்றும், விடுதலையின் மீது தடையிருக்கலாகாது என்றும், ஃபாக்ஸை கூறி வந்ததை ஒப்புக்கொண்டனர். 1804ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் அடிங்டன் பதவிலிருந்து நீங்கினர். கத்தோலிக்க விடுதலையை வற்புறுத்துவதில்லையென்ற வாக்குறுதியைப் பிட்டிட மிருந்து பெற்ற அரசர், கிரன்வில்களை ஏற்றுக் கொள்ளத் தூண்டப்பட்டபோதிலும் ஃபாக்ஸை சேர்த்துக் கொள்ள மறுத்தார். ஆனால், ஃபாக்ஸ் இல்லாமல் விக்குகளோ, கிரன்வில் கட்சியினரோ ஒத்துழைக்க மாட்டார்களாகையால் தாம் தவிர்க்க எண்ணிய குறுகிய அடிப்படையுடைய அரசாங்கத்தை உருவாக்கும் கட்டாயம் பிட்டிற்கு ஏற்பட்டது. தம்முடைய ஆதரவாளர்களில் மெல்வில், ஹாரோபி (Harrowby), கானிங் ஆகியோரையும், அடிங்டனுடன் பணிபுரிந்தவர்களில் ஹாக்ஸ்பரி, எல்டன், போர்ட்லண்டு, காசில்ரே ஆகியோரையும் காபினெட்டில் சேர்த்துக் கொண்டார். மெலிந்த இக் குழு காமன்ஸ் சபையில் பிட்டின் மீதே மிகப் பெரும் பொறுப்பினைச் சுமத்தியது. அவரது பழைய கட்சியில் பாதிபேர் அடிங்டனையே எதிர்நோக்கி நின்றனர். அதே சமயத்தில் பிட்டிற்கும் அரசருக்கும் எதிராக ஒரு கட்சியை ஒற்றுமைப் படுத்துவதற்கு ஒரு வழியாக விடுதலைப் பிரச்சினையை முன்னணியில் நிறுத்தியது. ஃபாக்ஸின் தந்திரம் வாய்ந்த அறிவேயாகும். 1804-5ஆம் புத்தாண்டுகளில், அப்போது சிட்மவுத் பிரபுவாக உயர்த்தப் பெற்ற, அடிங்டனைக் காபினெட்டில் சேர்த்துக் கொண்டதோடு அவர்தம் நண்பர்களுக்காகச் சில பதவிகளை ஒதுக்கியதன் மூலமாகப் பிட் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டார். எனினும், உள்ளத்தில் புரையோடிக் கொண்டிருந்த புண் கொண்ட உணர்ச்சிகளைக் கானிங் போன்ரோரின் கடுஞ் சொற்கள் கிளறியதால், திருத்தியமைக்கப் பெற்ற

அமைச்சரவை சில மாதங்களுக்குள் வீழ்ந்தது. மேலும், தமது மதிப்பை சிட்மவுத் நன்குணர்ந்திருந்தார். பொதுப் பணத்தைக் கையாடுவதில் மெல்வில் தாராளமாக இருந்தார் என்பதை நாவாய்ப் படைக்கான உயர் ஆணைக் குழு வெளிக் கொணர்ந்த போது, அடிங்டன் கட்சியினர் மெல்வீலுக்கு எதிராக இருந்தனர். எனவே, மெல்வில் பதவியை விட்டு நீங்கினர். அவருக்கு எதிராக அரசத் துரோகக் குற்ற விசாரணை கொண்டுவரப் பெற்றது. ஆனல், தம்மைப் பின்பற்றுவோர்களுக்கு மேலும் பதவி உயர்வு வேண்டுமென்று சிட்மவுத் கேட்டபோது பிட் மறுத்தார். அதனல். அவர்கள் மந்திரிசபையை விட்டு வெளி யேறினர். இத்தகைய அவதூறுகளால் புகழழிந்த பிட், கிரன் வில்லியும், ஃபாக்ஸையும் அரசர் ஏற்றுக்கொள்ளுமாறு மறுபடியும் முயன்ருர். ஆனல், அதில் மறுமுறையும் தோல்வி கண்டார். அரச அதிகாரத்திற்கும், கட்சி உணர்விற்கும் இடையே சிக்கிய அவர் இடர்மிகுந்த இந்த ஆண்டில் தனித்துப் போராடவேண்டி யிருந்தது.

1804ஆம் ஆண்டு மே மாதத்தில் பிட் பதவிக்கு வந்தபோது, நெப்போலியன் ஃபிரெஞ்சுப் பேரரசரானர். மேலும், அவர் பேடனிலிருந்த போர்போன் குலத்தைச்சார்ந்த டக் டி எங்கீன் (Duc d' Enghien) என்பவரைக் கடத்திச் சென்று, சுட்டுக் கொன்ருர். அரச ஆதரவாளர்களின் சூழ்ச்சியையும், ஐரோப்பா வின் முடியுடைவேந்தரையும் எதிர்த்து நின்ருர். அடுத்த ஆண்டில் ஜினேவாவைக்கைப்பற்றி, இத்தாலியின் வேந்தரென முடிசூட்டிக் கொண்டார், நேரடித் தாக்குதல், கடல்வழியாகக் கவனத்தைத் திருப்புதல், ஐரோப்பியத் துறைமுகங்களை மூடுதல் ஆகிய மூன்று ஆயுதங்களைத் தனித்தனியாகவோ, ஒன்ருக இணைத்தோ இங்கிலாந்திற்கு எதிராக அவர் பயன் படுத்தினர். ஸ்பெயினின் கூட்டுறவை வற்புறுத்திப்பெற்ருர். இத்தாலியத் துறைமுகங்களையும் போர்ச்சுகல்லின் துறைமுகங்களையும் மூடினர். அவைகளுடன் ஹாம்பர்க்கிலிருந்து ஷெல்ட்வரையி லுள்ள கரை முழுவதும் மூடப்பெற்றது. ஆண்ட்வெர்ப்பை பெருங் கடற்படைத் தளமாக்க, நெப்போலியன் முனைந்தார். ஆஸ்டண் டிற்கும் (Ostend) இடாபில்லிற்கும் (Etaples) இடையே இலேசான கப்பல்களையும், தட்டையான அடிப்புறமுள்ள படகுகளையும் கொண்டுகுவித்தார். அதே சமயத்தில் சோல்ட் (Soult), நே (Ney) ஆகியோரின் தலைமையில் இருந்த 1,60,000 வீரர்கள் கப்பலில் ஏறுவதற்கும் கரையில் இறங்குதற்கும் ஒத்திகை நடத்தினர்.

தனித்து நின்று போராடிய பிரிட்டிஷார் ஓராண்டு காலத்திற்கு மேலாகக் கடுமையான பாதுகாப்பு வேலையில் இறங்கினர். பொருளாதாரம் காரணமாக சுமார் எண்பது பெருங் கப்பல்களே இவர்களிடம் இருந்தபோதிலும், கப்பற் படையின் கண்கள் போன்று விளங்கிய விரைந்து செல்லும் போர்க்கப்பல்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தபோதிலும், செயிண்ட் லூஸியாவிலும், டெமெராராவிலும், பகைவரின் எல்லாக் குடியேற்றங்களிலும் பகைவர்களின் துறைமுகங்களிலும் கப்பற் படைப் பிரிவுகள் முற்றுகையிடப் பெருமிதத்துடன் சென்றன. அட்மிரல் காரன் வாலீஸ், இரண்டு ஆண்டுகள் முடியும் வரை பிரஸ்டிற்கு எதிரே காத்திருந்தார். நெல்ஸனே ஓர் இரவும் கரைக்குச் செல்லாது, இருபத்தி இரண்டு மாதங்களுக்கு டூலோனைக் காவல் புரிந்தார். நமது தலைசிறந்த மாலுமிகளும், படைவீரர்களும் நம்பிக்கை கொள்ளாத படையெடுப்பினைத் தாங்குதற்காக நாடு ஆயத்த நிலையிலிருந்தது. பாங்கியையும், உல்விச் (Woolwich) வெடி மருந்துச் சாலையையும் மிட்லண்டு பகுதிகளுக்குக் கொண்டு செல்லத்திட்டங்கள் தயாரர்யின. கரைகளிலே மார்டெல்லோ (Martello) அரண்களும், படைக் கால்வாய்களும், தீப்பந்தங்களும் நிறைந்திருந்தன. சின்கியூ போர்ட்டின் (Cinque Ports) காப்பாளராக இருந்த பிட்டும், 3,50,000 தொண்டர்களில் ஒருவராக இருந்தார். படையின் ஒழுங்கினை உயர்த்த, யார்க்கோமகனார் பெருந்தொண்டாற்றினர். படையதிகாரிகள் கல்லூரி (Staff Colleg)க்குரிய அடிக்கல்லை அவர் நாட்டினர். ஆனல், படைக்கு ஆள் சேர்க்கும் முறையில் தீவிரமான குறைகாணப்பெற்றது. நாட்டுப் படைச் சீட்டிலிருந்து தொண்டர்களுக்கு விலக்கு அளிக்கப் பெற்றது. மேலும், ஒரு சில ஆண்டுகளுக்கு மேம்பட்ட பணிக் கொடைகள் பெற்ற படையினருக்கு எதிராக வாழ்நாள் முழுவதற்குமாக அமர்த்தப்பெற்ற முறையான படையினர் போட்டியிட வேண்டி இருந்தது.

ஐரோப்பாவில் சக்திச் சமநிலையை ஏற்படுத்த, 175,000 போர் வீரரையும், நாட்டுப்படையையும் கொண்ட இச் சிறு படையால் ஆகாது. அத்தகைய நிலையை மற்றுமொரு கூட்டிணைப்புத் தான் தோற்றுவிக்கமுடியும். ஆனல் மிக மெல்லவே அது உருவாகியது. ஏனெனில் பிரஷ்யா நடுக்கத்துடன் பின் வாங்கியது. ஆஸ்திரியா இடர்களை ஏற்கத் துணியவில்லை. ரஷ்யப் பேரரசர் அலெக்சாந்தர் மால்டாவின் மீது மிக்க ஆசை கொண்டிருந்தார். போலந்து, கான்ஸ்டான்டிநோபிள் ஆகியவை பற்றி ஒன்றும் கூறத்தேவையில்லை. எனினும் அடுத்து வந்த யுகத்தை தெளிவாகக் குறித்த புதுவகையான கூறுகள்

நெப்போலியனைத் தீவிரமாக வெறுத்தன. இவை ஒருபகுதி ஸ்லாவிய (Slav) இன உணர்ச்சியினாலும் உருவானவை. நெப்போலியனிடம் காணப்பெற்ற புதிய அமைப்பினைத் தோற்றுவிக்கும் வாழ்க்கைக் குறிக்கோள், அரசச்செருக்கு, தமது நாட்டின் தனிப்பெரும் ஆட்சியாளர் நிலை ஆகிய அனைத்தையும் அவை வெறுத்தன. 1804-5ஆம் ஆண்டுகளில் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிட், தமது அனுபவத்தில் அறிந்த சில கொள்கைகளை வலியுறுத்தினர். அவைகளைக் கடைப்படித்ததன் மூலமாக அவரது சீடர்கள் கொடுங்கோலரை வீழ்த்த முடிந்தது. தங்களைக் காத்துக்கொள்ளும் திறம் அற்ற சிறுசிறு அரசுகளை மீண்டும் நிலைநிறுத்துதல் பகுத்தறிவிற்கு உகந்ததல்ல என்பதைப் புரட்சி எடுத்துக்காட்டியது என்று அவர் வாதாடினர். ஹாலந்தை மீட்கவேண்டும். ஆனல், அது பெல்ஜியத்தின் ஒரு பகுதியைப் பெற்று விரிவடையவேண்டும். குறைந்தது லக்ஸம்பர்க்கைத் தன்னுள் அடக்கும் வகையில் பிரஷ்யா மேற்குமுகமாக விரிவடைந்தது வட இத்தாலியில் சார்டீனியா முதன்மையான நிலைக்குத் தன்னைக் கொண்டு வந்தது. அங்கே ஆஸ்திரியாவும் அதிக இடத்தைப் பெறவேண்டும். தனது அரசியல் முறையை வகுத்துக் கொள்ளும் உரிமையை ஃபிரான்ஸ், பெற்றிருக்கலாம் என்பதை பிட் ஏற்றுக் கொண்ட போதிலும், தடைகளையுடைய இம் முறை ஏறக்குறைய புரட்சிக்கு முன்பிருந்த எல்லையையே ஃபிரான்ஸ் பெற்றிருக்க வேண்டுமென்று கட்டுப்பாடு செய்தது. பொதுவான ஒப்புதல் இன்றி நேசநாடுகள் ஃபிரான்சுடன் சமாதானம் செய்து கொள்ளக்கூடாதென்றும், தங்களுடைய கூட்டு உத்தரவாதத்தால அமைதியைக்காக்க வெண்டுமென்றும் கூறினர்.

இத்தகைய அடிப்படையில், பிரிட்டிஷ் மானியங்களினல் வலிமையடைந்த கூட்டிணைப்பு, 1805ஆம் ஆண்டு கோடையில் உருவாகியது. அதில் பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்திரியா ஆகியவற்றுடன் ஸ்வீடனும்சேர்ந்திருந்தது. ஆனல் அஞ்சுதற்குரிய விபரீத சம்பவத்தில் அது அழிந்தது. மெதுவாகச் செல்லும் ரஷ்யப்போர் இயந்திரத்தைச் சதுப்பு நிலம், ஆறு ஆகியவற்றின்மீது கொண்டு செல்வதற்குக் காலம் பிடிக்கும். ஆஸ்திரியாவின்மீது அழுக்காறு கொண்டு, போர்க் கொள்கையில் பேரார்வம் காட்டி, நேச நாடுகளிடமிருந்து எளிதாக ஹனோவரைப் பெற முடியுமா, அல்லது ஃபிரான்ஸிடமிருந்து பெறமுடியுமா என்பதை முடிவு செய்யாது தயங்கிய பிரஷ்யாவைப் பின்னல்விட்டு, ஆஸ்திரியருக்கு உதவியளிக்க ரஷ்யா முன்வருவது கடினம். அதே சமயத்தில் தெற்கு

இத்தாலியில் பிரிட்டிஷ் படைப்பிரிவு ஒன்று வீணாகியது. ஸ்வீடனுடனும், நட்பு நாடு எனக்கொள்ளப்பெற்ற பிரஷ்யாவுடனும் ஒத்துழைக்கவேண்டி நீண்ட காலதாமத்திற்குப் பிறகு மற்றொரு படைபோமிரேனியாவினுக்கு அனுப்பப்பெற்றது. ஹனோவரைத் தவிர எதை வேண்டுமானாலும், பெல்ஜியத்தையும் பிரஷ்யாவிற்கு கைக்கூலியாக அளிக்கப் பிட் தயாராக இருந்தார். இதற்டையில் பவேரிய உதவி கிடைக்குமென்று அவசர முடிவு செய்த ஆஸ்திரியர்கள், ரஷ்யப்படைப் பெருக்கம் வந்து சேருவதற்கு முன்பே டான்யூப் பகுதியை நோக்கி முன்னேறினர். மிகத் தொலைவிலுள்ள போலோனில் (Boulogne) இருந்த நெப்போலியன் டான்யூப் பகுதியை அடைய குறைந்தது எண்பது நாட்களாகுமெனக் கணக்கிட்டனர் ஆனால் பெரும்படையாக மாறிய "இங்கிலாந்துப் படை", மாக்கினுடைய படைகளை (Mack) அறுபது நாட்களுக்குள்ளேயே தாக்கி அக்டோபர் 20ஆம் தேதி அல்ம் (Ulm) என்னுமிடத்தில் அவைகளைப் பணிய வைத்தது. அதற்கு அடுத்த நாளில்தான் போர் முடியும் வரையில் பிரிட்டனைப் படையெடுப்பினின்றும் காத்த படிமுறையை பூர்த்தி செய்த டிரபால்கர் வெற்றியை நெல்சன் பெற்றார்.

இங்கிலாந்தையழிக்க ஓர் இருண்ட இரவு போதுமென்ற கருத்தை நீண்ட நாட்களுக்கு முன்பே நெப்போலியன் கைவிட்டார். இப்போது மூன்று நாட்களுக்கு ஆங்கிலக் கால்வாயின் மீது ஆதிக்கத்தை ஏற்படுத்தினால் உலகையே அடிப்படுத்த முடியுமென்று தமது மாலுமிகளிடம் அவர் குறிப்பிட்டார். டூலோன், பிரஸ்ட், ரோர்ச்போர்ட் கடற்படைப் பிரிவுகள் ஒரே சமயத்தில் முற்றுகையை முறிக்கவேண்டும். பிறகு மார்டினிக்கில் (Martinique) ஒன்றுகூடி, மேற்கிந்தியத் தீவுகளை அழிக்க வேண்டும். திரும்பி வரும்போது பெர்ரோலிலிருந்தும் (Ferrol), காடஸிலிருந்தும் (Cadiz) ஸ்பானியரைச் சேர்த்துக்கொண்டு, இப்படி இணைந்த படையின் மூலமாக ஆங்கிலக் கால்வாயைத் தடையற்றதாக்க வேண்டும் என்ற ஆணைகளையே நெப்போலியன் பிறப்பித்தார். ஆனால், சிதறிக்கிடந்த துறைமுகங்களில் இருந்த கப்பல்களை ஒன்று சேர்ப்பது முடியாத செயலாயிற்று. நிலப் படைகளை நிணைத்தவாறு, நிணைத்த இடத்திற்குக் கொண்டு சென்றதைப்போல, அளவிடமுடியாத ஆழ்கடல்களில் கால அட்டவணைப்படிக் கப்பல்களைக் கொண்டுசெல்ல முடியவில்லை. அதிலும் ஒப்பற்ற வீரரான ஹொரேஷியோ நெல்சனால் (Horatio Nelson) ஊக்குவிக்கப்பெற்ற ஆங்கிலக் கடற்படை அப்போதிருந்த நிலையில், நெப்போலியனது திட்டம் நிறைவேறுவதாக இல்லை.

நெல்சன் தமது பன்னிரண்டாம் வயதில் நார்போக் சமயக் கல்விச் சாலையை விட்டு நீங்கி நாவாய்ப் படையில் சேர்ந்தார். அமெரிக்கப் போர் முழுவதிலும் போரிட்டார். அப்போரின் இறுதியில்தான் கெப்பல் (Keppel), ஜெர்விஸ், ஹூட் (Hood), ஹோ ஆகிய தலைசிறந்த மாலுமிகள் ஆங்கிலக் கப்பற்படையைத் திருத்தியமைத்தனர், கடற்படைப் பிரங்கிகளைச் செம்மையாக்கினர்; சைகைச் செய்திகளை நிறைவுபடுத்தினர். இவற்றையெல்லாம்விட அதன் உணர்ச்சியை மீண்டும் தூண்டினர். ஆர்க்டிக் பகுதியில் (Arctic) பணியாளராக இருந்தபோதும், இருபத்தோரும் வயதில் மேற்கிந்தியத் தீவுகளில் பணியாள் தலைவராக இருந்தபோதும், நல்வாய்ப்பும், பொறுப்பை ஏற்கத் துடித்த நிலையும் நெல்சனுக்குப் பல்வகையான துறைகளிலும் அனுபவத்தைத் தேடித் தந்தன. படகுப் பயிற்சி, கடற்படைக் காவல், எல்லா ஆயுதங்களைக்கொண்டு படையெடுத்தல், முற்றுகையிடுதல் ஆகிய பல துறைகளையும் திறமையாக ஆளும் அனுபவத்தைப் பெற்றார். அவரது தனிப் போற்றுதலுக்கு உரியவரான ஹூட், மத்தியதரைக் கடல் பகுதியில் தலைமை தாங்கிய காலத்தில் நெல்சனின் புகழ் ஓங்கியது. 1797ஆம் ஆண்டில் செயின்ட் வின்சென்டில் அவரது யுத்த தந்திர உள்ளுணர்வு நன்கு வெளிப்பட்டது. அடுத்த ஆண்டில் தமது முப்பத்தொன்பதாம் வயதில் நைல் ஆற்றுப்போரில் வெற்றி பெற்று, கடற்படைத் தளகர்த்தரான தமது கொடியை உயர்த்தினர். 1794-ல் நடந்த கார்சிகா போரிலிருந்து அவரது வலக்கண் பார்வையிழந்திருந்தது. 1797ஆம் ஆண்டில் டெனெரைபின் (Tenerife) மீது மேற்கொண்ட இரவுத் தாக்குதலில் தமது வலக்கரத்தையும் இழந்தார். அவரது உடல்நலம் மிகுதியாகக் குலைந்தது. மகிழ்ச்சியற்ற அவரது இல்லற வாழ்க்கையும், ஹாமில்டன் சீமாட்டியுடன் அவர் கொண்ட உறவும் அவரது மன அமைதியைப் பறித்ததோடு, பெயரைக் களங்கப்படுத்தியது. எனினும் தமது நாட்டின் மீதும், நாட்டு மக்கள் மீதும் கொண்ட மாறுத பற்றுதல், பொறுமை, மனவுறுதி, மங்காத திறம் ஆகியவற்றினால் அவர் ஒரு சாதாரண கப்பல் தலைவராக மட்டுமல்லாது ஒரு ஆன்மசக்தியின் வடிவாகவும் திகழ்ந்தார். பிரங்கியின் வாயில் மகிழ்ச்சி பொங்க இருப்பதோடு காலிங் வுட் (Collingwood) முதலாகவுள்ள தலைவர்கள் சகோதரக் கூட்டமாக விளங்கினர். படையில் சேர்ந்த ஒவ்வொருவரும் அவரை விரும்பினர். மார்ல்பரோ அடையாததும், வெல்லிங்டன் அடையமுடியாததுமான, மக்களின் தனிப் பற்றிற்குரிய நிலையை அவர் அடைந்தார். போர்த்திறமுறை முழுவதும் உணர்ந்த அவர் பயணக்கப்பல் போர் முறையினால் மாறிய நிலைக்கேற்ற முனைப்பார்வத்தைத் தூண்டினர்

டிராபால்கர் வெற்றி கிடைப்பதற்குக் காரணமாக இருந்த நீளத் தாக்குதல் அல்லது சில கப்பல்கள் கூட்டமாகச் சேர்ந்து செயலாற்றுதல் அவரால் நெடு நாட்களாகவே வற்புறுத்தப்பெற்ற ஒன்று. ''அதிக எண்ணிக்கை கொண்டுதான்'' பகைவரை அழிக்கமுடியுமென அவர் கருதினர். பகைவரைப் போருக்கிழுக்கவும், கூடுமானல் பகைவர் படைப் பிரிவைத் தமது படைகளையெல்லாம் ஒன்று திரட்டி அழிக்கவும் எண்ணினர். எப்படியும் தமது கப்பற்படையின் ஆற்றல் கெடுவதாக இருந்தாலும் முடிவு காணும் போருக்கான வாய்ப்புக் கிடைக்குமானல் அதனை அவர் இழப்பதில்லை.

நெப்போலியனின் படை போலோனைச் சுற்றி நின்ற அதே சமயத்தில், தமது 'பெருந்திட்டம்' என்று கூறிக்கொண்ட அவரது கால அட்டவணை உருத்திரிந்தது. 1805ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரோச்போர்ட் கடற்படைப் பிரிவு வெளிப்பட்டுக் குறிப்பிட்ட இடத்தை அடைந்தது. ஆனல் மற்றப் பிரிவுகள் வந்து சேராததால் அது பிரான்ஸிற்கே திரும்பியது. இங்ஙனம் மார்ச் மாதக் கடைசியில் வெளிவந்து மேமாதத்தில் மார்டினிக்கை வந்தடைந்த, வில்லனியூவின் (Villeneuve) தலைமையில் இருந்த டூலோன்படையைச் சந்திக்கத் தவறியது. டிரபால்கர் வீழும் வரை பிரஸ்டிலிருந்த கடற்படை முடங்கிக் கிடந்தது.

வில்லனியூ கிழக்குமுகமாக எகிப்திற்குச் செல்லவில்லை என்பதையும் அயர்லாந்து பாதுகாப்பாக இருந்ததையும் முதலில் உறுதி செய்துகொண்ட பிறகு, ஆழ்ந்த சிந்தனையின் துணையால் தமது வேட்டைப் பொருள் மேற்கிந்தியத் தீவில்தான் இருக்குமெனக் கண்ட நெல்சன் அத்திசையில் துரத்திச் சென்ருர்; ஜூன் மாதத்தில் பார்படாசை அடைந்தார். இதைக் கேட்டறிந்த வில்லனியூ, பிரஸ்ட் கடற்படையுடன் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும், இடர்நேருமானல் காடீஸுக்குப் பின்வாங்கவேண்டுமென்றும் வந்த கடைசி ஆணைக்கேற்ப ஃபிரான்ஸை நோக்கிப் புறப்பட்டார். வேகமாக பின்தொடர்ந்து வந்த நெல்சன், தவருன உளவுச் செய்தியினல் தமது எதிரியைச் சந்திக்கவில்லை. எனினும், தமது கடற்படைத் தலைமைக்கு எச்சரிக்கை விடுவதற்காக வேகமாகச் செல்லும் போர்க் கப்பலை முன்னல் அனுப்பினர். ஜூலை மாத இறுதியில் ஜிப்ரால்டரை வந்தடைந்த அவர், கால்டரின் தடை முயற்சியை முறியடித்த வில்லனியூ, விகோ (Vigo)விற்குள் புகுந்தார் என்பதை அறியாத நிலையில் காடீஸ் துறைமுகத்தை வெற்றிடமாக்கினர். ஆகஸ்ட் மாதத்தின் முதற்பகுதி முடிவானதாக இருந்தது. உஷாண்டிற் (Ushant) கருகே இருந்த கார்ன்வாலீஸுடன், நெல்சனின் கடற்படை சேர்ந்துகொண்டது.

நெல்சன் விடுமுறைக்கு வீடு திரும்பினர். கார்ன்வாலிஸோ அவசரப்பட்டுத் தமது கப்பற்படையை இரண்டாகப் பிரித்தார். ஆனல் தமது கடற்படையின் எண்ணிக்கை மேம்பாட்டையும், வெற்றி கொள்ளும் வாய்ப்பையும் வில்லனியூ பயன்படுத்திக் கொள்ளாதுவிட்டார். ரோச்போர்ட் கப்பல்களோடு தொடர்பு கொள்ளுதற்குப் பயனற்ற முயற்சியிலீடுபட்ட பிறகு, அவர் பிரஸ்டைச் சென்றடையும் திட்டத்தைக் கைவிட்டு காடீஸிலேயே பாதுகாப்புடன் தங்கினர். ரஷ்யப் படை திரட்டல் செய்தியோடு இச்செய்திகளையும் கேட்ட நெப்போலியன் ஆகஸ்ட் மாத இறுதியில் கடலிலிருந்து தம் கவனத்தைத் திருப்பி, ஆஸ்திரியாவை அழிக்கவும், மத்திய கிழக்கு பகுதிகளைப் பிடிக்கவும் ஆயத்தமானர்.

காலிங்வுட் கண்காணித்து நிற்க, பிரஞ்சுக் கப்பல்களும், ஸ்பானியக் கப்பல்களும் காடீஸில் தங்கி இருந்தன. செப்டம்பர் மாதத்தில் திரும்பி வந்த நெல்சன் காலிங்வுட்டிடமிருந்து தலைமையை ஏற்றுக்கொண்டார். ஏனெனில் பிரஸ்டிலும், காடீஸிலும் பகைவர் அழியாது இருக்கும்வரை இங்கிலாந்து நிம்மதியாக இருக்கமுடியாது, அவருக்கும் மனநிறைவு ஏற்படாது. அவர் தமது வீட்டில் தங்கிய இறுதி இரவில் ''தமது நாடு எதிர் பார்ப்பதைச் செய்து முடிக்கும் திறனைத் தாம் போற்றும் ஆண்டவன்தான் அருளவேண்டுமென்று'' தமது குறிப்பேட்டில் குறித்தார். நெப்போலியனுடைய புதிய திட்டத்திற்கு உதவவேண்டுமென்னும் ஆர்வம் கொண்ட வில்லனியூ, இடைக்கழி வழியாக கிழக்குத் திசையில் செல்ல காடீஸிலிருந்து வெளிவந்தார். இங்ஙனம் அக்டோபர் மாதம் 21ஆம் தேதி டிரபால்கர் சண்டை தொடங்கியது. அநேகமாக காற்றற்ற கடலில் நண் பகலிலிருந்து ஐந்து மணிவரை இச்சண்டை நீடித்தது. முழுமையாக அழிப்பதே நெல்சனின் நோக்கமாக இருந்தது. அவரது கடற்படை இரு நீளணிகளாகப் பிரிக்கப்பெற்றன. விக்டரி (Victory) என்னும் கப்பலில் இருந்த அவரே ஒரு அணியை நடத்திச் சென்ருர். ராயல் சாவரின் (Royal Sovereign) நாவாயில் நின்ற காலிங்வுட் மற்ருெரு அணிக்குத் தலைவராக இருந்தார். இப்படி இரு அணிகளாகப் பிரிந்திருந்த நெல்சனின் இருபத்தேழு கப்பல்களும் பகைப்படையின் நடு அணியை பிளந்து சென்றன. ஆகையினல் பகைவரின் பின்னணிப் படை பயனுறும் வகையில் போரிட முடியவில்லை. வில்லனியூ நம்பிக்கையிழந்த நிலையில் காடீஸில் திரும்பப் புக முயன்ருர். ஆனல் அவரது மன நிலை குழம்பிக் கிடந்தது; ஸ்பானியப் படைப் பிரிவு முனைப்பற்று நின்றது. ஆங்கில பீரங்கிகள் குறிதவருது கடுமையாகத் தாக்கின. அதே சமயத்தில்

தனிப்பட்ட அதிகாரிகளின் தீர்மானமான முடிவுகள், நெல்சன் அவர்களிடம் கொண்ட நம்பிக்கை நேர்மையானது என்பதை நிரூபித்தன. வில்லனியூ அன்று மட்டும் தமது முப்பத்துமூன்று கப்பல்களில் பதினெட்டைப் (பிடிக்கப்பட்டும் மூழ்கப்பெற்றும்) பறி கொடுத்தார். அடுத்த இரு வாரங்களில் மேலும் நான்கு கப்பல்கள் பிடிபட்டன. நெப்போலியனின் நாவாய்ப்படை பின்னலில் வாணிகத்தைத் தாக்கியபோதிலும் அதனுடைய தாக்கும் சக்தி இப்போரோடு முடிவுற்றது. அப்போது அறியப் படாத பயன்களைக் கொண்ட வெற்றிக்காக பிரிட்டானியர் தந்த விலை மிக அதிகமாகத் தெரிந்தது. விக்டரி என்னும் கப்பல் மரத்தில் காணப்பெறும் செய்தி அதனைச் சுருக்கிக் கூறுகின்றது. "4-30 மணிவரையில் சில பீரங்கிகள் முழங்குவது தொடர்ந்து இருந்தது. அதுபோது கனம் வைகவுன்ட் பிரபு நெல்சன் K B. யிடம் (Right Honourable Lord Vicount Nelson K. B) வெற்றிச் செய்தி அறிவிக்கப்பெற்றபோது காயங்களின் விளைவாக அவர் இறந்தார்". விக்டரி என்னும் கப்பலின் மறைவிடப் பள்ளத்தை விட வேறெந்த இடத்தையும் ஆங்கிலேயர் அதிகமாக அறிந் திருக்கவில்லை. அதேபோன்று இங்கிலாந்து எதிர்பார்த்ததை செய்து முடிப்பதற்கான செயலுக்குரிய சைகைச் செய்தி அளித்த போது அவரது இறுதித் தெளிவான வார்த்தைகளாகிய "எனது கடமையைச் செய்துவிட்டேன். கடவுளுக்கு நன்றி" என்பவை இங்கிலாந்து அறிந்தவையாகும்.

டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்னுமிடத்தில் ஆஸ்திரிய—ரஷ்யப் படைகளை நெப்போலியன் போருக்கிழுத்து முறியடித்தார். ஜெர்மனியி லிருந்து சார் மன்னர் (Czar) பின்வாங்கினர். ஆஸ்திரியா, டைரோல் (Tyrol); டால்மேஷியா (Dalmatia), வெனீஸ் ஆகிய வற்றைக் கொடுத்துச் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதா யிற்று. ஃபிரெஞ்சுக்காரர்கள் மூலமாக ஹனோவரைப் பெற ஈன பிரிஷ்யர் ஒப்புக்கொண்டனர். ஹாலந்துமீது படையெடுக்கும் யோசனை எதையும் ஏற்க மறுத்தனர். மேலும் நமது பால்டிக் படைகளைப் பின்வாங்குமாறு செய்தனர். இத்தகைய கேடுகளின் விளைவாக 1806ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிட் மரணமடைந்தார். நெல்சன் தமது நாற்பத்தேழாம் வயதில் இறந்ததைப்போல, பிட்டும் போரினால் ஏற்பட்ட சோர்வினால் தமது நாற்பத்தாரும் வயதில் நமனுலகெய்தினர். போரின் இருளான எதிர்வினை களினால் மங்கி இருந்த, புதிய பிரிட்டனை நிர்மாணிக்கும் வேலையில் பிட் பெற்ற பெருவெற்றி, அவருடைய சீடர்களால் ஈடுசெய்யப் பெற்றது. மேலும் தமது இறுதி உரையில் கழுவாய்க்கான

கருத்து ஒன்றினைப் பிட்விட்டுச் சென்றார். இங்கிலாந்து தனது சொந்த முயற்சிகளால் தன்னைக் காத்துக்கொண்டது தன் உதாரணத்தினால் அது ஐரோப்பாவைக் காக்கும்' என்று அவர் நம்புவதாகக் கூறிச் சென்றார்.

பிட்டிற்குப் பதிலாக வந்த "எல்லாத் திறமுமுடைய" மந்திரி சபை, அவருடைய கூட்டினைப்புகளைக் கண்டித்தது. அமைதியை நிலைநாட்டும் முயற்சியிலீடுபட்டது. ஆனால் முதலில் தாம் புரட்சியை ஆதரித்துப் பேசியது எத்தனைதான் நேர்மையான தாக இருந்தபோதிலும், அத்தகைய ஆதரவை நெப்போலியனின் வல்லரசிற்கு அளிக்கக்கூடாது என்பதை ஃபாக்ஸ் உணர்ந்தார். ஹனோவரை மீட்டுத் தருவதாக ஃபிரெஞ்சுக்காரர் ஆசை காட்டிய போதிலும் ரஷ்யாவிலிருந்து நம்மைப் பிரிப்பதும், நமது போர் போன் நட்புநாடு சிசிலியை இழக்கச் செய்வதுமான எந்தச் சமாதானமும் தன்மானத்திற்குரியதாகவோ பாதுகாப்புடைய தாகவோ இருக்காது எனக் கண்டார். நெப்போலியனுடைய செய்கைகள் அவருடைய மிதமான வார்த்தைகளை மீறுவதாக இருந்தன. அவர் தமது உடன் பிறந்தாருள் ஒருவரான ஜோசப் (Joseph) என்பவரை நேபிள்ஸின் மன்னராக்கினர். மற்றொருவ ரான லூயியை ஹாலந்தின் அரசராக்கினர். மூன்றாமவரான ஜெரோமை (Jarome) வெஸ்ட்பேலியாவின் (Westphalia) வேந்த ராக்கினர். ஜெர்மனியை அழிப்பதற்காக ரைன் கூட்டினைப்பு அரசை (Rhine Confederation) அமைத்தார். மத்தியதரைக் கடலில் ஆதிக்கத்தைக் கைப்பற்றி "பல நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர் இழைத்த இடையூறுகளுக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளும்" வகையில் அமைவதான லத்தீன் கூட்டணியை (Latin Bloc) உருவாக்க எண்ணினர். செப்டம்பர் மாதத்தில் ஃபாக்ஸ் இறந்த உடனே அக்டோபர் மாதத்தில் ஜீனா (Jena) என்னுமிடத்தில் சிதறடித்த, நம்பிக்கைக் கேடு செய்யும் பிரஷ்யரை, தண்டிப்பதற் காக நெப்போலியன் மறுமுறை அணிவகுத்துச் சென்றார். பிரிட்டனை முற்றுகையிடவேண்டுமென்னும் ஆணைகளை பெர்லின் நகரிலிருந்து அறிவித்தார். 1807ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஈலாவ் (Eylau) என்னும் கொடிய போர்க்களத்தில் ரஷ்யரை மடக்கினர் அதன் பிறகு ஜூன் மாதத்தில் பிரைட்லண்டு (Friedland) என்னுமிடத்தில் அவர்களை அழித்தார். நீண்டநாள் கனவை நனவாக்கவும், போதுமான பிரிட்டிஷ் துணை கிடைக்காத தால் மனம் நொந்த நிலையிலும், சார் மன்னர் டில்சிட்டில் (Tilsit) சில முக்கிய வெளிப்படையையும் இரகசியமுமான உடன்படிக்கை களில் கைச்சாத்திட்டார். அவைகளின்படி வார்ஸா பெருங் கோமகநாடு ஏற்படுதற்குத் தனது போலந்தியப் பகுதிகளை

இழந்த பிரஷ்யா ஒரு சிறு நாடாகவேண்டும். அந்தப் புதிய நாடான வார்ஸா பெருங்கோமகநாட்டை நெப்போலியன் கிழக்கு முடியரசுகட்சிடையே புகுத்த எண்ணினர். மேற்கில் அவருடைய சகோதரரான ஜெரோமிற்காக வெஸ்ட்பேலியா அரசு உருவானது. சிசிலியை ஜோசப் அடையவேண்டுமென்றும் அயோனியன் தீவுகளைப் பிரான்ஸ் பெறவேண்டுமென்றும் இரகசிய ஒப்பந்தங்கள் விதித்தன. இரு பேரரசர்களும் இங்கிலாந்தை அழைத்து அது வெற்றிகொண்ட பகுதிகளைத் திரும்பத் தந்துவிடுமாறும், நாவாவாய்ச் சட்டத்தைத் திருத்துமாறும் கூறவேண்டும். இங்கிலாந்து அதற்கு இணங்க மறுத்தால் எல்லா நடுநிலை நாடுகளும் தங்கள் தங்களுடைய துறைமுகங்களையும் அந்நாட்டிற்கு எதிராக மூடுமாறு வற்புறுத்த வேண்டும். துருக்கியப் பேரரசில் பங்கு, பின்லாந்து (Finland), உலகைக் கூட்டாக ஆளுதல் போன்றவை சாருக்குக் கிடைக்கும் நலன்களாகும் என்ற ஆசை இருந்தது. இந்நாள் தொடங்கி 1810ஆம் ஆண்டு முடிவுறும் வரை நெப்போலியனின் பேரரசு உன்னத நிலையிலிருந்தது. பிரிட்டன் போரிட்டு வந்தது என்றாலும், அரசியலிலும் படைத் துறையிலும் திறமையின்மை தாண்டவமாடியது.

பிட்டின் மறைவினால் அவரது கட்சியின் கட்டழிவு பூர்த்தியடைந்ததால், அவரது கூட்டாளிகள், கிரன்விலை அழைக்குமாறு அரசருக்கு ஆலோசனை கூறினர். சிட்மவத்தையும் (Sidmouth) வேல்ஸ் இளவரசரின் ஆதரவைப் பெற்றவரான மோய்ரா (Moira) என்பவரையும் சேர்த்துக்கொண்டதால், புதிய அரசாங்கத்திற்கு இடப்பெற்ற புனை பெயரான எல்லாத் திறனும் உடையது" என்பது பொருத்தமற்றதாயிற்று. மேலும் கிரன்வில் நீங்கலாக அதிலிருந்த முக்கிய அமைச்சர்கள் எல்லோரும் "பாக்ஸை ஆதரித்த விக்குகளே. முதற்போரின்போது பிட்டுடன் பணி புரிந்தவர்களும், கத்தோலிக்க விடுதலைப் பிரச்சினையில் விட்டுக்கொடுத்தபோது அவரை விட்டுப் பிரிந்தவர்களுமான ஸ்பென்ஸர், விண்டாம், பிட்ஸ்வில்லியம் போன்ற விக்குகள், பாக்ஸ், கிரே, கருவூலத் தலைவரான எர்ஸ்கின் (Erskine), ஹென்றி பெட்டி (Henry Petty) (பிற்காலத்தில் மூன்றும் லான்ஸ்டவுன் பிரபு ஆனவரும், ஷெல்பர்னின் மகனும் ஆவர்), ஹாலந்து ஆகியோரை உடன் சேர்ந்திருந்தனர்.

இங்ஙனம் ஒரு கட்சி என்று கூறத்தக்க ஓர் அமைப்புத் தோன்றியது. ஆனால் அவர்களிடையே இருந்த ஒரு பெருந் தலைவரான பாக்ஸும் மறைந்தார். இங்கிலையில் இரு கட்சிகளும் நீண்ட நாட்கள் பிளவுபட்டு இருந்தன. மன்னரின் விருப்பு

வெறுப்புகளையும் நல்லறிவு நிலையையும் புறக்கணிக்கமுடியாதபடி அப்போதும் அரசரின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. இளவரசர் தமது இழிந்த வாழ்க்கையிலும், பெயர்பெற்ற தலைவர்களை விட்டு, திறனற்ற ஷெரிடனிடம் (Sheriden) நம்பிக்கை வைத்தும் விக்குகளுக்குத் தீராத தீங்கிழைத்தார். தீவிர வாதிகள் பெருகினர். "மலை" என்று (The Mountain) அழைக்கப் பெற்ற முற்போக்காளர்களான விக்குகள் கிரன்வில் வெறுத்தனர். மறுபுறத்தில் அடிங்டனுடன் பணி புரிந்த லிவர்பூல், வழக்கறிஞரான எல்டன், பெர்சிவல் போன்றோர் அடங்கிய டோரிகளின் பிரிவு ஒன்று உறுதியாக நின்றது. இவர்களுக்கிடையில் கட்சியைத் திரும்பவும் ஒன்றுக இணைக்க எண்ணிய காசில்ரே போன்றோரும் இருந்தனர். இவர்களுக் கெதிராக கானிங், அவரது நண்பரான ஹஸ்கிஸ்ஸன், அப்போது தான் இந்தியாவிலிருந்து திரும்பிவந்த வெல்லெஸ்லிபோன்ற சில பிட்டின் தீவிர ஆதரவாளர்கள் விளங்கினர். கத்தோலிக்க விடுதலை, பொருளாதாரப் பிரச்சினைகள் ஆகியவற்றில் அவர்கள் முன்னேற்றக் கருத்துகளைக் கொண்டு இருந்ததோடு, கிரன்விலுடன் மறுபடியும் இணைந்து பிட்டின் முன்னேற்றக் கட்சியை மீட்க எண்ணினர். ஆனால், இரு கட்சிகளும் தங்களுக் கிடையே இருந்த வேற்றுமைகளைக் களையும் வரையிலும், விக்கு களும் தீவிரவாதிகளும் ஒன்று படுதல் அல்லது தனித்தனியாகப் பிரிந்திருத்தல் ஆகிய இரண்டில் ஒன்றைச் செய்யும் வரையிலும், அல்லது சிட்மவுத், கானிங், போன்றவர்கள் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்படும் வரையிலும், டோரிகட்சியிலிருந்த கிரன்வில் பிரிவினர் விக்குக் கட்சியோடு தாங்கள் கொண்ட தொடர்பினை அறுத்துக்கொள்ளும் வரையிலும், இத்தகைய குழப்ப நிலை நீடித் திருந்தது.

போரிலும், வெல்திறத்திலும் "திறமையாளர்கள்" தோல் வியே கண்டனர். பிட் இறப்பதற்குச் சற்று முன்னர்தான், நன்னம்பிக்கை முனையை ஜெனரல் பெய்ர்டு (Baird) டச்சுக்கார ரிடமிருந்து திரும்பக் கைப்பற்றினர். ஆனால், நமது முயற்சிகளைச் சிதறடிப்பதில், போர்த்துறை அலுவலகத்தில் இருந்த வின்டாம், டன்டாஸைப் போலவே மோசமாக இருந்தார். மடத்தனமான ஒரு படையெடுப்பினால் போனஸ் அயர்ஸும் (Buenos Ayres) மான்டிவிடியோவும் (Montiudeo) கைப்பற்றப்பட்டன. ஆனால் அவைகள் மிக விரைவிலேயே நம் கையிலிருந்து நழுவின. இப்படையெடுப்பினால் ஸ்பானியக் குடியேறிகள் செய்யும் கலகத்திற்கு உதவியதும் கிடைக்கவில்லையென்பதோடு, ஸ்பானியருடைய பகைமையும் வளர்ந்தது. துருக்கியப்

போரிலிருந்து ரஷ்யாவை மீட்டல், ரஷ்யாவின் ஆட்சியெல்லை பரவுதல் என்னும் அச்சத்திலிருந்து ஆஸ்திரியாவை மீட்டல் ஆகிய இரு நோக்கங்களோடு 1807ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அட்மிரல் டக்வொர்த்டார்டனல்ஸைக் (Dordanelles) கடந்தார். தலத்தில் பொதுவான நிர்வாகக் குறைவின் காரணமாகத் தோல்வியுற்றார். அ த ஞ ல் கான்ஸ்டான்டி னோபிளில் ஃபிரெஞ்சுக்காரர் ஆதிக்கம் பெற்றனர். அதே ச ம ய த் தி ல் அலெக்ஸாந்திரியாவைக் கைப்பற்றுதற்காக மேற்கொண்ட மற்றொரு படையெடுப்பும் தோல்வியில் முடிந்தது. மிண்டன் வெற்றிக்குப் பிறகு ஃபிரெஞ்சுக்காரர்மீது நிலத்தில் பெற்ற முதல் வெற்றியை பிரிட்டிஷார் 1806ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மெய்டா (Maida) என்னுமிடத்தில் பெற்றனர். அந்த வெற்றியினால் சிசிலியைக் காக்க முடிந்தது என்றாலும் நேபிள்ஸ் பகைவர் கைக்குச் சென்றது. ஈலாவ் போரிலிருந்து ப்ரீட்லண்டு வரையில் (Friedland) ரஷ்யர்கள் போரிட்டுவந்தபோது, அவர் களுக்குக் கடனுதவியளிக்க கிரன்வில் அரசாங்கம் மறுத்தது. ஏட்ரியாடிக் (Adriatic) பகுதியில் ஒன்றும் செய்யாதிருந்தது; பால்டிக் பகுதிக்குத் தகுந்த சமயத்தில் உதவி அனுப்பத் தவறியது.

அமைச்சரவை 'பிளவுபட்டு இருந்ததாலும், குறைபாடுகள் வெளிப்படையாகவே விவாதிக்கபெற்றமையாலும் அது உள் நாட்டில் வலிவிழந்து இருந்தது. வேல்ஸ் இளவரசருக்கும், இளவரசிக்கும் இடையே ஏற்பட்ட இழிவான பூசல் காரணமாக "நுண்ணிய விசாரணை" தேவைப்பட்டது. அதில் இளவரசியார் நாகரிகமில்லாமல் மடத்தனமாக நடந்து கொண்டதற்காக மட்டும் தண்டனை வழங்கப்பெற்றது. அது இளவரசரின் பகையை வளர்த்ததோடு, மக்களின் மனத்தையும் புண்படுத்தியது. இதற்கிடையில் மெல்வில் மீதான அரசத்துரோகக் குற்ற விசாரணையைப் பிரபுக்கள் சபை தள்ளிவிட்டது. கானிங்கைத் தம் பக்கம் இழுக்க கிரன்வில் முயன்றுவந்த நேரத்தில் அவருடன் இணைப்பை ஏற்படுத்த உதவக்கூடிய ஃபாக்ஸ் இறந்ததால் அம் முயற்சி பலிக்கவில்லை. மேலும் 1806ஆம் ஆண்டுத் தேர்தல் அடிப்படையைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தவிர வேறெந்த மாறுதலையும் கொண்டுவரவில்லை.

கத்தோலிக்க விடுதலை, அதனுடைய முழுப்பொருளில் அரசர் மீது திணிக்கப்படுதல் கூடாது என்னும் உடன்பாட்டின்மீதுதான் இந்த அரசாங்கம் அமைக்கப்பெற்றது. வேறுவகையாக இருந் திருந்தால் சிட்மவுத் அதில் நிச்சயமாகச் சேர்ந்திருக்கமாட்டார்.

ஆனால் இவ்விய விக்குகள் அடங்காதிருந்தனர். ஒன்றும் செய்யப் படவில்லையானால் தாம் படைமுறைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டி வருமென்று துணைப் பிரபு எச்சரிக்கை விடுத்தார். கத்தோலிக்கரின் விண்ணப்பம் காபினெட்டைப் பிளவு படுத்துவ தாக இருந்தது. எனவே 1807ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கத்தோலிக்கர் அயர்லாந்தில் ஏற்கெனவே அனுமதிக்கப்பெற்ற அளவிற்கு பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் பொறுப்புரிமை அளிக்கப்பெற்ற பதவி வகிக்கலாம் என கிரே முன்மொழிந்தார். "இதற்குமேல் ஓர் அடியும் எடுத்து வைக்கக்கூடாது" என நிபந்தனையிட்ட மன்னர் இந்த மிதமான சீர்திருத்தத்திற்கு இணங் கினர். ஆனால் அயர்லாந்து மக்களுடைய நெருக்குதலால் நிலப் படையிலும், நாவாய்ப்படையிலும் தலைமைப் பதவிகளையும் கத்தோலிக்கர் வகிக்கலாம் என்பதற்காக ஒரு மசோதாவை, கிரே கொண்டுவந்தபோது அரசர் அதனை எதிர்த்தார். அம் மசோதாவை கிரன்வில் வாபசு பெற்றுக்கொண்டபோதிலும், தங்களுடைய எதிர்காலச் செயலின் சுதந்தரத்தை தனியே ஒதுக்கி வைத்தனர். அதன்பேரில் பேரம் முறிந்தது என எண்ணி சிட்மவுத் தமது பக்கமிருப்பார் எனவுணர்ந்திருந்த அரசர், மேலும் தம்மிடமிருந்த எதையும் கோருவது இல்லையென்ற உறுதிமொழி தருமாறு கேட்டார். அதனால் அமைச்சரவை ராஜினமா செய்தது.

இங்ஙனம் அவர்கள் பதவியிலிருந்து விலகுதற்குமுன் ஒரு முக்கிய சட்டத்தை இயற்றினர். அதுதான் வாழ்நாள் முழுவதும் படையில் சேர்த்தலை நீக்குதற்காக உண்டான விண்டாமின் சட்டம். அது படைச் சீர்திருத்தத்திற்கு முக்கிய முதற்படியான தோடு, அடிமை வாணிக ஒழிப்பிற்கான இறுதி மரபொழுங்குகள் நீங்கலாக உள்ள ஒரு பெரும்படியாக அமைந்தது. பிட், வில்பர் போர்ஸ், பாக்ஸ் போன்றோருடைய நாவான்மைக்கு எதிராக 1792ஆம் ஆண்டில் அடிமை வாணிபத்தை படிப்படியாக ஒழிக்க வேண்டுமென்பதற்குக் காமன்ஸ் சபையினரை டன்டாஸ் இணங்கச் செய்தார். 1796ஆம் ஆண்டு அதற்கொன்று குறிப்பிடப்பெற்றது. எனினும் அப்போரிலிருந்தே பிரபுக்கள் சபையின் எதிர்ப்பு, புரட்சியின் இடர்களோடு அப்பிரச்சினை கலந்திருந்த தன்மை, நாட்டு மக்களிடையே காணப்பெற்ற அக்கறையின்மை, ஆகிய வற்றினால் பின்னடைய நேர்ந்தது. அதனை ஒரு காபினெட் சட்ட மாகக் கொண்டுவருவதைப் போர்ட்லண்டைச் சார்ந்த விக்குகள் எதிர்த்தனர். அடிங்டனும் அதற்கு எதிராகவே நின்றார். பெரும்பாலும் ஆண்டுதோறும் வில்பர்போர்ஸ் மேற்கொண்ட முயற்சிக்கு பிட் தொடர்ந்து ஆதரவு தந்தபோதிலும், தாம்

அதிகாரத்திற்கு வந்தபோது சோர்வடைந்தார். மேலும் பல இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாகி அல்லற்பட்டார். எனவே ஒழிப்புப் பிரச்சினையை ஒதுக்கிவைத்தார். ஒழிப்புக் குழுவும் தனது கூட்டங்களைத் தள்ளிவைத்தது.

ஆனால் 1800ஆம் ஆண்டிலிருந்து நல்ல சூழ்நிலைகள் காணப் பெற்றன. சீராலியோனில் (Sierra Leone) போராடிக்கொண் டிருந்த கம்பெனிக்கு அரசாங்கம் ஒவ்வோராண்டும் உரிமைப் பத்திரம் வழங்கியது. அதனோடு விடுதலைபெற்ற அடிமைகளுக் கான குடியேற்றம் ஒன்றையும் அளித்தது. கிளாப்ஹாம் சம்யப் பிரிவைச் சேர்ந்த ஸகாரி மெகாலே (Zachary Maculay) என்பவர் அக்கம்பெனியின் தலப்பேராளாக இருந்தார். ஆண்டு ஏற ஏற அவருடைய செல்வாக்கு திருக்கோயில்களின்மீதும், அரசியலிலும் பெருகிக்கொண்டே வந்தது. டோரி கட்சியின் எதிர்கால நம்பிக்கையாக முன்னேறிக்கொண்டிருந்த பெர்சிவல் (Perceval) கிறித்தவ சமயத்தில் ஆழ்ந்த உண்மையான பற்றுதல் கொண் டிருந்தார் கிரன்வில் எப்போதும் அடிமை வாணிப ஒழிப்புக் கொள்கை உடையவராக இருந்தார். அவரைப்போலவே காணிங்கும் அடிமை வாணிகத்திற்கு எதிராக இருந்தார். அவ் வாணிபத்தைச் சேர்ந்தவர்களே பிளவுபட்டு நின்றனர். சில வணிகர்கள் உண்மையிலேயே மனமாற்றம் அடைந்தனர். அதே சமயத்தில் மேற்கிந்திய நலன்களோடு சேர்ந்த வேறு சில வணிகர்கள் தங்களுடைய பகைவர்களான, கைப்பற்றப்பெற்ற பிரஞ்சு, டச்சுக் குடியேற்றங்கள் திரும்பவும் அடிமைகளைச் சேமித்துவைத்துக் கொள்வதற்குமுன் இவ்வாணிபத்தை நிறுத்த எண்ணினர். ஐக்கியத்தை நாடிய ஐரிஷ் உறுப்பினர் பொதுவாக அடிமை ஒழிப்பையே ஆதரித்தனர். இங்ஙனம் 1805ஆம் ஆண்டின் இறுதியில் முதற்படி யெடுக்கப்பெற்றது. முன்னர் டச்சுக் குடியேற்றங்களுடனான அடிமை வாணிபம் கவன்சிலின் ஆணையினால் தடைசெய்யப்பெற்றது. பிட்டினுடைய மந்திரிசபை யெடுக்காத ஒரு பெருந்தீர்மானத்தை "திறமையாளர்" அமைச் சரவையெடுத்தது காபினெட்டில் இருந்த பன்னிரண்டு பேரில் ஒன்பதின்மர் அடிமை வாணிக ஒழிப்பிற்காக வாக்களித்தனர். தமது இறுதி சக்தியைப் ஃபாக்ஸ் பெருப்பான்மையினருக்களித் தார். புதிய காபினெட் பழைய அமைச்சர்களோடு ஒத்துழைத்த தனால் மேன்மையானதும், நேர்மையானதுமான மசோதா, 1807ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சட்டமாகியது.

1807-லிருந்து 1809ஆம் ஆண்டு முடியும்வரை வயோதிகம் மிகுந்து நோயால் மெலிந்து, முனைப்பற்று இருந்த போர்டுலண்டு

பெயரளவில் பிரதம மந்திரியாக விளங்கினர். ஆனால் உண்மையில் சிட்மவுத்துடன் பணி புரிந்தவர்களும், அவருக்கு எதிராக நின்ற வருமே அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டனர். சிட்மவுத்தை சேர்த்துக்கொள்ள மறுத்த பின்னவர்களுக்கு கானிங் தலைவராக விளங்கினர். இத்தகைய சமநிலை எப்போதாவது தோன்றியே ஆகவேண்டும். அது ஒன்று இப்போது காமன்ஸ் சபையின் தலைவராக இருந்தவரும், தீவிரப் பேச்சாளராகவும், உயரிய ஒழுக்க முடையவரா விளங்கியவரும், ஆனால் அதே சமயத்தில் 'புராடஸ்டெண்ட்' சமயவெறி கொண்டவருமான பெர்சிவலுக்குச் சாதகமாகத் திரும்பலாம். அல்லது தணியாத ஆசை கொண்டவரும், பிட்டின் நினைவைப் போற்றியவரும், நாவன்மை மிகுந்தவரும் கிரன்விலுடனும், வெல்லெஸ்லியுடனும் இணைய எண்ணியவருமான கானிங்கின் பக்கம் சாயலாம். அல்லது ஒரு வேளை பிளவினைப் போக்கக்கூடிய லிவர்பூலுக்கு ஆதரவாக இருக்கலாம். 'அரசரது நண்பரின்' மகன் என்பதோடு, கானிங்கின் நண்பராகவும் விளங்கிய அவர் ஏற்கனவே பிட்டிற்கும், சிட்மவுத்திற்கு மிடையே சமாதானம் செய்துவைப்பதில் பெரும் பங்குகொண்டவராவர். அறிவுக் கூர்மையும் ஒப்புரவினைக்கம் செய்யும் பண்பும் பெற்ற அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர்.

புதிய மந்திரிசபை தோன்றிய ஓராண்டு காலத்திற்குள் அது பாராளுமன்றத்தைத் துணிகரமாகக் கலைத்தது. அதனால் திருச்சபையும் அரசரும் வேண்டுமென்றும், போப் சமயத்தவருக்கு எதிராகவும் கூக்குரல்கள் நாடுமுழுவதிலும் எழுந்தன. வெளிநாட்டு விவகார அலுவலகத்தில் கானிங்கும், போர் அமைச்சராக காசில்ரேயும் பதவிவகித்தனர். 1807ஆம் ஆண்டில் அவர்கள் நெப்போலியனை திடமாக எதிர்த்தனர். பல வகையில் வெற்றியும் பெற்றனர். டில்சிட்டில் என்ன நடந்திருக்கும் என்பதை உளவுச் செய்திகளை ஒன்றிணைத்தும், உள்ளுணர்வினாலும் அறிந்த அவர்கள் ஆகஸ்டு மாதத்தில் டென்மார்க்கிடமிருந்து சமாதானத்தையோ அல்லது நடுநிலைமையையோ கோரி பகை வரை முன்னறிந்தனர். டென்மார்க் மறுத்ததன்பேரில் பிரிட்டிஷ் கப்பல்கள் கோபன்ஹேகன்மீது குண்டுமாரி பொழிந்ததோடு, டேனியருடைய கப்பற்படையைக் கைப்பற்றின. மேலும் டேனியருக்குச் சொந்தமான ஹிலிகோலண்டும் (Heligoland), டச்சுக்காரருக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகளும் கைப்பற்றப்பட்டன. ஃபிரெஞ்சுப்படையொன்றை முந்திக்கொண்ட பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவு ஒன்று போர்ச்சுகலின் காப்பாளரைப் பிரேசிலுக்குப் பாதுகாப்புடன் அழைத்துச் சென்றது.

ஃபிரெஞ்சுக் குடியரசின் செயலான்மைக்குழு (Directory) விடமிருந்து பெற்றதான நெப்போலியனின் ஐரோப்பிய வாணிகத் திட்டம் (Continental System) இறுதி உருவெடுத்தது. ஸ்பானிய தீவக்குறை நீங்கலாக உள்ள ஐரோப்பியத் துறைமுகங்கள் அனைத்தும் நெப்போலியனின் மேற்பார்வையிலிருந்தன. பிரிட்டிஷ் செல்வாக்கு என்னும் குமிழினை எளிதாக உடைத்துவிட முடியுமென்ற நம்பிக்கையில், சில ஆணைகளை நெப்போலியன் வெளியிட்டார் அவற்றின் மூலமாக இங்கிலாந்தின் வளத்திற்கும் வலிமைக்கும் காரணமான ஏற்றுமதி வாணிகத்தை அழித்து, அதனுடைய தங்க இருப்பினைக் குறைத்து, வாணிகத்தைக் குலைக்க முடியுமென்று அவர் நம்பினார். போர்ட்லண்டு விரிவு செய்த கவுன்சில் ஆணைகள் பலவற்றின் மூலமாக கிரன்வில் அரசாங்கம் பழிவாங்கும் செயல்களில் ஈடுபட்டது. அவற்றின் விளைவோடு, பெரும்பான்மையில் எல்டனுடைய சகோதரரான ஸ்டோவெல் பிரபு (Stowell) பரிசுச் சட்டத்திற்கு (Prize Law) அளித்த விளக்கங்களும் சேர்ந்து, ஃபிரான்சையும், அதனுடைய நட்பரசுகளையும் முற்றுகையிட்டதாக அறிவித்தன. பிரான்சிற்கும், வெளி உலகிற்கும் இடையேயான பொருள்களை ஏற்றிச் செல்லும் வாணிபத்தை நடுநிலைமை நாடுகள் செய்யக்கூடாதென்று தடுத்தன. மேலும் நமது போர்த் தேவைகளுக்கு ஏற்றவாறு நடுநிலைமை நாடுகளின் வாணிகத்தில் "பங்கீடு" செய்தன. உரிமைச் சீட்டுகள் வழங்குவதன் மூலமாக பொருள்கள் நமது துறைமுகங்களுக்கு ஈர்க்கப்பெற்றன என்றாலும்; அங்காடிகளை இழந்ததாலும், நமது பரிசு நீதிமன்றங்களுக்குப் பணியவேண்டியிருந்ததாலும், மறைத்த பொருள்களைக் கண்டு பிடிப்பதற்காகக் கொண்டாடப்பெற்ற "சோதனையிடும் உரிமை" இருந்ததாலும், பிரிட்டிஷ் படையைவிட்டோடியவரை வெளியேற்றவேண்டியிருந்ததாலும், எல்லா நடுநிலை நாடுகளும், குறிப்பாக அமெரிக்காவும் இதற்காக ஆத்திரங் கொண்டன. இங்ஙனம் வாணிகத்தைத் திக்குமுக்காடச் செய்த நிலை காலத்துடன் போட்டியிடுவதாகக் காணப்பெற்றது. நடுநிலைமை நாடுகள் பிரான்சுடன் வாணிபம் செய்தால் தனது அழிவு நிச்சயம் என்று இருந்த தீவு அரசினுடைய போரிடவேண்டுமென்ற உறுதி முதலில் குலையுமா; அமெரிக்கருடைய பழி வாங்கும் செயல்களாலும், குறைந்த எண்ணிக்கைகொண்ட பாதுகாப்புடன் கூடியகப்பல்கள் அளவிற்கே வாணிபம் கட்டுப்படுத்தப்பெற்றதாலும் வாழ்விழந்த பிரிட்டிஷ் ஏற்றுமதியாளரின் பொறுமை முதலில் அழியுமா; அல்லது போரிடும் இரு நாடுகளின் தயவில் வாழவேண்டி இருந்த நடுநிலைமை நாடுகளின் பொறுமை முதலில் அழியுமா என்னும் ஐயம் எழுந்தது. அல்லது ஃபிரெஞ்சுக் காரர்களின் நண்பர்களின் பொறுமை முதலில் அழியுமா;

உதாரணமாக அமெரிக்கப் பொருள்கள் கிடைக்காததோடு பால்டிக் துறைமுகங்கள் முற்றுயிடப்பெற்றதால் ரஷ்யாவின் பொறுமை முதலில் அழியுமா; அல்லது புகையிலையிலிருந்து பருத்திவரை உள்ள குடியேற்றப் பொருள்கள் கிடைக்காது, மிக அதிகமான காப்பு வரிகளின் பயனைச் சர்க்கரைக்குப் பதிலாக பீட் கிழங்கையும், காப்பிக்கொட்டைக்கு பதிலாக சிக்கோரியையும் (Chicory) பயன்படுத்தி, ஆங்கிலக் கால்வாய்த் தீவுகள், ஹிலி கோலண்டு அல்லது சலோனிகா (Salonica) வழியாக சிறு கடற் கழிகள், பிளவுகள் ஆகியவற்றின் மூலமாக பிரிட்டிஷ் பொருள் களைக் கள்ளக்கடத்தல் செய்யவேண்டிய நிலையிலிருந்த ஃபிரான் சின் தாங்கும் சக்தி முதலில் முறியுமா என்பனபோன்ற பல சிக்கல்கள் தோன்றலாயின.

முழுமையானல்தான் வாழமுடியும் என்னும் குறைபாடு நெப்போலியனின் திட்டத்தில் இருந்தது. அதனல் டஸ்கனி (Tuscany); கார்பு (Corfu), ஹாலந்து, ஹான்ஸ் நகரங்கள் (Hanse Towns) ஆகியவற்றை அவர் இணைத்துக் கொள்ளவேண்டி வந்தது. ஸார் மன்னர் அதிருப்தி கொண் டிருந்தார் என்பதற்கும், ஆஸ்திரியா தனது படையைப் பெருக்கி மீண்டும் இறங்கியது என்பதற்கும் ஜெர்மனியில் எதிர்ப்புத் தீ மூண்டது என்பதற்கும், ஆன அறிகுறிகள் 1808ஆம் ஆண்டிலேயே தோன்றின. பின்லாந்தின் (Finland) மீதான ரஷ்யப்படை யெடுப்பிற்கெதிராக ஸ்வீடனுக்கு உதவி யளிக்கும் நோக்கத்தோடு அனுப்பப்பெற்ற படையோடு அந்த ஆண்டின் பிரிட்டிஷ் முயற்சி ஆரம்பமாகியது. ஆயின் மே மாதத்தில் ஸ்பெயினில் தோன்றிய தேசியக் கிளர்ச்சி பிரிட்ட னுக்குப் புதிய வாய்ப்பொன்றை அளித்தது. ஸ்பானிய அரச குலத்திலே தோன்றிய அவதூறுகளைப் பயன்படுத்திக்கொண்ட நெப்போலியன் நேபிள்ஸின் அரசராக இருந்த தமது சகோதரர் ஜோஸப்பை ஸ்பெயின் நாட்டு மன்னராக்கினர். அதனல் நாடு முழுவதிலும் இயற்கையாகக் கிளர்ச்சிகள் எழுந்தன. ஃபிரெஞ்சுப் படையொன்று பேலன் (Baylen) என்னுமிடத்தில் முறியடிக்கப் பெற்றது. நாட்டுப்பற்று மிகுந்தோர் பிரிட்டனின் உதவியை நாடினர்.

சிறுபடையுடன் வந்த ஆர்தர் வெல்லஸ்லி (Arthur Wellesley) ஆகஸ்ட் மாதத்தில் லிஸ்பனுக்கருகில் வந்து இறங்கினர். விமீரா (Vimiera) என்னுமிடத்தில் ஜூனட்டை (Junot) முறியடித் தார். ஆனல் படைத்தலைமையேற்றுக்கொண்ட தளர்ச்சியுற்ற படைத்தலைவர்கள் பகைவரைப்பின்தொடர்வதை நிறுத்திவிட்டு

இழிந்த சின்ட்ரா ஒப்பந்தத்தைச் (Convention of Cintra) செய்து கொண்டனர். அதன் காரணமாகப் ஃபிரெஞ்சுக்காரர் தங்களது படைகளை வெளியேற்றிக்கொண்டு சென்றனர். பிற்காலத்தில் ருமேனியாவில் அடங்கிய பகுதிகளையும், பின்லாந்தையும் நன்கொடையாகப்பெற்ற ஸார் மன்னர், அதற்குப் பதிலாக ஜோஸப்பின் பட்டத்தை ஏற்றுக் கொண்டார். மேலும் நெப்போலியனுடன் சேர்ந்துகொண்டு பிரிட்டிஷ்காரரை சமாதானம் செய்துகொள்ள வருமாறு அழைத்தார். படையினருக்குப் பயிற்சியளிப்பதில் ஒப்பற்று விளங்கிய சர்ஜான்மூர் (Sir John Moor) என்பவரின் தலைமையில் புதுப்படை ஒன்றை அனுப்பியதே அதற்கு நமது விடையாக இருந்தது வலிமை மிகுந்த ஸ்பானியப் படை இருக்கும் என்ற ஊகத்தோடு அதற்கு இடப்புறமாக லிஸ்பனிலிருந்து இப்படை போர்புரிய வேண்டுமென எண்ணினர். ஆனால் 200,000 தேர்ச்சிபெற்ற வீரர்களோடு நெப்போலியனே நேரில் வந்து டிசம்பர் மாதத்தில் இடியென மாட்ரிட் நகருக்குள் புகுந்தார். மூர் ஏமாற்றமடைந்தபோதிலும், தவறான செய்திகளின் விளைவால் தென்ஸ்பெயினிலிருந்த ஃபிரெஞ்சுப்படையை வெளியேற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு மேலும் போராடினர். ஆனால் இறுதியில் பின்னடைய வேண்டிய நெருக்கடி உண்டானபோது கருன்னாவில் (Corunna) இருந்த கப்பல்களை அடைவதற்காகப் பத்தொன்பது நாட்களில் 250 மைல்களைக் கடந்து சென்றார். அங்கே அவர் 1809ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் தேதி பகைவரை எதிர்த்து நின்று, தமது உயிரைப் பணயமாக வைத்துப் போராடினர். அவரது சிதறுண்ட படையினர் கப்பல்களில் ஏற்றிக்கொள்ளப் பெற்றனர்.

தீபகற்பத்தைப் ஃபிரெஞ்சுக்காரர்கள் வென்றடக்கியபோது, லிஸ்பெனிலிருந்த ஒரு மெலிந்த பிரிட்டிஷ் படை வீழாமல் இருந்தது. வெல்லெஸ்லி அவ்விடத்தில் ஏப்ரல் மாதத்தில் திரும்பி வந்து சேர்ந்தார். அப்படி அங்குத் திரும்புவதற்குமுன் அந்நகரைக் கைப்பற்றிக் காக்கக்கூடும் என்பதையும், காடிஸ் நகரத்திலிருந்து அல்லாமல் அங்கிருந்துதான் நாம் முயலவேண்டுமென்பதையும் அரசாங்கம் நம்புமாறு செய்தார். சோல்ட் (Soult) என்பவரை ஓபோர்டோவிலிருந்து (Oporto) வடக்கே விரட்டி மாட்ரிட் நகரை நோக்கி விரைந்தார். தம் படையினரின் எண்ணிக்கைப் பகைவருடையதைக் காட்டிலும் குறைந்திருந்த போதும், அவர் தாலவெரா (Talavera) என்னுமிடத்தில் விக்டரை Victor) வீழ்த்தினர். ஆனால், சோல்ட் மறுமுறை முன்னேறிய தால் வெல்லெஸ்லி டேகஸ் (Tagus) ஆற்றிற்குத் தெற்கே செல்ல வேண்டியதாயிற்று. அதே சமயத்தில் உள்ள உறுதி குலைந்த

ஸ்பானியர் அண்டலூஸியாவிற்குப் (Andalusia) பின்னடைந் தனர். நெப்போலியன் போர்ச்சுகலின்மீதான பிரதான தாக்கு தலைத் தள்ளிப்போட்டு ஸ்பானியரைப் பின்தொடர்ந்து செல்லு மாறு சோல்டிற்கு ஆணையிட்டது நமது நற்பேறாக அமைந்தது.

பகைவரிடமிருந்து பெருவடுவினைத் தோற்றுவிக்க உதவிய நமது கடலாதிக்கம் காரணமாக 1809ஆம் ஆண்டில் மார்டினிக், செயிண்ட் டோமிங்கோ முதல் செனிகால் வரையான பல இடங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் மிகச் சிறந்ததும், பயன் படுத்திக்கொள்ளப் பெருதுவிடப்பெற்ற வாய்ப்பு, பிரான்ஸிற்கு எதிரா எழுந்த முதல் ஆஸ்திரியப் புரட்சிக் கலகம், வெஸ்பேலி யாவில் தோன்றிய ஜெர்மானியரின் கலகங்கள் ஆகியவற்றின் மூலமாக நிலத்தில்தான் கிடைத்தது. இரண்டுமாத விவாதத் திற்குப் பிறகு 40,000 வீரர் அடங்கிய படைகொண்டு ஷெல்டைத் தாக்குவது எனக் காபினெட் தீர்மானித்தது. எனினும் போதிய கப்பல்கள் கிடைக்காமையால் ஜூலை மாதம் வரையிலும் படை களைக் கொண்டு செல்லமுடியவில்லை. அதற்குள் இப்படை யெடுப்பின் இரகசியம் வெளியாகிவிட்டது. ஃபிரெஞ்சுக் கப்பற் படை ஆண்ட்வெர்பிற்கு மேலே தப்பிச் சென்றது. நமது படைத் தலைவரான சாத்தம் முனைப்பற்றவராக இருந்ததோடு, நாவாய்ப் படையுடனான ஒத்துழைப்பு மிக மோசமாக இருந்தது. வால்சரன் (Walcheren) தீவிலுள்ள ஃளெஷிங்கின் (Flushing) மீதான நீள் முற்றுகை, ஆண்ட்வெர்ப்பின் மீது திடீர்தாக்குதல் மேற் கொள்ளும் நம்பிக்கையை நாசமாக்கியது. மதகுகள் உடைக்கப் பெற்றதால், படைகள் முழங்கால் அளவு நீரில் நின்றன. செப்டம்பர் மாதத்தில் நமது படைவீரர்களில் கால் பகுதியினர் நோயால் பீடிக்கப்பெற்ற உடன், தப்பியவர்கள் தாய்நாடு திரும்பினர்.

அதற்கு முன்பே வாக்ராம் (Wagram) என்னுமிடத்தில் நடந்த இடர் நிறைந்த போரில் ஆஸ்திரியரை நெப்போலியன் முறியடித் தார். அக்டோபர் மாதத்தில் செய்துகொள்ளப்பெற்ற வியன்ன (Vienna) ஒப்பந்தத்தின்படி போலந்தில் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமாக இருந்த பகுதிகள் நெப்போலியனின் கைப்பாவை யாக இருந்த வார்ஸாவின் கோமகனுக்குக் கிடைத்தன. தெற்கி லிருந்த ஸ்லாவியப் (Slav) பகுதிகள் பிரான்ஸிற்குக் கிடைத்தன. நெப்போலியன் ஜோஸபைன (Josephine) விவாகரத்து செய்து விட்டு, மேரிலூஸி கோமகளை (Archduchess Marie-Louise) மணந்து, அந்த ஒப்பந்தத்திற்கு உறுதியளித்தார். அதே சமயத்தில் தமது பேரரசின் இரண்டாவது தலைநகரம் ரோம்

என்று அவர் அறிவித்து, போப்பாண்டவருடைய பகுதிகளைத் தமது பேரரசில் இணைத்துக்கொண்டதுடன், அவரைச் சிறையிலும் வைத்தார். அளவிலே மிகச் சிறியதான வெல்லிங்டனின் படையும், பிரிட்டிஷ் அதிகாரிகளால் உருவாக்கப்பெற்ற போர்ச்சுகீசியரின் படையொன்றும், காடிஸில் சமாளித்துநின்ற ஸ்பானியரும் மட்டுமே இத்தகைய மிகப் பரந்த முடியாட்சியை எதிர்த்து நின்றனர்.

மற்ற காரணங்களினால் சீர்குலைந்து வந்த போர்ட்லண்டு அரசாங்கம் வால்சரன் தோல்வியினால் வீழ்ந்தது. தம்முடன் பணிபுரிவோரைக் கானிங் வெறுத்தார். தோல்வியையும், செல்வாக்கு கேட்டையும் நரம்புச் சிக்கல் கொண்ட அவரால் தாங்க முடியவில்லை. வெல்லிங்டனின் நியமனம், மூரின் படையெடுப்பு ஆகிய இரண்டிற்குமே எதிர்ப்பு தெரிவித்தார். வெல்ஸ்லி மார்குயிஸ் பிரபுவைக் கொண்டுவருதன் மூலமாகத்தான் போரை நடத்துவதில் மேம்பாடு காணமுடியுமென நம்பினர். 1809-ல் காஸில்ரேயை மந்திரிசபையிலிருந்து வெளியேற்றிவிட்டால் தாம் பதவியிலிருந்து விலகிவிடுவதாக அச்சுறுத்தினர். இக் கோரிக்கையினை மன்னரும் போர்ட்லண்டும் கொள்கையளவிலே ஒப்புக்கொண்டபோதிலும் இதற்கு காலதாமதம் தேவையென்றனர். மற்ற மந்திரிகளோவெனில் காஸில்ரே திட்டமிட்ட படையெடுப்பை நிறைவேற்றுதற்காவது அன்னருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால் அதைப்பற்றிய ஒரு வார்த்தைகூட காஸில்ரேயிடம் கூறப்படவில்லை. இதற்கிடையில் படைமுறைத் தலைவராக இருந்த யார்க்கோமகனுடைய ஊழல்கள் வெளிவந்தன. அவரால் கைவிடப்பெற்ற காமக்கிழத்தி ஒருத்தி தீவிரவாதிகளின் தூண்டுதலினால் அவர் தன்னுடைய தூண்டுதல் காரணமாகப் படைப்பதவிகளை விற்றார் என்று சான்று பகர்ந்தாள். சின்ட்ரா ஒப்பந்தம், மூரின் தோல்வி ஆகியவற்றினால் மனச்சோர்வுற்ற மக்கள் அதைக் கேட்டு ஆத்திரங்கொண்டனர்.

இந்த அவதூற்றினால் சீர்திருத்த நீரானது மதகின் கதவினை உடைத்துக்கொண்டு வெளிப்பட்டது. சர் பிரான்ஸிஸ் பர்டெட் (Sir Francis Burdett), துணிகரமான கோச்ரேன் பிரபு (Gochrane) ஆகிய இரு ராடிகல் கட்சியினரும் (Radicals) சிறப்பு மிக்க வெஸ்ட்மினிஸ்டர் தொகுதியைக் கட்டுப்படுத்தினர். புதிய இரவலர் சட்டத்திற்கும், பரவலான கல்விக்கும் ஆன மசோதாக்களை கிரேயின் மைத்துனரான விட்பிரட் (Whitebread) என்பவர் கொண்டு வந்தார். மெல்வினின் குற்ற விசாரணை, தொடர்ந்து

நடத்திவந்த யார்க் கோமகனின் விசாரணை பதவியாளர் மீது மக்கள் அவநம்பிக்கை கொள்ளுவதற்குக் காரணமாக அமைந்தன. மேலும் அவை அரச குடும்பத்தினர்மீதான வெறுப்பையும் வெளிப்படுத்தின. அதுமட்டுமின்றி அரசாங்கத்தில் எங்கு பார்த்தாலும் ஊழல் மலிந்து கிடக்கின்றது என்ற குற்றச்சாட்டு பரவுதற்குக் காரணமாகவும் இருந்தன. பாராளுமன்ற ஸ்தானங்கள் விற்கப்படுதலைத் தடை செய்யும் மசோதா ஒன்றை 'ராடிகல்கள்' எனப்படும் தீவிரவாதிகள் நிறைவேற்றினர். வாழ்நாள் முழுவதற்கும் பதவி அளிப்பதையோ அல்லது பதவிக் குறைப்பு மூலமாக பதவி அளிப்பதையோ தடை செய்யும் மசோதா மற்றொன்று வந்தது. டான்டாஸின் செல்வாக்கினால் உறுதியாகக் கட்டுப்பட்டிருந்த ஸ்காட்லாந்தில் புதிய சக்திகள் தோன்றலாயின. பிரோகாம் என்பவர் கவுன்சிலின் ஆணைகளை எதிர்த்தார். மேலும் 'எடின்பரோ செய்தித் தொகுப்பு' ("Edinburg Review") என்னும் பத்திரிகையைத் தாராளவாதிகளின் அமைப்பாக மாற்றினர். ஹார்னர் (Horner) என்பார் நாணயச் சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்டார். பெர்ரியின் (Perry) விக்கு பத்திரிகையான 'காலைச் செய்திக்கோவை' ("Morning Chronicle") செல்லாத வகுப்பாரிடையேயும் செல்வாக்கு பெற்றிருந்த 'அரசியல் பதிவேடு' ("Political Register") என்னும் செய்தித் தாளை வெளியிட்டவர் வில்லியம் காப்பட் (William Cobbet) என்பவராவர். போரை ஆதரிக்கும் டோரியாகத் தொடங்கிய அவரது டோரிக்கொள்கை பழைய குடியானவர்களின் இங்கிலாந்தை எதிர்நோக்குவதாக இருந்ததோடு, அவரை ஒரு 'ராடிகலை'ப்போன்று எழுதவும், செயலாற்றவும் அனுமதித்தது.

இங்ஙனமிருந்த மனநிறைவின்மைக்கிடையேதான், வால்சரன் பெருந்தோல்வி வந்தது. போர்ட்லண்டின் உடல்நலம் இறுதியாகச் சீர்கேடுற்றது. காசில்ரே உடனே பதவியிலிருந்து விலகவேண்டுமென்று வற்புறுத்திய கானிங் முதன்மையதிகாரத்தைப் பெற ஆவல் கொண்டார். பிரதம மந்திரி காமன்ஸ் சபையைச் சார்ந்தவராக இருக்கவேண்டுமென்று அறிவித்தார். ஆனால் அதே சமயத்தில் பெர்ஸிவலின் கீழ் பணி புரிய அவர் மறுத்தார். எனினும் ஏற்கெனவே காமன்ஸ் சபையின் தலைவராக இருந்த பெர்ஸிவலே பதவிக்கு வரவேண்டுமென்பதை மன்னருடன் காபினெட்டும் ஏற்றுக்கொண்டது. கானிங் பதவியிலிருந்து விலகினார். இறுதியில் தமக்கு எதிரான தீர்மானத்தை அறிந்த காசில்ரேயும் ராஜினாமா செய்தார். அவர்களிருவரும் மற்போரின் மூலமாகத் தங்கள் தங்களுடைய ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கான

வழிகளைத் தேடினர். ஆனால் போப்பின் சமயத்தை அறவே வெறுத்த அரசாங்கத்தில் சேர கிரேயும், கிரன்விலும் மறுத்தனர். பிட்டைச் சார்ந்தவர்கள் சிட்மவுத்தை மிகுதியாக வெறுத்தனர். ஆனால் சிட்மவுத் இல்லாமல் அவருடைய ஆதரவாளர்கள் பதவியேற்க மறுத்தனர். எனவே கானிங்கிற்குப் பதிலாக வெல்லெஸ்லி பதவியேற்ற ஒன்றுதான் மந்திரி சபையில் ஏற்பட்ட முக்கிய மாறுதலாகும்.

மூன்று காமன்ஸ் சபையினரையே கொண்டிருந்த காபினெட் மிக மெலிந்திருந்தது. பெர்சிவல்லும், போர்த்துறை அமைச்சரான லிவர்பூலும் தவிர மற்றையோர் ஆற்றலற்றவர்கள். 1810ஆம் ஆண்டில் அரசருக்கு நிலையாகப் பைத்தியம் பிடித்தலும், அமையப்போகும் காப்பாளர் ஆட்சி அவர்களின் முடிவைத் தேடித் தருமாதலாலும் மந்திரிசபை எப்போதும் வீழ்த்தக்கூடியதாக இருந்தது. சிட்மவுத், காசில்ரே, கானிங் ஆகியோரை ஒன்றுகவோ, தனித்தனியாகவே திரும்பக் கொண்டுவரும் முயற்சிகள் யாவும் தன்னல சூழ்ச்சி, செருக்கு, பேராசை ஆகியவற்றின் காரணமாக தோல்வியுற்றன. இளவரசரை எதிர்நோக்கி, கானிங்குடன் சூழ்ச்சி செய்து கத்தோலிக்கர்களுக்கு மேலும் சலுகைகள் காட்ட வேண்டுமென்ற எண்ணமுடைய வெல்லெஸ்லியின் பாராமுகமான, பகட்டார வாரத்தினை அமைச்சர்கள் போராடவேண்டியிருந்தது. உள்நாட்டில் வில்க்ஸின் காலத்திற்குப் பிறகு எழுந்த தொல்லை மிகுந்த கிளர்ச்சியினை அவர்கள் சமாளிக்கவேண்டி வந்தது. பத்திரிகைகள் கடுமையாகத் தாக்கின. பயனற்ற பதவிகளுக்கெதிராக மசோதாக்கள் கொண்டுவரப்பெற்றன. தொழிலாளர் சங்கங்கள் சட்டத்தை மீறின. பொறிகள் பொடியாயின. கட்சிச் சார்பற்ற கானிங்கினாலும், 'புனிதர்களினாலும்' (Saints) காபினெட் கடுமையாகத் தாக்கப்பெற்றது. கெட்டிப் பணமாகச் செலுத்தும் முறையைத் திரும்பக் கொண்டுவரவேண்டுமென்று கோரிய பொன் குழுவின் 1810ஆம் ஆண்டில் வெளிவந்த அறிக்கை ஹோனர் (Honer), ஹஸ்கிஸ்ஸன் (Huskisson) போன்றோருடைய தூண்டுதலால் வந்தது. அயர்லாந்து பெரும்பாலும் படைக்கலந்தாங்கிப் போருக்குத் தயாராக நின்றது. கவுன்சில் ஆணைகளும், பிரிட்டனின் வாணிகத்தின்மீதான அமெரிக்கத் தடைகளும், அளவு மீறிய வணிகச் சுதாட்டத்துடன் சேர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கியதோடு, விலைகள் உயரக் காரணங்களாக இருந்தன. போர்முண்டதிலிருந்து இரவலர் தீர்வை இரட்டித்தது. 1810–11ஆம் ஆண்டுகளுக்குள் நமது ஏற்றுமதி மூன்றில் ஒரு பங்கு குறைந்துவிட்டது.

பெர்சிவெலின் காபினெட் சபை விரிந்ததாகவோ அல்லது ஆக்கம் சார்ந்த அமைப்பு கொண்டதாகவோ இருக்கவில்லை. போப்பினர் சமய எதிர்ப்பில் பொதுமக்களுடைய ஆதரவை அவர்கள் பெற்றது உண்மையே. போர் முடியும் வரையில் கெட்டிப் பணமாகச் செலுத்தும் முறைக்குத் திரும்புவதில்லை என்று அவர்கள் கொண்டதற்கும் சில காரணங்கள் இருந்தன. பாராளுமன்றச் சீர்திருத்தத்திற்கான கிளர்ச்சி 'ராடிகல்'களோடு நின்றது. ஆனால் அமைச்சரவை மனநிறைவின்மைக்கு அடக்கு முறையை விடையாக அளித்தது. அதிகமாக அளிக்கப்பெற்ற மரணதண்டனையைக் குறைப்பதற்காக ரோமில்லி (Romilly) கொண்டுவந்த தீர்மானங்களைப் பிரபுக்கள் சபையில், எல்டன் தலைமையிலிருந்த பெரும்பான்மையினர் நிராகரித்தனர். விவாதங்களை அச்சிட்டு வெளியிடும் உரிமைப் பிரச்சினையைப் பர்டெட் எழுப்பியபோது, அவரைக் காமன்ஸ் சபையினர் டவர் கோட்டைச் சிறைக்கு அனுப்பினர். இங்ஙனம் காமன்ஸ் சபையினர் தங்களுடைய உரிமைகளைத் தவருகப் பயன்படுத்தியது, சபாநாயகர்மீது பர்டெட் கொண்டுவந்த வழக்கின்மூலமாக வெளியானது. லண்டன் நகரைக் கட்டுப்படுத்த காவலர் படைப் பிரிவும், பீரங்கிப்படையும் தேவைப்பட்டன. தீவிரவாதியான கார்பெட்டையும் அரசியல் குற்றச்சாட்டுகளின்மூலம் அடக்கினர். மிதவாதமான கண்டனங்களும் இதே முறையில அடக்கப் பெற்றன.

இத்தகைய குறைபாடுகளிருப்பினும் 1827ஆம் ஆண்டுவரை நிலைத்திருந்த டோரிகளின் ஆதிக்கத்திற்குப் பெர்சிவலின் மந்திரி சபையே அடிகோலியது. எனினும் அத்தகைய ஒரு நிலைக்கு அவர்களே முழுதும் பொறுப்பானவர்களல்ல. எதிர்க் கட்சிகள் இழிந்த நிலையிலிருந்ததும் ஒரு காரணமாகும். விக்குகளும், 'ராடிகல்' களும் ஒருவரையொருவர் வெறுத்து வந்தனர். கிரேயின் மனநிலையும், சூழ்நிலையும் சரியாக அமையவில்லை. லான்ஸ்டவுன் (Lansdowne) மிக இளையவர். ஹாலந்தோ நோயால் நலிந்திருந்தார். மேலும் இவர்களெல்லாம் பிரபுக்கள். காமன் சபையில் விக்குகளின் தலைவராக இருந்த ஜார்ஜ் பான்சோபி (Ponsonby தற்காலிக ஏற்பாடாக அயர்லாந்திலிருந்து கிரேயினால் கொண்டுவரப்பெற்றவராவர். அதற்குக் காரணம் விட்பிரெட், மனவெழுச்சி கொண்டவராக இருந்ததோடு செல்வாக்கிழந்திருந்தார். புரோகாம் இளைஞராக இருந்ததுடன் நேர்மையற்றவராக இருந்தார். டையர்னி சூழ்ச்சித் திறமுடையவராகவும், ஷெரிடன் ஒழுக்கங்கெட்டவராகவும் இருந்தனர். ஃபாக்ஸ் இறந்தபிறகு

இளவரசர் டோரி கட்சியின் பக்கம் சாய்ந்தது ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. கிரேயை வெறுத்த அவர், கத்தோலிக்கப் பிரச்சினையில் உறுதி தளர்ந்தார். அதனால் அவரது தந்தையின் நிலை சீரடையாததற்குக் காரணமாக இருந்தார் எனக் குற்றஞ் சாட்டமுடியாது. 1811ஆம் ஆண்டில் முதல் நிலையில் அவர் ஓர் ஆண்டிற்கென்று காப்பாளராக வந்தபோது அமைச்சரவையில் மாற்றமொன்றும் செய்யவில்லை.

இவற்றில் பெரும்பான்மையானவை, அளவு கடந்த ஆண்மை மிக்க தலைவராகவும், முதல்தரமான பேச்சாளராகவும் விளங்கிய பெர்சிவலின் செயல்களே எனலாம். 1788ஆம் ஆண்டில் கொண்டு வரப்பெற்ற சட்டத்தின் அடிப்படையில், காப்பாளர் சட்டத்தை நிறைவேற்றும்போது தோன்றிய நீண்ட போராட்டத்தில் தனியாகப் போராடினார். பிட் இளைஞராக இருந்த காலத்திற்குப் பிறகு அதுவரையில் அறியாத ஒருவித ஆர்வ பெருக்கை டோரிகள் உணர்ந்தனர். பிற்காலத் தலைவர்களாகவந்த பாமர்ஸ்டன் (Palmerston), பீல் (Peel) போன்ற இளைஞர்கள் பெர்சிவலைச் சுற்றி நின்றனர். அதே சமயத்தில் அயர்லாந்தில் தோன்றிய வலுத்தாக்குதலினாலும், கானிங்கின் மறைவினாலும், அடிங்டன் கட்சியினர் அரசாங்கத்தை ஆதரிக்கத் தொடங்கினர். இவற்றிற்கும் மேலாக கிரன்வில்லும், கிரேயும், 'எடின்பரோ செய்தித் தொகுப்பும்', ஹாலந்தைத்தவிர உள்ள விக்குத் தலைவர்களில் பலரும், போரை வெறுத்தனர். வெறும் சிப்பாய்தானைத்தலைவர் என்று வெல்லிங்டனை இகழ்ச்சி செய்ததுடன் ஸ்பெயினில் இருந்து அவரைத் திரும்ப அழைக்கவேண்டுமென்று கோரினர். அதே சமயத்தில் இளைஞரிடம் மனவெழுச்சியையும், மக்களிடம் நாட்டு உணர்ச்சியையும் எழுப்பிய இலக்கோடு ஒட்டிக்கொண்ட பெர்சிவலும், லிவர்பூலும் அதனுடைய பயனைத் துய்த்தனர்.

இதற்கிடையில் வெளியேறும் வழிகளையெல்லாம் நாவாய்ப் படை அடைத்தது. மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களையும் போர்முறைத் திறம் வாய்ந்த இடங்களையும் அது கைப்பற்றியது. 1810-ல் காடிலோப்பும் 'மரீஷியஸும், 1811-ல் ஜாவாவும் வென்றடக்கப்பெற்றன. இத்தாலியுடனும், ஆஸ்திரியாவுடன் தொடர்பு கொள்வதற்குச் சிசிலியைக் கைப்பற்றியதும், கோர்பூ (Corfu)வை முற்றுகையிட்டதும் நல்ல வாய்ப்பினை அளித்துதவின. காடீஸ் துறைமுகம் வலிமை மிகுந்ததானதோடு, போர்ச்சுக்கலிலிருந்த படை, வேண்டிய பொருள்களைப் பெற்றது. படையினரின் மன உறுதியையும், நாட்டு மக்களின் நம்பிக்கையையும் தீபகற்பப் போர் மீட்டது என்று சொன்னால், அதற்கான பெருமை

முக்கியமாகக் காபினெட்டிற்கே உரியதாகும். பொருளாதார அடிப்படையில் போர்ச் செலவு அவர்களுக்குக் கவலை அளிப்பதாக இருந்தது. சில சமயங்களில் வெலிங்டனுக்கு வேண்டிய பணத்தைப் பெறுவது இயலாத ஒன்றாகத் தோன்றியது. ஆனால் அவர்கள் ''மிதமான அளவில் தொடர்ந்து ஒழுங்கான முயற்சி வேண்டுமென்ற'' லிவர்பூலின் கருத்தைக் கைவிடாது கடைப் பிடித்து நின்றனர். பல முனைகளில் படைகளைப் பிரித்து அனுப்புதல் என்ற பழந்தவற்றைச் செய்யாது, ஒரே போர்முனையாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். உரிமைக்காக ஸ்பெயின் போராடும் வரையில் அதனைக் கைவிடுவது இல்லை என்னும் கொள்கையில் அயராது இருந்தனர்.

நெப்போலியன் ஸ்பெயினுக்குத் திரும்பாததால் சோல்ட், நே (Ney), மார்மாண்ட் (Marmont), மஸ்ஸேனா (Maseena) போன்ற படைத்தலைவர்களின் பொருமைப் பூசல்களை உரமற்ற பொதுமகன் தன்மை கொண்ட ஜோசப் சமாளிக்கவேண்டியிருந்தது. அனுபவமிகுந்த படைகளில் அவர்கள் மேம்பட்டு இருந்தபோதிலும் நமது கடலாதிக்கத்திற்கெதிராக நீண்ட கடற்கரையைக் கட்டிக் காக்க முடியவில்லை. அதைப்போன்றே ஸ்பானிய கொரில்லாக்களுக் கெதிராகத் தடையற்ற செய்தித் தொடர்புகொள்ள முடியவில்லை. கட்டுப்பாடு விதிக்கும் சக்தி, அயராது முயலும் திறன், படைகளின் உயிர்நாடியாக உள்ள போக்குவரத்தும், தேவையான பொருள்கள் அளிப்பும் சீராக இருப்பதற்கு மிகுந்த கவனம் செலுத்துதல், ஆகியவற்றில் வெல்லிங்டன் இந்தியாவில் நிறைய அனுபவம் பெற்றிருந்தார். காலம் கிடைக்குமானால் தமது படையை ஒப்பற்றதாகச் செய்வதோடு போர்ச்சுகீசியப் படையையும் கூடுமான வரையில் திறமை வாய்ந்த ஒன்றாகச் செய்வார். அத்தகைய காலத்தைப் பெறுவதற்காக ஸ்பெயினுக்கு வடக்கேயுள்ள டாரஸ் வெட்ராஸ் (Torres Vedras) பகுதியை அரணுடையதாக்கினர். கியூடாட் ரோட்ரிகோ (Ciudad Rodrigo) வையும் ஆல்மெய்டா (Almeida)வையும் கைப்பற்றிப் போர்ச்சுக்கலுக்குள் புகுந்து, புஸாகோவில் (Busaco) தடை செய்யப்பெற்றபோதிலும் கோய்ம்ராவிற்கு மேற்கேயும், அதற்கு மேலும் முன்னேறிய மாசேனாவின் 1810ஆம் ஆண்டுப் படையெடுப்பில் வெலிங்டன் அமைத்த அரண்கள் பெரிதும் பயன்பட்டன. தாங்கள் அமைத்த மூவரண்களுக்குள் அக்டோபர் மாதத்தில் பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கின. அதே சமயத்தில் நாட்டுப்புறத்தைத் தரிசு நிலமாக்கிய மாசேனா, மாரிக்காலம் முழுதும் அப்பகுதியிலேயே அலைந்துகொண்டிருந்தார், 1811ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தான், பட்டினியால் வாடிய தமது படையுடன் பின்வாங்கினர்.

படாஜோஸைக் (Baddajoz) கைப்பற்றுவதில் தாமதம் ஏற்பட்ட தால் காலந் தாழ்ந்து வடக்கே வந்த சோல்டினுல் அதனைத் தடுக்க முடியவில்லே. அதன்பிறகு காடலிற்கு வெளியே கிரகாம் (Graham) நடத்திய தாக்குதலாலும், பரோஸ்ஸா (Barossa) வில் பெற்ற வெற்றியிலும் சோல்ட் தெற்கே அழைக்கப்பெற்ருர். மறு முறையும் போர்ச்சுகலின்மீது மாசேனு படையெடுத்து வந்தார். ஆனல் பூயன்டெஸ் டி ஓனெரோ (Fuentes de Onoro) என்னு மிடத்தில் முறியடிக்கப்பெற்ருர். அதே சமயத்தில் வடக்கே வர வேண்டுமென்று சோல்ட செய்த முயற்சியை, அல்பூரா (Albuera) என்னுமிடத்தில் நடந்த கடுமையான போரில் பெரஸ்போர்டு (Beresford) அல்லது பிரிட்டிஷ் காலாட்படை தடுத்து நிறுத்தியது. இங்ஙனம் பெற்ற வெற்றிகளுக்குத் தலேமையிடம் பொறுப்பானது அல்ல. பெரும்பாலும் அங்கங்கே இருந்த படைப் பிரிவுகளின் தலேவர்களையும், பெரு வீரத்தோடு போர் புரிந்த பொது நிலே யாளரையுமே இப்பெருமை சாரும். "நம் படையில் இறந்த வர்கள் குறிப்பாக ஐம்பத்தேழாவது படைப் பிரிவைச் சார்ந்த வர்கள், போரிட்ட நிலேயிலேயே விழுந்து கிடந்தனர். அவர்கள் கொண்ட ஒவ்வொரு காயமும் முன்புறத்திலேதான் காணப்பெறு கின்றது" என்பதாக அல்புரோ போருக்குப் பிறகு பெரஸ் போர்டு அனுப்பிய கடிதத்திலே எழுதியிருந்தார். மாசேனு விற்குப் பதிலாக வந்த மார்மாண்ட் முதுவேனிற் காலத்தில், டாகஸ் ஆற்றின் மேல்புறத்தை நோக்கி முன்னேறினர். அந்த ஆண்டின் இறுதியில் வெல்லிங்டன் கிழக்கு போர்ச்சுகலில் இருந்தார். சோல்ட் காடலினுல் தடுக்கப்பெற்ருர். ஆனல் வட கிழக்கு ஸ்பெயினில் ஃபிரெஞ்சுச்சுக்காரர்களின்பிடி ஒரளவு தளராமல் இருந்தது.

குறிப்பிடத்தக்க 1812ஆம் ஆண்டில் காப்பாளர் ஆட்சி நிலே யானதாகவும், தடையற்றதாகவும் மாறியது. இதனே எதிர் பார்த்த வெல்லெஸ்லி, தமது திட்டங்களேத் திணிப்பதற்காகப் பதவியை விட்டு விலகினர். கிரன்வில்லையும், கிரேயையும் மந்திரி சபையை அமைக்குமாறு காப்பாளர் அழைத்தார். அதனே அவர்கள் மறுத்தனர். அதிலிருந்து கட்சி உணர்ச்சிகள் இறுக்க மடைந்ததால், கத்தோலிக்கச் சிக்கலிலோ அல்லது போரிலோ விட்டுக்கொடுத்து சமாதானம் செய்து கொள்வது இயலாத ஒன்று என்ற உண்மை வெளிப்பட்டமை இங்குக் குறிப்பிடத்தக்க தாகும். முதற்படியாக காசில்ரேயை வெளிநாட்டு விவகாரத் துறையில் அமர்த்தி, சிட்மவுத்தைத் திரும்பக் கொண்டுவர வேண்டுமென்று பெர்சிவல் தீர்மானித்தார். ஆனல், அரைப் பைத்தியமும், பண்முறிவு ஏற்பட்ட வணிகரும் ஆன பெல்லிங்காம்

(Bellingham) காமன் சபையின் தலைவாயிலில் அவரைச் சுட்டுக் கொன்றார்.

பிழைத்திருந்தோர், லிவர்பூலைப் பிரதம மந்திரியாகவும், காசில்ரேயைக் காமன்ஸ் சபையில் தலைவராகவும் கொண்டு வருவது எனத் தீர்மானித்தனர். ஆனால் வெல்லெஸ்லியும், கானிங்கும், அவர்களுடைய அழைப்பை ஏற்க மறுத்தனர். அதனோடு விக்குகளும், கானிங் கட்சியினரும் மேலும் வலிமைமிக்க 'கத்தோலிக்க' ஆதரவான அரசாங்கம் வேண்டுமென வாக்களித்தால் அமைச்சரவை ராஜினாமா செய்யவேண்டிதாயிற்று. காப்பாளர் மறுபடியும் தமது வழிகளில் முயன்று பார்த்தார். எனினும் விக்குகளும், டோரிகளும் வெல்லெஸ்லியுடனே கானிங் குடனே பணிபுரிய மறுத்தனர். இளவரசரின் ஆளான மோய்ராவின்கீழ் (Moira) உண்மையான அதிகாரமின்றி பணி புரிய விக்குகள் உடன்படவில்லை. எனவே மறுபடியும் அவர் லிவிர்பூலையும், டோரிகளையும் அழைத்தார். வெளிநாடுகளில் பெற்ற வெற்றிகளால் வலிமையடைந்த புதிய மந்திரிசபை, காபினெட்டில் கத்தோலிக்கச் சிக்கலை ஒரு சிறந்த பிரச்சினையாக வைப்பதாகவும் கவுன்சில் ஆணைகளை ரத்து செய்வதாகவும்கூறி, இறுதிமுறையாக கானிங்கைச் சமாதானம் செய்யமுயன்றது. ஆனால் அவர் மடத்தனமாக காமன்சபையில் தலைமையைக் காசில்ரே விட்டுக்கொடுத்தால் ஒழியத் தாம் வெளிநாட்டு விவகாரத்துறையை ஏற்கமுடியாது என்று பிடிவாதம் பிடித்தார். அந்த ஆண்டு நடந்த பொதுத்தேர்தல்களில் அரசாங்கத்தின் வெற்றி மிகுந்தது. அதில் பல விக்கு தலைவர்கள் தோற்றனர். கானிங்கின் ஆதரவாளர்கள் 1813-ல் சிறு பதவிகளை ஏற்றுக் கொண்டனர். அதே சமயத்தில் கானிங் தமது செருக்கைப் புதைத்து தூதுவராக லிஸ்பனுக்குச் சென்றார்.

பிரிட்டிஷ் கட்சிப் பூசல்கள் நடந்த அந்த மாதங்களில் ரஷ்யாவை ஃபிரான்ஸின் அடிமையாக்க தமது அழிவுக்குரிய படையெடுப்பில் நெப்போலியன் ஈடுபட்டிருந்தார். போரிட்டுக் கொண்டே மாஸ்கோவிற்குச் சென்ற அவர் அந்நகரம் வெறுமை யாகக்கிடந்ததைத் தான் கண்டார். அரை மில்லியன் வீரர்களை இழந்து, அவர் நவம்பர் மாதத்தில் பின்வாங்கினார். பொங்கி எழுந்த ஃபிரஷ்யா 1813ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உறுதியான போருக்கான ஒரு ஒப்பந்தத்தை ரஷ்யாவுடன் செய்து கொண்டது.

இங்ஙனம் போரில் பெருந்திருப்பம் ஏற்படுவதற்குப் பிரிட்டிஷ்காரர் முதலில் இடைவிடாது ஏன்றாலும், முறைமுகமாகத்

தான் தொண்டாற்றினர். சிசிலியிலிருந்த சகிக்கமுடியாத போர் போன் கொடுங்கோலாட்சியை முடிவுறச் செய்தற்காக வில்லியம் பெண்டிங் பிரபு அனுப்பப்பெற்றார். அங்கே எடுக்கப்பெற்ற உறுதியான நடவடிக்கைகளினால் அப்பகுதி நீண்டகாலத்திற்கு மத்திய தரைக்கடல் பகுதியில் நமது முயற்சிகளுக்கெல்லாம் அரணாக அமைந்தது. நம்முடைய படை வலிவின் மற்றொரு கோடியிலே ஸ்வீடனின் பட்டத்து இளவரசராக வந்த ஃபிரெஞ்சு தளபதியான பெர்னடட் (Bernadotte) நார்வேயின் அரசைக் கைப்பற்ற விரும்பியபோது, அதனை ஒப்புக்கொண்டதன் மூலமாக அவர் தமது தலைவரோடு முரண்பட்டு நிற்பதற்கான வாய்ப்பு தோன்றியது. அயோனியன் தீவுகளைக் கைப்பற்றியும், ஜானினாவை ஆண்ட (Janina) வீரம்மிக்க அலி பாஷாவுடன் (Ali Pasha) தொடர்பு கொண்டும் ஏட்ரியாடிக் பகுதியிலிருந்தும், பால்கன் பகுதிகளிலிருந்தும் நெப்போலியனுக்கு நெருக்கடி தோற்றுவிக்கப்பெற்றது. மேலும் நமது தூதுவரான ஸ்ட்ராட்போர்டு கானிங் (Stratford Canning) தமது சிறப்பு வாய்ந்த நீண்ட வாழ்க்கையில் முதல் வெற்றியாக 1812ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவிற்கும் துருக்கிக்குமிடையே சமாதானம் செய்துவைத்தார். இவற்றையெல்லாம் செய்த பிறகு நாம் ரஷ்யாவையும், ஸ்பெயினையும் கைவிட்டுத் தம்முடன் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று நெப்போலியனிடமிருந்து வந்த குறிப்பினை மறுக்கவேண்டியதாயிற்று.

தமது போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்துகொண்ட வெல்லிங்டன், 1812ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் கோட்டைவாயில்கள்போல் அமைந்த கியூடாட் ரோட்ரி கோவையும், படஜோஸையும் தாக்கிப்பிடித்தார். பின்னது மிகக் கடுஞ்சேதத்திற்குப்பிறகே கைப்பற்றப்பட்டது. ஜூலை மாதத்தில் சலமான்காவில் (Salamanca) கவனக்குறைவுடன் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மார்மாண்ட் மீது வெல்லிங்டன் பாய்ந்து தாக்கியதிலிருந்து, அவரது நயத்திற நடவடிக்கையின் சரி நுட்பம் வெளிப்படுகின்றது. ஆனால் அவர் மாட்ரிட் நகரில் புகுந்தபோதிலும், அவரது முன்னேற்றத்தை அறிந்த சோல்ட் தெற்கிலிருந்து வந்ததால் அவர் போர்ச்சுகலுக்குப் பின்வாங்க நேரிட்டது. எனினும் இச் செயலால் தெற்கு ஸ்பெயினை ஃபிரெஞ்சுக்காரர்கள் நிரந்தரமாக இழந்தனர். அவர்களது படையில் புதிதாகச் சேர்க்கப்பெற்ற இளைஞர்கள் ரஷ்ய சதுப்பு நிலங்களிலும், ஜெர்மனியிலும் பலியிடப்பெற்றனர்.

அந்த ஆண்டிலும், 1813ஆம் ஆண்டு முழுவதிலும் ஐரோப்பாவை மீட்கும் நமது முயற்சியைக் குலைப்பதாக இருந்தது

அமெரிக்காவுடன் தோன்றிய நேர்மையற்ற போர். உடன்பாடு ஏற்படுதற்கான வாய்ப்பு ஒன்றை கானிங் இழந்தார். பெர்சிவலின் மரணத்தால் ஏற்பட்ட குழப்பத்தினால் மற்றொரு வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதில் தாமதம் உண்டாயிற்று. அப்போது இங்கிலாந்தில் பொது மக்களுடைய எண்ணம் கவுன்சில் ஆணைகளுக்கெதிராக இருந்தது. புரோகாம் பொது மக்கள் கிளர்ச்சியொன்றைத் தலைமை தாங்கி நடத்தினர். அதே சமயத்தில் ரஷ்யா, ஸ்வீடன் போன்ற நமது புதிய நட்பு நாடுகள் நமது முற்றுகையைத் தளர்த்துமாறு வேண்டின. ஆனால், 1812-ல் கவுன்சில் ஆணைகளைத் தள்ளிவைத்ததால் அமெரிக்கப் போர் ஒன்று மூண்டது. உண்மையில் இது அமெரிக்கருடைய உள்நாட்டு அரசியலைப் பாதித்தது. அங்கே ஜனநாயகவாதிகளான ஜெஃபர்ஸனும் (Jefferson) (*1801–1809*), அவருக்குப் பிறகு வந்த மாடிஸனும், உள்துறைச் செயலரான மன்ரோவுடன் சேர்ந்து பொதுவாக பிரிட்டனுக்குப் பகையாக இருந்த ஒரு தேசத்தை பரம பரையைப் பதவியில் நிலைத்திருக்கச் செய்ய உதவியது. நியூ இங்கிலாந்தும், கடலோடு தொடர்பு கொண்ட அரசுகளும் அமைதியை வேண்டி நின்றன என்றாலும், தென் அரசுகள் போரைத் தீவிரமாக ஆதரித்தன. அங்ஙனமே விரிவுக் கொள்கையில் தீவிரமாக இருந்து, இந்தியர்களுடனும், எல்லைப்புற மக்களுடனும் போராடிய மேற்கு அரசுகளும் போரை ஆதரித்தன. இந்தியரையும், எல்லைப்புறத்தவரையும் கனடா தூண்டியதாக அவைகள் குற்றஞ் சாட்டின. கடலோடிகளைப் பிடிப்பதில் பிரிட்டன் விட்டுக் கொடுக்காததனாலும், நெப்போலியன் அளிப்பதாகக் கூறிய சலுகைகளை நம்பி ஏமாந்த நிலையிலும், பிரிட்டனுடனான வாணிபத்தை 1811-ல் மாடிஸன் தடை செய்தார். 1812ஆம் ஆண்டில் அவர் போர்த் தொடுத்திருப்பதாக அறிவித்தார்.

கடலிலே அமெரிக்கர்களின் சக்தியும், அவர்களது திறமையான பீரங்கிப் படையையும், பிரிட்டனுக்குப் பேரிடியாக வந்தன. அவைகளினால் 1600க்கு மேற்பட்ட வணிகக் கப்பல்களையும, பெரிய ஏரிகளையும் பிரிட்டன் இழக்க நேரிட்டது. ஆனால் அவர்கள் டெட்ராய்டையும், வடமேற்குப் பகுதியையும் நெருக்கித் தங்களது சக்தியை மிகுதியாகச் செலவிட்டபோதிலும் செயிண்ட் லாரன்ஸ் மீதும், மாண்ட்ரீல்மீதுமான மிக முக்கியமான முயற்சிகளில் தோல்வியுற்றனர். டோரண்டோவை அவர்கள் கொளுத்தியது இரு இனங்களைச் சேர்ந்த கனேடியர்களை முதல்முறையாகத் தாங்கள் ஒரு தேசீய இனத்தவர் என உணரச் செய்தது. மேலும் அவர்கள் தங்களது சிறு எண்ணிக்கை கொண்டே வியக்கத்தக்க வெற்றிகள் பெற்றனர். கருவிலே திருவுடையரான ஜெனரல்

ஐசக் பிராக் (Isaac Brock) என்பவரால் தூண்டப்பெற்ற அவர்கள் நயாகரா (Niagara) தீவக்குறையை உறுதியாகப் பற்றி நின்றனர். 1814-ல் ஸ்பெயினிலிருந்து அனுபவமிக்க படை வீரர்கள் அவர்களது உதவிக்கு வந்தனர். நமது நாவாய்ப்படை அமெரிக்கக் கடற்கரையை முற்றுகையிட்டது. அந்த ஆண்டின் இறுதியில் மிஸ்ஸிஸிப்பியின் மீதான நமது தாக்குதலை, ஆண்ட்ரூ ஜாக்சன் (Andrew Jackson) என்பார் (New Orleans) முறியடித்த போதிலும், வாஷிங்டனை அழிப்பதற்கான படை ஒன்றைச் சீசாபீக்வரையில் நமது கப்பற்படை கொண்டுசென்றது.

அப்பொழுது அமெரிக்கரின் கடல் வாணிகம் பெரும்பாலும் அழிந்ததாலும், வெல்விங்டனின் பொது அறிவின் செல்வாக்கின் பயனைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தனது கவனம் அமெரிக்கப் போரினால் கவரப்பெறுதல்கூடாது என்று தீர்மானித்து, முந்திய கடுமையான கோரிக்கைகளை விட்டுவிட்டதாலும் சமாதான மாநாடு கூடியது. கடலோடிகளுக்காக ஆள் பிடித்தல் போன்ற போருக்குரிய காரணங்கள் ஐரோப்பாவில் தோன்றிய அமைதி காரணமாகத் தானாகவே நீங்கியதால் இரு நாடுகளும் அவைகளை மறந்துவிட முடிவுசெய்தன. எனவே 1814ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட கெண்ட் உடன்படிக்கையில் அவரவர்கள் இழந்த பகுதிகளை மீட்டுக்கொள்வது என்பதையும், ஏரிகளில் படைகளை வைத்தல், மீன் பிடித்தல், எல்லைகள் போன்ற சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள இணைக்குழுக்களை ஏற்படுத்தவேண்டுமென்பதையும் தவிர வேறொன்றையும் குறிப்பிடவில்லை.

ஐரோப்பாவில் தோன்றிய பேரிடரைவைத்துப் பார்க்கும் போது இவையெல்லாம் ஒருசிறு நிகழ்சியெனக் கூறலாம். 1813ஆம் ஆண்டு ரஷ்ய-பிரஷ்ய ஒப்பந்தத்தை பிரிட்டன் வரவேற்றதோடு அந்நாடுகளுக்கு மானியங்கள் வழங்க உதவியது. ஆனால், மற்றுமொரு தீவிரக் கூட்டிணைப்போ அல்லது பிரிட்டன் இல்லாத ஒரு ஐரோப்பிய உரிமை நிர்ணய ஏற்பாடோ தோன்றலாம் என்பதற்கான அறிகுறிகள் பல மாதங்கள் வரையில் இருந்தன. அந்த ஏற்பாடு பிரிட்டனுக்கு எதிராகவும் இருக்க வாய்ப்பிருந்தது. அப்போதும் ஹனோவர் பிரஷ்யாவிடமிருந்து நம்மைப்பிரித்துவைத்தது. கடலில் நாம் கொண்டாடிய தீவிர உரிமைகளைப் பிறநாடுகள் எதிர்த்தன. இவற்றைவிட ஆஸ்திரியாவின் எண்ணப்போக்கு இன்னல் நிறைந்ததாக இருந்தது. போலந்தில் ரஷ்யாவின் ஆதிக்க எல்லை விரிவடைவதையும், ஜெர்மனியின் உரிமைக்கோரிக்கைகளையும்கண்டு மெட்டர்னிக் (Metternich) அச்சங்கொண்டார். இங்கிலையைச் சரிக்கட்டுவதற்கு

ஃபிரான்ஸ் இருப்பது நல்லது என அவர் நினைத்தார். மேலும் ஃபிரான்ஸிடமிருந்து இத்தாலியில் பங்குகொள்வதற்கும், துருக்கியைக் கூறுபோட்டுக்கொள்வதற்கும் அவருக்கு வாய்ப்பிருந்தது. சமாதானம் செய்துவைக்க ஆஸ்திரியா முன்வந்தபோதிலும், ஸ்பெயினின் சுதந்திரம் போன்ற பிரிட்டனின் தனிச் சிறப்பான நோக்கங்களைக் கீழ்நாடுகள் புறக்கணித்தன. அதே சமயத்தில் பேரம் பேசும்போது, நமது குடியேற்ற வெற்றிகளையெல்லாம் பணயமாக வைக்கவேண்டுமென்று அவை எதிர்பார்த்தன. லீப்ஸிக்கில் (Leipzig) நேசநாடுகள் பெற்ற வெற்றிக்குப் பிறகும் அக்டோபர் மாதத்தில் ஃபிரான்ஸின் இயற்கை யெல்லைகளாக அமைந்த ஆல்ப்ஸையும், ரைனையும் அங்நாட்டிற்கு அளிப்பதாகக்கூறின.

நெப்போலியனுடைய செப்பிடு வித்தையும், குருட்டுப் போக்கும், வெல்லிங்டனுடைய வெற்றிகளும், வெளிநாட்டு விவகார அமைச்சராக இருந்த சிறப்புமிக்க காசில்ரேயின் உறுதியும், இத்தகைய இடர்மிகுத்த போக்கைத் தடுத்ததோடு, மாற்றியமைத்தன. 1805-ல் எந்த அரசு ஏட்டின்மீது பிட் தம்மைக் கலந்தாரோ, அந்த ஏட்டின் அடிப்படையைக் காசில்ரே கடைப் பிடித்தார். அந்த ஏட்டில் 1798ஆம் ஆண்டில் கிரன்வில் வெளியிட்ட யோசனைகள் அடங்கியிருந்தன. "பெருங் கூட்டங்கள்" தான் பிரான்ஸைக் கட்டுப்படுத்த முடியுமென்று அந்த ஏட்டின் வாதம் அமைந்தது. அப்படியானால் பிரஷ்யாவின் எல்லையை ரைன் ஆற்றிற்கு மேற்கே கொண்டுவர வேண்டும். ஆஸ்திரியாவை இத்தாலியில் வலிமையடையச் செய்யவேண்டும். அதைப்போன்றே சார்டினியாவையும் உறுதிசெய்ய வேண்டும். இந்த அடிப்படையில் "இயற்கை எல்லைகள்" தேவைக்குமேல் விரிவடையும். மேலும் ஸ்பெயினுக்கும், போர்ச்சுகலுக்கும், சிசிலிக்கும், ஸ்வீடனுக்கும் நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது விடமுடியாது. அதைப்போலவே ஐரோப்பாவின் உரு நமக்குத் திருப்தி அளிக்காதவரையில் நாம் கைப்பற்றிய குடியேற்றங்களை விட்டுக்கொடுக்கவும் முடியாது. இறுதியாகப் பிட்டினுடைய அனுபவம் காட்டிய முடிவையே காசில்ரே கொண்டார். அதன்படி பேச்சு வார்த்தை பொதுவாக நடைபெற வேண்டும், சமாதானத்திற்குப் பிறகு பாதுகாப்பிற்கான உறுதி மொழி பெறவேண்டும்.

ஆஸ்திரியாரின் நேர்மையில் ஐயங்கொண்டு, நேசநாடுகளுக்கிடையே இருந்த பூசல்களினாலும், நமது அரசியல் தூதுவர்களின் ஆற்றலற்ற தன்மையைக் கண்டும் அஞ்சிய காபினெட் காசில்ரேயையே செயலாற்ற வேண்டிய இடத்திற்கு 1814ஆம் ஆண்டு

ஜனவரித் திங்களில் அனுப்பி வைத்தது. ஃபிரான்ஸை ஒரு வரம் பிற்குள் வைப்பதற்கும், ஆண்ட்வெர்ப்பைக் காப்பதற்கும், வாக் குறுதிகளை மீட்பதற்கும் வேண்டிய வலிமை பொருந்திய ஆயுதங்கள் அவர் கையில் இருந்தன. அவைகளாவன, மானி யங்கள் வழங்குதற்கென்று 5 மில்லியன் பவுன்களும், 200 பெரும் போர்க்கப்பல்களும், 300 சிறு பீரங்கிக் கப்பல்களும், வெல்லிங்ட னுடைய படையுமாகும்.

நடைமுறையில் ஸ்பெயினின் வடகிழக்குப் பகுதி ஃபிரஞ்சுக் கார்கள் கையில் இருந்தது. சிசிலியிலிருந்து தாக்கவேண்டு மென்ற தமது கடமையை மறந்த பெண்டிங், இத்தாலியில் கட்டுப் பாடுகளைத் தளர்த்தவேண்டுமென்ற தமது குறிக்கோளை நிறை வேற்றத் தொடங்கியது ஒரு விதத்தில் பிரஞ்சுக்காரருக்கு உதவி யாக இருந்தது. ஆனால் தளவாடங்களைப் பெறுவதில் அவர்களுக் கிருந்த தொல்லைகள் ஏராளம். அவர்கள் கொரில்லாக்களை மிகுந்த இடர்ப்பட்டு துரத்திக்கொண்டிருந்த சமயத்தில் வெல்லிங் டன் தமது கடல் தளத்தை வடக்கிருந்த சான்டண்டருக்கு (Santander) மாற்றி, 1813ஆம் ஆண்டு மே மாதத்தில் வியக்கத்தகு வேகத்தில் ஸ்பெயினுக்குள் புகுந்தார். டோரோவைக் (Douro) கடந்து சென்று, ஃபிரெஞ்சுக்காரரை வலப்புரம் திருப்பி, ஜூன் மாதத்தில் சோசப்பின் படையை விட்டோரியா (Vittoria) என்னு மிடத்தில் வீழ்த்தினர். மிக விரைவிலேயே பிரன்னிஸ் மலையி லுள்ள செயிண்ட சபாஸ்டியன் (Saint Sabastian), பாம்பிலூனை (Pampe-luna) ஆகியவற்றை முற்றுகையிட்டார். பாதுகாப்பில் சோல்ட் மிகுந்த திறமையைக் காட்டியபோதிலும் பிரிட்டிஷ் படைகள் நவம்பர் மாதத்தில் கரடுமுரடான பகுதிகளின் வழி யாகச் சென்று பிடஸோவாவைக் கடந்து (Bidassoa) ஜீன் டி லஸ்ஸிற்குச் (Jeen De Luz) சென்றன. 1814ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் டூலூஸில் நுழைந்தன.

இங்ஙனம் கிடைத்தவெற்றிகள் தெற்கிலே காசில்ரேயிக்கு ஆதரவளித்தன. ஆரஞ்சில் தோன்றிய கலகம் ஹாலந்தை விடுவிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வந்ததற்கு ஒருவழி காட்டியாக அமைந்தது. அச் சமயத்தில்தான், நெப்போலியன் முடிதுறப்பதில் முடிந்த நெருக்கடியான மாதங்களில், சாடில்லன் (Chatillon) மாநாட்டில் காசில்ரே போராடிக்கொண்டிருந்தார். அங்கே மெட்டர்னிக்கின் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளும் விருப்பத்திற்கும், பர்ஞடட்டை ஃபிரான்ஸின் மன்னராக்கவேண்டும், அல்லது ஃபிரான்ஸின் அரசியல் நிர்ணயச் சட்ட சபையைக் கூட்டவேண்டுமென்றும் கூறிய சார் மன்னரின்

இடர்மிகுந்த மாற்றுயோசனைகளுக்கும் எதிராக அவர் போராட வேண்டியிருந்தது. சீன் (Seine) ஆற்றங்கரையில் நெப்போலியன் பெற்ற இறுதி வெற்றிகளுக்குப்பிறகு ஏற்பட்ட சாமாண்ட் (Chaumont) ஒப்பந்தம் அவரால் உருவானது. அதன்படி நேச நாடுகள் நான்கும் தனித்தனியாக 150,000 படைகளைப் போருக்கு அனுப்பவேண்டும். அதற்குமேலும் ஆண்டிற்கு 5 மில்லியன் பவுன் பிரிட்டன் மானியமாக வழங்கவேண்டும். மேலும் நேச நாடுகள் இருபது ஆண்டுகளுக்காக பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்து கொள்ளவேண்டும். அச் சமயத்தில் ஃபிரான்ஸின் எல்லைகள் எவை என்பதையும், அதற்கான உரிமைக்கட்டுப்பாடுகளை அந் நாட்டில் யாருடன் செய்துகொள்வது என்பதையும், போரின் போக்குதான் முடிவு செய்யவேண்டும். முதலாவதாகக் குறிப் பிட்ட எல்லையைப் பொறுத்தவரையில் படை முன்னேற்றம் தந்த தூண்டுதலும், காசில்ரேயின் நெருக்கமும் நேசநாடுகளின் நேர்மையில் ஆஸ்திரியா கொண்டிருந்த ஐயப்பாட்டினை ஒட்டின. எனவே 1792ஆம் ஆண்டில் இருந்ததற்குமேல் எதையும் ஃபிரான்ஸிற்கு அளிக்கக்கூடாது என்பதை ஆஸ்திரியா ஏற்றுக் கொண்டது. இதற்கு நெப்போலியன் உடனடியாக ஒப்புதல் தந்திருந்தால் அவர் அரியணையில் இருப்பதை ஆஸ்திரியாவும்; இங்கிலாந்தும் ஏற்றுக்கொண்டிருக்கும். ஆனால், அவர் பெல்ஜியத்தையும், ரைன் ஆற்றுப்பகுதியையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. மேலும் அவரது நேர்மையற்ற தன்மை, நிலைமையை மோசமாக்கியது. உடன்பாடுகாண்பது இயலாது என்று தீர்மானமானபிறகு, நெப்போலியனுக்கும், போர்போன் முன்னிலை மீட்சிக்கும் இடையே பொதுநிலை ஏதும் கிடையாது என்பதை காசில்ரே தெளிவாக உணர்ந்தார். காபி னெட்டிற்கும் முன்னதாகவே பிரிட்டிஷ் மக்களின் பொதுக் கருத்து, போர்போன்களுக்கு ஆதரவாக இருந்தது. போர் போன் குலத்தைச்சேர்ந்த சில இளவரசர்கள் தங்களுடைய குலத்தின் வெள்ளைக் கொடியை உயர்த்த போர்டோவில் (Bordeaux) தோன்றினர். இவைகளோடு பாரீஸ் அரங்கில் டாலிராண்டின் (Talleyrand) செயலாட்சியும், ஃபிரெஞ்சுப் படையின் சரிவும், பல படைத்தலைவர்களின் துறப்பும், நேச நாடுகள் ஃபிரெஞ்சு மக்களின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டன எனக் கூறுவதற்கு வாய்ப்பளித்தன. நெப்போலியன் ஏப்ரல் மாதத்தில் முடிதுறந்து, தமக்காக எல்பாவில் அமைந்த கூண்டிற்குள் சிறையானார். மே மாதத்தில் நேசநாடுகள் பதினெட்டாம் லூயினுடனை பாரீஸ் உடன்படிக்கையை கைச் சாத்திட்டன.

போர்போனிய பிரான்ஸிற்குத் தாராள முன்னிலை மீட்சி அளிப்பதில் பிரிட்டிஷ் கொள்கையும், ரஷ்யக் கொள்கையும் ஒன்றிணைந்தன. உடன்படிக்கையில் போர் இழப்பீடுகள் கோரப் படவில்லை. போரின் விளைவாக பிரிட்டன் 600 மில்லியன் பவுன் செலவிட்டு இருந்தபோதிலும் அதனுடைய நலன்கள், கிழக்கிலும், மேற்கிலும் அதனுடைய உயிர்நாடியாக இருந்த மால்டா, மரீஷியஸ், செயின்ட்லூசியா, டொபாகோ (Tobago), நன்னம்பிக்கை முனையிலிருந்த டச்சுக் குடியேற்றங்கள், டெமராரா ஆகிய வற்றோடு நின்றது. டச்சுக்காரர்கள் தங்களுடைய குடியேற்றங்கள் சிலவற்றை இழப்பதற்கு ஈடாக 2 மில்லியன் பவுன்களைப் பெறவேண்டும். அடிக்கடி அறிவிக்கப் பெற்ற "நேர்மையான சக்திச் சமநிலை"க்காக தெற்கில் ஷெல்ட் வரையிலாவது ஹாலந்து விரிவடையவேண்டும். ஜினோவாவைச் சார்டினியா பெற்றது. வெனீஷியாவையும், லம்பார்டியின் ஒரு பகுதியையும் ஆஸ்திரியா பெற்றது. ஆனால், போலந்தின் எதிர்காலம், ஜெர்மனி, நேபிள்ஸில் இருந்த முராதின் முடியாட்சி போன்ற இடர்மிகுந்த பிரச்னைகள் பிற்காலத்தில் வரும் மாநாட்டிற்கு விடப் பெற்றன.

இறுதியில் போரின் பயங்கரங்கள் போயினபோல் தோன்றின. எல்பாவில் நெப்போலியன் மல்பரி மரங்களை வளர்த்துக்கொண்டிருந்தார். காமன்ஸ் சபை காசில் ரேயை ஆரவாரத்துடன் வரவேற்றது. நேசநாட்டரசர்கள் லண்டன் நகரில் நனிவிருந்துண்டனர். எனினும் செப்டம்பர் மாதத்தில் வியன்னாவில் மாநாடு கூடியபோது, அமைதி இன்னும் எட்டாக் கனியாக இருந்தது என்பது தெரியவந்தது. கிளர்ச்சிகளின் மூலமாக அமைதியை ஏற்படுத்தவோ, நிலைநாட்டவோ முடியாதென்றும், அதற்கு "நமது நம்பிக்கைக்குரிய அரசர்களிடம் உள்ள கட்டுப்பாடு கொண்ட படைகள்" தேவை என்றும் காசில்ரே எழுதினர். அன்னியப் படை உதவிகொண்டு போர்போன் ஆட்சியேற்படுவதை போனபார்ட்டின் ஒரு மில்லியன் படைவீரர்கள் வெறுத்தனர். மேலும் போலந்து முழுவதும் தமக்கே கிடைக்கவேண்டுமென்று கோரிய சார் மன்னரின் பேராசை, நேச நாடுகளின் ஒற்றுமையைக் குலைப்பதாக இருந்தது. இங்ஙனம் ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய இருபுறமிருந்தும் வந்த அபாயத்திற்கெதிராக ஆஸ்திரியாவையும், பிரஷ்யாவையும் இடைத்தடை நிலங்களாக்குவதே காசில்ரேயின் நோக்கமாக இருந்தது. எனினும் போலந்தில் தனக்குக் கிடைக்கும் பகுதியை இழப்பதாக இருந்தால், சாக்ஸனி முழுதும் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று பிரஷ்யா வற்புறுத்தியது.

அப்படியானால் அது அந்நாட்டை ஆஸ்திரியா பொஹிமியாவின் ஒரத்திற்கே கொண்டு சென்றுவிடும். பிரிட்டிஷ் வற்புறுத்தலின் பேரில் மெட்டர்னிக் இதற்குச் சம்மதித்தார். அதுவும் தமது நாட்டின் பழைய போலந்து எல்லையை நிலைநாட்டுவதற்கும், ஜெர்மனியின் மற்ற பகுதிகளில் தமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பிரஷ்யா உதவவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் ஒப்புக்கொண்டார். ஆனால் பிரஷ்யா மன்னர் சாருடன் சேர்ந்துகொண்டார். 1814–15ஆம் ஆண்டுகளில் நேச நாடுகளுக் கிடையே போர் மூளும் அபாயம் இருந்தது. தமது பகைவ ரிடையே பிளவினைத் தோற்றுவிக்க டலிராடிற்கு இது ஒரு பொன்னை வாய்ப்பாகும். ஜெர்மனியிலிருந்த சிறுசிறு நாடுகள் மெட்டர்னிக்குடன் சேருவதற்கும், பிரிட்டனில் உள்ள விக்கு எதிர்க் கட்சியினர் போலந்து தேசிய உரிமைக்காக கூக்குரல் எழுப்பவும் வாய்ப்பளித்தது.

பிரஷ்யாவின் போர்க் கட்சி போர்ப் பயத்தைக் கிளப்பிய போது, அதனை எப்படியாகிலும் தவிர்க்க வேண்டுமென்று காசில் ரேயிக்கு காபினெட் ஆணைகள் விடுத்தது. அப்போது அவர் வேறெந்த பிரிட்டிஷ் அமைச்சரும் அதுவரையில் ஏற்றுக்கொள் ளாத பெரும் பொறுப்பினைத் துணிவோடு ஏற்றுக்கொண்டார். ஜனவரி மாதத்தில் ஆஸ்திரியாவுடனும் பிரான்சுடனும் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார். பவேரியாவும் ஹாலந்தும் அதில் சேருவதற்காக அழைக்கப்பெற்றன. அதன் படி பிரஷ்யத் தாக்குதல் தோன்றுமானால் அவைகள் இணைந்து செயலாற்ற வேண்டும். இது காசில்ரேயின் தெளிவான வெற்றி யாகும். பிரஷ்யா விட்டுக்கொடுத்து சாக்ஸனியில் மூன்றில் இரண்டு பங்கே பெற்றது. ஆனால் ரஷ்யாவிடமிருந்து தார்னோப் (Thorn) பெற்றதோடு ரைன் ஆற்றின் இடது கரையையும் அது பெற்றது. தனிப்பட்ட அமைப்புக்கள் இருக்கும் என்ற வாக்குறு தியின் பேரில் போலந்தின் பெரும் பகுதி ரஷ்யாவிற்குக் கிடைத்தபோதிலும், கிராகவ் (Cracow) உரிமை பெற்ற நகர மாகியது. டலிராண்டும் தமக்குச் சேரவேண்டியதைப் பெற்றார். எப்படி எனில் நேபிள்சிலிருந்து முராதை வெளியேற்றவேண்டு மென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பெற்றது.

ஆனால், இதனைத் தவிர்ப்பதற்கு வேண்டிய முன்னேற்பாடு களை முராத் மேற்கொண்டார். காசில்ரே இங்கிலாந்திற்குத் திரும்பிவந்துகொண்டிருந்தபோது 1815ஆம் ஆண்டு மார்ச் முதல் தேதியன்று நெப்போலியன் பிரான்ஸின் தென்கரையில் வந்திறங் கினர். ஒரு வாரத்திற்குள் அவருடைய தளபதிகளில் பலரும்,

சேனையில் பெரும் பகுதியினரும் அவருடன் சேர்ந்துகொண்டனர். அதே சமயத்தில் பதினெட்டாம் லூயி கெண்டிற்குத் தப்பியோடினர். இவ்வெதிர்ப்புரட்சி மக்களைச் சார்ந்ததாக இருந்தால் தான் வெற்றி பெறும் என்பதை நெப்போலியன் உணர்ந்திருந்தார். 1799ஆம் ஆண்டு இருந்த தமது பாகத்தையே மறுபடியும் ஏற்றார். அரசியல் சட்டம் வகுப்பதாகக் கூறினர். ஃபிரெஞ்சுக் காரரில் பெரும்பான்மையினர் விரும்பிய அமைதியைக் காக்கத் தாம் விழைவதாக வலிந்துரைத்தார். அப்படியானால் தனது மரபிற்கு மாறுக பிரிட்டன் பிற்போக்குவாதிகளான போர்போன்களை ஃபிரான்ஸின்மீது திணிக்கவா முயன்றது?

அத்தகைய உணர்வில்தான் திரும்பவும் போர் மூளுவதை கிரேவும், கிரன்விலும், வெல்லெஸ்லியும், விட்பிரட்டும் எதிர்த்தனர். ஆனால் போர்போன்களுக்குச் சாதகமாகப் பேச நேச நாடுகள் தயங்கியபோதிலும், நெப்போலியனுக்கு எதிராக ஒரே குரலெழுப்பின. நெப்போலியனைப் பொது மக்களின் நீதியின் முன் நிறுத்தவேண்டுமென்று அறிவித்து, சாமாண்ட் ஒப்பந்தத்தை மீட்டன. மேலும் ஒன்று குவியும் படையெடுப்பிற்கு ஆயத்தமாயின. "ஐரோப்பாவை மறுபடியும் ஒன்று திரட்டும் நம்பிக்கையெல்லாம் நாசமாக்காமல்" இங்கிலாந்து பிரிந்து நிற்க முடியாது என்று லிவர்பூல் கூறினர்.

பிறகு நெப்போலியன் தாக்குதல் செய்யத் தேர்ந்தெடுத்த காலத்திற்கும், இடத்திற்கும் வலுவான காரணங்கள் உண்டு. அப்போது தாக்குதல் தொடங்கினால் நேச நாடுகளின் பெரும்படை திரண்டு தாக்குவதற்குள் அவர் முந்திக்கொள்ளலாம். ஆர்வமிக்கத் தமது படைவீரர்களுக்குப் பரிசு வழங்குவதோடு பாரீஸில் இருந்த சந்தேகப் பிராணிகளின் வாயையும் அடக்கலாம். பெல்ஜியத்தில் வெற்றி பெற்றால் அதிக ஆயத்தமாக இருந்த அவரது இரு பகைவரை அழிக்கலாம். அவர் தமது பழைய பெல்ஜியக் குடிகளின் ஆதரவைப் பெறலாம், மேலும் அநேகமாக லிவர்பூலின் மந்திரிசபை அதனால் வீழ்ச்சியுறலாம் என்று அவர் எண்ணினார்.

படைக் குறைப்பும், அமெரிக்கப் போரும் பிரிட்டிஷ் படைகளை மெலியச் செய்தன. எனவே வாடர்லூவில் (Waterloo) தங்கிய வெல்லிங்டன் வசம் இருந்த 67,000 வீரர்களில் ஏறக்குறைய 21,000 பேர்களே பிரிட்டிஷ்காரர்கள். பிரஷ்யரும், பிரிட்டிஷ் காரரும் ஆஸ்டண்டிலிருந்து லீஜ்வரை இருந்த 150 மைல்களில் பரவி இருந்ததை நெப்போலியன் கண்டார். அவருடைய திறமையான முன்னேற்றத்தினால் தயாராக இல்லாத அவர்கள்

திணறினர். அவர் எப்பக்கம் செல்லுகின்றார் என்பதை அவர்கள் அறியாத நிலையில் ஜூன் மாதம் 14ஆம் தேதி அவ்விரு படைகளின் இணைப்பு இருந்த சார்லிராயில் (Charleroi) ப்ரஸல்ஸிற்கு ஆனசாலை செல்லுமிடத்தில் தாக்கினர். அவரது சொந்த சக்தியும், படைத் தலைவர்களின் மீதான பிடிப்பும் பழைய உயர் நிலையில் இல்லாதபோதும் 16ஆம் தேதி நடந்த இரு கடுமையான சண்டைகளில் அவருக்குப் பாதி வெற்றி கிட்டியது. அவர் பிளச்சருடைய படையை லிக்னி (Ligny) என்னுமிடத்தில் கடுமையாகத் தாக்கி, சேதம் விளைவித்து வடகிழக்காக விரட்டினர். ஆனால், குவாட்ரே ப்ராஸ் (Quatre Bras) என்னுமிடத்தில் நேயின் (Ney) தலைமையில் இருந்த அவரது இடது அணியின் ஒத்துழைப்பு அவர் எதிர்பார்த்தமாதிரி கிடைக்கவில்லை. நேயின் காலதாமதத்தினால் அவர் ஒரு தீவிரமான போரில் ஈடுபடவேண்டியதாயிற்று. அதுபோது தமது வலப்புற அணியைப் பக்கவாட்டில் தாக்கி, ஆங்கிலக் கால்வாய்த் துறைமுகங்களிலிருந்து துண்டித்துவிடுவார்களோ என்னும் அச்சம் கொண்ட வெல்லிங்டன், நிலை கொண்ட 7,000 படையினரைக்கொண்டே போரைத் துவக்கினர். இரவு வருவதற்குள் படைப்பெருக்கம் வந்ததால் அவரது சேனையின் எண்ணிக்கை 30,000 பெருகியபோதிலும் அது குழப்பமான போராகவே இருந்தது. இருதரப்பினரும் கலைப்படையும் வரை தொடர்ந்து போர் நடந்தது. பிரஷ்யர்களோடு தொடர்பு கொள்வதற்காக வெல்லிங்டன் பின்வாங்குவது அவசியமாயிற்று. ஆனால் 17ஆம் தேதி பின்வாங்கியபோது சிலசமயம் கேடு நேருவதாக இருந்தது. நேயின் கையாலாகத்தனத்தினால்தான் வெல்லிங்டன் வெற்றிகரமாகப் பின்வாங்க முடிந்தது.

இப்போது வெல்லிங்டன் பிரபு பிரஷ்யப் படைப் பிரிவு ஒன்றின் உதவி கிடைத்தாலும் தாம்போரிடத் தயார் என்று பிளச்சரிடம் அறிவித்தார். தாம் நிலைகொள்ள வேண்டிய இடத்தையும் குறிப்பிட்டார். வாடர்லூ கிராமம் அமைந்த செய்க்னீஸ் (Soignies) காட்டிற்குள், ப்ரஸெல்ஸிற்குச் செல்லும் சார்லிராய் நெடுஞ்சாலை, மாண்ட் செயிண்ட் ஜீன் (Mont-St-Jean) மேட்டு நிலத்தைக் கடப்பதற்காக மெல்ல மெல்ல உயருகின்றது. இந்த முகட்டிலிருந்து (Ridge) வடக்காக உள்ள நிலம் தாழ்ந்து சென்று மறைந்துகொள்ள வாய்ப்பளித்தது. தென்புறத்தில் புதர்களினாலும், கரைகளினாலும் பாதுகாக்கப்பெற்ற மண்பாதை ஒன்று கிழக்கு மேற்காகச் சென்றது. அதற்குமுன்னால் சரிவின் மத்தியில் லா ஹே செயிண்ட்டின் (La Haye Sainte) பண்ணைக் கல்வீடும், கோட்டை வீடும், ஹோகோ மாண்ட்காடும் இருந்தன. பிரிட்டிஷ் படையின் வலப்புற அணிக்கு சில ஆயிரம் கெஜ தூரத்தில் முன்

புறத்தில் வலிவான புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்பெற்றன. சோய்க்னீஸுக்குப் பின்னும், கிழக்கிலும் காடுகள் நிறைந்திருந்தன. ஆனல் சரிவிலும், பள்ளத்தாக்கிலும் தானியம் நிறைந்திருந்தது. அப்போது பெய்த கடுமையான மழையினல் பயிர்கள் பாழ்பட்டு நின்றன. மாண்ட் செயிண்ட் ஜீனின் தெற்கே சுமார் 1,300 கெஜ தூரத்தில் மற்றுமொரு முகடு இருந்தது. அதன்மீது தான் லா பெல்லி அலெயன்ஸ் (Law Bellie Alliance) என்னும் விடுதி நின்றது. இதுவே ஃபிரெஞ்சுப் படையின் மையமாக இருந்தது. அதன் பின்னேதான் ஃபிரெஞ்சுக்காரர் படை இரவைக் கழித்தது.

18ஆம் தேதி ஞாயிறு காலே மந்தமாகவும், மழையுடனும் விடிந்தது. அப்போது இரு படையினருமே தங்களுடைய முழு பலத்தையும் சேகரித்துக் கொள்ளவில்லே. அப்போதும் தமது வலப்புறத்திலிருந்து தாக்குதல் உண்டாகுமெனக் கருதிய வெல்லிங்டன் வடமேற்கே பத்துக்கல் தொலேவிலுள்ள ஹால் என்னுமிடத்தில் 17,000 வீரர்களே ஒதுக்கி வைத்தார். ஆனல் நெப்போலியன் இதைவிடத் தவருன இரு யூகங்கள் கொண்டிருந்தார். மறுபடியும் உடனே போர் புரிய முடியாத அளவிற்குப் பிரஷ்யர்கள் உள்ள உறுதி தளர்ந்திருப்பார்கள் என நம்பினர். மோசமான உளவினல் தவருக எண்ணி, பிரஷ்யர்கள் லீஜிற்கும் மியூஸிற்கும் பின்வாங்கினர் என்றும் நம்பினர். அதற்கு மாருக அவர்கள் பிரிட்டிஷ் படைகளின் கிழக்கே சுமார் பத்துக் கல் தொலேவில் டைல் (Dyle) ஆற்றின் மீதிருந்த வாவர் (Waure) என்னுமிடத்தில் கூடினர். இதற்கிடையில் நெப்போலியன் பிரஷ்யரைப் பின் தொடர்வதற்கென்று 30,000 வீரர்களுடன் கீரோச்சியைப் (Grouchy) பிரித்து அனுப்பினர். அதைச் செய்வதற்கு நெருக்கடியான இருபத்தி நான்கு மணி காலதாமதம் செய்தார். போர்க்களத்தில் வெல்லிங்டன், 74,000 படைவீரர்களுக்கெதிராக 67,000 வீரர்களேயும், 246 பீரங்கிகளுக்கெதிராக 184 பீரங்கிகளேயும் கொண்டு நின்ருர்.

இருதரப்பினரும் காலத்திற்காகப் போராடினர். அது நம்பிக்கை இழந்த போராக இருந்தது தமது வாழ்நாளில் கண்ட, பேரளவில் இழந்த ஒரு பெரும் போராகவே இருந்தது என்று மறுநாள் வெல்லிங்டன் எழுதினர். 11-35 மணிக்கே பீரங்கிகள் முழங்க ஆரம்பித்தன. ஆனல் 4-30 மணிக்குத்தான் ஃபிரெஞ்சுப் படையின் வலப்புறத்தையும், பின்புறத்தையும் பிளச்சர் தாக்கத் தொடங்கினர். மற்றெரு பிரிஷ்யப் படைப்பிரிவு 7 மணியளவில்தான் பிரிட்டிஷ் படையின் இடப்புறத்தில் அணி

வகுத்து நின்றது. பிரிட்டிஷ் படை இருமுறை தோற்றதைப்போல் தோன்றியது. ஒருமுறை நண்பகலுக்குப் பிறகு ஃபிரெஞ்சுக் காரர் சாலேச்சந்திப்பை அடைந்தனர். ஆனல் பெரும் குதிரைப் படைத் தாக்குதலால் அங்கிருந்து அவர்கள் துரத்தப்பெற்றனர். மறுமுறை 7 மணியளவில் நமது படை நடுவில் ஒரு பிளவை ஏற்படுத்திய லா ஹே-செயின்டின் வீழ்ச்சி நேர்ந்தது. ஆனல் அந்த ஃபிரெஞ்சு வெற்றி காலங்கடந்துவந்தது.

ஃபிரெஞ்சுப் படையினர் எப்போதையும்விட பெருவீரத் துடன் போர் புரிந்தனர். ஆனல், அவர்களது தலேமைப் பீடமோ, அவர்களது போர்முறைத்திட்டமோ போற்றுதற் குரியனவாக இல்லே. ஃபிரெஞ்சுக்காரர் ஹோகோ மாண்டை மறைப்பது அல்லது பீரங்கிப்படை கொண்டு அழிப்பது ஆகிய இரண்டில் ஒன்றைச் செய்வதற்குப்பதிலாக பல்லாயிரக் கணக்கான காலாட்படையினரைப் பயன்படுத்தி, தொடர்ந்த சண்டையில் ஒரு திருப்பமாகக் கொள்ளவேண்டுமென்று நெப்போலியன் எண்ணியதற்கிணங்கச் செயலாற்றினர். மேலும் பரவலான பிரிட்டிஷ் பீரங்கி அணிக்கு முன்னல் திரளான அணிகளேக்கொண்டு தாக்கும் தவற்றினே ஃபிரெஞ்சு காலாட் படை இழைத்தது. இறுதியாக அவசரப்பட்டு உரிய காலத் திற்கு முன்பே அனேகமாக குதிரைப்படைகள் அனேத்தையும் நே என்னும் ஃபிரெஞ்சு தளபதி போரிலீடுபடுத்தினர். லா ஹே, ஹோகோமாண்ட் ஆகியவற்றிற்கிடையே குறுகிய போர்முனேயில் சிதறுத பகைக் காலாட் படைகளுக்கும், அணிவரிசை வேட்டிற்கும், (Enfilading Fire), துப்பாக்கி ஈட்டிகளுக்கு கெதிராக நான்கு தாக்குதல்களே நிகழ்த்தினர். இவைகள் சேர்ந்து பின்னடையும் வரையில் தமது காலாட் படையைக் கொண்டு மறுபடியும் தாக்கவேயில்லே.

அவர் லாஹேவைக் கைப்பற்றியதற்கான தாக்குதலே மேற் கொண்டபோது பிரஷ்யர்கள் வந்ததால், அந்த வெற்றி மேலும் காலங்கடந்ததாக இருந்தது. ஏனெனில் நெப்போலியன் தமது வலப்புறமிருந்த பிளச்சரை விரட்டுதற்குச் சில காவற்படை யினரைப் பயன்படுத்த வேண்டியிருந்ததால் லாஹேவிற்குப் படைப்பெருக்கம் அனுப்பமுடியவில்லே. அதேசமயத்தில் மற்றொரு பிரஷ்யப்படை ஆங்கிலேயருக்கு இடப்புறம் வந்து சேர்ந்ததால், தமது படைகளே, பிளக்கும் நடுஅணிக்கு மாற்று வதற்கு வெல்லிங்டனுக்கு வாய்ப்பு கிட்டியது. இங்ஙனம் ஒலிமை செய்யப்பெற்ற முனேயில்தான் நே தமது காலாட் படைகளேக்கொண்டு இறுதித்தாக்குதல் நடத்தினர். கதிரவன்

மலேவாயில் வீழ்ந்தான். 8-15 மணிக்குத் தமது படைகள் முன்னேறவேண்டுமென்று வெல்லிங்டன் பிரபு ஆணையிட்டார். ஒன்பது மணியளவில் பின்வாங்கிய ஃபிரெஞ்சுப் படை முறியடிக்கப்பெற்றது. பிரிட்டிஷ் படையில் இறந்தவரும், காயமுற்றோரும் ஏறக்குறைய 15,000 ஆக இருந்தனர். பிரஷ்யர்கள் 6000 பேரையும், ஃபிரெஞ்சுக்காரர் 25,000 பேரையும் இழந்தனர். மேலும் பல்லாயிரக்கணக்கானவர் சிறைப்பட்டனர்.

தமது மகனுக்காதரவாக நெப்போலியன் முடிதுறந்ததும், நேச நாடுகளின் வேகமான முன்னேற்றமும், பாரீஸ் நகரத்தின் நம்பிக்கையிழந்த நிலையும் டலிராண்ட், போச்சி (Fouche) ஆகியவரின் சூழ்ச்சி, போன்றவை போர்போன்களின் இரண்டாவது முன்னிலை மீட்சியை எளிதாக்கின. ஜூலை மாதத்தில் ரோச்சி போர்டில் பிரிட்டிஷ் கப்பல்களிடம் நெப்போலியன் சரண் புகுந்தார். அங்கிருந்து அவர் மிகத் தொலைவிலுள்ள செயிண்டஹெலினா தீவிற்குக் கைதியாக அனுப்பப்பெற்றார். எனினும் சார் மன்னரின் உதவியுடன் பிரிட்டன் ஃபிரான்சுடன் செய்துகொண்ட ஏற்பாடு அப்படியே நின்றது. பிரிட்டன் என்று இல்லாவிட்டாலும், காசில்ரேயும், வெல்லிங்டனும் அதிக பங்கு கொண்ட ஏற்பாடு அதுவாகும். நேச நாட்டுப் படைகள் கொள்ளையிலீடுபட்ட நேரத்தில், ஆல்ஸாஸ் லோர்ரைன், சார் பகுதி, ஆகிய மட்டுமின்றி எல்லா வலிமையான கோட்டைகளை ஜெர்மானியர் கோரிய அதே சமயத்தில், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு அளிக்கப்பெற்ற வாக்குறுதிகளை வெல்லிங்டன் சுட்டிக் காட்டினார். மேலும் ஃபிரான்ஸின் உரிமைகளைப்பறித்து அதனை அடக்கியாண்டால், அது புரட்சியை வளர்க்குமென்றும் வாதாடினார். 'உலகில் அமைதியைத் திரும்ப நிலைநாட்டுவதே நமது முதல் குறிக்கோளென்று' கூறிய காசில்ரே, வல்லரசு ஒன்றினை அடியோடு விலக்கும் தவற்றைக் கண்டித்தார். மேலும் ரஷ்யாவின் பெருவலிக்கெதிராகச் சமன் செய்யும் சக்தியாக ஃபிரான்சை உருவாக்கலாம் என்பது அவரது நம்பிக்கையாகும்.

பிரிட்டிஷ்காரர்கள், நேச நாடுகள் ஆகியோரின் மேம்போக்கான உணர்ச்சியை எதிர்த்த இந்த இருவரும் தங்களுடைய கருத்தை மெய்யெனக்காட்டி காபினெட்டை நம்பவைத்தனர். மேலும் இரண்டாம் பாரீஸ் உடன்படிக்கையை உருவாக்கினர். அதன்படி லாண்டு, சார்லூயி, செவாய், பெல்ஜியத்தில் சில சிறு சிறு பகுதிகள் ஆகியவை நீங்கலாக உள்ள தனது 1790ஆம் ஆண்டு எல்லைகளை ஃபிரான்ஸ் பெற்றது. இழப்பீடாக 700 மில்லியன் பிராங்குகள் அளித்தது. நீண்ட போரின்போது

கொள்ளையிட்ட கலைச்செல்வங்களைத் திரும்ப அளித்தது. வடக்கிலிருந்த சில கோட்டைகள் வெல்லிங்டனின் தலைமையிலிருந்த படை வசம் ஐந்து ஆண்டுகளுக்கு இருக்கவேண்டும் என்று ஒப்படைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் மக்களின் உணர்ச்சிக்கு உலகின் எதிர்காலத்திற்கும் ஏற்றவகையில், நாட்டு எல்லை மாற்றம் ஏதுமற்ற மற்றுமொரு சலுகையினை பதினெட்டாம் லூயியிடமிருந்து காசில்ரேயால் பெறமுடியும். அடிமை வாணிகத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமெனும் நாட்டுமக்களின் மெய்ப்பாடு தீவிரமாகவும், திட்டமாகவும் அமைந்தது. ஆனால் 1814ஆம் ஆண்டில் காசில்ரே பெறக்கூடியதெல்லாம் ஸ்பெயினும், போர்ச்சுகலும் நீங்கலாக உள்ள நாடுகளெல்லாம் ஐந்து ஆண்டுகளில் அடிமை வாணிகத்தை ஒழிப்பதாகத் தந்த உறுதிமொழிதான். எனினும், அதன்பிறகு அதனை ஒழிக்க நெப்போலியன் ஆணையிட்டார். மீட்சியுற்ற போர்போன்கள் அந்நிலையை ஏற்றுக்கொண்டனர். அதனோடு அதனைப் பயனுறுதியுள்ளதாகச்செய்ய பன்னாட்டு குழு ஒன்றை அமைக்கவேண்டுமென்ற நமது யோசனையையும் ஏற்றுக் கொண்டனர். வியன்னாவில் விடப்பெற்ற ஓரிரு பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்துவிட்டன அல்லது விரைவில் தீர்க்கப்பெற்றன. ஆஸ்திரியாவிற்கெதிராகப் போர்தொடுத்து தமது அழிவை மூராத் தேடிக்கொண்டார். நெப்போலியனைச் சார்ந்தவர்களால் அழிக்கப்பெற்றார். ரஷ்யாவிற்கும், ஆஸ்திரியாவிற்குமிடையே தோன்றிய முரண்பாடு காரணமாகவும் சிறந்த காப்பாளர் கிடைக்காததாலும் அயோனியன் தீவுகளைக்காக்கும் பொறுப்பை கிரேட் பிரிட்டனே ஏற்றது.

நீண்டகாலமாக நமது அமைச்சர்கள் அடையமுயன்ற பரந்த பிணையத்தைக்கொண்டு அமைதி தோன்றுமிருந்தது. ஐரோப்பிய மன்னர்களெல்லாம் கிறித்தவக் கொள்கைகளைக் கடைபிடிப்பதாக வாக்குறுதி தரவேண்டுமெனும் அடிப்படையில் சார் மன்னர் கொண்டுவந்த 'புனிதக் கூட்டுறவு' (Holy Alliance), ஆங்கில அமைச்சர்களுக்கு அர்த்தமற்றதாகத் தோன்றியது. அதே சமயத்தில் ஃபிரெஞ்சு அரசாங்க அமைப்பிற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்ற அலெக்சாந்தரின் நோக்கத்திலிருந்த ஆபத்தினை அவர்களறிந்தனர். எனவே, காசில்ரேயினால் வரையப்பெற்று, நவம்பர் மாதத்தில் கைச்சாத்திடப் பெற்ற நால்வர் உடன்படிக்கை (Quadruple) வரம்பிற்குட்பட்டதாயும், அறிவிற்குப் பொருத்தமாயும் அமைந்தது. அது பாரீஸ் உடன்படிக்கையைப் பாதுகாக்க வேண்டுமென்று நேசநாடுகளைக்

கட்டுப்படுத்தியது. போனபார்ட் முன்னிலை மீட்சிக்கு எதிரான கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றது. 'ஐரோப்பாவின் அமைதியைக்காக்கத்' தேவையாகத் தோன்றுவனவற்றை ஆராய்ந்து பார்க்கவேண்டி, குறிப்பிட்ட இடைக்காலங்களில் மாநாடுகள் கூட்டவேண்டுமென்று அது வற்புறுத்தியது.

இது 1815ஆம் ஆண்டின் நிர்ணய ஏற்பாட்டின் உணர்ச்சி மிக்க கட்டமாக விளங்கியது. அப்போதிருந்த தாராள வசதிகள் கருதியதைப்போல, பின்னுள் நிகழ்ச்சிகள் நிரூபித்ததைப்போல, அதில் குறைகள் இருக்கத்தான் செய்தன. போரின்போது அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பெற்றபோது அவை பொருந்தாதவையாகவும், பொது மக்களின் விருப்பிற்கு மாறுனவையாகவும், அமைந்தன. உதாரணத்திற்கு பர்ஞடட்டின் ஸ்வீடனுடன் நார்வேயை இணைத்தல், டச்சு அரசகுலத்தின் ஆதிகத்தில் பெல்ஜியத்தை விடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதைப்போன்றே ஆஸ்திரியாவின் ஆதிகத்திற்குட்பட்ட இத்தாலி என்றுவது ஒரு நாள் வலிமைப்பெற்று அன்னிய ஆதிக்கத்தை அகற்ற முயலும். மொத்தமாகப் பார்க்கும்போது, பொது விருப்பான அமைப்புகளை அரசுக் கேடுளனக் கொண்ட ஒரு தலைமுறையினரின் அச்சங்களை அப்படியே பிரதிபலிப்பதாக அது அமைந்தது. மேலும் காஸில் ரேயினுல் உருவாக்கப்பெற்ற ஐரோப்பிய ஒற்றுமையில் மாறுதலுக்கு இன்றியமையாத கருவியேதும் காணப்பெறவில்லை. ஆனல், பேரிடரும், பொல்லாத வல்லாட்சியும் மறைந்தன. ஐரோப்பாவில் முப்பது ஆண்டுகளுக்கு அமைதி நிலவியது. அக் காலத்தில் நீண்ட நாட்களாகத் தள்ளிப்போட்டு வந்த புரட்சியைக், குருதி சிந்தாது, ஆனல் கொந்தளிப்பிற்கும், துன்பத்திற்குமிடையே கண்ட கிரேட் பிரிட்டனின் மாட்சிமை பொருந்திய செயல்கள் வியப்பும் விம்மிதமும் அளிப்பனவாகும்.

சமகால நிகழ்ச்சிகள்

1802 அமீன்ஸ் உடன்படிக்கை.

பஸ்ஸீன் உடன்படிக்கையை வெல்லெஸ்லி பிரபு செய்து கொள்ளல்.

'எடின்பரோ செய்தித்திரட்டு' ('Edinburgh Review') நிறுவப்படுதல்.

1803 போர் திரும்பத் தொடங்குதல்.

1804 நெப்போலியன் ஃபிரெஞ்சுப் பேரரசராக முடிசூட்டிக் கொள்ளுதல்.

ஸ்கில்லர் (Schiller) எழுதிய 'William Tell'.

1805 அல்ம் (Ulm), ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz), ட்ரபால்கர் (Trafalgar) சண்டைகள்.

வால்டர்ஸ்காட் (Walter Scott) எழுதிய 'Lay of the Last Minstrel'

1806 புனித ரோமப் பேரரசின் வீழ்ச்சி, (Holy Roman Empire)

பிரிட்டிஷாருடன் சீக்கியத் தலைவரான ரஞ்ஜித் சிங் ஒப்பந்தம் செய்துகொள்ளல்.

1807 யார்கின் தலைமைக் குருவான ஹென்றியின் மறைவு.

ஸ்டீனும் (Stein), ஸ்கார்ஹார்ஸ்டும் (Scharnhorst) பிரஷ்யாவில் பணிபுரிதல்.

ஹட்சனில் புல்டனின் (Fulton) நீராவிக்கப்பல்.

1808 ஜோசப் போனபார்ட் (Joseph Bonaparte) ஸ்பெயினின் அரசராதல்

பீதோவனின் (Beethoven) ஐந்தாம் இசைஒப்பு.

ஆஸ்பர்னும், வாக்ராமும்; கருன்னவும், தலவெராவும்.

மெட்டர்னிக் ஆஸ்திரிய சான்சலராதல் (Chancellor).

கிளாட்ஸ்டன் (Gladstone), அப்ரகாம்லிங்கன், சார்லஸ் டார்வின் முதலானோரின் பிறப்பு.

1810 தென் அமெரிக்காவில் குடியரசு அரசாங்கங்கள் நிறுவப்பெறல்.

மதாம் டி ஸ்டேய்ல் (Madame De Stael) எழுதிய "Allemagne".

1811 அல்பூரா சண்டை.

ஜேன் ஆஸ்டின் (Jane Austen) எழுதிய "Sense and Sensibility".

1812 மாஸ்கோவில் நெப்போலியன்.

படஜோஸும், சலமான்காவும்.

அமெரிக்காவுடன் போர். ஹெகெல் (Hegel) எழுதிய "Logic".

பைரன் (Byron) எழுதிய "Childe Harold".

1813 ஜெர்மனியில் கிளர்ச்சி, லீப்ஸிக் சண்டை.

எலிசபெத் பிரை (Elizabeth Fry) சிறைச்சாலைகளைப் பார்வையிடல்.

1814 எல்பாவில் நெப்போலியன்.

1812ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை ஸ்பெயினின் பர்டினண்டு அழித்தல்.

கெண்ட் உடன்படிக்கை.

ஸ்காட் (Scott) எழுதிய "Waverley".

வேர்ட்ஸ்வொர்த் எழுதிய "Excursion".

1815 வாட்டர்லூ சண்டை; வியன்னா மாநாடு; இரண்டாம் பாரீஸ் உடன்படிக்கை.

மகாடம் (Macadam) நெடுஞ்சாலைத் தலைமை மதிப்பீட்டாளர் பதவியேற்றல் (Surveyor General).

6. அரசியல் அமைப்பு 1815

ஹென்றி viii-இன் ஆட்சிக் காலத்தில் அரசாங்க வளர்ச்சியில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. அதற்கு முன்பும் பல கட்டங்களில் அரசாங்கத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவைகளெல்லாம் முன்பே விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாறுதல்களும் பேரளவில் அடுத்து வரும் இரண்டு நூற்றாண்டுகளில் காணப்பட்டன. 1815-ல் ஏற்படுகின்ற சூழ்நிலையிலும், இவைகளைப்பற்றி மீண்டும் குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஏனெனில், ஆஞ்சுவின் பரம்பரையின் ஆட்சிக்குப் பின்பு இவ்வளவு முன்னேற்றமான மாறுதல்கள் எப்பொழுதும் ஏற்பட்டதில்லை.

டியூடர்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட போராட்டம் ஸ்டூவர்ட்டு அரசர்களை எதிர்க்கப் பயன்பட்டது. அந்த எதிர்ப்பு மீண்டும் பயன்படுத்தவேண்டிய தேவையில்லாமல் போய்விட்டது. ஒவ்வொரு தலைமுறையிலும் அரசாங்கம் வளர்ச்சி அடைந்து கொண்டே வருகின்றது. இடைக்கால நிலையிலிருந்து நவீன முறை வளர்ச்சிக்கு முன்னேற்றமடைந்துவிட்டது. ஏனெனில், வழக்காறுகள் அடிப்படையிலேயே மாறிவிட்டன். அடிப்படைக் கட்டத்திலிருந்து, இறைமைச் சட்டத்திற்குள்ளாக வரையறுக்கப் பட்டது. இந்த இறைமை அரசனிடத்தினில்லாது, பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தும் அரசனிடத்திலும், பொதுச் சட்டத்திலும்தான் விளங்குகின்றது. இவ்விதமாக இறைமையைப் புரிந்துகொள்வது இந்த நாட்டிற்கே உரித்தானது. பிற நாடுகளில் அவர்கள் இறைமைப் பண்பினை இவ்வாறு புரிந்துகொள்ளவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்றால், இடைக்காலத்திலிருந்தே ஆட்சி நிலையும், அதற்கேற்ப மக்களிடம் விரைவில் மாறுதல்கள் ஏற்படாத மனப்போக்கும், அவர்களுடைய சட்டங்களும், மக்களுடைய சம்மதமும் அரசனைக் கட்டுப்படுத்தினமையாகும்.

நாம் கடைசி முறையாக உள்நாட்டுப் போரைப் பார்த்தோம்: அல்லது 1641ஆம் ஆண்டில் இறுதிக் காலத்தைக் கண்டோம் என்று வைத்துக்கொள்வோம். இரண்டு கட்சிகளின் சம்மதத்தின் பேரிலும் ஸ்டார் சேம்பர் (Star Chamber) ஹை கமிஷன் (High Commission) கவுன்சில் ஆப் நார்த் (Council of North) ஆகிய மன்றங்கள் அடியோடு ஒழிக்கப்பட்டன. அவற்றுடன் அவைகளுக்குரித்தான எதேச்சதிகாரங்களும், உரிமைகளும்கூட மறைந்துவிட்டன. ஓரளவிற்கு அச்சபைகளுக்குச் செய்யப்படும் மேன் முறையீடு பாதிக்கப்படவில்லை. கப்பல் வரி (Ship Money)யை எதிர்த்து நாடே கொந்தளித்து எழுந்ததற்குப் பிறகு பாராளுமன்றத்தின் அனுமதியின்றி பேரளவில் எந்த எதேச்சதிகாரமான வரியையும் நாட்டு மக்களின்மீது திணிக்க முடியவில்லை. பாராளுமன்றத்தின் இவ்விதமான எதிர்ப்புகள், பாதுகாவலனின் ஆட்சியிலும் (Protectorate) அந்த ஆட்சிக் காலத்தின் இராணுவத் தேவைகளிலும் கூடப் போராடி வெற்றி கண்டன. அதனால் 1600-ல் நாம் புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்தினோம். அந்த அமைப்பு, ஓரளவிற்கு 1760 வரையிலும் நீடித்தது. அப்பொழுது பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் அரசனும், பொதுச் சட்டமும் ஆதிக்கம் பெற்றதா, அல்லவா என்ற பிரச்சினையைவிட அந்த ஆதிக்கம் செலுத்துகிறவர்களின் உரிமைகளும் பங்குகளும் என்ன என்பதை நிர்ணயம் செய்வதே பெரிய பிரச்சினையாகிவிட்டது.

இந்த ஆதிக்க உரிமையினால் பல முக்கியமான விளைவுகள் ஏற்பட்டன.

1. பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நீடித்து வந்தது. எடுத்துக் காட்டாக, 1603-லிருந்து 1640 வரை அதனுடைய நிகழ்ச்சிகள் நாலரை ஆண்டுகள்தான் நிகழ்ந்தன 1681-லிருந்து 1685 வரை அது கூடவே இல்லை. 1688-ல் ஏற்பட்ட புரட்சி இதையெல்லாம் மாற்றி அமைத்துவிட்டது. அரசாங்கத்திற்குப் பணம் வேண்டும்பொழுது பாராளுமன்றத்தில் அனுமதி தேவைப்பட்டதனால், பாராளுமன்றம், அவ்வப்பொழுது கூட்டப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

2. தல ஆட்சியும் இவ்விதமாகவே கொண்டுவரப்பட்டது. 1610-ல், அரசனின் பிரகடனங்கள் புதிய சட்டத்தை ஏற்படுத்தாது என்று நீதிபதிகள் முடிவு செய்தனர். 1641-ல் அரசனின் ஆதிக்கத்தைப் பிரதிபலித்த பல அவைகள் மக்களே பணிய வைக்க முடியாது என்று நிர்ணயம் செய்யப்பட்டதனால், அவைகளின் வீழ்ச்சி ஆரம்பமாகியது, உரிமை மனுக்களின் பேரில்

(Quo Warranto) பரோ சாசனங்களை (Charter of Boroughs) ரத்து செய்வதுபோன்ற கொள்கைகளினால், தல ஆட்சி அமைச்சர்களின் ஆட்சியின் கீழும், பொதுச்சட்டத்தின் கீழும், பாராளுமன்றத்தின் தனியார் மசோதாக்களின் கீழும் கொண்டுவரப்பட்டது.

3. இறைமையின் விஸ்தரிப்பு, படிப்படியாகவும், ஒவ்வொன்றுகவும் பாராளுமன்றத்தின் கீழ்கொண்டுவரப்பட்டது. எடுத்துக்காட்டுகளாக, ஹென்றியின் சமயச் சட்டங்களும் அல்லது வேல்ஸ் சட்டமும் (Statute of Wales). 1707-வது ஆண்டு ஸ்காட்லாந்து ஐக்கியச் சட்டமும் (The Union Act of 1707 with Scotland) 1719-ல் ஏற்படுத்தப்பட்ட அயர்லாந்துச் சட்டங்களும், 1801-ல் ஏற்பட்ட ஐக்கியச் சட்டமும், பாராளுமன்றத்தில் 1689-க்குப் பிறகு காலனிகளுக்காக இயற்றிய சட்டங்களும், அல்லது கிழக்கு இந்தியக் கம்பெனிக்கும், இங்கிலாந்து பேங்குக்கும், புதுப்பிக்கப்பட்ட சாசனங்களும், அரசனல் பிரகடனப்படுத்தப்பட்டவை அல்ல என்று கூறலாம்.

4. அரசனிடத்தில் அல்லாது, இப்பொழு பாராளுமன்றத்தில்தான், அரசு ஒரு அறியாத நிறுவனமாக இருக்கிறதென்பதை மக்கள் புரிந்துகொண்டார்கள். 1696-ல் ஏற்பட்ட சட்டமும் அதன்படி அரசன் இறந்த பிறகும் பாராளுமன்றம் ஆறுமாத காலம் வரையிலும் நீடித்திருக்க வேண்டுமென்றும், மற்றும் இதைப்போன்ற 1706, 1788-ல் இயற்றப்பட்ட பராமரிப்பாளர் சட்டங்களும் (Regency Acts) விளங்குகின்றன.

5. மேலும், பாராளுமன்றத்தின் பொதுச் சபையில் அதிகப்படியான பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டனர், அதனால் அரசனுடைய செல்வாக்குப் பெருகுவதைவிட, மக்களின் பிரதிநித்துவத்திற்கு அதிக மதிப்பு தரப்பட்டது 1509-ல் 298 அங்கத்தினர்களும், 1603-ல் 467 பேரும், 1707-ல் 558 பேரும் பாராளுமன்றத்தின் பொதுச் சபையில் அங்கத்தினர்களாக இருந்தனர், சார்லஸ் 11-க்குப் பிறகு அதிகப்படியான அங்கத்தினர்கள் சட்டத்தின் மூலமாகத்தான் நிர்ணயிக்கப்பட்டனரே ஒழிய அரசனின் பிரகடனத்தினால் அன்று என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

6. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், அரசனின் எதேச்சதிகாரத்தைப் பறித்துக் கொள்வதும் அந்த அதிகாரத்தை கரதாரணச் சட்டமூலமாகக் கொண்டு வருவதையும் அவர்கள் கொள்கையாகவே கடைப்பிடித்தனர். சில சமயங்களில் அரசர்களே தங்களுடைய உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்டனர்.

டியூடர் அரசர்கள் காலத்தில் வேல்ஸ் பிரபுக்களின் போர்க் கப்பல்களின் ஆதிக்கம் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. சில சமயங்களில் அரசர்களின் ஆணைகளைப் பொது சட்ட நீதி மன்றத்தினர் எதிர்த்திருக்கின்றனர். ஹைகமிஷன் (High Commission) ஆணைகளை ஆட்சேபித்தும், பின்பு வெளிப்படையா கவே சட்டத்தின் துணைகொண்டும் எதிர்த்திருக்கின்றனர். உரிமை மசோதாவின் (Bill of Rights) மூலமாக அரசனின் எதேச் சாதிகாரத்தைத் தடுத்து நிறுத்தியும், மூவாண்டுச் சட்டம் (Triennial Act) ஏழாண்டுச் சட்டம் (Septennial Act) அல்லது நிர்ணயச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஒரு விதியின்படி, குற்ற விசாரணை செய்ய இருக்கும்பொழுது அரசனுடைய மன்னிப்பு செல்லுபடியாகாதபடியும் பார்த்துக்கொண்டதை இதற்குச் சான்றுகக் கூறலாம். அரசனுடைய அதிகாரிகளான, கான்ஸ்டேபிள்; மாரிஷல் ஆகிய படை அதிகாரிகளின் ஆதிக்கத்திலிருந்து படை அமைப்பைப் பொறுத்தவரை யிலும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதன்படி, ஏற்கனவே உரிமை மசோதாவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையில் அமைதி காலத்தில் இராணுவச் சட்டம் செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிடப்பட்டது. ஆனல், இராணுவத்திற்கு ஒழுங்குமுறை மிகவுப் தேவைப்பட்டது. அமைதி காலமாக இருந்தாலும், போர்க்காலமாக இருந்தாலும் இராணுவத்திலே ஒழுங்குமுறை இன்றியமையாத ஒன்றாகும். உரிமை மசோதாவிற்குப் பிறகு, பாராளுமன்றம், ஆண்டுதோறும் சட்டத்திற்குட்பட்ட இராணுவ அமைப்பு புதுப்பிக்கப்பட வேண்டியதாயிற்று. இராணுவச் சட்டங்கள் (Mutiny Acts) இயற்றப்பட்டு இராணுவ ஒழுங்குமுறையை நிலைநிறுத்தவேண்டிய தாயிற்று. அதே சமயத்தில் இயற்றப்பட்ட பல சட்டங்களினல் இராணுவ நிர்வாகத்தையும் அவர்கள் ஒழுங்குபடுத்தினர்கள்.

7. அதிகாரங்களில் மட்டுமின்றி, அரசாங்க அமைப்பிலும் பெரிய மாறுதல்கள் தோன்றின. காலத்திற்கேற்ப அரசாங் கத்தின் பல துறைகள் அரசனுடைய நேரடியான ஆதிக்கத்தி லிருந்து விடுவிக்கப்பட்டன. எக்ஸ்செக்கர் (Exchequer) சேன்ஸரி (Chancery) பிரைவி ஸீல் (Privy Seal) ஸ்டார் சேம்பர் (Star Chamber) ஆகிய சபைகள் பொது நீதிமன்றங்களாக மாறி விட்டமை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சாதாரண வழக்கறிஞர்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டனர். 1689-க்குப் பிறகு எந்த மாறுதலும், அல்லது விஸ்தரிப்பும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அமைச்சர்களால் கொண்டுவரப்பட்டது. 1710-ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி அஞ்சல்துறை தலைமை அதிகாரியும் (Post-Master General), 1794-ல் போர் அலுவல்களைக்

கண்காணிக்க மூன்றாவது உள்நாட்டுக் காரியதரிசியும் நியமிக்கப் பட்டனர். 1801-ல் இதே அதிகாரிக்கு குடியேற்ற நாடுகளின் கண்காணிப்பும் தரப்பட்டது. ராகிங்காம் தலைமையில் இருந்த விக்குகளும், பிட்டும் மீண்டும் போர்த்துறைக் காரியதரிசி, வர்த்தகத்துறைக் காரியதரிசியின் தனி உரிமைகளை மீட்க பாராளுமன்றத்தில் அனுமதி கோரினர்.

8. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, பதினென்காவது நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள், அரசனுடைய தனிப்பட்ட உரிமைகளை, பொது மக்களின் உரிமைகளில் தலையிடுவதற்கும் உள்ள தகுதிகளை வேறுபடுத்தி வரையறுக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் இப்பொழுது நிர்ணயம் செய்யப்பட்டன. அரசனுடைய சிவில் செலவினங்களைப் பார்க்கும்பொழுது இது நன்றாக விளங்கும். அரசனுடைய சொந்த செலவுகளுக்கும், சடங்குகளுக்கும் பாராளுமன்றம் தனியாகப் பணம் ஒதுக்கி வருகின்றது. அரசனுடைய மற்ற செலவினங்களை நிதித்துறை (Exchequer) ஏற்றுக்கொள்ளும். மூன்றாவது வில்லியமுக்கு 700,000 பவுன்களும், உறவினைவீரிய அரசர்களுக்கு இன்னும் சிறிது அதிகமாகவும் தரப்பட்டது. நான்காவது வில்லியம் காலத்திலிருந்து தான், நீதிபதிகள் இராச்சிய தூதுவர்கள் போன்றவர்களுடைய சம்பளங்கள் பொது செலவினங்களிலிருந்து தரப்பட்டன.

அதனால், அரசனுடைய தனிப்பட்ட உரிமைகள் மறைந்து விட்டன; அல்லது அந்த உரிமைகள் பாராளுமன்றத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. மூன்றாவது வில்லியமுக்குப் பிறகு எந்த அரசனும் பெரிய மசோதாவை ரத்து செய்யவில்லை. ஆன் அரசிக்கும் பிறகு (குடியேற்ற நாடுகளின் சட்டசபை அமைப்பைத் தவிர) வேறு எந்த மசோதாவும் ரத்து செய்யப்படவில்லை. இளைய பிட்டின் தலையீட்டினால் 1784-ல் பாராளுமன்றத்தைக் கலைக்கும் உரிமையும் கோரப்பட்டது. இதைப் போன்றே, 1806-ல் கிரென்வில்லின் தலையீட்டினாலும், இன்னும் ஒரே ஆண்டிற்குள் போர்ட்லாந்தைக் கொண்டு வருவதற்கும் பயன் படுத்தப்பட்டது. அரசனுக்கு எஞ்சியிருந்த அதிகாரங்கள், அவர்களுடைய செல்வாக்கு மட்டுமே. ஜார்ஜ் மன்னர்கள் இந்த செல்வாக்கை நன்கு பயன்படுத்தினர்கள். ஆனால், அந்த செல்வாக்கில், சட்ட அதிகாரங்களும், ஆதரவுகளும், வழக்காறுகளும் அடங்கியிருந்தன. அவற்றுள் நுட்பமானதாகவும், சில சமயங்களில் ஆபத்தானதாகவும்கூட இருந்தன. ஆனால் இவைகள் கடைசியில் உறுதியான அமைச்சரவையையோ, அல்லது பாராளுமன்றத்தையோ எதிர்த்து நிற்க முடியவில்லை. அரசனுடைய

செல்வாக்கினால் மட்டும் அமெரிக்கப் போர் நிறுத்தப்படவில்லை; அல்லது கத்தோலிக்கர்களுடைய கோரிக்கைகள், அமைச்சரவையில் ஆதரவையும் பாராளுமன்றத்தில் ஆதரவையும் பெருது ஒன்றும் செய்ய முடியவில்லை. 1757, 1806, 1812ஆம் ஆண்டுகளில் மன்னன் அவனுடைய விருப்பப்படி, அரசாங்கத்தை ஏற்படுத்தவும் முடியவில்லை.

அரசனுடைய தனிப்பட்ட உரிமைகள் மங்குவதற்கு அமைச்சரவை அரசாங்கமும் (கேபினட்) ஒரு முக்கிய காரணமாகும். இந்த அமைச்சரவை அரசாங்கம் நாளடைவில் பழக்கத்தினால் ஏற்பட்டதே தவிர, எந்தச் சட்டத்தினாலும் ஏற்பட்டதன்று. பெரும்பான்மையான அரசாங்க நிறுவனங்களைப்போலவே, இதுவும் அரசனின் குழு (Council) விடமிருந்துதான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. வெளிநாட்டு விவகாரங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிட்டி இரண்டாவது சார்லஸ் காலத்தில் அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டியில் முக்கியமான பிரைவி கவுன்சிலர்கள் அங்கம் வகித்தார்கள். இவர்களிடம் இரண்டாவது சார்லஸ் பல இரகசியங்களையும், முக்கியமான பிரச்சினைகளையும் ஆலோசனை செய்வார். இவர்களுடைய கமிட்டியின் வளர்ச்சி செல்வாக்கிழந்திருந்தது. 1701-ல் இயற்றப்பட்ட நிர்ணயச் சட்டத்தில் இதைக் காண்கிறோம். இந்த சட்டத்தின்படி பிரைவி கவுன்சில் மீண்டும் நியமனம் செய்வதற்கு ஆதரவு அளித்தது. ஆனால் 1705-ல் அந்தப் பகுதி கைவிடப்பட்டது. ஒரு சிறிய குழு பாராளுமன்றத்திற்குட்பட்டு, நிர்வாக அதிகாரத்தை மேற்கொள்வது மிகவும் தேவைப்பட்டது.

கேபினட் அரசாங்கம் என்று இப்பொழுது புரிந்து கொள்வதைப்போன்ற ஒன்று வால்போல் காலத்திலும் பழக்கத்தில் இல்லை. 1782-க்குப் பிறகு தான் பலவகை காரணங்களினால் இதன் வளர்ச்சி ஏற்படுவதற்குச் சாதகமாக இருந்தது. எதிர் பாராமல் ஏற்பட்ட அரசனுடைய புத்தி சுவாதீனமற்ற நிலையும், அல்லது பராமரிப்பாளரின் ஆட்சியின் மீது ஏற்பட்ட வெறுப்பும், இதைவிட ஆட்சியின் புதிய அமைப்பும், அதன் நடவடிக்கைகளும் இதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன. பர்க்கின் சீர்திருத்தங்களினால் அரசனுடைய செல்வாக்கு மதிப்பிழந்தது. அரசனுடைய நண்பர்கள் வீழ்ந்ததனால் பிரதம அமைச்சரின் மதிப்பு உயர்ந்தது. கேபினட்டில் ஒருமைப்பாடு ஏற்பட்டது. முன்பிருந்த கேபினட்டின் உள்ளே ஒரு குழுவும் வெளியே ஒரு குழுவும் வேறுபடுத்திக் கொண்டதைப்போல ஏற்படவில்லை. 1792-ல் தர்லோ என்பவரையும், அல்லது 1805-ல் ஸிட்மவுத்

என்பவரையும் வெளியேற்றியதிலிருந்து, ஒரு ஒழுங்குமுறை வளர்ந்தது. அப்பொழுது இருந்த முறைக்கும் இப்பொழுதுள்ள நவீன முறைக்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்தது. கட்சி அமைப்பு எல்லாம் ஆரம்ப நிலையில்தான் இருந்தது. கட்சியிலுள்ள பெரும்பான்மையான அங்கத்தினர்கள் சுதந்தரமாகவே இருந்தனர். மந்திரிகளோ அல்லது எந்த நிறுவனமோ அவர்களைக் கட்டுப்படுத்த முடியாதநிலை இருந்துவந்தது. இதைத்தவிர வேறு பழைய அரசியல் அமைப்பு அபிப்ராயங்களும் அவர்களிடையே நிலவி இருந்தன. அதனால் இந்தப் புதிய சட்ட மாற்றங்களுக்கேற்ப அவர்கள் மனத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அரசனுடைய அதிகாரம் எவ்வளவு வலிமை வாய்ந்தது என்று 1820–1822ஆம் ஆண்டுகளினால் அறிய முடிந்தது. கிரே பிரபு, சீர்திருத்த மசோதாவை நிறைவேற்ற என்ன பாடுபட்டார் என்பதும் தெரியவரும்.

பாராளுமன்றத்தில் அரசனுடைய அதிகாரம் எப்படி இருந்தது என்று பார்க்கும்பொழுது, பிரபுக்களுடைய பங்கு டியூடர்கள் காலத்தில் இருந்தே பெருமளவில் மங்கிவிட்டது. இருந்தாலும் தனிப்பட்ட முறையில் சில பிரபுக்கள் செல்வாக்குப் படைத்தவர்களாகவே இருந்தார்கள். சில பிரபுக்கள் பொது சபைக்கே வரவிரும்பினர். பிரபுக்களின் எண்ணிக்கை அதிகமான போதிலும், அவர்களுடைய அதிகாரம் அதற்கேற்ப குறைந்து விட்டது. எலிசபெத் இறக்கும்பொழுது 60 பிரபுக்கள் இருந்தனர். ஸ்காட்லாந்து ஐக்கியச் சட்டம் இயற்றப்படும் பொழுது 176 பிரபுக்களும், 1805ல் 330 பிரபுக்களும் அங்கத்தினர்களாக இருந்தனர். அவர்களுக்கே உரித்தான பிரபுக்கள் சபையிலிந்து, கீழே இறங்கி விட்டார்கள். பின்பு பிரதம அமைச்சரின் ஆதரவையும், பின்பு அதிகாரத்தைப் பெற வழியையும் எதிர்ப் பார்த்தனர். சீமான்களின் செல்வம் பொதுச் சபையில் கலக்கும் பொழுது பொதுச் சபையின் செல்வாக்கும் பலம் பெற்றது. அவர்களுடைய செல்வமும் அதிகமாக வளர்ந்தது. 1670–71-ல் இவர்கள் நிதி மசோதாக்களை ஆலை, பிரபுக்கள் திருத்தம் செய்யும் உரிமைகளை அனுமதிக்கவில்லை. கேபினட் அரசாங்கங்களில் இப் பொழுது இருப்பதைவிட அதிக பிரபுக்கள் இடம் பெற்றிருந்தனர். இருப்பினும் வால்போலுக்குப் பிறகு ஒவ்வொரு அமைச்சரவையும், பொதுச்சபையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியின் சக்தியினால் இயங்கியது.

இவர்களுக்குத் தரப்பட்ட அதிகாரங்கள் தவருகப் பயன் படுத்தப்பட்டன. அவர்கள் பிரதிநிதிகள் என்பதையும் மறந்து

விட்டனர். அவர்களுடைய விவாதங்கள் 1770-க்கு முன்பு வெளியிடப்படவில்லை. அவர்களில் உரிமைகள் ஆதிக்கம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன. சிறைக்குச் செல்வதிலிருந்து பெறப்படுகின்ற சுதந்திரம் அவர்களுடைய கடன்காரர்களின் பிடியிலிருந்தும் தப்புவிக்க சாதகமாக இருந்தது. அவர்களுடைய வேட்டைகளுக்குத் துணைபுரியும் ஊழியர்கள் செய்யும் குற்றங்களை மறைப்பதற்கு அது பயன்பட்டது. தேர்தல் சுதந்திரம் சில சமயங்களில் தனிப்பட்ட மனிதன் அளிக்கும் வாக்குரிமை செல்லத்தக்கதா என்பதையும் நிர்ணயம் செய்கின்றது; அல்லது வில்கிஸ் வழக்கைப்போல குறைந்த வாக்குகளைப் பெற்ற ஒரு அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிப்பது. அவதூறு வழக்குகளை 'பேபிஸ்டுகள்' என்று சந்தேகப்பட்டவர்கள் மீதெல்லாம் தொடுத்து கொடுமைக்குள்ளாக்கினர். அப்பொழுது பேபிஸ்டுகள் சதி ஒன்று நடந்தது. இது இவர்களுக்கு அனுகூலமாக இருந்தது. 18வது நூற்றாண்டின் அச்சகங்களை வைத்து நடத்துபவர்கள் மீதும் இவ்விதமான வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால், எதேச்சதிகாரங்களைப் பயன்படுத்தி வந்த அரசனை அடக்கியது போல, பொதுச் சபையின் ஆதிக்கத்தினால் ஏற்பட்ட ஆபத்திலிருந்தும் காப்பாற்றியது, பொதுச் சட்டமேயாகும்.

எட்டாவது ஹென்றி காலத்திலிருந்து நான்காம் ஜார்ஜ் காலம் வரையிலும், அரசியல் அமைப்பில், நல்லதோ அல்லது கெட்டதோ ஏற்பட்டது ஒரு வரலாற்று நிகழ்ச்சியின் பின்னணியில் தான் அந்த நிகழ்ச்சி மதிப்பிற்குரிய பொதுச் சட்டத்தைச் சுற்றிலும் பவளக் கொடி வளர்ந்தது போன்றிருந்தது. புதிய பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கு அமைக்கப்பட்ட கௌன்சில்கள் ஏற்படுவதன் முன்பே, இங்கிலாந்தின் சட்டம், சாதாரண நீதி மன்றங்களில் பின்பற்றப்படுகின்ற சட்டமே என்றும், அதன் அடிப்படையில் திட்டவட்டமாக கட்டளைகளும், குற்றச்சாட்டுகளும் தண்டனைகளும் நிர்ணயம் செய்யப்பட்டு, அவற்றைப் பின்பற்ற நீதிபதிகளும் அல்லது எந்தப் புதிய நீதித் துறை நிறுவனமும் கட்டுப்படுத்தப்பட்டன. பதினைந்தாவது நூற்றாண்டிலிருந்து, ஏற்பட்ட இந்தப் போராட்டத்தில், பதினேழாவது நூற்றாண்டில் வெற்றி காணப்பட்டது. சாதாரண நீதி மன்றங்களில் விசாரிக்கப்படுகின்ற வழக்குகளில் தலையிடுவதற்கு எந்த அரசனுடைய கவுன்சிலுக்கோ அல்லது புதிய அதிகாரம் தரப்பட்ட சிறப்பு விசாரணை மன்றத்திற்கோ அதிகாரம் கூடாதென்று கட்டாயப்படுத்தியது. உதாரணமாக ஒரு மனிதனுடைய உயிரைப் பறிப்பதற்கோ அல்லது அவனுடைய

நிலபுலன்களைப் பறிப்பதற்கோ, பொதுச்சட்டத்தைத் தவிர வேறு எந்தச் சட்டத்தையும் பின்பற்ற அனுமதிக்கவில்லை. சான்சரி (Chancery)யின் தலையீட்டிக்கு மட்டும் சிறிதளவு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இந்தப் பொதுச் சட்டத்திற்கு உறுதுணையாக இயற்றப்படும் சடங்குகளும் பின்பற்றப்பட்டன. இயற்றப்பட்ட சட்டங்கள் மதிக்கத்தக்கதும், பெருநோக்குள்ளதாகவும் இருப் பதனல் அவைகளுக்கும் செல்வாக்கு இருந்தது.

ஐரோப்பாவில் அப்போது பல இடங்களிலும் மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டன. ஆனல், இங்கிலாந்தில் இந்தப் பொதுச்சட்டம் அவர்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்தது. 1678-ல் இயற்றப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் சட்டம் (Habeas Corpus Act.) குற்றம் சாட்டப்பட்டவனுக்கு உடனடியானதும் பகிரங்க மானதுமான நீதி விசாரணை கோருகின்ற உரிமையை அளித்தது. இந்த உரிமை எங்கே கைவிடப்படுமோ என்ற சந்தேகம், இச் சட்டம் இயற்றிய பிறகு நீங்கலாயிற்று. இதற்குப் பிறகு இந்த உரிமை யாருக்காவது மறுக்கப்பட்டால், பாராளுமன்றத்தின் மூலமாக இந்தச் சட்டம் நிறுத்தி வைக்கப்படவேண்டும். இவ் விதமாக 1715 அல்லது 1817 ஆகிய நெருக்கடியான நேரங்களில் நேர்ந்தது. ஜூரிகள் சில சமயங்களில் உணர்ச்சி வசத்திற்குள் ளாகலாம். ஆனல், ஜூரர்கள் மூலமாக விசாரணை செய்யப் படுகின்ற பழக்கமே 1794-ல் பிட் சீர்திருத்தவாதிகளின் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்காமல் செய்தது. மேலும், சட்ட அதிகாரிகள் அவர்கள் மீது வழக்கு தொடர்வதற்கும் தயங்கினர். வெர்ஜினீயாவிலும், ஜமாய்க்காவிலும் பல ஆங்கிலேய குடும்பங்கள் அடிமைகளை அமர்த்தியிருந்தனர். ஆனல், நவாப்போ அல்லது நிலப்பிரபுவோ கருப்புப் பையனை ஆங்கிலேய நாட்டிற்குள் அழைத்து வந்து அவனுக்கு ஒரு அடிமைச் சின்னத்தை அணிவித்து பிரபுவின் நாற்காலியின் பின் புறம் நிற்கவைப்பதோ அல்லது அவரின் சீமாட்டிக்கு வீசுமாறு செய்வதோ அவனை அடிமையாக்காது. அவன் இந்த நாட்டில் சுதந்திரமாகத் தான் இருக்க முடியும், என்று 1772-ல் நட்ந்த சாமர்சட் வழக்கில் மேன்ஸ்பீல்ட் என்பவர் கௌரவமாகத் தீர்ப்பளித்தார்.

பார்ராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை அரசியல் கட்சிக்கு எதிராகக் கூட இந்த உரிமை வேட்கை நீடித்து நடந்தது. பதினெட்டாவது நூற்றுண்டின் மிகச் சிறந்த சட்டத்தின் சாதனை யென்றே இதனைக் கூறலாம். மனித உரிமைகளைப் பாதுகாப் போம் என்று வானளாவப் பேசிவிட்டு ஹேபியஸ் கார்பஸ்

உரிமையையோ அல்லது ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் சட்டத்தையோ நீக்கிவிடுதல், பேச்சளவிற்கும் செயலளவிற்கும் வேறுபாட்டை ஏற்படுத்தி விடுகின்றது. ஆனால், நீதிபதிகள் தொடர்ந்து அமைச்சர்களிடமிருந்தும், பாராளுமன்றத்திடமிருந்தும் மக்களைப் பாதுகாத்தனர். 1704-ல் நிகழ்ந்த ஆஷ்பி(வெ) வைட் வழக்கில், பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மட்டும் சட்டமாகிவிடாதென்றும் அல்லது ஒரு குடிமகனின் வாக்குரிமையை பறித்தலாகாது என்றும் ஹோல்ட் என்பவர் தீர்ப்பளித்தார். அபிப்ராய பேதத்திற்குள்ளாகிய வில்கிஸ் வழக்கை விசாரித்து கேம்டன் என்பவர் உள்நாட்டு காரியதரிசியின் பொதுவாரன்டில் கைது செய்ய ஆணையிடும் கட்டளையை நிராகரித்தார். இந்த வழக்கைப் பற்றிய அரசாங்கத் தேவை அல்லது அரசாங்கக் குற்றங்களுக்கும், மற்ற குற்றங்களுக்கும், உள்ளவேறுபாட்டினை வலியுறுத்துவதை பொதுச் சட்டத்தின்படி புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்விதமாகத் தான், கோக் என்பவரும் சொல்லியிருக்கக் கூடும் என்று கேம்டன் அறிவித்தார். 1798-ல் உல்ப் டோன் என்ற கலகக் காரனைப் பற்றிய வழக்கிலுங்கூட, ஐரிஷ் நீதிபதிகள் ஆங்கிலப் பகுதிகளில் இராணுவச் சட்டம் என்ற சட்டம் இருந்ததில்லை என்று அறிவித்தார்கள்.

மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், அவர்களுடைய நலன்களைப் போற்றுவதற்கும் ஆங்கிலேய சட்டத்தைவிட மிக வலிமைமிக்க சாதனம் வேறொன்றுமில்லை. ஆனால் இந்தச் சட்டத்தின் சில நல்ல இயல்புகளாலே அதற்குச் சில சமயங்களில் தடைகள் ஏற்பட்டன. சுயநல உரிமைகளில் பாதுகாப்பிற்காகத் தோன்றிய இச் சட்டம், முன்னேறிக்கொண்டே வந்திருக்கிறது. மேலும், இச் சட்டத்தை சுய நிர்ணயம் பெற்ற நிறுவனங்கள் கண்காணித்து வந்தன. இந்த உரிமைகளும், நிறுவனங்களும் பதினேழாவது நூற்றாண்டில் தன்னுரிமையுடன் வளர்ந்தன. 1815-க்குப் பிறகு புதிய சூழ்நிலைக்கு ஏற்ப அவைகள் செயலாற்றத் தகுதி பெறவில்லை. இந்தப் புதிய முன்னேற்றம் சிறுகச்சிறுகத் தான் ஏற்பட்டது. இதற்குப் பிட்டின் சீர்திருத்தங்களும் காரணமாக இருந்தன. அரசாங்கத்திற்குட்பட்ட நிறுவனங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டன. பெரிய நகரங்களில் தண்ணீர் வசதிகள் அல்லது கால்வாய் வசதிகள், ஏழைகளுக்கு நிவாரணம் அளிக்க தல நிறுவனங்களும், அல்லது லண்டன் நகரத்திற்கு சம்பளத்திற்கு நியமிக்கப் பட்ட சில மேஜிஸ்டிரேட்டுகளையும் நியமனம் செய்கின்ற பொறுப்பு இந்த 'வசதிகளைப் பெருக்கும் கமிஷனர்களுக்குத்' தரப்பட்டது. ஆனால், இந்த வழிகளினால் புதிய

பிரச்சினைகள்தான் கிளம்பின. பழையதற்குப் புதியமெருகு கொடுத்ததைத் தவிர, முற்றிலும் மாற்றி அமைக்க முடியாத நிலைமையில் இருந்தது. கௌண்டி மக்களின் வாக்குரிமை 1430-லிருந்து எந்த மாறுதலையும் அடையவில்லை, எலிசபெத் காலத்திலிருந்து தொகுதிகள் பங்கிடுவதில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. அமைதியைப் பாதுகாக்கும் அதிகாரிகள் (Commissioners of Peace) 1590-ல் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை 1875 வரையிலும் எவ்வித மாறுதலுமின்றி நிர்வகித்து வந்தார்கள். ஸ்டுவர்ட் காலத்திய சாஸனங்களும், ஸாட் காலத்திய சட்டங்களும் விக்டோரியா காலத்திய பரோக்களையும், பல்கலைக் கழகங்களையும் நிர்வகித்தன. ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திலும் இடைக்காலத்திய பழக்கவழக்கங்கள் அதிகமாகக் காணப்பட்டன. எக்ஸ்செக்கர் (Exchequer) இன்னும் பழைய காலத்திய செப்பு நாணயங்களுக்கென்று நியமிக்கப்பட்ட கணக்கை அதே பெயரில் வைத்துக் கொண்டிருந்தது. சர்வேயர்-ஜனரல் பழைய சின்னமாக பச்சை முத்திரையை விடவில்லை. தருமத்திற்கும், கல்விக்கும், ஆதிகாலத்தில் தரப்பட்ட தானங்கள் இன்னும் தொடர்ந்து நீடித்தன. சிலவற்றைத் தவிர மற்ற பெரும் பான்மையான தானங்களும் பற்றுக் குறையாகவே இருந்தன. இவைகளெல்லாம் பழைய காலத்தில் நிர்ணயம் செய்யப் பட்டவை. அந்தக் காலம் இப்பொழுது மாறிவிட்டது.

அரசாங்கத்திற்கும், புதிய சமுதாயத்திற்கும் தொடர்பை உண்டாக்கவும், மற்ற பழைய வழக்காறுகளிலிருந்து புதிய முன்னேற்ற சூழ்நிலைக்கு ஏற்பக் கொண்டு வருவதற்கும் பாராளு மன்றத்தினால்தான் முடியும். அதனால் பாராளு மன்றத்திற்கே 7 புதிய சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற் பட்டது. 1815-ல் பாராளுமன்றத்து பிரதிநிதிகள் சபை முழு வதும், பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் இருந்தது. காமன் வெல்த் ஆட்சியிலுங்கூட, இவ்விதமாகத்தான் தேர்தல் தொகுதிகள் சரியானபடி பிரிக்கப்படவில்லை. பொதுச் சபை அங்கத்தினர்களின் நான்கில் ஒரு பாகம் ஐந்து தென்மேற்கு ஷயர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். கார்ன்வால் மட்டும் 44 அங்கத்தினர்களை அனுப்பியது; ஆனால் பெரிய லண்டன் (Greater London) 10 அங்கத்தினர்களையும், மற்ற சில பெரிய நகரங்களான பர்மிங்காம், லீட்ஸ், மேன்செஸ்டர், ஒரு பிரதிநிதி யையும் அனுப்பவில்லை. பொதுச் சபையில் அப்பொழுது 558 அங்கத்தினர்கள் இருந்தனர். அவர்களில் 405 பேர் ஆங்கிலேய

பரோக்களுக்குப் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள். 203 பரோக் களில் 23 வடக்கு கவுன்டிகளிலிருந்து 74 பேர் மட்டும் அனுப்பப் பட்டனர். இந்த பரோக்களில் முக்கால் பகுதிகளில் வாக்காளர் எண்ணிக்கை சுமார் 500 பேருக்கும் குறைவாகவே இருந்தது. அதனல் பிரதிநிதித்துவத்தில் நிறைய ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. வாக்குரிமையைப் பொறுத்த அளவில் 80 கவுன்டி களில், வாக்குரிமை அளிக்கத்தகுதி 40 ஷில்லிங் வரிசெலுத்தும் உரிமை மானியக்காரர்களுக்கு மட்டும் என்ற நிலை 1434-லிருந்து அப்படியே நீடித்து வரலாயிற்று, இந்த நிலைமை உரிமை மானியக் காரர்களின் தனி உரிமையாகவே இருந்தது. மற்ற குத்தகைக் காரர்களுக்கும் இந்த வாக்குரிமைத் தகுதி விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றபொழுது, இந்த மானியக்காரர்கள் தடுத்தது மிகவும் கேலிக் கூத்தாக இருந்தது. ஆனல், தேர்தல் காலங் களில் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையை பெருக்குவதற் காக ஒவ்வொரு சமயத்திலும் உரிமை மானியங்களை ஏற்படுத்து வதனலும் ஜனத்தொகை பெருகுவதனலும் சுமாரான ஒரு கவுன் டியன் வாக்காளர் எண்ணிக்கையும் அதிகரித்தது. யார்க்ஷயரின் வாக்காளர் எண்ணிக்கை 4000-லிருந்து 20,000 வரையிலும் அதிகரித்துவிட்டது, ஆனல் பரோக்களில் பெரிய கேலிக் கூத்தாகிவிட்டது. ஒரு டஜன் பரோக்களில் மட்டும், நிறைய குடியிருக்கும் மக்கள் இருப்பதனல் அங்கே வாக்காளர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. வெஸ்ட்மினிஸ்டர் மிகப் பெரிய பரோவானதனல், அங்கே நான்கு வகையான தகுதிகள் வாக்காளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டன. அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டத் தகுதிகள் மிகவும் பழையதும், காலம் கடந்ததுமாகும். பரோவில் உள்ள மானியக்காரர்களுக்கு வாக் குரிமையும், ஸ்காட், லாட் (Scot and Lot) என்ற வரிகளைச் செலுத்தும் குடிமக்களுக்கும், அதைப் போன்ற வரிகளை கார்ப்ப ரேஷனுக்குச் செலுத்துகின்றவர்களுக்கும் மற்றும் 'பர்கேஜ்கள்' (Burgages) என்று அழைக்கப்படும் பழைய இடைக்காலத்திய நிலமான்யங்களில் வசிக்கின்றவர்களுக்கும் இந்த வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வகைப் பிரிவிலும் பல குறை பாடுகள் இருந்தன. பழைய ஸாரத்தில் (Old Sarum) பர்கேஜ் வாக்காளர்கள் 7 பேரும் கேட்டன் (Gatton) என்ற பரோவில் வீடு வைத்திருப்பதனல் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் 6 பேரும் இருந்தனர். ஒரு சிறு பரோவில் உள்ளவர்களையும், மற்றும் கார்ப்பரேஷனில் உள்ளவர்களை லஞ்சம் கொடுத்து வாக்குரிமை களைப் பெறுவதைப் போலவே அப்படியே ஒருவர் பக்கம் இழுத்துக்கொள்ள முடியும். அந்த பரோவில் உள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க முடியும். ஒரு வகையில் ஆங்கிலேயப்

பாராளுமன்ற ஸ்தானங்களின் பாதி எண்ணிக்கை ஆதரவாளர்களின் கையில் சிக்கிக்கொண்டது. இந்த வகையில் அரசனுடைய செல்வாக்கும் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் அரசாங்கத்தின் செல்வாக்கு 1782-லிருந்து அதிகமாகக் குறைந்துவிட்டது. ஸ்காட்லாந்திலுள்ள நிலைமை இதைவிட மோசமாக இருந்தது. அதனுடைய மொத்த வாக்காளர்கள் தொகையே 4000 பேர்தான். அரசனுடைய பர்க்குகள், அங்கேயுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்களினால் நிர்வகிக்கப்பட்டன.. நேரமும் பணமும் மட்டுமிருந்தால் அப்பொழுது ஸ்காட்லாந்து முழுவதும் ஒரு சிறிய பரோவாக (Pocket Borough) மாற்றப்பட்டிருக்கும். வால்போல், பெல்ஹாம் ஆகியவர்களின் ஆட்சியும் ஹென்றி டண்டாஸின் நீண்ட அனுபவமும் அப்படிச் செய்யமுடியும் என்று காட்டுகிறது.

இதைப்போன்ற குறைபாடுகள் எல்லாம் மாற்றப்படவில்லையென்றால், நல்ல ஆதரவில்லாத அமைச்சர்களுக்குப் பல தொல்லைகளை அரசன் தரமுடியும். மாகாண பிரபுத்துவ முறைகளும் கடந்த, ஊழல் நிறைந்த கார்ப்பரேஷன்களும், இந்த நிலையில் அவைகளின் விருப்பப்படி காரியங்களைச் செய்ய முடியும். எந்த மாற்றமும் ஏற்படாதவாறு சட்டத்தையும் அவர்கள் பக்கமே பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். இந்தப் பழைய நிலையிலும் கூட, வலிமை மிக்க பிட், கேனிங் போன்ற அமைச்சர்கள் ஏதாவது நல்லது செய்யமுடியும். ஆனால் செல்வாக்குமிக்க அரசாங்கமோ, அல்லது நல்ல கேபினட்டோ, பலமான கட்சிகளோ, அல்லது மக்கள் அபிப்பிராயமோ, எந்த நன்மையும் இந்தச் சூழ்நிலையில் செய்ய முடியாத நிலைமையில் இருந்தன.

7. மக்களுடைய நிலை
1815

அரசாங்கத்தைப் போலவே, தங்கள் புறவாழ்க்கையிலும், சிந்தனையிலும், மக்கள் சிறிது காலங் கடந்தே மாற்றங்களை ஏற்றுக் கொண்டனர். 1688-ல் அவர்களிடையே புரட்சி ஏற்பட்ட போதிலும், அவர்களுடைய வளர்ச்சியில் ஏற்பட்ட புரட்சி ஒரு நூற்றாண்டிற்குப் பிறகே தோன்றியது. ஜார்ஜின் ஆட்சி காலத்தில், சிசில், மற்றும் பாதுகாவலரின் (Protectorate) காலத்தில் தோன்றிய சின்னங்கள் அப்படியே நிலை பெற்றிருந்தன. வெளிப்புற வயல் தோற்றங்களும், சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், வயல்களில் வேலை செய்யும் விவசாயிகளும், சிறு சிறு குடிசைகளும் அப்பொழுதிருந்ததைப் போன்றே காட்சி அளித்தன. பாதிக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் மாணவர்களைப் பாதிரிகளாக்குவதில் ஈடுபட்டிருந்தன. பொதுவாக அவர்களுடைய வாழ்க்கை, மறுமலர்ச்சி காலத்திலும், சமயப் புரட்சி காலத்திலும் தோற்றுவிக்கப் பட்ட நிலையிலேயே இருந்தது.

பொருளாதாரத் தேவைகள் ஓரளவிற்கு அவர்களுடைய பழைய வாழ்க்கை அமைப்பை மாற்றி விட்டன என்பதை ஏற்கெனவே பார்த்தோம்; மீண்டும் பார்ப்போம். இதைத் தவிர, மற்ற பல முக்கியமான மாற்றங்களும் அப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருந்தன. வரலாற்று வழிபார்ப்போமெனில், திட்டமாக ஒவ்வொரு காலத்தின் வாழ்க்கை அமைப்பையும் அதன் இயல்புகளையும் பிரிக்க முடியாதெனினும், காவிய காலம், இலக்கிய காலம் என்ற பலவகைப் பிரிவுகளில் எண்ணற்ற சிந்தனைகள், மாறுபட்ட வகைகளில் மறைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், 1600, அல்லது 1688-க்குப் பிறகு வந்த நூற்றாண்டிற்கு ஒரு தனிச் சிறப்பைக் காண முடியும். இருக்கின்ற தன்மைகளை விட, இல்லாத பலவற்றையே அந்த நூற்றாண்டில் நாம் காண

முடிகின்றது. ஏனெனில், பயன் அடைந்ததைவிட, அவர்கள் இழந்ததே அதிகமாக இருக்கும்.

சமுதாயத்தை ஒருமைப்பாடுடையதாக மாற்றுவதற்கு உதவியதும், மனிதன் வாழ்வதற்கே தோன்றிய விளக்கத்தையும் அளித்து வந்த சமயம், அப்பொழுது அந்தப் பொருளில் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தது. அதனால், அக் காலத்தில் போற்றத்தக்க நிலையில் இந்த இயற்கைத் தத்துவம், சமயப் பொறை, மக்கள் கருத்து என்ற சக்திகளுடன் சமயத்தைத் தொடர்புபடுத்த வேண்டிய முயற்சிகள் ஒடுக்கப்பட வேண்டியதாயிற்று. அவர்களுடைய மன நிலையும் பழைய காலத்து ஆசிரியர்களின் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு மதிப்பிட முடியாது. ஏனெனில், பேகன் அல்லது டோன் போன்றவர் முதற்கொண்டு சாதாரண மக்கள்வரை அப்பொழுது மக்கள் கருத்தினை உருவாக்கிவந்தனர். வீதியிலுள்ளவர்கள் பேசி, பின்பு அது கிரப் வீதிகளிலிருந்து 'காபி ஹவுஸ்' என்ற உணவு விடுதிக்குச் சென்று, பின்பு அது பொது விவாத அரங்கிற்கு வந்து விடும். சிலர் அவர்களுடைய காலத்திற்குப் பிறகும் வாழ்கிறார்கள். முடியாட்சியின் மீட்சிக்குப் பிறகும் ரெலிஜியோ மெடிசி (Religio Medice) என்ற நூலை எழுதிய சர் தாமஸ் பிரவுன் என்பவரையும், ஓட்வே (Otway) என்ற நாடக ஆசிரியரையும், லர் எஸ்ட்ரேன்ஜ் (L' Estrange) என்ற டோரி பத்திரிகை தணிக்கையாளரையும், மற்றும் ஆன் ஆட்சி காலத்திலிருந்த சில குருமார்களையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ளுகிறோம். அவர்களுடைய நூல்களைப் படிக்கும்பொழுது அவர்கள் காலத்திய சூழ் நிலைக்கு நாம் செல்லுகிறோம். அதேபோன்று, டிரைடன், அல்லது ஸ்விப்ட், அடிசன், போப், அல்லது இரண்டாவது ஜார்ஜ் காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஜான்சன், செஸ்டர்பீல்ட் ஆகியவர்களுடைய நூல்களைப் படிக்கும்பொழுது ஒரு புதிய உணர்ச்சியை நாம் அடைகிற எண்ணம் ஏற்படுகிறது.

இரண்டு தலைமுறைகளிலேயே மிகப் பெரிய மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். லாக், நியூடன், ரென், ஸ்விப்ட், போப், ஜான்சன், ஹூயும், ஃபீல்டிங், பர்க், ரெய்னல்ட்ஸ், பிளாக்ஸ்டோன், வாரன் ஹேஸ்டிங்ஸ், கிப்பன், ஆடம்ஸ்மித் போன்றவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய இலக்கிய படைப்புகளை அகஸ்டன் காலத்திய இலக்கியங்களுக்கு ஒப்பிடுதலும், அவர்களுடைய கட்டிட அமைப்புகளை 'பலாடியன்' வகை என்று கூறிக் கொள்வதிலும், அரசாங்க அமைப்புகளை கிரேக்க, ரோமானிய கால அரசியல் அமைப்புகளுடன் ஒப்பிடுவதிலும்

அவர் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். செயின்ட் பால் கோயிலும், 'பாத்' கட்டிட அமைப்பும், மற்றும் இதைப் போன்ற பல நூற்றுக்கணக்கான வீடுகளும் ரெயினல்ட்ஸ் காலத்திலிருந்து கெயின்ஸ்பரோ வரையிலும் ஏற்பட்டுள்ள ஓவிய வளர்ச்சியிலும் ரேபர்ன், ராம்ஸே, லாரன்ஸ், மனிததத்துவம் நிறைந்த கலைகளைப் படைத்த ஹோகார்த், ஃபீல்டிங், கோல்ட்ஸ்மித், அமெரிக்காவையும், பிரான்சையும் புரட்சி மயமாக்கிய தத்துவங்களும், மக்களுடைய புதிய கண்டுபிடிப்புகளும், வாணிகர்களுடைய வர்த்தகமும் போன்றவை அவர்களுடைய பெரிய சாதனைகளில் சிலவாகும். மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட நோக்குடைய சக்திமிக்க இவர்கள் ஒரேமாதிரியான கல்வியையோ அல்லது ஒழுங்கான கல்வியையோ பெற்றதில்லை. இருப்பினும் அவர்களுடைய எழுத்துக்களுக்குச் சிறந்த மதிப்பும், அவர்களுடைய கருத்துக்களில் ஒரு குறிப்பிட்ட சிந்தனையும் இருக்கக் காண்கிறோம். அவர்களுடைய மெய்யுணர்வும் சமயக் கொள்கைகளும் பரந்த பொது அறிவினால் ஏற்பட்டவை. டியஸ்ட் மெய்யுணர்வுக் கொள்கை உடையவர்களும் (Deist School) அவர்களைப் போன்ற மற்ற சமய மெய்யுணர்வு ஆசிரியர்களும் குருமார்களும் விவாதித்து வரும் அதிசயமானதும், மிக உயர்ந்த நிலையை அடைவதைப் போன்ற கருத்துகளினால் மக்களுடைய மனத்தில், மகிழ்ச்சியைத் துறக்கக் கூடிய எண்ணங்களைப் பரப்பி வந்தனர். அவர்கள் பேசுவதைப் பார்த்தால் மேலுலகத்தில் வசிக்கின்றவர்களும் நீண்ட அங்கிகளை உடுத்தியிருப்பார்களோ என்ற ஐயம் எழுகின்றது. மற்றும் பழைய காவியங்களில் ஏற்பட்ட இலக்கிய பயிற்சியினாலும், பிரான்சிலிருந்து ஏற்பட்ட அநுபவங்களைச் சரளமாக எடுத்துக் கொண்டதாலும், அவர்களுடைய விஞ்ஞான வளர்ச்சியிலும் ஒரு புதிய ஒழுங்கு முறையை அமைக்க வேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்தனர். அவர்களுடைய சிந்தனை பெருநோக்கு படைத்ததாகவும், பூங்காக்களைத் திட்டமிட்டு அழகுபடுத்துவதைப் போல, அவர்களுடைய சிந்தனைகளையும் திட்டமிட்டு அழகுற அமைத்தனர். அவ்விதம் அவர்களுடைய சிந்தனைகளைப் பொலிவுறச் செய்யும்பொழுது, அவர்களுடைய அநுபவப் பயன்களும், அவைகளினால் மக்களுடைய பகுத்தறிவுத் தன்மை, சான்றாண்மை, அவர்களுடைய உரிமைகள், சொத்துடைமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கப் பயன்படுகின்றன. அவர்கள் பிறப்பிலே பிரபுக்களாக இல்லாவிடினும், அவர்கள் தலைமுறையில் உள்ளப் பண்பாட்டிலே அவர்கள் பிரபுக்களே. பதினெட்டாவது நூற்றாண்டிலுள்ள மக்களுடைய அநாகரிகத் தன்மையும் சாதாரண ஆரம்பக் கல்வியுங்கூட பெரும்பான்மையான மக்களுக்குக் கிடைக்காத நிலையில், இவர்கள் மிகச் சிறந்த பிரபுக்களே

யாவர். அவர்களுடைய கருத்துக்களைப் பார்ப்போமெனில், அவர்கள் வாழ்ந்த காலத்திய நாகரிகத்தைப் பற்றி திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்திருந்தனர் என்று தெரிய வருகிறது. அக் காலத்தியத் தலைவர்களைப் பற்றியும், அவர்களுடைய விருப்பு வெறுப்பற்ற எண்ணங்களை நன்கு சித்திரித்ததிலிருந்து இவற்றை நாம் தெரிந்து கொள்கிறோம்.

இடைக்காலத்தை அழித்து விட்டு, மற்றும் இதற்கு முன்பு தோன்றிய வரலாற்றை 'காதிக்கு' (Gothic) காலத்தியது என்று கூறி, பழையதையும், புரியாததையும், கசப்பானதையும் மனத்திலிருந்தே அகற்றி விட்டார்கள். ஜான்சன் பதினேழாவது நூற்றாண்டு கவிஞர்களை ஒதுக்கியது போன்று இது காணப்பட்டது. எவையெவை புதுமையோ, அவற்றை விரும்பாதவர்கள்; அடிசனுடைய இன்பக் கருத்துக்களையும், அல்லது ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும் காலத்திற்கேற்ப் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டுமென்று முறையீடு செய்வதில் என்ன பயன்? அவர்களுடைய கருத்துகளை போற்றத்தக்க உரை நடையில் தெரிவித்தார்கள். டிரைடன், டில்லோட்சன்; ஸ்விப்ட், ஹியூம் போன்றவர்களின் உரைநடை தெளிவாகவும், உணர்ச்சியுடையதாகவும், கவர்ச்சியாகவும் இருந்தது. கிருஸ்துவ சமயம் உட்பட, அவர்கள் எல்லாவற்றையும் பகுத்தறிவு மயமாக்கினர்கள். ஆணித்தரமான கிருஸ்துவ சமயக் கருத்துகள் கொண்ட 'அனலஜி ஆப் ரெலிஜன்' (Analogy of Religion) என்ற நூலை பட்லர் என்பவர் அப்பொழுது எழுதினர். அந்த நூலில் கோட்பாடுகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், ஏனெனில் இயற்கையின் கூறுகளுக்கு அவைகள் முரண்பட்டவை அல்லவென்றும், அவை மனிதனுக்கு இயற்கை அளித்த வரப்பிரசாதம் என்றும் அவர் கூறுகிறார். இயற்கையிலிருந்து வேறுபடுத்தி பகுத்தறிவு என்ற பெயரினால் நடத்தை விதிகளையும் மனித உரிமைகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். அப்பொழுது ஃபிரான்சில் பரவியிருந்த தாராள எண்ணங்களை அவர்கள் மேற்கொண்டனர். வால்டேர், காண்டோர் செட், மற்றும் பல பொருளாதார வாதிகள் அப்பொழுது ஃபிரான்சில் பல வலிமை மிக்க கருத்துகளைப் பரப்பி, அங்கேயிருந்த பல மோசமான கருத்துகளை அகற்றினர்.

ஸ்காட்லாந்தில் இந்த மாறுதல்கள் உணர்ச்சி மிக்க பதினேழாவது நூற்றாண்டிலிருந்தே, மற்ற பகுதிகளைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டன. அப்பொழுது அங்கே இரண்டாவது, மூன்றாவது ஜார்ஜ் ஆட்சிக் காலங்களில், இலக்கியத் துறையில், பொற்காலம் மிளிர்ந்தது என்று சொல்லலாம்.

ஹார்ட்லி, ரிய்ட், ஹட்சிசன் போன்ற ஸ்காட்லாந்து அறிஞர்கள் தத்துவத்திற்கும் பகுத்தறிவுக்கும் புதிய மெருகை அளித்தனர். சில நடுத்தர அறிவாளிகளும் அக் காலத்தில் இருந்தனர். அவர்களில் ராபர்ட்ஸன் என்ற வரலாற்று ஆசிரியர், கிர்க்கில் (Kirk) நல்ல மதிப்பைப் பெற்றிருந்தார். ஆடாம்ஸ்மித் தற்காலப் பொருளாதார சிந்தனையைத் தொடங்கி வைத்தவராவர். டேவிட் ஹியூம் என்பவர் மற்ற எல்லாரையும் விட மிகப் பெரிய சீர் திருத்தக்காரராக விளங்கினர். பழைய கோட்பாடுகளையெல்லாம் அவர் குறைபாடுகளுள்ளது என்று குத்திக் காட்டினர். மதிப்பிற்குரிய வெற்று நிலையிலுள்ள உரிமைகளையும், பழைய சமுதாய ஒப்பந்தத்தையும் தாக்கினர். பகுத்தறிவின் ஆதிக்கத்தை ஐயத்திற்குரியதாக்கி விட்டார். அதனால், பழைய பகுத்தறிவு கால முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். 1670-லிருந்து 1760 வரை தோன்றிய காலத்தில், பழைய வரலாற்றையும், முழுமனிதத் தன்மையின் இயல்புகளையும் குறைவு படுத்தியோ, அல்லது முழுவதாக ஒதுக்கியோவிட்டது. ஆனால், அவைகள் நீண்ட காலத்திற்கு ஒதுக்கிவிட முடியாது.

1760-லிருந்தும், அதற்கு முன்னிலிருந்தும் சில சமய சக்திகள் செல்வாக்குமிக்கதாக இருந்தன. ஆனால், 1815-ல் பதினெட்டாவது நூற்றாண்டில் தோன்றிய சில அரைகுரை உண்மைகளினால் அந்த சக்திகள் தங்கள் செல்வாக்கை இழந்துவிட்டன. இயற்கை என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதன்று. அது மனிதனுக்கு கீழ்படிந்து நடக்கமுடியாது. இவ்விதமான கருத்துகளின் அடிப்படையில் இலக்கிய உணர்ச்சி வளர்ந்தது. கூப்பர் (Cowper) ரிக்கார்ட்ஸன் ஆகியவர்கள் எழுதிய சீரிய புத்தகங்களில் அக்காலத்தின் வளர்ச்சியை முழுவதுமாக நாம் காணமுடிகின்றது. மிருகங்களிடமும் இரக்கம் காட்டவேண்டுமென்ற எண்ணம் அப்பொழுது வளர்ந்தது. இந்தப் புதிய தன்மையை, நாம் கிப்பர்ட் வைட் எழுதிய 'நேச்சுரல் ஹிஸ்டரி ஆப் செல்போர்ன்' (Natural History of Selborne) என்ற நூலையும் பதினேழாவது நூற்றாண்டு இயற்கை கவிஞரான ஹென்றி வாகான் எழுதிய நூலில் காணப்படும் ஆன்மீக சக்தியையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அறியலாம். சில சிறந்த எண்ணங்கள் இடைக்காலத்திலும் வெளியிடப்பட்டன. சில ஹொராஸ் வால்போலின் சாதாரண கருத்துகளைவிட ஆழமாக இருந்தன. பிஷப்பெர்ஸி எழுதிய 'ரெலிக்ஸ்' (Reliques) என்ற 'போலாட்' கவிதையும், ஜேம்ஸ் மேக்பெர்ஸன் எழுதிய 'ஓஸியன்' (Ossian) அல்லது வெல்ஷ் கவிதைகளிலிருந்து கடன் வாங்கிய கிரே, ஆகியவர்களின் நூல்களைப் படிக்கும்பொழுது, மக்கள் உண்மையிலே

புதுமை உணர்வு ஊட்டுகின்ற (Romance) இலக்கியங்களைப் படிக்க விரும்பினர் ஃபிரெஞ்சு புரட்சிக்கு முன்பு பல சிந்தனை ஊற்றுகள் வற்றிப்போய் இருந்தன. ஆனால், அவை மீண்டும் பெருக்கெடுத்து ஓடின. சமயத்துறையில், மெதாடிஸ்டு (Methodist) எவாஞ்சிலிக்கல் (Evangelical) என்ற புதிய சமயக் கிளைகள் தோன்றின. அவைகளின் பிரச்சாரம் அரசியல் கட்சி களையும் கூடத் தலைகுனியச் செய்யும் அளவில் இருந்தது. பழைய பல்கலைக் கழகங்களின் கல்வித் திட்டத்திலிருந்து மாறுபட்ட, பிரிஸ்டிலி போன்றவர்கள், புதிய சீர்திருத்தக் கருத்துக்களைப் போதிக்க முன்வந்தனர். ஜெரிமிபென்தாம் பொது வாழ்க் கையில் ஈடுபட்டு, அவர் பெற்ற அநுபவங்களில் இருந்து புதிய நூல் ஒன்று 'ஃபிராக்மென்ட் ஆன் கவர்ன்மென்ட்' (Fragment on Government) என்பதை எழுதினர். அது 1779 ல் வெளி வந்தது. இது ஏற்கனவே அவர் வலியுறுத்தி வந்த 'பயன்' பற்றிய கோட் பாடு (Utility) என்ற கருத்தின் அடிப்படையில் எழுந்த நூலாகும்.

இவ்விதமான சீர்திருத்த மனப்பான்மை முதலில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த மேலிடத்தாரிடம் பரவியது. அதற்கு ஷெல்போர்ன் வழி வகுத்துத் தந்தார். பின்பு, அந்த செல்வாக்கு பிட் என்பவர் 1801-12-ல் எடுத்துக்கொண்ட சீர்திருத்தங்களில் பிரதிபலித்தது. சீர்திருத்தங்களை எதிர்க்கின்ற எந்த அரசாங்க மும் நீடித்து நிற்க முடியாது என்று மக்கள் உணர்ந்தனர். நாற்பது ஆண்டுகளாக அடங்கியிருந்த இந்த உணர்ச்சி இவ்வளவு வலிமை மிக்க சிந்தனையாளர்களை உருவாக்கியிருக்கிறது. பயன் முதற் கொள்கையினர்களும் (Utilitarians) தத்துவக்கொள்கைகளில் முன்னேற்ற மனப்பான்மையுடையவர்களும் (Philosophicradicals) மறைமுகமாக பென்தாம், ஜேம்ஸ் மில் ஆகியவர்களால் ஊக்கு விக்கப்பட்டனர். இக்கருத்துகளை அரசியலில் புகுத்தியவர் எடின்பரோ வழக்கறிஞரான ஹென்றி புரோகாம் என்பவராவர். புரட்சி மிக்க கருத்துக்களைக் கொண்ட ஒரு கூட்டமும் இருந்தது. அவர்கள் வன்முறைச் செயல்களில் இறங்கித் தங்கள் கொள்கை களைச் சாதிக்க வேண்டுமென்ற மனப்பான்மையுடையவர்கள் அல்லர். இவர்களுடைய கழகங்களை ஏற்கனவே பிட் அடக்கி வைத்திருந்தார். எஞ்சியிருந்த இந்தக் கொள்கையினர்களில் சிலரான மேஜர் கார்ட்ரைட், அவர்களிலேயே சில அறிஞர்களான காட்வின், அவருடைய மருமகன் ஷெல்லி, ஹேஸ்லிட், ஹோம்ட் ஷயர் விவசாயி வில்லியம் காபெட் முதலியோரும் இருந்தனர். அவர்கள் முதலில் போரை விரும்பும் டோரிக் கட்சியினரையும் பின்பு, பழைய காலத்து இங்கிலாந்து இருந்த நிலையை அடைய

வேண்டுமென்றும், அதாவது பயிர்களுக்கு வேலி, போர்க்கடன், இரவலருக்கு நிவராணம் அளிக்கும் சட்டங்கள் போன்றவை இல்லாதிருக்க வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினர்கள். இந்தக் குழுவைச் சேர்ந்த வைட்பிரட், ரோமிலி, பிரான்சிஸ் பர்டெட் போன்றவர்கள் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினராக இருந்தனர். கடைசியில் புரட்சி மனப்பான்மையினர், சமயக் கொள்கைகள், பழைமையை இயற்கையாகவே விரும்புதல் ஆகியவற்றை வெறுக்கத் தொடங்கினர். புரட்சியினால் மனம் மாறியவர்களான லேக் கவிஞர்கள், அழியா புகழ்பெற்ற பர்க்கின் புதிய புகழை எய்திய வால்டர்ஸ்காட் ஆகியோர் இந்த இயக்கத்தை நடத்தினர்கள். அவர்கள் ஒரு விஷயத்தில் மட்டும் அவர்களுடைய அரசியல் தலைவர்களான கேனிங், பீல் கொள்கைகளை ஆதரித்தனர். ஆனால் மற்ற விஷயங்களில், புரட்சித் திட்டம், அவர்களுடைய கொள்கைகள், உணர்ச்சிகள், பழக்கவழக்கங்கள், அன்பு, பண்பாடு ஆகியவற்றில் அவர்கள் மாறுபட்ட கொள்கைகளை உடையவர்களாக இருந்தனர். பகுத்தறிவை மதிக்காதிருத்தல் என்ற கொள்கையை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

யுத்த தேவைகள் அதிகமாக வேண்டியிருந்த காலத்தில்கூட எஞ்சியிருந்த சில ஊழல்களை அகற்றுவதற்கு சீர்திருத்தங்களைச் சிறிதளவு கவனித்துக் கொண்டனர். உதாரணமாக பதவிகளையும், அதிகாரங்களையும் விற்பதையும், தொகுதிகளை விற்பதையும் எதிர்த்து ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. 1812-ல் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு அளித்திருந்த தனி உரிமை ரத்து செய்யப்பட்டது. ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களிலும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அந்தப் பல்கலைக் கழகங்கள் தங்கள் தேர்வுத் திட்டங்களை 1800-க்குப்பின் கொண்டு வந்தன. ஆனால், சில முக்கியமானவைகளில் பழைய நிர்வாக முறையும், அவைகளின் கொள்கைகளும் மாற்றத்திற்குள்ளாகவில்லை. ஸ்காட்லாந்தைத் தவிர ஆரம்பக் கல்விக்கு அரசாங்கம் செலவு செய்ய இன்னும் முன் வரவில்லை. இந்த ஆரம்பப் பள்ளிகள், சிலருடைய தரும கைங்கர்யங்களினாலும், அல்லது கிராமக் கோயில்களினாலும், கிளவ்செஸ்டரைச் சார்ந்த ராபர்ட் ரெய்க்ஸ் என்பவர் ஆரம்பித்த ஞாயிறு பள்ளி இயக்கத்தினாலும், அல்லது தனியாருடைய முயற்சியினாலும், உதாரணமாக டோரி, 'ஹை சர்ச்' (Tory High Church) பிரிவினையைச் சேர்ந்த ஹன்னா மோர் என்ற பெண் மென்டிப்ஸில் ஆரம்பித்த கிராம வகுப்புகளைப் போலவும் நடைபெற்று வந்தன. 1811 முதல் இந்தக் காரியத்தைப் பல சமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் மேற்

கொண்டனர். ஆங்கிலிகன் தேசியக் கழகம் (National Society for Anglicans) ஆங்கிலேயருக்கும் அந்நியருக்கும் நிறுவப்பட்ட பள்ளிக் கழகம் (British and Foreign School Society) போன்ற வைகள் ஆரம்பப் பள்ளியில் அக்கறை செலுத்தின. ஆங்கிலேய ருக்கும் அந்நியருக்கும் நிறுவப்பட்ட பள்ளிக் கழகம் அரசாங்கத் தினுல் ஒப்புக்கொள்ளாத சமயத்தினருக்கு (Non-Conformists) ஆரம்பக் கல்வியைக் கற்பித்தது.

மேல் படிப்பைச் சொல்லித்தர அமைந்த சில பொதுப் பள்ளி களே மிகவும் மட்டமானவை என்று நாம் கருதுவதற்கில்லை. கேனிங், பீல் போன்றவர்கள் அவ்விதமாக பொதுப் பள்ளிகளில் தான் கல்வி பயின்றவர்களாவர். அப்பள்ளிகளில் சொல்லித் தருபவை வெறும் பழைய கிரேக்க, ரோமானிய பாடங்களிலேயே அடங்கியிருந்தது. மேலும் மாணவர்களின் வாழ்க்கையும் பண் படாததாகவும், ஒழுங்கற்றதாகவும் இருந்தது. சில நல்ல 'இலக் கணப் பள்ளிகள்' (Grammar Schools) இருந்தன. ஆனல், அவை களுக்கு நல்ல நிதி வசதிகள் கிடையாது. அவற்றைப்போலவே பல தரும ஸ்தாபனங்கள் வறுமை நிலைமையில் இருந்தன. காப்பரேஷன்களுக்குக்கூட இதே நிலைமைதான் இருந்தது. இவைகளையெல்லாம் சரியாக நிர்வாகம் செய்வதற்கு ஒரு மத்திய நிறுவனம் இல்லாததனல், இந்த நிலைமை ஏற்பட்டது.

உண்மையில் ஒவ்வொரு நிலையமும் ஒவ்வொரு காலத்தில் அவரவர்களுடைய விருப்பங்களுக்கேற்பத் தான் நிறுவப்பட்டன. எனினும் குறுகிய மனப்பான்மையும், மாறுபட்ட குறிக்கோளும் இருக்கக் காண்கிறேம். இரவலர் சட்டம் (Poor-law) எலிசபத் தின் பேரிஷ்களுக்காக இயற்றப்பட்டது. அயர்லாந்தில் ஏற் படுத்திய ஆங்கிலிக்கன் சர்ச் (Anglican Church) டியூடர்களின் தனி உரிமையைப் பிரதிபலித்தது. இங்கிலாந்திலும், வேல்ஸி லும், வெஸ்லியர்களுக்கு இடம் கொடுத்துவிட்டது. மற்றும் புதிய பகுதிகளிலும், ஜனத்தொகை அதிகமாக உள்ள பகுதிகளிலும் அதனுடைய செல்வாக்கை இழந்துவிட்டது. அதனுடைய அமைப்பை மதச் சீர்திருத்தத்திற்குப் பிறகு மாற்றி அமைத்துக் கொள்ளவே இல்லை. அதனுடைய வருவாய் சரியானபடி பகிர்ந் தளிக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான பேரிஷ்கள், அங்கே இருக்கும் பாதிரிகளுக்கு பட்டினி கிடக்கின்ற அளவிற்குத்தான் ஊதியம் அளித்தன. பல்கலைக் கழகங்களையும் அதன் கைக்குள் அடக்கிக்கொண்டது. உண்மையில் ஆங்கிலேயனுக இருந்தா லொழிய அவனுக்குப் பட்டம் கிடைப்பது அரிது. டெஸ்ட் சட்டம், கார்ப்பரேஷன் சட்டம் (Test and Corporation Acts)

அப்பொழுது இருந்தாலும் அவ்வளவு தீவிரமாக அவற்றை அமுல் நடத்தவில்லை. ஆனால், அவை மற்ற சமயப் பிரிவினரைப் (Dissenters) பதவிகள் வகிக்கமுடியாமல் செய்தன.

அப்பொழுதிருந்த மக்கள் மனமாற்றமடைந்திருந்தனர். ஆனால், அவர்கள் பழைய காலத்து அரசாங்க அமைப்பிலேயே உழன்றனர். இருபத்து மூன்று ஆண்டுகளாக போரினால் ஏற்பட்ட பல விளைவுகளும், பேரளவில் ஏற்பட்ட தொழிற் புரட்சியினாலும், பல தீவிரமான மாறுதல்கள் அவசியம் ஏற்பட இருந்தன.

1801-ல் எடுக்கப்பட்ட ஜனத்தொகை கணக்குப்படி, கிரேட் பிரிட்டனில் அப்பொழுது மக்கள் தொகை 11 மில்லியன்களுக்கு சற்றுக் குறைவாக இருந்தது. ஆனால், 1831-ல் 16½ சதவீதம் ஜனத்தொகை அதிகரித்துவிட்டது. லங்காஷயரில் 98 சதவீதமும், 'வெஸ்ட் ரைடிங்' 74 சதவீதமும், லாஞ்சர்கில் அதைவிட அதிகமும் ஜனத்தொகை பெருகிவிட்டதனால், தொகுதிகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1770-ல் மேன்செஸ்டரில் 40,000 இருந்த மக்கள் தொகை 1821-ல் 187,000-ஆக அதிகரித்துவிட்டது. லீட்ஸ், ஷெப்பீல்ட், பர்மிங்காம் ஆகிய நகரங்கள் முப்பது ஆண்டுகளில் மக்கள் தொகையில் இரட்டிப்பு மடங்காகிவிட்டது. இதனால் நாட்டின் வெளிப்புற அமைப்பே மாறிவிட்டது. 1821-முடிவில் இடைக்காலத்தில் விடப்பட்டிருந்த வயல்கள் எல்லாம் வேலிகளினால் சூழப்பட்டன. ஏறக்குறைய ஆறு மில்லியன் ஏக்கர்கள் அவ்விதமாக சூழப்பட்டன. யுத்தத்திற்கு முன்பிருந்த ஏற்றுமதிகள் 20 அல்லது 25 மில்லியன் பவுன்களுக்கிடையே மதிப்பிடப்பட்டது. 1830-ல் அந்த மதிப்பு 70 மில்லியன் பவுன்களுக்குச் சமீபம் வந்துவிட்டது. இறக்குமதியும் தயாரிப்பும், பருத்தி இறக்குமதியும் பல நூறு சதவீதங்களுக்கு அதிகரிக்கப்பட்டது. யுத்தத்திற்கு முன்பு தேசியக் கடன் 250 மில்லியன் பவுன்கள்வரை இருந்தது. 1815-ல் அந்தக் கடன் 861 மில்லியன் பவுன்களுக்கு உயர்ந்துவிட்டது.

ஏறக்குறைய துயரங்கள் குறைக்கப்பட்டு, ஒவ்வொரு பிரச்சினையும் மாறுதல் அடைந்து வந்தபோதிலும், ஒவ்வொன்றையும் சரிவர பரிசீலனை செய்யவேண்டியிருந்தது. சில சமயங்களில் இதைப்பற்றிக் கருத்துக்களைக் கூறுவதையும் குறைத்துக்கொள்வதே நலம். முதலாவதாக, புரட்சி முடியவில்லை. தொழில் வளம் இன்னும் சிறிய அளவிலேதான் வளர்ச்சி அடைந்திருந்தது. விக்டோரியா காலத்தில் இந்தத் தொழில்

துறையில் வளர்ச்சி அடைந்திருந்ததைப் பார்த்தால் இது நன்கு தெரியவரும். ராபர்ட் ஓவன் நிறுவிய நியூலானர்க் மில் (New Lanark Mills) நான்காவது ஜார்ஜ் ஆட்சிக் காலத்தில் மிகப் பெரியதென்றும் சிறப்பு பெற்றிருந்தது. ஆனால், அந்த மில்லில் 1600 தொழிலாளிகள்தான் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். லண்டனிலும், பர்மிங்காமிலும் சிறிய தொழிற்சாலைகளே நிறுவப் பட்டிருந்தன. இயந்திரங்கள் உற்பத்தி செய்வது மிகவும் மெது வாகத்தான் நடந்தது. துணி உற்பத்தி செய்தல் மற்ற தொழில் களைவிட அதிகமாகத்தான் இருந்ததெனினும், நான்கு பங்குக்கு ஒன்றுதான் கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத்தறிகளை அமர்த் திக் கொள்ள முடிந்தது. புரட்சி நீடித்த பிரச்சினையாகும். நெப்போலியனின் காலத்தில் பல பிரச்சினைகள் கவனத்தை ஈர்த்ததனால்; அக்காலத்தியவர்கள் அவர்களுடைய துயரங்களுக்கு அப்பால் செல்ல முடியவில்லை. 1780-க்கு முன்பே ஐந்தில் நான்கு பாகத்திய சிறு நிலக்கிழார்கள் மறைந்துவிட்டனர் என்பது பரிசீலனை செய்யும்பொழுது தெரிந்தது. கிழக்கு, மத்திய மேற்குப் பகுதிகளிலுள்ள ஷயர்களிலுள்ள துணி வியாபாரத்தை வடக்குப் பகுதிகள் கைப்பற்றிக்கொண்டன

மேலும், 1780–1830 வரை இருந்த காலத்தைச் சமுதாயத் தீமை என்றும் சொல்வதற்கில்லை, 1780–90க்குள் பிரிட்டனில் குழந்தை பிறக்கும் விகிதம் ஒரு உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது. அதற்குப் பின்பு, அந்த வேகம் சிறிது குறைந்தது. பிறப்பது மட்டுமின்றி, இறக்கும் தொகையும் ஓரளவுக்கு மிகவும் குறைந்து விட்டதுதான் ஜனத்தொகை அதிகமாகியதற்குக் காரணமாகும். 1780-லிருந்து 1820 வரை இந்த மரணத் தொகை வியக்கத்தக்க முறையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறைந்து விட்டது. பதினெட்டாவது நூற்றாண்டின் இடையிலேயே, மருத்துவ மனைகள், நிறைய பெருகலாயின. மற்றும் பலவித உணவுகளைப் புசிக்கவும், நல்ல இறைச்சியும், விவசாய அபிவிருத்தி யும், நல்ல சாக்கடை வசதிகளும் இருந்ததனால் மரணத் தொகை குறைந்து விட்டது ஜனத்தொகை அதிகரிப்பினால் ஏற்பட்ட வறுமை எவ்விதம் கொடியதாக இருந்தது என்பது வேறு பிரச்சினை. 1790-1850 வரை ஏற்பட்ட தொழிலாளர் போரட்டத் தினால், தொழிலாளிகளின் கூலிகள் 40 சதவிகிதம் உயர்ந்து விட்டன. அப்பொழுதிருந்த வாழ்க்கை நிலைக்கு அது சிறிது அதிகமாகவே இருந்தது.

புதிய தொழிற் புரட்சி ஏற்பட்டதனால், இன்னும் பழைய கைத்தொழில்களை நம்பியே ஈடுபட்டிருக்கும் சிலருக்கு நிறைய

இடர்ப்பாடுகள் உண்டாயின. இயந்திர உற்பத்தியினாலும், தொழிற் புரட்சியினாலும் ஏற்பட்ட மாறுதல்களில், இந்தப் பழைய கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எவ்விதமாக மாற்றுத் தொழிலில் அமர்த்துவது என்பது பெரும் பிரச்சினையாகி விட்டது. இந்தப் பிரச்சினையில் முரண்பட்ட கருத்துகளும், குழப்பமும் ஏற்படத்தான் செய்தன. அதே சமயத்தில் இவர்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு, அரசாங்கமும் தனிப்பட்டவர்களின் தொழில்களில் தலையிடக்கூடாது என்ற பொருளாதாரக் கோட்பாடும் நிலவி வந்தது.

முதலில், நாம் நிலப் பிரச்சினையைப் பார்ப்போம். நிலங்களுக்கு வேலியிடும் இயக்கம் (Enclosure Movement) டியூடர்கள் காலத்தில், நல்ல அபிப்ராயங்களையும் புறக்கணித்து அமலுக்கு கொண்டு வந்தது. இதன் விளைவு அப்பொழுது தெரியவில்லையெனினும், பதினெட்டாவது நூற்றாண்டில் இதன் விளைவுகள் வெளிப்படையாக நாம் காண முடிந்தது. இந்த இயக்கத்தை அப்பொழுது கொண்டு வராதிருந்தால் விவசாயத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்க முடியாது. விவசாய வளர்ச்சி ஏற்படுவதற்குப் பாராளுமன்றமும் அதிக அக்கறை காட்டியது. அது எடுத்துக் கொண்ட முயற்சிகள் அந்தத் துறையிலுள்ள பல அறிஞர்கள் பாராட்டினர்கள். ஆர்தர் யங் என்பவர் விவசாய அபிவிருத்திக் காக அரும்பாடுபட்டார். பிட், விவசாயக் குழு (Board of Agriculture) ஒன்றை அமைத்தார். இந்த முயற்சிகளையெல்லாம் ஒடுக்கவில்லையெனின், விவசாயத் துறையில் இவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்க முடியாது. மேலும், ஜனத்தொகை பெருகிவிட்ட காலத்தில் அந்த மக்களுக்குச் சரியானபடி உணவுப் பண்டங்களை அளித்திருக்க முடியாது. திறந்த வெளி நிலங்கள் இருந்தபொழுது விவசாயம் ஆமை வேகத்தில் நகர்ந்தது. நல்ல கால்வாய் வசதிகள் ஏற்படவே கடினமாக இருந்தது. நல்ல பயிர்களை விளைவிப்பதைப் பற்றி பரிசோதனை செய்ய முடியவில்லை. மேலும், சாதாரண மக்களால், நல்ல கால்நடைகளை வளர்க்கவோ, ஏற்படுத்தவோ முடியவில்லை. இந் நிலைமையில் சீர்திருத்தக் காரர்களின் வேலை மிகவும் கடினமாக இருந்தது. ஆனல், நிலங்களுக்கு வேலியிடும் இந்த முறையினல் சிறு விவசாயிகளைப் பாதுகாப்பதும் மிகவும் கடினமாகிவிட்டது. டியூடர்கள் காலத்தைப் போல அல்லாமல், இப்பொழுது சதுப்பு நிலங்களிலும், சாதாரண நிலங்களிலும் இந்த இயக்கம் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. அதனல், ஒரு ஏழை விவசாயிக்கு மிகுந்த இடுக்கண் ஏற்பட்டது. அவனுக்கு இந்த நிலங்களை இழப்பதனல் அவனுடைய விவசாயம் இலாபகரமாக இல்லாமல் போய்விட்டது. அதாவது, விறகு

எடுத்தல், ஒன்றிரண்டு மாடுகளை வைத்துக் கொள்ளுதல், அல்லது அவனுடைய வாத்துகளை வளர்த்தல் ஆகிய காரியங்களை அவனால் செய்ய முடியாமற் போய்விட்டது. அவனுடைய நிலத்திற்கு வேலியிடுதல் அவனுக்கு நிறைய செலவை ஏற்படுத்தியது. அது சில சமயங்களில் அவனால் தாங்க முடியாமலும் போய்விட்டது. எப்படியோ வேலியிட்டாலும். அதற்குப் பின்பு, அவனுடைய நிலத்திலிருந்து வரும் வருவாய் அவனுக்கு பற்றுக்குறையை ஏற்படுத்தி விட்டது. அதைவிட, பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டவுடன், கிராமத்திலுள்ள சிறிய தொழிலாளிகள் எல்லாம் பிழைப்பிற்குத் திண்டாட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. கிராமத்தில் வேலை செய்து வந்த பட்டறைத் தொழிலாளிகளும், நூற்பாளர்களும், தோல் பதனிடுகின்றவர்களும், தோலினால் கை உறை செய்கின்றவர்களும் மறைந்துவிடும் நிலைமையும் ஏற் பட்டது.

வறுமையைப் போக்க நிவாரணம் அளிக்கும் சட்டமும் மிகவும் பயனற்ற ஒன்றாகப் போய்விட்டது. இதை அமுல் நடத்துவதில் மிகவும் ஊழல் நிரம்பியிருந்தது. போர்க்காலத்தில், வெளிநாடு களிலிருந்து தானியங்கள் இங்கே இறக்குமதி செய்வது மிகவும் கடினமாக இருந்தது. அமெரிக்காவிலிருந்து அப்பொழுது மிகப் பெரிய அளவில் இந்தத் தானியங்களை அடைவதற்கு இன்னும் வழி செய்யவில்லை. சில காலங்களில் மோசமான அறுவடை ஏற் பட்டால், நாட்டில், மக்களுடைய நிலைமையும் பட்டினி கிடக்கும் அளவிற்கு வந்து விட்டது. ஒரு குவார்ட்டருக்கு 50 ஷில்லிங்குகள் என்று நார்த் அரசாங்கம் விலை நிர்ணயம் செய்தது. அடுத்த பத்து ஆண்டுகள், அதாவது 1814 வரையிலும் விலைகள் சராசரி 75 ஷில்லிங் வரையிலும் நிலவியிருந்தது. இன்னும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு 93 ஷில்லிங்காகவும் உயர்ந்து விட்டது. இதனால் ஏழைத் தொழிலாளிகள் பட்டினி கிடக்காமல் இருக்கவேண்டு மென்றால், இரண்டு வழிகள் தான் இருந்தன. ஒன்று அவர்களின் கூலியை ஓரளவிற்கு உயர்த்தி வரம்பு கட்டுதல்; அல்லது தல மேஜிஸ்ட்ரேட்டுகள் மூலமாக வரிப் பணத்திலிருந்து, இந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு ரொக்க பணம் அளித்தல். இரண் டாவது வழியானது, ஸ்பீன்ஹாம்லேண்டில் உள்ள பெர்க்ஷயர் அமைதிகாண் நீதிபதிகள் மேற்கொண்டனர். பின்பு பராளு மன்றத்திலும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாக அவர்கள் ரொக்கப் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

இதனுடைய தீமையான விளைவுகள் வடக்கில் அவ்வளவாக்க காணப்படவில்லை. கிழக்குப் பகுதியிலும், தெற்கிலும் தான்

ஒவ்வொருநாளும் இதன் தீமைகள் அதிகரித்துவந்தன. யுத்தத்திற்கு முன்பு, ஏழைகளுக்கு நிவாரணம் அளித்தவகையில் இரண்டு மில்லியன் பவுன்களும், அமைதி காலத்தில் ஏறக்குறைய ஏழு மில்லியன்களும் செலவு செய்யப்பட்டது. இந்த அதிக செலவுத் தொகை பெரும்பாலும் சசக்ஸ் பகுதிக்கே செலவழிக்கப் பட்டது. இந்தத் தொகை வேல்ஸ் பகுதி முழுவதற்கும் செல வழிப்பதைவிட மிகவும் அதிகமானது. ரொட்டி விலை நிலவரத்தை ஒட்டி ஒரு சுமாரான வாழ்க்கையை நடத்தும் வகையில் கூலிகள் நிர்ணயம் செய்யப்பட்டன. வறுமையில் வாடுகின்றவர் களுக்குங்கூட அந்த நிலையில்தான் கூலி நிர்ணயம் செய்யப் பட்டது. இதனால் வழக்கமான விவசாயிகளின் கூலியும்கூட அந்த அளவிற்கே நிர்ணயம் செய்யப்படலாயிற்று. விவசாயிகள், பேரிஷ்களில் சிறிது வேலைசெய்தால், அவர்களுடைய ஊதியங்களை அதிகப்படுத்துவதற்கான வசதிகள் செய்து தரப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதனால் அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு பேரிஷ்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். வரிப் பணத்திலிருந்து வறுமையில் வாடு கின்றவர்களுக்குத் தரப்படும் உதவிகளினால், மற்ற சிறு முதலாளி களும் அந்த அளவிற்கே ஊதியம் தரவேண்டியதாயிற்று. அப்படிச் செய்ய முடியாததனால் பல சிறு முதலாளிகள் நஷ்ட மடைந்தனர். பல வழிகளில் வாடுகின்றவர்களைப் பிரித்து தொழிலாளர்களாக மாற்றுவது என்பது கடினமாகத்தோன்றி யது. சில சமயங்களில் அவர்களை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பவும் வேண்டியிருந்தது. அவ்விதமாக உதவியைப் பெறு கின்ற ஏழைகள் ஒவ்வொரு வரி கொடுப்போனிடமும் சென்று வேலை தேடுவது என்பது வழக்கமாக இருந்தது. சில சமயங் களில் வரி கொடுப்பர் அவர்களை மிருகங்களைப்போல ஏலம் கூறி விற்றனர்.

இந்த இரவலர் சட்டத்தினால் பல ஊழல்கள் மிகுந்துவிட்ட தனாலும், சரியாகப் பாதுகாப்புகள் அளிக்கப்படாததனாலும் தெற்கு பகுதி முழுவதும் அந்தத் தவறுக்காக அல்லற்பட வேண்டியதாயிற்று. ஆனால், புதிய தொழிற் புரட்சி ஏற்பட்ட தனாலும் நிறைய தீமைகள் ஒரு பக்கம் ஏற்பட்டுவிட்டன. தொழிலில் ஈடுபட்டிருந்த எண்ணற்ற மனிதக் கூட்டத்திற்கு என்று அரசாங்கமாவது அல்லது அவர்களுடைய கூட்டு முயற்சி யினாலாவது பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியிருந்தது. ஆனால், இந்த இரண்டு வழிகளும் அப்பொழுது பயன் அளிக்காமல் போய் விட்டது. தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட அநுபவங்களிலிருந்து இது தெரிய வருகிறது. டியூடர்கள், ஸ்டூவர்டுகள் காலத்தில்

தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு ஒருவித ஆதரவு அளிக்கப் பட்டிருந்தது. அவர்களுக்குத் திட்டவட்டமாகக் கூலிகள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. மேலும், தொழிலாளர்களின் திறமையை அநுசரித்து அவர்களுக்குள் பயிற்சியும் அளிக்கப் பட்டது. ஆனால் இப்பொழுதோ, கூலியை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று பல முறைகள் கோரியபோதிலும், அவைகளை யெல்லாம் பொருட்படுத்தவில்லை. 1813–14-ல் சில எஞ்சிய கோரிக்கைகளும்கூட, அதாவது கூலி நிர்ணயம் செய்தல், பயிற்சி யளித்தல் ஆகியவை பயன் அளிக்கவில்லை. இதனிடையே, போரும், புரட்சியும் ஏக காலத்தில் தோன்றியதனால், தொழி லாளர்களின் மற்றொரு மாற்று பாதுகாப்பும் கவனிக்கப்படவில்லை. தொழிற்சங்க இயக்கம் பெல்ஹாம் காலத்திலேயே வன்மையாக அடக்கப்பட்டு, 1799-ல் இயற்றப்பட்ட காம்பினேஷன் சட்டத் தினால், (Combination Act) சட்ட விரோதமாக்கப்பட்டது. ஆனால், பெரும்பான்மையாகத் தொழிற்சங்க நடவடிக்கைகள் உதவிக் கழகங்கள், அல்லது நண்பர் கழகங்கள் என்ற பெயரினால் விளங்கின. ஆனால், அவைகள் வேலை நிறுத்தம் செய்யவோ, அல்லது அவர்களுடைய பாதுகாப்பைப் போற்றவோ முடிய வில்லை. அவைகள் எல்லாம் சட்ட விரோதமானவை என்று கருதப்பட்டது. அவர்களுடைய பாதுகாப்பிற்காக எடுக்கப் படும் நடவடிக்கைகள் சதியாலோசனை என்ற குற்றத்திற் குள்ளாக்கப்பட்டது. அதனால் அவர்களுக்கு வன்முறையைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற நிலை உண்டாயிற்று. அதற்கும் வழியில்லாதிருந்ததனால், ஏழை மக்கள் பல துயரங்களுக்குள்ளானார்கள். கூலி நிர்ணயம் எல்லாம் கைவிடப்பட்டது. குறிப்பாக லங்காஷயரில் நிறைய அயர்லாந் திலிருந்து மக்கள் குடியேறிவிட்டார்கள். அவர்களின் கூலியும் குறைவாகக் கொடுக்கப்பட்டது. வேண்டுமென்றே தொழில் அதிபர்கள் இயந்திரங்கள் தயாரிப்பதைத் துரிதப்படுத்தவில்லை. அவர்களுக்கு மிகவும் குறைவாக, ஏற்கனவே கைத்தொழில்களில் ஈடுபட்டு இப்பொழுது வறுமையில் வாடிக்கொண்டிருப்பவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டனர். அவர்கள் வாரத்திற்கு 9 ஷில்லிங் அல்லது அதற்கும் குறைவாகவும் கூலிபெற ஒப்புக் கொண்டார்கள். வேலை நேரம் அளவுக்குமீறி மிகவும் அதிகமாக இருந்தது. தொழிற்சாலை மணி சூரிய உதயத்தின்பொழுது அடிக்கும். அதன் கதவுகள், பதினொன்று அல்லது பதினைறு மணி நேரம் கழித்துதான் மூடப்படும். மில்கள், சுரங்கங்கள், தொழிற் சாலைகள் ஆகியவைகளில், பெண்களும், குழந்தைகளும் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். பின்பு தெற்கு பேரிஷ்களில் பயிற்சி பெற்றவர்களையும் வேலைக்கு அமர்த்திக்கொண்டார்கள்.

ஏழாண்டு நிரம்பிய சிறுவர்கள்கூட, இருபத்து ஒன்று வயது வரும் வரையிலும் பஞ்சாலைகளில் வேலைசெய்து வந்தார்கள். புகைக் கூண்டுகளை சுத்தம் செய்யும் சிறுவர்களை கொடுமைப் படுத்தியதும் ஓரளவிற்குத்தான் இருந்தது. ஏனெனில், அவ்வித வேலைகளில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவான தாக இருந்தது. புதிய நகரங்களில் பல ஆயிரக்கணக்கான வர்கள் மது அடைத்து வைத்திருக்கும் கிடங்குகளிலும், சாக்கடைகள் அருகிலும் வசித்து வந்ததனால், விரைத்தும், காய்ச்சல் வந்தும் கோரமாக இறந்தார்கள். தொழிலாளர்களின் குழந்தைகள் கட்டவிழ்த்து விட்டவர்கள்போலத் திரிந்து கொண் டிருந்தார்கள். 1830-ல் கூட லங்காஷயரில் உள்ள பாதி தொழி லாளிகள் எழுதக்கூடத் தெரியாமல் இருந்தார்கள். இந்த நிலையில் மனிதனுடைய தருமம் செய்யும் மனப்பான்மையும் மிகுதி யாகக் குறைந்துவிட்டது.

இந்தப் புதிய நூற்றாண்டின் முதல் பகுதியில் ஆட்சி செய்யும் கட்சியினரிடம் சமுதாயத்தைப்பற்றி மூன்று வகையான கருத்துகள் நிலவின. பர்க்கினுடைய புரட்சிக்கு எதிராக பிரச் சாரமும், அதே பாதையில் சென்ற கேனிங், லிவர்பூல், இன்னும் மற்ற அமைச்சர்களும் வன்முறைகளைப் பலமாகக் கண்டித்தனர். இரண்டாவதாக, இங்கிலாந்தில் ஒப்புக்கொண்ட சமயக் கோட் பாட்டிலேயே ஒரு கிளை பிரிந்து எவாஞ்சிலிக்கல் சமயத்தினர் என்று கூறிக்கொண்டு பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர். இச் சமயத்தினர் உண்மையிலேயே நல்ல பணியைச் செய்துவந்தனர். இவர்களுடைய கருத்துகள் அரசியலிலும், பொது வாழ்க்கையி லும் நல்லவிதமாக ஈடுபட்டிருந்த வில்பர்போர்ஸின் மூலமாக நுழைந்தன. இவர்களுடைய பிரச்சாரத்தினால், சமயத்துறை யிலும், மக்கள் வாழ்க்கையிலும் புதிய சூழ்நிலை உருவானது. இந்த நிலை வால்போல், வில்சிஸ், வெஸ்லி ஆகியோருடைய காலத்தைவிட மேம்பட்டதாக இருந்தது. மக்களுடைய வாழ்க் கைக்கு ஏற்ப அவர்களுடைய குறிக்கோள்கள் அமைந்திருந்தன. இதைவிட, இந்த வாழ்க்கையின் பயனை இப்புவியில் செய்யும் பாவங்களிலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடையும் வழியை வலியுறுத்தினர்கள். பியூரிடன் கோட்பாடுகளிலிருந்து அதிக மாக அவர்களுடைய கருத்துகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. முக்கியமாக மக்கள் இப்புவியில் வாழப்பிறந்ததன் பயனை, சுதந்திரத்தையும் நல்ல வாழ்க்கையையும் அடைய அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் வலியுறுத்தினர்கள். ஆனால், இக்கருத்துகள் எல்லாம், அப்பொழுதிருந்த பொருளா

தார வாதிகளிடம் செல்வாக்கு பெற்றிருந்த கருத்துகளில் இரண்டறக் கலந்து போய்விட்டன.

பழைய சட்ட திட்டங்களும், மக்களுடைய அறியாமையும், அடாம்ஸ்மித், பென்ஹாம் ஆகியவர்கள் மிகவும் வன்மையாகக் கண்டித்து அந்தத் தலைமுறையில் நல்ல செல்வாக்கு பெற்றிருந்தனர். அதனால் அவர்களுடைய செல்வாக்கு முழுவதும் பொருளாதார வாழ்க்கையில் தடையில்லாது சுதந்திரமாக அல்லது இயற்கையாக இருக்க வேண்டுமென்று பயன்படுத்தப்பட்டது. வாடகைகள், வட்டிகள், இலாபங்கள், கூலிகள் ஆகியவற்றை வரையறுக்காது அப்படியே விட்டு விட்டால், அவைகளே தன்னால் சரியாய் விடும் என்று அவர்கள் விவாதித்தார்கள். ஸ்மித்தின், சீடர்களில் முக்கியமான யூத பாங்கரான டேவிட் ரிக்கார்டோ செல்வம் எப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று சில கோட்பாடுகளை அமைத்தார். கிடைக்கக் கூடிய முதலுக்கும் அதன் சரிவிகிதத்தில் தலையீடில்லாது போட்டியிடும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கும் ஏற்ப ஒரு கூலி நிதியை ஏற்படுத்தும் கோட்பாடும்; அப்பேர்பட்ட கூலி நிதி தொழிலாளர்களின் சங்கங்களினால் நிரந்தரமாக மாற்றப்படலாகாது என்றும் அவர்கள் வற்புறுத்தினர்கள்.

அவர்கள் வாழ்ந்த காலத்தில் பல தடைகளும், யுத்தத்தினால் பட்டினி நிலையும் ஏற்பட்டிருந்தன. ஹெர்போர்ட்ஷயர் பாதிரி மால்தஸ் (Malthus) என்பவர் 1798-ல் ஜனத்தொகையைப் பற்றிய கட்டுரையை முதலாவதாக வெளியிட்டார். அந்த ஆங்கில நூல் அடுத்த அரை நூற்றாண்டு வரையிலும் பெரும் புகழ்வாய்ந்ததாக விளங்கியது. அதிகப்படியான மக்கள் எப்பொழுதுமே உணவுப் பொருள்கள் பற்றாமல் போட்டியிடுகின்றார்கள். யுத்தமோ அல்லது பஞ்சமோ ஏற்பட்டு இவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்காவிடில் மக்கள் தாங்களாகவே குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனால், தொழிலாளர்களின் வாழ்க்கைக்குப் போதுமான அளவிற்குத்தான் அவர்களுடைய கூலிகள் இருக்க வேண்டுமே தவிர, அதற்கு மேற்பட்டு, சரியாக மதிப்பிடப்படாமலும் தாராளமாக தலையீட்டினாலும் ஏற்பட்டுவிடக் கூடாதென்கிறார். பாதுகாப்பில்லாமலும், சரியான உணவில்லாமலும் வாடுகின்ற மக்களுடைய போட்டி, எல்லா கூலி நிர்ணய ஏற்பாடுகளையும் சீர் குலைத்து விட்டது. இந்தச் சீர்குலைவு விக்டோரியா அரசியின் ஆட்சிக்கால முதற்பகுதி வரையிலும் நீடித்தது. இதனால், நாணயக் கொள்கையும், குடியேறும் உற்சாகமும், கடுமையாக இரவலர் சட்டமும் பாதிக்கப்பட்டன.

இந்த ஊழ்வலித் தத்துவத்திலும், பல குரல்கள் ஏற்கனவே கிளம்பிவிட்டன. லேக்கவிஞர்களைப் போன்ற இலட்சியவாதிகளும் இந்த நிலையைக் கண்டித்தனர். இயற்கை அன்னை அளித்த தூய்மையான முறைகளை வலியுறுத்தி வோர்ட்ஸ்வர்த் என்பவரும், பஞ்சாலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தாக்கி 'குவார்டர்லி' என்ற சஞ்சிகையில் சதே என்பவரும் கடுமையாகக் கண்டித்தும், கிருத்துவ சமயமே உண்மையான அரசியல் அறிவு என்று அந்த சமயத்தை ஆதரித்தும் எழுதினர்கள். புதிய ஜனநாயக சமூகத்திலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. அவர்கள் ஏதாவது ஒரு அரைகுறை கருத்தைப் பிடித்துக் கொண்டு, நன்மை செய்வதை விட தீமையையும் சேர்ந்தே விளைவித்தனர். ஓவன் அவருடைய லானர்க் பஞ்சாலையில் அன்பான சூழ்நிலையை உருவாக்கி அங்கு வேலை செய்கின்றவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டினதால், நல்ல லாபமும் கிடைத்தது. அதற்கு மேல் அவர் சிறு சிறு தன்னிறைவு பெற்று சோஷியலிஸ்டு அலகுகளை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மிதந்து வந்தார். தாமஸ் ஸ்பென்ஸ், மற்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் நிலத்தை தேசியமாக்குவதே சிறந்த பரிகாரம் என்று கூறினர்கள். மற்றவர்கள், உழைப்பு தான் செல்வத்தின் மூலப் பொருள் என்று நினைத்தார்கள். வில்லியம் காபெட் என்பவர் சில பரிகாரங்களைத் தெரிவித்தார். அதாவது தேசியக் கடனை ஒழித்துவிடுதல், இரவலர் சட்டத்தை ஒழித்துவிடுதல், தாள் நாணயத்தில் குழப்பாமலிருத்தல் என்ற பரிகாரங்களைக் கூறுவதைப் பார்த்தால், விசித்திரமான வரலாற்றுக் கருத்துகளும், அவரது அறியாமையும் வெளிபடுகிறது. விக்குகளையும், மற்ற தீவிரவாதிகளையும் அவருடைய முரண்பட்ட பிடிவாதத்திலும் பகைத்துக் கொண்டனர். இருந்தாலும் அவருக்கிருந்த ஆதரவும், செல்வாக்கும், அளவு கடந்து இருந்தது. அவர் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதிலும் அவருடைய கருத்துகளை பிரச்சாரம் செய்வதிலும் தனித் திறமை பெற்றிருந்தார். 1815-ல் அவருடைய பத்திரிகையான 'பொலிடிக்கல் ரிஜிஸ்டர்' இரண்டு பென்னிகளுக்கு விற்கப்பட்டது. வாரத்திற்கு 50,000 படிகள் வரையிலும் செலவாயின. புரட்சியின் மூலமாக அல்லது பாராளுமன்றத்து சீர்திருத்தங்களிலுல்தான் முடியும் என்பது தான், அவருடைய பிரச்சாரத்தில் அவர் மிகவும் முக்கியமாக வலியுறுத்தினர்.

யாவற்றையும் நோக்கும் பொழுது, இந்தப் புகழ் பெற்ற காலத்தில்தான் நாட்டில் இரண்டு வகையான, பிரிவுகள் தோன்றியிருந்தன என்று அறிகிறோம். இந்தப் புகழ் பெற்ற அரசியல்

அமைப்பில், வரையறுக்கப்பட்ட உரிமைகளும், அதாவது ஜூரி மூலமாக வழக்குகளை விசாரணை செய்தலும், முடியாட்சியும், நிலை நாட்டப்பட்ட திருச்சபையும் (Established Church), சாசனங் களால் ஏற்பட்ட பரோக்களும், சலுகை பெற்ற பல்கலைக் கழகங் களும் சிறப்பிடம்பெற்று விளங்கின. அதைப்போலவே மற்றொரு புறம் சீரமைக்கப்படாததும், பற்றுக்குறை உடமைகளை உடைய வர்களும், அரைகுரையாகப் பழையதை விரும்புகிறவர்களும் ஆகியோருடைய கூட்டமும் பெருகியிருந்தது. புதிய தொழி லாளிகளும், அழிந்து வருகின்ற சிறு தொழில்களும் நிலமில்லாத விவசாயிகளும், கேப்டன், லட்டை, பின்பற்றுகின்ற இயந்திரங்களை உடைக்கின்றவர்களும், பிரதிநிதித்துவம் இல்லாத நடுத்தர வகுப் பினரும் நிரம்பியிருந்தனர். இருபத்துமூன்று ஆண்டுகளாக நடந்த போரில், இந்தச் சமுகப் போராட்டமும் அதன் உச்ச நிலையில் இருந்தது. அரசாங்கம் சலிப்புற்றும், சீர்திருத்தங்களை ஒத்தி போடப்பட்டும், அதிகப்படியாகக் கடனும், மதிப்புக் குறைந்த தாள் நாணயத்தால் விலைவாசிகள் உயர்வும் காணப் பட்டன. சில பொருளாதார வாதிகள், இந்த அதிர்ச்சியுறும் சக்திகளால் நாம் ஒரு சரியான நிலைக்கு வந்தால் தான், மக்களுடைய நம்பிக்கையும் பின்பு பட்டினி நிலை போக்குதலையும் அடைய முடியும் என்று கூறிவந்தனர்.

8. லிவர்பூல் அரசாங்கம் 1815–1825

1812-ல் ஏற்பட்ட போருக்குப் பிறகு பிரிட்டனில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டன. அந்தப் போரில் அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டது. வெற்றிக்குப் பின்பு, அமைதியை நிலைநாட்டுவதும், பல சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதும் அப்பொழுதிருந்த அரசாங்கத்தின் முக்கியமான பொறுப்புகளாக இருந்தன. இப்பணிகளை 1817-வரையிலும் இந்த அரசாங்கம் நாட்டு மக்களுக்கு செய்து வந்தது. இவர்கள் அப்பொழுது கொண்டு வந்த சீர்திருத்தங்கள் மிதமானவையே என்ற போதிலும், ஐரோப்பாவில் வேறு எந்த நாடும், இதைப்போன்ற சீர்திருத்தங்களைக் கொண்டுவரவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

அப்பொழுதிருந்த கேபினட்டில் திறமைமிக்க, வலிமைமிக்க அமைச்சர்கள் பதவியில் இருந்தனர். அந்த அமைச்சரவையில் லிவர்பூல், கேஸல்ரே, பாத்தர்ஸ்ட் ஆகியோர், முறையே, நிதித்துறை, அயல்நாட்டுத்துறை, போர்த்துறை ஆகிய இலாக்காக்களை நிர்வகித்தனர். 1816-ல் கேனிங் புதிதாகப் பதவியில் அமர்த்தப்பட்டார். 1818-ல் இவர்களுடன் வெல்லிங்டனும் சேர்ந்துகொண்டார். மற்றும் சிறிய பொறுப்புகளை, பீல், ஹஸ்கிஸன், பால்மர்ஸ்டன், அயர்டன் ஆகியோர் நிர்வகித்தனர். எல்டன் என்பவர் சான்சலராக இருந்தார். அவருக்கு புதிய மாறுதல்களை ஏற்படுத்துவதில் விருப்பமில்லை. ஸிட்மவுத் என்பவர் உள்துறை காரியதரிசியாகப் பதவி வகித்தார். அவர் திட்டவட்டமான கருத்துகளைக் கொண்டவர். அப்பொழுது உள்நாட்டில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்புகளை அவர் சமாளிக்கவேண்டியிருந்தது. எக்ஸ்செக்கராக வான்ஸிடார்ட் பணியாற்றினர். அவருக்குப் போதிய திறமை இல்லை. சில பொதுப்படையான கருத்துக்களை டிஸ்ரேலி தம்முடைய நாவல்களில் வலியுறுத்தினர். கேஸல்ரேயுக்குப் பின்பு, கேனிங்கும், ஸிட்மவுத்துக்குப்

பின்பு, பீலும் பதவியேற்றவுடன் 1822-லிருந்து இந்த அரசாங்கம் புதிய கொள்கைகளையும், முன்னேற்ற மனப்பான்மையையும் காட்டியது. ஆனல், சரியானபடி பரிசீலனை செய்து பார்த்தால், இப்படி ஒப்பிட்டுப் பார்ப்பது வேண்டுமென்றே செய்வதைப்போலிருக்கும். ஏனெனில் போருக்கு முன்பிருந்த நிலை வேறு, பின்பிருந்த நிலை வேறு. அவைகளுக்கிடையே நிறைய வேறுபாடுகள் இருந்தன.

ஆனல், அவர்கள் ஒரு வகையில் அதிர்ஷ்டசாலிகளே என்று கூறவேண்டும். ஏனெனின், விக்கட்சியினரின் எதிர்ப்பு மிகவும் பல்வீனமாகவே இருந்தது. அநீதி கட்சியைச் சேர்ந்த கிரென்வில்கள் 1818-ல் டோரி கட்சியில் சேர்ந்துவிட்டனர். கிரேயின் தலைமையில் அவர்கள் ஒன்றும் சாதிக்கவில்லை. பின்பு, கிரே, லேன்ட்ஸ்வோன் ஆகியோருக்கு அவர்கள் தலைமைப் பதவியைத் தந்துவிட்டார். ஆனல் அவர் வலது கட்சியைச் சார்ந்தவரேயாவர். 1818 வரை பாராளுமன்றத்திலிருந்து, அவர்களுடைய தலைவர் பான்ஸன்பி அவ்வளவு செல்வாக்கு படைத்தவரல்ல. டியர்னி என்பவரை ஒரு சிலரே நம்பினர். பிரோகாமை ஒருவரும் நம்பவில்லை. திறமை மிக்க இருவர், விட்பிரட்டும், ரோமிலியும் தற்கொலை புரிந்துகொண்டனர். ஹார்னர் என்ற பொருளாதார அறிஞர் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். அவர்கள் தீவிரவாதிகளின் தொடர்பை அறுத்துக் கொண்டார்களென்றல்தான், அவர்கள் முன்னுக்கு வரமுடியும். விக் பிரபுக்களுக்கு, கலகமும், வன்முறையும் சிறிதும் பிடிக்கவில்லை. ஃபாக்ஸின் உற்வினரான ஹாலண்டிற்கும், ஃபிட்ஸ்வில்லியமுக்கும், மற்றும் தீவிரவாதிகளான பர்டெட், கார்ட்ரைட், பேச்சாளர் ஹண்ட், அல்லது காலெட் ஆகியோரும் வாக்குரிமை வேண்டுமென்று வற்புறுத்தினர். கிரே சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமென்றல், கட்சியில் பிளவு ஏற்படுகின்ற சூழ்நிலை இருந்தது.

அரசனும் ஒழுக்கம் குன்றியிருந்தார். அதனல் கூட அமைச்சரவைக்கு ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டுவிட்டது. மற்ற காரணங்களைக் காட்டிலும் இந்தக் காரணமே நாட்டில் அதிக அதிருப்தியை ஏற்படுத்திவிட்டது. மேலும் இளவரசனின் சொந்த வாழ்க்கை மிகவும் மோசமாக இருந்தது. அவருடைய மனைவியுடன் அவருக்கு கருத்து வேறுபாடிருந்தது. இருவரும் சேர்ந்து வாழவில்லை. அவருடைய மனைவி வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டாள். இளவரசனும் அவளை விவாகரத்து செய்துவிட எண்ணினர். இதைத் தவிர, இளவரசனுடைய செலவினங்கள் மிகவும் அதிகமாகிக்கொண்டே வந்தன. யார்க் கோமகன்மீது

பல இழிவான வதந்திகள் நிலவின. அவருக்குங்கூட குழந்தைகள் கிடையாது. அவருடைய மற்ற சகோதரர்களுக்கும் மணமாகவில்லை. அவர்களெல்லாரும் மணம் செய்துகொள்ள துடித்துக் கொண்டிருந்தனர். கென்டும், கிளாரன்சும் மிகவும் பலவீனமானவர்களும் திறமையற்றவர்களும்கூட. இளவரசனின் ஒரே குழந்தையான சார்லெட் பிறக்கும்பொழுதே இறந்துவிட்டதால், நாடுமுழுவதும் அதிருப்தி ஏற்பட்டது இவருக்குப் பிறகு, இந்த மோசமான சகோதரர்களில் யார் பட்டத்திற்கு வருகிறார்களோ என்ற பயம் அவர்களிடையே இருந்து வந்தது.

ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் முதல் கடமையாக இருந்தது. இதனால் 1848 வரை, பல போர்கள் ஏற்பட இருந்ததை இந்த அரசாங்கம் தவிர்த்தது. இரண்டு புரட்சிகளிடையே ஏற்பட்ட பல கருத்துகளில், இக்காலத்தில் ஒரு சமரசம் ஏற்பட்டதே மிகப் பெரிய சாதனையாகும் நெப்போலியனே தேசிய உணர்ச்சி வென்றது எனக் கொள்ள வேண்டும். தவிர, பிரான்ஸ் அடைந்த வெற்றிகளால் ஐரோப்பாவில் புதிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. கத்திமுனையிலாவது அந்தச் சூழ்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தது. அத்துடன் புரட்சி எண்ணங்களான, மனித உரிமைகள், சுதந்திர அரசாங்கம், சமய எதிர்ப்பு, ஆகிய கொள்கைகளும், ஐரோப்பா முழுவதும் பரவிவிட்டன. இதற்கு முன்பு ஏற்பட்ட சிக்கலைப் போல, இப்பொழுதும் பிரிட்டன், தனித்து நிற்பதா, அல்லது மற்ற நாடுகளுடன் கூட்டு சேர்ந்துகொள்வதா என்ற கொள்கையை நிர்ணயம் செய்யவேண்டியிருந்தது. இன்னும் ஐரோப்பா அபாயமான சூழ்நிலையில் இருக்கும்பொழுது, தனித்து நிற்பதில் அர்த்தமில்லை என்று கேஸல்ரே ஏற்கனவே கூறியிருந்தார். அப்படித் தனித்து நின்றால், அது ஆபத்தையும் ஏற்படுத்தக்கூடும். ஆனால், அதே சமயத்தில் மற்ற நாடுகளுடன் கூட்டு சேருவதும் அருவருக்கத்தக்கதாக இருந்தது. பூர்போர்ன் மன்னர்பரம் பரை அப்பொழுதுதான் மீட்சி அடைந்தது. அதைப்போலவே ஹாப்ஸ்பர்க் மன்னர்களும் புத்துயிர்ப் பெற்றனர். பிரஷ்யர்கள் இராணுவ வெறி கொண்டவர்கள். ஜார் அலக்சாந்தர் விநோதமான சமயக் கொள்கையைப் பின்பற்றினர். உரிமைகளைக் கேட்டால், அவர்களை நசுக்கிவிடுகின்ற பழைய காலக் கொள்கைகளை அவர் பின்பற்றினர். போர்க்காலத்தில் பிரிட்டன் இந்த நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தபோதிலும், போருக்குப் பிறகு, இந்த நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் பெரிய மோதல் ஏற்பட்டது.

பைரன், ஷெல்லி ஆகிய கவிஞர்கள் கவிதைகளிலிருந்து சில வரிகளை எடுத்துக்காட்டி கேனிங்கையும், கேஸல்ரேயையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பொருத்தமாகப்படவில்லை. அவர்கள் பின்பற்றிய வழிகள் மாறுபட்டிருந்தன. ஆனால், அவர்களுடைய ஆட்சியின் அடிப்படைக் கொள்கைகள் ஒரே நோக்க நிலையில் தான் இருந்தன. மெட்டர்னிக், ரஷ்யா, காங்கிரஸ் திட்டம் ஆகியவற்றை கேஸல்ரே படிப்படியாக எதிர்த்தே வந்திருக்கிறார். மெட்டர்னிக்கின் பெருமை, அந்தக் காங்கிரஸ் திட்டம் வெற்றி பெறுவதில்தான் இருந்தது. ஆனால், அதன்மேலுள்ள மோகம் மறைந்துகொண்டே வந்தது. போர் முடிவடைந்ததற்குப் பிறகு, ஆங்கிலேய அமைச்சர்கள் வழக்கமாகப் பின்பற்றும் கொள்கை களையே கேஸல்ரேயும் பின்பற்றினர். அதாவது பகைவர்களின் நாடு மீண்டும் பலமுள்ளதாக ஆகிவிட, அவர்கள் அனுமதிக்கும் வழக்கம் இல்லை. அதே சமயத்தில் பிரிட்டனுடன் நேச நாடாக சேர்ந்து போர் புரிந்த நாடும் ஆதிக்கம்பெற வாய்ப்பளிக்கக் கூடாது. வேறுவிதமாகச் சொன்னால், பிரான்ஸின் ஆதிக்கம் மீண்டும் தோன்றுதவாறும், ரஷ்யாவின் ஆதிக்கம் ஐரோப்பாவில் நுழைந்துவிடாதபடியும் பார்த்துக்கொள்வது அவர்களுடைய முக்கிய கொள்கையாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்படும் சிக்கல்களை அகற்றும் நடுவர் பொறுப்பையே அவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பினர் என்பது அவ்விரு அமைச் சர்களின் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. எந்தக் கட்டுப் பாட்டிற்குள்ளும் பிரிட்டன் அகப்பட்டுக் கொள்ளாதவாறு, பார்த்துக்கொள்வதைத்தான் அவர்கள் பொதுக் கொள்கை யாகப் பின்பற்றினர். கேஸல்ரே 1820-ல் ஒரு புகழ்மிக்க கட்டு ரையில், "நம்முடைய இடத்தில் நாம் இருப்போம். ஆனால், ஐரோப்பாவின் அமைதிக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், பேச் சளவில் மட்டும் நின்றுவிடமாட்டோம். வேண்டிய எச்சரிக்கை யான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்போம்" என்று எழுதி யுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

1818-ல், எய்க்ஸ்-லா-சேப்பல் (Aix-La-Chapelle) என்ற இடத்தில் நடைபெற்ற முதல் காங்கிரஸ் கூட்டத்தில் அவர் பங்கு கொண்டதுமட்டுமின்றி, நேசநாடுகளின் சில பகுதிகளிலிருந்து பிரான்ஸ் வெளியேற வேண்டுமென்றும், ஆனால், அதே சமயத்தில் நேச நாடுகள் ஒரு சர்வதேச போலீசாக பணியாற்றவேண்டிய தில்லையென்றும், அப்பொழுதுள்ள அரசாங்கங்களும், அவை களின் நிலப்பகுதிகளும் ஆக்கிரமிப்பிற்குள்ளாகாதபடி பாது காப்பதாகவும் உறுதி கூறினர். 1820-ல் திரோப்பாவில் (Troppau) நடைபெற்ற மாநாட்டில் ஸ்பெயினிலும், ஜெர்மனியிலும்

ஏற்பட்ட உரிமைப் போராட்டங்களை மெட்டர்னிக் அடக்கியதால், பெரிய பிளவு ஏற்பட்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு, லேய் பாச்சில் (Laibach) மற்றுமொரு மாநாடு கூடியது. இத்தாலியில், ஆஸ்திரியர்கள் கோரிய சில உரிமைகளை அவர் அனுமதித்த போதிலும், ஆஸ்திரியாவின் ஆதிக்கம் இத்தாலியில் ஏற்படுவ தற்கு அவர் சம்மதிக்க முடியாது என்று வெளிப்படையாகக் கூறினர். ஐரோப்பாவிலுள்ள ஜனநாயகத்தைப் பின்பற்றும் நாடுகளுக்கும், வல்லரசு நாடுகளுக்கும், ஏற்பட்டிருந்த பிளவு, புதிய நிகழ்ச்சிகளால் சிறிது குறைந்திருந்தது. கிரேக்கர் களுடைய எழுச்சியால், ரஷ்யாவும், ஆஸ்திரியாவும் பகைத்துக் கொண்டன. மேலும் பிரான்ஸ் ஸ்பெயின் நாட்டு விவகாரங் களில் தலையிட்டது.

1822-ல் வெரோனாவில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில், அவர் கலந்து கொள்ள கொடுத்து வைக்கவில்லை. புனிதக் கூட்டமைப் பிலிருந்து (Holy Alliance) பிரிட்டன் வெளியேறுவதென்று அக் கூட்டத்தில்தான் முடிவு செய்தது. இந்த வகையில் கேனிங்கின் கொள்கையை, கேஸல்ரேயும் பின்பற்றினர் என்பது அவர் எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் பரிசீலனை செய்யும் பொழுது தெரிய வரும். தென் அமெரிக்கக் குடியரசுகள் ஸ்பெயின் நாட்டு ஆதிக் கத்தை எதிர்த்துப் போராடின. அக் குடியரசுகளை ஆதரிக்க வேண்டுமென்று அவர் விரும்பினர். மேலும், பிரிட்டனுடைய நலன்களைக் கருதியாவது, துருக்கியப் பேரரசு சீர்குலையாமல் பாதுகாக்கப்படவேண்டுமென்றும், அதே சமயத்தில் கிரேக்கர் களின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கவேண்டுமென்று அவர் தம்முடைய குறிப்புகளில் எழுதியிருந்தார் என்பது கவனிக்கத் தக்கது. அவருடைய பொறுப்புகள் மிகவும் அதிகமானவை. அத்துடன் காமன்ஸ் சபையில் கட்சியையும் தலைமை தாங்கி நடத்த வேண்டிய பொறுப்பும் அவரைச் சார்ந்ததேயாகும். மேலும், அரசனுக்கும் கேபினெட் சபைக்கும் அடிக்கடி சிக்கல் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. இக் காரணங்களால், அவ ருடைய உடல் நலம் மிகவும் கெட்டுவிட்டது இறுதியில் அவருடைய வாழ்வு தற்கொலையில் முடிகிறது.

அப்பொழுது ஐரோப்பிய பிரச்சினையைவிட, பிரிட்டனில் ஏற் பட்ட நிலையையே மிகவும் கவனத்துடன் அவர்கள் ஆராய வேண்டி யிருந்தது. போரினால் ஏற்பட்ட சேதங்களை அவர்கள் சீர்மைக்க வேண்டியிருந்தது. அமைதி ஏற்பட்டதால் பொருளாதார மந்த நிலையும் ஏற்பட்டது; அதையும் சமாளிக்க வேண்டியிருந்தது. போரினால், கடன் 240 மில்லியன் பவுன்களிலிருந்து 861

மில்லியன்கள் வரையிலும், அதிகமாகிவிட்டது. அதற்காக வட்டி, செலவினத்தில் பாதிக்குமேல் சென்றுவிட்டது. தானிய விலைகளும், வாடகைகளும், இரண்டு பங்கு உயர்ந்து விட்டன. தாள் நாணயத்தின் மதிப்பு மிகவும் குறைந்து விட்டது. அப்பொழுதிருந்த பொருளாதார அமைப்பில் உள்ள குறைபாடுகள் வெளிப்பட்டன. தங்கத்தின் விலை, 1813–1814-க்குள் 50 சதவிகிதம் குறைந்து விட்டன. ஐரோப்பாவிற்கு வேண்டிய தேவைகள் குறைந்து விட்டது. இரும்பின் விலை 20 பவுன்களிலிருந்து 8 பவுன் வீதம் ஒரு டன்னுக்கு இறங்கி விட்டது. எல்லாப் புதிய வயல்களுக்கும் வேலி அமைப்பதற்கு நிறைய பணம் செலவாகியது. அதற்கான பணத்தை கடனாக வாங்கியதால், அந்தச் சூழ்நிலையில் அக் கடனையும் அடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. கடற்படை ஒரு வருடத்திற்குள் 100,000த்திலிருந்து 33,000 பேருக்கு குறைக்கப்பட்டுவிட்டது. இராணுவத்திலிருந்து திரும்பிய போர் வீரர்கள் வீடு சென்று, மற்றப் பட்டினிப்பட்டாளமான நூற்பவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

பல பிரச்சினைகளைப் பொதுச்சபையில், பல்வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கிடையே விவாதிக்க வேண்டியதாயிற்று. அதனால், அரசாங்கத்தின் பலவீனம் அம்பலத்திற்கு வந்தது. அவர்களுடைய முதல் பிரச்சினை, நிலக்கிழார்களின் உரிமைகளைப் பாதுகாப்பது. 1815-ல் இயற்றப்பட்ட தானியச் சட்டம் (Corn Law) வெளிநாடுகளிலிருந்து தானியங்களை இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை குவார்டருக்கு 67 ஷில்லிங்குகளுக்கு கிடைக்கும் பொழுது, இத்தச் சட்டம் இயற்றிய பிறகு குவார்டருக்கு 80 ஷில்லிங் விலையாகி விட்டது. இரண்டாவதாக, இரண்டு கட்சிகளும் ஒருமித்து வரியைக் குறைக்க வேண்டுமென்று கூச்சலிட்டன. தீவிரவாதிகளான புரோகாம், ஹியூம் ஆகியோர் மிக அதிகமாகக் கூச்சலிட்டனர். அதனால் கேபினட் சபைக்கு விருப்பமில்லாது வருமானவரியை ரத்து செய்ய வேண்டி வந்தது. வருமான வரியை ரத்து செய்ததனால், நேரடியாகவே, வாழ்க்கைக்கு வேண்டிய மிக அவசியமான பொருள்கள்மீது அதிக வரிகளைப் போடவேண்டியதாயிற்று. எல்லாக் கட்சிகளைச் சார்ந்த கூட்டத்தினரும் கட்டுப்பாடற்ற வாணிகம் (Laisser-Faire) வேண்டுமென்று விரும்பினர். லிவர்பூலும், அவருடன் சேர்ந்து நிதி, வர்த்தகத் துறைகளில் நிர்வாகம் செலுத்திய மந்திரிகளும், ஹஸ்கிஸன் வாலாஸ், ராபின்ஸன் ஆகியவர்களும் 1822-ல் இந்தமுறை வருவதற்கு முன்பே, இந்தக் கட்டுப்பாடற்ற வாணிகத்தினால் எல்லாக் குறைகளும் சமமாகிவிடும் என்று கருதினர்கள். இதனால், கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பெனியின், இந்தியாவில் வியாபாரம்

செய்யும் தனி உரிமை நீக்கப்பட்டது. தானியங்கள் ஏற்றுமதி செய்ய இருந்த தடைகள், தொழிலாளர் பயிற்சி சட்டங்கள் எல்லாம் நீக்கப்பட்டன. கேபினட் சபையில் ஏற்பட்ட காராசாரமான விவாதங்களுக்குப் பிறகு 1819-ல் ஒரு சிறப்பு கமிட்டியில் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு (அதற்கு பீல்தான் தலைவராக இருந்தார்) பாங்கர்கள் ரொக்க பண உதவிகளை மீண்டும் அளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. உலக வர்த்தகம் வளர்ச்சி அடையும்பொழுது, இவ்விதமான வழிகள் செழுமைக்கு வழிகோலலாம் என்று கருதப்பட்டது. ஆனால், அந்தச் சமயத்தில் இவை பணச் சுருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், மற்றும் பல தீமைகள் இதனால், விளையும் என்பதைக் காட்டின.

1816-17, 1819, ஆகிய ஆண்டுகளில் பல தீமைகள் ஏற்பட்டன. மோசமான அறுவடைகளும் அதிக உணவு விலைகளும், கொடிய வேலை நிறுத்தங்களும் ஏற்பட்டன. கிழக்கு மிட்லாந்தில் விவசாயிகள் இயந்திரங்களை உடைக்க முற்பட்டனர். இதைப் போலவே நாட்டிங்காம், லெய்செஸ்டர், ஆகிய இடங்களில் நெசவு வேலை செய்யும் தொழிலாளிகளும் இயந்திரங்களை உடைத்தனர். இந்தப் போராட்டம் நிறைய சொத்துரிமைகளை வைத்திருப்பவர்களிடம், உதாரணமாக எல்டன், ஸிட்மவுத் அல்லது கேனிங் ஆகிய மந்திரிகள் போன்ற செல்வர்களிடம் ஒரு கலகத்தை ஏற்படுத்தியது. மற்றொரு புரத்தில், இந்தப் போராட்டத்தில் பொறுப்பற்ற சில அரசியல் தலைவர்களும், சேர்ந்து மக்களைத் தவருக இழுத்துவிட்டனர். இந்த இருதரப்பினரிடையேதான் இந்தப் போராட்டம் முக்கியத்துவத்தை அளித்தது. பலாத்காரத்தை தூண்டிவிடும் சொற்பொழிவுகளை, ஹண்ட் என்பவர் நிகழ்த்தினர். கம்பளங்களை உற்பத்தி செய்கின்ற லங்காஷயர் தொழிலாளிகள் முட்டாள்தனமாக லண்டன் நகரின் மீது படையெடுத்தனர். தளவாடங்களைக் கைப்பற்றினர். கூட்டத்திலே ஏற்பட்ட சில கொலைகள், சதிகள், நிந்தனைகள், தேசத்துரோகம் ஆகிய போன்ற கருத்துக்களைச் சில மட்டமான பத்திரிகைகள் வெளியிட்டன. சிவப்பு கொடிகளும், மற்றும் 1789-ல் தோன்றிய புரட்சி சின்னங்களும் சர்வ சாதாரணமாக எங்கும் காணப்பட்டன. இவ்விதமான செயல்களைத்தடுத்து நிறுத்துவதற்கு, பொதுச் சபையிலிருந்து சில இரகசிய கமிட்டிகள் நிறுவப்பட்டன. இரண்டு கட்சிகளிலிருந்தும் அங்கத்தினர்கள் இந்தக் கமிட்டியில் பங்கு கொண்டனர். அவர்களுடைய அறிக்கையின்படி, அரசியல் அமைப்பைக் கவிழ்ப்பதற்கான திட்டங்கள் உருவாகிவருகின்றன வென்றும், தெரியவந்தது. அதனால் ஹேபியஸ் கார்பஸ் 1817-18-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. எங்கெங்கு நாசவேலைகள் நடக்கப்

போகிற்தென்று அறிந்து சொல்லுவதற்கு உளவாளிகளை அமர்த்தினர். விவசாயிகளை இராணுவத்தில் சேர்ந்து அதைப் பலப்படுத்துமாறு ஆளவந்தார்கள் வேண்டிக் கொண்டனர். அரசாங்கத்தைச் சார்ந்தவர்களில் ஒருவரான ஆலிவர் என்பவரே உளவாளி என்று அரசாங்கம் தெரிந்து கொண்டஉடன் அரசாங்கம் அதிர்ச்சி அடைந்துவிட்டது. இந்த அநியாத்தை அரசாங்கம் பொறுத்துக் கொண்டு இருக்க முடியவில்லை. அரசாங்கம் இந்த நிலைமையிலும், பொதுப்பணிகளுக்கு நிறைய செலவு செய்தது. கேலிடோனியன் கால்வாய் வெட்டுவதற்கும் புதிய கோயில்களைக் கட்டுவதற்கும் ஒரு மில்லியன் பவுன்கள் செலவு செய்யப்பட்டன. மூத்த பீலின் 1819-தொழிலாளர் சட்டத்தை ஆதரித்தும், அரசாங்கம் பல செலவுகளைச் செய்தது. இந்தத் தொழிலாளர் சட்டத்தினால் ஒன்பது வயதிற்குட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலைகளிலும், பஞ்சாலைகளிலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளக்கூடாது என்றும், இரவலர்களுக்குப் பயிற்சி அளிப்பது சில தூரமான பகுதிகளிலும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், கைத்தறி நெசவாளர்களின் துயரம், எந்த அரசாங்கத்தினாலும் தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையாகிவிட்டது.

நாட்டில் ஒழுங்கான ஆட்சியை நிறுவ கடமைப்பட்டிருந்த போதிலும், சில பழைய ஆட்கள் அடக்கு முறையினால்தான் ஒழுங்கை நிறுவமுடியும் என்று கருதினர்கள். தொழிலாளர்கள் பாராளுமன்றத்தின் சீர்த்திருத்தங்களை விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவோ, அல்லது நினைத்துப் பார்க்கவும் கூட அரசாங்கம் முயற்சி செய்யவில்லை. தொழிற் சங்கங்கள் அமைக்கக் கூடாது என்ற சட்டம் வீழ்ந்து விட்டது. தொழிற்சங்க நடவடிக்கைகள் நீடித்து நடைபெற்றன. இந்தப் பொருளாதார கவனத்திலிருந்து அவர்களை வேறு பக்கம் திருப்பி விடலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை. 1819-ல் நடந்த சில நிகழ்ச்சிகள் இந்தக் குறைபாட்டை நன்கு எடுத்துக் காட்டின. பர்மிங்காம் நகரத்திற்கு எந்த பிரதிநிதித்துவமும் கராததனால், அவர்களுக்குள்ளேயே ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். லங்காஷயரிலும் இவ்விதமான அரசியல் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆகஸ்டு மாதத்தில், 'பீட்டர்லு' என்ற இடத்தில் நடந்த பெரிய கூட்டத்தில் சுமார் 80,000 பேர்கள் வரையிலும், பேச்சாளன் ஹண்ட் சொற்பழிவாற்றுவதைக் கேட்க கூடிவிட்டார்கள். மேன்செஸ்டரிலுள்ள செயின்ட் பீட்டர் வயலில்தான் இந்தக் கூட்டம் நிகழ்ந்தது. கூட்டத்தில் ஹண்ட் பேசும்பொழுது

அவரைக் கைது செய்ய அங்குள்ள மேஜிஸ்டிரேட்டுகள் காத்திருந்தனர். தல விவசாயிகள் அவரைக் கைது செய்ய முற்பட்ட பொழுது அவர்களைக் கூட்டம் சூழ்ந்துகொண்டு, கைது செய்ய முடியாதபடி தடுத்தனர். அதனால் ஒரு குதிரைப் படையை அனுப்ப வேண்டியதாயிற்று அதன் பிறகு அரசாங்கத்தின் நிலை மிகவும் சிக்கலாகிவிட்டது. பதினெரு ஆட்கள் கொல்லப்பட்டனர்; பலர் காயமுற்றனர். மேஜிஸ்டிரேட்டுகள் தற்காப்புக்காக இவ்வித நடவடிக்கைகளை எடுத்தனர் என்று கூறப்பட்டது. கூட்டத்தினருக்கு ஆவேசம் கிளம்பிவிட்டது: அவர்கள் பயமுறுத்தும் வார்த்தைகள் அடங்கிய அட்டைகளை ஏந்தி, முதலில் விவசாயிகளைத் தாக்கினர் என்று கூறப்பட்டது. கேனிங் உட்பட, கேபினட் சபை, அவர்களுடைய இந்த வன்முறை தவறு என்று உணர்ந்தபோதிலும், வெளியிலே அவர்கள் எடுத்த நடவடிக்கை சரியானதே என்றும், இல்லாவிடில் ஒழுங்கையும், சட்டத்தையும் பாதுகாக்கவே முடியாதென்றும் அறிக்கை வெளியிட்டனர். அதற்குப் பின்பு அவர்கள் ஆறு சட்டங்களை இயற்றினர்.

இந்தச் சட்டங்களை இயற்றும்பொழுது, அவர்கள் மாறுதலை, கூடிய வரையில் தவிர்க்கத்தான் பார்த்தார்களே தவிர பிற்போக்கான கொள்கைகளை வலியுறுத்தவில்லை. சில இன்னும் சட்டபுத்தகத்தில் இடம் பெறுகின்றன. ஒரு சட்டம், தனிப்பட்டவர்கள் படையமைப்பதைத் தடுத்தது; மற்றொரு சட்டம் ஆயுதங்கள் வைத்திருக்கிறார்களா என்று பரிசோதனை செய்ய மேஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அதிகாரம் அளித்திருந்தது. கூட்டங்களைப் பொறுத்தவரையில், கவுன்டி, பரோ கூட்டங்கள் எவ்விதத் தடையில்லாமல் நடைபெறலாம் என்றும், பின்பு விக் கட்சியின் திருத்தத்தின் பேரில், அந்தரங்கமாக நடைபெறும் கூட்டங்களிலும் தலையிட வேண்டிய அவசியமில்லை என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பெரிய கூட்டங்கள் நடத்துவதைப்பற்றித்தான் அவர்கள் கவலைப்பட்டார்கள். ஏனெனில் பல பகுதிகளிலிருந்தும் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு கூட்டம் குவிந்து விடுகிறது. அப்படி நடைபெறும் கூட்டங்களும்கூட, மேஜிஸ்டிரேட்டுகளின் உத்திரவு பெற்ற பிறகு நடத்தலாம் என்று அறிவிக்கப்பட்டது. அவர்களுடைய பெரிய தலைவலி, மட்டமான பத்திரிகைகளில் வெளியிடப்படும் சட்ட விரோதமான செய்திகளைப் பற்றியதாக இருந்தது. அவற்றையும்கூட.. நிறைய ஸ்டாம்பு வரிகளை விதித்துக் கடடுப்படுத்தினர். மேலும் சட்ட விரோதமானதும், அரசாங்கத்தை நிந்தனை செய்யுமளவில் பிரசுரிக்கும் செய்திகளைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு நீதிமன்றம் அமைத்து, சட்டவிரோத

மென்றுபட்டால், அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையை பறிமுதல் செய்யவும் அனுமதி அளித்தது.

இந்தப் புரட்சியாளர்களின் பயங்கரமானத் திட்டமொன்று 1820-ல் பிப்ரவரி மாதத்தில் நிகழ்ந்தது. இந்த 'சேடோ வீதி சதித்திட்டம்' லண்டன் தீவிரவாதிகளின் தலைவராக திஸல்வுட் என்பவர் சில பயங்கரவாதிகளைத் தூண்டி கேபினட் சபையினரைக் கொல்ல முயற்சி செய்தனர். பிறகு அவர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டார்கள். இதற்குப் பிறகு நெருக்கடியான காலம் தீர்ந்தது. ஆனால், வாழ்க்கைதரத்தில் நிலையற்ற தன்மை இருந்தது. ஆனால், 1816–1819-ல் இருந்த நிலைக்கு விலைவாசிகள் உயரவில்லை. இரவலர் வரி மிகவும் கீழிறங்கிவிட்டது. ஏற்று மதிகள் பெருகின; வர்த்தக வளர்ச்சி மக்களின் அதிருப்திகளைப் போக்கியது, மற்றும் அவர்களுடைய அதிருப்திகள் பல வகைகளில் வேறு பக்கங்களில் திருப்பப்பட்டன.

1820-ல் வயதான அரசன் இறந்துவிடவே, நான்காவது ஜார்ஜின் வெறுப்புக்குப் பாத்திரமான கேரோலின் ராணியை விவாகரத்து செய்யும் பிரச்சினை மீண்டும் அடிபட்டது. இந்த விவகாரம் முடியாட்சிக்கே ஒரு ஆட்டத்தைக் கொடுத்துவிட்டது. அதனால் கேபினட் சபையும் மாற்றி அமைக்கப்பட வேண்டியதாயிற்று. அவர்களுக்கு விவாகரத்து பிரச்சினை அருவருப்பைத் தந்தது. ராணி ஏதோ தவறு செய்திருக்கிறாள் என்பதை அவர்கள் நம்பியபோதிலும், வெறும் இத்தாலியர்களின் ஆதாரங்களை வைத்துக்கொண்டு, இந்த விவகாரத்தை அம்பலப்படுத்துவது நாட்டின் அமைதியைக் குலைத்துவிடும் என்று அவர்கள் கருதினர்கள். அதனால் கேரோலினை எப்படியாவதும் நிறைய வருமானத்தை அளித்து சரிசெய்து வெளி நாட்டிலேயே வசிக்கும்படி செய்துவிடவேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தார்கள். ஆனால், அவள் மீண்டும் திரும்பிவிடவே, அவர்களுடைய எல்லாத் திட்டங்களும் கைவிடப்பட்டன. அவளுடைய ஆலோசகரான பிரோகாமையும் அவள் ஒதுக்கிவிட்டாள். காபெட்டும் அவருடைய கூட்டத்தினரும் வற்புறுத்தியதால் வேண்டா வெறுப்பாக கேபினட், 'துயரங்களும், தண்டனைகளும்' என்ற மசோதாவை (Bill of Pains and Penalties) கொண்டு வந்தனர்.

1820 வரையிலும் இந்த அவமானம் நீடித்தது. பின்பு இந்த மசோதாவும் கைவிடப்பட்டது. பிரபுக்கள் சபையில் அவர்களுடைய பெரும்பான்மை பலத்திற்கு ஒன்பது பேர் குறைந்து விட்டதே இதற்குக் காரணம். இந்த மசோதாவை அவர்கள் 'காமன்ஸ் சபையில்' கொண்டுவர விரும்பவில்லை. பாராளு

மன்றத்தில், இந்த விவாகத்தை ரத்து செய்கின்ற மசோதா கொண்டு வந்ததைத் திருச்சபையினரும் சிறிதும் விரும்பவில்லை. இந்த மசோவை எதிர்த்து ஆர்பாட்டங்களும், ராணிக்குக் கடிதங்களும், இராணுவத்திலே கலகக் குறிகளும் காணப்பட்டதனால், லிவர்பூலும், அவருடைய கேபினட் சபையின் பாதிக்குமேற்பட்டவர்களும், இந்த நிலை நீடித்திருப்பதை விரும்பவில்லை. நான்காவது ஜார்ஜ் எப்படி அவருடைய மனைவியை மோசமாக நடத்தினாரோ அதைப்போலவே அரசாங்கமும் அரசனைத் திருப்தி செய்வதற்காக ராணியை அப்படி நடத்துவது தவறு என்று கருதினார்கள். மொத்தத்தில் மக்கள் ராணிமீது எவ்வளவு அக்கறை வைத்திருந்தார்கள் என்பது விரைவிலே புலனயிற்று. ராணி பாராளுமன்றம் அளித்த வருவாயை ஏற்றுக்கொண்டாள். தவிர முடிசூட்டு விழாவிலும் அவள் ஒதுக்கிவைக்கப்பட்டாள். பின்பு 1821-ல் அவள் இறந்துவிட்டாள்.

தண்டனைக்குரிய விதிமுறைகளை ஒப்புக்கொள்வதைவிட கேனிங் பதவியையே விட்டு விலகிவிட்டார். அரசன் மந்திரிகளின்மீது ஆத்திரமடைந்தார். பீல் அப்பொழுது பதவியில் இல்லை. இருந்தாலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார். 1822-ல் கேஸல்ரேயும் இறந்தவுடன், வெளி விவகாரங்களையும், காமன்ஸ் சபையில் கட்சித் தலைமையும் யாரிடம் ஒப்படைக்கப்படும் என்ற ஆவல் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அரசியல் அமைப்பின்படி இதற்குச் சரியான பரிகாரம் தேடுவது மிக முக்கியமானதாக இருந்தது. 1783-ல் பிட்டின் நியமனத்திற்கும், 1880-ல் கிளாட்ஸ்டன் தேர்ந்தெடுக்கப் படுவதற்கும் இடையே நடந்த எந்த முக்கியமான நிகழ்ச்சிக்கும் இதை ஒப்பிடலாம். அரசனுடைய நீடித்த எதிர்ப்பிற்கும், ஆதரவாக இருந்த எல்டன்போன்ற மந்திரிகளின் தாக்குதல்களாலும் லிவர்பூல், 'எவரையும் ஒதுக்கிவிடுதல்' என்ற கொள்கையைப் பலமாகக் கண்டித்து, இப்படியே இது தொடர்ந்து நடந்தால் தானே ராஜினாமா செய்வதாகவும் பயமுறுத்தி, கேனிங்கின் பதவி நியமனத்தைச் சாதித்தார்.

1822–23-ல் கேபினட் சபை மாற்றி அமைக்கப்பட்டது. இதில் பழைய ஆட்கள் நீக்கப்பட்டனர். கேஸல்ரேயுக்குப் பதிலாக கேனிங்கும், சிட் மவுத்திற்கு பதிலாக பீலும், வான்ஸிடார்ட்டுக்குப் பதிலாக ஹஸ்கிஸனும் மற்றும் கிரென்வில் ஆதரவாளர்களும் கொண்டுவரப்பட்டார்கள். ராபின்ஸன் எக்ஸ்செக்கராகவும், கேனிங்கை பின்பற்றுகின்ற ஹஸ்கிஸன் வர்த்தக போர்ட்டின் தலைவராகவும், பதவியில் அமர்த்தப்பட்டார்கள். லார்ட்லெப்டி

னன்டாக (Lord-Lieutenant) மார்குவிஸ் வெல்லஸ்லியும் சேர்த்துக் கொண்டது, 'கத்தோலிக்க' பிரிவினருக்கு மனநிறைவை உண்டாக்கியது.

லிவர்பூல் இந்த அரசாங்கத்தை ஒரு கொள்கை அடிப்படையில்தான் அமைத்தார். பிட்டின் பரிதாபமான தோல்வி அவருக்கு புதிய அநுபவத்தை அளித்திருந்தது. அதாவது கத்தோலிக்கர்களின் பிரச்சினையை அப்படியே விட்டுவிடவேண்டுமென்பதுதான் அவர்களின் விருப்பம். மந்திரிகளின் விருப்பப்படி வாக்கு அளிக்கும் உரிமையை அவர் பறித்துக்கொள்ள விரும்பவில்லை. மேலும் அரசாங்கம் தேசிய நலன்களுக்காக ஒன்று திரட்டப்பட்டதாகும் அப்படியிருந்தால்தான் போரை முடிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் முடியும் என்று கருதினர். கத்தோலிக்க பிரச்சினையைத் தவிர இன்னும் மற்ற பிரச்சினைகளையும் உடனடியாகச் சமாளிக்கவேண்டியிருந்தது. தானியங்கள், பாராளுமன்ற சீர்திருத்தம் வெளிவிவகாரக் கொள்கைகள், சமுதாயக் கொள்கைகள் ஆகியவற்றையும் காலம் கடத்தாது கவனிக்கவேண்டியிருந்தது. 1820-லிருந்து 1827வரை, லிவர்பூல் ராஜிநாமா செய்யும்வரை, நடந்த நிகழ்ச்சிகளைக் கவனிக்கும்பொழுது ஒரு முக்கியமான மாறுதலை நாம் காணமுடிகின்றது. இந்தப் புதிய பிரச்சினைகள் பழைய கட்சிகளை மனமாற்றமடையச் செய்திருக்கின்றன. பிட்டின் டோரி பரம்பரையினர் இப்பொழுது அவசியத்தின் காரணமாகப் பிரிந்து விட்டனர் இந்த பிரிவினால் கேபினெட் சபைக்கும் அழிவு ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் கேபினட்டிலேயே ஒரு பிரிவினர் விக் மிதவாதிகளுடன் சேர்ந்துகொள்ள விரும்பினர். அதனால் லிவர்பூலுக்கு மாறுபட்ட இரண்டு பிரிவினரைச் சமாளிக்கவேண்டியிருந்தது. ஒரு பிரிவில் கேனிங், ராபின்ஸன், ஹஸ்கிஸன் ஆகியோரும் மற்றொரு பிரிவில் வெலிங்டன், எல்டன், பீல், ஆகியோரும் முக்கிய பங்கெடுத்துக்கொண்டனர்.

இந்த ஆண்டுகளில், இரண்டு முக்கியமான வகைகளில், அடிப்படைச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. முதல் சீர்திருத்தம், லிவர்பூல், மற்றும் அவருடைய உதவியாளர்களான ஹஸ்கிஸன், ராபின்ஸன், வாலஸ் ஆகியவர்களால் கொண்டு வரப்பட்டது. இந்த வேலையை பிட் ஆரம்பித்துவைத்தார். ஆனால், போர் ஏற்பட்டதனால் தடை ஏற்பட்டு நின்றுவிட்டது. அதனால் லிவர்பூலே தொடர்ந்து செய்த இந்த வேலையை, பீலும், கிளாட்ஸ்டனும் முடிக்க வேண்டியதாயிற்று. இவை நாட்டின் பொருளாதாரத்தையே சீரமைக்கவேண்டிய மாபெரும்

பணிகளாகும். இந்தக் கொள்கையை, ரிக்கார்டோ மற்றும் பல பொருளாதார அறிஞர்கள் ஆதரித்தார்கள். அவர்களுடைய ஆலோசனைகளையும் அரசாங்கம் கேட்டுத் தெரிந்து கொண்டது. இதிலுங்கூட, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சில முக்கியத் துவம் இல்லாதவர்களும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். பழைய பொருளாதார முறைகளான, அதிகப்படியான பாதுகாப்புகளும், ஆங்கிலேயக் கப்பல்களில்தான் பண்டங்களை ஏற்றிச்செல்ல வேண்டும் என்ற தனி உரிமைகளும், அமெரிக்கா, சுதந்திர நாடான பிறகும், ஸ்பானிய காலனிகள் சுதந்திர நாடுகளான பிறகும், ஃபிரஷ்யா போன்ற புதிய நாடுகள் ஆங்கிலேயத் தொழில்களுடன் போட்டியிடுவதும், நாமே ஓரளவிற்கு இறக்குமதி உணவு பண்டங்களை நம்பி வாழ்வதும் போன்ற மாற்றங்கள் காலம் கடந்து போன கொள்கைகளாகும்.

கொள்கை அளவில் நமது மந்திரிகள் கட்டுப்பாடற்ற வாணிகத்தை ஆதரிப்பவர்களாகவும், தடையில்லாத பரிமாற்றங்களும், குறைந்த விலைவாசிகளை விரும்புகின்றவர்களுமாக இருந்தனர். 1821-ல் ரொக்கமாகப் பணம் தருதல் என்ற கொள்கையைக் கடைப்பிடித்த பின்பு, அதையே தொடர்ந்து நீடித்தனர். ஆனால், இந்தக் கொள்கையை எதிர்த்து, விவசாயிகளும், ஜனநாயகவாதிகளும் முறையிட்டனர். அவர்கள் பணவீக்கத்தைக் கொண்டுவந்தால் எளிதாக யுத்த கடன்களை அடைத்துவிடலாமென்றும் நினைத்தனர். ஒவ்வொரு ஆண்டும் ராபின்சன் சமர்பித்த வரவு செலவு திட்டத்தில் வரிகள் குறைக்கப்பட்டு வந்தபோதிலும், வருவாய் அதிகமாகிக் கொண்டே வந்தது.

உள்நாட்டிலே இருந்த மற்ற தடைகளையும் அவர்கள் அகற்ற பாடுபட்டனர். பிரிட்டனுக்கும், அயர்லாந்துக்கும் இடையே நின்ற பல காப்புவரிகளை ரத்துசெய்தனர். பல பழைய வரிகளிலிருந்து நிலக்கரி வியாபாரத்தை மீட்டு புதிய ஆதரவை அளித்தனர். உப்புமீது விதிக்கப்பட்ட கலால் வரியையும், ஸ்பிட்டால்பீல்ட்ஸ் பட்டுத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் பட்டுத் துணிகளின் மீதிருந்த வரிகளையும். அந்தத் தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்த பழைய கூலி விகிதங்களையும் அவர்கள் ரத்து செய்தனர். கலப்பு வரிகளை பரிசீலனை செய்து சீரமைத்ததும் மற்றொரு பெரிய சாதனையாகும். மூலப்பொருள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் பெரிதும் குறைக்கப்பட்டன; அரசாங்கத்திலிருந்து மானியம் அளிப்பது நிறுத்தப்பட்டது; தயாரிக்கப்பட்ட பொருள்களின்மீது 20 சதவீதம் வரிகளை விதிப்

பதுதான் அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது. பிரிட்டன் தன்னுடைய நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதை நீடித்து வந்தது. ஆனல் அந்தப் பாதுகாப்பு ஓரளவோடுதான் நின்றது. ஏதோ குறிக்கோளைப் பின்பற்றித் தான், இந்தக் கொள்கையை அவர்கள் மேற்கொண்டார்கள். ஆனல், அமைப்பில், 1825-ல் இயற்றப்பட்ட, 'ஒன்று திரட்டிய சட்டம்' (Consolidating Act) ஆயிரம் சட்டங்களுக்கு மேற்பட்டு ரத்து செய்து, புதிய காப்பு வரித்திட்டத்தை நாட்டிற்கு அளித்தது.

மூன்ருவதாக, ஹஸ்கிஸன் ஆங்கிலேயப் பேரரசின் வர்த்தகக் கொள்கையைச் சீரமைப்பதில் தீவிரமாக முனைந்தார். வெளிப் படையில் நாவாய்ச் சட்டங்கள் பயனற்றவையாக இருந்தன. 1825 முடிவில், இரண்டு அமெரிக்காக்களும் அவைகளின் கப்பல் களிலே நேரடியாகப் பிரிட்டனுக்கு பண்டங்களை அனுப்ப அனுமதிக்கப்பட்டன; ஐரோப்பாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் பிரிட்டிஷ் கப்பல்களில் மட்டுமல்லாது, ஏற்றுமதி செய்யும் நாட்டுக் கப்பல்களிலும் அனுப்பப்பட்டன. நமது காலனிகள் நேரடியாக மற்ற அந்நிய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டன. வர்த்தகம் செய்கின்ற நாடுகளுடன் பரஸ்பரம் ஒப்பந்தங்களும், மற்ற சமத்துவமான முறையில் துறைமுக வரிகள், மற்றும் பல வியாபார முறைகளும் ஒப்புக் கொள்ளப்பட்டன. ஹஸ்கிஸன் பதவியைவிட்டு நீங்கிய பிறகும், அது பேரரசு திட்டத்தில் நிலைபெற்றுவிட்டது. நமது கப்பல் வியாபாரம் மட்டுமின்றி, ஆனல் எல்லா பேரரசு நாடுகளுக்கு மிடையே நடைபெறும் வியாபாரமும், மற்றும் ஐரோப்பிய நாடு களல்லாது மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் அந்நியரது கப்பல்களில் கொண்டுவரப்படாமலும் திட்டம் வகுக்கப்பட்டது. குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் ஏற்றுமதிகளுக்கும், இறக்குமதிகளுக்கும், நல்ல சலுகைகள் தரப் பட்டன. அதனல் மேற்கு இந்திய சர்க்கரை, கனடா மரம், ஆஸ்திரேலியாவின் கம்பளத்திற்கும் ஏற்றுமதி செய்வதற்கு நல்ல வசதிகளும், சலுகைகளும் செய்து தரப்பட்டன.

1825–26-ல் தென் அமெரிக்காவில் தோன்றிய மிகைப்பட்ட யூக வாணிகத்தினல் வர்த்தக நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. அதனையொட்டி லிவர்பூல் மற்றுமொரு சீர்திருத்தத்தைச் செய்ய முன்வந்தார். இந்தச் சீர்திருத்தம் பேங்கிங் முறையில் செய்யப் பட்டது. ஸ்காட்டுகளைவிட பேங்கிங் வளர்ச்சியில் ஆங்கிலே யர்கள் சிறிது பின்னடைந்திருந்தார்கள். இங்கிலாந்தில்

பேங்கிங் சலுகைகள் அதிகமாகக் காணப்பட்டாலும், அதனுடைய உதவிகள் சிறிதாகத்தானிருந்தன. ஆங்கிலேய கூட்டுப் பங்கு (Joint-Stock) பாங்குகளின் தனி உரிமை இதன் பிடியில்தான் இருந்தது. அதனுடைய பேங்க் நோட்டுகள் விநியோகமும் தங்கக் காப்பு உறுதியும் (Gold Reserves) சரியானபடி நிர்வகிக்கப் படவில்லை. அதன் கீழ் ஏறக்குறைய அறுபது தனியார் நடத்தும் சிறிய பேங்குகள் லண்டனில் இருந்தன: சுமார் 800 பேங்குகள் மாகாணங்களில் இருந்தன. அந்த பேங்கு நோட்டுகளின் மூலமாகத்தான், லண்டனுக்கு வெளியே நடந்த பெரும்பான்மை யான வியாபாரமும் நடந்துவந்தது. ஒவ்வொரு நெருக்கடி நேரத் திலும் அதனுடைய பலவீனம் நன்கு வெளிப்பட்டது. வாட்டர்லு போருக்கும் 1830க்கும் இடையே மட்டும் சுமார் 200 பேங்குகள் சரிந்தன. லிவர்பூலின் வாக்குறுதியின் பேரில், அவசரமான நடவடிக்கைகள் எடுப்பது தவிர்க்கப்பட்டன. அதாவது ரொக்க பணம் தருவது நிறுத்தப்படுவதும், ஏனெனில் பெரும்பாலோர், தங்கள் பேங்கியில் போட்ட பணத்தைத் திரும்பப் பெற முயன் றனர்: 1826-ல் இயற்றப்பட்ட சில சட்டங்கள், ஐந்து பவுனுக்கு கீழ்தான் பேங்கு நோட்டுகள் வழங்கப்பட வேண்டுமென்றும், மாகாணங்களில் கூட்டு--பங்கு பேங்குகள் நிறுவப்படவேண்டும் என்று வலியுறுத்தின.

மற்றுமொரு பொருளாதார நடவடிக்கை, கேபினட் சபை யினால் எழவில்லை எனினும், எதிர்கால செழுமைக்கு வழி கோலியது. ஏற்கனவே 1799-ல் இயற்றப்பட்டிருந்த காம்பினே ஷன் சட்டம் (Combination Act) 1824–25-ல் ரத்து செய்யப் பட்டது. ஓரளவு சட்டபூர்வமாக தொழிற் சங்கங்கள் இயங்கு வதற்கும், வேலை நிறுத்தம் செய்வதற்கும், அவர்களுடைய நிலையை உயர்த்திக் கொள்வதற்கும் இந்த நடவடிக்கை வசதியாக இருந்தது. இந்த நடவடிக்கைக்குக் காரணமாக இருந்தவர் தீவிர வாதியும், தையற்காரனுமான பிரான்சிஸ் பிளேஸ் என்பவர். வெஸ்ட் மினிஸ்டர் தொகுதியில் அவர் இந்த இயக்கத்தின் மறை முகத்தலைவராக இருந்து நடத்தி வந்தார். இருப்பினும் தொழிற்சங்க வசதிகள் எப்படியும் ஆபத்தான சதித்திட்டங் களில்தான் முடியும் என்று கருதினர். உள்நாட்டுத் துறையில் பீல் கிரிமினல் சட்ட சீர்திருத்தங்களை நாட்டின் நலன் கருதி செய்ய முற்பட்டார். அவருக்கே ஏதாவது மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணமில்லாவிடினும், அவரது மனம், சில கொள்கைகளினால் கவரப்பட்டது. அவருடைய துறையில் பலவிதமான பிரச்சினைகள் அப்பொழுது இருந்தன. ஆனால் கிரிமினல் சட்டத்தைப் பொறுத்தவரையில் மக்களுடைய

அபிப்பிராயம் எதிராகவும், புண்படுத்துவதாகவும் இருந்ததனால் அந்தத் துறையில் சீர்திருத்தம் செய்ய அவர் ஆர்வம் கொண்டார். சுமார் இருநூறுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அப்பொழுது மரண தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. கடையில் திருடுதல், அல்லது மரத்தை வெட்டுதல் போன்றவைகளுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு வந்தன. கிரிமினல் சட்டம் இன்னும் காட்டுமிராண்டி காலத்தில் இருந்ததைப்போலவேதான் இருந்தது. இதன் கொடுமை காரணமாக எந்த ஜூரியும் மூன்றில் இரண்டு பங்கு குற்றச்சாட்டுகளுக்கு எந்த விதமான தண்டனையையும் வாங்கிக் கொடுக்கவில்லை. விக் கட்சியை சார்ந்த ரோமிலி, மேகின்டோஷ் ஆகியோர் இந்தப் பிரச்சினையை மேற்கொண்டபோதிலும், வெறிபிடித்த பிரபுக்களை எதிர்த்து, அவர்களால் எதையும் சாதிக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் பீலைத் தவிர வேறு யாரும் இவர்களுடைய எதிர்ப்பை சமாளித்து சட்டங்களை இயற்ற முடியாது. பீல் ஒருவரைத்தான் வலதுசாரியரான டோரிகள் நம்பி இருந்தனர். 1823-ல் இயற்றப்பட்ட பல சட்டங்கள் மூலமாக, சுமார் நூறு குற்றச்சாட்டுகள் வரைக்கும் மரண தண்டனையை ரத்து செய்யப்பட்டது.

பின்பு அவர் சிறை சீர்திருத்தங்களையும் கொண்டு வந்தார். கடனைத் தீர்க்காதவர்களுக்குச் சிறை தண்டனை கொடுக்கப் பட்டது. அவ்விதமான வழக்குகளில் பிக்விக்கின் வழக்குகள் பிரபல்யமானவை. போர்காலத்தில் அந்நியர்களைக் கண்காணிப் பதில் அக்கறை காட்டி அந்நியர் சட்டம் (Aliens Law) இயற்றப் பட்டது. ஆனல், இது மிகவும் கொடுமையாய் இருந்ததனல், அதுவும் மாற்றி அமைக்கப்பட்டது. அதைப்போல் சேன்சரி நீதிமன்றமும் பலத்த கண்டனத்துக்குள்ளாகியிருந்தது. சீர் திருத்தங்கள் காலம் கடத்தப்பட்டன. இந்த நீதிமன்றத்தையும் இவர் பல வகைகளில் மாற்றி அமைத்தார். நீதிமன்றத்தில் வேலை செய்கின்ற நீதிபதிகளுக்குப் பழைய முறைப்படி கட்டணங் களும், இனம்களும் தருவதை நிறுத்தி, ஒழுங்காகச் சம்பளங்கள் பெறும் வழியைச் செய்து கொடுத்தார். குற்றவாளிகளை வேறு இடங்களுக்கு அனுப்புவதையும் பரிசீலனை செய்தார். மற்றும் கிரிமினல் சட்டத்தை ஒன்றுகத் தொகுத்தும் அளித்தார். ஆகவே அரசாங்கம், மாற்றம் என்ற அலையில் மிதந்து வந்தது. ஆனல் அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்களிற் பலர் மாறுதல்களை வெறுத்தனர். கேபினட் சபையிலேயே பிளவுகள் ஏற்பட்டு விட்டன. இந்தப் பிளவுகளால் கேபினட் சபைக்கும் ஆபத்து நேர்ந்துவிடும் நிலையும் இருந்துவந்தது.

சமகாலத்திய நிகழ்ச்சிகள்

1816 பிரதம நீதிபதி மார்ஷல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பைப்பற்றிய விளக்கம் தருதல்.

1817 ஸ்பானிய துருப்புகளை வெனிசுலாவில் பொலிவர் தோற்கடித்தல்.

ரிக்கார்டோ எழுதிய 'பொலிடிகல் எகானமி' (Political Economy).

மூன்றுவது மராத்தியப் போர்.

கோல்ரிட்ஜ் எழுதிய 'பையாகிரபியா—லிட்டரேரியா' (Biographia Literaria).

1818 ஜெர்மன் ஸோலாவிரிணைப்பற்றி (Zolloverein) லிஸ்ட் திட்டமிடுதல்.

முதல் நீராவிக் கப்பல் அட்லான்டிக்கைக் கடக்கின்றது. கீட்ஸ் எழுதிய 'என்டிமியான்' (Endymion).

1819 கேரிஸ்பாட் ஆணைகள் (The Carisband Decrees) ஷெல்லி எழுதிய 'பிரோமிதியஸ் அன் பவுண்ட்' (Prometheus Unbound).

பைரன் எழுதிய 'டான் ஜுவான்' (Don Juan).

1820 இத்தாலியிலும் ஸ்பெயினிலும் புரட்சி டிராபோ காங்கிரஸ் (Troppau Congress).

அமெரிக்காவில் அடிமை முறை: மிஸ்ஸோரி சமரசம் (Missouri Compromise).

லேம்ப் எழுதிய 'எஸ்ஸேஸ் ஆப் எலியா' (Lamb's Essays of Elia).

1821 பியட் மான்ட், கிரீஸ், தென் அமெரிக்காவில் புரட்சி. நெப்போலியனின் மரணம்.

ஹெகல் எழுதிய 'பிலாசபி ஆப் ரைட்' (Philosophy of Right).

1822 கிரீஸின்மீது துருக்கிய படையெடுப்பு.

ஹெய்ன் எழுதிய 'போயம்ஸ்' (Poems).

1823 ஸ்பெயினில் ஒரு ஃபிரெஞ்சுப் படை (Monroe Doctrine) மன்ரோவின் கொள்கை.

1824 கிரீஸில் மகமது அலி தலையிடுதல்.

மிஸலோங்கியில் பைரனின் மரணம் (Death of Byron at Missolongh).

1830 பிரான்ஸில் சார்லஸ் X-ன் ஆட்சி.

1825 ஸ்டாக்டன், டார்லிங்டன் இடையே ஓடிய முதல் ரயில்வே. லண்டன் பல்கலைக் கழகம் நிறுவுதல்.

1855 ரஷ்யாவில் நிக்கலஸ் I-ன் ஆட்சி.

9. கேனிங், விடுதலை, சீர்திருத்தம்
1825–1832

சீர்திருத்த மசோதாவுடன் முடிவடைந்த ஏழு ஆண்டுகள் பத்தொன்பதாவது நூற்றாண்டு பிரிட்டனின் தன்மைகளை நிர்ணயம் செய்ததுடன், உலகில் பிரிட்டனின் கடமையையும் முடிவு செய்தது. இந்த ஆண்டுகளில் முரண்பட்ட கருத்துகளும், கட்சிகளுக்கு எத்தகைய எதிர்காலம் இருக்கிறதென்ற தெளிவில்லாத நிலையும், மக்களின் எதிர்பாராத செயல்களும் நிறைய நிரம்பி இருந்தன.

அந்த ஆண்டுகள், இடைவிடாத சுறுசுறுப்புத் தன்மை கொண்டவை; இக்காலத்தில் ஆன்மீக வளர்ச்சியும், இயந்திர வளர்ச்சியும் சீர்திருத்த வேட்கையும், ஆகிய இதுவரையிலும் அடக்கி வைக்கப்பட்டிருந்த புரட்சி கருத்துகளெல்லாம், திடீரென்று புது வேகத்துடன் கட்டவிழ்ந்து ஓடத் தொடங்கின. அந்த 'இருபதுகளில்' (Twenties) சிறு வயது மேதைகளான, பைரன், ஷெல்லி, கீட்ஸ், ஆகியோர் இறந்துவிட்டனர். ஆனல் கார்லைல், டென்னிசன், மெக்காலே ஆகியவர்களுடைய நூல்கள் முதல் முதலாகப் பிரசுரமாயின. அத்துடன் ஜான் கெபள் (John Keble) எழுதிய 'தி கிரிஸ்டியன் இயர்' (The Christian Year) என்ற நூலும், விக்கட்சியை சார்ந்த ஹாலாம் எழுதிய 'அரசியல் அமைப்பு வரலாறும்' வெளி வந்தன. டெல்போர்ட், மேக்கடம் நெடுஞ்சாலைகள் மற்றும் மீனுய் பாலம், கேலிடோனியன் கால்வாய் போன்றவைகளை அமைத்து, மக்கள் போக்குவரத்துக்கு பல புரட்சிகரமான மாறுதல்களை ஆட்சியாளர் செய்தனர். ஸ்டாக்டன், டார்லிங்டன் இடையே ரெயில்வேயும், மேன்செஸ்டர், லிவர்பூல் இடையே ரெயில்வேயும் முதன் முதலாகப் போடப்பெற்றன. இவைகளை ஜார்ஜ் ஸ்டீபன்சன் தயாரித்தார்.

சமுதாயத்திலும் சீரிய மனவெழுச்சி ஏற்பட்டது. மூன்று சிறப்புமிக்க சக்திகளான, எவான்ஜிலிக்கல் கிறிஸ்தவர்கள்,

பயிற்சி பெற்ற தொழிலாளிகள், பயன் கருதுவோர் கோட்பாடு களில் அமைந்த சிந்தனையாளர்கள், சமுதாயத்தில் கல்வி அறிவு பரந்த அளவில் ஏற்படவேண்டுமென்றும், மக்கள் திறமைக்கு ஏற்ற வாய்ப்புகளை அளிக்கவேண்டுமென்று பிரச்சாரம் செய் தார்கள். எந்தத் துறையிலும் கட்டாயமாக எதையும் செய்ய முடியாத சூழ்நிலை அப்பொழுது அரசாங்கத்தை எதிர்நோக்கி யிருந்தது. மேலும் பெற்றோர்கள் தம் மக்களிடம் செலுத்தும் அக்கறையை அரசாங்கம் தம் குடிமக்களிடம் காட்டவேண்டு மென்ற மனப்பான்மை கொண்டிருந்தது. எனினும், தனி மனிதன் அவனுடைய திறமைகேற்ப அவனவனுடைய முடிவைத் தேடிக் கொள்வதற்கு விட்டுவிட வேண்டுமென்றும் அவர்கள் கருதினர்கள். இதனால் நிலைபெற்ற மதத்தினருக்கும் அதில் சேராதவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் மிகுந்து மோதல் ஏற் பட வழியுண்டாயிற்று. உணர்ச்சி பெருக்கால் ஆத்திரம் அடை கின்றவரும், பெருமை பேசிக்கொள்ளுகின்றவருமான, பிரோகாம் என்பவரின் அரைகுறை அக்கறையின் காரணமாக, ஓரளவாவது உயர்தரக் கல்வி பெறச் சிறிது வசதிகள் செய்து தரப்பட்டன. கிளாஸ்கோ பேராசிரியர் பர்ரெக் வடக்கில் ஆரம்பித்ததைப் போலவே, இவரும் லண்டனில் பொறியியல் பள்ளிகளையும், வேலை செய்கின்றவர்கள் படிப்பதற்கான கல்லூரிகளையும் ஏற் படுத்திக் கொடுத்தார். அவர் ஒரு கழகத்தை ஏற்படுத்தி, பயனுள்ள அறிவை மக்களிடையே பரப்பவேண்டுமென்று பல பள்ளி நூல்களை வெளியிட்டார். பழைய காலத்தில் அளிக்கப் பட்ட அரசாங்க மானியங்கள் பாழ்படுத்துவதைப் பரிசீலனை செய்ய மானியக் குழு ஒன்றை நிறுவினர். அவருடைய செல்வாக் கினாலும், மற்றும் பல தீவிரவாதிகளின் உதவியாலும் 1827-ல் லண்டன், பல்கலைக் கழகக் கல்லூரியை நிறுவினர். இந்தக் கல்லூரியில் சமய வேற்றுமைகள் நுழையாது, விஞ்ஞானம், பொருளியல், மற்றும் நவீன அறிவுக் கலைகளைப் பற்றிப் படிக்க வசதி செய்து கொடுப்பதே அந்தக் கல்லூரி அமைத்ததின் முக்கிய நோக்கமாகும். அதே ஆண்டில் ரக்பி பள்ளிக்கு டாக்டர் ஆர்னல்டு தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவருடைய நிர்வாகம் மற்ற பள்ளிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. பென்தாம் இப்பொழுது தள்ளாத வயதை அடைந்துவிட்டார். ஆனல், அவருடைய புகழ் உச்ச நிலையை அடைந்திருந்தது. அவருடைய சீடர்களான, ஜேம்ஸ் மில், அவருடைய மகன் ஜான் மில், பென்தாமின் சிந்தனையைத் தொடர்ந்து பரப்புவதற்கு 'வெஸ்ட் மினிஸ்டர் ரெவ்யூ' (Westminister Review) என்ற புதிய பத்திரிகையை ஆரம்பித்தார்கள். இந்தியா இல்லத்தில் (India House) ஜேம்ஸ்மில் அவருடைய கருத்துகளைப் பரப்பினர்.

இவர்களுடன் தீவிர சிந்தனையாளர்களான ரிக்கார்டோ என்ற பொருளாதார வல்லுநரும், பலதர வளர்ச்சியடைந்த கிரீஸ் வரலாற்றை எழுதிய குரோட்டும், நவீன சட்டத்தைக் கற்பித்த வருமான ஜான் ஆஸ்டினும், மற்றும் அவரைச் சார்ந்த ஆதர வாளர்களுமான—டர்ஹாம், சார்லஸ் புல்லர், கிப்பன், வேப்வீல்ட் முதலியோரும் தீவிர வாதத்தை உள்நாட்டிலும், குடியேற்ற நாடு களின் அரசியலிலும் ஒரேவிதமாக பரப்பினர். வில்பர்போர்ஸ் இன்னும் உயிருடன்தான் இருந்தார். அவருடன் ஃபவல் பக்ஸ்டன் என்ற அவருக்குப்பின் 'செயின்ட்ஸ்' இயக்கத்தின் தலைவராக வந்தவரும் சேர்ந்து, அடிமை வியாபாரத்தை ஒழித்ததைப்போல அடிமை முறையையும் ஒழிப்பதற்கு பெரிய இறுதிப் போராட் டத்தை நடத்தினர். லங்காஷயர், மிட்லாண்ட்ஸ்போன்ற தொழிற் பகுதிகளில் ரிச்சார்ட் காப்டன் போன்ற ஆர்வமிக்க வர்கள் பல துறைகளிலும் மாற்றங்கள் வேண்டுமென்று கோரினர். பத்திரிகைகளின் பேரில் அதிக வரி விதிக்கப்பட்ட தனால், 1815-ல் சில பத்திரிகைகள் நான்கு பென்னிவரையிலும் அதிகமாகிவிட்டதனால் அறிவு வளர்ச்சியும்கூட சிக்கனமாகத் தான் பெறவேண்டியிருந்தது. காபெட் நடத்தி வந்த 'ரிஜிஸ்டர்' என்ற பத்திரிகையும், ஆறு சட்டங்களினால் அதிகமாகப் பாதிக்கப் பட்டது. இருப்பினும் பத்திரிகைகள் போர்க் காலத்தைவிட அதிக சக்தி வாய்ந்தவையாகவும், சுதந்திரமாகவும் விளங்கின. தாமஸ் பார்ன்ஸ் ஆசிரியராக இருந்து வெளி வந்த 'தி டைம்ஸ்' (The Times) என்ற பத்திரிகையில் சீர்திருத்தங்கள் வேண்டு மென்று மிகவும் வன்மையாகக் கண்டித்து எழுதப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விதமான பல சக்திகள் வளர்ச்சி பெற்று வருகையில் அரசியலில் மட்டும் ஒரு வியக்கத்தக்க மந்த நிலைமை ஏற்பட்டது. இந்த நிலையை அரசியல் கட்சிகளுடன் தொடர்பு படுத்துவ தோடு, கேனிங்கின் தனி இயல்பையும் பொறுத்திருந்தது என்று கூறலாம்.

பிரிட்டிஷ் கட்சி அமைப்பில் மிகவும் பிரசித்தியடைந்த பலருள் கேனிங் என்பவரும் ஒருவர். இந்தக் கட்சியின் அரசியல் பிரச்சி னைகள் ஓரளவு பொறுமையைக் கடந்துவிட்டன. அவருடைய கட்சி ஆட்களும்கூட அவரைப் பலமாக சந்தேகிக்கத் தொடங்கினர். விக் அரசியல் கட்சியில் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்து பின்பு பிட்டின் செல்வாக்கு பெற்ற சீடராக இருந்தார். அடிங்டன் மற்றும் பல பழைய டோரிகளுடன் சண்டை போட்டுக்கொண்ட தால், அவருடைய ஆசிரியனின் கடைசி நாட்களில் சில

தொல்லைகளைக் கொடுத்துவிட்டார். கேனிங், பெர்சிவலுக்குப் பதிலாக பிரதமராக முயன்றார். கேஸல்ரேயுடன் சண்டையிட்டுக் கொண்டு, போர்ட்லாண்ட் அரசாங்கத்தை வீழ்த்தினர். 1812-ல் காமன்ஸ் சபையின் கட்சித் தலைமை தரப்பட்டாலொழிய, வெளி விவகார பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாதென்று தன்னுடைய எதிர்காலத்தையும் அழித்துக்கொண்டார். அதற்குப் பின்பு, லிவர் பூல், 1822-ல் அவரை மீண்டும் பதவிக்குக் கொண்டு வந்தார். அரசாங்கத்தில் இரண்டாவது முக்கியத்துவம் அவருக்குத்தான் கொடுக்கப்பட்டது. அவரைக் கொண்டு வந்த தனால் லிவர்பூலுக்கும் பல எதிர்ப்புகள் கிளம்பின. ஆனால் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள் என்ற நட்பின்பேரில்தான், அவருக்கு இந்தப் பதவி தரப்பட்டது. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, தன்னலத்திற்காகவும், தான் முன்னேறுவதற்காகவும் எதையும் செய்யும் ஆர்வமிக்கவர் என்று தெரிகிறது. இரு கட்சிகளிலும் உள்ள செல்வாக்கு மிக்கத் தலைவர்களான வெலிங்டன், கிரே போன்றவர்கள் இவரை அளவு கடந்து வெறுத்தார்கள். ஆனால், உண்மையில் கேனிங், சிறந்த நாவன்மை படைத்தவர், சிறந்த அறிஞர், உணர்ச்சிமிக்கவர், மிதமான அறிவு படைத்தவர்களைப் பிடிக்காதவர்; அதே சமயத்தில் கட்சியின் வளர்ச்சிக்காக மட்டும் அவருடைய எதிர்காலத்தையும், குறிக்கோள்களையும் விட்டுக் கொடுக்க மனமில்லாதவர்.

கேனிங் பதவியில் இருந்த இவ்வளவு குறுகிய காலத்திற்குள், கிளாட்ஸ்டன் குடும்பங்களைப்போல சில நல்ல குடும்பங்களுக்கும், லிபரல் ஐரோப்பாவிற்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினர். அவர் ஒரு தீவிரவாதியன்று. பாராளுமன்ற சீர்திருத்தங்களில் நம்பிக்கை வைத்திருப்பவரும் அல்ல—ஜனநாயகமும் சர்வதிகாரத்தின் ஒரு விதமே; சுதந்திரம் என்பது பலதரப்பட்டவை, பன்னெடும் தலைமுறைகளாக வரும் சமுதாயமும், தனிப்பட்டவரின் சொத்துடமைகளை அடைவதில் அவர்களின் திறமையும் உள்ளது, என்ற இவைபோன்ற பர்க்கின் கருத்துகளை அவர் பின்பற்றினர். ஹஸ்கிஸன், பீல் ஆகியவர்களின் பொருளாதாரத் திட்டங்களில், அவருக்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அக்கறை கிடையாது. அவர் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்பவர்; ஒருவகையில் ஒதுங்கியிருக்கவேண்டுமென்ற மனப்பான்மையுடையவர். போரில் பிட்டின் திறமையினால்தான் இங்கிலாந்து காப்பாற்றப்பட்டதென்றும், அதனால் அவருடைய புகழ் வரலாற்றில் தக்க இடம் பெறவேண்டுமென்றும் விரும்புகிறவர், பாராளுமன்றத்திலே சிறந்த இராச்சியவாதி என்ற திறமையும்

புகழையும் அவர் அடைந்தார். அவருடைய நாவன்மை நெகிழும் தன்மை வாய்ந்தது. நவீன விளம்பரத்தின் மூலமாக அவருடைய தொகுதியில் உள்ள மக்களிடம் தொடர்பு வைத்துக் கொள்வதிலும், அல்லது ஐரோப்பாவில் உள்ள வல்லரசர்களின் ஆட்சியை குறை கூறும்பொழுதும், மிகவும் கண்டிப்பாக இருந்தார். இவ்விதமாக நவீன பிரச்சாரத்தைப் பயன்படுத்திய முதல் பொறுப்பு வாய்ந்த மந்திரிகளில் இவரும் ஒருவர்.

இவர் ஒரு வகையில் அதிர்ஷ்டசாலி. இவர் பதவி வகித்த காலத்தில், வர்த்தகமும் நல்ல நிலையில் இருந்தது. சமுதாயத்தில் சீர்திருத்தங்களும் ஏற்பட்டன. இதனால் சமுதாயத்தில் தோன்றிய பல துன்பங்கள் குறைந்திருந்தன. வெளிநாட்டு விவகாரங்களிலும், புனித கூட்டமைப்பிலும் இருந்து ஏற்கனவே கேஸல்ரே விலகிவிட்டதனால், அதே கொள்கையை அவர் பின்பற்றுவதற்கும் வசதியாக இருந்தது. அதுமட்டுமல்லாது, அவருடைய திறமையினாலும் ஐரோப்பாவிலுள்ள வல்லரசர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, மேலும் பிரிட்டனுக்கும், அவர்களுக்குமிடையே இருந்த பிளவுகளை அதிகப்படுத்திக் கொண்டார். அவருடைய அறிக்கைகளினால், பிரிட்டனுடைய மதிப்பு, உலக நாடுகளின் கண்களிலும் குறிப்பாக ஆங்கிலேய மக்களுடைய மதிப்பிலும், மிகவும் உயர்வாக மதிப்பிடப்பட்டது. இந்த நாட்டின் மக்களுடைய நீண்ட கால தேவைகளைக் கணித்து, அதற்கேற்ப மற்ற நாடுகளுடன் தொடர்புகளை வகுத்துக்கொள்ளும் கொள்கையை அவர் கடைப்பிடிக்கவில்லை. ஆனால், ஏறக்குறைய மற்ற மந்திரிகள் அவ்வித கண்ணோக்கத்துடன்தான் இருந்தனர். உலக மக்களுடைய நலன்களைப்பற்றி கவலைப்படாது தன்னுடைய நாட்டு மக்களின் நலன்களையே அவர் பெரிதும் கவனித்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் தொடர்பு படுத்தும்பொழுது, அந்த நாட்டைச் சமத்துவமான முறையில் நோக்காது, அதை ஒரு போட்டி நாடாகவே அவர் பாவித்தார். அவர் பின்பற்றிய தேசியம் ஒரு உயர்ந்த ரகத்தைச் சார்ந்தது. அப்பொழுது மோதிக்கொண்டிருந்த இரண்டு கோட்பாடுகளான வல்லாட்சியும், ஜனநாயகமும் என்ற இரண்டு முறைகளில் பிரிட்டன் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றியது. மேலும் மற்ற நாடுகளின் அரசாங்க முறைகளில் காரணமில்லாமல் தலையிடாமலும், பிரிட்டனுடைய நலன்களுக்கு ஆபத்து நேரிடும்பொழுது மட்டும் ஓரளவு அக்கறையுடன் தலையிடுவது என்ற கொள்கையையும் அவர் பின்பற்றினர்.

வெளிநாட்டுத்துறையில் அவர் பதவி வகித்தபொழுது இரண்டு பிரச்சினைகள் அவருடைய நெகிழும் திறமையைச்

சோதித்தன; ஒன்று ஸ்பெயினிலும், போர்ச்சுகல்லிலும் ஏற்பட்ட புரட்சியும், அத்துடன் தொடர்பு கொண்ட கடல் கடந்த பேரரசுகளின் விலகுகளும்; மற்றொன்று கிரீஸில் ஏற்பட்ட சுதந்திர எழுச்சியும் ஆகும். ஸ்பெயினில் ஆட்சி புரிந்து வந்த ஸ்பானிய பூர்போன்களின் அருவருக்கத்தக்க ஆட்சி எப்படிப்போனால்தான் என்ன என்று அவரால் கவலையின்றி இருக்கமுடியவில்லை. ஜார் அலெக்சாந்தர் ஸ்பெயினுக்கு ஒரு படையை அனுப்பி, அந்தப் புரட்சியை நசுக்கப் போவதாகவும், ஃபிரெஞ்ச அரச பரம்பரையைப் பதவியிலிருந்து வெளியேற்றுமல் இருக்கவும்; மற்றொரு பூர்போன் பரம்பரையை ஸ்பெயினில் ஏற்படுத்தும் பொறுப்பையும் மேற்கொண்டதால், பிரிட்டனாலும் இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. 1823-ல் ஏற்பட்ட ஃபிரெஞ்சுப் படையெடுப்பினால், ஸ்பானிஷ் அரசியல் அமைப்பு வாதிகளின் போராட்டம் ஒடுக்கப்பட்டது. ஆனால் கேனிங் பகிரங்கமாக வெளியிட்ட ஒரு அறிக்கையில், போர்ச்சுகலின் மீதோ அல்லது ஸ்பானிஷ் காலனிகளைப் பறிப்பதிலோ அவர்கள் ஈடுபட்டால், போர் தொடுக்கப்போவதாக எச்சரித்தார். அவர் களுடைய பரம்பரை உரிமைகளை வன்மையாக கண்டித்தார். இதற்குமேல் அவரால் செல்ல முடியவில்லை. ஏனென்றால் கேபினட் சபை இருந்த நிலை அப்படி இருந்தது. மேலும் ஃபிரான்சின்மீது நடவடிக்கை எடுப்பது என்பது புனிதக் கூட்டமைப்பைப் பொறுத்திருந்தது. ஆனால், அவர்களுடைய படையெடுப்பினால், கேனிங் தென் அமெரிக்கர்களின் சுதந்திரத்தை அங்கீகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதை அங்கீகாரம் செய்து, பின்னால் வெளியிட்ட சிறப்பான அறிக்கையில், ஃபிரான்ஸ் ஸ்பெயினை அடைந்தால், இன்டிஸ் தீவுகளில் (Indies) ஸ்பெயின் இருக்கக்கூடாது. பழைய வல்லரசுகளின் சமநிலைக்காக, புதிய உலகம் தனியாக இயக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று நான் முடிவு செய்திருக்கிறேன்" என்று கூறினார்.

அவருடைய வெற்றிகரமான நடவடிக்கைகளைவிட, கேபினட் சபையினுள்ளே இருந்த போராட்டத்தைத் தவிர்ப்பதற்கு இந்தக் கொள்கைதான் சரியானதாக இருந்தது. அரசாங்கத்தினுள் மாறுபட்ட கருத்துகள் மிக அதிகமாக இருந்தன. 1815-ல் ஏற்படுத்தியநிலை மாறுபடலாகாது என்று வெல்லிங்டன் கருதினார். போராடி சாதித்த சாதனைகளையெல்லாம் ஜன நாயகம் அழித்துவிடுமோ என்று அவர் அஞ்சினார். அவரும், அவரைச் சார்ந்தவர்களுமான எல்டன், பாத்தர்ஸ்ட் உட்பட, புனிதக் கூட்டமைப்பு அகற்றப்படுமானால், எப்படி அமைதிக்கு

ஆபத்து ஏற்படும் என்ற கேள்வியை எழுப்பினர். எல்லா அரசர் களுடைய நிலைமைக்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் என்ற எண்ணத்தில், மெட்டர்னிக்கிடமும், ரஷ்ய இராச்சிய தூதுவரான லீவில் என்பவரிடமும், அவருடைய சூழ்ச்சிக்கார மனைவியிடமும், ஹானேவிரிய மந்திரிகளுடனும் ஆலோசனை கேட்க ஆரம்பித்துவிட்டார். இவர்களுக்குத் தூண்டுதலாக வெலிங்கடனுடைய ஆலோசனையும் இருந்ததால் கேனிங்கின் கொள்கை உறுதிப்படாமல் இருந்தது. அவர் களுடைய கொள்கை ஏற்றுக்கொள்ளப்படாவிடில் லிவர்பூலும், கேனிங்கும் ராஜிநாமா செய்து விடுவதாக முடிவுசெய்ததால் கேபினட் சபை வேறுவழியின்றி 1825-ல் அர்ஜென்டின், மெக்ஸிகோ, கொலம்பியா ஆகிய நாடுகளைச் சுதந்திர நாடுகளாக அங்கீகரித்தன.

இது தவிர்க்கமுடியாதது. அந்த வளம்மிக்க நாடுகளைக் குழப்பத்தில் விட்டுவிட முடியாது. ஆங்கிலேயர் செல்வத்தில் எவ்வளவு ஈடுபாடுடையவர்களாக இருந்தார்களோ, அப்படியே அவர்களுடைய மனச் செறிவிலும் இருந்தார்கள். கொலம்பி யாவின் சுதந்திர வீரனை பொலிவர், அவருடைய நிர்வாகத்தில் பல பிரிட்டிஷ் அதிகாரிகளை நியமித்திருந்தார். சில்லி (Chille) யின் கடற்படையை, வெஸ்ட் மினிஸ்டர் தீவிரவாதியும், சிறு கப்பற்படையை அமைப்பதில் வல்லுநராக இருந்த கோச்ரென் என்பவர் அமைத்துக்கொடுத்தார். ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ், ஐரிஷ் தொண்டர்கள், அங்கேயுள்ள காடுகளிலும் மலைகளிலும் போரிட்டார்கள். கேப்ஹார்ன், ஸேன், ஃபிரான்ஸ்கோ பகுதி களுக்கு இடையேயுள்ள பெரும் பிரதேசத்தை ஸ்பானிய அரசன் மீண்டும் பிடித்துக்கொள்வது என்பது முடியாத காரியமாகும்; ஆனல் ஐரோப்பிய வல்லரசுகள் சில பகுதிகளைப் பிடித்துக் கொள்ளலாம் என்ற பிரச்சினை வேறுவிதமானது. அலாஸ்காவி லிருந்து; ஓரிகான் (Oregon) வரையிலும் ரஷ்யா தன்னுடைய பிரதேசம் என்று சொல்லிக்கொண்டிருந்தது. பூர்போன் இன வரசர்களை இந்நாடுகளிலும் பதவியில் அமைக்க ஃபிரான்ஸ் முயற்சி செய்கிறதென்பதால், கேனிங் ஓரளவிற்கு அதிகமாகவே பயந்துபோனர். இந்தக் காரணங்களால் அமெரிக்க ஐக்கிய நாடு விரைவில் இந்தப் புதிய புரட்சி நாடுகளை, பிரிட்டன் அங்கீகாரம் செய்வதற்கு முன்பே, ஏற்றுக்கொண்டது. மேலும் டிசம்பர் 1823-ல் விளக்கப்பட்ட மன்ரோ கொள்கையை மற்ற நாடுகளுக்கு அறிவித்தது. ஏற்கனவே அமைக்கப்பட்ட காலனிகளில் தலையிடும் நோக்கமில்லையென்று அறிவித்து ஜனதிபதி தன் னுடைய உறையில் அமெரிக்க பிரதேசங்களை இனிமேல்,

குடியேற்ற நாடுகளாக, ஐரோப்பிய வல்லரசுகள் கருதக்கூடாதென்று அறிவித்தார்.

இந்த உரையைத் தயாரித்துக்கொடுத்தவர், மிகவும் திறமைமிக்க மன்ரோவின் காரியதரிசி, ஜான் குவின்சி ஆடம்ஸ் என்பவராவர். கிரேட் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய நாடுகளின் அக்கறைகள் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், இந்த இரு நாடுகளையும், கேனிங் அன்னைக்கும், மகளுக்கும் ஒப்பிட்டு கூறுவதும், 'ஆங்கிலோ-சாக்ஸன்டம்' (Anglo-Saxondom) என்ற அணிவரிசையில் இரண்டு நாடுகளையும் கூறுவது, விபரங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. உண்மையில் கேனிங், ஆடம்ஸ் ஆகியவர்களின் குறிக்கோள்கள் வேறுபட்டவை. அமெரிக்காவை மற்ற ஐரோப்பிய நாடுகளின் கவனத்திலிருந்து திருப்பி, ஒரே சுதந்திரமான குடியரசுகளைத் தோற்றுவித்தால், வரும் காலத்தில், அவருடைய நாடு அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு ஏற்படும் என்று நம்பினர். ஜனநாயகத்தின் பேரில் கேனிங்குக்கு அவ்வளவு மோகம் இல்லை. ஐரோப்பா முழுவதும் அமெரிக்காவிற்கு விரோதமாக அமைந்துவிடும் சூழ்நிலையை நினைக்கும் பொழுது, அவர் உண்மையில் மிகப்பயந்தார். அதனால் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய இரு நாடுகளுடனும் கலந்து பேசி, சமரசமாகவே இந்நாடுகளுக்கு சுதந்திரம் வாங்கித்தரமுடியும் என்று நம்பினர். மற்ற நல்ல சலுகைகளையும் அவர் பெறுவதற்கு முயற்சி செய்தார், கியூபாவின்மீது அமெரிக்காவின் கண்ணோட்டம் விழுந்திருப்பதாக அவர் சந்தேகப்பட்டார். தனிப்பட்ட கருத்துகளாகவே இவர் இவையெல்லாம் கூறினரென்றாலும், வெளிப்படையாக இவற்றையெல்லாம் எடுத்துக்கூறி, அரசனையும், கேபினட் சபையையும் இவ்விதமாக அங்கீகாரம் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினர். மேலும் ஃபிரான்சை நீர்ப்பந்தித்து, அந்த நாடுகளில் தலையிடக்கூடாது என்று அவர் எச்சரிக்கை செய்தார்; மேலும் தென் அமெரிக்காவை பாதுகாப்பது மன்ரோ கொள்கை அல்ல வென்றும், ஆனால் பிரிட்டிஷ் கடற்படைதான் என்றும் தெளிவாகப் புலப்படுத்தினர்.

இதே விதமாகத்தான் போர்ச்சுகலுக்கும், அதனுடைய ஆட்சியின்கீழ் இருந்த பிரேஸிலுக்கும் சொல்லவேண்டியிருந்தது. இந்த விவகாரத்தில், போர்ச்சுக்கல்லை அவர் அதிகமாகக் கண்டிக்கவேண்டியிருந்தது. ஏனெனில், பழைய காலத்திலிருந்தே போர்ச்சுக்கலுடன் பல ஒப்பந்தங்களை செய்து வைத்திருக்கிறார்கள். ஆங்கிலேயரின் கடல் வலிமையால் ஃபிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, பிரேஸிலில் நல்ல அரசாங்கத்தை

ஏற்படுத்தினர். ஏறக்குறைய பிரேஸில் சுதந்திரமடைந்த முறையும், 1820-ல் லிஸ்பனில் நடந்த புரட்சியும், 1823-ல் ஸ்பெயின் மீது ஏற்பட்ட ஃபிரான்ஸின் படையெடுப்பும், ஸ்பெயின் போர்ச்சுக்கல் அரச பரம்பரைகளுக்குள் தகராறு, ஆகிய இவையெல்லாம் சேர்ந்து சுதந்திரத்திற்கும் வல்லாட்சிக்கும் ஒரு கடும் சோதனையாக அமைந்தது. ஆயுத பலத்தைத் துணையாக வைத்துக்கொண்டு, கேனிங் இந்த இரண்டு சக்திகளிடையே சமரசத்தை ஏற்படுத்த தன்னால் இயன்றவரை முயன்றார். சமரசப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, டேகஸ் என்ற இடத்திற்கு கடற்படையை அனுப்பி, பிரான்சிற்கு எதிராக, தங்களுடைய இராச்சிய தூதுவருக்கு தைரியத்தை அளித்தார். சமரச முயற்சியால், 1825-ல் பிரேஸில் சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளச் செய்ததும், அதே சமயத்தில் அங்கே முடியாட்சி நீடிப்பதற்கும் வழி செய்தார். ஒரு ஆண்டிற்கும் பிறகு பீட்ரோ பேரரசன் அவருடைய தந்தை இறந்த உடன் போர்ச்சுக்கலுக்கும் அரசனானதால், பிரேசிலை, அவருடைய இளைய மகளான மேரியாவிடம் அளித்து விட்டு, தாராள அரசியல் அமைப்பையும் அளித்தார். இந்த ஏற்பாடு கேனிங்கின் ஆலோசனையினால் செய்யப்பட்டதன்று. பீட்ரோவின் தம்பி மைகுவல், தன் அண்ணன் மகளுக்கு எதிராகப் படை திரட்டினான். சில போர்ச்சுக்கீசிய துரோகிகள் ஸ்பெயினிலிருந்து, இப்போருக்கான ஆயத்தங்களை உற்பத்தி கொண்டிருந்தனர். இதனால், டிசம்பர் 1826-ல் கேனிங் கப்பற்படையையும், சில துருப்புகளையும் அங்கே அனுப்பிவைத்தார். பாராளுமன்றத்தில், இதைப்பற்றி அவர் கூறியதாவது; "படைகளை அனுப்புவதனால் ஒரு அரசியல் அமைப்பை அங்கே ஏற்படுத்தப் போவதில்லை; ஆனால், ஒரு நேச நாட்டின் சுதந்திரத்தை பாதுகாக்கவும், அந்தச் சுதந்திரம் பறி போகாமல் பார்த்துக் கொள்ளவும், இங்கிலாந்தின் தரம் எப்படிப் பட்டது என்று லிஸ்பன் மக்கள் அறிந்து கொள்ளவும் தான் அனுப்புகிறோம்": இதைக் கேட்டு வெலிங்டன் ராஜிநாமா செய்வதாக பயமுறுத்தினர். கேனிங்கை எதிர்ப்பதற்கான வாய்ப்புகளை, மெட்டர்னிக் ஆராய்ந்தார். ஆனால், லிவர்பூல் மிகவும் பலமாக கேனிங்கை ஆதரித்தார்; ஸ்பெயின் மட்டும் போர் தொடுத்தால், லிபரல் நிறுவனங்களின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தத் தயங்க மாட்டேன் என்று லிவர்பூல் கூறினர். ஆனால், கிரீஸில் அப்பொழுது ஏற்பட்ட பிரச்சினையினால் வல்லரசுகள் ஒன்றுடன் ஒன்று மோதியதனால் அவர் அவர்களுக்குள் பிளவு ஏற்படுத்தி, போர்ச்சுக்கல் பிரச்சினையை உறுதியாக்கிக் கொண்டார்.

மேற்கு நாடுகளில் ஏற்பட்டதைப்போலவே, நடு கிழக்கு நாடு களிலும் ஃபிரெஞ்சுப் புரட்சி தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. பலதரப்பட்ட தேசிய இனங்கள் கொண்ட பேரரசு களுக்கு, இந்தப் பிரச்சினை அவைகளின் பலவீனத்தை நன்கு வெளிக் காட்டியது. துருக்கியிலிருந்து, ஸெர்பியா அரைகுறை யாக வெளியேறிவிட்டது. ஜேன்னுவின் அலி தலைமையில் அல்பே னியா படை திரட்டியது; இப்பொழுதுள்ள ருமேனியா பகுதிகள் சுதந்திரம் கேட்டன; 1820-லிருந்து கிரீஸ் சுதந்திரத்திற்காகப் போராடியது. இந்த நீண்ட கால கீழைச் சிக்கல் கிரேட் பிரிட்டனை ஒரு நூற்றாண்டு காலம் வரையிலும் தொல்லைக்குள் ளாக்கி, அதனுடைய பல முரண்பட்ட கொள்கைகளைக் குழப் பியது. மீண்டும் அவருக்குப்பின் வந்தவர்களும் துருக்கியைப் பாதுகாப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர். ஏனெனில் துருக்கி, ஜலசந்தியின் பாதுகாப்பாளனும், பெர்ஷியா விலும், இந்தியாவிலும் ரஷ்யா படையெடுக்காமல் தடுக்கவும், பயனுள்ளதாக இருந்தது. ஆனால், சுதந்திரம் என்ற உணர்ச் சியும், கிரீஸின் பழம் பெருமையும், முஸ்லிம்களுக்கு எதிராகக் கிறிஸ்துவர்கள் சமய ஆர்வமும் ஆங்கிலேய மக்களின் மனப்பான் மையைக் கிரீஸ் பக்கம் திருப்பிவிட்டது. இதிலும் வர்த்தக நலன் கள் தொடர்புபட்டிருந்தன. இல்லையெனில் பெரிய குழப்பம் ஏற் பட்டுவிடும். கேஸல்ரேயுங்கூட, கிரீஸ் ஏதாவது ஒரு வகையில் சுதந்திரமான அரசாங்கத்தை அமைக்க வழி செய்யவேண்டு மென்று கருதினர். இதற்குள் ஆர்வமுள்ள தொண்டர்கள் கிரீஸின் சுதந்திரப் போராட்டத்தில் சேர முன்வந்தனர். கப்பல்களும், பணமும் சேகரிக்கப்பட்டன. பைரன் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்து, 1824-ல் மிஸ்ஸலோங்கி என்ற இடத்தில் இறந்தார்.

புனிதக் கூட்டமைப்பு கலைந்த பிறகு உடனடியான பிளவை ஏற்படுத்தும் நிகழ்ச்சி எதுவும் ஏற்படவில்லை. ஜார்ஜ் அலெக் சாந்தரின் புரட்சி பயம், ரஷ்யாவின் பழைய திருச்சபை அங்கத் தினர்களைப் பாதுகாப்பதில் ஆர்வம் செலுத்தப்பட்டதனாலும், ஜலசந்தியைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வரவேண்டு மென்று முயற்சி செய்ததனாலும், தவிர்க்கப்பட்டது. ஆனால் இந்த சமநிலையை 1825-ல் அவருடைய மரணத்திற்குப் பிறகு அவருடைய தம்பி நிக்கலஸ் முடித்துவிட்டார். ரஷ்யா, எங்கே டேன்யூபில் மீது படையெடுக்குமோ என்று ஆஸ்டிரியா பயந்தது; அதைவிட மிகவும் ஆபத்தானது, கான்ஸ்டான்டிநோபிளின் மீது அது படையெடுத்துவிடுமோ என்பதுதான். துருக்கியின் சீரழிவு, லெவாண்டிலுள்ள சில நன்மைகளை அடைய உதவும்

என்று ஃபிரான்ஸ் கருதியது. மீண்டும் கேனிங் உணர்ச்சி வயப்பட்டு எதையும் முடிவு செய்ய விரும்பவில்லை. அரிஸ்டைடிஸ், (Aristides) அல்லது செயின்ட் பால் (Saint Paul) ஆகிய யாருக்குமே அவர் சாதகமாக சண்டை செய்யப் போவதில்லை என்று அறிவித்தார். அவருடைய முதல் நடவடிக்கை, கிரீஸ் தான் முதலில் போரில் ஈடுபட்டது என்பதை ஒப்புக்கொண்டார். பின்பு சமரசம் பேசி எப்படியாவது பெரிய வல்லரசுகள் படையைப் பயன்படுத்தாது, சமாதானமாக நிலைமையை ஏற்படுத்த முடியுமா என்று ஆராய்ந்தார். ஆனால், இந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைந்துவிட்டது. ஏனெனில், சண்டையில் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. துருக்கியர்கள், எகிப்திய பாஷா மகமதலி, எகிப்து பாஷா ஆகிய இருவர்களுடைய உதவியையும் நாடினர். இதனால், ஜார் தனியாகக்கூடத் துருக்கியை எதிர்த்து போரிடத் தயாரானர்.

1826 ஆரம்பத்தில் இந்தப் போரைக் கட்டுப்படுத்துவதற்கு ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதென்று முடிவு செய்தார். ஏப்ரல் மாதத்தில் நடந்த அதிகாரிகள் கூட்டத்தில், கிரீஸ் சுதந்திரமாக அரசாங்கத்தை நியமித்துக் கொள்ளலாம் என்றும், ஆனால் அது துருக்கியின் ஒரு பகுதியாகத்தான் இருக்க வேண்டுமென்றும் பேசப்பட்டது. இதற்குப் பிறகு, ரஷ்யாவாவது, அல்லது பிரிட்டனாவது துருக்கியிடமிருந்து வேறு எந்தச் சலுகையும் எதிர்பார்க்ககக் கூடாதென்றும், இவ்விதமாகச் செய்யும் சமரச உடன்படிக்கையில் மற்ற வல்லரசுகளும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 1827 வேனிற் காலத்தில், பிரான்சின் ஒப்புதலைப் பெற்று, மூன்று வல்லரசுகள் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டு சமாதானத்தை நிலை நிறுத்துவது என்று முடிவு செய்தார்கள்.

இந்தக் கொள்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கேனிங் அவருடைய கட்சியின் வலதுசாரிகளிடம் போராட வேண்டியிருந்தது. இதைத் தவிர மற்றும் பல காரணங்கள் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தின. பாராளுமன்றத்தின் சீர்திருத்தம் சிறிது ஒத்திப்போடப்பட்டது. காரன்வாலிலுள்ள கிராம்பவுண்டிலோ, அல்லது வேறு எங்கேயாவதுள்ள ஒரு பரோவில் ஊழல்கள் மலிந்துவிட்டன என்ற காரணத்தினால், கிராம்பவுண்டிலுள்ள மக்களை யார்க்ஷயருக்கு அனுப்பி, அந்த பரோவுக்கு வாக்குரிமை இல்லை என்று சொல்லிவிடுதல், பொதுக் கொள்கைக்குத் தக்கதாக இல்லை என்றார். கேனிங் அவருடைய இந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டார். விக்குகளைப் பொறுத்த

வரையிலும், இளைஞரான ஜான் ரஸல் எவ்வளவோ முயற்சிகளைச் செய்து பார்த்தார். ஆனல், தனிப்பட்ட முறையில், சுமார் நூறு தொகுதிகள் வரையிலும் உடனடியான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டுமென்று கருதினலும், இப்பொழுது அவருடைய பழைய தீவிரக் கொள்கைகளையெல்லாம் கைவிட்டுவிட்டார். சீர்திருத்தம்கொண்டு வந்தால் அவரது கட்சி முறிந்துவிடுமோ என்று அஞ்சினர். மேலும் அவருக்கு வயதாகிவிட்டது. அவருடைய நாட்டில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமென்று விரும்பினர். அதனல் 1826-ல் இவரைவிட அதிகக் கன்சர்வெடிவான லேன்ட்ஸ் வோனுக்கு அந்தத் தலைமைப் பதவியை அளித்துவிட்டு விலகிக் கொண்டார்.

டோரிகளுக்கும், விக்குகளுக்குமுள்ள பிளவுகளைவிட, டோரிக் கட்சியிலேயே அவ்வளவு அதிகமான பிரிவுகள் இருந்தன. பாராளுமன்றத்து சீர்திருத்தங்களைவிட, மற்ற பிரச்சினைகளில் இந்தப் பிளவு அதிகமாகக் காணப்பட்டது. ஒன்று தானிய சம்பந்தப்பட்டது. லிவர்பூலும், ஹஸ்கிஸனும் இந்தப் பிடிவாதம் பிடித்த சிறுநிலப் பிரபுக்களிடம், மட்டமான நிலங்களில், நிறைய தானிய உற்பத்தி செய்வதுதான் அவர்களுடைய தொல்லைகளுக்கு காரணம் என்றும் அவர்களுடைய தானிய விலைகளை கீழிறக்க வேண்டுமென்றும் கூறினர்கள். 1822-ல் தானிய இறக்குமதி முழுவதும் இல்லாமல் செய்ய முடியாதென்றும், ஒரு பகுதி இறக்குமதி செய்யத்தான் வேண்டுமென்றும் வலியுறுத்தினர். 1825-ல் கனடா தானியத்திற்கு 5 ஷில்லிங் வரி விதிப்பும், 1826-ல் தானிய அறுவடை குறைந்து விட்டதனல் தானிய இறக்குமதி செய்வதற்கு கவுன்சில் ஆணைகளைப்பெற்றார். அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் கேபினட் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, தானிய விலைவாசிகள் இறக்கம், ஒரு குவார்ட்டருக்கு 60 ஷில்லிங் வீதம் நிர்ணயம் செய்யலாம் என்று கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இதைத் தவிர கத்தோலிக்கர்களின் பிரச்சினை வேறு தீர்க்கப் படாமல் இருந்தது. 1812-ல் இந்தப் பிரச்சினையில் மாறுபட்ட கருத்துகள் இருந்தன. அதனல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கட்சியைப் பொறுத்தவரையில் இது ஒரு பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையில் எல்லா விக்குகளும் ஒன்றுபட்ட கருத்தை உடையவராய் இருந்தனர்; பிட் காலத்திய நண்பர்களான ஹஸ்கிஸன், கிரென்வில், கேனிங் ஆகியவர்களும், அதே கருத்தை உடையவர்களாகத்தான் இருந்தார்கள். இதைப்பற்றிப் பாராளுமன்றத்தில் அடிக்கடி பிரேரணைகளை,

இளைஞர்களும், ஐரீஷ் அங்கத்தினர்களான பிளங்கட், கிராட்டன் ஆகியவர்களும் கொண்டுவந்தார்கள். மற்ற தீவிரவாதிகளும் இதை ஆதரித்தனர். அவர்களெல்லோரும் கத்தோலிக்கர்களுக்கு விடுதலை வேண்டுமென்று கோரினர். லிவர்பூலும், கேபினட் சபையில் உள்ள மற்ற வயதானவர்களும், இளைஞரான பீலும் கூடத் தயங்கினர்கள். ஆனால் அதே சமயத்தில் புராடஸ்டண்ட்டு கள் உள்ள கேபினட்சபையையமட்டும் மீண்டும் அமைப்பது சாத்தியமாகப்படவில்லை. இதில், பிட் காலத்திலிருந்த சிக்கல் களைவிட, இவை இப்பொழுது அதிகமாக இருந்தன. சமய மனக்கசப்பு அதிகமாகிவிட்டதே ஒரு காரணம். இங்கிலாந்தில் எவான்ஜிலிகல் சமயக் கிளை வேரூன்றிவிட்டது அது ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பலமாக எதிர்த்தது. ஆக்ஸ்போர்டில் 'பெரும் திருச்சபைப் பள்ளிகள்' (High Church) நிறுவப்பட்டன. அந்தப் பல்கலைக் கழகம் பீலை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத் தது. உண்மையில் 'கத்தோலிக்க கேனிங்தான் அந்தப் பதவிக்கு உரிமை கோரினர். ஆனால், அயர்லாந்தில் பரந்த ஜனநாயக கருத்துகளும், நாகரிக அம்சங்களும் சேர்ந்து சமயக் கோட்பாடு களில் அரசாங்கத்தின் தலையீடு இருக்கக்கூடாதென்றும், இனி மேல் பிஷப்புகளை நியமனம் செய்வதில் அரசின் கட்டுப்பாடு இருக்கக்கூடாதென்றும் வற்புறுத்தினர்கள். ஆனால், இவ்வித அரசாங்கக் கட்டுபாடுகளை ஐரிஷ் மிதவாதிகளும்; ஆங்கிலேய அரசியல்வாதிகளும் சரியானதே என்று ஒப்புக்கொண்டனர். அங்குள்ள கத்தோலிக்க பிரபுக்களின் ஆதரவைத்தான் பிட், பீல் ஆகிய இருவருமே நம்பியிருந்தனர். ஆனால், அவர்களுடைய ஆதரவை, சிறந்த நாவன்மை படைத்த டேனியல் ஓ' கானெல் என்பவர் கவர்ந்துகொண்டார். அவர் கத்தோலிக்க விடுதலைச் சட்டம் வேண்டுமென்று போராடுவதுடன் நின்றுவிடாது, யூனியன் சட்டத்தையே ரத்துசெய்ய வேண்டுமென்று பிரச்சாரம் செய்து வந்தார். வீணை, லிவர்பூல் வெலிங்டனுடைய தம்பி யான, இந்தியாவில் பணி செய்த மார்குவிங் வெல்லஸ்லி என்ப வரை அயர்லாந்தில் லார்ட்-லெப்டினென்டாக (Lord-Lieutenant) நியமனம் செய்தார். அவரே, கத்தோலிக்க விடுதலையை ஆதரித் தார். சமயவேறுபாடுகள், இன வெறியுடனும், நில உடைமைப் போட்டியிலும் தொடர்பு பெற்றிருந்தன. பத்தாண்டுக்கு ஒரு முறை மக்கள் தொகை ஒரு மில்லியன் வீதம் அதிகமாகிக் கொண்டே வந்தது. அவர்களெல்லாம் உயிர்வாழ்வதற்கே போராடிக்கொண்டிருந்தனர். இந்த நிலைமையில், அவர்களுடைய வெறுப்புக்குள்ளான ஆங்கிலிகன்களுக்கு 'டைத்' (Tithe) என்ற மத வரியையும் பின்பு அவர்களுடைய குருமார்களுக்கு பல கட்ட ணங்களும் தரவேண்டியிருந்தது. மேலும் பல இரகசிய சங்கங்

களிலில் அவர்களுக்கு நிறைய தொல்லைகள் தரப்பட்டன. ஆண்டொன்றுக்கு பயமுறுத்துகின்ற 'காலி செய்தல்' ஒதுக்கப்படுதல் கால்நடைகளை அடித்துத் துன்புறுத்தல், கொலை, பின்பு பயமுறுத்துகின்ற சட்டங்கள், ஊரடங்குச் சட்டம், ஆயுதங்கள் வைத்திருக்கின்றனரா என்று பரிசோதனை செய்தல், ஜூரி மூலமாக வழக்குகளை விசாரிப்பதை நிறுத்திவருதல் போன்ற கொடுமைகள் இழைக்கப்பட்டன. ஒரு பெரிய பிரிட்டிஷ் படையே அங்கே அமைதியை நிறுவமுடியவில்லை. வடக்கிலுள்ள புராடஸ்டண்ட்டுகள் 'ஆரஞ்சு இயக்கத்தை' (Orange Order) ஆரம்பித்து, தங்களைப் பாதுகாத்துக்கொண்டனர். அயர்லாந்தின் முடிசூடா மன்னன், ஓ' கானெல்தான் என்று கூறலாம். அவர் 1823-ல் கத்தோலிக்க சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். அது நாளடைவில் சட்டமன்றத்தைப்போலவே விளங்கியது. ஒவ்வொரு பேரிஷிலும் அந்தச் சங்கம் வாடகை வசூலித்தது.

1825-ல் வெளிநாட்டு விவகாரங்களைப் பற்றிக் கேபினட் சபையில் அதிக மோதல் ஏற்பட்டிருந்தது. அது ஒரு உச்ச நிலையையும் அடைந்திருந்தது. தீவிரவாதியான பர்டெட் மற்றுமொரு விடுதலை மசோதாவை தாக்கல் செய்தார். இதில் கேனிங், விக் தலைவர்கள், ஓ' கானெல் ஆகியோருக்கும் பங்குண்டு. எதிர்ப்பைக் குறைப்பதற்காக, ஐரிஷ் பாதிரிகளுடைய வருமானத்தை அதிகரிக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் மூலமாகவே அவர்களுடைய ஊதியத்தைப் பத்து பவுனுக்கு மேல் அதிகரித்துக் கொண்டு வந்தது. ஏனெனில், கௌன்டி மக்களின் வாக்குரிமை தகுதி பத்து பவுன்களுக்குட்பட்டிருக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்கள். அரசனுடைய அபிப்ராயம் அதற்குமாறுக இருந்தது. பட்டத்தின் அடுத்த வாரிசான யார்க் கோமகன் பிரபுக்கள் சபையில் மிகவும் ஆவேசமாகப் பேசினதை, சபை புறக்கணித்து விட்டது. கத்தோலிக்க இயக்கத்தை எதிர்த்து தேர்தல் நடத்த வேண்டுமென்று டோரிகளிடமிருந்து கூக்குரல் கிளம்பியது. இந்தக் குழப்பத்தில் கேனிங் தலையிட்டு, இது திறந்த பிரச்சினை; இந்தப் பிரச்சினையை எப்பொழுது வேண்டுமென்றாலும் தீர்த்துக் கொள்ளலாம் என்று அறிவித்தார்.

கேபினட் சபையிலேயே இருந்த சீர்திருத்த மனப்பான்மையுடைய விபரல்களுக்கும், விக் எதிர்ப்புக் கட்சிக்கும், தானியம், தாள் நாணயம், கத்தோலிக்க பிரச்சினை, வெளி விவகாரங்கள் ஆகிய பல பிரச்சினைகளில் சமரசம் ஏற்பட்டு, பல ஆண்டுகள் கழிந்து விட்டன. 1826-ல் நடைபெற்ற பொது தேர்தல்களில் டோரிகளிடையே ஏற்பட்டிருந்த பிளவும், கத்தோலிக்கர்களின்

பலமின்மையும் நன்கு வெளிப்பட்டன். மேலும், கேனிங் வெளிப்படையாகவே விக்குகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டதும் தெரிய வந்தது. 1827 பிப்ரவரி மாதத்தில் நாட்டிற்கு மதிப்பிட முடியாத சேவைகளைச் செய்த லிவர்பூல் பக்கவாதத்தினால் தாக்கப்பட்டார். ஒரு மாத காலத்திற்குப் பிறகு, நான்காவது ஜார்ஜ், கேனிங்கை அழைத்து அரசாங்கத்தை அமைக்கச் சொன்னார்.

பிட்டின் கட்சியில், எப்பொழுதோ ஏற்பட வேண்டிய பிளவு இப்பொழுதுதான் அதிகமாகக் காணப்பட்டது. ஏழு அமைச்சர்களில், எல்டன், மற்றும் வெலிங்டன், பீலும், கேனிங்கின் தலைமையை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நோக்கமிருந்தது. இருப்பினும் கேனிங்கின் வெளிநாட்டுக் கொள்கையை கோமகன் வெறுத்தார்; பிரபுக்களிடம் அவருக்கு அதிக நம்பிக்கை இருந்தது. நிலையான கொள்கையுடையவர் என்பதற்காகவும், ஆக்ஸ்போர்ட் மத குருமார்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்ததனாலும், அவர் பெருமை அடைந்திருந்தார். இருப்பினும், கத்தோலிக்கர் விடுதலை இன்னும் ஒரு திறந்த பிரச்சினையாகத் தான் இருந்தது. லிவர்பூல் பின்பற்றிய கொள்கைகளைத்தான் இவர்களும் பின்பற்றினர். அல்லது கேனிங் விக்குகளுடன் சேர்ந்து ஏதோ சூழ்ச்சி செய்து விட்டார் என்று நினைப்பதற்கும் தக்க ஆதாரமில்லை. இப்பொழுது தான், இவ்வளவு வெளிப்படையாகத் தாக்க ஆரம்பித்த உடன், விக்குகளுடன் கூட்டுச் சேருவதைப் பற்றி ஆலோசனை செய்தார். கேனிங் திடீரென்று உயர்வுற்றவர் என்பதனால் கிரேயுக்கு அவரைப் பிடிப்பதில்லை. அவருடைய சாதனைகளை வெறுத்தார். லிபரல் ஸ்பெயினை ஆதரிக்காது, கைவிட்டு விட்டார் என்பதற்காக கிரே ஒதுங்கியே நின்றார். விடுதலையைப் பற்றித் திட்டவட்டமான உறுதிமொழிகளைத் தந்தால்தான் அவருக்கு, கிரே ஆதரவு தர முடியும் என்று கூறிவிட்டார். ஆனால், ஒரு சில விக் கட்சியினர் மட்டுமே அவரை ஆதரித்தனர். எல்டன் ஆதரவாளர்களை முழுவதும் ஒழித்துக் கட்டுவதற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று புரோகாம் வலியுறுத்தினர். லேன்ட்ஸ்வோன், டியர்னி, வில்லியன் லேம்ப் (பின்பு மெல்போர்ன்), ஸ்டான்லி ஆகியோர் பதவிகளை ஒப்புக் கொண்டனர்; ஜான்ரஸலும், ஆதரவு அளிக்க முன் வந்தார். டோரிகளில், ஹஸ்கிஸன், ராபின்ஸன், பால்மர்ஸ்டன் ஆகியவர்களின் ஆதரவைக் கேனிங் பெற்றார். மிகவும் துணிச்சலான, நல்ல கூர்மையான அறிவை உடைய லிண்ட்ஹர்ஸ்ட் என்பவரை சான்சலர் பதவியில் அமர்த்தினர் கடற்படைத் தலைமையை, கிளாரன்ஸ் கோமகனுக்கு அளித்ததனால்

அரசன் திருப்தி அடைந்தான்; ஐரிஷ் அரசாங்கப் பொறுப்புகளைக் கத்தோலிக்கர்களின் கையிலேயே ஒப்படைத்து விட்டார். இதன் காரணமாக இரண்டு கட்சிகளுமே தங்களுடைய வேகத்தைக் குறைத்துக் கொண்டன.

சகுனங்கள் நன்றாக இல்லை. வெலிங்டனுடைய தூண்டு தலால் பிரபுக்கள் சபையினர் தானிய மதோதாவை அதிகமாகத் துண்டித்துவிட்டனர். இதனால் செல்வந்தர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் ஆபத்தான போராட்டம் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகும் என்று கேனிங் எச்சரித்தார். இந்த வழியில் முன்னேறிச் செல்வதோ, அல்லது விடுதலையை ஆதரிக்க அரசனைத் தூண்டுவதோ, அல்லது டோரி பிரபுக்களின் ஆத்திரத்தை அடக்குவதோ, ஆகிய இந்தப் பிரச்சினைகளெல்லாம் ஆகஸ்டு மாதத்தில் அவர் இறந்து விட்டதனால், அப்படியே நின்று விட்டன. அதற்குப் பிறகு ராபின்சன் அரசர் பிரபுவாக்கினர். இப்பொழுது அவர் கோட்ரிச் பிரபு. அவரையே பிரதம மந்திரி யாகவும் ஆக்கினர். அவரும் 1828 ஜனவரி வரையிலும் எப்படியோ சமாளித்தார், அவருடைய காலத்தில் கட்சியில் ஒரே குழப்பமாக இருந்தது. கோட்ரிச் பின்பு, விக் கட்சி கிரேயின் மந்திரி சபையிலும், கன்சர்வேடிவ் பீல் மந்திரி சபை யிலும் பதவியை வகித்திருக்கிறார் என்பதிலிருந்தே, அவருடைய கட்சிக் கொள்கையைப் புரிந்து கொள்ள முடியும். இவ் விதமான குழப்பம் கட்சியில் இருந்ததனால், அரசனுக்கும் கேபினட் விஷயங் களில் அவரது தந்தையைப் போல தலையிடுவதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. இந்த இடையூறுகளிடையே கோட்ரிச் தலைமைப் பதவியை வகிக்க விரும்பாது, அந்தப் பதவியில் ஒரு நாள் கூட பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமலேயே ராஜிநாமா செய்துவிட்டார். அதற்குப் பிறகு வெலிங்டன் தலைமையில் மந்திரிசபை அமைக்கப்பட்டது. பீல் காமன்ஸ் சபையின் டோரி கட்சித் தலைமையை ஏற்றுக்கொண்டார். டோரிக் கட்சியின் கடைசி அரசாங்கம் இதுவேயாகும்.

அவர்களுடைய தலைவர் இறந்துவிட்ட போதிலும், அடுத்த சில ஆண்டுகள் வரையிலும் தராசு கேனிங்கின் ஆதரவாளர்களின் பக்கமே சாய்ந்தது. ஹஸ்கிஸன், மெல்போர்ன், பால்மர்ஸ்டன், அல்லது மிதமான அபிப்ராயங்களை உடையவர்களும், முன்னேற்ற பாதையில் செல்ல வழி வகுத்தனர். இது ஒரு முழு டோரி கட்சியின் ஆட்சியே என்று பீல் தெளிவாக உணர்ந்தார். அதனுடைய அதிகாரம் சில ஆண்டுகளுக்கு நீடித்தது. இதில், எல்டன், மற்றும் பல பழைய அநுபவசாலிகளும் சேர்த்துக்

கொள்ளப்படவில்லை. ஆனால், வெலிங்டன், ஹஸ்கிஸன், டட்லி, பால்மர்ஸ்டன், மெல்போர்ன் ஆகியவர்களுக்கு எப்படியோ பதவிகளை அளித்ததனால், கேனிங்கின் நெருங்கிய நண்பர்களுக்கு அதிக ஆத்திரம் வந்தது. லிவர்பூல் அரசாங்கத்தின் மந்திரிகளை மீண்டும் ஒருங்கே சேர்த்தது அந்த மந்திரிசபை அதிக காலம் நீடிக்காமல் போய்விட்டதற்கு காரணமாகும்

1828–1830 வரை நீடித்திருந்த வெலிங்டன் மந்திரி சபை ஒரு பெரிய தோல்வியைத்தான் கண்டது. அதுபோலத்தான் அவருடைய உள்நாட்டு அரசியல் விவகாரங்களிலும் தோல்வியைக் கண்டார். ஆனால், மற்ற எவரும் சாதிக்க முடியாத ஒன்றை அவர் சாதித்தார். நான்காவது ஜார்ஜ் அரசனின் கொடுஞ்செயல்களைக் கட்டுப்படுத்தினர். அரசனின் மிகுந்த வெறுக்கத்தக்க தம்பிகளில் ஒருவரான கம்பர்லாந்தின் கொட்டத்தைக் குறைத்தார். ஆனால், அவர் ஆதரவின்றி தனித்து நின்றார். அவர் கீழான மக்களின் புகழ்ச்சி சொற்களுக்குச் செவி சாய்த்தார். ஆனால், பொது மக்களின் அபிப்பிராயத்திற்கோ அல்லது கட்சியின் கொள்கைகளுக்கோ அவர் செவி சாய்க்கவில்லை. மேலும் 1815 ஏற்பாட்டில் அவர் தம்மை தொடர்பு படுத்தியும், அந்த ஏற்பாட்டிற்கே அவர் தான் காரணம் என்றும் சொல்லிக் கொள்ளத் தவறவே இல்லை. 1827-ல் நேவரினோ போரில், பிரிட்டிஷ், ஃபிரெஞ்சு, ரஷ்யா ஆகிய நாடுகளின் கப்பற் படைகள், காட்ரிங்டன் தலைமையில் துருக்கிய கப்பற்படையை அழித்தது, அவருக்கு மிகுந்த வேதனையை அளித்தது. அவருக்கு, மேலும் படை பலத்தை பிரயோகிக்கும் விருப்பமில்லை. சுதந்திரப் போராட்டம் நடத்தும் கிரீஸை, எப்படியாவது குறுகிய எல்லைகளுக்குள் அமர்த்த வேண்டுமென்று நினைத்தார். கேனிங் போர்ச் சுக்கல்லுக்கு அனுப்பிய துருப்புகளையும் திருப்பி அழைத்துக் கொண்டார். டான் மைகுவல் இரக்கமில்லாமல் பல கொடுமைகளை இழைத்தபோதிலும், அந்த விவகாரங்களில் தலையிட அவருக்கு விருப்பமில்லை. அயல்நாட்டு விவகாரங்களிலும் உள் நாட்டு விவகாரங்களிலும் ஆட்சியை ஒழுங்காக நடத்துவதிலும், ஏற்கனவே நிலை பெற்றிருந்த முறையை மாற்றுமலும் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பியதனால், பாராளுமன்றத்தின் ஆதரவைப் படிப்படியாக ஒவ்வொரு பிரச்சினையிலும் அவர் இழந்து விட்டார்.

கேனிங் ஆதரவாளர்களுடன், அவர் கூட்டு சேர்ந்து நடத்திய ஆட்சி ஜனவரியிலிருந்து மே 1828 வரைதான் நீடித்தது. பென்ரின், கிழக்கு ரெட்போர்ட் என்ற இரண்டு ராட்டன் பரோக்

களிலிருந்து (Rotten Boroughs) வாக்காளர் பட்டியலைப் பெரிய நகரங்களுக்கு மாற்றிவிட வேண்டுமென்ற பிரச்சினையின் சிக்கல் ஏற்பட்டு, இந்தக் கூட்டு முறிந்துவிட்டது. கேனிங்கின் வெளி நாட்டுக் கொள்கை புறக்கணிக்கப்பட்டதென்று அவருடைய ஆதர வாளர்கள் வருத்தப்பட்டனர். ஹஸ்கிஸன் வெளிப்படையாகவே, கட்டுப்பாடில்லாத வாணிகம் வேண்டும் என்று பிரச்சாரம் செய்த பொழுது, இது கலகம் விளைவிப்பதற்கான அறிகுறி என்று கோமகன் கருதி, அவருடைய ராஜிநாமாவைப் பெறுவதற்கு ஒரு முதல் வாய்ப்பை எதிர்பார்த்தார். அவருடைய புதிய நியமனங்களெல்லாம் பலவீனமானவை. வெளி விவகாரத் துறையில் டட்லிக்குப் பதிலாக, ஆபர்டீன் நியமித்தது இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இதனால் ஏற்பட்ட விளைவு, கவுண்டி கிளேபில் நிகழ்ந்த ஒரு இடைத் தேர்தலில், கத்தோலிக்க விடுதலையை ஆதரித்த ஒரு ஐரிஷ் காரரான, விஸே ஃபிட்ஸ்ஜெரால்ட் என்பவர், ஓ' கானெல்லால் தோற்கடிக்கப்பட்டார் என்னும் குற்றங்களைச் சாட்டினர்.

இந்த நிகழ்ச்சி ஏற்படுவதற்கு முன்பு, 'டெஸ்ட் சட்டம்' கார்ப்பரேஷன் சட்டங்கள் (Test and Corporation Acts) ஆகிய வற்றை ரத்து செய்ய வேண்டுமென்று மிகத் திறமையுடன் விக்குகள் சூழ்ச்சி செய்து, ரஸலின் மூலமாக காமன்ஸ் சபையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இதை காமன்ஸ் சபை ஏற்றுக் கொண்டது. டெஸ்ட், கார்ப்பரேஷன் சட்டங்கள் இது வரையிலும் புராடஸ்டன்ட் சமயத்திலிருந்து மாறுபட்ட சமயக் கருத்துகளை உடையவர்களுக்கு பதவிகள் தர அனுமதிக்க வில்லை. சமயம், புராடஸ்டெண்டுகளின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என்கின்றபொழுது, கத்தோலிக்கர்களுக்கு மட்டும் அது ஏன் தடையாக இருக்க வேண்டும்? இந்தக் கேள்வி டோரிகளின் விவாதத்தை முறியடித்தது. வெலிங்டனுக்கும் கூட இந்த சமய வேறுபாடுகள் பிடிக்கவில்லை. அயர்லாந்தில் நிகழ்கின்ற சில நிகழ்ச்சிகளால், அவர் இந்த முடிவிற்கு வந்திருக்கலாம். அயர்லாந்திலுள்ள, 'லார்ட் லெப்டினன்டையும்' கத்தோலிக்க படையையும், காவலர் களையும் மட்டும் எப்படி நம்புவது என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டது. இவ்விதமான கொந்தளிப்புகளை, புராடஸ்டெண்ட் தலைவரான பீலின் உதவியின்றி, அவரால் சமாளித்திருக்க முடியாது. இந்தப் பிரச்சினையைக் கேபினட்டில் விவாதிப்பதால் எந்த முடிவும் ஏற்படாதென்று அறிந்த பீல், இதை பகிரங்கமாக விவாதிப்படதே நல்லது என்று கருதினர். கேனிங் காலத்திலுங் கூட, அவர் இப்படி ஒரு கருத்தை ஆதரிக்க பின் தங்கினர்.

1829-ஆம் ஆண்டு ஆரம்பத்தில், கோமகனுக்கு இந்த விஷயத்தில் உதவி செய்வது தம்முடைய கடமை என்று கருதி, மேலும் இந்தப் பிரச்சினைக்கு விரோதமாக அரசனும், பிஷப்புகளும் இருக்கக் கூடாதென்றும், கிரேயினால் மாற்று அரசாங்கம் நிறுவ முடியாதென்றும் அறிவித்தார். ஏப்ரல் மாதத்தில் இந்த மசோதா நிறைவேறியது. அதன்படி கத்தோலிக்கர்கள் பாராளுமன்றத்தில் அங்கத்தினர்களாகலாம்; எல்லா பதவிகளுக்கும் அவர்கள் அமர்த்தப்படுவதில் தடையில்லை என்று கூறப்பட்டது. ஆனால், அயர்லாந்தில், லார்ட்-லெப்டினன்ட் பதவியைக் கத்தோலிக்கர்கள் வகிக்கமுடியாதென்றும், இங்கிலாந்தில் அவர்கள் சான்சலர் பதவியை வகிக்க முடியாதென்றும் அறிவிக்கப்பட்டது. இதையொட்டி, அயர்லாந்திலுள்ள மானியதார்களின் வாக்குரிமை அளிக்கும் தகுதி 40 ஷில்லிங்குகளிலிருந்து 10 பவுன்கள் வருமானத்திற்கு உயர்த்தப்பட்டது.

இதற்குப் பிறகு, பழைய டோரிக் கட்சி முடிவடைந்தது. அந்தக் கட்சியிலிருந்து 173 பேர் 'விடுதலையை' எதிர்த்து வாக்களித்தனர். அக் கட்சியிலுள்ள தலைவர்களே அவர்களை ஏமாற்றி விட்டார்கள் என்று தீராத ஆத்திரமடைந்தனர். வெலிங்டன் மீது, ஏமாற்றிவிட்டதாக குற்றம் சாட்டியதினால், அவரும், வின்செல்ஸியா பிரபுவும் ''நேரிருவர் சண்டை' செய்தனர். ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் பீலை பதவியிலிருந்து நீக்கியது. சில டோரிகள், பாராளுமன்றத்து சீர்திருத்தங்களாக இருந்தாலும் சரி, விக்குகளுடன் சேர்ந்து 'நவீன டோரிகளை'ப் பழிவாங்குவதென்று தீர்மானித்திருந்தனர். அடுத்த ஆண்டில் கட்சியில் குழப்பம், முன்பிருந்ததைவிட மிக அதிகமாக இருந்தது. கோமகனுக்கு ஆதரவாக சில விக்குகள் இருந்ததனால், சிறு பதவிகளில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். கிரேயுங்கூட தனிப்பட்ட முறையில் கோமகனுடன் நல்ல தொடர்பை வைத்திருந்ததாலும், மற்றும் தானியக் கொள்கை அளவிலும் கேனிங்கின் ஆதரவாளர்களைவிட வெலிங்டனுக்கே அதிகமாக ஆதரவளித்தார். பீலின் காவலர்கள் அமைப்பு, சட்ட சீர்திருத்தங்கள், வரி விதிப்பிலிருந்து குறைப்பு, வெளிநாடுகளில் சமாதானம், போன்ற கொள்கைகள் விக் விமர்சகர்களையும் திருப்தி செய்தன. எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாத வெலிங்டன், தனிப்பட்டவர்களுக்கு பட்டம் பதவிகளை அளித்து ஆதரவு தேட முற்பட்டாரே தவிர, கட்சியைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. 1830ஆம் ஆண்டு எப்படி முடியும் என்று யாராலும் சொல்லமுடியாதநிலை இருந்தது.

பல அனாகுறையான வேலை நிறுத்தங்களுடன் இந்த ஆண்டு தொடங்கியது. பாராளுமன்ற சீர்திருத்தங்கள் வேண்டுமென்ற கூக்குரல்கள் மீண்டும் ஒலித்தன. இதைப்பற்றி அபிப்ராயங்களை வெளியிடுவதற்காக டோரி பொருளாதார வல்லுநர் ஆட்வுட் என்பவர் ஒரு அரசியல் கழகத்தையே பர்மிங்காமில் ஏற்படுத்தினர். கேபட் வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். எதிலும் ஒருமைப்பட்ட எதிர்ப்பு இல்லை; ஆனல் எங்கேயும் குறைகள் தான் அதிகமாகக் கூறப்பட்டன. சில சமயங்களில் இராணுவக் குறைப்பு வேண்டுமென்றும், வெளிவிவகாரங்களில் உறுதியான கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்றும் சிலர் கருதினர். முதல் கட்டத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு இத்துடன் நின்றது. கேபினட் சபையை வெலிங்டன் திருத்தி அமைக்காவிடில், அவர்கள் வெளிப்படையாகவே அவரை எதிர்க்க முன் வருவார்கள் என்ற நிலைமை இருந்தது.

ஜூன் மாதத்தில் நான்காவது ஜார்ஜ் இறந்துவிட்டார். அவருடைய மரணம் ஒருவகையில் வரவேற்கப்பட்டதென்றாலும், மற்றொருவகையில் கொருக்கடியையும் ஏற்படுத்திவிட்டது. ஏனெனில், நான்காவது வில்லியமுக்குச் சிறிது தேசிய உணர்ச்சியும் இருந்தது. அதற்கேற்ப வெறுக்கத்தக்க கம்பர்லேண்ட் பட்டத்திற்கு வரமுடியாதபடி தடுக்கப்பட்டார். மேலும், கிரே பதவியை வகிக்கக்கூடாதென்றிருந்த அரசனின் ரத்ததிகாரம் நீக்கப்பட்டது. சட்டப்படி, இதனல் பொதுத்தேர்தல் நடைபெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவைகளெல்லாம் முடிவடையும் தருணத்தில், ஃபிரெஞ்சு மக்கள் தங்கள் அரசனை சார்லஸ் X இன் மீது படையெடுத்தனர். ஆகஸ்ட் முதல் வாரத்தில் அவர் நாட்டைவிட்டே ஓடிவிட்டார். அதே மாதத்தின் கடைசி வாரத்தில், பெல்ஜியம் மக்கள், அவர்களுடைய டச்சு அரசர்களை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். இதன் விளைவாக அவர்கள் ஹாலந்திலிருந்து பிரிந்துவாழ ஒரு தனி நாட்டைக் கேட்டனர். இதே சமயத்தில், தானிய சட்டங்கள், இரவலர் சட்டங்கள், மிதமிஞ்சிய மூலதன ஆக்கம், மார்க்கட்டில் மந்தநிலை, போன்றவைகளின் விளைவுகளாக, இங்கிலாந்திலுள்ள விவசாயிகள் மிகுந்த தொல்லைகளுக்குட்பட்டனர். தொழிலாளர் கலகம் முதலில் கெண்டில் ஆரம்பித்தது. பின்பு அது வடக்கிலும், மேற்கிலும் விரைவில் பரவியது ஆயிரக்கணக்கில், தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக, இரவலர் நிதியைக் குறைக்கலாகாது என்றும், அதிகக்கூலி வேண்டுமென்றும், கோயில்களுக்குச் செலுத்தும் 'டைத்' போன்ற வரிகள் ரத்து செய்யப்பட

வேண்டுமென்றும் ஆவேசமாக முழங்கிக்கொண்டு சென்றனர். அத்துடன் அவர்கள் நில்லாது, இயந்திரங்களை உடைத்தும், வைக்கோலுக்கு தீ வைத்தும் அராஜகம் செய்தனர்.

இந்தக் கசப்பான சூழ்நிலையிலும், பரப்பரப்பிலும், பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இதனால் அரசாங்கத்திற்கு பல சேதங்கள் ஏற்பட்டன. கவுன்டி தொகுதிகளைச், சீர்திருத்த வாதிகள் கைப்பற்றினர். உண்மையில் கவுன்சில்களிலேதான் ஓரளவிற்கு அப்பொழுது பிரதிநிதித்துவம் இருந்தது. சீர்திருத்தம் வேண்டும், மலிவான விலையில் ரொட்டிவேண்டும் அடிமை முறையை ஒழித்தல்வேண்டும் என்பனபோன்ற குறிக் கோள்களுக்காக, போட்டியிடுகிறேன் என்று பிரசாரம் செய்து புரோகாம் யார்க்ஷயர் தொகுதியில் வெற்றிபெற்றார். ஆனால் டோரிக் கட்சியில், 'பீலிட்களும்', 'அல்ட்ராக்களும்' (Ultras) அவர் களுக்குள்ளேயே பிளவுபட்டிருந்தனர். கட்சிகள் சரியான முறையில் சீரமைக்கப்படவில்லை. எனவே, பலர் தனித்தே நின்று போட்டியிட்டனர். மாற்றங்கள் ஏற்படவில்லையெனின் வெலிங்டனின் எதிர்காலம் முடிவடைந்ததாகக் கொள்ள வேண்டு மென்று பார்வையாளர்கள் கருதினர்.

செப்டம்பர் மாதத்தில், லிவர்பூல்-மேன்செஸ்டர் ரெயில் வேயை ஆரம்பித்து வைக்கும்பொழுது, ஹஸ்கிஸன் எதிர்பாராத விதத்தில் கொல்லப்பட்டார். அவர்மீது பலர் நம்பிக்கை வைக்க வில்லை. அதனால் அவர் இறந்தவுடன், எளிதாக, விக்குகள், கேனிங்கின் ஆதரவாளர்கள், சுயேச்சைகள், அதாவது ஸ்டான்லி, ஜேம்ஸ் கிரகாம் போன்றவர்கள் எளிதில் கூட்டுச்சேர வாய்ப்பு ஏற்பட்டது. பால்மர்ஸ்டனைப் போன்று பலர், சீர்திருத்தத்தில் எந்தவிதமான அக்கறையும் எடுத்துக்கொள்ளவில்லை, ஆயினும் அவர்கள் நாட்டை எதிர்நோக்கியுள்ள ஆபத்தையும், அவர் களுடைய தேவைகளையும் நன்குணர்ந்திருந்தனர். பாராளு மன்றத்தின் ஆரம்ப உரை நிகழ்த்திய அரசன் டச்சு அரசாங் கத்திற்கு கருணை காட்டினர்; வெலிங்டன் நமது அரசியல் அமைப்பில் எந்தவித மாற்றத்தையும் அனுமதிக்கப்போவதில்லை என்று உறுதியாகக் கூறினர். இவ்விதமான ஆரம்ப உரைகள், மக்களிடமிருந்த எஞ்சிய நம்பிக்கையையுமிழக்கச் செய்தன. இதற்குப் பிறகு பல புரட்சி பயமுறுத்தல்கள் தோன்றின. வரி கொடா இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகவும், காவலர்களைத் தாக்கப்போவதாகவும், பலவாறு ஆவேசப் பேச்சுக்கள் கிளம்பின. இதற்கெல்லாம் ஒரு முடிவு நவம்பர் 15ஆம் தேதி யன்று ஏற்பட்டது. அரசனுடைய செலவினங்களைப் பற்றிய

விவாதத்தில், எதிர்கட்சியிலுள்ள பல பிரிவினரும், டோரி 'அல்ட்ராக்கள்' உட்பட வெலிங்டனுக்கு எதிராக வாக்குரிமை அளித்து அவரைத் தோற்கடித்தனர். நேரடியாக, சீர்திருத்தங் கூக் கொண்டுவரும் மசோதாவில் கலந்து கொள்வதைவிட, ராஜிநாமா செய்வதையே அவர் விரும்பினர். பின்பு அரசாங் கத்தை அமைக்க கிரேயுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது.

1830-ல் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம், விக்-லிபரல் கொள்கை களினால் உருவாக்கப்பட்டது. அடுத்த ஐம்பது வருடங்களுக்கு இந்தக் கூட்டமைப்பு நீடித்தது. கிரே, மற்றும் அவருடைய நண்பர்களான ஹாலண்ட், லேன்ஸ்டோன், ஆகியவர்கள் ஃபாக்ஸின் (Fox) அரசியல் குழந்தைகளாவர். ஜான் ரஸல், அல்திராப் ஆகியோர் பரம்பரையாக விக் கட்சியைச் சார்ந்த வர்கள். கிரேயின் மருமகன், டர்ஹாம் தீவிரவாதி. புரோகாமும் ஒரு தீவிரவாதிதான். அவர் சான்சலர் பதவியைப் போராடி வாங்கிக்கொண்டார். ஆனல் கோட்ரிச், மெல்போர்ன், பால் மர்ஸ்டன், கிராண்ட் ஆகியவர்கள் கேனிங்கைப் பின்பற்றுகிற வர்கள். ஸ்டான்லியும், கிரகாமும் கன்சர்வேடிவ்-விக்குகள். இவர்களுள் பலரும், மற்றும் அயர்லாந்தை ஆட்சி செய்கின்றவர் களும் லிவர்பூல் அரசாங்கத்தில் பதவி வகித்தவர்களே. தீவிர டோரிகளின் தற்காலிக உடன்பாட்டின்படி, அவர்கள் கட்சியை ரிச்மான்ட் பிரதிபலித்தார். இந்தப் புதிய அரசாங்கமும், அதனுடைய தன்மையும், சீர்திருத்தம் செய்யப்படாத பாராளு மன்றத்தில் எப்படி இயங்கும் என்று சந்தேகிக்கப்பட்டது. ஆனல் சீர்திருத்த மசோதா கொண்டு வந்த பிறகு, அந்த மசோதாவை நிறைவேற்ற எல்லாருடைய ஆதரவும் கிடைத்தது. இதற்காக கிரே தன்னுடைய முழு செல்வாக்கையும் பயன்படுத் தினர்.

அப்பொழுது கிரேயுக்கு எழுபது வயது நிரம்பியிருந்தது. அதிர்ஷ்டம், அழகு, கவர்ச்சி எல்லாமே அவரிடம் ஒருங்கே பொருந்தியிருந்தன. ஆனல், அவருடைய வாழ்க்கை ஏமாற்ற மடைந்ததாகவும், பல ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டதாகவும் இதுவரையில் இருந்தது. இப்பொழுதுங்கூட, காமன்ஸ் சபையில் கட்சித் தலைவராக இருந்த அல்திராப்பின் உதவியின்றி அவர் முன்னுக்கு வந்திருக்க முடியாது, நிதி விஷயங்களைப்பற்றித் தெரியாதவரும், உணர்ச்சியற்ற முறையில் பேசுகின்றவரும் என்று குறை கூறினலும் பிறர் நேசிக்கின்ற தன்மையும், நம்பிக்கை யுள்ளவருமான அல்திராப், ஒரு நல்ல நாட்டுப்புறத்தான் என்று கூறலாம். ஆனல், கிரேயின் சாதனையினல், அவருக்கும் அழியாப்

புகழ் கிடைத்தது. டர்ஹாமின் மிக ஆவேசமான கோபத்தைத் தணிப்பதற்கும், புரோகாமின் அளவு கடந்த சூழ்ச்சிகளைச் சமாளிப்பதற்கும், முரண்பட்ட கருத்துக்களையும், பயந்த சுணக்கத்தையும் உடைய அரசனை பழி வாங்குவதற்கும் இவ்விதமான ஒரு ஆள் தேவைப்பட்டது. அவருடைய சமரச மனப்பான்மையும், பெருந்தன்மையும் சேர்ந்து, மக்களுடைய உண்மையான பிரதிநிதியாகவே கிரே கருதப்பட்டார்.

அவரை செயலாற்றத் தூண்டியது ஜனநாயக நோக்கமன்று. ஆனால், அவருடைய கேபினட் சபையில் அந்தத் தன்மை மிகுந்திருந்தது. அதைவிட மக்களின் எழுச்சியை அணைபோட்டுத் தடுப்பதனால் ஏற்படும் விளைவுகளையும் அவர் அறிந்திருந்தார். உள்நாட்டுத் துறையில், மெல்போர்ன் ஒரு சிறப்புக் குழுவினை அமைத்தார். அதன்மூலம் விவசாயக் கலகக்காரர்களுக்கு மரண தண்டனைகளும், ஆயுள் தண்டனைகளும் தரலாம் என்று அவர் கருதினர். காபெட்டும், மற்றும் பல தீவிரமான பத்திரிகையாளர்களும் கைது செய்யப்பட்டார்கள். ஆரம்ப காலத்தில் பர்க் பின்பற்றிய கொள்கையையும் பிற்காலத்தில் ஃபாக்ஸ் பின்பற்றிய கொள்கையையும் கிரே கடைப்பிடித்தார். யாதாவது நல்ல காரணம் இல்லாது மக்கள், கொந்தளித்து எழமாட்டார்கள் என்றும் 'லிபரலிசம்' என்று கூக்குரலிடும்பொழுது யாதாவது சலுகையைத் தரத்தான் வேண்டுமென்று அவர் கருதினர். சீர்திருத்தம் கொண்டுவந்தால் ஒரு தலைமுறைக்காவது அது நீடித்திருக்க வேண்டுமென்றும், அதனால் முழுமையாகவும் இருக்க வேண்டுமென்றும், அவர் பதவிக்கு வருவதற்கு முன்னமே முடிவு செய்து வைத்திருந்தார். அதனால் அப்பேர்பட்ட சீர்திருத்தம் வெற்றுரிமைகளின் அடிப்படையில் எல்லாருக்கும் வாக்குரிமை அளிப்பதைவிட, வாக்குரிமை, சொத்தின் அடிப்படையில் தரப்பட வேண்டுமென்றும், மேலும் வரலாற்று வழியாக வந்த கவுண்டிகளையும், பரோக்களையும் இதற்காக மட்டும் மாற்றி அமைக்க வேண்டியதில்லையென்றும் அவர் கருதினர். அதனால் இந்தச் சீர்திருத்தக் கமிட்டிக்கு, அதிக மிதவாதக் கொள்கைகளில்லாதவர்களாகவும், அதே சமயத்தில் அவருக்கு நம்பிக்கையுள்ளவர்களுமான, டர்ஹாம், ரஸல், கிரகாம், கட்சி அமைப்பாளர் டங்கேனன் ஆகியவர்களை நியமித்தார்.

மார்ச் 1831-ல் கொண்டுவரப்பட்ட முதல் சீர்திருத்த மசோதாவை கேபினட் ஒப்புக் கொள்வதே மிகவும் கடினமாகி விட்டது. வாக்குரிமை, ஓட்டுகளில் மூலமாகத்தான் பதிவாக வேண்டுமென்பதும், பாராளுமன்றத்தின் காலம் ஏழு ஆண்டு

களிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு குறைக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக பரோக்களில் வாக்குரிமை பெரிதும் குறைக்கப்பட்டது. கடந்த நான்கு நூற்றாண்டுகளாக, பல குறைபாடுகள் இந்தத் தொகுதிகளில் காணப்பட்டன. அக்குறைபாடுகளை அகற்ற இப்பொழுது வற்புறுத்தப்பட்டது. ஒரே அடியில் 'ராட்டன் பரோக்களும்,' 'நாமினேஷன் பரோக்களும்' (Nomination Boroughs) மறைந்துவிட்டன. 2000 மக்கள் தொகைக்கு கீழிருக்கும் 60 பரோக்கள் செட்யூல் 'ஏ' படி இரண்டு அங்கத்தினர்களையும் இழந்துவிடுகின்றன. மக்கள் தொகை 2000-திலிருந்து 4000 வரை இருக்கும் 46 பரோக்கள், செட்யூல் 'பீ' படி ஒரு அங்கத்தினரை இழந்துவிடுகிறது. இந்த மாற்றம்தான் சீர்திருத்த மசோதாவின் மிக முக்கியமான தென்றல் வாக்குரிமை மாற்றங்களும்கூட புரட்சிகரமானவை தான் என்று கருதப்படவேண்டும். பரோக்களிலிருந்து பல தரமான வாக்குரிமை அளிப்பதற்கான தகுதிகள்— சில பரந்த அடிப்படையில் இருந்ததை சில கார்பரேஷன்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்தன. சில, நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தரப்பட்டிருந்தன. ஆனால், இந்த மசோதா எல்லாவற்றையும் மாற்றி அமைத்து ஒரேமாதிரியான வாக்குரிமை தகுதிகளை, அதாவது பத்து பவுன்களுக்கு மேற்பட்ட வாடகை மதிப்புள்ள வீடு வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. கவுன்டிகளிலுள்ள 40 ஷில்லிங் வாடகை மதிப்புள்ள உரிமை மானியக்காரர்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் தகுதி நீடிக்கப்பட்டது; ஆனால், ஐம்பது பவுன் மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருக்கும் குத்தகைதார்களுக்கும், பத்து பவுன் மதிப்புள்ள சொத்துக்களை உடைய பழைய பண்ணை முறைப்படி நிலம் வைத்திருப்பவர்களுக்கும் (Copy-Holders) வாக்குரிமை தரப்பட்டது. இந்தப் பழைய பாராளுமன்றத்தில் வீற்றிருந்த பல தரப்பட்ட அங்கத்தினர்களிடையே மசோதாவின் இரண்டாவது வாசிப்பு, ஒட்டு அதிகம் பெற்று, அக் கட்டத்தைத் தாண்டியது. வெலிங்டனும், டோரிகளும் சேர்ந்து, கேஸ்காய்ன் கொண்டுவந்த ஒரு திருத்தத்தை நிறைவேற்றினர்கள். அந்தத் திருத்தப்படி இங்கிலாந்துக்கும், வேல்ஸ்க்கும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டிருந்த அங்கத்தினர் தொகையைக் குறைக்கக்கூடாதென்பதாகும். இதனால் 1831-ல் கிரே, அரசனைத் தூண்டி, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி கேட்டுக்கொண்டார். மீண்டும் பொதுத் தேர்தல் நடந்தது. வாக்காளர்கள், முக்கியமான 'அல்ட்ராக்களை' தோற்கடித்தனர். கிரே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய கட்சிக்கும் பெரும்பான்மை ஆதரவு இருந்தது. அதனால் இரண்டாவது மசோதாவின் இரண்டாவது வாசிப்பு,

பாராளுமன்றத்தில் 136 வாக்குகள் அதிகமாகப் பெற்று நிறை வேற்றப்பட்டது. எந்தவிதமான உருப்படியான மாற்றத்தையும் தெரிவிக்காது, பல வாரங்கள் இந்த மசோதா தீவிரமாக விவாதிக்கப்பட்டது. டோரிக் கட்சியைச் சேர்ந்த, சேண்டோஸ் கொண்டுவந்தத் திருத்தத்தில் கவுண்டி வாக்குரிமை 50 பவுன் மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருக்கின்ற குடியிருப்பவர்களுக்கும் (Tenants at Will) நீண்டகால குத்தகைதார்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அக்டோபரில் பிரபுக்கள் சபையில் 41 ஓட்டுகள் அதிகம் பெற்று இந்த மசோதா நிராகரிக்கப்பட்டது.

பனிக் காலத்தில், நெருக்கடி அதிகமாகிவிட்டது. அரசாங்கத்தை மட்டுமின்றி, எதிர்காலத்தையும் இது பாதித்தது. காமன்ஸ் சபைக்கும், பிரபுக்கள் சபைக்குமிருந்த முட்டுக்கட்டை வலுவடைந்தது. அரசனுடைய நல்ல எண்ணங்கூட கெட்டு விட்டது. இரண்டு தீவிரவாதிகளான, ஃபிரான்சிஸ் பிளேஸ் லண்டன் ஆதரவுடனும் இந்த மசோதாவை ஆதரித்தார்களென்றாலும், இந்த மசோதா மிகக் குறைந்தபட்ச சீர்திருத்தங்களைத் தான் அளிக்கின்றது என்று கருதினர். அத்தீவிரவாதியும், லங்காஷயர் தொழிற்சங்கத் தலைவருமான டோஹர்டி, மற்றும் இவரைப்போன்ற பலரும், இந்த மசோதா நடுத்தர மக்களுடைய நலன்களைத்தான் குறிக்கின்றது என்று அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். பர்மிங்காமில் உள்ள அரசியல் கழகம், இந்த மசோதா நிறைவேற்றப்படாவிடில், வரி கொடுக்க மறுக்கப் போவதாகவும், இன்னும் மற்றக் கழகங்கள் வன்முறையில் இறங்கப் போவதாகவும் பயமுறுத்தின. பிளாக் ஃபிரயர்ஸ் ரோட்டுண்டாவில் (Black Friars Rotunda) அளவு கடந்து ஆவேசமாக சொற்பொழிவுகளாற்றியவர்களும், மக்களும் கட்டுப்பாடில்லாமல் ஆர்பாட்டம் செய்தனர். முடியாட்சியை ஒழித்துவிடுவதாகவும், ராணி அடிலேய்டின் ஜர்மன் செல்வாக்கைப் பயன்படுத்தியதால் அவளையும் ஒழித்துவிடுவதாகவும்; இந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்த இருபத்தொரு பிஷப்புக்கள்மீதும் வெறுப்படைந்து, அவர்களையும் கடுமையாகத் தாக்கப்போவதாகவும் பயமுறுத்தினர். நாட்டிங்காமில் மக்கள் கூட்டம் ஆவேசமடைந்து, நியூகேஸல் கோமகனுடைய இல்லத்தைத் தீயிட்டுக் கொளுத்தியது. பிரிஸ்டலில் ஒரு கூட்டம் நகரத்தின் நடுப்பகுதியைத் தாக்கியது. மேயரின் பலவீனமும், படையின் அலட்சிய மனப்பான்மையும்தான் இதற்கு காரணமாக இருந்தது. தீவிரவாதிகள் அணி அணியாக முன்வந்து தாக்க முற்பட்டனர். பீலைப்போன்ற நிலப் பிரபுக்கள் பயந்துபோய், பாதுகாப்புடன் இருந்தனர்.

இந்த நிலைமையைச் சமாளிக்க மூன்றே வழிகள்தான் இருந்தன. மக்கள் ஆட்சி, சமரசம், அல்லது பிரபுக்களின் சரணாகதி. பிரபுக்கள் சரணாகதி அடைவது என்பது முடியாததாகும். ஆனால், கிரே அரசனைத் தூண்டி, அதிகமான பிரபுக்களை நியமித்தால் இந்தப் பிரச்சினை தீரலாம் என்று கூறினர். ஆனால், சுமார் ஐம்பது பிரபுக்களையாவது அரசன் நியமித்தால்தான், பிரபுக்கள் சரணாகதி சாத்தியமாகும். ஆனால், இது மிகவும் கடினமான காரியம். நான்காவது வில்லியம் இவ்விதமான சாத்தியக் கூற்றைச் சிந்தனை செய்து பார்க்கவில்லை. உண்மையில், கிரே கூட, இப்படிச் செய்வதை விரும்பவில்லை. ஏனெனில், எத்தனைக்குப் புதிய நண்பர்களை ஏற்படுத்த முடியும் என்று அவருக்குத் தெரியும். அதனால் மிகுந்த பொறுமையுடன் அவர் மற்ற வழிகளைப் பின்பற்றி பார்த்தார். ஒரு புதிய மசோதாவைத் தயாரித்தார். பழைய மசோதாவைவிட, இதில் அதிக மாற்றங்களில்லை. கேபினட்டில் உள்ள மிதவாதிகளான பால்மர்ஸ்டன், மெல்போர்ன், லேன்ட்ஸ்வோன் ஆகியோர்களின் கருத்துக்கு ஏற்ப இந்த மசோதா தயாரிக்கப்பட்டது. டோரி கட்சியின் நிலையில்லாதவர்களுக்குத் (Waverers) தலைமை தாங்கிய கேனிங்கை பின்பற்றுகின்ற வார்ன்கிளிப், பிட்டின் உயிரோடு இருக்கும் கடைசி நண்பனை ஹரோபி ஆகியவர்கள் இந்த மசோதாவை எப்படி ஆதரிக்கிறார்கள் என்ற சாத்தியக்கூறுகளைக் கவனித்தார். இதற்குள், அரசியல் கழகங்களுக்குத் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது ஏனெனில். அவைகள் இராணுவ மயமாகிக் கொண்டிருந்தன. தனிப்பட்ட முறையில், லண்டன், பர்மிங்காம் ஆகிய பகுதிகளிலுள்ள தீவிரவாதிகள் அமைதியாக இருந்தார்களென்றால், அமைச்சர்கள் கூடிய விரைவிலும் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியும் என்று உறுதிமொழி அளித்தார். அரசனுடைய செயலாளரான சர் ஹெர்பர்ட் டெய்லரும் நல்ல விசுவாசத்துடனும், அரசியல் அமைப்பு முறையிலும் இந்தப் பிரச்சினை தீருவதற்கு உதவி அளித்தார்.

'நிலையில்லாதவர்களின்' சமரசப் பேச்சுக்கள் எவ்விதமான உடன்படிக்கைக்கும் வழிகோலவில்லை; எனினும் மூன்றாவது தடவை தயாரித்த மசோதாவில், அவர்களுக்குச் சில முக்கியமான சலுகைகள் தரப்பட்டிருந்தன. ஆங்கிலேய அங்கத்தினர்களின் தொகை குறைக்கப்படவில்லை. பரோக்கள் அங்கத்தினர்களை அனுப்புவதோ இழப்பதோ, அந்த பரோக்களின் மக்கள் தொகையைப் பொறுத்திருக்காமல், அங்கே வசூலிக்கப்படுகின்ற வரித் தொகையைப் பொறுத்தும், வீடுகளைப் பொறுத்தும் நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

செட்யூல் 'ஏ'-யில் அப்படியும் ஐம்பத்து ஆறு பரோக்கள் வருகின்றன; ஆனால், செட்யூல் 'பீ'-யில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டதிலிருந்து முப்பதுக்கு குறைக்கப்பட்டுவிட்டது. மேலும் பரோக்களிலேயே வசிக்கின்ற தனி நில உரிமை உடையோர்களுக்கும் (Freemen) பரோ வாக்குரிமை அளிக்கப்பட்டது. பிரபுக்களையும்கூட பணிய வைக்க முடியும் என்ற நம்பிக்கை கிரேயுக்கு ஏற்பட்டது. ஏனெனில், அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் அனுகூலமாக இருந்தன. ஜனவரி 1832-ல் எத்தனை புதிய பிரபுக்களை நியமிக்கவேண்டுமென்றும் அதற்கேற்ப அவர்களை நியமித்து விடலாம் என்று அரசன் சூசகமாக வாக்குறுதி அளித்தார். ஆனால் உண்மையான தேவை ஏற்படும்பொழுது தான் நியமிக்கப்படலாம் என்று அவருடைய வாக்குறுதியிலிருந்து தெரிய வந்தது. இந்த அபிப்பிராயத்தையே கிரேயும் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய கேபினட்டில், அல்திராப், புரோகாம், டர்ஹாம் ஆகியவர்கள் புதிய பிரபுக்களை உடனே நியமனம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர். கிரே நினைத்தபடியே பிரபுக்கள் சபையில் இந்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பு என்பது ஓட்டுக்கள் அதிகம் பெற்று ஏப்ரல் மாதத்தில் நிறைவேறியது. இவருடைய முடிவு சரியானதே என்பது பின்னல் ஏற்பட்ட நெருக்கடியும் காட்டுகிறது.

இந்த மசோதாவை நிறைவேற்றுகின்ற பல கட்டங்களிலும் டோரிகளின் விவாதமும், அவர்களுடைய எதிர்ப்பு முறைகளும் சிதறடிக்கப்பட்டன. மே மாதத்தில் ஏற்பட்ட நெருக்கடியில், அவர்களுடைய நிலைமை மிகவும் குழப்பத்திலிருந்தது. சீர்திருத்தம் தேவை என்பதனையும், வீணாக இந்த மசோதாவை எதிர்த்து மீண்டும் தன்னுடைய புகழைப் பாழ்படுத்திக்கொள்ளக் கூடாதென்பதையும் இவர் உணர்ந்திருக்தார். அதனால், கோமகனின் கண்மூடித்தனமான எதிர்ப்பிற்கு அவரையே இலக்காக்கிவிட்டு, அந்த எதிர்ப்பிலிருந்து சற்று இவர் விலகியே நின்றார். இந்த சமயத்தில் 'நிலையில்லாதவர்கள்', சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதை கொள்கை அளவில் பிரபுக்கள் ஒப்புக்கொண்டதற்கு இவர்களே காரணம் என்று பெருமிதமடைந்தார்கள். அவர்களில் கூர்மையான அறிவு படைத்தவர்கள், லிண்ட்ஹர்ஸ்ட்-ஐ போல், இந்த நிலைமையை பயன்படுத்தி அவர்களுடைய கட்சியையும் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்து, இந்த மசோதாவைத் திருத்தியமைக்க சிறப்புக்குழு ஒன்றிடம் விடவேண்டுமென்று அறிவித்தார்கள். அதனால் விக் கட்சியிடமிருந்து இந்த சீர்திருத்த மசோதா சிறிது நழுவியது. இதற்கேற்ப பிரபுக்களும், வாக்குரிமை பறிக்கப்படுகின்ற சில மசோதாவின் பகுதிகளைப்

புனராலோசனை செய்யவேண்டுமென்றும் அதனால் இந்த மசோதா ஒத்திப்போடவேண்டுமென்றும் ஒரு திருத்தத்தை நிறைவேற்றினர். இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, குறைந்தது ஐம்பது புதிய பிரபுக்களை நியமிப்பதற்கு அதிகாரம் தரப்பட வேண்டுமென்று கிரே அரசனைக் கேட்டார். இந்தக் கோரிக்கையை அரசன் நிராகரித்துவிட்டார். அதனால், கிரே பதவியை ராஜிநாமா செய்தார்.

அவர் ஐந்து நாட்கள்தான் பதவியிலிருந்து விலகியிருந்தார். டோரி அரசாங்கத்தை வெலிங்டன் அமைக்க முடியவில்லை. அந்த முயற்சி பயனளிக்காமற் போனதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். உள்நாட்டுப் போர் ஏற்படுகின்ற பல பயமுறுத்தல்கள், ஆங்கிலேயரின் அரசியல் அறிவு, டோரி அரசாங்கத்தில் பீல் சேர முடியாது என்று அறிவித்தது, ஆகிய இந்தக் காரணங்களைவிட, அவருடைய கட்சியில் காணப்பட்ட வேகத்தைக் கண்டுதான், இவர் அரசாங்கத்தை அமைக்க முன் வரவில்லை. பீல் ஏற்கனவே சீர்திருத்த மசோதாவை ஏற்காமல் ஒரு பெரிய தவற்றைச் செய்துவிட்டார். மீண்டும் அதே தவற்றைச் செய்தால், அரசியலில் அவருடைய பெயர் கெட்டுவிடும் என்பதை உணர்ந்திருந்தார். அதனால், சீர்திருத்தம் வேண்டுமென்ற அளவில், காமன்ஸ் சபையில் உள்ள விக் பெரும்பான்மையினரும், டோரிக் கட்சியின் தலைவர்களும் ஒருவிதமாக ஒப்புக்கொண்டனர். அதனால் புதிய பிரபுக்கள் நியமிக்கக் கூடாதென்ற வெலிங்டனுடைய கொள்கையும், அரசனைக் காப்பாற்ற வேண்டுமென்ற இராணுவ மனப்பான்மையும் அவரிடத்திலிருந்து மறைந்துவிட்டது. லண்டனில் தீவிரவாதிகள், 'கோமகனை நிறுத்து', 'தங்கம் சம்பாதிக்கப் போ' என்ற அட்டைகளைப் பிடித்து ஆரவாரம் செய்தனர். பல ஆவேசமான ஆர்பாட்டங்களும், வரிகொடா இயக்கங்களும், புரட்சிக் கொடிகளும் ஆயுதங்களும், அவரை பின்னடையச் செய்யத் தேவைப்படவில்லை.

டோரி அரசாங்கமே இந்த மசோதாவைக் கொண்டுவந்தாலும் கிரே, ஆல்திராப் ஆகியோர் அந்த அரசாங்கத்தை ஆதரிப்பதாகவும், தங்களுக்கென்று எந்தப் புகழும் வேண்டாமென்றுங்கூட அறிவித்தார்கள். அதற்குப் பிறகு, காமன்ஸ் சபையிலுள்ள இரண்டு கட்சிகளின் வேண்டுதலின்பேரில் அதே கேபினட் சபை மீண்டும் பதவியேற்றது. இந்த சமயத்தில், தேவைப்படும்பொழுது புதிய பிரபுக்களை நியமனம் செய்யப்பட வேண்டுமென்ற திட்டவட்டமான உறுதிமொழியை அரசனிடத்திலிருந்து பெற்றார். ஆனால், புதிய பிரபுக்களை நியமனம் செய்ய

வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான்காவது வில்லியம், வெலிங்டன், பிஷப்புகள், மற்றும் மிதவாதிகள் ஆகியவர்களை வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். ஜூன் நான்காம் தேதியன்று, பிரபுக்கள் சபை இந்த மசோதாவை நிறைவேற்றியது. அப்பொழுது டோரி பெஞ்சுகள் காலியாக இருந்தன.

இந்த மசோதா நிறைவேறியது ஜனநாயகத்தின் வெற்றி யன்று; ஆனால், சாதாரண மக்களும், நடுத்தர மக்களும்தான் இதன் வெற்றிக்கு காரணமானவர்களாக இருந்தனர். அரசனே, அல்லது பிரபுக்களோ அல்ல; ஆனால் மக்களின் கருத்தினை உணர்ந்து அதை பிரதிபலித்த கேபினட் சபையே அதற்குக் காரணம். இங்கிலாந்திலும், வேல்ஸிலும் உள்ள மொத்த வாக்காளர்களின் தொகை 435,000. இந்தத் தொகையுடன் சுமார் 250,000 புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். பெரும் பாலும் 10 பவுன் சொத்து மதிப்பின் பேரிலே தான் வாக்குரிமை நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி பார்த்தால், ஏற்கனவே வாக்குரிமை பெற்றிருந்த பலர், அதை இப்பொழுது இழந்து விட்டனர். மக்கள் கூட்டத்தின் வன்முறைகளைவிட, நடுத்தர மக்களின் உறுதியான முடிவும், அவர்களுடைய ஒழுங்கான கூட்டங்களும், அவர்களுடைய கருத்துகளைப் பிரதிபலிக்கும் பத்திரிகைகளும் தான் பாராளுமன்றத்தைக் கவர்ந்தன. தீவிர வாதிகளின் தலைவர்களான, பிளேஸ், ஆட்வுட் ஆகியவர்கள் சிறப்பு காவலர்களாக பணியாற்ற மறுத்து விட்டனர். பல விவசாயிகள் உழ மறுத்து விட்டனர். பத்திரிகைகளின் ஆணித் தரமான கண்டனங்களும், குறிப்பாக 'டைம்ஸ்' பத்திரிகையின் பங்கும், சிறப்பாக அமைந்திருந்தன. பேச்சாளன் ஹண்டின் உணர்ச்சி பிரவாகத்தை விட, மேற்சொன்னவைகளுக்கே அதிக மதிப்பு தரப்பட்டது

டோரிகள் எடுத்துக் கூறிய சில எச்சரிக்கைகள் உண்மையில் நியாயமானவையே. பத்து பவுன் தகுதியை மட்டும் அடிப்படை யாக வைத்துக் கொண்டு வாக்குரிமையை நிர்ணயம் செய்வதில் அர்த்தமில்லையென்றும், தொகுதிகளைப் பிரிப்பதற்கு எண்ணிக்கை மட்டும் ஆதாரமாக எடுத்துக் கொண்டால், இந்தக் கொள்கை, மற்ற எல்லா நன்மைகளையும் புறக்கணிப்பது போலாகும் என்றும் எச்சரித்தார்கள். டோரிகளின் மறுப்புக்கு, இந்தக் குறை பாடுகள் ஆறுதலளித்தன. பிட் காலத்திலிருந்தே, இந்தக் குறை பாடுகளைத் தீர்க்க அவர்கள் தயங்கினார்கள். ஆனால், இந்த அளவிற்காவது சீர்திருத்தம் செய்யப்பட்டதே என்பதோடு

நில்லாமல், 1832-ல் கொண்டு வரப்பட்ட இந்த நடவடிக்கை தவிர்க்க முடியாததும், நியாயமானதாகவும் அவர்களுக்குப் பட்டது. விக்டோரியா காலத்து பிரிட்டனில் மேலும் கொண்டு வரப்பட்ட மாறுதல்களுக்கு, இது ஒரு நல்ல முன்னோடியாக அமைந்தது.

சமகாலத்திய நிகழ்ச்சிகள்

1826 மேரியாவுக்கும் மைகுவலுக்கும் (Miguel) போர்ச்சுக்கலில் நடந்த போர்.

1827 நேவரினே போர்.
பிளேக் மரணம்; பெத்ஹோவன் மரணம், டாக்டர் ஆர்னல்ட், ரக்பி பள்ளிக்குத் தலைமை ஆசிரியராதல்.

1828 ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் நடந்த போர்.
அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஆண்ட்ரூ ஜேக்ஸன் ஜனாதிபதியாதல்.

1829 ஆட்ரியனோபிள் உடன்படிக்கை.

1830 ஃபிரான்சில் புரட்சி. லூயி பிலிப் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.
பெல்ஜியம் - ஹாலந்து பிரிவினை.
ஃபிரான்ஸ் அல்ஜீரியாவைப் பிடித்தல்.
லயல் (Lyell) எழுதிய பிரின்சிபிள்ஸ் ஆப் ஜியாலஜி (Principles of Geology).
காம்டே (Comte) எழுதிய 'பிலாசபி பாஸிடிவ்' (Philosophie Positive).

1831 போலந்து புரட்சியை ரஷ்யா அடக்குதல்.
சார்லஸ் ஆல்பெர்ட், ஸேவாய் அரசனதல்.
விக்டர் ஹ்யூகோ எழுதிய 'நாட்டர் டாம்' (Notre-Dame).
ஸ்டென்டால் எழுதிய 'ரூஜ் எத் நாய்ர்' (Rouge et Noir).
பிரிட்டிஷ் விஞ்ஞானக் கழகத்தை நிறுவுதல்.

1832 பவேரியாவின் ஆட்டோ, கிரீஸின் அரசன். (Otto of Bavaria, King of Greece).
'யங் இத்தாலி' (Young Italy) என்னும் கழகத்தை மாஜினி நிறுவுதல்.
பென்தாம், கதே, வால்டர் ஸ்காட் ஆகியவர்களின் மரணம்.

10. விக்குகளும் உரிமை சாஸனவாதிகளும்
(Chartists)
1832 – 1841

நிலம் வைத்திருக்கின்ற வகுப்பினர் இப்பொழுது, நடுத்தரத் தயாரிப்பாளர்கள், குத்தகை விவசாயிகள், பயிற்சி பெற்ற தொழிலாளிகள் ஆகியவர்களுடன் கூட்டு சேரும் நிலையை அடைந்தனர். தொழில் மயமான வடக்குப்பகுதி, அதிகாரம் வகிக்கும் காலம் வந்துவிட்டது. பர்மிங்காம், மேன்செஸ்டர், லீட்ஸ் ஆகிய தொகுதிகளிலிருந்து பிரதிநிதிகளாகச் சென்றவர்கள், ஏற்கனவே நன்கு பாதுகாக்கப்பட்ட நில உடமையாளர்கள் நிரம்பியுள்ள ஷயர்களிலிருந்து சென்றவர்களுடன் சரியான அளவில் போட்டி போட முடியவில்லை. புதிய சகாப்தத்தில் ஐரோப்பாவிலும், பேரரசிலும், அயர்லாந்திலும் இந்தியாவிலும் பல பிரச்சினைகள் பிரிட்டனை எதிர்நோக்கியிருந்தன. ஆனால், இவைகளைவிட மிகவும் முக்கியமான பிரச்சினை இங்கிலாந்திலேயே அவர்களுடைய கவனத்தை ஈர்த்தது. பலமாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. பிட் செய்த மாற்றங்கள் போரினால் தடைபட்டன; அவைகளைத் தொடர்ந்து கேனிங், ஹஸ்கிஸன் ஆகியோர் சிறிது முன்னேறினார்கள். ஆனால், அந்த முன்னேற்றம் சீர்திருந்திய பாராளுமன்றத்தில்தான் சாத்தியமாகமுடியும் என்று உணர்ந்தார். அதற்குப் பிறகு தோன்றிய இந்தக்காலம் தொடர்ச்சியாகச் செயலாற்றுவதற்கான சூழ்நிலையைப்பெற்றிருந்தது. ஏனெனில், அதேமாதிரியான வேலையைத்தான், முதலில் விக்குகளும், பின்பு, டோரிகளும் செய்தனர்.

1834–35-ல் மட்டும் ஒரு ஆறுமாதகாலம் இடைவெளி இருந்தது. மற்றபடி 1841 வரை விக்குகள் நீடித்துப் பதவியில் இருந்தனர், 1834 வரை கிரே பதவியிலிந்து பின்பு ஓய்வெடுத்துக்கொண்டார். அதற்குப் பிறகு அவர்கள் மெல்போர்ன் தலைமையில் பதவியில் இருந்தார்கள். ஒரு வகையில், அவர்களுடையபுகழ், சீர்திருத்த மசோதா நிறைவேற்றியதுடன் நின்று

விட்டது. அதற்குப்பிறகு அவர்களுக்குள்ளேயே பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும் தோன்றின. அத்தக் குழுக்களோடு ஐரிஷ் அங்கத்தினர்களும், தீவிரவாதிகளும் சேர்ந்து கொண்டனர். அந்தக் கட்சியின் மத்திய அமைப்பே பலவீனமாக இருந்தது. மிக அதிகமான மந்தநிலையில் நிதித்துறையைப் பொறுப்பாகக் கவனிக்க நல்ல நிதி அமைச்சர்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனல், பொருளாதாரத்துறையில், இந்தக் காலம் முன்னேற்றமடைந்திருந்தது. 1827-ல் ஏற்றுமதிகள் 47 மில்லியன் பவுன்களாக இருந்தன. ஆனல், 1840-ல் 102 மில்லியன் பவுன்களுக்கு அது உயர்ந்துவிட்டது. 1819 முடிவில் கோதுமை ஒரு குவார்டருக்கு சராசரி 88 ஷில்லிங்குகள் வீதம் விற்றுக் கொண்டிருந்தது; ஆனல், 1840-ல், கோதுமை விலை, 56 ஷில்லிங்குகளுக்கு இறங்கிவிட்டது. 1780-ல் இருந்த வாழ்க்கைத் தரத்தை விட 1849-ல் மிகவும் குறைவாக இருந்தது. அதே சமயத்தில் தொழிலாளர்களின் கூலிகள் 40 சதவீதம் உயர்ந்திருந்தது. ஆனல், இந்த முன்னேற்றம் சில ஏற்றத் தாழ்வுகளினுல் தடைபட்டது. 1838–41; 1847 ஆகிய ஆண்டுகளில் மக்கள் மிகுந்த துயரத்தை அடைந்தனர். அந்தக் காலத்தை விதிவிலக்காக நாம் கருதலாம். அரசியல் காரணங்களைத் தவிர, பொருளாதார அமைப்பும் குறைபாடுள்ளதாக இருந்தது. இதற்கு பிரிட்டன் மட்டும் பொறுப்பாளி அல்ல. இவ்விதக் குறைபாடுகளினுல் முன்னேற்றம் தடைபட்டுச் சென்றது.

கிரே, ரஸல், பீல் ஆகியவர்களின் குறிப்புகளைப் பார்த்தால் அரசாங்கத்தை நடத்துகின்றவர்களுக்கு அடிக்கடி ஏற்படுகின்ற சில 'நடுக்கங்கள்' நன்கு புரியும். அவ்விதமான நடுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உரிமை சாஸன இயக்கத்தைக் கூறலாம். விக்டோரியா அரசியின் திருமணம் வரையிலும் முடியாட்சியைப் பற்றி நல்ல கருத்தில்லை; திருச்சபையினரை அறவே வெறுத்தனர்; ஃபிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகளை இன்னும் அவர்கள் மறந்தபாடில்லை. பொதுவாக நோக்குமிடத்தில், திட்டமிடப்பட்ட சமுதாய பாதுகாப்பு கன்சர்வேடிவ் சக்திகளினுல் இயங்குமா, அல்லது பிரான்சில் ஏற்பட்டுள்ள விபரலிசத்தைப் போல இங்கேயும் சோஷலிசத் திட்டத்திற்குள் வருமா என்ற நாட்டின் எதிர்கால பிரச்சினைதான், ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது. இதற்கான பரிகாரம் வேறு இடத்தில் காணப்பட்டது. டோரிகள் கட்டுப்பாடற்ற வாணிகத்தை ஏற்றுக்கொண்டனர். விபரல்களும், பயன் கருதுவோர்களும் (Utilitarians) 1830-ல் அரைகுறை புரட்சி ஏண்ணங்களையுடைய தொழிலாளர்களை

மெதுவாக லிபரல் கட்சியின் தீவிரவாதிகளின் கோஷ்டியில் இழுத்துக் கொண்டனர்.

சீர்திருத்த மசோதா நிறைவேற்றப் படுவதற்காக, டிசம்பர் 1832-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில், கிரேயுக்கு நல்ல பெரும்பான்மை கிடைத்தது. அக்காலத்தில் சாயாத கட்சி அமைக்கப்படாத நிலையிலும் அவர்களுக்குக் கிடைத்த வெற்றிகளைக் கவனிக்கும்பொழுது 150, டோரிகள் வெற்றி பெற்றனர்; ஆனால், வெற்றிபெற்ற 320 விக்குகள் மற்ற ஆதரவாளர்களையும் கூட்டு சேர்வதற்கு நிபந்தனைகளை அளித்து வந்தனர். 70 தீவிரவாதிகளும், அதே எண்ணிக்கையுடைய ஐரிஷ் அங்கத்தினர்களும் அப்படிச் சேர்ந்தவர்களே. இடதுசாரியினரின் நுழைவு இத்துடன் நின்றுவிடவில்லை. தானியச் சட்டங்களை ரத்து செய்வதில் ஓ கானல் ஆதரவு தெரிவித்தபொழுது, எல்லா ஐரிஷ் அங்கத்தினர்களும் அவரை ஆதரிக்கவில்லை, அல்லது தீவிரவாதிகள் இயக்கம் பாராளுமன்றத்தில் சரியாக பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை. இருப்பினும், இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த காபெட் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடன் மற்றும் தத்துவ சிந்தனையாளர்களின் கூட்டமான குரோட், மோல்ஸ்வர்த், சார்லஸ் புல்லர் ஆகியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டும், அவர்களுடைய கட்சிக்கு சரியான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. உண்மையில் சீர்திருத்தம் செய்யப்பட்ட காமன்ஸ் சபையிலுங்கூட, மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் பிரபுக்களின் மைந்தர்களும் சீமான்களின் மைந்தர்களுமாகவே வீற்றிருந்தனர்.

அதனால் 1867-ல் புதிய சீர்திருத்தம் கொண்டு வரும் வரையிலும் அது பிரபுக்கள் மயமாகவே இருந்தது. லிபரல்களும், பயன்கருதுவோர்களும், இதைத் திறமையின் பிரபுத்துவமாக மாற்றி அமைக்க முயன்றும், அது இன்னும் சொத்தின் அடிப்படையில் தான் பிரபுத்துவமாக இருந்தது இருந்தாலும் 1820-லிருந்தே சூழ்நிலையில் மாறுதல் காணப்பட்டது. கட்சிகள் மாற்றமடைந்து, புதிய கட்சிகள் போன்றே தோற்றமளித்தன. டோரி கட்சியை, பீல் 'கன்சர்வேடிவ்' என்று பெயரிட்டதும்கூட, உரு தெரியாமல் மாறிவிட்டது.

சீர்திருத்த மசோதா நிறைவேறுவதற்கு முன்னும் பின்னும் கிரேயுக்கு வெளிநாட்டு விவகாரங்கள் அதிகத் தொல்லையைக் கொடுத்தன. பால்மர்ஸ்டனுடன் சேர்ந்து வெளிவிவகாரங்களை நன்கு சமாளித்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாக பெல்ஜியம் நிர்ணய ஏற்பாட்டைக் காட்டலாம். வயதேறிவரும் மந்தமான

அரசனையும், பிரபுக்களின் சபையில் உள்ள பல எதிர்ப்பாளர் களையும் அவர் சமாளிக்க வேண்டியதாயிற்று. இத்துடன் அவருடைய கேபினட் சபையும் பிளவுபட்டிருந்தது. மிகவும் கோபமுள்ள டர்ஹாம் தனிப்பட்ட துயர நிகழ்ச்சிகளினாலும், எந்தவித சமரச ஏற்பாட்டிற்கும் உடன்படாததனாலும், 1833-ல் அவருடைய பதவியை ராஜிநாமா செய்தார். புரோகாம் எப்பொழுதுமே ஒரு உடன்பாட்டிற்குள் வராமல் முரண்பட்டி ருந்ததனால், அரசாங்கத்திற்கு ஒரு பெரிய தடையாக இருந்தது. 1835-ல் பீல் அயர்லாந்திலிருந்து கிளம்பிய பல பிரச்சினைகளை கவனிப்பதில் ஈடுபட்டிருந்தார். சீர்திருத்தம் கொண்டு வருவ தற்கு ஓ கானெல் பல வழிகளில் உதவி செய்தபோதிலும், பதவி கோரும் அவருடைய விருப்பம் ஈடேறவில்லை. அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்டுவதைத் தவிர, அயர்லாந்தில் மற்ற தீமைகளான, நிறைந்த வறுமையும், மக்கள் தொகை அதிகரிப்பும் காணப்பட்டன. 1824-ல் 6¾ மில்லியன் மக்கள் என மதிப்பிடப் பட்டது. 1840-ல் 8 மில்லியன்களாக அதிகரித்துவிட்டது. மற்றும் எல்லா அங்கிய நிறுவனங்களிலும், அங்கே சிறுபான்மை யினராக இருந்த ஆங்கிலேயர்கள் சபையைச் சார்ந்தவரே பிரதி நிதித்துவம் செய்தனர். விளைவுகளைக் கவனித்ததைப்போல் காரணங்களை சரியாக ஆராய்ந்திருந்தால், அதாவது ரத்து இயக்கமோ, அல்லது ஒரே ஆண்டில் நிகழ்ந்த 242 கொலைகளுமோ ஏற்பட்டதனால், அயர்லாந்து காரியதரிசி, ஸ்டான்லி, இப்பதவியி லிருந்து மாற்றப்பட்டிருக்கமாட்டார். அவர் கலோனியல் அலு வலகத்திற்குச் சென்ற பிறகுங்கூட, அடிப்படையான காரணங் கள் மாறவில்லை. திருச்சபை வருவாய்களை அரசாங்கக் காரி யங்களுக்குப் பயன்படுத்தலாம் என்ற கொள்கையில், அவர் மே 1834-ல் தம் பதவியை ராஜிநாமா செய்தார். அவருடன் கிரகாம், கோட்ரிச், ரிச்மண்ட் ஆகியவர்களும் ராஜிநாமா செய் தனர். ஜூலை மாதத்தில், அவருடைய அமைச்சரவையின் மற்ற மந்திரிகளும் அல்திராப் உட்பட; லார்ட்-லெப்டினன்ட் வெல்லெஸ்லியுடனும், ஓ கானெலுடனும் சேர்ந்துகொண்டு ஒருமிதமான பயமுறுத்தல் சட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்ததைக் கண்ட கிரே, அவரும் தம் பதவியை விட்டெறிந்தார். மெல்போர்ன், பீலுடன் சேர்ந்து கூட்டமைச்சரவையை அமைக்கு மாறு அரசன் வேண்டியதை, மெல்போர்ன் விஷயமறிந்து முதலிலேயே அந்த வேண்டுகோளை நிராகரித்து விட்டார். அதனால் தனியாகவே அவர் அமைச்சரவையை நிறுவினர். ஆனால், அது மிகவும் பலவீனமான கேபினட்டாக இருந்தது. அல்திராப்பின் தந்தை இறந்த பின்பு, அவர் பிரபுக்கள் சபைக்குப் போய் விட்டார். இந்தச் சிக்கல் ஏற்பட்டதனால் கேபினட்டும் முறிந்தது.

காமன்ஸ் சபையின் தலைமை ரஸலுக்குப் போவதை மெல்போர்ன் சிறிதும் விரும்பவில்லை. ஏனெனில் ரஸல் ஒரு தீவிரவாதி. அதனால், தீவிரமானக் கொள்கைகள் வலுக்குமென்று மெல்போர்ன் பயந்து அவருடைய மந்திரிகளையெல்லாம் பதவியிலிருந்து நீக்கிவிடுமாறு அரசனுக்கு எழுதினர். இவ்விதமான ஒரு சந்தர்ப்பத்தை அரசனும் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்தார். ஏற்கனவே, மந்திரிகள் ராஜிநாமா செய்வதென்ற முடிவில் இருக்கும்பொழுது மெல்போர்ன் ஒருபடி முந்திக்கொண்டார் என்று 'ராடிகல்' தலைவர்கள் பொருத்தமாகக் கூறினர்கள்.

அதனால் ஆறு மாதம் நீடித்திருந்த சர் ராபர்ட் பீல் மந்திரி சபை நவம்பரில் அமைக்கப்பட்டது. இந்த மந்திரிசபை அமைக்கப்படுவதற்கு முன்னர் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல் பிரச்சாரத்தில், அவர்கள், சீர்திருத்தச் சட்டம் எக்காரணத்தைக் கொண்டும் ரத்து செய்யப்படமாட்டாதென்றும், கன்சர்வேடிவ் கட்சி, திருச்சபையையும், தல அரசாங்கத்தையும் சீர்திருத்தம் செய்யப்போவதாகவும், அவர்கள் டேம் வர்த் தொகுதியில் வலியுறுத்தினர்கள். விக் பெரும்பான்மை அதிகமாகக் குறைக்கப்பட்டது. ஆனால், அவர்கள் டோரிகளிடமிருந்து தோல்வி அடைந்ததைவிட, ரேடிக்கல்களிடம் அதிகத் தோல்விகளைப் பெற்றனர். ஆனால், இந்தப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு பீலால் எதிர்ப்பைச் சமாளிக்க முடியவில்லை. ஏப்ரல் 1835-ல் ஐரிஷ் திருச்சபையின் வருவாயை மக்களுடைய வேறு நலன்களுக்காகப் பயன்படுத்துகின்ற பிரச்சினையில் கிரே பதவியை ராஜிநாமா செய்ததைப்போல, பீலும் ராஜிநாமா செய்யவேண்டி நேர்ந்தது. திரும்பவும் மெல்போர்ன் பிரதமராக பதவி ஏற்றார். ஆனால் அவருடன், ஆல்திராப், புரோகாம், டர்ஹாம் அல்லது ஸ்டான்லி ஆகியோர் இப்பொழுது பதவி ஏற்கவில்லை. மெல்போர்ன் பெரும்பாலும் அதாவது 'லிச்பீல்ட் இல்லத்து உடன்படிக்கை' (Lichfield House Compact) என்று அழைக்கப்படுகின்ற ஐரிஷ் அங்கத்தினர்களின் ஆதரவைத்தான் நம்பியிருந்தார்.

ஒரு பாராளுமன்றத்தின் சகாப்தம் முடிவுற்றது. உண்மையில் அரசியல் அமைப்பைப் பல கட்டங்களில் இயற்றியதும், செசில் கர்லத்திலிருந்து பிட்காலம் வரையிலும் பல குரல்களைக்கேட்டதுமான அந்தப் பழைய பாராளுமன்றம் 16, அக்டோபர், 1834-ல் தீக்கிரையாகியது. இடைக்காலத்து அரசர்கள் அவர்களுடைய வருவாயை எண்ணுவதற்குப் பயன்படுத்திய மரத் துண்டுகளில் தீப்பிடித்தது. அத்தீ அதன் பக்கத்திலிருந்த பாராளுமன்றத்

திற்குள்ளும் வந்து பரவியது. இதுதான் பாராளுமன்றம் தீக்கிரையாகியதற்குக் காரணமாகும்.

இந்த நிகழ்ச்சிகளோ அல்லது ஐரிஷ் பிரச்சினையினால் பிரிட்டிஷ் கட்சிகளுக்கு ஏற்பட்ட சோதனையோ, எதுவும் பத்தாண்டு காலமாகப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பெரும் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றுகின்ற, விவாதங்களைத் தடுக்க முடியவில்லை. நீண்ட பாராளுமன்றத்திற்குப் பிறகு, இந்தக் காலத்தில்தான் மிக முக்கியமான சட்டங்கள் இயற்றப்பட்டன. விக் மந்திரிகள் அளித்த ஆதரவும், சில சமயங்களில் ரேடிகல்களின் தூண்டுதலும், பீலின் உதவியுமே, இத்தனைக்கும் காரணமாகும்.

இந்தச் சீர்திருத்த சூழ்நிலையில், சலுகைகளுக்கும், தனி உரிமைகளுக்கும் பேராபத்து ஏற்பட்டது. எல்டன் தலைமையிலிருந்த டோரிகள் இவைகளுக்குத் தடையாக இருந்தனர். எடுத்த காரியம் முடியாததால், டோரிக் கட்சியின் பிளவு சிறிது காலம் தள்ளிவிட்டது. கிரிமினல் சட்ட திருத்தங்களை ஏற்படுத்த ரோமிலியும், பீலும் பெருமுயற்சி செய்து, குதிரை திருடுவது, வீட்டில் திருடுவது போன்ற குற்றங்களுக்குத் தரப்படும் மரண தண்டனையை 1832-ல் ரத்து செய்தார்கள். இந்தப் பணியைத் தொடர்ந்து புரோகாம், சட்டத்தில் மாற்றம் கொண்டுவரும் மசோதாவை எதிர்ப்பு மனப்பான்மையுள்ள பிரபுக்கள் சபையில் கொண்டு வரப்பெரிதும் முயன்றார். பணத்திற்குப் பதவிகளைத் தரும் சலுகைகளையும், பொதுச் சட்டத்தின் அளவு மீறிய வழக்காறுகளையும் குறைத்தும், சமய வழக்குகள் கடற்படை இலாக்கா வழக்குகள் ஆகியவற்றிலிருந்து எழும் மேன் முறையீடுகளை விசாரிக்க பிரைவி கவுன்சிலிலிருந்து ஒரு நீதிக்கமிட்டியை நிறுவுவதிலும், இந்த மசோதா முக்கியத்துவம் அளித்தது. 1833-ல் கிழக்கு இந்தியக் கம்பெனியின் வர்த்தக உரிமை புதுப்பிக்க வந்த பொழுது, அதனுடைய தனி உரிமையான சீன வியாபாரம் போட்டிக்கு விடப்பட்டது. அதனால் அந்த வர்த்தகக் கம்பெனியின் சிறப்பான 'ஈஸ்ட் இந்தியா மென்' (East India Men) என்ற கடற்படை கலைக்கப்பட்டது. இந்திய அரசாங்கம் இந்தியா முழுவதற்கும் சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருந்ததால், கவர்னர்-ஜெனரலின் கவுன்சிலுக்குப் புதியதாக ஒரு சட்ட அங்கத்தினரையும் நியமித்தார்கள். இந்தப் பதவியை முதலில் வகித்தவர் மெக்காலே என்பவராவர். 1834-ல் இங்கிலாந்து பாங்கு (Bank of England) வட்டி விகிதங்களை நிர்ணயம் செய்வதிலும், ஐந்து பவுன்களுக்கு மேல் நோட்டுகள் வழங்குவதற்கும், அவற்றை செலாவணியாக்குவதற்கும், அங்கீகாரம் தரப்பட்டது. மேலும் கூட்டு பங்கு

பாங்குகள் மாகாணங்களில் மட்டுமல்லாது லண்டன் பகுதியிலும் அலுவல்களை நடத்த அநுமதிக்கப்பட்டன. 1836-ல் பத்திரிகை ஸ்டாம்பு தீர்வை நான்கு பென்னியிலிருந்து ஒரு பென்னிக்குக் குறைக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் சலிப்படையாத பிளேஸ் என்பவர். அவர் ஜனநாயக முறைப்படி போராட்டம் நடத்தியதலை மட்டுமல்லாது, பீலை ஆதரித்த 'டைம்ஸ்' பத்திரிகையை நசுக்குவதற்காக விக்குகள் ஆரம்பித்த இயக்கமும் இதற்குக் காரணமாக இருந்தது. அறிவு பரவுவதற்கும், பலதரப்பட்ட சமுதாயத்தினரை ஒன்று திரட்டுவதுமான காரியத்தில் அரசாங்கம் சிறப்பாக எதையும் சாதிக்கவில்லை. காமன்வெல்த் காலத்திலிருந்து நமது அஞ்சல் முறை ஆரம்பிக்கப்பட்டது. அஞ்சல்களை எடுத்துச் செல்வதற்குத் தனிப்பட்ட கன்ட்ராக்டர்களை அஞ்சல் தலைமை அதிகாரி நியமித்தார். விரைவாகச் செல்லும் கோச்சுகளை அமர்த்தி அஞ்சல்களை ஏற்றிச் செல்ல வேண்டுமென்று பிட் வற்புறுத்தினர். அப்பொழுதுதான் அஞ்சல்கள் விரைவில் பட்டுவாடா செய்யப்படும். அதற்காக அந்தத் தபால் கோச்சுகளுக்கு, வழிப்பறிக் காரர்களிடமிருந்து பாதுகாப்பும் அளிக்கப்பட்டது. ஆனால், இந்த முறை பொதுமக்களுக்குப் பயனுள்ளதாகவோ, அல்லது அரசாங்க வருவாயை அதிகரிப்பதாகவோ இல்லை. இருப்பினும் தபால்களை அனுப்புவதற்கு அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. லண்டனிலிருந்து எடின்பரோவுக்கு அனுப்பப்படும் ஒரு கடிதத்திற்கு 1 ஷில்லிங் 4 பென்ஸ் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இந்த அதிகக் கட்டண வசூலிப்பு, ஏழை மக்களைத்தான் அதிகமாகப் பாதித்தது. ஏனெனில் இரண்டு சபை அங்கத்தினர்கள் மூலமாக நடுத்தர வகுப்பினரும் பணக்காரர்களும் இலவசமாகவே தபால்களை அனுப்பி, வந்தனர். இதன் விளைவாகக் கட்டணம் செலுத்தாமலேயே தபால்களை அனுப்ப, பல கடத்தல் முறைகளை கோச்சுகளை ஓட்டுகிறவர்கள் மூலமாகவோ, தபால்களைப் பாதுகாக்கிறவர்கள் மூலமாகவோ இரகசியமாக செய்தனர். இதைத் தவிர தபால்களைத் தரும் பொழுது கட்டணங்களை வசூலிப்பதும் கடினமாக இருந்தது; அவற்றை நிர்ணயம் செய்வதிலும் கடினமாக இருந்தது. இதில் எழுந்த குறைபாடுகளை விசாரிக்க அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. மேலும் அதிகாரிகளும் இதற்குச் சிறிது தடையாக இருந்தனர். ஆனால் இக்குறைபாடுகளையெல்லாம் மாற்றி அமைத்தது, ரவ்லேண்ட் ஹில் என்ற தனி மனிதனின் இடையருத உழைப்பால் தான் என்று கூறலாம். இவர் பர்மிங்ஹாம் பகுதியிலிருந்த மிகச் சிறப்பான ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். பிரிஸ்டலி, பரம் பரையில் பயிற்சி பெற்றவர்; பயன் கருதுவோர்களின் இயக்கத்

தலைவர்களிடம் நல்ல தொடர்புடையவர். பயன் கருதுவோர் களின் இயக்கம் அப்பொழுது இயந்திர கண்டுபிடிப்புகளிலிருந்து விலகி சமூக சீர்திருத்தங்களைச் செய்வதில் நாட்டமுற்றிருந்தனர். அவருடைய திட்டம் மிகவும் எளிதானது. அதாவது தபால் கட்டணங்களை எத்தனை தூரமாக இருந்தாலும் சரி, ஒரே மாதிரியாக விதிப்பதென்று ஆலோசனை கூறினர். ஆனல் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனல் அரசாங்கத்திடம் சொல்லிப் பயனில்லை என்று எண்ணி மக்களிடம் அவர் முறையிட்டார். மூன்று ஆண்டுகள், பொது மக்கள் கருத்தை அலட்சியப்படுத்திய பிறகு மெல்போர்ன் இசைந்து தபால்களுக்கு ஒரு பென்னி கட்டணம் வசூலிப்பதென்று 1840-ல் சட்டமியற்றினர்.

மிகப் பழைய நிறுவனங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்ததைப்போல, திருச்சபையில் அதிகமாக மாற்றங்களைக் கொண்டு வரமுடியவில்லை. ராடிகல்கள் இந்தத் துறையிலும் மாற்றங்கள் வேண்டுமென்று கோரி, தங்கள் செல்வாக்கை இழந்து விட்டனர். பீலுங்கூட எப்படியாவது மாற்றங்களைக் கொண்டு வந்தால்தான், திருச்சபையிலிருந்த ஊழல்கள் நீங்கும் என்று எண்ணினர். ஏற்கனவே கிரேஅயர்லாந்திலுள்ள இருபத்திரண்டு பிஷப்ரிக்குகளில் (Bishoprics) பத்தை ஒழித்துவிட்டார். ஆங்கிலேய பிஷப்புகளும் தங்கள் நிறுவனங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளவில்லையெனில், அவர்களுக்கும் இதே கதிதான் நேரும் என்று எச்சரிக்கை விடுத்தார். 1836-ல் பீல் அரசாங்கம் பரிசீலனை செய்த நடவடிக்கைகளில், இரண்டை 1836-ல் விக்குகள் நிறைவேற்றினர்கள். ஒரு கூட்டம் மிகவும் வெறுக்கப்பட்ட 'டைத்' (Tithe) வரியை தானியமாக அளிக்காது, ஒரு குறிப்பிட்ட ரொக்கப் பணமாகவே கொடுத்துவிடவேண்டுமென்று சட்டமியற்றினர்கள். அந்தத் தீர்வை, கடந்த ஏழு ஆண்டுகளாக தானிய விலைகள் எப்படி இருந்தன என்பதை ஆராய்ந்து நிர்ணம் செய்யப்பட்டது. மற்றொரு சட்டம் சமய ஆட்சிப் பகுதிகளின் (Dioceses) எல்லைகளை வரையறுக்கவும், நிதிகளை ஒழுங்காகப் பகிர்ந்து தரவும் ஒரு சமயக் குழுவினை (Ecclesiastical Commission) நியமித்தது. இதற்குப் பிறகு, கேன்டர்பரியின் சமயப்பகுதியின் வருமானம் £30,000 பவுன்களிலிருந்து £50,000க்கு குறைந்துவிட்டது. இரண்டு மைல்களுக்கு அப்பால் இருந்தால், இரண்டு சமயப் பகுதிகளை ஒரே தலைமையிடம் ஒப்படைக்கக்கூடாதென்று சட்டம் இயற்றப் பட்டது. தலைக்கோயில்களின் குருமார்களையும் அவர்களது நிதி வருவாய்களையும் ஒரு மத்திய நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற் குள் கொண்டுவரப்பட்டது. இதனல் வந்த உபரி வருவாயை £100 பவுன்களுக்கும் கீழ் வருமானமுள்ள வறுமையினல் வாடு

கின்ற மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. பல வகையிலும் திருச்சபை பழைய வழக்காறுகளை விட்டுக்கொடுக்க வில்லையெனினும், இந்தப் பிரச்சினையில் அது இணங்கியது. ஆங்கிலிகன் சோதனைச் சட்டங்களை லட்சியம் செய்யாமலேயே 1837-ல் நிறுவப்பட்ட லண்டன் பல்கலைக் கழகம் பட்டங்களை வழங் கியது. ஆனால், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங் கள் இந்தச் சோதனைச் சட்டங்களை இன்னும் பின்பற்றின. பல முறை பிரபுக்கள் சபையில் நிராகரிக்கப்பட்டு, பின்பு 1836-ல் நிறை வேறிய விவாகச் சட்டம் இணங்காதவர்களை (Dissenters) அவர் களுடைய தலைக்கோயில்களிலேயே விவாகம் செய்துகொள்வ தற்கும், சட்டப்படி சிவில் விவாகம் செய்து, பிறப்பு இறப்பு பதிவு செய்யும் பதிவாளரிடையே பதிவு செய்துகொள்வதற்கும் உரிமை அளித்தது.

தல ஆட்சியிலும் விக்குகள் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். இந்தத் துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவில்லையென்றால், பாராளுமன்றத்தின் சீர்திருத்தம் பொரு ளற்றுப் போய்விடும் ஐக்கியத்திற்குப் பிறகு, ஸ்காட்லாந்தின் அரசியல் ஒவ்வொரு அரசாங்கத்தின் பிடியிலும் அகப்பட்டுக் கொண்டது அவர்களுடைய பர்குகளிலிருந்த ஊழல்களினாலும், தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்ட கவுன்சிலர்களும் சரியானபடி தல ஆட்சியை நடத்தவில்லை. இந்தக் குறைபாடுகளை 1833-ல் இயற்றிய சட்டம் தீர்த்துவைத்தது. கவுன்சில் அங்கத் தினர்களைப் பாராளுமன்றத்து பிரதிநிதிகளுக்கு வாக்களிக்க தகுதிபெற்ற குடிமக்களால்தான் இனிமேல் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டது. இங்கிலாந்துக்கும், வேல்சுக்கும் பொருந்தும் முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1835-ல் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தினால் பல அடிப் படை மாற்றங்கள் ஏற்பட்டன. இதற்குக் காரணமாக இருந்த வர்கள், பயன் கருதுவோர்கள் (Utilitarians). இந்தக் குறைபாடு களையெல்லாம் விசாரணை செய்தவர் தீவிர ராடிகல்வாதியான ஜோசப் பார்க்ஸ் என்பவர். அவர் பர்மிங்காம் அரசியல் கழகத் தின் ஒரு முக்கியமான தலைவர். இந்தச் சட்டத்தினால் பல தீவிர மான மாற்றங்கள் ஏற்பட்டன. பழைய சாசனங்களையும், அவை களால் பெற்ற உரிமைகளையும் ஒழித்ததால் சுமார் 200 கார்ப்பரேஷன்கள் ஒழிந்துவிட்டன. அவற்றிற்குப் பதிலாக 178 முனிசிபல் பரோக்களை இச்சட்டத்தின்மூலம் ஏற்படுத்தி னர். இந்தப் பரோக்களின் ஆட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்களால் நடைபெறும். முனிசிபல் வரி செலுத்துவோர் அத்தனை பேரும் கவுன்சில் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கத்

தகுதி பெற்றவர்கள். இந்தச் சீர்திருத்தத்தின் பொதுக் கொள்கையைப் பீல் ஒப்புக்கொண்டபோதிலும், டோரி பிரபுக்கள் ஆங்காங்கே சில தடைகளையும், தடுப்புகளையும் ஏற்படுத்தியிருந்தனர். அதாவது ஒவ்வொரு முனிசிபல் பரோவுக்கும் நகர முதுவர் (Aldermen) நியமிக்கப்படவேண்டுமென்று ஆலோசனை கூறினர். தல ஜனநாயக ஆட்சி பரவிவிடும் என்று பயத்திற்காகவும், அதனால் அதைத் தடுப்பதற்காகவும் இந்த நியமனம் செய்யப்பட்டது. பொதுப்படையாக, இந்தச் சட்டத்தின் மூலமாகத்தான், பதினன்காவது, நூற்றாண்டிற்குப் பிறகு உண்மையான கிராம தல-ஆட்சி ஏற்பட்டது. இதற்கு இடையேயிருந்த காலத்தில் ஊழல்கள் மிகுந்திருந்தன. கவுன்சில்களில் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்டு, தல வருவாயைக் சூறையாடியும், பல ஆயிரக்கணக்கான மக்களின் உரிமைகளைப் பறித்தும், அல்லது தலப்பிரபு அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி கார்ப்பரேஷனில் அவருடைய கையாட்களையே நிரப்பி விடுவதும் வழக்கமாக இருந்தது. ஆனால், மாற்றங்கள் இன்னும் முழுமையாகவில்லை. சென்ற நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி கமிஷனர்களும் சிறப்புக் குழுக்களும், சாலை அமைத்தல், வடிகால்வாய்களை அமைத்தல், விளக்குகள் போடுதல்போன்ற நல்வாழ்வுக்குரிய திட்டங்களைக் கொண்டு வந்தனர்.

இதே சீர்திருத்த வேகத்தில் அடிமை முறையை ஒழிப்பதற்கும் விக்குகள் 1833-ல் ஒரு சட்டத்தை இயற்றினர். அவர்கள் செய்த மிக முக்கியமான சீர்திருத்தங்களில் இதுவும் ஒன்று, வில்பர் போர்சும், அவருடைய நண்பர்களும் 1807-ல் அடிமை வியாபாரத்தை ஒழித்ததோடு திருப்தி அடையவில்லை. முதலாவதாக, அடிமை வியாபாரம் முழுவதும் ஒழிக்கப்படவில்லை. இதற்கு பிரிட்டன் மட்டும் பொறுப்பாளியல்ல. பிரிட்டிஷ் மக்கள், ஸ்பெயினுக்கும், போர்ச்சுகல்லுக்கும் 700,000 பவுன்களை முன்பணமாக அளித்து இவ்விதமாகவே செய்யத் தூண்டினர்கள். மேலும் வெளி விவகார மந்திரிகளான கேஸல்ரேயிலிருந்து பால்மர்ஸ்டன் வரையிலும் அவசரப்பட்டும் பயனில்லை, அடிமை முறை ப்ழக்கத்தில் இருக்கும் வரையிலும் அளவுகடந்த லாபத்தைப் பெறமுடியும் என்பதை அவர்கள் மிகத் தெளிவாக புரிந்திருந்தனர். மேலும், அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அடிமைகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களை, பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் சோதனை செய்வதில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதவி செய்யவில்லை. இந்த நிலையில் வில்பர் போர்சும் ஃபாவல் பக்ஸ்டனும் (Fowell Buxton) அடிமை முறையையே அடியோடு

ஒழித்துவிடவேண்டுமென்று 1820-ல் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தனர்.

லிவர்பூல் கேபினட் சபையினர் அவர்களால் இயன்ற வரையும் முயற்சி செய்தனர். புதியதாக ஏற்படுத்திய டிரினிடாட்டைப் போன்ற கிரவுன் காலனிகளில் அடிமைகள் சுதந்திரம் பெறுவதற்கான வழி வகைகளை அமைத்தனர். பண்ணைகளில் வேலை செய்கின்றவர்களைச் சவுக்கால் அடிக்கக் கூடாதென்றும், பெண்களுக்கு கசை அடி தரக் கூடாதென்றும், அடிமையினரின் குடும்பத்தினரைப் பிரிக்கக் கூடாதென்றும் பல தடைகளை விதித்தனர். ஆனால், பழைய சுய ஆட்சி பெற்ற ஜெமாய்க்கா போன்ற காலனிகளில், சட்டமன்றங்கள் இவ்விதத் தடைகளை இயற்றப் பின்வாங்கின. நீக்ரோ அடிமைகளை விட, அங்கிருந்த தோட்டத் தொழில் அதிபர்கள் ஒன்றுக்குப் பத்து வீதம் அதிகமாக இருந்த காரணத்தினால், அடிமைகளின் கிளர்ச்சிகளை தலையெடுக்காதவாறு நசுக்கிவிட்டனர். அவர்கள் சுதந்திரம் கேட்கிறார்கள் என்ற வதந்திகளை ஆதாரமாகக் கொண்டே, கொடுமைப் படுத்தப்பட்டார்கள். நீக்ரோக்களுக்காகப் பரிந்து பேசிய சமயத் தொண்டர் குழுவினரையும் அவர்கள் பல தொல்லைகளுக்குள்ளாக்கினர். அங்கிருந்த சட்டமன்றங்கள் அடிமைகளின் பிரச்சினையில் எவ்வித நல்ல செயலையும், செய்ய முன்வராது என்று 1830-ல் தெளிவாகத் தெரிந்தது. அடிமை முறையை அவர்கள் ஒழிக்க வேண்டுமென்றால், வேறு வகையில் சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் சாத்தியமாகும். காமன்ஸ் சபையில் மேற்கு இந்தியத் தீவுகளின் அக்கறை படிப்படியாகக் குறைந்துவிட்டது. சீர்திருத்த மனப்பான்மை கொண்டிருந்த பிரிட்டன், எப்படியும் அடிமை முறையை ஒழிப்பது என்று தீர்மானித்திருந்தது. வில்பர் போர்ஸின், ஆதி நண்பனின் மகனை ஜேம்ஸ்ஸ்டீபன் சிறப்பு மிக்கப் பண்புகளை உடையவர். அவர் கலோனியல் அலுவலகத்தில் பெரிய அதிகாரியாக இருந்தார்.

அடிமை முறையை ஒழிக்க வேண்டுமென்ற காரணத்தைத் தவிர, கேபினட் நெருக்கடியும் 1833ஆம் ஆண்டு சட்டம் இயற்றப் படுவதற்குக் காரணமாக இருந்தது. அயர்லாந்தில் தோல்வியைக் கண்ட ஸ்டான்லி, கலோனியல் அலுவலகத்தில் தமது வெற்றியை எடுத்துக்காட்ட இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதனால்தான் இந்தச் சட்டத்திலுள்ள பல பகுதிகள் சமரச மனப்பான்மையுடையனவாக இருந்தன. மேற்கு இந்தியர்கள் அவர்களுடைய அடிமைகளின் நஷ்ட ஈட்டுக்காக இருபது

மில்லியன் பவுன்களை நன்கொடையாகவே கொடுக்க வல்லவர்களாக இருந்தனர். மற்றொரு புறத்தில் அடிமைகள் சுதந்திரம் அடைவதற்கு முன்பு ஏழு ஆண்டுகளுக்கு அடிமைகள் பயிற்சி அடைய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சட்டம் நிறைவேறும் பொழுது, வில்பர்போர்ஸ் சாகும் தருவாயில் இருந்தார். இந்தச் சட்டம் மிகுந்த நல்லெண்ணத்தில் எழுந்த சட்டமாகும். நீவார்க் தொகுதி அங்கத்தினரான டபிள்யூ. ர. கிளாட்ஸ்டன் என்பவரின் தந்தை லிவர்பூலில் உள்ள அடிமைகளின் நலன்களைப்பற்றி அக்கறை கொண்ட தலைவராவார். இந்தச் சட்டத்தினால் அடிமைகளுக்கும் தீமைகள் ஏற்படும். அதே சமயத்தில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் ஆபத்து நேரிடும் என்று முன் எச்சரிக்கையாகச் சொன்னார். இவரைத் தவிர மற்றும் பலரும் இதே கருத்தைக் கொண்டிருந்தனர்.

சீர்திருத்த மசோதா நிறைவேற்றும் நெருக்கடியான நேரத்தில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து காலரா இங்கிலாந்துக்கும் பரவியது. அதனால் 50,000 ஏழைமக்கள் அநாதைகளாக உயிரிழந்தனர். வீதிகளில் அந்தப் பிரேதங்கள் இழுத்து வரப்பட்டன. சமுதாயக் கொள்கையின் பலவீனம் அம்பலமாகியது. அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் மிகவும் பழம் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பழம் அரசியல் பொருளாதாரத்தின் பொற்காலம் என்றே அந்த வரவு செலவுத் திட்டம் நினைவுறுத்துகிறது. எல்லா கட்சிகளும் ஒருமித்த ஒரு குரலில், வரிக்குறைப்பையே முக்கிய கொள்கையாக வைத்து கூக்குரலிட்டன. புதிய நகரங்களிலிருந்து வந்த வாக்காளர்கள் வீட்டு வரியைக் குறைக்கச் சொன்னார்கள். 1839–40-ல் மதிப்பிட்ட தேசிய செலவினங்கள் 49 மில்லியன் பவுன்களுக்கு குறைவாகவே இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு செலவிட்டத் தொகையைவிட இது அதிகக் குறைவாகவே இருந்தது. 1815-ல் ரத்து செய்யப்பட்ட வருமானவரியை மீண்டும், அல்திராப்போ அல்லது அவருக்குப் பின்னால் வந்த விக் எக்ஸ் செக்கர்களோ (Exchequer) மீண்டும் அந்த வருமான வரியை விதிக்க முன்வரவில்லை. அவர்களுடைய பொருளாதாரத்தில் தேசியக் கல்விக்கு இடம் தரவில்லை. தீவிரவாதிகள் தேசியக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானங்கள் வீணாயின. இருப்பினும் இருபது வருடங்களுக்கு முன்பு விட்பிரெட் கொண்டுவந்தத் திட்டத்தைப் போல, ரோபக் என்பவரும் ஒரு முன்னேற்றமான திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால், அரசாங்கம் 1833-ல் பல திருச்சபை கழகங்களுக்கு 20,000 பவுன்களை மான்யமாக அளித்ததைத் தவிர,

வேறு எந்தவிதத்திலும் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. ஆனல், 1839-ல் அரசாங்கத்தின் கொள்கை சிறிது மாறி, கல்வியின் மீது அக்கரை பிறந்தது. கல்விக்குத் தரப்பட்ட மானியங்களைக் கட்டுப்படுத்தவும், பல ஆய்வாளர்களை அமைக்கவும், பிரைவி கவுன்சிலிலிருந்து ஒரு அதிகாரபூர்வமான குழு அமைக்கப்பட்டது. இதைப்போன்ற ஒரு இடைக்கால ஏற்பாட்டை காவலர்களுக்கும் கொண்டு வந்தார்கள், ஆனல், லண்டனுக்கு வெளியே காவலர் படையை அமைப்பது தல அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. சிறைச்சாலைகளைத் தணிக்கை செய்ய ஒரு கமிஷனும், தணிக்கையாளர்களும் 1835.ல் நியமிக்கப் பட்டார்கள்.

இந்த ஆட்சியாளர்களின் கொள்கைகள் வரிவிதிப்பிற்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. தனியாளர்களின் சேமிப்பு மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டால், அல்லது கூலி நிதி கிடைக்கக் கூடிய மூலதனத்திற்கேற்ப தொழிலாளர் விகிதம் இருக்குமெனினும், அல்லது மால்தஸ் கூறுவதைப் போன்று மக்கள் தொகை பெருக்கம் நாளடைவில் வாழ்க்கைத் தரத்தை அழித்து விடும் என்று கருதினலும், இப்பொழுது ஒப்புக் கொள்ளப்பட்ட சமூகக் கொள்கைதான் பின்பற்ற வேண்டி வரும். அரசாங்கத் தலையீடு நலனைவிட அதிகத் தீமையையே விளைவிக்கும். தொழிலாளர்களுக்கு கூலிகள் தருவதற்கு அரசாங்கம் மானிய உதவி அளித்தால், அல்லது வேலை நேரங்களைக் குறைத்தால், கூலி நேரங்களைக் குறைத்தால், கூலி நிதிக் குறைந்துவிடுமென்றும், அதனல் மக்களின் போட்டி அதிகரித்துவிடும் என்றும் கருதினர்கள். இக்கருத்துக்களுக்கேற்ப எவான்ஜிலிக்கன் சமயப் பிரிவினரின் பிரச்சாரமும் அரசாங்கக் கட்டுப்பாடு இல்லாமலிருத்தலே நல்லதென்றும் தனிப்பட்ட மக்கள் தங்களுடைய சொந்த உழைப்பில்தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், கிருஸ்தவ சமயத்தின் 'தருமம்' என்ற பயன்பாடு அரசாங்கக் கட்டுப்பாட்டைவிட மேலானது என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர். இவ்விதமான கருத்திலேதான் சமயக் கொள்கையில் இணங்காத ராடிக்கல்களும், கல்வித் துறையில் உள்ள அரசாங்கக் கட்டுப்பாட்டை பலமாக ஆட்சேபித்தனர்.

இந்தத் தடையில்லாத வாணிபத்தை, பென்தாம் கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் அவ்வளவாக ஆதரிக்கவில்லை. அவர்களுடைய பத்திரிகை பலமும், மக்கள் கருத்தினைத் திரட்டுகின்ற முறைகளும் அப்பொழுது உச்ச நிலையை அடைந்திருந்தன. எடுத்துக்காட்டாக, பென்தாமின் சீடர்களில் ஒருவரான எட்வின்

சேட்விக், இரவலர் சட்ட பரிசீலனைக் கமிட்டியின் காரியதரிசியாகவும், இரவலர் சட்ட கமிஷனர்களின் காரியதரிசியாகவும் 1847 வரை இருந்தார். பின்பு அவர் தேசிய நலன் அபிவிருத்தி இயக்கத்திற்கும் தலைவராக இருந்தார். அவருடைய உருவம் மட்டும் பார்வைக்கு முரட்டுத் தனமாக இருந்தது. அறிவியல் அடிப்படையிலும் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டியும் ஆட்சியில் கருத்துகளை அமைத்து, பின்பு அவைகளை மத்திய அதிகாரத்தின் துணையின் மூலமாக அமுல் நடத்த வேண்டுமென்று அவர்கள் கருதினர்கள். அதிகாரத்தின் மூலமாக ஜனநாயக முறைகளை அமுல் நடத்தும்பொழுது, தனியாள் கொள்கைகளுடனும், மற்றும் பல ஜனநாயக உணர்ச்சிகளுடனும் அவை மோதின. அத்துடன் மற்றும் பல பழைய பரம்பரையில் வந்த நீதிபதிகளுடனும் அவை மோதவேண்டியதாயிற்று. அதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரிட்டனில், மத்திய அரசாங்கமும், தல அரசாங்க அமைப்பு முறையும் சமரச மனப்பான்மையில் ஏற்பட்ட குழந்தையாகும் எனக் கருதப்படுகின்றது.

சீர்திருத்தமசோதா ஏற்படுவதற்கு முன்பே, மக்களின் உணர்ச்சியும், அதனால் ஏற்பட்ட அடிமைமுறை ஒழிப்பும், முதல் ஜீவகாருண்ய சட்டங்களும் மற்றொரு இயக்கம் ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தன. இந்தப் புதிய இயக்கத்தினால் தொழிற்சாலை சட்டங்கள் ஏற்படுவதற்குச் சாதகமாக இருந்தன. இவ்விதமான ஒரு தொழிற்சாலை சட்டம் 1802-ல் பீலின் தந்தையான ஒரு பெரிய பருத்தி வியாபாரியினால் கொண்டுவரப்பட்டது. இந்தச்சட்டம் லண்டனிலிருந்தும், தெற்கிலிருந்த தொழிற்சாலைகளிலிருந்தும் இரவலர் தொழில் பயிற்சியாளர்களுக்கு பொருத்தமாக இருந்தது. ஆனால் இந்த முறையுங்கூட வாட்டர்லு போருக்குப் பின்பு நின்றுவிட்டது. நீராவிசக்தி பயன்படுத்துவதால் கிராமப் பள்ளத்தாக்குகளில் இதுவரை அமைக்கப்பட்டிருந்த தொழிற்சாலைகள் நகரங்களுக்கு மாற்றப்பட்டன. அங்கே தொழிற்சாலைகளில் வேலை செய்ய சிறுவர்கள் பேரளவில் கிடைத்தார்கள். 1819-ல் கொண்டு வரப்பட்ட அவருடைய இரண்டாவது சட்டம் பஞ்சாலைகளுக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. அச்சட்டத்தில், இரவு வேலை செய்தல் கூடாதென்றும், சிறுவர்களுக்கு பன்னிரண்டு மணி நேரம் வேலைதான் கொடுக்கப்பட வேண்டுமென்ற வரையறை செய்யப்பட்டிருந்தாலும், இவற்றையெல்லாம் சரிவரக் கவனிக்க ஆய்வாளர்கள் அமர்த்தப்படாததால் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருந்த தடைகளை உண்மையில் அலட்சியம் செய்தனர். விக்குகள் பதவியேற்ற பிறகும், வயது வந்த

தொழிலாளர்களுடைய வேலை நேரத்தைக் குறைக்கவில்லை. அல்லது பஞ்சாலைகளில் வேலை செய்கின்ற சிறுவர்களைத் தவிர மற்ற சிறுவர்களைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. 1830-ல் ரிச்சார்ட் ஓஸ்ட்லர் என்ற டோரி மதகுரு யார்க்ஷயரில், கம்பளி மயிர் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறுவர்களை அடிமைப் படுத்தும் முறையை எதிர்த்து ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அவருக்குப் பக்கபலமாக லங்காஷயர் நூற்போர் சங்கமும், சிறுவர்களுக்குக் குறைந்த அளவு வேலை நேரத்தை நிர்ணயம் செய்யவேண்டுமென்று முயன்றனர். பாராளு மன்றத்தில் முதன்முதலாக அவர்களுடைய குறைகளை எடுத்துக் கூறியவர் நவீன பொருளாதாரக் கோட்பாடுகளை விமர்சனம் செய்யும் டோரி அங்கத்தினர், மைக்கேல் ஸாட்லர் என்பவ ராவார். அவர் அங்கத்தினர் பதவியை இழந்த பிறகு, 'எவான் ஜிலிகல்[1] பிரிவைச் சார்ந்த டோரி ஆஷ்லி என்பவர் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்தார். இந்த ஆஷ்லிதான் பின்பு ஷேப்ட்ஸ்பரி பிரபுவானார்.

இரண்டு பிரச்சினைகள் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. ஒன்று வேலை செய்யும் குழந்தைகளைப் பாதுகாப்பது; மற்றொன்று, வயதுவந்த தொழிலாளர்களுக்குக் குறைந்த வேலை நேரத்தை ஏற்படுத்துவது, வடக்கிலுள்ள பெரும்பான்மையான தொழிற்சங்கவாதிகள் வயது வந்த தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் குறைப்பதிலேயே அதிகக் கவனத்தைச் செலுத் தினர். அவர்கள் சிறுவர்களுக்கும், பெண்களுக்கும் நாள் ஒன்றுக்கு பத்து மணி நேரம்தான் வேலை நிர்ணயம் செய்ய வேண்டு மென்று கோரினர். தொழிற்சாலைகளில் சிறுவர்களில்லாது வயதுவந்த ஆண்களால் மட்டும் எல்லா வேலைகளையும் செய்ய முடியாது. ஆனால், இதில் அரசாங்கம் தலையிட்டு வயதுவந்த தொழிலாளிக்கு வேலை நேரம் நிர்ணயம் செய்வதை, பென்தாம் கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்களுக்கும், பொருளாதார வல்லு நர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் பிடிக்கவில்லை. தொழில் அதிபர்கள் வெளிநாட்டுப் போட்டி ஏற்படுமோ என்றுங்கூட பயந் தனர். அதனால் 1833-ல் இயற்றப்பட்டச் சட்டம் சீர்திருத்த வாதிகளை மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாக்கியது. இருப்பினும் இந்தச் சட்டம் முன்னேற்றத்திற்கான அறிகுறியைக் காட்டியது. இந்தக் சட்டம் லேஸ் (Lace) தொழிற்சாலைகளைத் தவிர மற்ற எல்லா பஞ்சாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஒன்பது வயதிற் குட்பட்ட குழந்தைகளை வேலைக்குக் கண்டிப்பாக அமர்த்தக் கூடாது என்றும், பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இரவில் வேலை செய்யக்கூடாது என்றும், பதிமூன்று வயதுக்குட்

பட்ட சிறுவர்களுக்கு ஒன்பது மணி வேலை நேரமும், பதினெட்டு வயதிலிருந்து பதினெட்டு வரையிலும் உள்ள சிறுவர்களுக்குப் பன்னிரண்டு மணி நேர வேலையையும், இவற்றைவிட மிக முக்கியமானது அரசாங்கத்து ஆய்வாளர்களை நியமித்தலும், இந்தச் சட்டத்தில் காணப்பட்ட முக்கியப் பகுதிகளாகும்.

தொழிற்சாலை சீர்திருத்தங்கள் மெதுவாக முன்னேறின. 1822-ல் நியமிக்கப்பட்ட ராயல் கமிஷன், தீமைகளை விளைவிக்கின்ற இரவலர் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தது. 1817-ல் ஏற்படுத்தப்பட்ட ஒரு விசாரணைக்குழு, இது நல்ல வேருன்றிய வியாதியென்றும், வரிப்பணத்திலிருந்து, கூலி அதிகரிப்புக்குத் தரப்படும் மானியம் நல்ல விதத்தில் பயன்படுத்தப்படவில்லை யென்றும், பல ஆயிரக்கணக்காக பேரிஷ் அதிகாரிகளிடம் இந்த மானியத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்படும் பொறுப்பு தரப்பட்ட தால் அங்கே ஊழல்களும், அதிகரித்தன என்று கூறப்பட்டது. மேலும் அவர்கள் சுதந்திர உணர்ச்சியையும் கெடுத்துவிட்டனர். இதனால் கூலிகள் குறைக்கப்பட்டும், விவசாயிகளின்மீது அதிக வரியைச் சுமத்தியும், சோம்பேறித்தனத்திற்காகவும், தீய செயல் களுக்காகவும் பணம் கொடுப்பதைப்போன்ற நிலை ஏற்பட்டது. 1803-ல் இங்கிலாந்திலும், வேல்ஸிலும் 4 மில்லியன்கள் வசூலிக்கப் பட்ட இரவலர் வரி 1832-ல் மில்லியன்களாக அதிகரித்து விட்டது.

1334-ல் இயற்றப்பட்ட சட்டம் பென்தாம் வாதிகளுக்கு ஏற் பட்ட ஒரு பெரிய வெற்றியாகும். இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்தது, அவர்களுடைய திறமையான விளம்பரமும், மற்றும் இந்த வெற்றிக்கானத் திட்டத்தைப் பிளேஸ், சேட்விக் என் போரும் மில்களும் (Mills) தயாரித்தனர். இந்தச் சட்டம், எலிச பத் காலத்திய இரவலர் சட்டத்தைப் போன்றது. அதாவது வேலை செய்ய முடியாதவர்களுக்கும், அதிக வறுமையில் வாடுகின்றவர்களுக்கும் அளிக்கவல்ல இடைக்கால உதவியுமே இந்தச் சட்டத்தின் பொது நோக்கமாகும் என்று கமிஷனர்கள் நினைத்தார்கள். ஆனால், இதில் கூறப்படுகின்ற கருத்தாவது, வேலை செய்ய தகுதியுடையவர்களுக்கு வெளியே இருந்து எந்த விதமான உதவியும் கிடைக்காதென்றும், அவர்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமென்றால், அவர்கள் தொழிற்சாலைகளிலேயே பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஏனெனில் இரவலர் களுடைய நிலையைவிட, சுதந்திரமான தொழிலாளர்களின் நிலைமை சுமாராக இருந்தது என்றும் கருதினர். ஆனால், ஒரு வகையில் இந்தச் சட்டமும்கூட ஒரு சமரச ஏற்பாடேயாகும்.

ஏனெனில் சில சீர்திருத்தவாதிகள் நினைத்ததைப்போல, இந்தச் சட்டம் வெளி உதவியை முழுவதும் நிறுத்திவிடவில்லை. அல்லது இரவலர் சட்டத்தை ஒரு தேசிய மயமாக்கப்பட்ட சேவை என்று உணர்த்தவும் இல்லை. இச்சட்டத்தை இயற்றியவர்கள் இதற்கு பதில் கூறும்பொழுது, இச்சட்டத்தை அமுல் நடத்துவதற்கான் பணம், மற்றொன்று இரவலர்களுக்கு மிகவும் நல்லவர்களாக இருப்பதைப்போல நடித்து அதிகாரத்தை அடைய முயற்சி செய்தனர். சமுதாய அபிவிருத்தியைத் தவிர, இந்தச் சட்டம் ஆட்சித் துறையிலும் பெரிய புரட்சியை ஏற்படுத்திவிட்டது. இதன்படி மேஜிஸ்ட்ரேட்டுகள், பேரிஷ்கள், ஓவர்சியர்கள் ஆகியவர்களுடைய அதிகாரங்கள் எல்லாம் பறிபோய்விட்டன. அதற்கு பதிலாக மத்திய கமிஷனர்களின் அதிகாரத்திற்குட்பட்டு, பல தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பாளர்களினால் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது. பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பாளர்களின் பொறுப்பில் தரப்பட்டது. அதிகாரத்தை இப்படி ஒரே இடத்தில் குவிய வைப்பது அக்காலத்தில் வெறுப்பையூட்டுவதாக இருந்தது. இதை ஆங்கில முறையல்லவென்றும், பிரஷ்ய முறையென்றும் கூறினர்கள். கமிஷனர்கள் முதலில் ஐந்து வருட காலத்திற்குமட்டும் நியமிக்கப்பட்டார்கள்.

அவர்களும், அவர்களுடைய போராடும் திறமைபெற்ற காரியதரிசி சேட்விக்கும், 15,000 பேரிஷ்களை 600 யூனியன் பகுதிகளாக மாற்றி அமைத்தனர். தொழிலகப் பரிசோதனையை அவர்கள் அமுல் நடத்தும்பொழுது, சூழ்நிலை மிகவும் நன்றாக இருந்தது. செழுமையான வருடங்களும், ரயில் தண்டவாளங்களை அமைப்பதிலும் நிறைய தொழிலாளர் வேண்டியிருந்ததால், நிலைமை அவர்களுக்கு சாதகமாக இருந்தது. ஆனால் 1836-ல் இந்த செழுமை காலம் முற்றுபெற்றது. தொழில் முன்னேற்றம் அடைந்துவரும் வடக்கு பகுதியில் அவர்களுக்குப்பல பிரச்சினைகள் எதிர்நோக்கியிருந்தன. ஆறு சட்டங்கள் இயற்றப்பட்டதற்குப் பின்பு இதைப்போன்று எந்தச் சட்டமும் மக்களிடையே இவ்வளவு மனக்கசப்பை ஏற்படுத்தவில்லை. டோரி இலட்சியவாதிகளான கவிஞர் ஸதே (Southey), டிஸ்ரேலி, டைம்ஸ் பத்திரிகையின் பிரதம அதிபர் வால்டர் ஆகியவர்கள் இச்சட்டத்தை மனிதப் பண்பிற்கும், கிருஸ்தவ அன்புக்கும் புறம்பானதென்று விவரித்தார்கள். இதே குரலில் 'ராடிகல்' கட்சியைச் சார்ந்த காபெட்டும் இந்தச் சட்டத்தை தாக்கினர். கமிஷனர்கள் இந்தத் தொழில்களை அருவருக்கத்தக்க இடங்களாக மாற்றிவிட்டனர் என்றும், அங்கே அவர்கள் விடுத்த பலவித தடைகளாலும் கட்டுப்

பாடுகளாலும், மனைவியும் கணவனும்கூட சேர்ந்து வாழ முடியாத நிலையும், புகையிலை போடுவதுபோன்ற சில சாதாரண இன்பங்களும்கூட பெறமுடியாத நிலையில், புதிய 'பேஸ்டைல்' சிறைச் சாலைகளைப் போன்றிருந்தன என்றும் மக்கள் பண்பினை மதித்துப் போற்றும் பெரியோர்கள் குறைகூறலாயினர். சிறிது காலத்திற்குப் பிறகு, இந்த இல்லத்தைக் கண்டாலே ஒவ்வொரு நல்ல தொழிலாளர் குடும்பமும் வெறுக்கத் தொடங்கியது. வடக்குப் பகுதிகளிலே இந்தப் பிரச்சினை சிறிது மாறுபட்டதாக இருந்தது. ஸ்பின் ஹேம்லேண்ட் தரும முறை வழக்கமாக தெரியாதிருந்த பகுதியிலுங்கூட, இப்பொழுது அளவு கடந்த வறுமை ஏற்பட்டு விட்டது, வேலை கிடைக்கவில்லையென்ற ஒரு காரணத்தினால் அது அவனுடைய தவறல்ல—இந்த பேஸ்டல் போன்ற சிறைச் சாலையில் அவன் அடைப்பட்டுக் கிடப்பதைவிட வேறு அவனுக்கு விமோசனமே இல்லையா? என்ற கேள்வி பிறந்தது. அதனால் ஆயிரக்கணக்கானவர்கள், யூனியன் இல்லங்கள் அமைப்பதை மிகவும் பலமாகத் தடை செய்தனர். அவர்களுடைய எதிர்ப்பு, உரிமைப் புரட்சியின் ஒரு அம்சமாக விளங்கியது.

1839-ல் இந்தச் சாசன உரிமை இயக்கம் உச்ச நிலையில் இருந்தது. மீண்டும் 1848-ல் அது புத்துயிர் பெற்றது. அதனுடைய வரலாறு பல ஏமாற்றங்களைக் கொண்டது. ஆனால், இந்த இயக்கம் இரண்டு வகைகளில் முக்கியத்துவம் பெற்றது. பேய்ன் (Paine), கார்ட்ரைட் ஆகியவர்களுடைய சீர்திருத்த இயக்கங்களுடன், இறுதியாக வளர்ச்சியடைந்து, பிரைட் (Bright) சேம்பர்லேய்ன் ஆகிய ரேடிகல்களின் இயக்கத்துடன் இது தொடர்பு பெற்றது. மற்றொன்று, நல்லெண்ணம் படைத்த மக்கள் நாட்டின் குறைபாடுகளை நன்கு தெரிந்து கொள்வதற்கு ஒரு சமுதாயக் கண்ணாடியாகவும், இந்த இயக்கம் பயன்பட்டது. இந்த இயக்கத்தின் அரசியல் பிரச்சாரத்தில் ஒன்றும் புதிய திட்டமில்லை. இந்தச் சாசன உரிமைகள் 1838-ல் தோற்றுவிக்கப் பட்டன.

அந்த உரிமைகளாவன: வருடாந்திரப் பாராளுமன்றக் கூட்டங்கள்; வயது வந்த ஆண்களுக்கு வாக்குரிமை; சரிசமமான தேர்தல் தொகுதிகள்; வாக்குச் சீட்டு, அங்கத்தினர்களுக்கு சம்பளம் அளித்தல்; அவர்கள் அங்கத்தினர்களாவதற்கு சொத்துடைமை தேவையில்லை; ஆகிய இந்த உரிமைகளையெல்லாம் நார்த் காலத்திலேயே வற்புறுத்தினர்கள். ஆரம்ப ரேடிகலிசம் வளர்ந்த காலத்தில் மேஜர் கார்ட்ரைட் (1826 வரை வாழ்ந்தவர்) இவற்றை மீண்டும் மக்கள் கவனத்திற்கு கொண்டுவந்தார். இவர்

'ஆங்கிலோ-சேக்ஸன்' காலத்தில் அரசியல் ஏற்பாடுகளைப்பற்றி ஒரு அர்த்தமற்ற, தவருன, எண்ணத்தையுடையவர்'' என்று அவர் காலத்திய பிளேஸ் என்பவர் ஒரு பலவீனமான சூழ் நிலையில், அதாவது ஜின்னுடன் தண்ணீரை ஊற்றிக் குடித்துக் கொண்டிருக்கும்பொழுது கூறினர்.

இந்த ஆறு அம்சங்களில், வருடாந்திர பாராளுமன்றக் கூட்டம் அமைப்பதைத் தவிர மற்ற எல்லா அம்சங்களும் படிப்படியாகச் சட்ட உருவம் பெற்றுவிட்டன. அக்காலத்தில் இவை சட்டமாக்கப்படவில்லை என்பதனால் மட்டும் விக் அரசாங்கத்தை குறைகூறிவிட முடியாது. சமுதாயக் கொள்கைகளில் பல அவர்களுக்கு மதிப்பை அளித்தது. தொழிற்சாலை சட்டங்கள் மட்டுமல்ல; மற்றும் சில சட்டங்களும், அதாவது உயரமான புகைக் கூண்டுகளைத் துடைக்கின்ற சிறுவர்களைக் கொடுமைப் படுத்துதல் நிறுத்தப்பட்டது; மற்றொன்று, தொழிலாளர்களுக்குக் கூலி தராது, அந்தத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்ற சில பொருள்களைக் கூலியாகத் தருதல், வழக்கமாகச் சில மட்டமான உற்பத்திப் பொருள்களையே கூலிக்குப் பதிலாக தந்து அவர்களை சரிகட்டிவிடுதல்போன்ற பழக்கங்களையும் தடை செய்தது. விளையாட்டுகளில் மிகுந்த அக்கரை கொண்ட அல்திராப் வேட்டையாடும் உரிமைகளையெல்லாம் தடை செய்து ஒரு சட்டமியற்றினர். நாடு முழுவதும் வேட்டையாடும் உரிமையை ஒரு சிலரே அனுபவித்து வந்தனர். 1831-க்குப் பிறகு, விலங்குகளைக் கொல்வதோ, விற்பதோ, அல்லது வாங்குவதோ, லைசென்ஸ் பெற்ற அனைவருக்கும் அந்த உரிமை கிடைக்கும் என்று இச்சட்டத்தின் மூலமாகக் கொண்டுவந்தார். அவர்களுடைய முன்னேடிகளைப் போலல்லாது, விக்குகள் பொதுமக்களுடைய கருத்தினை நன்கு மதித்தனர், வன்முறைகளைத் தூண்டும் கூட்டங்களைத் தவிர, மற்ற சாதாரண பொதுக் கூட்டங்களில் அவர்கள் தலையிடவில்லை. சார்டிஸ்ட் இயக்கத்தினர் நடத்திவந்த எந்தப் பத்திரிகையையும் சில சமயங்களில் கடுமையாகத் தாக்கி எழுதினலும் அவைகளைத் தடை செய்யவில்லை. ஃபிரெஞ்சுப் புரட்சி காலத்திலிருந்தே அவர்கள் பயத்தையும், நடுக்கத்தையும் வாரிசாகப் பெற்றிருந்தனர். உள்துறையில் மெல்போர்னுடைய ஆட்சி இந்த "நடுக்கத்தை" நன்கு எடுத்துக் காட்டியது. இதற்கு உதாரணமாக 'டால்புடல் தியாகிகள்' (Tolpuddle Martyrs) நிகழ்ச்சியை நாம் கூறலாம். டோர்ஸெட் தொழிலாளிகள் இரகசியமாகப் பிரமாணங்களை எடுத்துக்கொண்டும், சில சின்னங்களையும் வைத்துக் கொண்டிருப்பதையும் கண்டு, அவர்களுக்கு நாடு கடத்தப்படும் தண்டனை 1834-ல் கொடுக்கப்பட்டது. இவ்விதமான

பழக்கங்களைப் பல தொழிற்சங்கங்கள் பின்பற்றின. இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு அவர்கள் பயப்படுவதில் ஆச்சரியம் ஒன்று மில்லை. தொழிற்சங்க ஆரம்ப காலத்தில் இவ்வித நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக நடந்தன. சாஸன உரிமை இயக்கத்தினரும் கூட இவ்விதமான முறைகளைப் பின்பற்றுவதற்கான சூழ்நிலை இருந்தது,

அந்த இயக்கத்தின் தலைவர்கள் பலதரப்பட்டவர்களாவர். ஒவ்வொருவரும் ஒருவிதமானவர். ஓஸ்ட்லர் ஒரு டோரி ஜனநாயகவாதி. அவருடைய எண்ணமெல்லாம் பலிபீடம், அரியாசனம், குடிசை என்ற சொற்களிலேயே சூழ்ந்திருந்தது. யார்க்ஷயர் தொழிலாளர் ஆர்பாட்டத்தில் அவர் கலந்துகொண்டார். அதைப்போன்றே ஸ்டீபன்ஸ் என்பவரும் லங்காஷயர் தொழிற்சாலை சட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவராவர். அவர் ஆரம்பத்தில் மெதாடிஸ்டு பாதிரியாகப் பணியாற்றினர். லண்டன் கோஷ்டியைச் சேர்ந்த வில்லியம் லோவட், அவரைச் சார்ந்த மற்றும் பலரும் முக்கியமாக ஒழுக்க சீர்திருத்தவாதிகள் தான். லெய்-செஸ்டரைச் சார்ந்த தாமஸ் கூப்பர்போன்ற இலட்சியவாதிகள் தங்களையும், மறந்து பைத்திய நிலையில் இருந்தனர். ஜூலியஸ் ஹார்னி (Julius Harney) போன்றவர்கள் பழைய புரட்சி வாதிகள். நல்ல அறிவு படைத்த இவர், லண்டன் நகரத்தின்மீது இரவில் புரட்சியாளர்கள் படையெடுத்து வருவார்கள் என்று எண்ணிவந்தார். பிரான்டேர் ஓ பிரியன் (Bronterre O' Brien) என்பவர் ஜேக்கபின் கட்சிக் கொள்கையைப் பின்பற்றுகிறவர். அவர்களுடைய கூட்டத்தின் தலைசிறந்த எழுத்தாளர். இறுதியில் வன்முறை பயனற்றது என்ற முடிவுக்கு இவர் வந்தவர். அவர்களுடைய மிகுந்த சக்தி வாய்ந்த தலைவர், மிகுந்த மோசமானவராகவும் இருந்தார். அவர்தான் ஃபியர்கஸ் ஓ கானெர் (Feargus O' Connor) என்பவர். ஐரிஷ் புரட்சிக் குடும்பத்தின் எண்ணங்களை அவர் வாரிசாகப் பெற்றார். தொழில் வளம் மிகுந்த வடக்கில், அவருடைய நாவன்மை சிறப்புற்றது. அவருடைய பேராற்வத்துக்கும் வழிகாட்டியது. ஜனநாயகக் கருத்துகளை உடைய பல எழுத்தாளர்களைக் கொண்டு லீட்ஸ் நகரில், 'நார்தர்ன் ஸ்டார்' (Northern Star) என்ற பத்திரிகையை நடத்தினர். இந்த அகம்பாவமும், வீண் பெருமையுமுடைய இந்த மனிதனுடன் பலர் நீண்ட காலம் வேலை செய்ய முடியாது ஆயிரக்கணக்கான மக்களை புரட்சிப் பாதையில் இறக்கிவிட்டு விட்டு, அவர் பின்வாங்கிவிட்டார். பொருளாதாரத்தைப் பற்றியோ, அல்லது தொழில்களைப்பற்றியோ, அவரால் ஒன்றும் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவருடைய கடைசி நாட்களில்

ஐரிஷ்காரர்களுக்கே உரித்தான போராட்டத்தில் இறங்கிவிட்டார். அதாவது பல விவசாயிகளின் கூட்டுறவு முயற்சியினால், பலமிக்க விவசாய சமுதாயத்தை ஏற்படுத்த விரும்பினர்.

மற்ற மூன்று சக்திகள் இத்தொடரைக் கலைத்துவிட்டன. அதில் ஒன்று ராபர்ட் ஓவன். லட்சியவாதியான அவர் சூழ்நிலைக்கேற்ப மனிதனின் தன்மையும் மாறுகின்றது என்ற மனிதனுடைய முழுமையில் நம்பிக்கை வைத்திருந்தார். அதே சமயத்தில் அவர் தொழிலாளர் முதலாளிகள் போராட்டத்தையும், அவர்களுடைய அரசியல் நடவடிக்கைகளையும் விரும்பவில்லை. சமுதாய வாழ்க்கைத் தாமதமாகவே தோன்றுகிற கூட்டுறவு மனப்பான்மை கொண்ட சங்கங்கள் மூலமாக மலர வேண்டுமென்று கருதினர். அதே சமயத்தில் அவர்கள் கற்றுக் கொள்வதற்கும் ஆர்வம் உடையவர்களாக இருக்க வேண்டும். மற்றொரு பொருளாதார கோட்பாடும் அப்பொழுது வளர்ச்சி அடைந்து வந்தது. அந்தக் கோட்பாட்டில் லாக், ரிக்கார்டோ ஆகியவர்களின் சில கருத்துகளை மையமாக வைத்துக்கொண்டு, ஹாட்ஸ்கின் என்ற மாஜி கடற்படை லெப்டினன்ட் ஒருவரும், நியூகேஸல் பள்ளி ஆசிரியரான தாமஸ் ஸ்பென்ஸ் என்பவருடைய சில சீடர்களும், லண்டன் மெக்கானிகல் நிறுவனத்தில், நிலத்தைத் தேசியமாக்கவேண்டும் என்ற சோஷியலிச ஆரம்ப கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்தனர். தொழிலாளர்தான் விலை மதிப்பை நிர்ணயம் செய்கிறார்கள். அந்த விலை மதிப்பினால் ஏற்படுகின்ற உபரியை மற்றவர்கள் வாடகையாகவும், வட்டியாகவும், லாபமாகவும் பறித்துக் கொள்ளுகிறார்கள். முதலாளித்துவ முறையிலும், மால்தஸ் கொள்கையை ஆதரிப்பதிலும், சட்டத்தின் கெடுபிடி கொண்டு கூலி மிகவும் குறைவாக நிர்ணயம் செய்யப்படுகின்றது என்று அவர்கள் பிரச்சாரம் செய்தனர். கடைசியில் பர்மிங்காமில் குறிப்பாக அரசியல் ஜனநாயக வாதிகள் மிகவும் பலம் பொருந்தியவர்களாக இருந்தனர். இவர்களுடைய பிரதிநிதிகளான ஆட்வுட், குவேக்கர் ஜோசப் ஸ்டார்ஜ் ஆகியவர்கள் மிதவாத சார்டிஸ்டுகளின் இயக்கத்தை ஆதரிக்கத் தயாராக இருந்தனர்.

சார்டிஸ்ட் இயக்கத்தின் பலமும், வரலாற்றில் அது பெறுகின்ற இடமும், அந்தக் கட்சியின் தலைவர்களால் ஏற்பட்டதல்ல. ஆனால், சமுதாயத்தில் உள்ள மிக மோசமான குறைபாடுகளையெல்லாம் வன்மையாகக் கண்டித்து, அவைகளை அகற்ற வேண்டுமென்று முனைந்ததால் தான், அந்த இயக்கத்திற்குப் பலம் ஏற்பட்டது. மிகவும் குறைவான கூலி நிர்ணயங்களையும், நீண்ட

வேலை நேரத்தையும் அவர்கள் எதிர்த்துப் போராடினர். அவர்களுடைய மிகத்துயரமான நிலையை, லங்காஷயர், எல்லைப்புறத்தில் வேலை செய்கின்ற கைத்தறி நெசவாளர்களைப் பார்த்தால் புரியும் ஒரு மணிக்கு ஒரு பென்னி வீதம், வாரத்திற்கு எழுபது மணி நேரம் உழைக்கிறார்கள். மிட்லேண்டிலிலுள்ள பின்னுகின்றவர்களும், மேஜோடு செய்கின்றவர்களும் இதே நிலையில் தான் இருந்தனர். இரவலர் சட்டத்திலும் ஏற்பட்ட அநீதிகளையும், ஊழல்களையும், மதுபுட்டிகள் அமுக்கி வைக்கும் கீழ் அறைகளில் வசித்தல் போன்ற கொடுமையையும், சிறு குழந்தைகளை வேலை வாங்கும் மூர்க்கத்தனமும், மற்றும் அவர்களுடைய துயரமிக்க வாழ்க்கையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், டிஸ்ரேலி எழுதிய ஸிபில் (Sybil) என்ற நூலிலோ, அல்லது டிக்கன்ஸ், சார்லஸ் கிங்ஸ்லி எழுதிய நூல்களிலிருந்தோ நாம் தெரிந்து கொள்ள முடியும். அதே சமயத்தில் உயிரற்ற முறையில் எழுதியிருக்கும் அதிகாரக் குறிப்புகளில்கூட நாம் அதைக் காணமுடியும்.

தலைவர்களுக்குள்ளேயே பல பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டக் கருத்துகளைப் பேசினர். அக் கருத்துகள் முடிவடையவே இல்லை. இதனாலேயே அவர்கள் அழிந்துவிட்டார்கள். அரசியல் நடவடிக்கை எடுப்பதா? அல்லது தொழில் நடவடிக்கை எடுப்பதா? இது வர்க்கப் போராட்டமா? அல்லது நடுத்தர வகுப்பினரும், கீழ்த்தர மக்களும் சேருகின்ற இணைப்பா? என்ற பிரச்சினைகளை வீவாதிப்பதே அவர்களுக்கு சரியாக இருந்தது. அந்தத் தீவிரவாதிகளிடையே எவ்விதமான சமரசமும் ஏற்பட வாய்ப்பில்லை. பிளேஸ் போன்ற தலைவர்கள் தொழிலகச் சோதனையை ஆதரித்தனர். மேலும், தொழிற் சங்கங்கள் நாளடைவில் மறைந்துவிடும் என்றும் நம்பினர். பர்மிங்காம் 'ராடிகல்கள்' பலாத்கார செயல்களை ஆதரிக்காத தனால், அவர்களும் செல்வாக்கை இழந்துவிட்டனர். தானிய எதிர்ப்பு சங்கங்களை அழிப்பதற்குக் குறைவான விலையில் உணவு விற்பனை செய்வதென்ற கொள்கை பல சார்டிஸ்டுகளுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், குறைந்தவிலை உணவு என்றால் குறைந்த கூலி நிர்ணயம் என்று சந்தேகமுறத் தெரிந்தது. இந்தப் பிரச்சாரம் நடுத்தர உற்பத்தியாளர்கள் ஏற்படுத்தியதே என்று கருதினர். ஆரம்பத்தில் நிலவியிருந்த மிக மோசமான கொடிய நிலைமை மீண்டும் தோன்றுகின்ற அறிகுறி காணப்பட்டது. இரகசியமாக ஆயுதங்களைத் திரட்டுதல், மூவர்ணக் கொடியை அணிந்து கொள்ளுதல், பேங்குகளைக் கொள்ளை

அடிக்கத்திட்டமிடுதல், மறு பாராளுமன்றத்தைத் தோற்றுவிக்க முயற்சி செய்தல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டன.

கார்டிஸ்ட் இயக்கம் தோன்றுதற்கு முன்பாகவே, தொழிற் சாலை சட்டங்கள், இரவலர் சட்டத்தை எதிர்த்து ஆர்பாட்டங்கள், தீவிரமான தொழிற்சங்க நடவடிக்கைகள்–சம்பளக் குறைப்புக் காக ஏற்பட்ட பல வேலை நிறுத்தங்கள், முழுக்கூலியைத் தராது, சிறுகசிறுகத் தரும் கூலியை எதிர்த்து வேலை நிறுத்தம் போன்ற நிகழ்ச்சிகள் இங்கிலாந்தில் சாதாரணமாக நிகழ்ந்தன. லங்காஷையரில், ஜேம்ஸ் டோஹெர்டி (James Doharty) தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் யூனியன் ஒன்றை நிறுவினர் இதே விதமான யூனியன், கட்டிடத் தொழிலாளர்களாலும் நிறுவப்பட்டது. 1834-ல் எல்லா தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்களை வைத்து 'கிராண்ட் நேஷனல் கன்ஸாலிடேடட் யூனியன், (Grand National Consolidated Union) என்ற சங்கத்தை அமைத்தார். வேலை நிறுத்தம் செய்வது பொதுவான குறிக்கோளாக இருந்த போதிலும், வெறும் சம்பள உயர்வுக்காக மட்டுமின்றி, நல்ல அநுகூலமான முறையில் அதிகாரங்களை நிர்வகிப்பதற்கும் இந்தச் சங்கம் அமைக்கப்பட்டது. இந்தச் சங்கத்தில் அரைமில்லியன் அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள். திட்டமில்லாத கொள்கையினால் சம்பந்தப்பட்ட துறைகளில் வேலை நிறுத்தம் செய்து, பின்பு அவர்களின் தலைவர்களுடைய பிடிவாத குணத்தால் சீர்குலைந்து விட்டது.

மனமுடைந்து, அதிருப்தியுற்ற பல தொழிலாளர்களின் ஆதரவையும் பக்கபலமாக வைத்துக் கொண்டு, 1838-ல் லண்டன் மிதவாதிகள் குழு லோவெட் தலைமையில் இந்த உரிமை சாஸனத்தைத் தயாரித்தனர். பின்பு மகாசபை கூட்டுவதற்கும், தேசிய விண்ணப்பம் ஒன்றைத் தயார் செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இதற்குள் ஓ' கானெர் (O' Connor) 'நார்தர்ன் ஸ்டார்' பத்திரிகையில் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். தீவிரமான ஆர்வம் கொண்டவர்கள், மிதவாதிகள் குழுவினை அழுத்திவிட்டனர். ஆயுதங்களை வைத்துக் கொள்ளும் உரிமைகளை, அவர்கள் கேட்டனர். பர்மிங்காமிற்குச் சென்று அங்கிருந்து வடக்கு பகுதிகளுடன் சுலபமாகத் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும் என்று நம்பினர். ஜூலை மாதத்தில் பல கலகங்கள் நிகழ்ந்தன. காமன்ஸ் சபை, இவர்களது விண்ணப்பத்தை விசாரிக்க மறுத்தது. பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆயுதம் தாங்கிக் கலகம் செய்வதிலிருந்து ஓ கானெர் மெதுவாகப் பின் வாங்கினர். இந்தக் கலகத்தை அடக்குவதற்கு நியூ

போர்ட்டிலிருந்து துருப்புகள் வரவழைக்கப்பட்டன. வெல்ஷ் பள்ளத்தாக்குகளிலிருந்து புரட்சி மனப்பான்மை கொண்ட சுரங்கத் தொழிலாளர்களுக்கும், துருப்புகளுக்குமிடையே கலகக் காரர்கள் சிக்கித் தவித்தனர்.

1840ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மந்தமான நிலையும், மூர்க்கத்தனமான வேலை நிறுத்தங்களும் ஏற்பட்டன. வெளிநாடு களிலிருந்து வந்த புரட்சியாளர்களான 'ஏஞ்சில்சு' (Engels), கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆகியோர் இங்கிலாந்திலுள்ள நிலைமையை ஆராய்ந்து பார்த்துவிட்டுத் தொழிலாளர் போராட்டத்திற்கு, இன்னும் நாடு தயாராகவில்லை என்று அறிவித்துவிட்டனர். தொழிற்சங்கங்கள் பொதுவாக இந்த வேலை நிறுத்தத்திலிருந்து ஒதுங்கியே இருந்தன. நடுத்தர வகுப்பினர், வயதுவந்த எல்லா ருக்கும் வாக்குரிமை அளிக்கும் உரிமையை ஆதரிக்கவில்லை. தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பாகத்தினர் அவர்களுடைய பெயரைக்கூட எழுதத் தெரியாத நிலையில் இருந்தனர். இந்தச் சூழ்நிலையில் அவர்களிடமிருந்து எப்படி மக்களாட்சி மலர முடியும்? அதனால், முதலில் அவர்களுடைய முன்னேற்றத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும், அதுவேதான் முதல்படி யென்றும், ஓவன், லோவட் என்பவர்கள் கூறினர்கள்.

மக்களாட்சி முறைப்படி ஆட்சி செய்யும் காலம் இன்னும் வர வில்லை. ஆனால், விக் சாதனைகள் முடிவடைகின்ற உணர்வை நாம் காணுகின்றோம். அலுத்துப் போனவரும், குறைகூறி பழக்கப்பட்டு பின்பு பொறுமையைக் கடைப்பிடித்து மெல்போர்ன் ஜனநாயகத்தின் சின்னமாக விளங்கினர். பல இயக்கங்கள் அப்பொழுது நன்கு அமைக்கப்பட்டிருந்தன. சார்டிஸ்டுகள், தானியச் சட்ட எதிர்ப்பு சங்கங்கள் (Anti-Cornlaw League) ஐரிஷ் ரிப்பீல் சங்கம் (Irish Repeal Association), அரசாங்கத் திற்கு பல இடையூறுகளை உண்டாக்கின. மேலும், கனடாவில் கலகம், ஆப்கன், சீனப்போர்கள், ஃபிரான்ஸுடன் போர் தொடுக்கும் நிலைமை, ஆகிய வெளி விவகாரங்களிலும் அரசாங்கம் பல தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. தானியச் சட்டங்கள், வாக்குரிமை சீட்டு மூலமாக ஓட்டளித்தல் ஆகிய பெரிய பிரச்சினைகளைக் கேபினட்டில் விவாதத்திற்குரிய பொருள் களாக்கிவிட்டனர். ஐரிஷ் 'டைத்' சட்டம் (Irish Tithe Act) நிறைவேறியபோதிலும், திருச்சபைகளில் வருவாயை வேறு காரியங்களுக்குப் பயன் படுத்துகின்ற கோரிக்கை கைவிடப் பட்டது. ராடிகல்களைத் தங்கள் பக்கம் 'இழுக்கவோ அல்லது அவர்களுடன் சமரசம் செய்துகொள்ளவோ, அவர்களால் முடிய

வில்லை. அவர்களுடன் சேர்வதனால்தான் எதிர்காலத்தில் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கும் என்று உணர்ந்தும் பயனில்லை. இடைக்காலத் தேர்தல்களில் வெற்றி கிடைக்குமா என்ற சந்தேகம் தோன்றிவிட்டதனால், அவர்கள் கேபினட்டையும், மாற்றி அமைக்க முன்வரவில்லை. ஓ கானெல்லின் நடுநிலைமையை ஆதரவாக வைத்துக்கொண்டு, வெலிங்டன் அரசாங்கத்தின் எதிர்ப்புகளை சமாளிக்க முயன்றார். நாட்டிலுள்ள பல இயக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டாலன்றி, பீல் பதவியேற்க மிகவும் தயங்கினர். இவ்விதமாக 1841 வரை தக்க பலமின்றி அரசாங்கம் நடைபெற்று வந்தது. புதிய அரசன் பதவியேற்றது அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. மெல்போர்ன், உலகப் பற்றற்ற ஒரு இளம் பெண் எச்சரிக்கையாக இருப்பதைப்போல அரசாங்கத்தில் பணியாற்றினர். ஆனால், அவர் இப்படி இருந்தாலும் புகழ் அடைந்தார். நாளடைவில் அவர்களுடைய பலவீனங்கள் பெருகி அவர்களை உணர்ச்சியற்றவர்களாக்கிவிட்டன.

சமகாலத்திய நிகழ்ச்சிகள்

1833 ஸ்பெயினில் கார்லிஸ்ட் போர்கள் (Carlist Wars) ஆரம்பமாயின.
யுன்கியார் ஸ்கெலஸ்ஸி உடன்படிக்கை (Treaty of Unkiar Skelessi).
ஆக்ஸ்போர்ட் இயக்கத்தின் ஆரம்பம்.
பிரிட்டிஷ் மக்களின் அடிமை முறையை ஒழித்தல்.

1834 புதிய இரவலர் சட்டம் (The New Poor Law).
பல்ஸாக் எழுதிய 'பீர் கோரியாட்' (Pere Goriot).
கோல்ரிட்ஜ், லேம்ப் (Lamb) மரணம்.

1835 டோக்வில் எழுதிய "டெமோக்கிரஸி இன் அமெரிக்கா" (Democracy in America).

1836 டெக்ஸாஸ் சுதந்திரம் பெற அறிவித்தல்.
பேலாகி (Palacky) எழுதிய பொஹிமிய வரலாறு.
டிக்கன்ஸ் எழுதிய 'பிக்விக் பேப்பர்ஸ்' (Pick wick Papers).

1837 பாரசீகப் படைகள் ஹெராட்டை முற்றுகையிட்டன.
மோர்ஸ் தந்தி முறையை நிறைவு படுத்தினர்.
கார்லில் எழுதிய நூல் "ஃபிரெஞ்சு புரட்சி" (French Revolution).

1828 ஆப்கானிஸ்தானத்தை எதிர்த்துப் போர்.
லூயி நெப்போலியன் இங்கிலாந்தில் குடியேறினர்.
தானியச் சட்ட எதிர்ப்பு சங்கம் நிறுவுதல்.
ரேஷல் (Rachel) ஜென்னிலிண்ட் (Jenny Lind) அரங்கேற்றம்.

1839 துருக்கிக்கும், முகமது அலிக்கும் போர்.
பெல்ஜியம், லக்ஸம்பர்க் பற்றிய லண்டன் உடன் படிக்கை.

1840 தையர்ஸ்–சுக்குப்பதிலாக (Thiers).
குஸாட் (Guizot) பதவியேற்றல்.
பென்னி தபால் கட்டணங்களை ஏற்படுத்துதல்.

1841 ஜலசந்தி மாசபை (Straits Convention).
கோஸத் (Kossuth) ஹங்கேரி தேசியவாதிகளைத் தலைமை தாங்கி நடத்தல்.
பஞ்ச் (Punch) பத்திரிகையின் தொடக்கம்.

11. பேரரசியும், சர் ராபர்ட் பீலும்
1837–1850

மெல்போர்ன் அரசாங்கம் மிகவும் பலவீனமாகிவிட்ட போதிலும், ஜூன் 1837-ல் நான்காவது வில்லியம் இறந்ததும், அதற்குப் பிறகு விக்டோரியா அரசி பட்டம் ஏற்றதும், அந்த அரசாங்கத்தின் பதவி காலத்தை நீடித்தது. உண்மையில், இந்த அரசாங்கத்தின் கனடா, ஜமாய்க்கா கொள்கைகள் நல்ல ஆதரவைப் பெறவில்லை. அவற்றைவிட, அயர்லாந்து கொள்கையில் பல பிரபுகளுக்குச் சலுகைகள் அளித்தது 'ராடிகல்'களுக்கு அருவருப்பை அளித்தது. இந்தச் சமயத்தில்தான் வில்லியத்தின் உறவினரான பதினெட்டு வயது நிரம்பிய விக்டோரியா ராணி பட்டத்திற்கு வந்தாள். இந்த அரசியாரின் குணநலன்களைப் புரிந்துக்கொள்வதற்கு நீண்ட காலம் பிடித்தது. அவளுடைய நீண்டகால ஆட்சியும், இந்த குண நலன்களை மக்களுக்கு நன்கு புலப்படுத்தின. அதனல் ஏற்பட்ட நலன்கள் அளவிட்டு உரைத்தற்கரிதாகும். அவளுடைய இளமையும் தூய்மையும் மீண்டும் முடியாட்சியைக் கவர்ச்சிகரமாக்கியது. மக்கள் முடியாட்சியைப் பற்றி நல்ல விதமாகப் பேசுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. மூன்றுவது ஜார்ஜின் மைந்தர்களுடைய நடத்தையைக் கண்டு, மிகவும் அதிருப்தி அடைந்திருந்த மக்களுக்கு அரசியாரின் ஆட்சி, மக்களின் மனத்தில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதுவுமின்றி அரசியாரும் அரசியாராகவே தோற்றமளித்தாள். அவளுடைய அன்னை, மற்றும் அவளுடைய ஆலோசகர்களையெல்லாம் இருந்த இடம் தெரியாது ஆக்கிவிட்டாள்.

ஆனல், அதே சமயத்தில் அவள் திருமணம் செய்து கொள்ளும் வரையிலும், அவளுடைய பரபரப்பும் ஆத்திரமும் மூன்றுவது ஜார்ஜின் பேர்த்தி எஸ்பதையும், நினைவுறுத்தியது. அந்தச் சமயத்தில் அவளுக்கு அனுபவமோ, அல்லது ஆதரவோ இல்லை. மெல்போர்ன் மட்டும் அவளிடம் மிகவும் பரிவோடு

இருந்தார். அதனால். அவருக்கு விக் கட்சியின் கண்கொண்டு அரசியலைப் பார்க்கும் வாய்ப்புகள் கிடைத்தன. அரசியார் என்ற காரணத்தினால், 1838-ல் ஏற்பட இருந்த நெருக்கடி, தவிர்க்கப்பட்டது. இதே நிலையில் ஓர் ஆண் இருந்தால், நிலை மையே வேறுவிதமாகியிருக்கும். மெல்போர்ன் பலமுறை ராஜி நாமா செய்யும் சந்தர்ப்பம் வந்தது. ஜமாய்க்கா அரசியல் அமைப்பை நிறுத்திவிடவேண்டுமென்ற பிரச்சினையில் டோரி களும் 'ராடிகல்களு'ம் ஒன்று சேர்ந்து அவருக்கு எதிர்ப்பைக் காட்டினர். கேபினட்டை அமைக்க பீலுக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. ஆனால், அவர் இதில், உற்சாகத்தைக் காட்டவில்லை. மேலும் பழைய கேபினட்டை கலைக்கும் ஆலோசனையை அரசியார் ஏற்கவும் மறுத்துவிட்டாள்; அல்லது அவளுடைய அரண்மனையில் உள்ள சில விக் பெருமாட்டிகளையாவது மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு, அரசியார் அதற்கும் சம்மதிக்கவில்லை. அவர்களுடைய அரசியல் கடமைகளைப்பற்றிய பீலின் கருத்து மிகவும் விநோதமாக இருந்தது. கடைசியாக, அரசியார் அவர் களுடைய பெரும் தன்மையை நினைவுறுத்தியபொழுது மெல் போர்ன் மீண்டும் பதவிக்கு வருவதை யாரும் தடுக்கவில்லை.

இதுவரையிலும் மெல்போர்னுக்கு எதிராக அரசியிடம் கூறி வந்த லெஹ்ஸன் பெருமாட்டியும் (Baroness Lehzen) அரசியாரின் திருமணத்திற்குப் பிறகு, தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டாள். லெஹ்ஸன் பெருமாட்டி ஹனேவிரியாவைச் சார்ந் தவள். அவள் அரசியாரின் தோழியாக அமர்த்தப்பட்டிருந் தாள், இவருடைய அன்னை சேக்ஸ்-கோபர்க்-கொத்தா (Saxe-Coburg-Gotha) என்ற நாட்டின் இளவரசியும், நான்காவது ஜார்ஜ் ஜின் மகள் சார்லட்டை (Charlotte) திருமணம் செய்துகொண்ட பெல்ஜிய நாட்டு அரசனை லியோபால்ட்டின் தங்கையுமாவாள். அரசியாரின் இளமைக்காலம் முழுவதும், அவளுடைய மாமாவின் செல்வாக்குடையதாக இருந்து வந்தது. அத்துடன் அவருடைய நெருங்கிய நண்பனை பேரன் வான் ஸ்டாக்மார் (Baron Von Stockmar) என்பவரும் அவருக்கு அடிக்கடி அறிவுரை கூறி வந்தனர். இதனால், இவர்களுடைய கொள்கைகள் அவளிடம் நன்கு பதிந்திருந்தன. அவர்களுடைய கண்ணோட்டத்திலேதான் அவளும் எதையும் பார்த்து வந்தாள். இத்தக் குழுவினர்தான், அவளுடைய முதல் மைத்துனரான ஆல்பர்ட் என்பவரை, அவ ளுடைய கணவனாகத் தேர்ந்தெடுத்தார்கள். கெண்ட் டச்சஸின் (Duchess of Kent) மற்றொரு சகோதரரின் மகனே ஆல்பர்ட். இவர்கள் 1840 பிப்ரவரி மாதத்தில் திருமணம் செய்துகொண் டார்கள் கல்யாணம் செய்துகொண்ட அதே ஆண்டில்

இளவரசியும், அடுத்த ஆண்டில் வேல்ஸ் இளவரசனும் பிறக்கவே, அவர்களுடைய அரச குடும்பமும் பெருகலாயிற்று.

இந்த அரச குடும்பம் முழுவதும் ஜெர்மன் மயமாக இருந்தது. அதனால், மக்கள் இவர்களையும் பாராட்டவில்லை. அரசியாரின் கணவனுடைய செலவினங்களுக்கு அனுமதி கோரிய பொழுது, கேபினட்டில் ஆலோசனையை பாராளுமன்றம் ஏற்காது, அவருடைய படியைக் குறைத்து விட்டது. அரசியாரின் கணவன் எவ்வளவு தான் அறிவுடையவராக இருந்தபோதிலும் ஆங்கிலேய மக்களின் கவனத்தை அவரால் கவரமுடியவில்லை. மேலும் அரசியார் அமைச்சர்களுடன் ஆலோசனை செய்யும் பொழுது அவர் அனுமதிக்கப்படுவதில்லை. அந்நியர்கள் என்ற மனப் பான்மை இன்னும் அம் மக்களின் மனத்தை விட்டு அகலவில்லை. இதைப் போன்ற நிலை தான் மூன்றாவது வில்லியத்தின் காலத் திலும் இருந்தது. ஆனால், யார் எப்படி நினைத்த போதிலும், ஆல்பர்ட் அரசியாரின் நிரந்தரமான அமைச்சராகவே இருந்தார். ஸ்டாக்மார் கொள்கைப்படி முடியாட்சியின் செல்வாக்கை சிறிது சிறிதாக வலுவாக்க முயன்றார். அரசாங்கத்தின் எண்ணற்ற பிரச்சினைகளில் அரசியாரின் கருத்து அமைச்சர்களின் கொள்கை களுக்கு முரண் பட்டதாக இருந்தது. குறிப்பாக, இந்த மோதல் வெளிநாட்டு விவகாரங்களில் அதிகமாக இருந்தது. கோபர்க் அரச குடும்பத்துடன், பிரான்ஸ், பெல்ஜியம், போர்ச்சுக்கல் ஆகிய நாட்டைச் சேர்ந்த அரச குடும்பத்தினரும் மண உறவுகளை வைத்துக் கொண்டதனால், அந்தக் குடும்பத்தினர் பல நாடுகளில் நல்ல செல்வாக்கைப் பெற்றிருந்தனர்.

ஆனால் இவர்களுடைய திருமணம் ஆன சிறிது காலத்தில், முடியாட்சியின் மதிப்பை. மெதுவாக மக்களிடம் உணர்த்தினர். அரசியாரின் கணவன், நல்ல அரசியல் அறிவுத் திறனும், அதே சமயத்தில் ஒழுக்க சீலராகவும் காணப்பட்டார். அரண்மனையும், கேபினட்டும், பெரிதும் மாறிவிட்டன. அரசியாரின் உயிரைப் பறிக்க இரண்டு முறை முயற்சி செய்யப்பட்டது. இந்த எதிர்ப் பையும் மற்ற சார்டிஸ்டுகளால் ஏற்பட்ட கொந்தளிப்புக்களையும் அவள் நன்கு சமாளித்தாள். ஸ்காட்லாந்தில் அவள் உடல் நலம் குணமாகிக் கொண்டு வந்தது. இவற்றைப் போல, அரசியாரின் தைரியமான சில குணநலன்களையும் சிக்கனமாக, அரண்மனை செலவுகளைச் செய்வதையும், அவர்களுடைய சிறு குழந்தைகளை வளர்த்தமுறையையும் மக்கள் போற்றிப் பாராட்டினர்.

அதனால் தான் அவர்களுக்கு அரசியாரின் மீது ஒரு தனி அன்பு பிறந்தது. முதலாவது சார்லஸ் காலத்தில் சில ஆண்டுகள் வரையிலும்தான், இவ்விதமாக மக்கள் அரச குடும்பத்தினரிடம் மதிப்பும், அன்பும் வைத்திருந்தனர். அதற்குப் பிறகு இந்த நிலை இப்பொழுது தான் ஏற்பட்டது. மேலும், இந்த அரசியார், கணவன் மனைவியாகிய இருவரும், ஐரோப்பியப் பிரச்சினைகளில் திட்டவட்டமான கொள்கைகளையும், பின்பு அது போன்றே சமயம், கலை, கல்வி மற்றும் அவர்களுடைய கடமைகளைச் செய்வதிலும் நல்ல ஆர்வமுடையவர்களாக இருப்பதை அமைச்சர்கள் கண்டனர். இவர்களுக்கேற்ப சர் ராபர்ட் பீல் என்ற விசுவாசமுள்ள ஊழியரும் இவர்களுக்கு வாய்த்தார்,

1839-ல் அரண்மனைப் பெண்கள் விஷயமாக ஏற்பட்ட நெருக்கடிக்குப் பின்பு, விக் கேபினட்டிற்கு இரண்டு ஆண்டுகள் மிகவும் சோதனையான காலமாக இருந்தது. வாக்குச் சீட்டுகளின் மூலமாக ஓட்டு அளிப்பது தவிர 'ராடிகல்களுக்கு', அவர்கள் ஒன்றும் சாதகமாகச் செய்யவில்லை. சார்டிஸ்டுகளின் ஆர்ப்பாட்டங்கள்; பத்து மணி நேரம் வேலை வேண்டும் என்ற ஆர்ப்பாட்டங்கள், பெருகிக் கொண்டே போயின. அத்துடன் 1838-லிருந்து பொருளாதார மந்த நிலைமையும் நாட்டிற்குப் பெரிய தீமையை விளைவித்தது. அடுத்த ஆண்டு முழுவதும் கோதுமையின் விலை 70 ஷில்லிங்குடன் நின்றது. ஏற்றுமதிகள், குறிப்பாகப் பஞ்சு ஏற்றுமதி மந்த நிலை அடைந்துவிட்டது. பாங்குகளின் ரிசர்வ் நிதி மிகவும் குறைந்து விட்டது. கூலி நிர்ணயங்கள் அதிகமாகக் குறைக்கப்பட்டன. இவை போதாதென்று, சீனாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும் இரண்டு போர்கள் வேறு நடந்து கொண்டிருந்தன. 1840–41-ல் ஐரோப்பாவில், பிரான்சுடன் போர் தொடுக்கவேண்டிய நெருக்கடி வேறு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அயர்லாந்தில் திருச்சபை நிலத் தகராறுகள் வேறு அதிகமாகக் காணப்பட்டதால், இங்கிலாந்தில் ஏற்பட்ட இரவலர் சட்டத்தைப் போன்று இங்கேயும் இப்பிரச்சினைகளை சமாளிக்க ஒரு சட்டம் இயற்ற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இந்தக் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு வரவு செலவுத் திட்டங்களும் பற்றுக் குறை பட்ஜெட்டுகளாகவே இருந்ததால் நிதி மந்திரிக்குக் கவலை ஏற்பட்டுவிட்டது. இத்துடன் எதிர் தானியச் சட்ட சங்கங்கள் வேறு பிரச்சாரம் செய்து மக்களுடைய மனத்தை மாற்றிக் கொண்டிருந்தன. இவர்களைத் திருப்தி செய்வதற்கு 1841-ல் ரஸல், காலனிகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற மரம், சர்க்கரை ஆகிய பொருள்களுக்குச் சலுகைகள் அளிப்பதாகவும் மேலும் இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமைக்குக் குறைந்த அளவு

தீர்வை மட்டும் விதிப்பதாகவும் அறிவித்தார். கடைசி காலத்தில் பின்பற்றப்படுகின்ற இந்தத் தாராள மனப்பான்மை பாராளுமன்றத்தையோ அல்லது மக்களையோ சிறிதும் கவரவில்லை. ஜூன் மாதத்தில் விக் கேபினட்டின் மீது, பீல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தீர்மானத்தை நிறைவேற்றினர். அதன் பிறகு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பின்பு நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் பீல், 90 அங்கத்தினர்கள் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார். அந்தக் காலத்தில் இப்பெரும்பான்மையே பெரிது என்று கருதப் பட்டது. விக்குகள் பின்பு ராஜிநாமா செய்தனர்.

1841-44-ல் அவர் அமைத்த அரசாங்கமே அந்த நூற்றாண்டிலேயே மிகவும் வலிமை வாய்ந்ததாகக் கருதப்படும் அளவிற்குச் சிறப்புற்று விளங்கியது. இதில் பழைய பிரதம அமைச்சர்களும்; வருங்கால பிரதம அமைச்சர்களும் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் வெலிங்டன், ஸ்டான்லி, ஆபர்டீன் (Aberdeen) கிளாட்ஸ்டன், காட்ரெய்ச், மற்றும் ஆட்சியியலில் நிபுணர்களாக விளங்கிய, சர் ஜேம்ஸ் கிரகாம்; ஹார்டின்ஜீ, எல்லன்பரோ, டல்ஹவுஸி, கேனிங் என்ற நான்கு எதிர்கால வைசிராய்களும் இடம் பெற்றிருந்தனர். இந்த சக்தி மிக்க குழுவை அமைப்பதற்குக் காரணமாக இருந்தவர் பீல் தான். பிரதம அமைச்சராக அவர் பணியாற்றியதைப் போல மற்றவர்கள் அந்தச் சிறப்பைப் பெற முடியாது. அவர் நாட்டிற்கு வேண்டிய எல்லாப் பொறுப்புகளையும் நன்கு ஆராய்ந்து செயலாற்றும் திறமையைப் படைத்தவர். எல்லாத் துறைகளின் மீதும் அவரது ஆதிக்கம் இருந்து கொண்டேதான் இருந்தது. ஆபர்டீன் மூலமாக வெளி விவகாரங்களையும், இந்திய விவகாரங்களை ஹார்டின்ஜ் மூலமாகவும்; அல்லது காப்புத் தீர்வைகளைத் திருத்தி அமைப்பதை கிளாட்ஸ்டன் மூலமாகவும், அவர் கண்காணித்துவந்தார். இவற்றைப் போன்றே, அவர் எல்லா அலுவல்களையும் நன்கு கவனித்து வந்தார். அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் பலவகைகளில் அவரைப் போன்ற தன்மையை உடைய கிரகாம் என்பவரேயாவர். அவர்கள் இருவருமே, புரட்சி ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்ற பயத்திலேயே இருந்தனர். 'அனல் கக்கப் போகின்றது' என்று கிரகாம் சொல்லி வந்தார். இவர்கள் பொருளாதாரக் குறைபாடுகளைக் கூர்மையாகக் கவனித்து வந்தார்கள். அவர்களுக்குக் கட்சி அரசியலுங் கூட அவ்வளவு திருப்தியாகப் படவில்லை. ஆட்சியில் பொலிவுற்று பீல் விளங்கிய போதிலும், அவர் சிறந்த ராஜதந்திரிதானா என்று கருதப்படும் பொழுது, வேறுபட்ட கருத்துகள் எழுகின்றன.

பிரச்சினைகளை உடனடியாகப் புரிந்து கொள்ளுவதில் இருந்த திட்டத்தைப் போல அவருடைய மனம் கற்பனை நிறைந்ததன்று; காலத்திற்கேற்ப நடந்து கொள்ளுபவரே தவிர சிறந்த குறிக்கோள்களையும் உடையவரன்று. சமயோசித அறிவினால் திருச்சபையிலும் அரசாங்கத்திலும் பல ஆதரவுகளை அளித்தும், திறமை மிக்கவர்களைக் கண்டு பிடித்தும், அதற்கேற்ப அவர்களுக்குச் சன்மானங்களை அளித்தும், மற்றும் இவைபோன்றவற்றை செய்கின்ற நிர்வாகத்திறமை படைத்தவர் என்பதில் சிறிதும் ஐயமே இல்லை. இன்னும் அரசியாரின் கணவரிடத்திலும், பெல்ஜியம் அரசன் லியோபால்ட்டிடத்திலும், கிஸ்ஸாட்டிடத்திலும் (Guizot) நல்ல செல்வாக்கினை அவர் பெற்றிருந்தார். இருப்பினும், சமுதாயத்திற்கு வேண்டிய கொள்கை உருவாக்குவதிலோ, அல்லது பேரரசின் பிரச்சினைகளை அணுகுவதிலோ, அல்லது நீடித்த பயனைத் தரும் கொள்கைகளைத் தீட்டுவதிலோ அவருக்குப் போதிய திறமையில்லை என்று தான் கூறவேண்டும்.

மற்ற எல்லாவற்றையும் விட, கன்சர்வேடிவ் கட்சியை நல்ல விதத்தில் உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. கட்சியைப் புதுப்பித்தும், அங்கத்தினர்களைச் சேர்த்தும், 'கார்ல்டன் கிளப்' (Carlton Club) என்று ஏற்படுத்தியும், மற்றும் பத்தாண்டு வரையிலும் வெலிங்டன் சோர்வு மனப்பான்மையையும், டோரி பிரபுக்களின் மடமையையும் அவர் மட்டுப்படுத்தியே வந்தார். கட்சியைத் தலைமை தாங்கி நடத்துவதில் அவர் வல்லுநர். அதைப் போன்றே விவாதத்திலும், சரியான பதில்களைக் கூறுவதிலும் அவருக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை. ஆனால், அவரிடம் இரண்டு பெரிய குறைகள் இருந்தன. அவருடைய கட்சி ஆதரவாளர்களின் மனத்தை அவர் கவரவில்லை. கட்சியில் இருப்பவர்கள் சில சலுகைகளை எதிர்பார்க்கத்தான் செய்வார்கள். அவர்களைப் புறக்கணித்து விட்டது மட்டுமல்ல ஆனால் உண்மையில் அவர், மற்ற டோரி ஆதரவாளர்களுடைய வழக்கமாக எதிர் பார்க்கும் சில வசதிகளையும் அவர் கவனித்ததாகவே தெரியவில்லை. அவர் பதவியிலிருந்த ஐந்து ஆண்டுகளில், ஆறு பிரபுக்களைத் தான் ஏற்படுத்தியிருக்கிறார் என்ற காரணம் மட்டுமன்று; மற்ற டோரிகளின் சமயக் கொள்கைகள் அல்லது அரசாங்கத்தைக் குடும்பம்போல பாவித்து நடத்துவது என்ற தன்மைகளையெல்லாம் அவர் அங்கீகரிக்க மறுத்து விட்டார். மேலும், அவர் கூருணர்ச்சியுடையவராகவும், கருத்துகளைத் தன்னகத்தே அடக்கி வைத்திருப்பவராகவும் மற்றும் ஆர்வமுடையவராகவும், ஆணவமுடையவராகவும் இருந்தார். அவர் கொண்டுள்ள கருத்துகளின்படியே மற்றவர்களும் புரிந்து,

நடக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். அவருடைய சிந்தனையைப் பின்பற்றியே மற்றவர்களும் நினைக்க வேண்டுமென்று அவருடைய கட்சிக்காரர்களுக்கு கற்பித்துக் கொடுத்தும் வந்தார்.

இந்தப் பெரிய அரசியல்வாதி காலம் காட்டும் கண்ணாடியைப் போல எல்டன் காலத்திலிருந்து ஏற்பட்ட மாறுதலான சூழ் நிலையை நன்கு காட்டினார். சுருங்கக் கூறின் ஆரம்பகால விக்டோரியன்கள் எதையெல்லாம் மதித்தார்களோ அவற்றையெல்லாம் இவரும் அப்படியே பிரதிபலித்தார். நான்காவது ஜார்ஜ் இவரை வேடிக்கையாக "ஸ்பின்னிங் ஜென்னி" என்று அழைத்தார் அதாவது லங்காஷயர் புதுப் பணக்காரர்களில் இவரும் ஒருவர். இங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய செல்வர்களுள் ஒருவரான இவர், வீட்டுக் கணக்குகளையும் கூட விடாமல் வைத்துக் கொள்ளுகிறார். இத்துடன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் மிக உயர்ந்த பட்டமும் அவர் பெயரை அலங்கரிக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றதனால் சமயப் பற்றுடையவராகவும் ஆனால், அவர் புஸி இயக்கத்தை மறுப்பவராகவும் (Ante-Puseyite) பொருளாதார சிந்தனை உடையவராகவும் இருந்த போதிலும், ஒரு சாதாரண டோரி கொண்டுள்ள சமுதாயக் கொள்கைகளையே மேற்கொள்கிறவராகவும், முன்னேற்றத்தில் நம்பிக்கை உடையவராக இருந்து வந்தார். ஆயினும், புரட்சி என்றாலே வேறுன்றிய பயம் அவர் கூடவே இருந்தது. கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய ஆர்வத்துடன் முழு அதிகாரத்தையும் கைப்பற்றிய இவர், தான் நினைத்ததைச் செயல்படுத்துக்கின்ற காலம் வந்துவிட்டது. அதாவது நாகரிகமாக்குவதும், முரண்பட்ட கருத்துகளை இணக்கப்படுத்தலும், குறைபாடுகளை தணிப்பதிலும் அவர் ஆர்வம் காட்டினார். மற்ற துறைகளில் இவருடைய சில பணிகளைப்பற்றிப் பார்ப்போம்:— ஐரோப்பாவில் அமைதியான சூழ் நிலையை ஏற்படுத்துவதும், கனடாவிலும், ஜமாய்க்காவிலும், விக்குகள் விட்டுச் சென்ற குழப்பங்களை அகற்றுவதும், சீனா, ஆப்கானிஸ்தான், சீக்கியர்கள் ஆகியவர்களுடன் செய்கின்ற போர்களை நிறுத்துவதும், சாதாரண கத்தோலிக்கர்களுடன் இணைந்து, அயர்லாந்தில் கத்தோலிக்கர்களின் விடுதலைச் சட்டத்தைக் கொண்டு வருவதும் போன்றவை இவருடைய அரும்பெரும் பணிகளாகும். உள் துறையில் அவருடைய உடனடியான பணி, பொருளாதார மந்தத்தினால் மக்களிடையே ஏற்பட்டிருந்த அதிருப்தியை நீக்க, புதிய தொழில் வளத்தினால் ஏற்பட்ட முதலீட்டையும் அதனுடைய சக்தியையும் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். தொழில்

வளத்தினால் ஏற்பட்ட அரசியல் விளைவுகளை, பீல் ஓரளவிற்கு 1850-ல் எதிர்பார்த்து தான் செயலாற்றினார்.

வரவு செலவுத் திட்டத்தில் 1842 முடிய ஐந்து ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் பத்து மில்லியன் பவுன்கள் பற்றாக்குறையாக இருந்து வந்தது. அதனால் ஐந்து ஆண்டுகளில் 50 மில்லியன் பவுன்கள் பற்றாக்குறையாகிவிட்டது. ரொட்டிப் பஞ்சம், குமுறுகின்ற வேலை நிறுத்தங்கள், பாங்குகளின் முறிவு, பதினேறு பேர்களில் ஒருவன் இரவலனாகவும், ஏற்றுமதிகள் அப்படியே தேங்கி நிற்றலும் போன்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க, ஒழுங்கானதும், நிரந்தரமானதுமான ஒரு திட்டம் வகுக்க முயற்சி செய்தார். அவருடைய இந்த முடிவை 1842ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் காணமுடிகிறது விக், காப்டென் ஆதர வாளர்களுடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஒரு பவுனுக்கு ஏழு பென்ஸ் வீதம் வருமான வரி விதித்தார். 150 பவுன்களுக்கு கீழாக உள்ள வருமானத்தை உடையவர்களுக்கு, விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதைப்போன்றே நீண்ட காலமாக முற்றுப் பெறுதிருந்த காப்புத் தீர்வைகளையும் அவர் ஒழுங்குபடுத்தினார். சுமார் 750 வகைகளுக்கு தீர்வையைக் குறைத்தார். சில கச்சாப் பொருள்களின்மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகளை 5 சதவீதம் குறைத்தார். தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கு 20 சதவிகிதம் பாதுகாப்பு தீர்வை அளிக்கப்பட்டது. காலனிகளுக்கு ஹஸ்கிஸன் அளித்த சலுகைகள் மீண்டும் அதிகமாக்கப்பட்டது. உதாரணமாக; வெளியிலிருந்து வருகின்ற மரத்திற்கு 25 ஷில்லிங் தீர்வையில் குறைக்கப்பட்டது. கனடாவிலிருந்து வருகின்ற மரத்திற்கு 9 ஷில்லிங்குகளிலிருந்து 1 ஷில்லிங்காகக் குறைக்கப் பட்டது. இறைச்சியும் மற்ற கால்நடைகளுக்கும் இன்னும் குறைந்த விகித தீர்வைதான் விதிக்கப்பட்டது.

தானியங்களைப் பொறுத்தவரையிலும், அவருடைய கட்சிக் காரர்கள் தங்களுடைய பழைய கொள்கைகளைச் சிறிதும் தளர விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் மட்டும் அவருடைய மதிப்பு குறையவே இல்லை. 1828-ல் நிர்ணயம் செய்யப் பட்ட கோதுமை விலைகள் நன்கு வரையறுக்கப்படவில்லை. அதனால் தானியங்களைப் பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்க ஆரம்பித்தனர். அதனால் கடைசி சில ஆண்டுகளின் தானிய விலையை அடிப்படையாக எடுத்துக்கொண்டு நிர்ணயம் செய்தால், நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டுவிடும். மக்களிடையே நுகர்கின்ற சக்தி குறைந்துவிட்டதே என்று விவசாயிகள் அஞ்சத் தொடங்கினர், விக்குகள் நிர்ணயம் செய்த தானிய விலையை இவர்

அங்கீகரிக்க மறுத்துவிட்டார். ஏனெனில் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில் அந்த விலைப்படி அமுல் நடத்த முடியாது. அதனால் இறக்கு முகத்திலுள்ள விலை நிர்ணயத்திற்குப்பதிலாக, மையத்தில் ஒருவிலை நிர்ணயம் செய்து குவார்ட்டர் அளவுள்ள கோதுமைக்கு 56 ஷில்லிங்குகள் தீர்வை தரவேண்டுமென்று அறிவித்தார். இதனால் கனடா 1 ஷில்லிங் மட்டுமே தீர்வையாகத் தந்தது.

அவருடைய துணிச்சலுக்கு ஏற்றவாறு நல்ல காலமும் பிறந்தது. மந்த நிலை மாறியது: நாணயமும் நல்ல விதமாக ஏற்பட்டு விட்டதாலும், 1844-ல், அவர் 3½, யிலிருந்து 3 சதவிகிதம் 250 மில்லியன் பவுன்களைக் கடனாக வாங்கிச் சமாளித்தார். அந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம், சர்க்கரைப் பிரச்சினையைச் சமாளித்தது. இந்தப் பிரச்சினை கட்சியின் தலைவலியாக இருந்து வந்தது. ஏனெனில் மேற்கு இந்தியத் தீவுகளின் நலன்களைக் காப்பவர்கள் இங்கே அதிகமாக இருந்தனர். மற்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சர்க்கரை அடிமைகளினால் மிகக் குறைவான பொருட் செலவில் தயாரிக்கப்படுவதாகும். மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்து இறக்குமதியாகின்ற சர்க்கரைக்கு அதிக பாதுகாப்புப்பெற உரிமை பெற்றவர்கள் முயன்றார்கள். 1845-ல் வருமான வரியை மற்ற மூன்று ஆண்டுகளுக்குப் புதுப்பித்தார். அதனால் சுமார் 450 வகை இறக்குமதி பொருள்களின்மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகளை ரத்து செய்தார் இந்த வகைகளில் பஞ்சு, கம்பளம், எண்ணெய், சாயங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. எல்லா ஏற்றுமதிப் பொருள்களுக்கும் தீர்வைகள் ரத்து செய்யப்பட்டன. தயாரிக்கப்பட்ட எல்லாப் பொருள்களுக்கும் பத்து சதவிகிதத்திலிருந்து காப்பு தீர்வை விதிக்கப்பட்டது.

ஏற்கனவே, கமிஷன்களால் ஆய்வு செய்யப்பட்ட விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் 1842-ல் நிலக்கரி சுரங்கச் சட்டம் (Coal Mines Act) ஒன்று இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி சுரங்கங்களில் பெண்களையும் மேலும் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களையும் வேலைக்கு அமர்த்தல் நிறுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தை சரியாக அமுல் நடத்த, ஆய்வாளர்களையும், அரசாங்கம் நியமித்தது. ஷெப்பீல்ட், நாட்டிங்காம்ஷயர் ஆகிய இடங்களில் தொழிலாளர்களைப்பற்றி ஆய்வு நடத்தியதில், அங்குள்ள ஒழுக்கம் குன்றிய குழந்தைகளைப்பற்றியும், கல்வி அறிவின் மையையும், ஒழுக்கமின்மையையும்பற்றி தெரிய வந்தன. 1844-ம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிற்சாலை சட்டம் தொழிலாளர்களுக்குப் பத்து மணி நேரம் வேலை கொடுக்கவில்லை என்று தொழிலதி

பர்கள் அதிருப்தி அடைந்திருந்தனர். ஆனல், காப்டென் விரும்பிய தைப்போல பீலும் பதிமூன்று வயதுக்குட்பட்ட சூழந்தைகளுக்கு 6½ மணி வேலேநேரமும், பெண்களுக்கு அதிகபட்சம் 12 மணி நேரமும், இயந்திரங்களேச் சுற்றி வேலி அமைத்தலும்போன்ற சலுகைகள் தரப்பட்டன, சமுதாயக் கொள்கையில் பென்தாமின் கொள்கைகளே இவர் பின்பற்றினர். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் இரவலர் சட்டதை இவர் நீடித்தார். பின்பு இரவலர் சட்ட நிர்வாக அதிகாரிகளின் உதவியைக் கொண்டு பொது சுகாதார ரத்தையும் கண்காணித்தார். 1837-ல் இயற்றப்பட்ட சட்டத்தின் துணேயினல் சேட்விக் (Chadvick) ஜனன மரண பதிவாளர்களே நியமித்தார். இந்தத் தலேமை அலுவலகத்தில் தணிக்கையாளர் களாக வேலே செய்த (Kay) சவுத்வுட் ஸ்மித் (Southwood Smith) ஃபார் (Farr) ஆகியோர் புதைத்கின்ற இடங்களிலுள்ள பெருவாரி நோய் பரவுகின்ற சூழ்நிலேபற்றியும், தண்ணீர் விநியோகம், மற்றும் பல சுகாதார வசதிகளேப்பற்றியும் லண்டனிலுள்ள சாக் கடைகளின் அசுத்தமான நிலேபற்றியும், மேன்செஸ்டர் வீதிகளே மாதம் ஒருமுறையாவது துப்புரவு செய்வது குறித்தும், பர்மிங் காமில் உள்ள பெரும்பான்மையான வீடுகளுக்குத் தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதையும், கோயில் வெளிப்புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் பிணக் குவியல்களேயும் குறித்து பல அறிக்கைகளேச் சமர்ப்பித்தனர். களிமண்ணினல் கட்டப்பட்ட பல மோசமான வீடுகளில் மக்கள் குடியிருந்துவரும் நிலேயைப் பற்றியும் அவர்கள் அறிவித்தார்கள். அதனல் பீல், நகரங்களில் உள்ள நிலேயை ஆராய ஒரு குழுவினே நியமித்தார். 1845-ல் தரப்பட்ட அவர்களுடைய அறிக்கையின் அடிப்படையில் சுகாதார சட்டங்கள் இயற்றப்படலாயின.

1840–50 வரை நாட்டிலே பசிக் கொடுமை மிகவும் அதிகமாக இருந்தது என்பதை முழுவதும் ஒப்புக் கொள்ள முடியாது. 1847-ஆவது ஆண்டில் மட்டும் இந்த நிலே மிகவும் கொடியதாக இருந்தது. அதைத் தவிர மற்ற ஆண்டுகளில், கூடிய வரையிலும் விலேவாசிகளேக் குறைப்பதற்குப் பீல் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். 1842-ல் ஏற்றுமதிகளின் மதிப்பு சுமார் 47 மில்லியன் பவுன்கள் எனவும் 1845-ல் 60 மில்லியன்கள் என்றும் மதிப்பிடப்பட்டது. 1842-ல் 5000 கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டன; 1847-ல் 216,000 கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டன. பஞ்சு, இரும்பு, உற்பத்தி, மிகவும் அதிகமாக இருந்தது. நிலக்கரி உற்பத்தியும் மிகவும் அதிகமாக இருந்த போதிலும், பஞ்சு, இரும்பைப்போல அவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லே. கடந்த பத்தாண்டுகளேவிட,

1844-ல் கிடைத்த அறுவடை மிகவும் நன்றாக இருந்தது. குவார்ட்டர் அளவுக்கு கோதுமையின் விலை சராசரி 56 ஷில்லிங்குகளாக இருந்தது. 1845-ல் 45 ஷில்லிங்குகளாக கீழிறங்கி விட்டது. கைத்தறியாளர்கள், சாயம் போடுகின்றவர்கள் ஆகியோரின் கூலிகளைத் தவிர, மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கூலி 20-லிருந்து 30 சதவிகிதம் வரையிலும் அதிகமாகியிருந்தது. சோதனை மிக்க காலத்தில் பதவியிலிருந்து, பின்பு பதவியைவிட்டு வெளியேறும்பொழுது, பீல் விட்டுச்சென்ற வாழ்க்கைத்தர நிர்ணயம், மாபெரும் முதல் உலகப்போர் நிகழும்வரை நீடித்திருந்தது.

இயற்கை அன்னையின் ஒத்துழைப்புடன் மனிதனுடைய கண்டு பிடிப்பும், அத்துடன் குறைந்த பட்ச அளவில் பீல் செய்த சீர்திருத்தங்களும் மக்களுக்குப் பெரும் நன்மை புரிவதாக அமைந்திருந்தன. குறைந்த செலவில் பண்டங்களை ஏற்றிச் செல்லும் முறைகளை வகுத்ததிலும், பொருள்களின் விலைவாசிகளும் பெரிதும் குறைந்தன. ஸ்டீபன்ஸன் தோற்றுவித்த டார்லிங்டன்-லிவர்பூல் ரயில்வே ஆரம்பித்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. ரயில்வே போக்குவரத்தில் இப்பொழுது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது. ரயில்வேக்கள் நீடிக்குமா, அல்லது பள்ளமான இடங்களுக்குச் செல்ல குதிரைகள் தான் உபயோகிக்கப் படுமா என்ற சந்தேகங்கள் எல்லாம் மறைந்துவந்தன. ரயில்வேக்களின் வளர்ச்சிக்குத் தடங்கலாக இருந்த சில நிலச் சொந்தக்காரர்களும், போட்டி மனப்பான்மையும், பல ரயில்வே கம்பெனிகளின் மோதல்களும் இப்பொழுது தளர்ந்தன. 1838 கடைசியில் 500 மைல் அளவிற்குத் தான் ரயில்வே போக்குவரத்து இருந்தது. அதில் லண்டன்–பர்மிங்காம் ரயில்வே ஐந்தாவதாகும். பிராட் ஷாவின் அட்டவணை அடுத்த ஆண்டில் பிரசுரமாயிற்று. 1843-ல் ரயில்வேக்களின் வளர்ச்சி 2000 மைலுடன் நின்றுவிட்டது. பீல் பதவிக்கு வந்த பிறகுதான் இந்தத்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. ரயில்வேக்களின் முதலீடு போடுவதற்கு ஊக்கம் தரப்பட்டது. 'ரயில்வே மனப்பான்மை' மக்களிடையே காணப்பட்டது. 1848 முடிவில் பிரிட்டனில் 5000 மைல் வரையிலும் ரயில்வேக்கள் போடப்பட்டன. சுமார் 200 மைல் வரையிலும் இருந்த சிறு சிறு ரயில்வே கம்பெனிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு 20 அல்லது, 30 பெரிய கம்பெனிகளாகச் செயலாற்றின. 'லண்டன்–நார்த் வெஸ்டர்ன்' போன்ற குறைந்த அளவில் ஓடிக்கொண்டிருந்த ரயில்வேக்கள் எல்லாம் பெரிய கம்பெனிகளுடன் இணைந்துவிட்டன. அளவுக்குமீறிய இந்த வளர்ச்சி 1847-ல் முறிந்து, ஆயிரக்கணக்கான மக்களின்

அழிவுக்குக் காரணமாகிவிட்டது. யார்க் நகரில் துணி விற்றுக் கொண்டிருந்த ஜார்ஜ் ஹட்ஸன் ரயில்வேயில் முதலீடு செய்து, பின்பு ரயில்வே மன்னனாகிவிட்டார். நிறைய பணத்தைச் சம்பாதித்தும் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்துங் கூட, அவர் இறக்கும் பொழுது ஓட்டாண்டியாக இறந்தார். ஸ்டீபன்ஸன் கூட 1848 வரையிலும் உயிரோடு இருந்தார். அவருடைய மகன் ராபர்ட் 'நார்த் வெஸ்டர்ன்' கம்பெனியில் ஒரு பொறியியல் வல்லுநராக வேலை பார்த்துவந்தார். அவர் நியூகேஸலிலும் மீனய் ஜலசந்தியிலும் (Menai Straits) பெரிய பாலன்களை அமைத்தார். நிலங்களை அகழ்வதற்கும், சுரங்கப் பாதைகளைக் குடைவதற்கும் பீடோ போன்ற கன்ட்ராக்டர்கள் ஒரே சமயத்தில் 10,000 பேரை வேலைக்கு அமர்த்தியிருந்தனர். கனடா, இந்தியா, ஃபிரான்ஸ் நாடுகளில் தாமஸ் பிராஸி (Thomas Brassey) என்பவர் ரயில்வேக்களை நிறுவும் தொழிலில் ஈடுபட்டார். ரயில்வேக்களை அமைப்பதில் நிறைய போட்டி இருப்பதை அக்காலத்தில் பாராட்டுதற்குரியதாக இருந்த போதிலும், சாலைகளில் தனிப்பட்டவர்களின் வாகனங்களைக் கண்மூடித்தனமாக ஓட்டுவதைப்போல ரயில்வேக்களையும் ஓட்டினால் என்னவது? அதனால் ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுப்பதிலும், ஒரே மாதிரியான கட்டணங்களை நிர்ணயம் செய்வதிலும் பாராளுமன்றத்தின் தலையீடு அவசியம் தேவைப் பட்டது. வர்த்தகச் சங்கத்தின் தலைவராக இருந்த கிளாட்ஸ்டன் 1844-ல் ஒரு சட்டத்தை இயற்றி, அதன்படி "பாராளுமன்ற பேஸஞ்சர் டிரெயின்" (Parliamentary Passenger Train) என்று அழைக்கின்ற அளவிற்கு ரயில்கள் விடப்பட்டன. அவைகளில் மூன்றாவது வகுப்புக் கட்டணம் மைல் ஒன்றுக்கு ஒரு பென்ஸ் வீதம் வசூலிக்கப்பட்டது. மேலும் நல்ல இட வசதிகளும், மணிக்கு 12 மைல் வீதம் தான் வேகமாகப் போக வேண்டும் என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. இந்த மாற்றங்களைத் தவிர, ரயில்வேக்களை அரசாங்கமே எடுத்து நடத்துவது என்ற ஆலோசனையை, பிரைட் (Bright) காப்டென் (Cobden) இன்னும் பலரும் பலமாகக் கண்டித்தனர். ரயில்வேக்கள் அமைக்கப்பட்டு, இருபத்து ஒரு ஆண்டுகள் கழித்த பிறகு அரசாங்கமே அவைகளை வாங்கிக் கொள்ளுகின்ற உரிமை இருந்தது. இவற்றையெல்லாம் ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால், சில ஆண்டுகளில் இவ்விதமான எண்ணங்கள் மறைந்து விட்டன. 1846-ல் மின்சாரத் தந்தியும் தோன்றவே, அதையுங்கூட ரயில்வேக்கள் வளர்ச்சிக்குத் துணையாக இருக்குமென்று கருதி, தனியார் பொறுப்பிலேயே விட்டு விட்டனர்.

பீல், தமக்கென்று கோட்பாடுகளை அமைத்துக் கொள்ளவில்லையெனினும் ஒரு வகையில் திட்டவட்டமான பொருளாதாரக் கட்டுப்பாடு தேவையென்பதை உணர்ந்திருந்தார். பொருளாதார மந்த நிலை ஏற்படும் பொழுது எல்லாம் 1839–41 உட்பட, பாங்குகளின் நிலை தடுமாறுவது வழக்கமாகிவிட்டது. காலத்திற் கேற்பத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்ற இந்த சமயங்களிலெல்லாம் பாங்குகள் சரியானபடி ஆலோசனைகளைக் கூறத் தவறிவிட்டன. 'பாங்க் ஆப் இங்கிலாந்தின்' தங்க ரிசர்வ் நிதி அடிக்கடி ஊசலாடிக் கொண்டிருந்தது. பல சமயங்களில் அபாய நிலையையும் எட்டிவிட்டது, நிலையில்லாத அறுவடைகளும், காப்புத்தீர்வை அமைப்பும் நிறைய நஷ்டத்தை ஏற்படுத்தின. குறிப்பாக, அமெரிக்க வியாபாரத்தில் இந்த நஷ்டம் காணப்பட்டது. 1826-லிருந்து தோன்றிய சில கூட்டு-நிதி பாங்குகள் (Joint-Stock-Banks) சரிவர நிர்வாகம் செய்யப்படவில்லை. சில தனிப்பட்டவர்கள் நடத்தும் பாங்குகள் முறிந்து விட்டன. இருப்பினும் சுமார் 300 பாங்குகள் வரையிலும் 'நோட்டுகள்' வழங்கி வந்தன. இக்குறைபாடுகள் ஏற்படுவதற்கு மூல காரணம், கட்டுப்பாடில்லாது நிறைய 'நோட்டுகள்' வழங்குவதனால் ஏற்படுகின்றதென்பதைப் பீல் உணர்ந்து, அவற்றைத் தவிர்க்க பாங்கு சார்ட்டர் சட்டம் (Bank Charter Act) ஒன்றை 1844-ல் இயற்றினர். இதைக் குறைபாடு, என்று சொல்வதும் ஒரு வகையில் சரிதான் என்றாலும், அதற்காக முழுக் கட்டுப்பாட்டையும் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என்று சிலர் கருதினர். அரசாங்க உரிமைகளினாலும், எளிதில் அரசியல் காரணங்களை வைத்துக் கொண்டு சம்பாதிக்கும் பணத்தினாலும் ஏற்படுகின்ற ஆபத்துக்களைப் பீல் நன்கு உணர்ந்தே இருந்தார். ஆனால், ஏற்கனவே நன்கு நிறுவப்பட்ட கட்டுக் கோப்பை கலைக்காமல், வேண்டிய அளவுக்கு மட்டும் பாதுகாப்புகளை ஏற்படுத்தினர். இந்தச் சட்டத்தின்படி, பாங்குகளின் வரவு செலவு கணக்குகளை மக்கள் நன்கறியும் வரையில் விளம்பரம் தரப்பட வேண்டும் என்றும் பாங்கிங் அலுவல்களையும், நோட்டுகள் வழங்கும் அலுவல்களையும் வேறுபடுத்தவேண்டுமென்றும் 14 மில்லியன் பவுன்களுக்குள்ளாக, போதிய பாதுகாப்புடன் நோட்டுகள் வழங்க அனுமதியும் தரப்பட்டது. ஆனால், பாங்கு சேமிப்பு அறைகளில் அவற்றிற்கு ஈடாக ஒவ்வொரு பவுன் மதிப்புள்ள தங்கமாவது அல்லது வெள்ளியாவது இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டது. இதனால், பல பாங்குகள் நோட்டுகள் வழங்குவதை நிறுத்திக் கொண்டன. சில, குறிப்பிட்ட தொகை அளவிற்கே வழங்க முயன்றன. ஆனால், இந்த உரிமையை நாளடைவில் பாங்க் ஆப் இங்கிலாந்திற்கே விட்டு

விடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சட்டத்தைப் பற்றிக் குறைவாகப் பல சொல்லலாம். அந்தச் சமயத்தில் பல பாங்கர்கள் எதிர்ப்பையும் தெரிவித்தனர். இந்தச் சட்டத்தினால், அப்பொழுது மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட நாணய வசதிகளும், கடன் வசதிகளும் மிகவும் குறைந்து விட்டன என்பது உண்மையே. 1847-ல் ஏற்பட்ட அவசர நெருக்கடி காலத்தில் இந்தச் சட்டம் நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. இதன் விளைவாக, பணவீக்கம் ஏற்படுமென்று பீல் பயந்தார். நெருக்கடி காலத்தில், மக்கள் அறிவுடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தை பீல் எடுத்துரைத்தார்.

அப்பொழுது அவருக்கு கேபினட்டில் உறுதுணையாக இருந்தவர்கள் வயதாகிக்கொண்டிருந்த கோமகனும், அமைதியை விரும்பும் ஆபர்டீனும் (Aberdeen) தளர்ச்சியுற்ற கிரகாமும், அமைதியில்லாத ஸ்டான்லியுமே ஆவார்கள். பீலுக்கு அப்பொழுது எதிர்நோக்கியிருந்த சோதனைகள் அநேகம். இந்தியாவில் எல்லன்பரோ வைசிராயாக இருந்து, பல குழப்பங்களைச் செய்துவிட்டார். ஆப்கானியப் போருக்குப் பிறகு ஏற்பட்ட சூழ்நிலையும், மற்றொரு சீக்கியப் போருக்கு ஆயத்தமாவதும் அவருடைய குழப்பமானக் கொள்கையை எடுத்துக்காட்டுகின்றன. தவிர, ஃபிரான்சுடன் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன; ஸ்காட்லாந்தில் உள்ள திருச்சபையில் பிளவு ஏற்பட்டது; ஓகானெல்லின் (O'Connell) ரத்து இயக்கமும், பின்பு 1848-ல் அவர் கைதானதும், 'யங் அயர்லாந்து கட்சி'யின் (Young Ireland Party) ஆயுதம் தாங்கிய கலகம் நிகழப்போகிறதென்ற வதந்திகளும், ஆரஞ்சு இயக்கத்தினரின் மனக்கசப்பும் (Orange Men) அயர்லாந்தின் நிலக்கொள்கைக்குப் பிரபுக்களிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்பும், கல்வியைப் பரப்புவதில் ஐரிஷ் பாதிரிகள் காட்டிய எதிர்ப்பும், ஆகிய இவை போன்ற பல பிரச்சினைகள் அவரை எதிர்நோக்கியிருந்தன. இவ்வளவு பொறுப்புக்களையும் அவர் தட்டிக்கழிக்கின்ற மனப்பான்மை உடையவரன்று; எதிர்ப்பு அதிகமாக, அவருடைய வல்லாட்சியும் அதிகமாகிக்கொண்டேவந்தது. இருப்பினும், அவ்விதமான எதிர்ப்பும் அவருக்குத் தேவைப்பட்டது. ஏனெனில் அவருடைய சில மட்டமான கொள்கைகள், இருபுறங்களிலிருந்தும் ஒதுக்கி அவரை தனிமையாக்கிவிட்டன. ரஸல் மட்டும் பதவியை அடைய ஆர்வமாக இருக்கிறார் என்ற பயத்தைத் தவிர, விக்குகளைப்பற்றி அவர் கவலைப்படவே இல்லை. ஏனெனில், அவர்களுக்குள்ளேயே பல பிளவுகளும், பொறுமைகளும், சூழ்ச்சிகளும் அதிகமாகி விட்டன. தானியச் சட்டங்களினால் அவர்களிடையே ஒற்றுமை

இல்லாதிருந்தது. ஆனால், மற்றொரு பக்கத்தில் எதிர் தானியச் சட்ட சங்கத்தை நிறுவி பிரச்சாரம் செய்கின்ற 'ராடிகல்களிடை' யேயும், டோரி நிலக்கிழார்களிடையேயும் அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது.

1839-ல் நிறுவப்பட்ட இந்தச் சங்கம் இப்பொழுது மிகவும் பலமாக வளர்ந்துவிட்டது. அந்தச் சங்கம் செழிப்பதற்குத் தேவையான பண வசதிகளை லங்காஷயரில் உள்ள பஞ்சு வியாபாரிகள் நிறைய அளித்தார்கள். ஏனெனில், அவர்களுக்கு விலை மலிவாகப் பஞ்சு தேவைப்பட்டது அவர்களுடைய உற்பத்தி பொருள்களுக்கு நிறைய பஞ்சு தேவையாயிருந்தது. இந்தச் சங்கத்தின் கொள்கைகள் பேரளவில் செயலாற்றப் பட்டன. 1844-ல் 90,000 பவுன்கள் செலவழிக்கப்பட்டன. 1845-ல் $\frac{1}{4}$ மில்லியன் பவுன்கள் செலவுக்குத் திட்டமிடப்பட்டது. துண்டு பிரசுரங்களும், நகரங்களில் நூற்றுக்கணக்கான சொற்பொழிவு களும், அவற்றைப்போலவே, கிராமங்களிலும், சந்தைகளிலும், திருச்சபைகளிலும் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்தக் கூட்டங்கள் நிகழும்பொழுதெல்லாம், கலகம் விளைகின்ற சூழ்நிலை வேறு உருவாகிவந்தது. வடக்குப் பகுதிகளிலே உள்ள தீவிர வாதிகளின் பிரச்சாரமும், அவர்களுடைய சொற்பொழிவுகளும், மக்களுடைய மனத்தை மாற்றிவந்தன. அவர்களுள் மிக முக்கிய மானவர் குவேக்கர் ஜான்பிரைட் (Quaker John Bright) என்பவர். இந்தச் சங்கத்தின் உயிர்நாடி ரிச்சார்ட் காப்டென் (Richard Cobden) என்பவரேயாவர். சசக்ஸில் விவசாயம் செய்துவந்த இவர் மேன்செஸ்டரில் கேலிகோ அச்சடிப்பவராக தொழில் செய்தார். அவருடைய சொற்பொழிவுகளிலே, மக்களைக் கவரும் சக்தியும், போராட்டம் நடத்துகின்ற தீவிரமும், சங்கக் கொள்கைகளில் அசையாத ஆர்வமும் கொண்டவர் என்று தெரிந்தது. நல்ல குணங்கள் இருப்பதைப்போலவே, அவரிடம் குறைகளும் காணப்பட்டன. அவருடைய பேச்சும் எழுத்தும் கிளாட்ஸ்டனுக்கு ஆத்திரமூட்டுவதாக இருந்தன. விவசாயத் திற்குப் பாதுகாப்புத்தேவை என்று கூறுகிறவர்களெல்லாம் தங்களுடைய உரிமைகளை மட்டும் பாதுகாத்துக்கொள்ளும் சுயநலவாதிகள் என்று கண்டித்தார். கடற்படையில் வேலை செய்கின்றவர்களைச் சோம்பேறிகள் என்றும், பிரபுக்கள் போருக்குத் தூபம் போடுகின்றவர்களென்றும், காலனிகளுடன் நடத்தும் வர்த்தகத்திற்கு எவ்விதமான தீர்வையும் கூடாதென் றும் பேசினர். சார்ட்டிஸ்ட் இயக்கத்தினருள் பலர் இவரை வன்மையாகக் கண்டித்து, அவருடைய சமுதாய்க் கொள்கைகள் ஜனநாயகத்திற்கு உகந்தவை அல்ல என்று கூறினர்கள்.

அவருக்குத் தொழிற்சங்கத்தையும், வயது வந்தவர்களின் வேலை நேரத்தை நிர்ணயம் செய்வதில் அரசாங்கம் தலையிடுவதையும் பிடிக்கவில்லை. அவருடைய தொழிலிலேயே ஒன்பதுக்குட்பட்ட சிறுவர்கள் நாள் ஒன்றுக்கு பதினறு மணி நேரம் வேலை செய்து வருவதைத் தெரிந்திருந்தும், ஆஷ்லி இதைப்பற்றி ஒரு சட்டம் கொண்டுவருவதை வன்மையாகக் கண்டித்தார். கடைசியாக, நாற்பது ஆண்டுகளில் அவர் கூறிய எல்லா முக்கியமான கொள்கைகளையும் மற்றவர்கள் கண்டித்தார்கள். இந்தச் சங்கம் வளர்ச்சி அடைவதற்கு முக்கிய காரணங்களாக இருந்தவை, இந்தச் சங்கத்திலுள்ளவர்களுடைய தீவிரமான ஆர்வமும், பிரச்சாரம் செய்வதை ஒரு கலையாக வளர்த்து வந்ததும், மற்றும் காப்புத் தீர்வைகளைப்பற்றிக் கவலைப்படாதவர்களுடைய மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியதும், நடுத்தர மக்களுடைய வாழ்க்கை இதனால் அழிந்துவிடுகிறதென்ற கூக்குரலும், மற்றும் விலைவாசிகள் குறைந்தால்தான் மக்கள் வாழ்க்கையை நடத்த முடியுமென்றும் உலகில் அமைதிநிலவ முடியுமென்ற முறைகளைப் பயன்படுத்தியதுதான் என்றும் கூறலாம். வெறும் பேச்சளவில் மட்டும் இவர்கள் நிறுத்திக் கொள்ளாது பேரளவில், உரிமை மானியக்காரர்களின் வாக்குகளை அவர்கள் பக்கம் திருப்பிக்கொண்டார்கள்.

டோரிகளின் நம்பிக்கையைக் கவர்ந்து பீல் அரசியலில் இறங்கினார். ஆனால், அவர் அரசியலை விட்டு விலகும்பொழுது, அவர்களுடைய நம்பிக்கையைப் படிப்படியாக இழந்துவிட்டார். டோரிகள் கடந்த காலத்தில் செய்த தவறுகளை இவரும் செய்ய விரும்பவில்லை. அப்படிச்செய்தால் டோரிகளுக்கு எதிர்காலமே இல்லாது போய்விடும், அதனால், அவர் காப்டெனுடனும், விக் முன்னேற்றவாதிகளுடனும் சமரசம் செய்துகொண்டார். 1843-ல் அவர் மீண்டும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற கொள்கையை கைவிட்டுவிடப்போவதாக கிளாட்ஸ்டனிடம் அறிவித்தார். விவசாயிகளின் மூலதனத்திற்கு ஆபத்து நேரிடும்; அல்லது அந்நியர்களுடைய தயவில் உணவுப் பொருள்களுக்காகக் காத்திருக்க வேண்டுமென்ற கொள்கைகள் எல்லாம் காலப்போக்கில் மாறிவிடக்கூடியவையே என்று அவர் கூறினார். இவரைவிட கிரகாமின் மனமும் ஏற்கனவே மாறி விட்டது. எல்லாம் சரியாக நடந்திருந்தால், ஏதாவது ஒரு குறைவான தீர்வையை விதித்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்திருப்பார். ஒவ்வொரு காப்புத்தீர்வையிலும் நிலக்கிழார்களின் நலன்களைப்பாதுகாப்பது என்ற கொள்கை கைவிடப் பட்டது. மேலும் அவருடைய அயர்லாந்து கொள்கையிலும்

மனமாற்றம் ஏற்பட்டுவிட்டது. மேய்னூத் செமிநரிக்கு (Maynooth Seminary) அதிக மானியம் அளித்தது டோரி வெறியர் களுக்கு அதிக ஆத்திரத்தைக் கிளப்பியது. 1829-ல் அவர் கொள்கை துறந்ததை, இந்த டோரிகள் இன்னும் மறக்கவில்லை

பீல் எதிர்காலத்தைக் குறித்துக் கவலை கொள்ளாதவர். மேலும் அப்பொழுது வளர்ந்துவந்த புதிய டோரி இயக்கத்தினர் இவருடைய கன்சர்வேடிவ் கொள்கைகளை வெறுத்தனர். பீலுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் பணம் சம்பாதிப்பதைத் தவிர, வேறு கொள்கைகளே கிடையாது என்று அவர்கள் கருதி னர். இந்த எதிர்ப்பின் ஒரு பாகம் புதிய இளைஞர்கள் கூட்டத்திலிருந்து கிளம்பியது. அவர்கள் புதிய பிரபுத்துவ முறையையும், மக்கள் செழிப்புடன் வாழவேண்டிய சில நீதி களையும் கொள்கைகளாகக் கொண்டவர்கள். ஆஷ்லியின் ஆதர வாளர்களும்' தொழிற்சாலை சட்ட விரும்பிகளும் இவரை எதிர்த் தனர். மற்றும் சிலர் இவர் விக்குகளுடனும், பென்தாம் கோஷ்டி யினருடனும் இரவலர் சட்டத்தில் இரக்கம் கொண்டதனால் எதிர்த்தனர். அவருடைய மனமாற்றத்தை வெளிக்காட்டாமல் வைத்திருந்ததற்காகவும், ஒழுங்கான முறையில் மேய்னூத்தில் வாக்குகளைப் பதிவு செய்ய உத்திரவிட்டதிலும், சர்க்கரை கொள்கையிலும், அல்லது பத்துமணி நேர வேலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற கொள்கையிலும் எல்லாருமே இவரை எதிர்க்கத் தொடங்கினர். இருவிதமான பிளவுகள் கட்சியினுள் ஏற்பட்ட உடன் தலைமைப் பதவியும் கூட அவரிடமிருந்து பறி போகும் சூழ்நிலை உருவாகியது. இவரை எதிர்த்தவர்கள், புதி தாக ஒரு தலைவரைக் கண்டுபிடித்தனர். அவர் பென்ஜமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) என்ற யூதர். ஆரம்பத்தில் ராடிகல் களுக்கு சாதகமாக சில கண்ணீர் துளிகளை வடித்து, 1837-ல் டோரி கட்சி அங்கத்தினராகப் பாராளுமன்றத்தில் நுழைந்தார். இவர் பீலைவிட கேளிக்கைகளை அதிகமாக விரும்பும் லிண்டர்ஸ்ட் (Lyndhurst)-ஐப் போன்றவர். இவர் 1841-ல் பீலிடம் சென்று ஒரு பதவி வேண்டுமென்று கேட்டார். ஆனால், பீல் அவருடைய கோரிக்கையை நிராகரித்தார். அவர்களிருவரும் ஒன்றாக இருக்க சாத்தியமே இல்லை. அவர் ஒரு விவசாயத் தொகுதியிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றும், நிலம்தான் சமுதாயத்தின் அடிப்படை என்று உணர்ந்திருந்தபோதிலும், உண்மையான கன்சர்வேடிசம், நிரந்தரமாக மகுடம், திருச்சபை, பிரபுத்துவம், மக்கள் ஆகியவற்றை ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற மனப்பான்மை உடையவர். அவர் இவற்றைத் தவிர, மக்கள் உரிமைப் பட்டயம், தொழிற்சாலை சட்டங்கள், அயர்லாந்து

ஆகிய பிரச்சனைகளைப் பற்றியும் அவருடைய கருத்துகளைத் தெரிவித்தார். அதே கருத்துகளின் அடிப்படையில் துண்டு பிரசுரங்களும், நாவல்களும் எழுதி வெளியிட்டார். காமிங்ஸ்பி (Comingsby) என்ற நாவல் 1844-வது ஆண்டிலும், அடுத்த ஆண்டில் ஸிபில் (Sybil) என்ற நாவலும் பிரசுரமாயின. சாதாரண மக்களுக்கு வாக்குரிமை அளிப்பதைவிட மிக நல்ல சமுதாய ஏற்பாடுகளையும் செய்து தரவேண்டுமென்று விரும்பினர். அவருடைய கருத்தின்படி, முதலில் விக்குகளும், பிறகு பீலைப்போன்ற தொழிலதிபர்களும், எலிசபத், ஸ்டுவார்டுகள் காலத்தில் பின்பற்றிய தேசீயக் கொள்கையை புறக்கணித்து விட்டனர் என்று குறை கூறினர். ஷெல்பர்ன் (Shelburne) பிட் (Pitt) கேனிங் (Canning) ஆகியோரைத் திரும்பவும் கொண்டுவர முயற்சி செய்தனர்.

'முப்பதில்' ஏற்பட்ட பல குழறுபடிகளை அவர் சமாளித்தார். 1845-ல் அவருடைய மதிப்புக் குறையவில்லை. அதே வேகத்தில் அவருடைய கட்சியும் முன்னேற்றமடைந்திருக்கமுடியும், ஆனால், அவரை மீண்டும் பல பிரச்சினைகள் கலக்கின. அந்த ஆண்டின் இலையுதிர்காலத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய நெருக்கடி அவருடைய மதிப்பையும், திறமையையும் பலமாக சோதித்துவிட்டது. அயர்லாந்தில் உருளைக்கிழங்கு சாகுபடி கெட்டுவிட்டதென்றும், பல அறிக்கைகள் அவருக்கு வந்து குவிந்தன. விஞ்ஞானிகளை அனுப்பி நேரில் பார்வையிடச் செய்தார். அவர்களும் அதே கருத்தினைத்தான் கூறினர்கள். மேலும், இங்கிலாந்திலும் நல்ல விதமாக வளர்ந்து வந்த கோதுமைப் பயிர்கள் இடைவிடாத மழையின் காரணமாகக் கெட்டுவிட்டது. அதனால், அந்த ஆண்டில் கண்டிப்பாகப் பஞ்சம் ஏற்படும் நிலைமை இருந்தது. பஞ்சம் ஏற்பட்டால் தானியச் சட்டங்களை ரத்து செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். ஒருமுறை ரத்து செய்துவிட்டால் பின்பு மீண்டும் தானியச் சட்டங்களை விதிப்பதென்பது முடியாத காரியம் என்று அவருக்குத் தெரியும். அப்படி மீண்டும் விதித்தாலும் பெரிய குழப்பம் ஏற்படும் என்ற நடுக்கம் அவருக்கு இருந்தது. அதனால் இதற்கேற்ற நடவடிக்கைகளை அவரே கொண்டுவருவதென்றிருந்தார். நவம்பர் மாதத்தில் மெல்போர்னுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், விக்குகளைத் தலைமை தாங்கும் பொறுப்பு ரஸலைச் சார்ந்தது. அவர் தானியச் சட்டங்களை முழுக்கவும் ரத்து செய்துவிடவேண்டுமென்று விரும்பியதனால் பீலின் வேகமும் இன்னும் அதிகமாகிவிட்டது. ஆனால், கேபினட்டில் முன்பு இவருடைய கொள்கையை ஆதரித்தவர்களுங்கூட இப்பொழுது தயங்கினர்கள். ஸ்டான்லி

இக்கொள்கையை ஆதரிக்காது டிசம்பர் மாதத்தில் ராஜிநாமா செய்துவிட்டார். ஆனல், இரண்டு வாரத்திற்குள் அவர் மீண்டும் பதவியேற்றார். அரசாங்கத்தின் இந்தத் தயக்கத்திற்கு என்ன காரணம் என்று ரஸல் ஆராய்ந்து பார்த்ததில், கிரே பிரபுவின் விருப்பப்படி பால்மர்ஸ்டனை மீண்டும் வெளி விவகாரத் துறைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற விருப்பத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் இதெல்லாம் டோரிகளின் பிரச்சினை என்று ரஸல் பேசாமல் இருந்துவிட்டார். ஸ்டான்லியை இழந்ததற்குப் பதிலாக, பீல், கிளாட்ஸ்டனின் ஆதரவைப் பெற்றார். கிளாட்ஸ்டன் சமீபத்தில் மேய்னூத் விவகாரத்தில் ராஜிநாமா செய்தார். கிளாட்ஸ்டன் மீண்டும் பதவிக்கு வந்ததை விக்குகளும், அரண்மனையிலுள்ளவர்களும் பெரிதும் வரவேற்றனர். ஜனவரி 1846-ல் தானியச் சட்ட ரத்து மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்தச் சட்டத்தின்படி, மூன்று ஆண்டுகள் வரையிலும் தானியச்சட்டம் ரத்தாகும் என்றும் இந்த இடைக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கோதுமை விலை 48 ஷில்லிங் விலையில் இருக்கும் பொழுது 10 ஷில்லிங் தீர்வையும், அதற்குப் பிறகு 1 ஷில்லிங் வெறும் பதிவுத் தீர்வையாகச் செலுத்தினல் போதுமானது என்றும் கூறினர். இந்த மசோதா ஜூன் 25-ஆம் தேதி வரையிலும் பிரபுக்கள் சபையில் நிறைவேறவில்லை. அதே நாளன்று, காமன்ஸ் சபையில் விவாதிக்கப்பட்ட அயர்லாந்து கெடுபிடிச் சட்டம் (Irish Coercion Act) பீலை பதவியிலிருந்து விரட்டக் காரணமாக இருந்தது. வாக்கெடுப்பில் விக்குகளும், காப்பு பாதுகாப்பை விரும்புகிறவர்களும் சேர்ந்து இந்த மசோதாவிற்கு எதிராக வாக்களித்தார்கள். தானியச் சட்டத்தில் ஏற்கனவே 231 டோரி அங்கத்தினர்கள் இவருக்கு எதிர்ப்பு தெரிவித்ததனல் இவரைக் காப்பாற்ற முடியவில்லை.

கட்சித் தலைவர் என்ற முறையில் அவருடைய செய்கை மன்னிக்க முடியாததாகும். அவர் திடீரென்று கொள்கைகளை மாற்றிக் கொண்டதைப்பற்றி கட்சியில் முன்கூட்டியே ஆலோசனை செய்யவில்லை. வரவு செலவுத் திட்டத்தினல் ஏற்பட்ட விளைவுகளைக் காட்டியோ அல்லது விலைவாசிகளுக்கு ஏற்ப கூலி இறங்கவில்லை என்பதைக் காட்டியோ அவர் கூறிய சமாதானங்களைக் கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. அது மட்டுமல்ல, விவசாயிகளின் நலன்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டதையும் அவர்கள் அறிவார்கள். காப்டென் பதவியேற்பதைத் தடுப்பதே தமது முக்கிய நோக்கம் என்றும்; மற்றும் அவரைப்பற்றி பீல் கூறிய கண்டனங்களுக்கும், இப்பொழுது பீல் அவரைப் புகழ்ந்து

கூறுவதற்கும் பெருத்த முரண்பாடு இருந்தது. அரசியாரின் நம்பிக்கைக்கு ஏற்ற ஊழியனாக இருப்பதை வெலிங்டன் சுட்டிக் காட்டினார். மற்றும் தீவிரவாதிகளின் பக்கத்தில் சார்வது அவருக்கழகல்ல என்று எடுத்துரைத்தார். இந்தத் தானியச் சட்டங்கள் திடீரென்று ரத்து செய்யப்படுவதற்கு கூறுகிற அவசர நெருக்கடி அப்படி என்ன நேர்ந்துவிட்டதென்றும், ஏற்கனவே நெருக்கடி காலத்தில் இவ்விதச் சட்டங்களை நிறுத்திவைப்பதைப் போலவே இப்பொழுதும் செய்யலாம் என்றும் ஸ்டான்லி கூறினர். அடுத்து வரும் ஆண்டுகளில், அயர்லாந்து தனது தானியத்தையும், வெண்ணையையும் ஏராளமாக வெளிநாடுகளுக்கு அனுப்பியது. அங்கே பஞ்சநிலைமை உண்மையில் 1847-ல்தான் ஏற்பட்டது. உண்மையிலேயே அயர்லாந்தில் உருளைக்கிழங்கு சாகுபடி கெட்டுவிட்டதென்றால், அவர்கள் எப்படி நிறைய தானியத்தை ஏற்றுமதி செய்துகொண்டிருக்க முடியும்? பீல் முன் கூட்டியே இந்த நிலையை எதிர்பார்த்து செய்திருந்தாலும், காப்புத் தீர்வைகளை மாற்றி அமைத்திருப்பதற்குச் சரியான சமாதானம் கொடுக்க முடியவில்லை. ஏனெனில் 'நாற்பதுகளில்' தானிய விலை சராசரி 56 ஷில்லிங்கு வரையிலும் நிலவரத்தில் இருந்தது. ரத்து செய்ததற்கு பிறகு, பல ஆண்டுகள் கழித்தும் (1856-61 வரை) அதன் விலை 53 ஷில்லிங், 5 பென்ஸ் வரைதான் குறைந்தது. 1878-க்குப் பிறகு தான் புதிய சூழ்நிலையில் அதன் விலை மிகவும் குறைந்து, அதற்கேற்ப வாழ்க்கைத்தரமும் குறைந்துவிட்டது. இதனால் ஆங்கிலேயரின் விவசாயம் அதிகமாகப் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், டோரிகளிடமிருந்து பீல் மிகுந்த மனக்கசப்புடன் விடைபெற்றுக் கொண்டார். "இந்தக் கட்சியின் வலையிலிருந்து விடுபட்டதற்கு நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்." என்று அவர் எழுதினர். ஜார்ஜ் பென்டிக் பிரபுவும், டிஸ்ரேலியும் சேர்ந்து காப்பு வரிகளை விரும்புவோரை பீலுக்கு எதிராக ஒன்று சேர்த்தனர். பின்பு ரஸல் பதவியேற்றார். அதாவது, முப்பதில் விக்குகள், பீலின் உதவியைக்கொண்டு ஆட்சி செய்ததைப்போல, மீண்டும் அந்த அரசியல் நிலை திரும்பி விட்டது.

ரஸலின் அரசாங்கம் பீலின் கொள்கைகளையே பின் பற்றியது. ஏனெனில், நெருக்கடியான நிலைமை கட்சியின் ஒழுக்கத்தை மிகவும் பாதித்துவிட்டது. பீல் 1850 வரையில் உயிர் வாழ்ந்தார். 1847-க்குப் பிறகும், தேர்தலில் விக்குகள், சர் ராபர்ட் பீலின் செல்வாக்கையே பெரிதும் நம்பியிருந்தார்கள்.

கிரகாம் மற்றும் பீல் கொள்கைகளை ஆதரிக்கும் தலைவர்கள், ரஸல் அரசாங்கத்தில் சேர மறுத்துவிட்டார்கள். டிஸ்ரேலியின் கொள்கைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால், ரஸல் பலவீனமான அரசாங்கத்தையே அமைக்கமுடிந்தது, விக்குக் கட்சியைச் சேர்ந்த பழம் பிரபுக்களைக்கொண்டே இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது. 1806-ல் பதவியிலிருந்த திறமை மிக்கவர்களின் ஒருவரான லேன்ட்ஸ்வோன் (Landsowne) என்ப பவர் இந்த அரசாங்கத்தில் பதவியேற்றார். அவர் கிரே பரம் பரையைச் சார்ந்தவர். இந்த அரசாங்கத்தின் முக்கியமான பதவிகளில் இருந்தவர் பால்மர்ஸ்டன். அவரிடம் வெளி விவ காரப் பொறுப்பு தரப்பட்டது. காலனி நிர்வாகத்தில் கிரேயின் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. அயர்லாந்து விவகாரங்களில் அவர்களுடைய முழு கவனம் செலுத்தப்பட்டது. இதைப் போன்றே, 1848-க்குப் பிறகு ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சி யினால் ஐரோப்பாவில் புதிய சூழ்நிலை உருவாயிருந்தது. அதையும் சமாளிக்க வேண்டியிருந்தது. உள்நாட்டிலும் 1847-ல் வர்த்தக நெருக்கடி ஏற்பட்டது. அடுத்த ஆண்டில் சார்ட்டிஸ்டுகள் தங்களுடைய முழு மூச்சுடன் கடைசி முயற்சியையும் செய்து பார்த்தனர். கெனிங்டன் காமன் (Kennington Common) என்ற இடத்தில் அவர்கள் பெரியதொரு மாநாட்டைக் கூட்டினர்கள். பின்பு பாராளுமன்றத்தின்மீது அந்தக் கூட்டம் படையெடுத்துச் சென்றது, பெரும் குழப்பத்தில் முடிந்தது. இவர்களுடைய கலகத்தைத் தவிர்க்க ஏராளமான நடுத்தர மக்களும் காவலர்க ளாகப் பணி புரிய முன்வந்தார்கள். சார்டிஸ்டுகளின் முயற்சி தோல்வியுற்றது.

பாராளுமன்றத்திலுள்ள சூழ்நிலைக்கேற்ப, அவர்கள் உள் நாட்டைப் பொறுத்த வரையிலும் சட்டங்களை இயற்றிக் கொண் டார்கள்; அல்லது பொது மக்களின் கருத்துகளைக் கவனித்தும் நிர்வாக வசதிகளைப் பொறுத்தும் சட்டங்களை இயற்றிக் கொண் டார்கள். 1848 வரை பெண்டிக் உயிர் வாழ்ந்தார். அவர் நல்ல எதிர்க்கட்சித் தலைவரன்று. இருப்பினும், சர்க்கரைக் கொள் கையில் பாதிக்கப்பட்ட காலனிகளுக்கு சில சிறு சலுகைகள் தரவேண்டுமென்று அவர் போராடி சமரசத்தை ஏற்படுத்தினர். அந்தச் சலுகைகளும் 1854-ல் ரத்தாயின. அமெரிக்கா, பிரஷ்யா, மற்றும் காலனிகள் நஷ்டமடைந்து விட்டதாகப் பிரிட்டனிடம் குறை கூறியதை ஒட்டி, பேரரசின் நலன்கள் பாதிக்கக் கூடிய தாக இருந்ததாலும், கப்பல் போக்குவரத்து சட்டங்களை ரத்து செய்ய அரசாங்கம் முன்வந்தது. பீல், காப்டென் ஆகிய இருவருக்கும் பிடிக்கவில்லையெனினும், இரண்டு கட்சிகளின்

சம்மதத்தை பெற்று 1847-ல் பத்து மணி வேலை நேர சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆஷ்லி நீண்ட காலமாகவே முயற்சி செய்து வந்தார். இருப்பினும், 1850-ல் தான் மாற்று ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டதன் பேரில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 10½ மணி வேலை நேரமும், சனிக்கிழமைகளில் 7½ மணி நேரமும் வேலை செய்ய வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. 1847-ல் தான் இரவலர் சட்ட கமிஷனர்களின் அதிகாரங்கள் அமைச்சரின் கீழ் செயலாற்றுகின்ற ஒரு குழுவின ரிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. 1848-ல் சேட்விக்கின் போராட்டம் வெற்றி பெற்று, அதனால் பொதுநலச்சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி மத்திய குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் கீழ் பல குழுக்களை ஏற்படுத்த அந்த மத்தியக் குழுவிற்கு அதிகாரம் தரப்பட்டது. இவைகள் அம்மக்களின் சுகாதார நலன்களைக் கவனிக்க அமர்த்தப்பட்டன.

பீலின் மரணம் அரசாங்கத்திற்கு ஒரு பெரிய இழப்பாகும். டோரிகளின் குமுறல்களிலிருந்து, அமைதியை ஏற்படுத்த அவர் கருவியாக இருந்தார். அவர் இறந்த பிறகு பால்மர்ஸ்டன், ஏற்கனவே அரசியாருடன் இருந்த நல்ல உறவைக் கெடுத்துக் கொண்டார். ரஸலுக்கு சிறிய விஷயங்களையும் பெரிதாக்கிக் கொள்ளும் மனப்பான்மை இருந்தது. கருத்துகளை எப்படிப் புரிந்து கொள்வதென்பதே அவருக்குத் தெரியவில்லை. அவருடைய விருப்பு வெறுப்புகளெல்லாம் திட்டவட்டமானவை. திருச்சபையில், அவர் விருப்பப்படியே நியமனங்கள் செய்யப் பட்டன. உதாரணமாக, ஹெர்போர்ட் மதகுரு ஆட்சிப் பகுதிக்கு ஹேம்டனை நியமனம் செய்தது, ஆக்ஸ்போர்ட் இயக்கத்தைப் புறக்கணித்தது போலாகும். இதனால் ஆங்கிலகன்களின் மனோ பாவம் மாறவும் செய்தது. 1850-ல் வாடிகானிலிருந்து அதிகாரம் பெற்று, இங்கிலாந்தில் மதகுரு ஆட்சிப் பகுதி ஒன்று நிறுவப் பட்டது. அதன்படி கார்டினல் வைஸ்மேன் (Cardinal Wiseman) என்பவர் வெஸ்ட்மினிஸ்டர் மதப்பகுதியின் 'ஆர்ச்பிஷப்' என்று அழைக்கப்பட்டார். இந்த நியமனத்திற்கு ரஸல் விளக்கம் தருவ தற்காக ஒரு உபயோகமற்ற 'சமயப்பதவிச் சட்டம்[2]' (Ecclesiastical Titles Act) ஒன்றை இயற்றினர். (இந்தச் சட்டம் இருபது வருடங் களுக்குப்பிறகு ரத்து செய்யப்பட்டது.) இந்தச் சட்டத்தினால் பீலிட்டுகளுக்கும், ஐரிஷ்காரர்களுக்கும் அதிருப்தி ஏற்பட்டது. வனர்ச்சி அடையும் காலத்திற்கேற்ப விக்குகள், தங்களுடைய நெகிழும் தன்மையை இழந்துவிட்டனர் என்பதைப் பல வகை களிலும் காணமுடிந்தது. அவருக்கு மனமில்லையெனினும்

கேபினட்டின் கருத்திற்கிணங்க ரஸல் கவுன்டிகளில் வாக்குரிமையை விஸ்தரிக்கும் மசோதாவை எதிர்த்தார். ஆனால், மசோதா தோற்றுவிட்டது. பிப்ரவரி 1851-ல் அவர் பதவியை ராஜிநாமா செய்தார். ஆனால், பீலிட்டுக்கள் டெர்பியுடனும் (முன்னாள் ஸ்டான்லி) சேர மறுத்துவிட்டாகள்; காப்பு வரி. விவகாரத்தினால் உண்டான மனக்கசப்புதான் இதற்குக் காரணம். அதைப்போல சமயக் கொள்கையில் ஏற்பட்ட முரண்பட்ட கருத்துகளினால் விக்குகளுடனும் சேர அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதன்விளைவாக மீண்டும் ஒரு வருடம் வரையில் அவர் பதவியில் ஊசலாட வேண்டியிருந்தது. பாரிஸில் லூயி நெப்போலியன் திடீர்ப் புரட்சி செய்ததை பால்மர்ஸ்டன் ஆதரித்ததனால், அரசியாரின் வேண்டுதலுக்கிணங்க, டிசம்பர் மாதத்தில் அவரைப் பதவியிலிருந்து ரஸல் இறக்கிவிட்டார். ஆனால் 1852, பிப்ரவரி மாதத்தில் பால்மர்ஸ்டன் வேறு ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு பழிக்குப் பழி வாங்கிவிட்டார். அரசாங்கம் தல அளவில் சிறு இராணுவ அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற மசோதாவைக் கொண்டு வந்தது. இந்த மசோதாவை அவர் எதிர்த்து, அந்த இராணுவ அமைப்பை மத்திய அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரவேண்டுமென்று விவாதித்தார். அதன் விளைவாக ரஸல் தன் பதவியை விடவேண்டியதாயிற்று. அவருக்குப் பதிலாக சிறுபான்மை டோரி அரசாங்கத்தை டெர்பி அமைத்தார். அந்த அரசாங்கம் மிகவும் பலவீனமானது.

இந்தச் சமயத்தில் தடையில்லா வர்த்தகம் அமுலில் இருந்தது. நடுத்தர வகுப்பினர் ஆட்சி பீடத்தில் இருந்தனர். இரண்டாவது சீர்திருத்த மசோதா உருவாகிக்கொண்டிருந்தது. நிரந்தரமான அமைதி ஏற்பட்டுவிட்டது என்று காப்டென் தன் கனவு நனவாகும் காலம் நெருங்கிவிட்டதென்று கருதினர். அரசியார் திட்டவட்டமான அரசியல் அமைப்பின்கீழ் ஆட்சி செய்தார். இரண்டாவது புரட்சி அலைகளில் ஐரோப்பா மிதந்து கொண்டிருந்தது. இந்தக் கட்டத்தில் உள்நாட்டு அரசியலையும், 1815-ஆம் காலத்திற்கேற்ப மாற்றங்கள் அடைந்த நிலையையும் விட்டுவிட்டு, ஐரோப்பா. பேரரசு, அயர்லாந்து ஆகிய பகுதிகளில் பிரிட்டன், எப்படி முன்னேற்றமடைகிறதென்பதைப் பார்க்கலாம். இந்த வகையில், உள்நாட்டுத் துறையைப்போல அல்லாமல் இடர்ப்பாடுகளுடன்தான் இங்கிலாந்து முன்னேற வேண்டியிருந்தது.

சமகாலத்திய நிகழ்ச்சிகள்

1842 நேன்கிங் உடன்படிக்கை.
ஆப்கானிஸ்தானத்தில் தோல்வி.
ஸெர்பிய மணிமகுடத்தை, காரா ஜார்ஜ் விட்ச் (Karageorgevitch) அடைதல்.
பிரவுனிங் (Browning) எழுதிய 'டிராமடிக் லிரிக்ஸ், (Dramatic Lyrics).

1843 ஸ்காடிஷ் திருச்சபையில் பிளவு.
ஸ்விட்சர்லாந்தில் சோன்டர்பன்ட் (Sonder Bund) நிறுவுதல்.
மெக்காலே எழுதிய 'எஸ்ஸேஸ்' (Essays) ரஸ்கின் எழுதிய 'மாடர்ன் பெயின்டர்ஸ்' (Modern Painters)

1844 மோரி (Maori) போர்.
ராச்டேலில் நிறுவப்பட்ட கூட்டுறவு பண்டகசாலை.

1845 அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கும், மெக்ஸிகோவுக்கும் ஏற்பட்ட போர்.
ரோமன் திருச்சபையில் நியூமேன் சேருதல். வேக்னர் (Wagner) எழுதிய 'டேன்ஹாசர்' (Tannhauser).

1846 பயஸ் IX போப்பாகுதல்.
ஸ்பானிய திருமணங்கள்.
கிராகோவை (Cracow) ஆஸ்டிரியா கைப்பற்றல்.

1847 கேலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடித்தல்.
ஹெர்போர்டுக்கு, ஹேம்டன் பிஷப்பாக நியமனம் செய்யப்படுதல்.
மார்க்ஸ், எஞ்சில்ஸ் எழுதிய 'கம்யூனிஸ்டு மேனி பெஸ்டோ' (Communist Manifesto) எமிலிபிராண்ட் (Emily Bronte) எழுதிய 'வுதரிங் ஹைட்ஸ்' (Wuthering Heights) தேக்கரே (Thackeray) எழுதிய 'வேனிடிஃபேர்' (Vanity Fair).

1848 இரண்டாவது புரட்சி.
மெட்டர்னிக் (Metternich) கிஸாட் (Guizot) ஆகிய வர்களின் வீழ்ச்சி.
ஜே. எஸ். மில் (J. S. Mill) எழுதிய 'பொலிடக்கல் எகானமி' (Political Economy) முன்-ரேபிலைட் இயக்கத்தை அமைத்தல் ((Pre-Raphaelite Movement).

1849 மஜ்ஜினியும் (Mazzini) ரோமானிய குடியரசும். துருக்கியில் கோஸத் (Kossuth) அகதியாகப் போதல்.
மெக்காலே எழுதிய இங்கிலாந்து வரலாறு.
கிப்பன் வேக்ஃபீல்ட் (Gibbon Wakefield) எழுதிய 'ஆர்ட் ஆப் காலனிசேஷன்' (Art of Colonization).
சாப்பின் மரணம் (Death of Chopin).

1850 கார்டினல் ஆண்டோனலி, போப்பின் இராஜாங்க காரியதரிசி (Cardinal Antonelli, Papal Secretary of State).
ஆல்மட்ஸ் மாசபை (Convention of Olmutz).
பியட்மாண்டில் காவூர் அமைச்சராதல்.
டென்னிஸன் எழுதிய "இன்மெமோரியம்" (In Memoriam).
வோர்ட்ஸ்வர்த், பல்ஸாக், ஆகியவர்களின் மரணம்.

12. பிரிட்டனும் ஐரோப்பாவும் 1827–1852

"நமக்கு நிரந்தரமான நண்பர்களுமில்லை; நீடித்த எதிரிகளும் இல்லை; ஆனால், நமது நலன்கள் எப்பொழுதுமே நீடித்திருப்பவை" என்று கேனிங்கை ஆதரிக்கும் பால்மர்ஸ்டன் கூறுகிறார். கேனிங் இறந்தபிறகு சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு, அவர் வெளிநாட்டு விவகாரங்களை தன் ஆதிக்கத்திற்குள் வைத்திருந்தார். இந்தக் காலத்தில் 1815ஆம் ஆண்டு பழைய முறையும் மறைந்துவிட்டது. மெட்டர்னிக்கும் நமது கண்ணோட்டத்திலிருந்து மறைந்துவிட்டார். மனித இனம் மாறுதல் அடையும் பொழுது, நீடித்த நலன்களும் மாறுதல்கள் அடைகின்றன.

நமது விமோசனம் கடற்படையை வலிமையாக்குவதில்தான் இருக்கிறது. சம்தானமுறையில், மால்டா, மரு ஷி ய ஸ், ஹெலிகோலேண்ட் (Heligoland) கேப் (Cape) ஆகிய இடங்களை அடைந்ததனால், கடற்படையை வலிமையாக்குவது எளிதாகி விட்டது. இருப்பினும், இந்த வலிமையின் நோக்கம், வர்த்தகத்தையும், போக்குவரத்தையும், பாதிக்காமல் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. நமது மத்தியதர போக்கு வரத்துகளினால், கீழைச் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டோம். அதைப்போன்று, இந்தியாவின் தொடர்பினால் மேலும் தூரக் கிழக்கு பகுதிகளுடன் வர்த்தகம் செய்யப் பாதுகாப்பான வழிகளைத் தேடுவதற்கும் அவசியம் ஏற்பட்டது. இந்த விஸ்தரிப்பில், சிங்கப்பூர் (1819) மலாக்கா (1824) ஏடன் (1839) ஹாங்-காங் (1841) ஆகிய இடங்கள், நல்ல தளங்களாக பயன் பட்டன. மற்றும், நமது இரண்டாவது நீடித்த நலனைப் பாதுகாப்பதற்கு அந்த சக்திவாய்ந்த வல்லரசையும், அல்லது போருக்கு ஆயத்தமாகும் கூட்டு நாடுகளையும் சமாளித்து, அவைகளுக்கு இடம் கொடுக்காமலும், சமநிலைக்கொள்கை பாதிக்கப் படாமலும் செயலாற்றுவது ஒரு பெரிய சாதனையாகும். இந்த

வகையில் பால்மர்ஸ்டன் சூழ்நிலைக்கேற்ப கொள்கைகளை வகுத்துக்கொண்டார். கொள்கைக்கும், குறிப்பிட்ட சூறிக்கோள்களுக்கும் மதிப்பு தருகின்ற அளவிற்குப் பிரிட்டனும் தன்னை மாற்றி அமைத்துச்கொண்டது.

அமெரிக்கா, ஸ்பெயின், அல்லது கிரீஸ் ஆகிய நாடுகளில். புதுயுகப் பண்புகளான, விபரலிசம், தேசியம் ஆகியனவை வளர்ச்சி அடைவதற்கு கேனிங் ஆதரவளித்தார். 1830-ல் நடைபெற்ற இயக்கங்களில் இவைகளின் வளர்ச்சி சிறப்பாகப் பிரதிபலித்தது. இத்தாலியில் வேரூன்றியுள்ள ஆஸ்திரியா, மெட்டர்னிச்சிடன் ஆதிக்கங்கள் அகற்றப்படுவதற்கு இத்தாலிய மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். ஆனால், அக் கிளர்ச்சிகள் பலவீனமாக இருந்ததால், அவ்வாதிக்கங்களை அவ்வளவு விரைவாக அகற்ற முடியவில்லை. ஆனால், ஃபிரான்சில் லூயி பிலிப் பதவியேற்ற பின்பு, நடுத்தர வகுப்பினரின் அரசியல் அமைக்குட்பட்ட ஆட்சி நடைபெறத்தொடங்கியது. இது ஏறக்குறைய இங்கிலாந்திலுள்ள சீர்திருந்திய ஆட்சியைப்போன்று இருந்ததால், அந்த நாட்டுடன் ஒத்துழைக்கின்ற சாத்தியக்கூறுகள் அதிகமாக இருந்தன. ஃபிரான்சில் லூயி பிலிப் பதவியேற்றதால், பரம்பரை வல்லரசர்கள் ஆதிக்கம் ஒழிந்தது எனக் கருதலாம். இதன் உடனடியான, ஆனால் இரண்டாம்தர விளைவு பெல்ஜியத்தில் உண்டான கிளர்ச்சியில் காணமுடிந்தது. பெல்ஜியம் மக்கள் டச்சு அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, ஓரளவிற்கு ஆங்கிலோ, ஃபிரெஞ்சு உறவை பாதிக்கும் அளவு இழுத்துச்சென்றது. ஆனால், லண்டனில் ஃபிரெஞ்சு இராச்சியத் தூதுவராகப் பணியாற்றிய வயது முதிர்ந்த டேலிராண்டும், மற்றும் கிரே, பால்மர்ஸ்டன் ஆகியவர்களின் பொறுமையினாலும், ஏற்பட இருந்த இந்த முறிவு தவிர்க்கப்பட்டது. பிரிட்டனுடைய உதவியின்றி, லூயி பிலிப் அரியாசனத்தில் நீடித்திருப்பது முடியாது என்று அவர் உணர்ந்துகொண்டார். 1832–இறுதியில், நவீன பெல்ஜியம், ஹாலந்து ஆகிய நாடுகள் பிரிக்கப்பட்டன. இந்த விவகாரம் மிகவும் சிக்கலானது. ஃபிரெஞ்சு அரசனுடைய மகனை நிமோர்ஸ் (Nemours) இந்தப் புதிய நாட்டிற்கு அரசனை வேண்டுமென்று ஃபிரெஞ்சுக்காரர்கள் கோரினர். பெல்ஜியத்தைத் துண்டாடவேண்டுமென்ற எண்ணங்களைக் கிளப்பிவிட்டனர்; அல்லது எல்லையோரத்திலுள்ள எல்லைக்கோட்டைகள் வேண்டுமென்று கோரினர். இப்படியெல்லாம் நடக்கும் என்று பால்மர்ஸ்டன் நினைத்ததுண்டு. ஆனால், அவர் நினைத்தபடி நடக்கவில்லை. ஃபிரான்சுக்கு 'கேபேஜ் தோட்டம்' அளவிற்கு கூட இடம் கிடைக்குமா என்ற ஐயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால்

ஃபிரான்சிற்கு எதுவும் கிடைக்காமலும், அதே சமயத்தில், ஃபிரெஞ்சுப்படையை டச்சுக்காரர்களுக்கும், கிழக்கிந்திய வல்லரசர்களுக்கும் எதிராக ஏவிவிடுகின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டு விவகாரத்தில் நல்ல திறமையும் உறுதியும் வேண்டியிருந்தன. முடிவில் ஷெல்ட் (Scheldt), மியூஸ் (Meuse) எல்லையோரத்தில் பிரிவினை ஏற்பட்டு புதிய பெல்ஜியம் உருவாக்கப்பட்டது. இந்தப் பெல்ஜியத்தின் மகுடம் கோபர்க் (Coburg) நாட்டைச்சார்ந்த லியோபால்டுக்குத் (Leopald) தரப்பட்டது. இவர் சார்லட் இளவரசியின் முன்னாள் கணவன். பெல்ஜியத்தின் நடுநிலைமைக்கு ஐரோப்பிய வல்லரசுகள் உறுதி அளித்தன. 1839-க்குப் பிறகு டச்சுநாடு இந்தப் பிரிவினை நிபந்தனைகளை மீறி, லக்சம்பர்க்கை (Luxemburg) மீண்டும் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயன்றது. வல்லரசுகளும், இதை அனுமதித்துவிட்டன. ஜெர்மன் கூட்டாட்சியில் இது அங்கத்தினர் நாடாக அமைக்கப்பட்டபோதிலும், இதனுடைய ஆட்சியை ஆரஞ்சு பரம்பரையினர் மேற்கொண்டனர்.

போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய நாடுகளுடன் முதலாவது எட்வர்ட் ஆட்சி காலத்திலிருந்தே பிரிட்டன் உறவு வைத்துக் கொள்வதில் அக்கறை கொண்டிருந்தது. அடிக்கடி இந்த நாடுகளில் புரட்சியாளர்களுக்கும், எதிர் புரட்சியாளர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டு வருவதனால் ஏதாவது ஒருவகையில் சமரசம் ஏற்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த நாடுகளில் நிகழ்ந்த இராணுவ ஆட்சியும், அதைப் பின்பற்றி நிகழ்ந்த ஜெகபின் நிகழ்ச்சிகளையும் பார்க்கும்பொழுது இந்த நாடுகளில் தலையிடவேண்டிய அவசியம் இங்கிலாந்திற்கு ஏற்பட்டது. போனபார்டிஸத்தின் வெற்றி மறைந்த பிறகு, அங்கே மீண்டும் தளர்ந்துபோன பூர்போர்ன் முடியாட்சி மீட்கப்பட்டது. வாட்டர்லூ போருக்குப் பிறகு ஃபிரான்ஸ், பிரிட்டன்மீது பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தை அடைந்திருக்கிறதென்றும், மேலும், யூட்ரெக்ட் ஒப்பந்தத்தையும்மீறி–ஏனெனில் பூர்போர்ன் அரசபரம்பரையை இரண்டாகப்பிரித்து, ஏதாவது ஒரு திருமண உடன்பாட்டினால், ஸ்பெயினைத் தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஃபிரான்ஸ் கருதுவதாக பால்மர்ஸ்டன் நினைத்தார். பால்மர்ஸ்டன் பழைய பரம்பரையைச் சார்ந்தவராதலால் இப்படி நினைத்தார்போலும். 1834-ல் இவர் நான்கு நாடுகள் கூட்டுறவை, (பிரிட்டன், ஃபிரான்ஸ்; ஸ்பெயின், போர்ச்சுகல்,) ஏற்படுத்தினர். இவ்விதமாகச் செய்தது கிழக்கத்திய வல்லரசர்களை பயமுறுத்துவதற்காகவும், ஸ்பெயின் போர்ச்சுகல்லைச் சுதந்திரமாக விடுவதற்கு பிரான்சை சரி செய்யும்

நோக்கத்துடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்தார். இவ்விதமாக ஒப்பந்தம் செய்ததின் உடனடியான விளைவு, போர்ச்சுகல் பட்டத்திற்கு உரிமை கோரிவந்த டான் மைக்ல் (Don Miguel) போர்ச்சுக்கல்லை விட்டு உடனடியாக வேளியேறினர். ஸ்பெயினில் மற்றொரு நிகழ்ச்சி நடந்தது. ஸ்பெயின் நாட்டில் ஆட்சி புரிந்து வந்த இஸபெல்லா அரசியாரைப்பற்றி டான் கார்லோஸ் (Don Carlos) என்பவர் பல எதிர்ப்புகளையும், அவதூறுகளையும், கத்தோலிக்க சமய வெறியையும், மாகாணப் பிரிவுகளையும், அரசியாரின் அன்னை கிரிஸ்டியானைவைப்பற்றியும் பல வதந்திகளையும் கிளப்பி விட்டு, 1839 வரை அங்கே போர் நிகழ்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினர். நமது அரசாங்கம், மிகவும் வியக்கத்தக்க முறையில், இந்த விவகாரத்தில தலையிடாத தன்மையைப்பற்றி கருத்து தெரிவித்தது. போர்ச்சுகீசிய மாலுமிகளைக் கடற்படையில் சேர்த்துக்கொள்ளுமாறு அட்மிரல் நேபியருக்கு அனுமதி தரப்பட்டது. பிரிட்டிஷ் படையைத் திரட்டி டிலேஸி ஈவான்ஸ் (De Lacy Evans) என்பவரின் தலைமையில் அனுப்பியது. அந்நியரைப் படையில் சேர்க்கும் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது இந்தப் போரில் கலந்துகொண்ட பல பிரிட்டிஷ் தொண்டர்கள் ஸ்பானிய மலைகளில் உயிர்துறந்தார்கள். பால்மர்ஸ்டனின் அரசியல் அமைப்பைக் காப்பதற்காக அவர்கள் உயிர் துறந்தார்கள் என்று கூறப்பட்டது.

ஒரு பக்கத்தில் அமைதியும், மற்றொரு பக்கத்தில் அரசபரம்பரையின் புகழ் விஸ்தரிக்கப்படுவதிலும், மற்றொருபுறத்தில், போனபார்டே காலத்திலிருந்து வெற்றிகள் அடைந்து இப்பொழுது அமைதி குன்றியிருக்கும் நாட்டைக் கவனிப்பதா என்ற விவகாரங்கள் லூயி பிலிப்பை எதிர்நோக்கியிருக்கும்பொழுது மற்றொரு எதிரி நமது வெளிநாட்டுத்துறைக்கு நிறையத் தொல்லைகளைக்கொடுத்தார். சமாதான ஏற்பாடு செய்து புகழ்பெற்றிருந்த ஜார் அலக்சாந்தர் அரசனின் வாரிசான வலையாத நிக்கலஸ் என்பவர்தான் அவர். கிரீஸ் வாழ்வதற்கு வாய்ப்பளித்தது ரஷ்யா. அதனுடைய பிரதிநிதிகள், ஸ்லாவ் இனப்பற்றை வளர்த்தார்கள். ஸெர்பியாவிலும், பல்கேரியாவிலும் ஸ்லாவ் சமயத்தை வளர்த்தார்கள். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே காஸ்பியனுக்கு அப்பால் ஜார்ஜியாவையும், ஆர்மீனியாவையும் அவர் கைப்பற்றினர்.. பாரசீகத்தில் உள்ள பிரிட்டிஷ் செல்வாக்கை அவர் குலைத்துவிட்டார். ஆக்ஸஸிலுள்ள கான் பகுதிகளுக்கும், கிவாவுக்கும் ஒரு பெரிய திரைபோட்டு மறைத்து விட்டார்கள். ஆரம்ப 'முப்பதுகளில்' பாரசீகத்தைத் தூண்டிவிட்டு ஆப்கானிஸ்தானத்தின்மீது படையெடுக்க ஏவினர்,

கேனிங்கின் மரணத்திற்குப் பிறகு, ரஷ்யா கான்ஸ்டான்டி நோபிளில் நல்ல ஆதிக்கமடைந்திருந்ததனால், இந்தியாவிற்கும் அதிகமாக ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. துருக்கிக்கும், அதனுடைய சிற்றரசனை எகிப்தைச் சார்ந்த மகமது அலிக்கும் நேர்ந்த போரில் ரஷ்யா தலையிட்டு துருக்கி சுல்தானைக் காப்பாற்றியது. அதனால், துருக்கியுடன் யுன்கேயர் ஸ்கெலஸி (Unkair Skelessi) என்ற உடன்படிக்கையைச் செய்துகொண்டது. ரஷ்யாவின் வேண்டுகோளுக்கிணங்க, அந்த உடன்படிக்கையில் இரகசிய நிபந்தனை ஒன்று போடப்பட்டது. அதன்படி எல்லா அந்நிய போர்க்கப்பல்களும் டார்டனல்ஸில் செல்லக்கூடாது என்பதே அந்த நிபந்தனையாகும்.

ரஷ்யாவின் உடனடியான நோக்கங்களைப் பால்மர்ஸ்டன் சிறிது மிகைப்படுத்தினர். அதைப்போன்று, மகமது அலியும் மெக்காவையும், அதற்கு வடக்கேயுள்ள ஈராக்கு வரையிலும் சேர்ந்து அராபிய பேரரசை நியமிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருக்கிறது என்பதையும் பால்மர்ஸ்டன் மிகைப்படுத்தியே கூறினர். எப்படியிருந்தபோதிலும் நிலைமை அபாயகரமாகத்தானிருந்தது. ரஷ்யாவின் சாதனைகளும் சிறப்பாக இருந்தன. 1839-ல் மீண்டும் துருக்கியர்களும், மகமது அலியும் போரில் இறங்கினர். கலகக்காரர்களின் படை சிரியாவிலிருந்து முன்னேறி துருக்கியப் படையை விரட்டி அடித்தது. இதனால் வருங்கால ஏற்பாட்டை ரஷ்யாதான் செய்துவைக்கப் போகிறதா அல்லது சிரியாவிலும் எகிப்திலும் ஏற்கனவே ஃபிரான்ஸ் கண் ணோட்டம் செலுத்தி வருவதானால், அதன் எதிர்காலத்தை ஃபிரான்ஸ்தான் நிர்ணயம் செய்யுமா, அல்லது இரண்டு நாடு களும் ஒன்று சேர்ந்தே நிர்ணயம் செய்யுமா என்ற பிரச்சினை இருந்தது. ஆனால், அவருடைய விருப்பப்படியே, துருக்கியைப் பாதுகாப்பது என்றும், அதற்கான வல்லரசுகளின் சம்மதத்தைப் பெறுவதென்றும் முடிவு செய்தார். அல்ஜியர்ஸ், மொராக்கோ, டுனிஸ் பகுதிகளில் ஃபிரான்ஸ் ஆக்கிரமிப்பு நடத்தி வருவதையும் அவர் கவனித்தார். அதே சமயத்தில் ஜலசந்தியில் ஏற்பட் டுள்ள ரஷ்யாவின் ஆபத்தை தவிர்ப்பதற்கும் ஒரு முடிவு காண தீர்மானித்தார்.

அக்காலத்தில் ஏற்பட்டுள்ள சில அபாயங்களை முன்னிட்டு தந்திரமாக செயலாற்றவேண்டியிருந்தது. இந்தப் பிரச்சினையில் அபாயங்களும், பின்பு, எதிர்காலத்தில் ஏற்படப்போகின்ற பலத்த கண்டனங்களையும் அவர் நினைத்துப் பார்த்தார். துருக் கியைப் பாதுகாப்பதைவிட, எகிப்தின் ஆதரவை எளிதாகப்

பெற்றிருக்க முடியும். ஆனால், பால்மர்ஸ்டன் எதிர்காலத்தைக் குறித்து கண்மூடித்தனமாக இருந்துவிட்டார் என்றே கூற வேண்டும் அவருடைய முதல் கொள்கை, ஒரு பொதுவான யுத்தத்தை தவிர்ப்பதேயாகும். இதையொட்டி நான்கு வல்லரசுகள் ஒப்பந்தம் ஜூலை 1840-ல் ஏற்பட்டது. பிரிட்டனும் மற்ற மூன்று கிழக்கத்திய முடியாட்சி நாடுகளும் இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. துருக்கி சீர்குலைவது ஆஸ்திரியாவுக்குப் பிடிக்கவில்லை. அப்படி சீர்குலைந்தால், ரஷ்யாவுக்கு அனுகூலம் ஏற்படும் என்று அது பயந்தது. மற்ற லிபரல் நாடுகளுக்குள் ஒற்றுமையைக் குலைத்துவிட்டதாக ரஷ்யா மகிழ்ச்சி அடைந்தது. சமாதான நிபந்தனையை ஃபிரான்சின் முன்பு சமர்ப்பித்த போதிலும், ஃபிரான்சின் ஆதரவு மகமது அலியின் பக்கமே இருந்தது. மற்றும் அதற்கும் வேண்டிய செல்வாக்கை லெவாண்டில் தேடிக்கொள்ளப் பார்த்தது. அதனால், இந்தச் சாமாதான மகாநாட்டில் கலந்துகொண்ட தையர்ஸ் (Thiers) கண்டிப்பாக போர் வேண்டும் என்று அறிவித்தார்.

மற்றவர்களுடைய எண்ணங்களை மதிப்பிடும்பொழுது பார்மர்ஸ்டன் வழக்கமாகத் தவறுவதுண்டு. ஆனால், இந்த ஆண்டில் மட்டும் வல்லரசுகள் சக்திகளை அதிர்ஷ்டவசமாக நன்கு புரிந்து கொண்டார். மகமது அலியிடம் ஒன்றும் பயமில்லை என்பதை உணர்ந்து, அவருடைய கடல் போக்குவரத்துகளைத் துண்டித்தால் தன்னிலே வழிக்கு வருவதுமட்டுமின்றி, லூயி பிலிப்பும் சமாதானத்தை நாட முன்வருவார், என்று பால்மர்ஸ்டனுக்குப் பட்டது. கேபினட்டில் ஒரு பகுதியினர் இவரது கொள்கைகளை எதிர்த்தனர். ரஸல் இந்தக் கேபினட்டில் எப்படிச் சேருவது என்று தவித்துக்கொண்டிருந்தார். அதிகாரிகள், பத்திரிகையாளர்களுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தனர். இதில் பழைய சூழ்ச்சிக்காரியான பாரிசைச் சார்ந்த இளவரசி லிவனுக்கும் பங்குண்டு. இவ்வளவு எதிர்ப்புக்குப் பிறகும், பால்மர்ஸ்டன் சரியான கொள்கையைத்தான் பின்பற்றுகிறார் என்று தெரிந்து கொண்டனர். அக்டோபரில், பிரிட்டிஷ், துருக்கியப் படைகள், பெய்ரூட் (Beyrout) ஏக்கர் (Acre) ஆகிய இடங்களை ஆக்கிரமித்தன. தையர்ஸ் பதவியைவிட்டு விலகி, கிஸாட்டிடம் பொறுப்பை அளித்தார். ஜூலை 1841-ல் சமாதானம் ஏற்பட்டது. எகிப்தை அவர்கள் விட்டுவிட்டார்கள். ஆனால் மகமது அலியின் பரம்பரை நாடான ஸிரியாவில் இன்னும் சமாதானம் ஏற்படப் பல தடைகள் இருந்தன. இருப்பினும் ஏற்கனவே செய்துகொள்ளப் பட்ட யுன்கியர் ஸ்கெலஸி (Unkiar Skelessi) உடன்படிக்கையை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டது. ஆனால்,

அதில் காணப்பட்ட சில குறைபாடுகள் அகற்றப்பட்டன. அதன் படி பழைய 'ஆட்டமான் பேரரசு' நீலத்தது. சமாதான காலத்தில் மட்டும் ஜலசந்தியில் போர்க்கப்பல்கள் போகக் கூடாது என்று நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அந்த ஆண்டில் விக் அரசாங்கம் விழுந்தது. பால்மர்ஸ்டனின் மதிப்பு ஐரோப்பாவில் பெருகியது. அத்துடன் பிரிட்டிஷ் மக்களிடையேயும் அவருடைய செல்வாக்கு அதிகமாகியது. அவர் சிறிது கடுமையான மொழியைப் பயன்படுத்துவார். மற்ற நாடுகளிடத்தில் சிறிதும் இரக்கமே காட்டமாட்டார் என்ற சில குறைகள் அவரிடம் இருந்தன. அவருடைய மற்ற குறைகளுக்கு, பிரிட்டிஷ் மக்கள் பொறுப்பாளிகளாவர். மார்னிங் கிரானிகல் (Morning Chronicle) பத்திரிகையிலும், 'தி டைம்ஸ்' (The Times) என்ற பத்திரிகையில் வருகின்ற அபர்தீனின் கருத்துகளும், மற்றும் அவர் கொள்கைகளைப் பற்றிய விமர்சனங்களும், பல ராஜதந்திரிகளும், பால்மர்ஸடனையும் மிஞ்சி விட்டார்கள் என்பதைக் காட்டுகின்றன. அவருக்கு மனிதாபிமானம் இல்லை என்று சொல்வது தவருகும். அடிமை வர்த்தகத்தை அகற்ற அவரைப்போன்ற எந்த அமைச்சரும் அவ்வளவு பாடுபடவில்லை. மேலும் வெளிநாடுகளில் அவருக்கிருந்த கெட்ட பெயர், பெரிதும் இந்த மனிதாபிமான சிந்தனையினால் ஏற்பட்டதே எனக் கூறலாம். லண்டனிலுள்ள சில கட்டை வண்டிக்காரர்கள் மிகவும் கொடுமையான ஆஸ்திரியாவின் தளபதி ஹெய்ன (Haynau)வைச் சேற்றிலே தள்ளிப் புரட்டும்பொழுது, அவர் கைதட்டி ஆரவாரம் செய்தார். அவரை 'போர் விரும்பி' என்று சொல்வதிலும் நியாயமில்லை. பெல்ஜியம், இத்தாலி, இரண்டாவது ஃபிரெஞ்சு குடியரசு ஆகிய நாடுகளிடம் நடந்து கொண்ட முறையிலிருந்து அவர் போரை விரும்பவில்லை என்பது தெரியவரும்.

அவருடைய தனிவாழ்வில் காணப்பட்ட சில குறைகளைத் தவிர, மற்ற வகைகளில் அவரைச் சிறந்த அரசியல் விரகர் என்று சொல்லலாம். நீண்ட காலம் பதவியிலிருந்தாலும், சொந்த விருப்பு வெறுப்புகளை உடையவருமான அவர், அவைகளையே நற்குணங்களாகவும் ஒரு சமயத்தில் கருதுவதுண்டு. அவர் தொழிற்பயிற்சி பெறும்பொழுதிருந்தே ஃபிரான்சை நன்கறிந்திருந்தார். புரட்சிக்கு காரணம் ஃபிரான்ஸ் என்றும், அதற்குப் பிறகு மீட்கப்பட்ட பூர்போர்ன் முடியாட்சியும் அந்த அரசர்களுடைய கொட்டத்தை அடக்க மார்ல்பரோவும், சேதாமும் என்ன முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்பதும் அவருக்கே

தெரிந்ததே. அவர், அக்காலத்தியவர்களைப் போன்றே அரசியல் அமைப்புக்குட்பட்ட அரசாங்கத்தையே பெரிதும் விரும்பினர். அரசர்களைப்பற்றியோ, அல்லது மதகுருமார்களைப் பற்றியோ, அவர் சிறிதும் கவலைப்படவில்லை. அவருடைய துணிச்சலான செய்கைகளுக்கும், சக்திக்கும் காரணமாக இருந்தது, தேசிய ஆர்வமேயாகும். ஒரு சமயம் அவர் காமன்ஸ் சபையில் கூறியதாவது, "நமது கடமை மக்களை அடிமைப்படுத்துவதல்ல; ஆனல், அவர்களை சுதந்திரமான மக்களாக்குவதே". "நாம், ஒரு நல்ல சமுதாய, அரசியல் நாகரிகத்தில் தலை சிறந்தவர்களாக விளங்குகிறோம். இது நான் வெறும் புகழ்ச்சிக்காக மட்டும் சொல்வதல்ல" என்று கூறினர்.

இந்தச் சிறப்பான பிரிட்டிஷ் சுதந்திர அரசாங்க முறையை, சிறு நாடுகளும், பெரிய நாடுகளும் பின்பற்றின. ஆனல், சில சமயங்களில் கடுமையான மரபுரிமைகளையும் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக, 1840-41-ல் நடந்த முதல் சீனப்போர், அவருடைய தவறுகளையே எடுத்துக் காட்டி பகைவர்களிடம் இது 'நியாயமான அபினிப் போர்' என்று கூறினர்கள். கிழக்கத்திய மக்கள் நலன்களுக்காகத்தான் இந்தப் போரில் ஈடுபட வேண்டியிருந்தது என்றும் கூறினர்கள். அபினி வியாபாரத்தில் வரும் லாபம் ஒரு பக்கம் இதற்குக் காரணமாக இருந்தபோதிலும், 1833-ல் வியாபாரத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களே இப்போர் ஏற்பட முக்கிய காரணமாக இருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி சீன வர்த்தகத் தனி உரிமைகளை இழந்து விட்ட பிறகு, கடத்தல் முறை வியாபாரம் செய்துகொண்டிருந்த சிறு கம்பெனிக்கு இந்த வியாபார உரிமை அரசாங்கத்தால் தரப் பட்டது. ஐரோப்பியர்கள் சீனு ஒரு நாடே அல்ல என்று அப் பொழுது கருதினர்கள். காண்டன் வர்த்தகக் குழுவின் மூலமாகத் தான் அந்நிய வர்த்தகர்கள் வியாபாரம் செய்யவேண்டுமென்றும், அல்லது இராச்சிய உறவுகளை வைத்துக்கொள்ளக்கூடாதென்று கூறுவதும், பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கு பல தடைகளை ஏற்படுத்து வதும் போன்ற சில முட்டுக்கட்டைகளை 19-வது நூற்றாண்டில் சீனு விதிக்கமுடியாது, இந்தியாவிலிருந்து வருகின்ற அபினை, சீனர்கள் ஆட்சேபித்தார்கள். சீனுவிலேயே விளைகின்ற அபினி யினல், சீனவர்த்தகர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நல்ல லாபம் இருந்ததால், அவர்கள் வெளிநாடுகளிலிருந்து அபினியை இறக்கு மதி செய்யக்கூடாதென்று நிபந்தனையைச் சமரச உடன்பாட்டில் சேர்த்துக் கொண்டார்கள். மேலும், இந்தப்போரினல் பலத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டதென்றும், அதனல் பால்மர்ஸ்டன் சில உறுதிமொழிகளை சீனு அரசாங்கத்திடம் கேட்டார். இதைப்

பின்பற்றி 1832-ல் பதவியேற்ற அடுத்த கேபினட் நாங்கிங் உடன் படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. அந்த உடன்படிக் கையின்படி ஹாங்காங் பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், ஹாங்காங் உட்பட ஐந்து துறைமுகங்களில் அந்நிய வர்த்தகம் தடையில்லாது நடைபெறுவதற்கும் ஏற்பாடாகியது. அவர் கேஸல்ரேயின் முக்கிய சீடர். இதே பதவியில் 1828-30 வரை இருந்திருக்கிறார். அவருடைய கொள்கைகளில் இறுமாப்பு கலந்திருந்தது. ஆனல், அமைதியை நிலை நாட்டுவதில் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. ஆனல், அவரால் எதையும் முடிவு செய்ய முடியவில்லை. இளவரசி லீவன் (Lieven) போன்ற அலுவல் மிகுந்தவர்களிடம், அவருடைய இரகசியங்களை அம்பலப் படுத்திவிட்டார். இளவரசி லீவன், அவளுடைய சூழ்ச்சி மிகுந்த கடைசி காலத்தில் கிஸாட்டுடன் வசித்து வந்தாள். கீழைச் சிக்கலுக்குப் பிறகு ஃபிரான்சுடன் இருந்த உறவு சிறிது கெட்டி ருந்தது. அதனல் கேபினட் அங்கத்தினர்கள் ஃபிரான்சுடன் நல்லுரவு ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினர்கள். ஆனல், அவர் டீன்ஃபிரான்சின் மீது அவ்வளவு நம்பிக்கை வைப்பதை, பீலும், வெலிங்டனும் ஆதரிக்கவில்லை. ஃபிரான்சின் மீது அவர்களுக்குச் சந்தேகம் இருந்து கொண்டுதான் வந்தது. அதனல் தேசியப் பாதுகாப்புத் திட்டம் வேண்டுமென்று அவர்கள் கூறினர்கள்.

அதனல் மனமார்ந்த நேச உடன்படிக்கையும் (Entente Cordiale) அரச குடும்பத்தினரின் விஜயங்களும், கோபர்க்-பூர் போர்ன் திருமணங்களும், கிஸாட்டிடம் அபர்டீன் வைத்திருந்த மதிப்பும் நாளடைவில் மறைந்து விட்டன. மத்தியதரைக் கடலில் ஃபிரெஞ்சுக் காரர்களின் ஆதிக்கத்தை நிறுவ முயற்சி செய் வதனலும், மெட்டர்னிக்குடன் அதிகத் தொடர்பு வைத்துக் கொண்டதனலும், ஆங்கிலோ-ஃபிரெஞ்சு உறவு பாதிக்கப் பட்டது.

மேலும் நாம் நியூஸீலந்தில் குடியேறியதையும் அவர்கள் விரும்பவில்லை. அவர்களுடைய காப்பு வரிகளும், யுத்த தளவாட அபிவிருத்தியும் உறவைப் பாதித்துவிட்டன. தாக்தி (Tahiti)-ஐ கைப்பற்றியும் பிரிட்சார்ட் என்ற சமய பிரச்சாரகனைக் கைது செய்தும் 1843-4-ல் உறவை அவர்கள் அதிகமாகக் கெடுத்துக் கொண்டனர். பிரிச்சார்ட் என்பவர் சுதேச அரசர்களை, புராடஸ் டன்ட் சமயத்தைத் தழுவச் சொல்லி பிரிட்டிஷாரின் ஆதரவைத் தேடிக்கொள்ள தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். ஃபிரெஞ்சுக் காரர்கள் இந்தத் தீவை அவர்களிடமே வைத்துக்கொண்டார்கள்.

இருப்பினும் மற்ற பிரச்சினைகள் ஒருவிதமாக ஒழுங்கு படுத்தப்பட்டன. ஆனால், நேச உடன்படிக்கையைக் கெடுத்தது ஸ்பானிய திருமணங்கள்தான் என்று சொல்லவேண்டும். ஸ்பெயின் நாட்டின் பொலிவு மிக்க அரசி இஸபெல்லாவுக்கும், அவளுடைய தங்கைக்கும், சரியான மணமகன்களைத் தேர்ந்தெடுப் பதில் சில சிக்கல்கள் கிளம்பின. இஸபெல்லாவுக்குப் பின்பு, ஸ்பானியப் பட்டத்திற்கு வரவேண்டியவள் அவளுடைய தங்கையே. கோபர்க், பூர்போன் அரச குடும்பங்களிலிருந்து இந்தப் பெண்களைக் கட்டிக் கொள்வதற்கு பலத்த போட்டி ஏற் பட்டது. ஸ்பெயின் நாட்டிலேயே இவர்களுக்கு எதிராகப் பல குழுக்கள், இருந்தன. அவை வெளி நாட்டு தூதுவர்களுடன் சேர்ந்துகொண்டு வதந்திகளைக் கிளப்பிக் கொண்டிருந்தன. இதில் பிரிட்டிஷ்காரர்களின் பங்கும் உண்டு.

அபர்டீன் இந்த விவகாரத்தில் நல்லெண்ணத்துடன்தான் நடந்து கொண்டார். ஆனால் கொள்கை இறக்கத்தைக் குறித்து பால்மர்ஸ்டன் குறிப்பிடும்பொழுது, ஸ்பெயின் விருப்பப்படி இந்தத் திருமணங்களைச் செய்து கொள்ளட்டும், ஆனால் ஃபிரான்ஸ் வேண்டுமென்றாலும் முயற்சி எடுக்கட்டும் என்றும், ஆனால் கோபர்க் அரசபரம்பரையிலிருந்து வருகின்ற மண உறவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினர். 1845-ல் அரசி ஸ்பானிய அரசபரம்பரையிலிருந்தாவது அல்லது நியாபாலிடன் பூர்போர்ன் பரம்பரையிலிருந்தாவது திருமணம் செய்து கொள் ளட்டும் என்று முடிவாகியது. இந்தத் திருமணத்தினால் குழந்தை கள் பிறந்த பிறகு அரசியாரின் தங்கைக்கும் பிரெஞ்சு அரசனின் மகன் மான்ட்பென்ஸியாருக்கும் (Montpensier) திருமணம் நடக்க சம்மதம் தரப்பட்டது. ஏதாவது பிரெஞ்சு இளவரசன் ஸ்பானிய பட்டத்திற்கு உரிமை கோருவதற்கு முன்பே, அவ்வித மான ஆபத்து ஏற்படும் என்று ஆபர்தீனும் உணராமலில்லை; அவர் பதவியைவிட்டு விலகும் முன்பே கிஸாட் இவ்விரு திரு மணங்களையும் நடத்துவதென்று முடிவு செய்தார். பால்மர்ஸ்டன் மீண்டும் பதவிக்கு வந்தவுடன் இந்த முடிவைத் துரிதப்படுத்த முயன்றார். இதற்காக ஸ்பெயினில் உள்ள ஒரு குழுவினருடன் அவர் தொடர்பு வைத்துக் கொண்டார். பல கடிதங்களும் எழுதப்பட்டன. புல்வர் (Bulwer) என்பவர் இந்த விவகாரத்தை முடிப்பதற்கு உதவி செய்தார். 1846-ல் ஃபிரான்ஸ் அளித்த பல உறுதிமொழிகளைப் புறக்கணித்துவிட்டு, அரசியாருக்கு அவ ளுடைய மைத்துனரான டான்பிரான்சிஸ் (Don Francis) என்பவ ரையும் அவருடைய தங்கைக்கு மான்ட் பென்ஸிரையும் (Mont Pensier) ஒரே சமயத்தில் திருமணம் செய்து வைத்தார்கள்.

இதனால் பால்மர்ஸ்டனுக்கும், விக்டோரியா அரசியாருக்கும் அளவுக்கு மீறிய கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டது. நேச உடன் பாட்டின் முறிவை கிழக்கத்திய அரசர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஆஸ்திரியா, போலந்தின் கடைசி எச்சமான கிராகோ குடியரசை (Republic of Cracow) இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கிழக்கத்திய அரசர்கள் ஏற்பாடு செய்தனர். கத்தோலிக்க, புராடஸ்டண்டு கேன்டன்களிடையே நிகழ்ந்த 1847-வது சோண்டர் பண்ட் (Sonder Bund) போரினால் சுவிட்சர்லாந்து கூட்டாட்சியே முறிந்துவிடும் நிலையை பால்மர்ஸ்டன் தடுத்து நிறுத்தினர். ஆனால், வழவழப்பான தன்மையுடைய வரும், நன்றி மறந்தவருமான கிஸாட், தன்னுடைய குழியைத் தானே பறித்துக்கொண்டார். 1848-ல், உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டதனால் ஆர்லியன்ஸ்டு ஆட்சி ஆட்டம் கண்டுவிட்டது. அரசனும், மந்திரியும் பிரிட்டனில் தஞ்சம் புகுந்தனர். ஆனால், ஏற்கனவே பிரிட்டன் அவர்களைத் தட்டிக்கழித்துவிட்டது.

இப்பொழுது பிரிட்டன் வல்லரசுகளின் ஆதரவையும், ஃபிரான்சின் உறவையும் இழந்து, தனியாக நிற்க வேண்டியிருந்தது. இரண்டாவது புரட்சி அலையில் அகப்பட்டுக்கொண்டிருந்த ஐரோப்பாவின் நிலைக்கேற்பவும், பிரிட்டன் தன்னை அமைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதனால், இரண்டாவது ஃபிரெஞ்சு பேரரசும், புதிய இத்தாலிய அரசும் கைவிடப்பட்டன. 1848–9ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த குழப்பத்திற்குப் பிறகுதான் இதன் விளைவுகள் தெரிந்தன. இந்த இரண்டு ஆண்டுகளில், உள்நாட்டுப்போர் பாரிஸ் நகரையே பாழ்படுத்திவிட்டது; வியன்னாவிலும், ஹங்கேரியாவிலும் நிகழ்ந்த கிளர்ச்சிகள் மெட்டர்னிக்கின் திட்டத்தை அடியோடு தரைமட்டமாக்கிவிட்டன; வைமார் பாராளுமன்றம் பிரஷ்ய அரசை அஞ்சச் செய்தது, இத்தாலியக் கிளர்ச்சியைச் சேவாய் தலைமை தாங்கி நடத்தியது; வாட்டர்லூவில் வெற்றிபெற்ற நாடுகளில் ஜார் வல்லரசு மட்டுமே ஐரோப்பாவில் தப்பித்தது. மாஜினி (Massini), லூயி நெப்போலியன் போன்ற நாடு கடத்தப்பட்டத் தலைவர்கள் லண்டனைவிட்டு வெளியேறி 1815ஆம் ஆண்டில் ஏற்பாட்டை கிழித்தெறியப் புறப்பட்டுவிட்டனர். இந்தக் குறுகிய காலத்திற்குள் முன்னேற்ற மனப்பான்மையுடைய போப் பயஸ் IX. சமயத்தையும் தேசியத்தையும் சமரசம் செய்ய முயற்சி செய்வார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

இவ்விதக் கிளர்ச்சிகள் நடைபெறும்பொழுது, வெளிநாட்டு விவகாரங்கள், அதிர்ஷ்டவசமாக விக் கட்சியிடம்தான் இருந்தன.

அரசியாருடைய ஆதரவும், அரசியாரின் கணவருடைய ஆதரவும் ஆஸ்திரியாவின் பக்கமே இருந்தன. ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட ஏற்பாடுகளை அவர்கள் கலைக்க விரும்பவில்லை. இவர்கள் கொண்டிருந்தக்கருத்தையே 1852-ல் டெர்பியின் வெளி நாட்டுக் காரியதரிசியான மால்மஸ் பெரியும் (Malmes Bury) கொண்டிருந்தார். ஆனல், டிஸ்ரேலியின் கருத்து மாறுபட்டி ருந்தது. தீவிரவாதிகளும், சாதாரண மக்களும் இவர்களுடைய கருத்துக்கு நேர்மாருகக் கருத்து கொண்டிருந்தனர். பால்மர்ஸ் டனும், ரஸலும் ஒரு விதத்தில் ஒரே எண்ணத்தைக் கொண்டி ருந்தனர். ஆனல், எல்லா விஷயங்களிலும் இவ்விதமான ஒரே கருத்தைக் கொண்டவர்களல்லர். அவர்கள் இருவரும் சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற கொள்கையுடைய வர்கள் பிரிட்டனில் உள்ள உரிமைகளைப் போல மற்ற நாடு களிலும் ஏற்பட்டால், அமைதி ஏற்படும் என்று அவர்கள் நினைத் தார்கள். அதன் அடிப்படையிலேயே தான், நாம் சமரசம் செய்து வைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று கருதினர். 1847-ல் மின்டோ தலைமையில் அனுப்பப்பட்ட தூதுகோஷ்டியினர் சீர்திருந்திக் கொண்டிருந்த போப்புக்கு ஆதரவளிக்க சென்றனர். ஃபிரெஞ்சு குடியரசைக் காலம் கடத்தாது அங்கீகரித்தனர். ஃபிரான்சிலும், இத்தாலியிலும் முன்னேற்றக் கொள்கைகளைப் பாதுகாக்கச் சொல்லி ஆஸ்திரியாவுக்கு எச்சரிக்கை செய்தனர். வடக்கு இத்தாலியிலிருந்து ஆஸ்திரியா காலி செய்துவிட்டு, அதற்குப் பதிலாக பால்கன் பகுதியில் ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்யும் என்று பால்மர்ஸ்டன் நம்பினர். பலமிக்க ரஷ்யாவைத் தடுக்க ஆஸ்திரியா-ஹங்கேரி நாட்டை நிறுவ வேண்டியது அவசியம் என்று கருதினர். இதன் விளைவாக கோஸத்தின் (Kossuth) தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஹங்கேரிய கிளர்ச்சியை அவர் ஆதரிக்கவில்லை. ஸ்லாவ் மக்கள் அடக்கப் படுவதைவிட மேகயார்களின் (Magayar) ஆதிக்கமே மேல் என்று கருதினர்.

இந்தப் புரட்சிக் கனல் தணியும் வரை அவர் பதவியில் இருந்தார். அவருடைய துறையில் நடத்துகின்ற எதேச்சதி காரமும், பலமான கண்டனங்களும், செயல்முறைகளும் அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல பகைவர்களைத் தேடிக் கொடுத்தன. உல்விச்சிலிருந்து சென்ற யுத்த தளவாடங்களைச் சிலியன் கலகக்காரர்களுக்கு அனுப்பி வைத்தார். மற்ற நாடு களின் அமைச்சர்களையும், பிரிட்டனின் இராச்சிய தூதுவர் களையும், அடிக்கடி எச்சரித்து கடிதங்கள் எழுதினர். ஆங்கிலேயக் குடிமகனை டான்பேஸிபிகோ (Don Pacifico)

என்ற ஜிப்ரால்டர் யூதனுக்கு கிரேக்க அரசாங்கம் கடன் தரவேண்டியிருந்தது. அந்தக் கடனை வசூலிக்க அவர் ஒரு கடற்படையை அனுப்பி முற்றுகையிடச் செய்தார். ஒரு சாதாரண ஆங்கிலேயக் குடிமகனுக இருந்தபோதிலும், அவனையும் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஆங்கிலேயக் கொடிக்கு ஏற்படுகிறது என்றும், இதுதான் 'சிவிஸ் ரோமனஸ்' (Civis Romanus) எனப்பாராளுமன்றத்தில் ஆத்திரமடைந்திருந்த அங்கத்தினர்களுக்குச் சமாதானமாகச் சொன்னர். அவருடைய பழைய பகைவர்களெல்லாம், லூயி பிலிப், கிஸாட், இளவரசி லிவன் மெட்டர்னிக் ஆகியோர் லண்டனைச் சுற்றிலும் அகதிகளாக வாழ்கிறார்கள். ஹங்கேரியின் அகதிகளைத் துருக்கி அனுப்ப முடியாதென்று கூறிவிட்டதனாலும், கோஸத்தின் கிளர்ச்சியில் அவருக்கு அக்கறையிருப்பதாகக் காட்டிக் கொண்டார். அதனால் மக்களுடைய ஆரவாரமும், ஆதரவும் அவருக்குக் கிடைத்தன. டிசம்பர் 1851-ல், கேபினட் முடிவு எடுப்பதற்குள் இவர் லூயி நெப்போலியனின் திடீர் புரட்சியை ஆதரித்து பிரெஞ்சு இராச்சிய தூதுவருக்கு எழுதிவிட்டார். அதனால் அச்சமும், பகைமையும் ஏற்படும் வாய்ப்புகள் ஏற்படவே, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அவருடைய தவறுகள் ஏராளமாக இருந்த போதிலும், அரண்மனையின் எதிர்ப்பு மட்டும் இல்லாதிருந்தால், இன்னும் அவர் பதவியில் நீடித்திருக்க முடியும். இவர் பதவியிலிருந்து விலகுவதற்காக, அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவே காத்துக் கொண்டிருந்தனர். இவர்மீது தவறான எண்ணம் ஏற்படுவதற்குக் காரணமே, இவர் முடிவுகளை எடுத்தபிறகு, அவற்றை அவர்களுக்குத் தெரிவிக்காமலேயே செயலாற்றி விடுவார் என்பதேயாகும். அல்லது அரசிடமிம் ஒப்புதல்பெற்று வந்த கடிதங்களிலும் அவர் மாற்றங்களைச் செய்தார். ஆனால், அதைவிட மிகவும் பெரிய வேறுபாடும் இருந்தது. கொள்கைக்கும், பதவிக்கும் உள்ள வேறுபாடுதான் அது. பெல்ஜியத்தைச் சார்ந்த வியபால்ட் மன்னனும், அவருடைய ஆசிரியரான ஸ்டாக்மாரும், ஆல்பர்ட் இளவரசுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். இப்பொழுது ஆர்பர்ட் இளவரசன் அரசியாருக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அதன்படி அரசியாருக்கு அவரே 'நிரந்தரமான அமைச்சர்'. "வெளி விவகாரத்துறை ஏதோ அவர்களுடைய தனிப்பட்ட அலுவலகம் என்ற எண்ணத்தில் அவர்கள் இருக்கிறார்கள்" என்று கிளாரன்டன் பிரபு கூறினர். உண்மையில் பால்மர்ஸ்டன் பதவியை விட்டு விலகிய பிறகு, அவருக்குப் பின் வருகின்ற யார் நியமனத்தையும்

அரசியார் ரத்து செய்ய முடியுமென்ற உரிமையுடன் வலியுறுத்தினர். கேபினட்டின் பெரும்பான்மையான அங்கத்தினர்களின் விருப்பத்திற்கு மாறுக அரசியார் மிகவும் அடக்கமான புகழ்ச்சியாகப் பேசுகின்ற கிரான்வில் (Granville) என்பவரைத் தேர்ந்தெடுத்தார். கொள்கையளவில், லியாபால்டின் உறவினரான, ஆர்லியன்ஸ் வம்சாவளியைச் சார்ந்த அரசன் வீழ்ச்சியுற்றது அவர்களுக்கு மனவேதனையை அளித்தது. ஆஸ்திரியாவை எதிர்த்து இத்தாலியர்கள் போரிடுவது, கொள்ளையடிப்பதைப் போன்றதுதான் என்று அரசியார் நினைத்துக் கொண்டிருந்தார். அதற்கு மேல் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அரசியாரின் கணவன், பிரஷ்யா அரசனின் தலைமையில் ஜெர்மன் ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார். ஸ்கெலஸ்விக் ஹால்ஸ்டின் (Schleswig–Holstein) பகுதிகளை ஜெர்மனி ஆக்கிரமிப்பு செய்வதை பால்மர்ஸ்டன் உறுதியுடன் தடைசெய்தார். ஆனால், அரசியாரின் கணவன் இதைக்கண்டு பொறுமினர். எவ்வளவு தடைகள் இருந்த போதிலும், இந்த அமைச்சர் மற்ற எவரை விடவும் அதிகமாக, ஐரோப்பாவில் ஒரு பொது போர் ஏற்படாத வண்ணம் முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டார். மேலும் தேசிய ஜனநாயகத்தை பிரிட்டனில் அறிமுகம் செய்து வைத்தார்.

நமது வெல்திற அமைப்பு மிகவும் வலிமையற்ற அடித்தளத்தில் சாய்ந்திருந்தது என்பதை காலம் அறிவிக்கும். ஐரோப்பிய நாடுகளில் கட்டாய இராணுவ சேவை இருந்ததால் பெரும்படைகள் அங்கே அணிவகுத்துச் சென்றன. ஆனால், பால்மர்ஸ்டனின் ஆணித்தரமான சொற்களுக்குப் பாதுகாப்பாக சரிவர அமைக்கப்படாத 130,000 பேர் கொண்ட ஒரு படையை வைத்திருந்தனர். அதில் பாதி படையினர் ஐரோப்பாவில் இருந்தனர். அத்துடன் ஒரு சிறு கடற்படையும் இருந்தது. இப்பொழுது பாய்மரத்திலிருந்து, நீராவிக் கப்பலாக வளர்ச்சியடைந்திருந்தது. விக் முதலாளிகள் வருமானவரி அதிகரிப்புக்குப் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்தனர். கோமகன், பால்மர்ஸ்டன் ஆகியோர் பலமிக்க தேசியப் படையை அமைக்க வேண்டுமென்று சிபார்சு செய்ததை, அலட்சியப்படுத்தினர். காப்டெனும், தீவிரவாதிகளும், இராணுவ பாதுகாப்பு அதிகமாக்குவதனால் அவசியமற்ற பீதி ஏற்படும் என்றும், அதனால் யுத்த தளவாட குறைப்பே அமைதிக்கான வழி என்றும் கூறினர்.

13. புதிய பேரரசு
1815 – 1852

முதல் பேரரசின் விவகாரங்களில் வால்போல் தலையிடவில்லை, அந்தப் பேரரசு வளர்ச்சி அடைவதற்கு சேதாம் (Chatam) பல அற்புதங்களைச் செய்தார். ஆனால், அந்தப் பேரரசு மறைந்து விட்டது. அமெரிக்கா பறிபோய்விட்டது. இதைப் பின்தொடர்ந்து கனடாவும் பறிபோய்விடும் என்று விக்டோரியா காலத்தின் ஆரம்பத்தில் நினைத்தார்கள். மேற்கு இந்தியத் தீவுகளும் அதே நிலையில்தான் இருந்தது. ஆனால், வாட்டர்லூ வெற்றிக்குப் பின் நாற்பது ஆண்டுகளில் இரண்டாவது பேரரசுக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது.

புதிய ஆட்சி விதிகளினால்தான் இப்பேரரசு வளர்ச்சி அடைய முடியும். ஆட்சி செய்தலும், வரி விதித்தலும் பாராளுமன்றத்தின் மூலமாக நடைபெறக் கூடாதென்ற ஒரு படிப்பினையை மனத்தில் பதிய வைத்துக் கொண்டனர். ஆனால் மற்றொருபுறம், நவீன போக்குவரத்து சாதனங்களில் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டன. "இவ்வித தொடர்புகள் இல்லையெனின் ஒற்றுமைக்கு மிகுந்த அபாயம் ஏற்படும்" என்று பர்க் கூறினார். 1839-ல் நோவாஸ்கோஷியாவைச் சார்ந்த சாமுவேல் குன்ராட் (Samuel Cunrad) என்பவர் முதல் 'பிரிட்டிஷ்-டிரான்ஸ்-அட்லாண்டிக்' நீராவி கப்பல் போக்குவரத்தை ஆரம்பித்தார். ஜார்ஜ் டவுனிங் (George Downing) காலத்திலிருந்து மக்கள் அடிக்கடி பேரரசின் பல பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். பல கருத்துகளையும் பரிமாறிக் கொண்டனர். இப்பொழுது இன்னும் அதிகமான அளவில் அவ்வித பரிமாற்றங்கள் ஏற்பட்டன. அதனால் பிரிட்டனில் தொழில் மயமும், சமயச் சீர்திருத்தங்களும், ஜனநாயகக் கொள்கைகளும் வளர்ச்சி அடைந்தன. அதைப்போன்றே பேரரசிலும் இந்த மாற்றங்கள் ஏற்பட்டன. அதனால் பேரரசிற்கே ஆபத்து நேரும் நிலைமையும்

இருந்தது. 1815-க்குப் பிறகு, ஹாங்காங், மற்றும் கிழக்கேயுள்ள சில தளங்களைத் தவிர பேரரசை விரிவுபடுத்துகின்ற நோக்கமே அப்பொழுதில்லை. அதற்குப் பதிலாக இருக்கின்ற பகுதிகளையே பலப்படுத்தும் நோக்கம்தான் இருந்தது. கடலுக்குப்பால் உள்ள நாடுகளை நல்ல முறையாக ஆட்சி செய்வது மட்டுமின்றி வர்த்தகம், இன்னும் மற்ற உறவுகளையும் ஏற்படுத்திக் கொள்ள வசதியாக இருந்தது.

புதிய பேரரசை ஏற்படுத்தும் மனோபாவம் இன்னும் தாய் நாட்டிற்கு ஏற்படவில்லை. 1801–54 வரை ஒரே அரசாங்கச் செயலாளர் 'போரையும், காலனி நிர்வாகத்தையும்' கவனித்து வந்தார். இந்தத்துறை கேபினட் கண்களுக்கு சிறிதாகத்தான் பட்டது. ஹஸ்கிஸன் இப்பதவியில் இருந்த ஒரு ஆண்டு மட்டும், இந்தத் துறை மிகவும் முக்கியமானதாகப் பட்டது. அவருக்குப் பின், மூன்றாவது கிரே பிரபு (1846-54) காலனிகள் விஷயத்தில் அக்கறை காட்டினார். இவர்களுக்கிடையில் எந்த முதல்தர தலைவரும் இப்பதவியில் இருக்கவில்லை. இந்தக் காலனிகளை 18-ஆவது நூற்றாண்டில் இருந்த முறையிலேயே நடத்தி வந்தார்கள். 'இங்கிலாந்திலுள்ள கழிசடைகளைக் காலனிகளில் நிரப்பினர்கள்'. என்று ஒரு விக்டோரியா காலத்துப் பார்வையாளர் எழுதுகிறார். காலனிகள் வைத்துக் கொள்வதற்கு பென்தாமிய செல்வாக்கு எதிர்ப்பாக இருந்தது. காப்டென், மற்றும் அவருடைய மேன்செஸ்டர் ஆதரவாளர்களும், பேரரசு அமைப்பது என்பது போருக்கு அடிகோலுவது போலாகும்என்று கருதினர்கள். இவ்விதமான கருத்துகளே பெரும்பாலும் பழைய தலைவர்களிடமும், புதிய தலைவர்களிடமும் பரவியிருந்தன மேர்மியான் (Marmion) என்ற செய்யுளில் ஒரு வரி, "தவறு செய்கின்ற சகோதரியே, அமைதியாகப் போ" என்று கூறுகிறது. பொருளாதார வாதிகள் பாதுகாப்புக்கான செலவினம் அதிகரித்துக் கொண்டு போவதைப் பார்த்தும் காலனிகளுக்கு தரப்படுகின்ற சலுகைகள் இங்கிலாந்திலுள்ள மக்களுக்குத் தரப்படுவதைவிட அதிகமாக இருப்பதைக் கண்டும் பொறுமினர்கள். பல சமயங்களில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தாகிதி (Tahiti) போன்ற காலனிகளை ஏற்றுக் கொள்ளவும் மறுத்துவிட்டனர். நேட்டாலில் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டு பிறகு பின்னுக்குச் சென்றனர். ஹனோவீரியர்களுக்கு கிடைத்த பேரரசு, ஆடம் ஸ்மித் கூறுவதைப்போல 'இது ஒரு பேரரசின் ஆரம்பமே', என்றுதான் நினைக்க வேண்டியிருந்தது. ஏனெனில் சிறு சிறு சமுதாயங்கள் பல இடங்களில் சிதறியிருந்தன. அவைகளுக்கிடையே தொடர்பில்லாமல் இருந்தது. பிரிட்டனுடனும் மிகக்

குறுகிய அளவில்தான் அவைகளுடைய தொடர்பு இருந்தது. கனடாவில் 500,000 பேர்களும், ஆஸ்திரேலியாவில் 20,000 பேர்களும், கேப் காலனியில் 50,000 பேர்களும் இருந்தனர். மற்றும் ஒவ்வொரு மேற்கு இந்தியத் தீவிலும் ஒரு சில நூற்றுக்கணக்கான வெள்ளையர்கள், ஆயிரக்கணக்கான நீக்ரோக்களிடையேயும் மிலேச்சர்களிடையேயும் வாழ்ந்தனர்.

பழைய பேரரசின் நிர்வாகத்திலிருந்தும் மூன்று மரபுரிமைகள் ஏற்பட்டன. ஆங்கிலேயர்களுடைய சட்டம் அங்கும் பின்பற்றப் பட்டது. அவர்கள் குடியேறிய இடங்களில், தேர்ந்தெடுக்கப் பட்ட மன்றங்கள் காவலர்கள், நீதிபதிகள், ஜூரர்கள் மூலமாக நீதி வழுங்குதல் போன்றவை பின்பற்றப்பட்டன. பெர்முடா, அல்லது வெர்ஜினியா ஆகிய இடங்களில் குடியேறிய சமயத்திலே இந்த முறைகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாவதாக, அவர்களுடைய வர்த்தக விதிகளும் சட்டங்களும், காலனிகளுக்கென்று ஏற்பட்ட சலுகைகளும் நல்ல வர்த்தக முறையை ஏற்படுத்தின. மூன்றுவதாக, பிரிட்டிஷ் நிர்வாகிகள் சுதேச இனங்களின் மீது தர்மகர்த்தா ஆட்சி செய்து அவர்களைப் பாதுகாத்தனர். எடுத்துக்காட்டாக, அமெரிக்கர்களிடமிருந்து சிவப்பு இந்தியர்களுக்கு பாதுகாப்பு அளித்ததும், பின்பு மோவாக்குகள் பிரிட்டிஷ் கனடாவில் புகலிடம் பெற்றதும் தெரிந்ததே. ஆனால், இந்த மூன்று முறைகளும் மாற்றங்களினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட தனால் அவைகளை மீண்டும் புதிய சூழ்நிலையில் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. புதிய சூழ்நிலை, அமெரிக்க சுதந்திரத் தினாலும் தீவிரவாதிகளின் அரசியல் கருத்துகளினாலும், புதிய பொருளாதார நிறுவனங்களினாலும், முறைகளினாலும், மனிதாபிமான வளர்ச்சியினாலும் அதிகமாக மாறிவிட்டது.

வாட்டர்லூவுக்குப் பின் அறுபது ஆண்டுகளில் பிரிட்டனிலிருந்து 7½ மில்லியன் மக்கள் வெளியேறி காலனிகளில் குடியேறச் சென்றனர். இதில் பாதி பேர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றனர்; 1½ மில்லியன் பேர் கனடாவுக்கு சென்றனர்; ஒரு மில்லியன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றனர். மற்ற பேரரசுகள் போல அல்லாது பிரிட்டிஷ் குடியேற்ற மக்கள், தங்களுக்குத் தாங்களே உதவியாக இருந்து கொண்டனர். இதுவே பிரிட்டிஷ் பின்பற்றிய பொதுவான ஆட்சி முறை. ஓரளவிற்கு ஆஸ்திரேலியாவில் குடியேறிய மக்களைத் தவிர மற்றவர்களுக்கு, அரசாங்கம் எவ்விதமான உதவியையோ அல்லது சலுகைகளையோ அளிக்கவில்லை. அயர்லாந்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவோ, அல்லது கலிபோர்னியா,

அல்லது ஆஸ்திரேலியாவில் தங்கம் கண்டுபிடித்ததை ஒட்டியோ, அல்லது வேறு பல காரணங்களைக் கொண்டோ மக்கள் புதிய இடங்களுக்கு குடியேற ஆரம்பித்து விட்டனர். அரசாங்கம் இந்த விஷயத்தில் செய்ததெல்லாம் கப்பல்களில் அதிகக் கூட்டம் இருக்கக்கூடாது என்றும் கப்பல்களில் நிரம்பியுள்ள கும்பல்களுக்கு போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால் அவர்களை ஏற்றிச் செல்வது சிறிது கட்டுப்படுத்தப்பட்டதுமேயாகும். இக் கப்பல்களில் அடைபட்டிருக்கும் மக்கள் கூட்டம், அடிமைகளைப் போல இருந்தார்கள். அதனால், இக் காலனிகளில் குடியேறிய வர்கள், தனிப்பட்டவர், அல்லது சமுதாயத் தடைகளால் அங்கே சென்றவர் என்று கொள்ளவேண்டும். அல்லாமல், அவர்களுக் கென்று அரசாங்க உதவி கிடைத்து அங்கே குடியேறவில்லை. ஹைலாண்ட் சமுதாயம் (Highland Society) அல்லது செல்கிர்க் பிரபுவைப் போன்ற (Lord Selkirk) தனிப்பட்ட ஸ்காட்டியர்கள், தங்களுடைய நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டதனால், அதற்கு பரிகாரமாக காலனிகளில் குடியேற ஆதரவளித்தார்கள். இது போன்றே, போர் வீரர்களும், ஒன்டேரியாவில் உள்ள கர்னல் டால்பட்டும் (Colonel Talbot) ஹுரன் பகுதியில் உள்ள (Huron) ஜான் கால்டின் (John Calt) நிலக் கம்பெனியும், ஸ்காட்லாந்து திருச்சபைகளும், ஆங்கிலேய எபிஸ் கோபலியன்களும் குடி யேற்றங்களுக்கு ஆதரவளித்தனர். ஸ்காட்லாந்து திருச்சபையும், ஆங்கிலேய எபிஸ்கோபலியன்களும் முறையே, டுனிடின் (Dunedin), 'கிரைஸ்ட் சர்ச்' என்ற சமுதாய அமைப்புகளை நியு-ஸீலந்தில் அமைத்தார்கள். கிப்பன் வேக்பீல்ட்டின் முயற்சி யினலும், அவருடைய கம்பெனியின் ஆதரவாலும் தான் நியூ-ஸீலந்து அமைக்கப்பட்டதே தவிர, இதற்குக் காரணம். பேரரசின் அரசாங்கம் அன்று.

பல குடும்பங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவர்க ளுடைய சுதந்திரத்தையும் சமயத்தையும் காப்பதற்காக வெளிநாடு களில் குடியேறின. பேரரசு இவர்களுக்கு மிகவும் கடமைப்பட் டிருக்கிறது. மேரிலேண்ட் அரச பக்தர்கள் நோவாஸ்கோஷியா வுக்குச் சென்றார்கள். ஆஸ்திரேலியாவுக்கு, பல சிப்பாய்களின் குழந்தைகளும், அரசாங்க ஊழியர்களின் குழந்தைகளும் அனுப்பப் பட்டனர். ஆஸ்திரேலியாவின் அரசியல்வாதியான வில்லியம் வெண்டவர்த், நார்போல்க் தீவில் பிறந்தார். அப்பொழுது அவருடைய தந்தை குற்றவாளிகள் சிறை வைக்கப்பட்டிருந்த பகுதிக்கு மருத்துவராகப் பணியாற்றினர். கெரோலின் சிஸ் ஹோல்மும் (Caroline Chisholm) அவளுடைய கணவனும் (முன்னாளில் சென்னை படையில் இருந்தார்) ஸிட்னிக்கு சென்று

குற்றவாளிகள் புனர் வாழ்வு பெறவும், அவர்கள் குடிமை உரிமைகளைப்பெறவும் பணியாற்றினர்கள்.

மறந்துபோனவர்களின் இரத்தத்தினாலும் வியர்வையாலும் ஏற்பட்ட ஆங்கிலோ-சாக்ஸன் இங்கிலாந்தைப்போல, நமது கடல் கடந்த நாடுகளும் உருவாக்கப்பட்டன. அவர்கள் பட்ட இன்னல் களுக்கு அளவே இல்லை. பாய்மரக் கப்பல்களில் பிரயாணம் செய்தால், 1840-ல் கனடா செல்வதற்கு நாற்பது நாட்களும் ஆஸ்திரேலியாவுக்கு தொண்ணூறு நாட்களும் பிடித்தன. அந்த இடங்களில், மரத்தால் செய்த சிறு வீடுகளை அமைத்து அங்கே வசித்தார்கள். அந்த இடங்களை சுத்தம் செய்து, அவற்றைச் சுற்றிலும் மரக்குச்சிகளை வைத்து வேலியாக அமைத்தனர். நீண்ட தூரம் குதிரையிலோ அல்லது படகிலோ சென்று பொருள்களை வாங்குவதற்கும், அல்லது டாக்டரையோ, பாதிரியாரையோ அழைத்து வருவதற்கும் சென்றனர். மயோரிசு (Maoris) இந்தி யர்கள், காபிர்கள் (Kaffirs) வரட்சி, தொத்துவியாதி, பனி, ஆகிய இடர்ப்பாடுகளையெல்லாம் பொருட்படுத்தாது ஆரம்பித்த குடி யேற்றங்கள் இப்பொழுது வளர்ச்சியடைந்து சிறுநாடுகளாக விளங்குகின்றன.

ஆனால், உண்மை இதுவாக இருந்தபோதிலும், காலனி அமைக்கும் நோக்கம் பிரிட்டனுக்கு முழுவதும் இல்லையென்றே, அல்லது அதற்கான அக்கறை இல்லையென்றே கூறுவதற்கில்லை. மூன்று வகையான வகுப்பினர் இப்புதிய பேரரசு வளர்ச்சி அடை வதற்கு உறுதுணையாக இருந்தனர். நிர்வாகிகளும் தீவிர சீர் திருத்தவாதிகளும், மனிதாபிமான வாதிகளும், சமயத்தைப் பரப்புவதில் அக்கரை கொண்ட கிறிஸ்துவர்களும் அவர்களுக்குள் ளேயே முரண்பட்ட கருத்துகளை உடையவர்களாக இருந்தனர். புதிய பேரரசை அமைப்பதற்கு பெரும் முயற்சி செய்தனர். நெகிழ் வில்லாத சில அரசியல்வாதிகளின் கொள்கைகளினால் அமெரிக் காவை இழந்ததுபோலல்லாது, இப்பொழுது காலனி நிர்வாகத் தில் புதியதொரு மாற்றம் நேரிட்டது. இந்தப் புதிய நிர்வாகத் திற்கு இளையபிட்டின் கூட்டாளிகளும், அவருடைய சீடர்களும், குறிப்பாக, கிரென்வில், டண்டாஸ், பாத்தர்ஸ்ட், ஹஸ்கிஸன் ஆகி யோர் பொறுப்பாவார்கள். அவர்கள் வேறு உலகத்தைச் சார்ந் தவர்களோ என்றும் ஐயமேற்படுகின்றது. கொள்கையளவில் விட்டுப்பிடியாக இல்லாது, அடிப்படைத் தேவைகளை உணர்ந்து, சீர்குலைந்து வரும் பேரரசை நிர்மாணித்து, போரினால் ஏற்பட்ட நிலையை நன்கு பயன்படுத்தினர்கள். 1791-ல் இயற்றிய கனடா சட்டம், அப்பொழுதிருந்த பிரிட்டிஷ் அரசியல் அமைப்பை

ஒத்திருந்தது. அதைப்போல் மற்ற காலனிகளுக்கும் இந்த அரசியல் அமைப்பு விஸ்தரிக்கப்படுவதிலிருந்து அவர்களுடைய மனமாற்றம் நன்கு விளங்குகின்றது. இதன்படி காலனிகளின் அரசியல் அமைப்பில் பலமான நிர்வாகம் ஏற்பட வழியுண்டாயிற்று.

அமெரிக்காவை இழந்ததற்குப் பதிலாக, அவர்கள் வர்த்தக விதிகளையும் மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டிய அவசியம், பெரும் போரினால் ஏற்பட்டது. வெற்றியின் விளைவுகளாக, மூன்றாவது பிரச்சினையும் ஏற்பட்டது. புதியதாக ஏற்படுகின்ற காலனிகளை எப்படி ஆட்சி செய்வது என்ற பிரச்சினையே இது. டிரினிடாட்–ஐ சேர்த்துக்கொண்ட பிறகு, ஸ்பானியச் சட்டத்தை என்ன செய்வது; டச்சு கயானாவையும், அல்லது மால்பீஸையும் என்ன செய்வது என்ற சிக்கல் ஏற்பட்டது இயற்கையே. இதைப் போன்ற வகைகளில், மேலும் சிலோனையும், 'கிரவுன் காலனிகள்' என்று வகைப்படுத்தி, அவற்றின் நிர்வாகத்தைத் தேர்ந்தெடுக்கப் பட்ட சட்ட மன்றத்திடம் தராது, கவர்னரும் அவருடைய குழுவினரிடமும் தரப்பட்டது.

ஒரு சமயம், அவர்களுடைய புதிய வர்த்தக முறையை ஏற்படுத்தியதே அவர்களின் நீடித்த சாதனையாகும். இவர்களுடைய வர்த்தகத் துறையில் புதிய போட்டிகள் முளைத்துவிட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், தென் அமெரிக்க குடியரசுகள் ஜெர்மன் ஸோல்வீரின் (German Zollverein) ஆகிய பலமிக்க நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. புதிதாகக் கைப்பற்றிய டிரினிடாட் அல்லது மருஷியஸ் ஆகிய காலனிகளின் போட்டியால், மேற்கு இந்தியத் தீவுகளின் சர்க்கரை வியாபாரமும் பாதிக்கப்பட்டது. பிரிட்டனில் ஏற்பட்ட தொழில் வள வளர்ச்சியினால் அதற்கு நிறைய பஞ்சும், இரும்பும் தேவைப்பட்டன. போட்டி அமைவதினால், அவர்களுக்கு இப்பொருள்கள் குறைவான விலையில் கிடைத்தன. இதனால், கப்பல் போக்குவரத்துச் சட்டங்களையெல்லாம் ஹஸ்கிஸன் காலத்தில் ரத்து செய்தார்கள். அமெரிக்க மூலப்பொருள்களை அவர்களுடைய கப்பல்களிலேயே பிரிட்டனுக்கு அனுப்ப சாத்தியமாயிற்று. மேலும் வட அமெரிக்க வர்த்தகத் தொடர்பில்லாமல், மேற்கு இந்தியத் தீவுகள் வாழ முடியாது. நீண்ட போராட்டத்திற்குப் பிறகு 1830-ல் அதற்கும் முழு சுதந்திரம் தரப்பட்டது. அந்தந்த நாட்டுக் கப்பல்களிலேதான் அவர்களுடைய பொருள்களை ஏற்றிச் செல்ல வேண்டுமென்ற விதிகள் 1822-5-ல் தளர்த்தப்பட்டன. அதற்குப் பிறகு, காலனிகள் நேரடியாக

ஐரோப்பாவிற்குப் பொருள்களை அனுப்பவும், இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்பட்டன. இதனையொட்டி பரஸ்பரம் வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவுடன் மற்ற நாடுகள் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால், பிரிட்டிஷ் கப்பல் போக்குவரத்தும், காலனிகளின் கப்பல் போக்குவரத்தும் பேரரசு நாடுகளுடன் வர்த்தகத் தனி உரிமைகளை நிலைநிறுத்திக் கொண்டன. இந்த முழு வர்த்தகத் திட்டமும் பாதுகாப்பு சலுகைகளின் அடிப்படையில் இயங்கியது. மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்து சர்க்கரை வாங்கவும், அல்லது கனடாவிலிருந்து மரம், தானியம் வாங்கவும் பிரிட்டன் சலுகை அளித்ததனால் பிரிட்டனிடமிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு, அவர்கள் சலுகைகளைக் கேட்டார்கள்.

அமைதி ஏற்பட்டதற்குப் பிறகு இருந்த சூழ்நிலையும், வர்த்தக நிலையும், பிரிட்டனில் மக்கள் பெருக்கம் ஏற்பட்டதனாலும், பல படை வீரர்கள் இராணுவத்திலிருந்து அனுப்பப்பட்டதனாலும், மீண்டும் இவர்களிடையே குடியேற்ற மனப்பான்மை அதிகமாகக் காணப்பட்டது. மீட்சிக்குப் பிறகு இவ்விதக் குடியேற்ற மனப்பான்மை ஆதரிக்கப்படவில்லை. கிழக்கு கேப் காலனியில் ஐயாயிரம் பேர்கள் பாராளுமன்றத்தின் உதவி பெற்று குடியேறினார்கள். அவர்களை 1820 "குடியேற்றவாதிகள்" என்று அழைத்தார்கள். இதைபோன்றே மேலைக் கனடாவிலும் குடியேறுகிறவர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட்டன. ஒன்டேரியாவிலும், மேற்கு ஆஸ்திரேலியாவிலும் நியமிக்கப்பட்ட குடியேற்ற கம்பெனிகளுக்கு நிறைய நிலம் வழங்கப்பட்டது. இந்தப் பரிசோதனை காலத்தில் காலனி நிர்வாகம் நன்முகச் செய்யப்பட்டதென்று பல குறிப்புகள் காட்டுகின்றன. 1836–47 வரை திறமை மிக்க அதிகாரியான வில்பர்போர்ஸின் மைத்துனர் ஜேம்ஸ் ஸ்டீபன் (James Stephen) என்பவர் ஒரு துறவிபோல், இந்தக் காலனி நிர்வாகத்திற்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவருடைய முடிவுகளும், அறிவுரைகளும் எதிர்காலத்திற்கு நல்ல பயன் அளித்தன. கேப் காலனியில் இன வேறுபாடின்றி, நிற வேறுபாடின்றி, சமத்துவமாக எல்லாரையும் பாவிக்கவேண்டுமென்ற கொள்கையை அவர்தான் வகுத்துக் கொடுத்தார். ஆஸ்திரேலியாவில் கிழக்கத்திய வேலைக்காரர்களை நியமிக்கும் ஆலோசனையை இவர்தான் நிராகரித்து, அதனால் 'வெள்ளை ஆஸ்திரேலியாவை' உருவாக்கினர்.

1830-வது ஆண்டு மிகவும் முக்கியம் வாய்ந்தது. அப்பொழுது சீர்திருத்தங்களின் விளைவுகள் மணம் வீசிக் கொண்டிருந்தன.

அவைகளால் பேரரசு நிர்வாகத்திலும் புதிய மாற்றம் ஏற்படு கின்ற கட்டம் ஏற்பட்டது. கிப்பன் வேக் பீல்டின் முயற்சியினால் குடியேற்றக் கழகம் ஒன்று அப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது. இவரது குடும்பம், இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சியால் சீரழிந்து விட்டது. இவர் தரும சிந்தனையும், பொருளாதார அறிவையும் பெற்றவர். ஆனால், முழுக்கவும் இவரைத் தீரச் செயல்களைப் புரி கிறவர் என்று சொல்லிவிடவும் முடியாது. அவருடைய கொள் கைகள் வளம் பெற்றவை. அக்கொள்கைகளின் அடிப்படையில், 'குடியேற்றக்கலை' என்ற நூலை எழுதியுள்ளார். குடியேற்றம் முறை யாகத் திட்டமிடப்பட வேண்டுமென்றும், அதற்காக முழு முயற்சி களையும் ஆங்கிலேய மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதும் அவருடைய நோக்கமாகும். இக்காலனிகளில் குடியேறுவதற்காக அனுப்பப்படுகிறவர்கள், தொழிற்சாலைகளிலிருந்தும், மற்றும் துயரமான வாழ்க்கை நடத்தும் குடும்பங்களிலிருந்து அனுப்பக் கூடாதென்றும், ஆங்கிலேயச் சமுதாயத்தின் திறம்பட்டவர் களையே தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்றும் அவர் விரும் பினர். அரசாங்கம், அதற்காகக் காலியிடங்களை விற்று, அதிலிருந்து வருகின்ற வருவாயை இவர்களின் குடியேற்ற செலவு களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றும், ஏனெனில், காலி யிடங்கள் எல்லாருக்கும் பொதுவானவை என்றும் அவர் கூறினர். இதுவரையிலும் மனம்போன போக்கில் நிலங்கள் இக்குடியேற்ற மக்களுக்கு அளிக்கப்பட்டன. ஒரு பாட்டு பாடினால் போதும், அதற்காக நிலம் ஒதுக்கப்பட்ட காலமும் இருந்தது. அப்படி பெரிய நிலப்பகுதிகள், முதலீடு செய்து முன்னேற்றம் அடைய முடியாதவர்களுக்களித்ததனால், காலனிகளின் வளர்ச்சி பெரிதும் தடைபட்டுவிட்டது. மேலும் இப்படி செய்வதனால் வேலை செய்து சம்பாதித்து பிழைக்கின்றவர்களின் எண்ணிக்கை காலனிகளில் மிகவும் குறைந்துவிட்டது. இவ்விதமாகச் செய்வது தடுக்கப்பட வேண்டுமென்றும், நிலம் இலவசமாகத் தராமல், அதற்கென்று ஒரு விலை நிர்ணயம் செய்யப்பட்டால், மக்கள் பாடுபட்டு உழைத்து, பணத்தைச் சேமித்து நிலம் வாங்க முற்படுவார்களென்றும், அதனால் குடியேறுகிறவர்களும் பல இடங்களில் சிதறாமல், ஒரே இடத்தில் வாழ முடியும் என்றும் அவர் நம்பினர்.

நடைமுறையில் இவருடைய கொள்கையைப் பின்பற்றுவது கடினமாக இருந்தது. அவருடைய கொள்கையைவிட, அவருடைய ஆர்வமே முக்கியத்துவம் வாய்ந்தது. அவருடைய பிரச்சாரத்தினாலும், விளம்பரத்தினாலும், டர்ஹாம், கிரே போன்ற அமைச்சர்களைத் தம்பக்கம் கவர்ந்து கொண்டார். மற்றும் அவரைப் பின்பற்றி பல ஆதரவாளர்கள் தோன்றினர்கள்.

சார்லஸ் புல்லர் (Charles Buller) என்பவர் அவர்களுள் மிகவும் சிறப்பானவர். "மிஸ்டர் மதர் கன்ட்ரி" (Mr. Mother Country) என்று தலைப்பிட்டு, சிறிது மிகைப்படவே குடியேற்றக் கொள்கைகளைக்கண்டித்து அவர் எழுதியது மக்கள் கவனத்தைப் பெற்றது. காலனி அலுவலகம் அழுது வடிகின்றதென்றும், அங்கே ஆர்வம் செத்துவிட்டதென்றும் அவர் எழுதுகிறார். இந்தக் குழுவினரின் முயற்சியால். தெற்கு ஆஸ்திரேலியா, நியூஸிலந்து கம்பெனிகள், குடியேற்றம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டன. நிலங்கள், போக்குவரத்துகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்வதற்குப் பாராளுமன்ற கமிட்டிகளும், குடியேற்ற கமிஷனர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்குச் சாதக மாக, அப்பொழுதிருந்த எல்லா அரசியல் வாதிகளும், சுதந்திர மாக சமுதாயங்கள் வாழ்கின்ற ஒரு பேரரசு நீடித்திருக்கமுடியும் என்ற நம்பிக்கையை வைத்திருந்தார்கள் என்பது உண்மையில் அவர்களுடைய அதிர்ஷ்டமேயாகும்.

அவர்களுடைய இந்தக் குடியேற்ற போராட்டத்திற்கும், சமயத்தைப் பிரச்சாரம் செய்கின்ற பலமிக்க சமயவாதிகளுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டது. 'தூய்மையானவர்கள்' (Saints) என்ற கழகம் அடிமைமுறையை ஒழித்தது. அந்தக் கழகத்திலிருந்து, இப்பொழுது, லண்டன் சமய பிரச்சாரக் கழகம், திருச்சபை பிரச்சாரக் கழகம், பிரிட்டிஷ் விவிலியக் கழகம், அந்நியர் விவிலியக் கழகம் என்று பல பிரிவுகள் தோன்றின. இக் கழகங்களில் செல்வாக்கு பெற்றவர், காலனி அலுவலகத்தில் பணி புரியும் ஸ்டீபன் என்பவரும், மற்றும் அரசாங்கச் செயலாளரான கிளனல்க் (Glenelg) என்பவரும், மற்ற பல தனிப்பட்ட சமய வாதிகளான, மார்ஸ்டன் (Marsden) வில்லியம் என்பவர்கள் பசுபிக் பகுதியிலும், தென் ஆப்ரிக்காவில் பிலிப் என்ற சமயப் பிரச்சாரகரும், அக் காலனிகளில் உள்ள கவர்னர்களுக்கிருந்த செல்வாக்கைப்போல அவர்களும் பெற்றிருந்தனர். வில்பர் போர்ஸின் (Wilber Force) வாரிசான ஃபவுல் பக்ஸ்டன் (Fowell Buxton) அடிமை முறையை ஒழித்துவிட்டு; 'சுதேச மக்களைப் பாதுகாக்கும் கழகம்' ஒன்றை அமைத்தார். இதனால் நல்ல பயன் ஏற்பட்டது. சமயப் பிரச்சாரத்தால், ஹிந்துக்களையும், மகமதியர் களையும்கூட கிருஸ்துவ மதத்தினராக்கமுடியும் என்று நம்பினர். மிகவும் எச்சரிக்கையாகப் பின்பற்றி வந்த சமய நடுநிலைமைக் கொள்கையையும் கைவிட்டுவிடுமாறு இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்பட்டது.

வாரிசாக வந்த ஆரம்ப நிலையில் உள்ள இப்பேரரசில், உரிமைகளை அனுமதித்தும், ஆனால் அதே சமயத்தில் நிர்வாக அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதிலும், ஒப்புக்கொள்ளப் பட்ட திருச்சபைகளைப் பாதுகாத்துத் கொள்வதிலும், வர்த்தகத் திற்கு இடையூறாக இருந்த பல தடைகளைத் நளர்த்துவதிலும்; ஆனால், அதே காலத்தில் பேரரசு முழுவதும் பேரரசின் வாணிகத்தை இயக்குவதிலும்; பழைய ரத்து உரிமைகளைப் பயன்படுத்தவில்லை. எனினும், பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதை உறுதியாக நிறைவேற்றியும், அல்லது காலனி களின் சட்டத்தை நிராகரித்தும், சுதந்திரமாக வாழும் ஆங்கிலேய மக்களுக்கும் எதிராக, சுதேச இனங்களைப் பாதுகாத்தும், பேரரசு நீடிக்குமா என்ற சந்தேகம் இருந்தபோதிலும், அவர் களிடம் புதிய நம்பிக்கையும் இருந்துவந்தது. அந்த நம்பிக்கை மிக முக்கியமான நான்கு அம்சங்களில் அடங்கியிருந்தது; சுய ஆட்சி; குடியேற்றப் பகுதிகளில் வாழ வகைசெய்து கொடுத்தல், சுதேச இனங்கள்; பொருளாதார உறவுகள் ஆகியவையாகும். ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு வகையில் அந்தந்த முக்கியமான காலனி வரலாற்றில் இடம் பெறுகிறது. அந்தந்தக் காலனி வரலாற்றில் இந்த அம்சங்கள் எப்படி இடம் பெறுகின்றன வென்பதைக் காண்போம்.

அமெரிக்க, ஃபிரெஞ்சு புரட்சிகளுக்குப் பிறகும், 1812-வது ஆண்டில் ஏற்பட்ட போருக்குப் பிறகும், கனடியர்கள் அமெரிக்கர் களாகவோ, அல்லது பிரெஞ்சுக்காரர்களாகவோ இராது கனடா நாட்டு மக்கள் என்ற அவர்களுடைய சொந்த இயல்புடன் வெளி வந்தனர். நியூஃபவுண்ட்லேண்ட் (New Foundland) சுதந்திரமாக வளர்ச்சியுற்றது. மேற்கில் உள்ளபெரும் நிலப்பகுதி இந்தியர்கள் வசம் அல்லது ஹட்ஸன் பே கம்பெனியிடமும், அதனுடைய போட்டி கம்பெனிகளிடமும் இருந்தது. நாட்டின் முக்கியமான பகுதி கடலுக்கும், ஏரிகளுக்கும் இடையே மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேரி டைம் மாகாணம், கீழ் கனடா அல்லது கியூபெக், மேல் கனடா அல்லது ஒன்டாரியோ எனப் பிரிக்கப்பட்டிருந்தது. முதன் முதலில் இருந்த நோவாஸ் கோஷியா (Novoscotia) அமெரிக்க தேசியவாதிகள் வந்த பிறகு மூன்று அரசாங்கங்களை அமைப்பதற்கு, நியூபிரன்ஸ்விக் (New Brunswick) பிரின்ஸ் எட்வாட் தீவு (Prince Edward Island) கேப் பிரிட்டன் (Cape Briton) எனப் பிரிக்கப்பட்டன. இவைகளில் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பெரிய பிரச்சினைகள் ஏற்படவில்லை; மேலும் இந்தத் தீவில் உள்ள நிலங்கள் அங்கே வசிக்காத நிலக் கிழார்களுக்குத் தரப்பட்டிருந்தன. நோவாஸ்கோஷியாவும்,

நியு பிரன்ஸ்விக்கும், ஆக இரண்டு பகுதிகளும் சேர்ந்து பலமிக்க சமுதாயத்தை ஏற்படுத்தின. பிரிட்டனுடன் கடற் போக்கு வரத்து வைத்துக் கொள்ள இங்கே நல்ல வசதிகள் இருந்தன. ஹேலிபாக்ஸ் மிகவும் முக்கியமாகக் கப்பற்படை தளமாக அமைந் திருந்தது. செயின்ட்ஜான் நதியிலிருந்து, ராயல் கடற்படை, கொடி மரங்களைப் பெற்றது. ஹேலிபேக்ஸில் (Hali Fax) தனிப் பட்ட மாலுமிகளும், பழைய கடற்படை அதிகாரிகளும் குடியேறி னர். அங்கே குடியேறியவர்களெல்லாம் பெரும்பாலும் சுறுசுறுப் பானவர்களே. சிப்பாய்கள், மலேவாசிகள், அமெரிக்க தேசிய வாதிகள் அங்கே குடியேறினர். அவர்களுடைய ஒழுக்கமான வாழ்க்கை நிலை போற்றத் தக்கதாக இருந்தது. 1820-வது ஆண்டுக்கு முன்பே, டல்ஹவுஸி பல்கலைக் கழகமும், பல ஆரம்பப் பள்ளிகளும் நிறுவப்பட்டன. பத்திரிகையாளராக இருந்த ஜோசப் ஹாவ் (Joseph Howe) என்பவர் பின்பு பெரிய அரசியல் வாதியாக விளங்கினர். பொருளாதார விஷயங்களில் மேரி டைம்ஸ் மாகாணம், நியு இங்கிலாந்தின் வட்டாரத்தில் இருந்தது. கனடாவுக்கும் இதற்கும் அதிகத் தொடர்பு ஏற்படாமல் போவதற்குக் காரணம், நீண்ட மலைத் தொடரும், நதியும், காடும் இதைப் பிரித்து விட்டன. அவர்களுடைய அரசியல் மனப் பான்மை ஆங்கிலேயர்களைப் போன்றது.

மற்ற இரண்டு கனடாக்களில் இருந்தநிலைவேறு. அவற் றிடையே காணப்பட்ட வேறுபாடுகளின் காரணமாக, 1791 ல் இயற்றப்பட்ட பிட் சட்டத்தின்படி இவைகள் பிரிக்கப்பட்டன. இவ்விதமாகப் பிரிக்கப்பட்டதனால் மட்டும் பாதிக்கப்பட்ட உறவுகள் மீண்டும் சீரமையவில்லை. செயின்ட் லாரென்ஸ்-ஐ தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொண்டு கலால் வருவாயைப் பெறுவது ஒன்டாரியோவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால், இதில் ஒரு பெரிய சிக்கல் இருந்தது; அரசியல் ஆதிக்கம் செலுத்துவது பிரிட்டனு அல்லது ஃபிரான்ஸா என்ற குழப்பம் இருந்தது. ஒவ்வொரு பத்தாண்டிலும் அமெரிக்கக் குடிமக்கள் பெருவாரியாக அங்கே வந்து குவிந்தனர். 1815-ல் 80,000 பேர் ஒன்டோரியாவில் இருந்தனர். 1841-ல் அவர்களுடைய எண்ணிக்கை 455,000 ஆகப் பெருகியது. பிரிட்டிஷ் குடியேற்ற வாதிகள், கியூபெக்கிலுள்ள கிழக்கு நகரங்களில் பெருவாரியாகக் குடியேறினர். மான்ட்ரியலில் உள்ள சிறுபான்மையராக இருந்த பிரிட்டிஷ் மக்களால் இன ஆர்வம் அதிகமாகியது. மேலும், இந்த வேற்றுமை, பிரஞ்ச-கனடாவின் கத்தோலிக்க ஆர்வத்தை நிலை நிறுத்துவதில் அதிகமாகக் காணப்பட்டது. இதற்கிடையே ஒவ்வொரு மாகாணத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட



Copyright 1948. Edward Stanford, Ltd.

சபைகளுக்கும், பாதி அங்கியர்களின் பொறுப்பற்ற நிர்வாகத் துறைக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அமெரிக்கக் காலனிகளை இழந்ததற்குக் காரணமாக இருந்த அதே சிக்கலான பிரச்சினைகள், கவர்னர்கள், அவர்களின் ஆலோசனைக் குழுவினரின் அதிகாரங்கள், செலவினப் பட்டியல், ஆதரவுகளை அளித்தல், நீதிபதிகளின் சுதந்திரம், நிலங்களைப் பகிர்ந்து கொடுப்பது ஆகியவைப் பற்றி மீண்டும் விவாதங்கள் கிளம்பின. இவைகளில் பல ஊழல்கள் மலிந்திருந்தன. சில சமயங்களில் கவர்னரின் ஆலோசனைக் குழுவினர் ஒரே சமயத்தில் நிர்வாகம் செலுத்துகின்றவர்களாகவும், மேல் சபையினராகவும் கூடக் கருதப்பட்டது. பதவியில் இருப்பவர்கள் ஆயுள் முழுவதும் பதவிகளில் நீடித்தனர். அரசனுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களும், வீட்டு வரியும், பாராளுமன்றத்தின் அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டன. சில சமயங்களில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப் படாமல் அப்படியே வைக்கப்பட்டிருந்தன. அல்லது வாணிகச் சூதாடிகளுக்கு ஒதுக்கப்பட்டன. பொதுவாகக் கவனிக்கும் பொழுது, ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த சுயநலக்காரர்களையும், மற்றும் அதிகாரவர்க்கத்தினரையும் எதிர்த்து சீர் திருத்தக் கட்சிகளும், இன்னும் சில குடியேற்றவாதிகளும் அவர்களை எதிர்த்து போராடவும் செய்தனர். இந்த எதிர்ப்பு நாளடைவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தையும், பிரிட்டிஷ் இனத்தையும் கூட பாதிக்குமா என்ற கவலை ஏற்பட்டது.

இவ்விதமான எதிர்ப்பு கியூபெக்கில்தான் மிக அதிகமாகக் காணப்பட்டது. அரசியல் அமைப்பை எதிர்த்துப் போராடியவர்கள் கடைசியில் இனப்போராட்டத்திலும் குதித்துவிட்டார்கள். ஃபிரெஞ்சு கனடியர்கள் 1812-ல் நன்றாகப் போரிட்டனர், அங்கேயிருந்த பாதிரிகளின் விசுவாசமும் சந்தேகத்திற்கிடமில்லாமல் இருந்தது. மட்டான செல்வாக்கிலிருந்து கியூபெக் வெளியேறி எதிர்ப்பைக் காட்டத் தொடங்கியது. நிலக்கிழார்களின் செல்வாக்கு அங்கே மறைந்ததுதான் இதற்குக் காரணம். இவர்கள் மீது கவர்னர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். படிப்பு வாசனையில்லாத விவசாயிகளுக்கு ஜனநாயக வாக்குரிமைகளை அளித்துவிட்டதனால், அவர்களுடைய நம்பிக்கை வழக்கறிஞர்களிடமும் பத்திரிகையாளரிடமும் சென்றுவிட்டது. லூயி ஜோசப் பேபினே (Louis Joseph Papineav, என்பவர் பொதுமக்களின் அமோகமான ஆதரவு பெற்று 1815.ல் சட்டசபையின் தலைவராகிவிட்டார். அந்தக் காலத்திலிருந்து 1837-வரை அவருடைய முயற்சியால் ஏற்பட்ட கட்சி ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்றது. ஆங்கிலேய தீவிரவாதிகளுடனும்,

அமெரிக்கர்களுடனும் இருந்த தொடர்புகளை அறுத்துக்கொண்டு, புதிய குடியரசுகளின் அடிப்படையில் அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்று முயன்றார். ஆனால், அடிக்கடி அதிகாரிகளை குற்ற விசாரணை செய்வதாலும் விநியோகத்தைத் தடை செய்வதாலும் அரசாங்கத்தின் அலுவல்கள் தடைபட்டன. இந்த மாகாணங்களை மீண்டும் ஒன்றுபடுத்த வேண்டுமென்று ஆங்கிலேய அரசாங்கம் நினைத்தது. மேலும் ஃபிரஞ்சு மொழி அரசியல் மொழியாக இருப்பதையும் தடுத்துவிடவேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால், ஹஸ்கிஸன், கிரே ஆகியோர் சிறிது தாராள மனப் பான்மையுடன் இருந்தனர். சில செலவினங்களை மட்டும் கவர்னருக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டு, மற்ற எல்லா நிரந்தர வருமானங்களையும் சட்டசபைக்கே அளித்துவிட்டனர். கவர்னரின் ஆலோசனைக் குழுவிலிருந்து நீதிபதிகள் அங்கம் வகிப்பதைத் தடுத்துவிட்டார்கள். பாபினோ இதற்கு பதில் அளிக்கும் வகையில் 1834-ல் 92 தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பிவைத்தார். அவற்றின்படி ஆலோசனைக் குழுவினர் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் சட்டசபைக்கு எல்லா நிதி அதிகாரங்களும் தர வேண்டுமென்றும், குற்ற விசாரணைகளை விசாரிப்பதற்குப் பிரத்தியேக நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது. ரஸல் இவர்களுக்குச் சுதந்திர அரசாங்கத்தை ஒத்த, ஆனால் பொறுப்பான அரசாங்கத்தை அமைத்துத் தருவதாகக் கூறினர். அதனால் பாபினோ விநியோகத்தை நிறுத்திவிட்டார். பாபினோவின் வன்முறைகள் ஆங்கிலேயச் சீர்திருத்தவாதிகளைப் புண்படுத்தின. அவருடைய சமயப்பற்றற்ற தன்மையும் திருச்சபையைக் கோபத்திற்குள்ளாக்கியது. அவரைக் கைது செய்ய உத்திரவாகியபோது, ஒரு சில கிராமங்கள் மட்டுமே அவரைக் கைது செய்வதிலிருந்து தடுக்க முயன்றன. அவர் ஐக்கிய அமெரிக்காவுக்கு தப்பித்துச் சென்றவுடன் ஒரு சிறிய காலாட் படையை வைத்துக்கொண்டே அவர்களுடைய கலகத்தை அரசு அடக்கியது.

மேல் கனடாவில், கியூபெக்கில் நடந்த இனவெறிச் செயல்களைப்போல நிகழாமல், மிகச் சாதாரணமாகவே வாழ்க்கை நடைபெற்றது. ஒரு மாகாணத்திலுள்ள மக்களில் 1815-ல் 80 சதவிகிதம் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களேயாவர். அவர்களுடைய நிலத்தைப் பகிர்ந்துகொள்வதிலும், சில சமய கருத்து வேறுபாடுகளிலும்தான் சில ஒழுங்கு முறைகள் இருந்தன. ஆனால் அவர்களெல்லாம் ஒரே பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களே. பத்தில் ஒன்பது பாகத்தினருக்கு நல்ல பகுதிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஒரு சிறு பகுதி மட்டும் திருச்சபைக்கு

ஒதுக்கப்பட்டது. 1791ஆம் ஆண்டின் சட்டப்படி, ஏழில் ஒன்று விகிதம்தான் ஒக்கப்படவேண்டுமென்றிருப்பதை டோரண்டோ வின் துணிச்சலான பிஷப் ஸ்டேரச்சன் (Strachan) என்பவர் அத்தனையும் ஆங்கிலிக்கன் சமயத்தினருக்கே கொடுக்கவேண்டு மென்று கோரினர். நிலங்களைப் பகிர்ந்து கொள்வதில் நிறைய ஊழல்கள் மலிந்திருந்தன. குடியேற்ற இடங்களுக்கிடையே நிறைய அகற்றப்படாத காடுகள் இருந்தன. மேலும் நிலங்களைப் பங்கு போடுவதில், பிரிட்டிஷ் நலன்களுக்காகப் பாடுபடுவர்களும், அந்த அரசாங்கத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களும், பணக் காரர்களும், அதிகாரிகளுமே பங்கு போட்டுக் கொண்டனர் என்று சீர்திருத்தவாதிகள் குற்றம் சாட்டினர்.

எல்லா வகையிலும் ஒன்டோரியாவின் வளர்ச்சி வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தது. அரசியல் பொருளாதார வளர்ச் சியும், மற்றும் சாலைகளை அமைப்பதிலும், கால்வாய்களை வெட்டு வதிலும் நிறைய நிதி செலவிடப்பட்டது. வெலாண்ட் (Welland) ரிட்யூ (Rideau) லேசின் (Lachine) ஆகிய இடங்களில் வெட்டப் பட்டக் கால்வாய்கள் எரி (Erie) ஏரிக்கும் மான்டிரியலுக்கும் தொடர்பு படுத்துகின்றன. பல்வேறு சமயக் குழுவினர் பள்ளி களையும் நிறுவினர். டோரண்டோவில் 'மேல் கனடா' ஒன்று அமைக்கப்பட்டது. ஸ்டாரச்சன் இதை ஒரு பல்கலைக் கழகமாக்க பெருமுயற்சி செய்தார். இந்தக் குழுவினரிடையே பல வேறு பாடுகள் காணப்படினும், அவர்களில் சிலர், வெர்ஜினியாவைச் சேர்ந்த பெவர்லி ராபின்ஸன், லாயலிஸ்ட், குழுவினரைச் சார்ந்த எகர்டன் ரையர்சன் (Egerton Ryerson) ஆகியோர் மிகச் சிறந்தத் தலைவர்களாகப் பாவிக்கப்பட்டார்கள். எகர்டன் ரையர்சன் என்பவர் மெதாடிஸ்டு சமயத்தினருக்குத் தேச பக்தியையும் கல்வியையும் பரப்புவதில் ஆர்வத்தை உண்டு பண்ணினர். பிரிட் டனும்கூட இவர்களுக்கு நல்ல உதவிகளை அப்பொழுது அளித்து வந்தது. கியூபெக்கில் வசூலிக்கின்ற கலால் வரிகளிலிருந்து அரசனுக்கு வரவேண்டிய சில வருவாய்களையும், அவர்களுடைய நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்கக் குடியேற்ற வாதிகளுக்கிருந்த பல தடைகளும் ரத்து செய்யப்பட்டன. இராணுவத்தில் பணியாற்றிய பலர் கவர்னர்களாக நியமிக்கப் பட்டனர். அவர்கள்தான் சிறிது கண்டிப்பாக இருந்தார்களே தவிர, மற்றுமுள்ள பலர், அவர்களுள் கால்போர்ன் (Colborne) என்பவர் ஸிடன்பிரபு (Seaton) மிகவும் பெருந் தன்மையாக ஆட்சி செய்தார். பொதுவாக, ஆங்கிலேய உறவினால் ஏற்படுகின்ற தொடர்புகளைவிட, அங்குள்ள பல வேறுபாடுகளை அகற்றி

மாகாணத்திலுள்ள சமுதாயத்தில் நல்ல உறவுகளை ஏற்படுத்துவதுதான் கடினமாக இருந்தது.

ஆட்சி செய்கின்ற வர்க்கத்தினருக்கு எதிராக, பத்திரிகையாளர் வில்லியம் லையன் மேக்கன்ஸி (William Lyon Mackenzie) என்பவர் தலைமை வகித்து எதிர்ப்பை உருவாக்கினர். டோரி பெரும்பான்மையின் உதவியால், இவரை சட்ட சபையிலிருந்து வெளியேற்றியதால், எதிர் கட்சியாளர்களுக்கு பெரிய குறை ஏற்பட்டு விட்டது. அப்பொழுது கவர்னராக இருந்த சர் பிரான்சிஸ் ஹெட் (Sir Francis Head) என்பவர் இந்தத் தீப் பொறியைப் பரவ விட்டு, அவருடைய மடமையை வெளிக் காட்டினர். 1837-ல் நாட்டிற்கு எதிரான சூழ்ச்சிகளில் இறங்கி பிறகு ஒரு கலகத்தை அவர் உருவாக்கினர். பின்பு அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஓடிப் போய் விட்டார். சில திறமை மிக்கவர்கள், குறிப்பாக ராபர்ட் பால்ட்வின் (Robert Baldwin) ஏற்கனவே, கவர்னரின் ஆலோசனைக் குழுவினர் சட்ட சபையில் உள்ள பெரும்பான்மை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சர்களைப் போல பதவி வகித்தலும், அவர்கள் சட்டசபைக்குப் பொறுப்பாக இருத்தலும் போன்ற ஒரு முறையைப் பின்பற்றுவதே சரியான பரிகாரம் என்று காலனி அலுவலகத்திற்கு அறிவுரை கூறினர். நிதி வருவாய்களிலிருந்த பல சிக்கல்களில் 1830ஆம் ஆண்டிலேயே நோவா ஸ்கோஷியர்கள் ஆங்கிலேய அமைச்சர்கள் வசிக்கின்ற 'டவ்னிங் வீதிக்கு' இவ்விதமான அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தார்கள். இந்த வகையில் நியூ பிரன்ஸ்விக் தானாகவே ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. அதனால் டர்ஹாம் பிரபு அவருடைய சிபார்சுகளைக் குறிப்பதற்கு நல்ல அடிப்படைக் காரணங்கள் இருந்தன.

கலகம் ஏற்படுவதற்கு முன்பே அவருடைய தூது கோஷ்டி செல்வதற்கு, இருந்தது. ஜனவரி 1838-ல் மீண்டும் இந்தப் பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தார்கள். அவர் கனடாவுக்கு மே மாதத்தில் வந்தார். ஆறு மாதங்களுக்குச் சிறிது குறைவாகவே அவர் அங்கே தங்கியிருந்தார். அவருடைய அறிக்கையை பிப்ரவரி 1839-ல் சமர்ப்பித்தார். புல்லர், (Buller) வேக்ஃபீல்ட் (Wake Field) ஆகியோரின் உதவி இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் இருந்தென்றாலும், முடிவாக அவர் தான் இந்த அறிக்கைக்கு காரணமாக இருந்தார். இந்த அறிக்கையில் கனடாவுக்கு புதிய அரசாங்கமும், அதைத் தவிர, நில ஏற்பாடுகளுக்காகத் திட்டம் நகர அமைப்புத்திட்டம்,

பாராளுமன்ற முறை, விதிகள், குடியேற்றம் ஆகியவைகளை மிகவும் விவரமாக அறிவித்திருந்தார். அவர் ராஜிநாமா செய்த சூழ் நிலையைப் பார்க்கும்பொழுது, இதுவே, அவருடைய அறிக்கைக்கு உடனடியான முக்கியத்துவத்தைக் கொடுத்து விட்டது. இந்த அறிக்கையில் கூறப்பட்ட சிபார்சுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. குறிப்பாகப் புரோகாம் (Brougham) என்பவர் அவருடைய அறிக்கையை எதிர்த்தார். டர்ஹாமுக்கு நிறைய அதிகாரங்கள் தரப்பட்டன. அதனால் பாபினோவை நாடு கடத்தினர். அவருடைய ஆதரவாளர்களையும் நாடு கடத்தினர். மற்றவர்களும் விசாரணை இல்லாமலேயே நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்விதமாக, அவர் அதிகாரத்தைப் பிரயோகித்ததனால், பிறர் எதிர்க்க ஆரம்பித்தனர் இந்தச் சூழ் நிலையில் அவர் ராஜிநாமா செய்தார். பேரரசின் அரசாங் கத்தையும் மதிக்காது அவரே நேரடியாகக் கனடா மக்களுக்கு ஆத்திரமான அறிக்கையை விடுத்தார்.

இந்தச் சிறப்பான அறிக்கையில் பல குறைகள் இருந்தன. அதில் ஃபிரெஞ்சு மக்களின் விசுவாசமின்மையை மிகைப்படுத்தி கூறியிருந்தார். அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்த விஷயங்கள், மேல் கனடாவைப்பற்றிச் சரிவர புரிந்து கொள்ளாமல் எழுதப்பட்டிருந்தது. ஆனால், அதில் கூறியிருந்தக் கருத்துகளும், முடிவுகளும் உறுதியாகக் கூறப்பட்டிருந்தன. அமெரிக்காவுடன் கனடா இணையாமல் இருக்க வேண்டுமென்றால், கனடா ஒரு நாடாக, உடனடியாக ஆக்கப்படவேண்டும். கியூபெக் ஆங்கிலோ-சாட்ஸன் நாட்டில் ஒரு பகுதியாக, பெரிய மாகாணத்தில் சேர்க்கப்பட வேண்டும். அவர் கூட்டாட்சியை ஆதரிக்கவில்லை. ஏனெனில் கியூபெக்கில் ஃபிரெஞ்சு பெரும் பான்மை அப்படியே நிலை நின்றுவிடும். அவர் விரும்பிய பெரிய மாகாணம், மேரிடைம்ஸ் (Maritimes) பகுதியில் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதனால், இவர் கூறுகிற பெரிய பகுதி ஏற்படுத்துவது மிகவும் கடினமானதே. அதனால் அவர் கியூ பெக்கையும், ஒன்டோரியோவையும் ஒன்றுக இணைத்தால் பிரிட்டிஷ் குடிமக்களின் பெரும்பான்மை நிலை நிறுத்தப்படும் என்று அவர் கருதினர். ஆனால் இப்பகுதியில் உள்ள மக்களின் வெறுப்புணர்ச்சிகளை முதலில் வேரோடு களைய வேண்டும். இந்த ஐக்கிய கனடாவை, ஒரு கவர்னர் ஆட்சிக்குள் கொண்டு வர வேண்டும். அவருக்கு உதவியாகச் சிலர், சட்ட மன்றத்தி லுள்ள பெரும்பான்மை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும் இங்கிலாந்தின் நேரடியான உறவுகளைப் பாதிக்காத எந்தச் சிக்கலும், அல்லது தகராறும் அவர்களே

பார்த்து தீர்த்துக் கொள்ளவேண்டும். அரசியல் அமைப்பைத் திருத்துதல், வெளிநாட்டு விவகாரங்கள், வர்த்தகம், பொதுவான நிலங்கள், ஆகிய பிரச்சினைகளில், ஆங்கிலேய அரசாங்கத்தின் தீர்ப்புதான் முடிவானது.

இவருடைய சிறந்த சிபார்சுகளை கனடிய மக்கள் வரவேற்றனர். ஆஸ்திரேலியர்களும் இந்தத் திட்டத்தைக் கூர்ந்து கவனித்தனர். இருப்பினும் இவைகள் சட்ட வடிவம் பெறுவதற்குப் பத்தாண்டுகளாயின. 1841-ல் இயற்றப்பட்ட சட்டம் இரண்டு மாகாணங்களையும் ஒன்றுக இணைத்தது; குறிப் பிட்ட செலவினத்தை உத்திரவிட்டது; நிலங்களின் முழு நிர்வாக மும் அதன் கையிலேயே ஒப்படைக்கப்பட்டது. ஆங்கில மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது. அப்பொழுது குடியேற்ற நாடு களின் செயலாளராக இருந்த ரஸல், இதை 'பொறுப்பான அரசாங்கம்' என்று அர்த்தமில்லாது கூறுவதை ஏற்றுக் கொள்ள வில்லை. அவருடைய விவாதத்தின்படி, ஒரு கவர்னர் கேபி னட்டின் ஆலோசனையை ஏற்று ஆட்சி செய்வதென்றால், அவர் 'சுதந்திரமான இறைமையாளர்' ஆகின்றார். அவருக்குப் பின் பதவிக்கு வந்த டோரி கட்சியைச் சார்ந்த ஸ்டேன்லி (Stanley) மற்றும் பீல், எங்கே பேரரசு சீர்குலைந்து விடுமோ என்று பயந்தனர். அதிகாரிகள் தங்களுடைய விருப்பத்திற்கேற்ப பதவியில் இருக்கலாம். ஏதாவது கட்டாயம் ஏற்படுகின்ற நிலையில், துறைத் தலைவர்களை நியமனம் செய்வதில் சட்ட மன்றத்தில் ஒப்புதல் வேண்டுமென்று ரஸல் அறிவித்தார்.

1839–1841 வரை கவர்னர் ஜனரல்களாகப் பதவி வகித்த போலெட் தாம்ப்ஸன் (Poulett Thompson) ஸிடன்ஹாம் பிரபு (Lord Sydenham) ஆகியோர் நல்ல அக்கறை எடுத்து, மராமத்து பணிகள், கல்வி, நகராண்மை ஆட்சி, கவுண்டி நீதிமன்றங்கள், ஆகிய துறைகளில் சிறந்த பணிகளை ஆற்றியதால், பல சிக்கல்கள் வெளிக்கிளம்பாமல் அப்படியே அமுங்கிவிட்டன. உண்மையில் ஸிடன்ஹாம் பிரபு தனக்குத் தானே பிரதம அமைச்சராக இருந்தார். மற்ற கூட்டாளிகளை, மிதமான கொள்கைகளை யுடைய வகுப்பினரிடமிருந்து தேர்ந்தெடுத்துக் கொண்டார். அதனால், கேபினட் விதி முறைகளை அவர் புறக்கணித்துவிட்டார். இவருக்குப் பின் வந்தவரான சார்லஸ் பேஜாட் (Charles Bagot) காலத்தில் சூழ்நிலை மிகவும் நன்றாக இருந்தது. அவர் கானிங்கின் நண்பர். ஒவ்வொரு இனத்திலுள்ள சீர்திருத்தவாதிகளான, பால்டுவின், லாஃபோன்டேய்ன் போன்றவர்களை அவருடைய அரசாங்கத்தில் சேர்த்துக்கொண்டார், அவருக்குப்பின்,

சர். சார்லஸ் மெட்காஃப் (1843–46) (Sir Charles Metcalfe) என்ற வீரத்தன்மையுடைய ஆங்கிலோ-இந்தியர் பதவியேற்றார். அவருக்குச் சூழ்நிலைக்கேற்ப செயலாற்றும் திறனும் அல்லது பாராளுமன்ற ஆட்சியில் போதிய அனுபவமும் இல்லை. ஃபிரெஞ்சு, ஐரிஷ், குடியரசு வாதிகளிடமிருந்து ஆங்கிலேய மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரு கொள்கையை அவர் பின் பற்றினார். அதனால், துறைத்தலைவர்களுடைய உதவி கொண்டு, இக்காரியத்தைச் செய்ய முயன்றார். இவ்வதிகாரிகள் அவருக்குப் பொறுப்பாக இருப்பதனால், இக்காரியத்தை முடிப்பதும் அவருடைய பொறுப்பே என்று கருதியவர், எப்படியோ உண்மைக் கொள்கைகளில் ஏதோ சூழப்பமேற்பட்டு விட்டதால், அவர் கடைசி முறையாகத் தேர்தலிலும் வெற்றி பெற்றார். அவருடையக் கொள்கைகளை பீல், ரஸல், கிளாட்ஸ்டன் மிகவும் பாராட்டினர். 'பெயரளவில் மட்டும் அது தனி நாடாக இல்லையே தவிர எல்லா வகைகளிலும் அது தனி நாடு தான்' என்று ஜேம்ஸ் ஸ்டீபன் (James Stephan) வருத்தமாகக் கூறுகிறார்.

நாளடைவில், கனடியர்கள் பொறுப்பான அரசாங்கத்தை அமைக்கத்தான் செய்தார்கள். அது அவர்களுடைய சாதனையே. பால்டுவின், லாபோன்டேய்ன், நோவாஸ்கோஷியாவைச் சேர்ந்த ஹாவ் ஆகியவர்களின் இடையறா முயற்சியினால், கனடியர்கள் வெற்றி பெற்றார்கள். ஜான்ரஸலுக்கு, அவர்கள் எழுதியகடிதங்கள் கனடாவின் நிலையை நன்கு விளக்கிக் கூறின. "பிரிட்டிஷ் குடிமக்கள் பெறுகின்ற அளவிற்கு எங்களுக்கு உரிமைகள் கிடைத்தால் போதும். ஆனால் அதற்கும் குறைவாகப் பெறுவதில் நாங்கள் திருப்தி அடைய மாட்டோம்" ஒவ்வொரு ஆண்டிலும் மேரிடைம்ஸ் பகுதியிலிருந்து செல்லும் கடிதங்கள், அறிக்கைகள் காலனி அலுவலகத்தையே அதிர்ச்சிக் குள்ளாக்கிவிட்டன. கடைசியாக, ரஸலின் கலோனியக் காரியதரிசியான மூன்றாவது பிரபு கிரே, ரஸல் இயற்றிய தடைகளை அகற்றி, கவர்னருக்கு அனுப்பிய உத்திரவில் "வட அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் மாகாணங்கள், அக்குடிமக்களின் விருப்பத்திற்கு மாறாக, ஆட்சி செய்வது நல்லதுமல்ல; விரும்பத்தக்கதுமல்ல" என்று அறிவித்தார். பிப்ரவரி 1848-ல் நோவாஸ்கோஷியாவில், முதல் முதலாகக் கட்சி அரசாங்கம் பதவியேற்றது. அதைப் பின்பற்றி மார்ச் 1848-ல் கனடாவிலும், பால்டுவின்-லாஃபோன்டேய்ன் மந்திரிசபை அமைக்கப்பட்டது.

எல்ஜின் (Elgin) கவர்னர் ஜெனரலாக 1847–1854வரை பதவியேற்ற காலத்தில் டர்ஹாமின் கொள்கைகளைப் பின்பற்றினார்.

அவர் டர்ஹாமின் மருமகன். கனடாவை உருவாக்கியவர் அவர் தான், என்று கூறலாம். கட்சிப் பெரும்பான்மை ஆட்சியை அவர் அப்படியே பின்பற்றியதில், அவர் எந்தவிதமானத் தடை களையும் பொருட்படுத்தவில்லை. பேஜாட்டின் காலத்தில் ஆரம் பிக்கப்பட்ட கொள்கையை அவர் பின்பற்றி, படிப்படியாக ஃபிரெஞ்சு மக்கள்மீது அன்பு காட்டினார். அவர்களைத் திருப்தி செய்வதற்காக, ஃபிரெஞ்சு மொழிமீதிருந்த தடையை ரத்து செய்தது மட்டுமின்றி, 12ஆண்டுகளுக்கு முன்பாக ஃபிரெஞ்சு மக்கள் அடைந்த பெரும் நஷ்டங்களுக்கு ஈடாக வசதிகளைச் செய்து கொடுத்தார்.

1849-ல் 'கலகத்தினால் ஏற்பட்ட நஷ்ட சட்டம்' (Rebellion Losses Act of 1849) என்பதை இயற்றிக் கலகக் காலத்தில் பாதிக்கப்பட்ட ஃபிரெஞ்சு மக்களுக்கு நஷ்ட ஈடு அளித்தார். கியூபெக்கிலுள்ள கன்சர்வேடிவ்களின் தேச பக்தியைக் கூர்ந்து கவனித்த பிறகு, 'அமெரிக்க நிலத்தில் கடைசியாக பிரிட்டிஷ் கொடிக்கு மரியாதை செலுத்துபவர் ஏன் ஒரு பிரெஞ்சு கனடி யனாக இருக்கக்கூடாது'' என்று கேட்டார். அடிப்படையானக் கொள்கைகளை நன்கு புரிந்துகொண்டதுமன்றி, மற்ற மராமத்து பணிகள், 'கிரேண்ட் டிரங் ரயில்வே' அமைத்தல், டோரண் டோவில் சமயச் சார்பற்ற பல்கலைக் கழகத்தை அமைத்தல், திருச்சபையிடம் ஒதுக்கப்பட்ட நிலங்களையும் சமயச் சார்பற்ற தாகச் செய்தல், கியூபெக்கிலுள்ள பெரு நிலக்கிழார்களின் நில உரிமைகளை அகற்றுதல்போன்ற சில நல்ல காரியங்களையும் அவர் செய்தார்.

பிரிட்டன், கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாறு களில் காணப்படுகின்ற தொடர்பில், அவருடைய சிறந்த சில பணி களும்கூட இடம் பெறுகின்றன. இரத்தக் கலப்பு இரு புறங் களிலுமுள்ள எல்லைப் பகுதிகளில் வசிக்கின்றவர்களிடையே ஏற் பட்டது. 1847-வது ஆண்டில் அயர்லாந்தில் ஏற்பட்ட பஞ்சத் திற்குப் பிறகு, பெருமளவில் ஐரிஷ்காரர்கள் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினர்கள். மேரிடைம்ஸ் பகுதியினர் பொருளா தாரத் துறையில் நியூ இங்கிலாந்தை நம்பி வாழவேண்டியதா யிற்று. பெரிய ஏரிகளிலிருந்து (Great Lakes) வெட்டப்பட்ட கனடாவின் கால்வாய்களும், பிரிட்டிஷ் தொடர்புகளுக்கு வசதி யாக வாய்த்தன. அமெரிக்கர்களுடைய அரசாங்கத்தைப்பற்றிய எண்ணங்கள் பாபிலோனை மிகவும் பாதித்தன. ஒன்டோரி யாவை ஆக்கிரமித்து வந்த அமெரிக்கர்கள் 1837-ல் கலகக்காரர் களுக்கு இரக்கம் காட்டினர்கள். அதனையொட்டிய பல அரசியல்

சிக்கல்கள் தீர்க்க முடியாமல், சில காலம் நீடித்தன. ஒன்று 1783-ல் ஏற்பட்ட சமரசத்திலிருந்து கிளம்பியது. இந்த சமரசம், நியூஃபவுண்ட்லேந்திலும், செயின்ட்லாரன்ஸ் பகுதிகளிலும் அமெரிக்கர் மீன் பிடிக்கும் உரிமைகளைப்பற்றியது மற்றொன்று அதே காலத்தில் ஏற்பட்டதுதான். இது மேய்ன்-நியூ பிரன்ஸ்விக் எல்லைத் தகராரை அடிப்படையாகக் கொண்டது. ஆஷ்பர்ட்டன் பிரபுவின் முயற்சியால் 1841-ல் இந்தத் தகராறு முடிவடைந்தது. மூன்றாவது, மேற்கு நாடுகளுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தித்தந்தது.

1818-ல் ஏற்பட்ட எல்லை நிர்ணயப்படி, எல்லைக்கோடு வுட்ஸ் ஏரியிலிருந்து 49-வது சம கோட்டில் ராக்கிஸ் வரையிலும் சென்றது. அதற்கப்பால் இரு கட்சியினரும் ஸ்பானிய நிலப் பகுதிகளில் ஊடுருவ விரும்பவில்லை; அப்பகுதிகளில் மென்மயிர் வியாபார நிலையங்களும், கடற் தலைவர்களின் கண்டுபிடிப்புகளும் இருந்ததனால், 'ஒரிகன்' என்று கூறப்படுகின்ற அப்பகுதியில் பொதுவாக எல்லோருமே குடியேறச் சம்மதம் தெரிவித்தனர். இப்பகுதி பசுபிக்கடலை நோக்கியிருந்தது. இந்தக் கோட்டோடு நிறுத்திக் கொண்டால், பிரிட்டனுக்கு கொலம்பியா நதியும், வான்கூவர் குடியேற்றப் பகுதிகளும் பயனில்லாமல் போய் விடுகின்றன. ஹட்ஸன் பே கம்பெனியின் ஆட்சேபக் குரல், அலை அலையாக வந்து குவிந்த அமெரிக்க குடியேற்றவாதிகளிடம் எடுபடவில்லை. 1844-ல் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த போல்க் (Polk) வெற்றி பெற்றார். அவருடையத் தேர்தல் பிரச்சாரம், "54–40 சதவிகிதம் அல்லது போர்" என்ற அடிப்படையில் இருந்தது. அதாவது ரஷ்ய அலாஸ்காவைத் தொடும் சமதோட்டுப் பகுதியை அவர் கோரினர். 1846-ல் இதற்காக ஏற்பாடு செய்வதற்கு, நீடித்த பேச்சு வார்த்தைகள் நடந்தன. இந்த சமரசத்தால், வான்கூவர் தீவு பிரிட்டனுக்கு வந்தது, பிரிட்டிஷ் கொலம்பியா உருவாவதற்கும் சாத்தியமாக இருந்தது.

எல்ஜினின் முக்கியமான பிரச்சினை, வர்த்தக முறையை நிர்ணயம் செய்வதில் இருந்தது. பிரிட்டிஷ் சலுகைகள் கனடிய வர்க்கத்தை வளர்ச்சியுறச் செய்தன. எடுத்துக் காட்டாக, நியூபிரன்ஸ்விக்கின் மரம் ஏராளமாகப் பிரிட்டனுக்கு அனுப்பப் பட்டது. ஹஸ்கிஸன் கனடிய கோதுமைக்கு குவார்டர் ஒன்றுக்கு 5 ஷில்லிங்கு தீர்வை விதித்திருந்தார். இது 1843-ல் ஒரு ஷில்லிங்குக்கு குறைக்கப்பட்டுவிட்டது. இந்தக் கொள்கையால், கனடா அதன் கால்வாய்களை அபிவிருத்திச் செய்தது. கனடாவை,

அமெரிக்காவில் உள்ள தானியக் களஞ்சியமாக பிரிட்டன் பாவித்தது. அமெரிக்க வர்த்தகர்கள், கனடிய ஏற்றுமதிகளை நியூயார்க் மூலமாக அனுப்புவதற்கு, கால்வாய்களை அமைத்தும், கிடங்குகளை அமைத்தும் போட்டியிட்டனர். அதே சமயத்தில் பிரிட்டனுக்குச் செல்லும் ஏற்றுமதிகளில் ஆறில் ஒரு பாகத்தை அவர்கள் பெற்றார்கள். பால்டிக் நாடுகளிலிருந்து பிரிட்டன் மிகக் குறைவான விலையில் மரம் வாங்க ஆரம்பித்தவுடன், அமெரிக்கர்கள், பிரிட்டனின் இந்த வர்த்தகப் போக்கைக் கண்டித்தனர். அரும்பாடு பட்டு அமைத்த கனடிய போக்குவரத்துகள், பீல் தானியச் சட்டத்தை ரத்து செய்தவுடன் மிகவும் பாதிக்கப்பட்டன. மேலும் இனத் தகராறுகள் காரணமாக, கனடிய வர்த்தகர்கள் கடற்போக்குவரத்துச் சட்டங்களை ரத்து செய்யும்படி கோரினர்கள். இச்சட்டங்களால், அவர்களுடைய போக்குவரத்து கட்டணங்கள் உயர்ந்திருந்தன. இவ்விதச் சலுகைகள் உடனடியாகத் தராவிடில், அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணைந்து கொள்வதில், பெரும் நன்மைகள் இருப்பதை எடுத்துரைத்தார்கள். இந்தப் பொருளாதாரக் குறைபாட்டை நீக்குவதற்கு, பொருளாதாரப் பரிகாரமே தகுந்தது என்று எல்ஜின் கருதி, 1854-ல் பரஸ்பர உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். கனடாவின் மீன், மரம், தானியம் ஆகிய பொருள்களை அமெரிக்க மார்க்கட்டுகளில் விற்க வசதிகளைச் செய்து தருவதால், பெரும்பான்மையான பொருளாதார அதிருப்திகளும் குறையும் என்று அவர் கருதினர். அமெரிக்கர்கள் குறைந்த கட்டணங்களை அளித்து, நோவாஸ்கோஷியா கரையில் மீன் பிடிக்கும் சலுகைகளைப் பெற்றனர். அதைப் போன்று செயின்ட் லாரன்ஸ் கால்வாய்களிலும் மீன் பிடிக்கும் உரிமைகள் தரப்பட்டன.

பிரிட்டனில் ஏற்பட்ட மாறுதல்களும், சீர்திருத்தங்களும், கனடிய நாடு, சுய உணர்வு பெறுவதற்கும், சுய ஆட்சி பெறுவதற்கும் உதவியாக இருந்தன.

ஆனால் அட்லாண்டிக்கிலுள்ள, மேற்கு இந்தியத் தீவுகளில் வேறுவிதமான விளைவுகள் ஏற்பட்டன. சில காலம் போர்கள் நிகழ்ந்தால், அதனுடைய செழுமை ஒத்திப்போடப்பட்டது. 1830-ல் கூட இந்தச் சர்க்கரைத் தீவுகளின் வியாபாரம், பிரிட்டிஷ் வட அமெரிக்காவைவிட அதிக லாபத்தைப் பிரிட்டனுக்கு அளித்தது. ஆனால், நாளடைவில் அந்தத் தீவுகளில் வாழ்கின்றவர்களின் வாழ்க்கைச் சீர்குலைந்துவிட்டது. அவர்களுக்கு நிறைய குறைகள் ஏற்பட்டன. இங்கிலாந்திற்குச் சர்க்கரை அனுப்புவதில்

அவர்களுக்குத் தனி உரிமைகள் இருந்ததென்றாலும், இங்கிலாந்தின் கப்பற் போக்குவரத்துச் சட்டங்களும், அதனுடைய தீர்வைகளும் சர்க்கரை விலையை மிகவும் அதிகமாக்கிவிட்டன. அதனால் சர்க்கரை நுகர்தல் தேக்கமடைந்தது. அவர்களுடைய தீவுகளில் உள்ள பெரும்பான்மையான நிலச்சுவான்தார்களும் நிலத்தில் இல்லாதவர்களாவார்கள். நிலங்களை அவர்களுடைய வக்கீல்களிடமும், கண்காணிப்பவர்களிடமும் ஒப்படைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டனர். 1807-ல் அடிமை வியாபாரம் ஒடுக்கப்படவே, அவர்களுக்கு அடிமைத் தொழிலாளிகள் கிடைப்பது கடினமாகிவிட்டது. ஆனால், அடிமைகளைச் சாகுபடிக்குப் பயன்படுத்தி நல்ல லாபத்தை அடையும் கியூபா, பிரேஸில்போன்ற சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடுகளுடன் போட்டியிட முடியவில்லை. பிறகு பிரிட்டன், மரூஷியஸ், கிழக்கத்திய நாடுகளிடமிருந்து சர்க்கரையைப் பெறுவதற்காக அவர்களுடைய ஏற்றுமதிகளிலும் தீர்வைக் குறைப்பு ஏற்படுத்தியவுடன், இன்னும் போட்டி அதிகமாகிவிட்டது.

இந்தத் தீவுகள் அடைந்தத் தொல்லைகளைப்போல, மற்ற எந்தக் காலனியும் பேரரசு நாட்டில் அடையவில்லை. பிரிட்டனில் அடிக்கடி மாறுதல் ஏற்படுவதாலும், சில நல்லவையாக இருந்த போதிலும் நேரடியாகவே இத்தீவுகளைப் பாதித்தன. 1833-ல் ஏற்பட்ட 'அடிமை விடுதலை' அவர்களுக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனால் அவர்களுக்குப் பணமாக நஷ்ட ஈடு தரப்பட்டது. ஆனால் இந்தப் பணத்தைவிட, அதற்கு ஈடாக அவர்கள் இழந்த மதிப்பு மிகவும் அதிகமானது. 1838வரை, இதற்கிடையே ஏற்பட்ட தொழில் பயிற்சி தருகின்ற திட்டம் வெற்றி அடையவில்லை. கூலிக்கு அமர்த்தப்படுகின்ற நீக்ரோக்கள் பொதுவாக, திறமையற்றவர்களாகவும், வேலை செய்வதில் சுறுசுறுப்பில்லாதவர்களாகவும், வேலை செய்யவே விரும்பாதவர்களாகவும் இருந்ததனால் பயிர்கள் நன்கு கவனிக்கப்படவில்லை. உற்பத்தியும் மிகவும் குறைந்துவிட்டது. இந்த உற்பத்தி குறைவு, வெளி நாடுகளிலிருந்து வருகின்ற சர்க்கரைக்கும், அடிமைகளை வைத்து சாகுபடி செய்கின்ற சர்க்கரை உட்பட, விதிக்கப்பட்டத் தீர்வைகள் சமநிலைக்குக் கொண்டுவராததற்கு முன்பே காணப்பட்டது. இந்தச் சமநிலைத் தீர்வைகளை விக் அரசாங்கம் 1846–52-ல் கொண்டு வந்தது.

அவைகளின் உள்நாட்டு நிலவரங்களும் மாறுபட்டிருந்தன. ஆண்டிகுவா (Antigua) தீவுகளில் பண்ணையாளருக்கும், நீக்ரோக்

களுக்கு மிருந்த உறவு நல்லவிதமாக இருந்தது. ஆனால், ஜமாய் காவில் அவர்களிடையே பலத்த வெறுப்பு காணப்பட்டது. சமீ பத்தில் கைப்பற்றிய டிரினிடாட்போன்ற காலனிகளில், நல்ல அரசாங்கமும், நல்ல நிலமும் இருந்தன. தோட்டப் பயிரிடுகிற வர்களே; அவர்களுடைய பெரும்பான்மையான துன்பங்களுக்கும் காரணம், நிலத்திலேயே அவர்கள் இருப்பதில்லை. அல்லது மிகவும் கொடுமையாக அடிமைகளை வேலை வாங்கினர்கள்; அவர்களுக்குப் பேரரசு ஆணைகளைப்பற்றியும் கவலையில்லை; அல்லது சமய நலன்களைப்பற்றியும் கவலை இல்லை. சுருக்கமாகச் சொன்னால் அவர்களுக்கு மனிதாபிமானத்தை மதித்துப் போற்றும் மனமே இல்லை. நாளடைவில் இந்த நிலை மாறுவதற்கு இந்தியத் தொழிலாளர்களை அங்கே குடியேற்றினர்கள். மாற்றுப் பயிர்கள் விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் இத்தீவுகளில் சிறிது மாறுதல் ஏற்பட்டன. அங்கே, நீக்ரோக் களும், மற்ற நிறத்தினரும் அதிகமாகக் குடியேறியவுடன், அதற் கேற்ப வெள்ளையர்களின் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே வந்தது. மந்தநிலையும், ஒழுக்கமின்மையும், ஒரு காலத்தில் செல்வம் கொழித்து, ஆணவமிக்க, சுயஆட்சிபெற்ற இந்தத் தீவு களில் குறைந்தன.

சிறிது காலத்திற்குப் பிறகு, ஆனால் சிறிய அளவில் ஆஸ்டி ரேலியாவில் குடியேற்றம், நிலம், சுதேச இனங்கள், சுய ஆட்சி போன்ற பிரச்சினைகள் கிளம்பின. ஆனால், அங்கே வெல்திறன் வாரிசுகளோ, அல்லது ஐரோப்பிய முறைகளோ இன்னும் ஏற்பட வில்லை. அரசியல் சூழ்நிலையே இல்லாத ஒரு வெறும் இடத்தில் பிரிட்டிஷ் சமுதாயங்கள் ஏற்படுத்திய முறையே அங்கிருந்தது. அமெரிக்காவை இழந்தவுடன், கைதிகளைத் தூரமான பகுதி களுக்கு அனுப்ப ஒரு மாற்று இடம் அவர்களுக்குத் தேவைப் பட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு கேப்டன் குக்குடன் அங்கே சென்ற ஜோசப் பேங்க்ஸ் என்ற விஞ்ஞானியிடம், இந்த இடத்தைப்பற்றி ஆலோசனை கேட்கப்பட்டது. 1778-ல் கேப்டன் பிலிப், 700 குற்றவாளிகளுடன் பாட்டனி பே என்ற இடத்தை அடைந்தனர் சிட்னி என்ற நிலப்பகுதியைத் தேர்ந்தெடுத்து, பின்பு படிப்படியாக அந்தக் கண்டத்தின் பாதி கிழக்குப் பகுதி யைக் கைப்பற்றினர் அவர்கள் ஃபிரெஞ்சு படையெடுப்பு ஏற் படும் என்று எச்சரிக்கையுடன் இருந்தனர். எச்சரிக்கையுடன் இருக்கும்படி அவர்களுக்கு இங்கிலாந்திலிருந்து உத்திரவு இடப் பட்டது. இருபது வருடங்களாக இந்த சிறிய குடியேற்றப் பகுதி அப்படியே நீடித்தது. மேற்குப் பகுதியில் அவர்கள் முன்னேற

முடியாதபடி மலைத்தொடர் நீடித்திருந்தது. வான்டிமேன்ஸ் லேண்ட் (Vandiemans Land) அல்லது டாஸ்மேனியா (Tasmania) பகுதிமட்டும் இந்தப் பயங்கரமான கைதிகள் குடியேறுவதற்கு வசதியாக இருந்தது. நெடுங்காலம்வரை இந்தக் குற்றவாளிகளின் எண்ணிக்கையே மிகுந்திருந்தது. நியூ சவுத் வேல்ஸில் (New South Wales) 30,000 வயது வந்தவர்கள் 1823-ல் இருந்தனர். அந்த எண்ணிக்கையில் 23,000 பேர்கள் கைதிகளாக இருந்தவர்கள். இந்நிலையில், அங்கே பிரதிநிதித்துவ அரசாங்கம் ஏற்படுவதற்கே வாய்ப்பில்லாமல் இருந்தது. இருப்பினும் இந்த எதிர்ப்பான சூழ்நிலையிலும் அவர்களுடைய அரசியல் உணர்வு குறிப்பிட்ட வகையில் வளர்ச்சியுற்றது.

குற்றவாளிகள் என்று அப்பொழுது கருதப்பட்டவர்கள் சாதாரண வேட்டையாடும் விதிகளை மீறியதற்காகவும் கூட நாடு கடத்தப்பட்டவர்களேயாவர். அல்லது சிறு தவறுதல்களைச் செய்தவர்களும்கூட அவ்வாறு அனுப்பப்பட்டார்கள். இவர்களில் பலர் அரசியல் குற்றவாளிகளாகவும் இருந்தனர்.

1809–1821 வரை மேக்குவாரி (Macquarie) என்ற ஹைலாந்து போர் வீரன் கவர்னராகப் பணியாற்றினார். அவருடைய ஆற்றல் சிறிது குறைவாக இருந்தாலும், அல்லது சண்டை போடும் தன்மையை விடவில்லையென்றாலும், அவர் ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்தார் அதாவது இந்தக் குற்றவாளிகளை இங்கே தண்டனைக்குள்ளாக்குவதை விட, அவர்களைச் சீர்திருந்தச் செய்வதே நல்லதென்று அவர் கருதினர். பல எதிர்ப்புகளிடையே, அவர் குற்றவாளிகளின் தகுதிகளுக்கேற்றவாறு அவர்களுக்கு நல்ல பதவிகளையும், நிலத்தையும் அளித்து புது வாழ்வு தந்தார். சில குற்றவாளிகளை, அவர் நீதிபதிகளாகவும் நியமித்தார். இவ்விதமாக அந்த மக்கள் முன்னுக்கு வந்தனர். பின்பு செல்வத்தையும் தேடிக் கொண்டு, சமுதாயத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக, ஜுரர்கள் பதவிகளைப் பெற முயற்சி செய்தனர்.

மற்றொரு ஹைலேண்டரான ஜான் மக் ஆர்தர் என்பவர் முதலாக ஆஸ்திரேலியாவின் செழுமைக்கு வழி வகுத்துத் தந்தார். (Kew) என்ற இடத்திலிருந்து மெரினோ ஆடுகளை இங்கே கொண்டு வந்து, அவ்வகை ஆடுகளைப் பெருவாரியாக உற்பத்தி செய்தார். ஆரம்ப 'முப்பதுகளில்' ஆஸ்திரேலியா கம்பளிக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. அதனால் இந்த வர்த்தகத்தில் நல்ல லாபம் அடைந்து வரும் ஸ்பானியர்களை மார்க்கட்டிலிருந்தே விரட்டி விட்டார்கள். சாக்ஸன் கம்பளி வியாபாரமும் இதனால்

பாதிக்கப்பட்டது. மேக்குவாரி, இந்த ஆடுமாடுகளை நன்கு வளர்த்துவதற்காக நீலமலைகளை ஒட்டினாற்போல, சிறந்த மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தினர்.

இருபது வருடங்களாக, சிறு சிறு புது முயற்சியாளர் கூட்டம் கூட்டமாகச் சென்று, துணிச்சலுடம் மலைகளைக் கடந்து, பெரிய நதிகளில் சென்று, பாலைவனங்களையெல்லாம் கடந்து புதிய இடங்களையும், கணவாய்களையும் கண்டுபிடித்தனர். ஆங்காங்கே, மனிதர்கள் வாழ்கின்ற சின்னங்களும் தோன்றின. புகையை மூட்டி எச்சரிக்கை செய்தலும், அல்லது ஈட்டிகளை வைத்துக் கொண்டு மிரட்டுகிற சுதேச மக்களும் ஆங்காங்கே தோன்றியதால் மனித நடமாட்டம் இருக்கிறதைப் புரிந்து கொண்டார்கள். ஆனால் வெள்ளை மனிதர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. நாரைகள் பறந்து சென்றதால், தண்ணீர் உள்ள பகுதிகள் அருகில் இருப்பதை உணர்ந்து மேலும் சென்றனர். இடுப்பு வரை வளர்ந்துள்ள புல் தரைகளும் சில சமயத்தில் சேற்றுப்பகுதிகளும், அல்லது சில சமயங்களில் பாறைகள் மிகுந்துள்ள பகுதிகளும், அவைகளுக்கு மேல் கழுகுகளும், பருந்துகளும் வட்டமிட்டுக் கொண்டிருத்தலும், நீர்வற்றிப் போன பள்ளங்களில் இறந்து கிடக்கும் மிருகங்களும், சுதேச மக்கள் வறண்ட நாக்குகளுடனும், மற்ற பல தொல்லைகள்படுவதும், மற்றும் பல வறட்சி மயமான காட்சிகளையும், அநுபவங்களையும் அவர்கள் கடந்து சென்றனர். இக்கண்டத்தின் நடுவில் உள்ள வறண்ட பிரதேசத்தில் மக்கள் படும் அவதிகளைத் தெரிந்து கொண்டனர். வடக்கிலிருந்து சென்ற ஹ்யூம் (Hume) ஹோவல் (Hovell) ஆகியோர் விக்டோரியாப் பகுதியைக் கண்டுபிடித்தனர். ஆலன் கன்னிங்காம், செழிப்பான 'டார்லிங் டவுன்ஸ்' (Darling Downs) என்ற பகுதியைக் கண்டுபிடித்தார். ஸ்டர்ட் (Sturt) என்பவர் டார்லிங் வழியாகச் சென்று முரே (Murray) என்ற நதியுடன் கலக்குதலையும், பின்பு இவ்விரண்டு நதிகளும் தெற்கே கடலில் கலக்கும் இடத்தையும் கண்டுபிடித்தார்.

இவ்விதமாகப் பல செடி நூல், மண்ணூல் வல்லுநர்களும், மாலுமிகளும், ஆடுகளை வளர்ப்பவர்களும், மற்றும் சிப்பாய்களும், துணிச்சலாகப் பல இடங்களைக் கண்டுபிடித்ததால், நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் கூட்டம் கூட்டமாகக் குடியேற மக்கள் குவிந்தனர். எந்த விதிகளையும் பொருட்படுத்தாது இவர்கள் கிடைத்த நிலத்தை எடுத்துக் கொண்டு, அங்கேயெல்லாம் ஆட்டுப் பண்ணைகளை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த நாட்டினுடைய செல்வமெல்லாம் அவர்களுடைய ஆடுகளிலிருந்து

வருவதுதான். வருடத்திற்கு ஒரு முறை, அவர்களுடைய ஆடுகளை யெல்லாம் மாட்டு வண்டிகளில் கொண்டு வந்து துறைமுகப் பட்டி னங்களில் குவித்தார்கள். குற்றவாளிகளை அடைத்து வைத் திருக்கும் சிறைகளை ஒரே இடத்தில் வைக்காது பல இடங்களில் சிதறுதலாக அமைக்க முற்பட்டனர். ஃபிரெஞ்சு ஆக்கிரமிப்பு ஏற்படலாம் என்ற பயம் வேறு ஒரு பக்கம் இருந்துவந்தது. இங்கிலாந்திலுள்ள தரும சிந்தனை உடையவர்கள் வேறு இந்தக் காலனி முன்னேற்றம் அடைய உதவி செய்தனர். இவ்விதமாகப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கியிருந்ததால், மேலும் புதிய காலனிகளை வடபுறத்தில் அமைக்க முற்பட்டனர். பிரிஸ்பேன் (Brisbane) என்ற இடத்தில் சிலர் குடியேறினர். 1826க்குப் பிறகு அந்த இடம் குவீன்ஸ்லேண்ட் (Queensland) என்ற பெயரில் வழங்கியது. 1834-ல் போர்ட் பிலிப் (Port Phillip) என்ற இடத்தைச் சுற்றியுள்ள விக்டோரியாவின் துவக்கமும், 1829-ல் ஸ்வான் நதி யோரம் குடியேறுதலும், பின்பு அது மேற்கு ஆஸ்திரலியா என்று அழைக்கப்படுதலும், 1836-ல் வேக்ஃபீல்டின் முயற்சியால் அடி லேய்டு, தெற்கு ஆஸ்திரேலியா ஆகியவை உருவாகுதலும், போன்ற பல நிகழ்ச்சிகள் அப்பொழுது நிகழ்ந்தன. கடைசியில் சொன்ன இடங்களில் குடியேறுவதற்கு அவர்கள் பல தொல்லை களை அனுபவித்தனர். மேற்குப் பகுதியில் ஒரு சிறிய கூட்டம், அடர்ந்த காடுகளை அகற்றுவதில் முனைந்திருந்தது. அங்கே யுள்ள புதர்களடங்கிய ஆற்றங்கரையோரத்துப் பகுதிகளை துப்புரவாக்குவதற்கு, அவர்கள் பெருமுயற்சி செய்தனர். தெற்குப் பகுதிகளில் வேக்ஃபீல்டின் உத்தரவுகளும், புரிந்து கொள்ளாத அரசாங்கத்தின் ஆணைகளும் பல குடியேற்றவாதிகளை வேறு பகுதிகளில் குடியேறும்படி செய்தன.

ஆனால், நியூ சவுத் வேல்ஸ் காலனி வேகமாக முன்னேற்ற மடைந்து வந்தது குடியேறுவதற்கு உதவிகளைப் பெற்று, பேரளவில் மக்கள் அங்கே குடியேற ஆரம்பித்தனர். அவர்களில் 48 சதவிகிதம் ஐரிஷ் மக்கள். 1840–50-ல் அவர்கள் புதிய சமுதாயத்தையே அங்கே தோற்றுவித்தார்கள். பழைய சமுதாய பிரிவினைகள் எல்லாம் மாறிப் புதிய பொருளாதார அடிப்படையில் மக்கள் தங்களை மாற்றி அமைத்துக் கொண்டனர்.

நிலம் வைத்திருப்பவர்களுக்கும், ஆடுகளை வளர்த்து வருகிறவர்களுக்கும் பொருளாதார அடிப்படையில் பல வேறு பாடுகள் தோன்றின. ஏற்கனவே விடுதலை அடைந்தவர்கள், புதி தாகக் குடியேறிய இயந்திரத் தொழிலாளர்களையும், கடைக்காரர் களையும், விவசாயிகளையும், கூலிக்கு வேலை செய்கிறவர்களையும்

வெறுத்தனர். இந்தப் புதிய வகுப்பினர் நாடு கடத்தலை விரும்பவில்லை. டாஸ்மேனியாவை எப்படியும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் வேக்ஃபீல்டின் ஆட்களுக்கும் இருந்தது. 1840-ல் இவ்விதமாக குற்றவாளிகள் இங்கே அனுப்புவதை நிறுத்தினர்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கு ஆஸ்திரேலியாவிலும் இதைப் போன்ற நிலைமை ஏற்பட்டது. டாஸ்மேனியாவில் இருந்ததைவிடச் சிறிது அதிக காலம் வரை அதாவது 1868 வரை இப்பிரச்சினை நீடித்தது. கிழக்குப் பகுதிகளில் இக்கொள்கையைப் பலமாக எதிர்த்தார்கள். 'இருபதுகளிலிருந்தே' நியூ சவுத் வேல்ஸ் பகுதிக்கு சுய ஆட்சி படிப்படியாக ஏற்பட்டு விட்டது. முதல் முன்னேற்றம் 1842 ஆம் ஆண்டின் சட்டம் இயற்றிய திலிருந்தே ஏற்பட்டது. அதன்படி, ஒரு சட்டசபை, சொத்துரிமையுள்ளவர்கள் வாக்களித்து மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தல், பழைய குற்றவாளிகளுக்கு வாக்களிக்கும் உரிமையும், அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படும் உரிமையும் தரப்பட்டன.

கிரே பிரபுவுக்குத் தாராள குணம் இருந்ததைப் போன்றே, நெகிழ்வில்லாத தன்மையும் உடையவராவர் அவர். அவருடைய சட்டப்படி அரசனுக்கு, செலவினங்களை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் தரப்பட்டது. அந்தச் சமயத்திலேயே இயற்றிய மற்றொரு சட்டபடி, நில விற்பனை வேக்ஃபீல்ட் திட்டத்தை ஒட்டிச் செய்ய வேண்டுமென்றும், அதனுடைய முழு கட்டுப்பாடும் பேரரசின் அதிகாரத்தில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

"நாற்பதுகளின்" கடைசியில், கிப்ஸ் (Gipps) என்ற பலமிக்க கவர்னர் பெரியதொரு எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆடுகளை வளர்ப்பவர்கள், நிலங்களுக்கு ஏற்பட்ட விலை நிர்ணயத்தை எதிர்த்தனர்; நீண்டகால குத்தகை வசதிகள் வேண்டுமென்று கோரினர். நிலப் பிரச்சினைகளுடன் அவர்களுடைய பிரச்சினைகளும் சேர்ந்து பெரிய குழப்பத்தை ஏற்படுத்தி விட்டன. அவர்களின் அரசியல் தலைவரான வெண்ட்வெர்த், என்பவர், வாக்காளர் விஸ்தரிப்பு போன்ற புதிய தேவைகளைப் பற்றிக் கவலைப்படாதவர். சிறிய அளவில் ஆடுகளை வளர்ப்பவர்களுக்கு நிலம் தேவை என்று அவர் போராடியதற்குப் பிறகு 1845-ல் பேரரசு சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி குடியேறிய பகுதிகளுக்கப்பால், நிலங்கள் நீண்டகால குத்தகைக்குத் தரவும்; அவைகளை வாங்குவதற்கு அவர்களுக்கு முன் உரிமைகளை வழங்கவும், இந்தச் சட்டம் உதவி செய்தது. அவர்களுடைய அரசாங்கமும் படிப்படியாக, சமரச முறையிலேயே முன்னேறியது.

1850-ல் இயற்றிய ஆஸ்திரேலியா அரசாங்கச் சட்டம் வாக்காளர்கள் எண்ணிக்கையை விஸ்தரித்தது. விக்டோரியா புதிய நாடாக அறிவிக்கப்பட்டது. விக்டோரியா, டாஸ்மேனியா, தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள சட்டமன்றங்களின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அதேசமயத்தில் நிலங்கள், நில வருவாய், அரசாங்கச் செயலாளரின் அதிகாரத்தில் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டது. ஆஸ்திரேலியா முழுவதற்கும் ஒரு கூட்டாட்சி சட்டமன்றம் ஏற்படுத்துகின்ற ஆலோசனையைக் கிரே எடுத்துரைத்தார். ஆனால், அவருடைய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை- இதற்கு எதிர்ப்பு பிரிட்டிஷ், ஆஸ்திரேலியா பாராளுமன்றங்களிலிருந்தே கிளம்பியது.

பழைய ஆஸ்திரேலியாவுக்கும், புதிய ஆஸ்திரேலியாவுக்கும் கன்சர்வேடிவ் வெண்ட்வொர்த் என்பவரும், தீவிரவாதியான ராபர்ட் லோவ் என்பவரும் அரசாங்கம் அமைப்பதைப்பற்றித் திட்டவட்டமான முடிவுகளையும், பேரளவில் பொறுப்பான அரசாங்கத்தை அமைக்கும் உரிமைகளையும் கோரினர். 1851-ல் தங்கம் கண்டுபிடிக்கப்படவே, கூட்டம் கூட்டமாக மக்கள் அங்கே குடியேற ஆரம்பித்து விட்டனர். இங்கே கண்டுபிடிக்கப்பட்ட தங்கம் மிக உயர்ந்த ரகத்தைச் சார்ந்ததாகும். நியூ சவுத் வேல்சில் உள்ள பேத்தர்ஸ்டிலும் (Bathurst) விக்டோரியாவில் உள்ள பெண்டிகோ, (Bendigo) பாலராட் (Ballarat) பகுதிகளிலும், உள்ளவர்களும், புதிதாகக் குடியேறியவர்களும் சுரங்கங்களைத் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

1852-ல் 94,000 பேர் விக்டோரியாவில் வந்து குடியேறினர். தங்கம் கண்டுபிடித்த பத்தாண்டுகளில், 400,000 பேர் இருந்த மக்கள்தொகை, மூன்று மடங்கு அதிகரித்துவிட்டது. 1852-53-ல் புதிதாக மாறிவிட்ட இந்தச் சமுதாயத்தினருக்கு, பேரரசு அரசாங்கம் அவர்கள் கேட்டதை எல்லாம் கொடுத்தனர். பொறுப்பான அரசாங்கம், நிலங்களை அவர்கள் அதிகாரத்திலேயே விட்டுவிடுதல், அவர்களுக்கு வேண்டிய அரசியல் அமைப்புகளை உருவாக்கிக் கொள்ளுதல், போன்ற உரிமைகளை அளித்தது.

அரசாங்கத்தின் ஆதரவு பெற்று ஆஸ்திரேலியா வளர்ந்தது ஆனால், நியூஸீலந்து தனிப்பட்டவர்களுடைய முயற்சியால் வளர்ந்தது பதினேழாவது நூற்றாண்டுக்குப் பிறகு, பேரரசின் ஆதரவைப்பெறுமல், இது தனிப்பட்டவர்களின் முயற்சியால்

வளர்ந்தது. 1769–70-ல் கேப்டன் குக், இந்தத் தீவுகளை முழுவதும் பார்வையிட்ட பிறகு, இவை குடியேற்றத்திற்குத் தகுதியானவை என்று அறிவித்தார். ஆனால், அவர் கூறி எழுபது ஆண்டுகளுக்குப்பிறகுதான் அத் தீவுகளில் மக்கள் குடியேற ஆரம்பித்தனர். இதற்கிடையே வர்த்தகர்களும், சில தப்பிச் சென்ற குற்றவாளிகளும், மாலுமிகளும், அங்கே சென்றனர். மற்றும் சிலர் மயோரியர் (Maoris) என்ற மக்களுடன் வசிக்க முற்பட்டனர். அவர்கள் இந்த மயோரிகளிடம் பல கெட்ட பழக்கங்களையும், அறிமுகம் செய்தனர். இந்த மயோரிகளைக் குடிக்கவைத்தனர். பல தீய பழக்கங்களைக் கற்றுக்கொடுத்தனர். கடைசியில் இருவரும் கேளிக்கையாக வாழ்க்கை நடத்தினர். ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பல துணிச்சலுள்ளவர்களும் அங்கே குடியேறினர். இன்னும் ஃபிரெஞ்சு போர்க் கப்பல்களும் அப்பக்கத்தில் நடமாட ஆரம்பித்தன. பல சமயப் பிரச்சாரகர்கள் மயோரிகளை, வெள்ளை மக்களிடமிருந்து காப்பாற்ற முயன்றனர். அவர்களில் மிகச் சிறந்தவர்கள், ஸைமன் கேம்பிரிட்ஜ் சமயப் பிரச்சாரகர்கள் குழுவைச்சார்ந்த, ஸேம்யுவல் மார்ஸ்டன் (Samuel Marsden) என்பவரும். ஹென்றி வில்லியம்ஸ் என்பவரும் ஆஸ்திரேலியாவிலிருந்து அத் தீவுகளுக்குச் சென்று மயோரிகளை வெள்ளையர்களிடமிருந்து காப்பாற்ற முயற்சி செய்தனர். இந்த ஆதி மக்களும் நிலங்களைக் கோர முற்பட்டனர். அவர்களுக்கு வெள்ளை மனிதர்கள் ஆயுதங்களையும் தந்து உதவினர். இதனால் அவர்கள் பெரிய மோதலை ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த மயோரிகள் என்பவர்கள் மலேயாவிலிருந்து குடியேறிய மக்கள்; அவர்கள் போர் செய்வதில் விருப்பமுள்ளவர்களாகவும், நல்ல அறிவுடையவர்களாகவும் காணப்பட்டனர். மனிதர்களைக் கொன்று புசிக்கும் பழக்கத்தையும் உடையவர்கள். 1830-ல், கிளெனல்க், (Glenelg) ஸ்டீபன் என்ற சமயப் பிரச்சாரகர்கள் இத் தீவுகளில் குடியேறுவதை எதிர்த்தனர்.

குடியேறுவதற்காக அனுமதி கோரியிருந்த வேக்ஃபீல்டின் கம்பெனிக்கு அரசாங்கம் சாஸனம் கொடுக்கவில்லை. ஆனால் 1839 ஆரம்பத்தில், இந்தக் கம்பெனியின் சொந்தப் பொறுப்பில் ஒரு கப்பல் நிறைய மக்களை ஏற்றிக்கொண்டு அங்கே சென்றனர். சில மாதங்கள் கழித்து, அரசாங்கம் 'மிகவும் தயக்கத்துடன்' ஒரு போர்க் கப்பலை அனுப்பி, மயோரிகளையும், எதிர்பார்த்திருந்த ஃபிரெஞ்சு படையெடுப்பையும் தடுக்க அனுப்பியது. பிப்ரவரி 1840-ல் வெயிட்டாங்கி (Waitangi) என்ற உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி அரசி அந்த காலனியின்

இறைமையாளர் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. மயோரிகளின் நில உடமைகளைப் பாதிக்காமல், ஆனால் அவர்கள் நிலங்களை விற்பதாக இருந்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கே விற்க வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. நிர்வாணமாகத் திரியும் இந்தக் காட்டுமிராண்டிகளிடம் செய்துகொண்ட உடன் படிக்கையை அரசாங்கம் மதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று வேக்ஃபீல்ட் கம்பெனி கூறியது.

இந்தக் கம்பெனியை 1850-ல் அரசாங்கம் வாங்குவதற்கு முன்பு, அது பல கெடுதல்களை இழைத்துவிட்டது. வேக்ஃபீல்டின் குழுவினர் தங்களுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்கள் அடைந்த நிலங்களுக்கு அரசாங்க சம்மதம் பெற்றனர். பலவீனமான சில கவர்னர்கள் அந்தத் தீவுகளில், இக் கம்பெனி பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை வேண்டுமென்று கோரிய பொழுது, நிராகரிக்க முடியவில்லை. வடக்கேயுள்ள 'ஆக்லாந்து' (Auckland) தலைநகராக அமைப்பதென்ற யோசனையைக் கம்பெனி ஏற்றுக்கொள்ள மறுத்தது. வெலிங்டன் நகரைத்தான் தலைநகரமாக்க வேண்டுமென்று கோரியது. இதனால் கம்பெனிக்கும், அரசாங்கத்திற்கும் பகைமை மூண்டது. நிலம் பெறுவதில் பல சூதாட்ட முறைகள் பின்பற்றப்பட்டதால் வேக்ஃபீல்டின் நில முறைகள் பயன் அளிக்கவில்லை. வெள்ளை கண்காணிப்பாளர்களை மயோரிகள் பலமுறை தாக்கியதால், பாராளுமன்றம் உண்மையில் பயந்துவிட்டது. இதனால், அவர்களுடன் செய்துகொண்ட உடன் படிக்கை ரத்தாகியது. 1845-ல் போரும் ஆரம்பமாகியது.

வடக்குத்தீவில் மயோரிகள் அதிகமாகக் குடியிருப்பதனால் இந்தப் போர் இப்பகுதியிலேயே நிகழ்ந்தது. இப்பொழுது புதிய கவர்னராக இருந்த ஜார்ஜ் கிரே இந்த நிகழ்ச்சியை மிகவும் சாதாரண தொல்லையாகவே எடுத்துக்கொண்டார். அவர் ஒரு போர் வீரனின் மகன். அவருடைய தந்தை படஜாஸ் (Badajoz) என்ற போர்க்களத்தில் உயிரிழந்தவராவர். ஜார்ஜ் கிரே முதலில் மேற்கு ஆஸ்திரேலியாவில் நிலங்களைக் கண்டுபிடிக்கச் சென்றார். பின்பு அவர் தெற்கு ஆஸ்திரேலியாவுக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அங்கே ஆட்சி சரிவர செய்யப்படாமல், குழப்பம் மிகுந்திருந்தது. பல காரணங்களாலும், அரசாங்க சூழ்நிலையாலும், பலமான கொள்கைகளைப் பின் பற்றுகிற இவர் அங்கே எதையும் சாதிக்க முடியவில்லை. ஆனால், நியூஸிலாந்தில் 1845–53 வரை இவர் கவர்னராக இருந்தபொழுது சாதித்தவை தங்க மதிப்பிற்கு ஈடானதாகும். நியாயமான முறையிலும், சரியான முடிவு செய்தும், இந்த மயோரிகளின்

போரை நிறுத்தினர். தெற்குத் தீவில் நிலப்பிரச்சினையை அமைதியாக முடித்தார். அரசாங்கமே பெரும் நிலப் பகுதிகளை வாங்கியது. அரசனுடைய நிலப் பகுதிகளுக்கெல்லாம் விலையைக் குறைத்து ஆடுகள் வளர்த்துவருகிறவர்களுக்கு மிகவும் குறைவான விலையில் நிலத்தை விற்றார். இதனால் ஆட்டுப் பண்ணைகள் நன்றாக வளர்ச்சியுற்றன. கம்பெனி மறைந்தது நல்லதற்கென்றாலும், அது ஏற்கனவே பல காரியங்களைச் சாதித்தது. இந்தக் கம்பெனியின் முயற்சியால், குற்றவாளிகளை இப்பகுதிகளில் நாடு கடத்தும் எண்ணம் மறைந்தது. இங்கே குடியேறுகின்றவர்கள் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்று இந்தக் கம்பெனிதான் வற்புறுத்தியது. தெற்குத் தீவில் நிலத்தின் விலை அதிகமாக நிர்ணம் செய்திருப்பதால், நடுத்தரமான, செழுமைமிக்க விவசாயப் பண்ணைகள் வளரக் காரணமாக இருந்தது. ஸ்காட்லாந்து சுதந்திரத் திருச்சபை அனுப்பிவைத்த ஓடோகோ (Otago) குழுவினரும், இங்கிலாந்து திருச்சபையின் குழுவினர் கேன்டர்பரி சமவெளிகளில் குடியேறியதும் குறிப்பாக அங்கே நல்ல பண்ணைகள் வளரக் காரணமாக இருந்தன.

1847-ல் தயாரித்த அரசியல் அமைப்பை அழல் நடத்தமுடியாதென்று அவர் கூறிவிட்டார். இந்த அரசியல் அமைப்பில் கவர்னருக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த அமைப்பை அவர் ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம், சுதேச மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை தரப்படாததுதான். தல குழுவினரைத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்யும் முறையை அவர் ஆரம்பித்து வைத்தார். இவருடைய திட்டத்தையே 1852-வது சட்டமும் வலியுறுத்தியது. இதன்படி ஆறு மாகாணங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர் உள்ள சபைகள் நியமனம் செய்யப்பட்டன. இவைகளுக்குமேல், கலால் வருவாய், நிலம், சுதேச இனங்கள் ஆகிய விவகாரங்களில் முழு அதிகாரமும், மற்ற எல்லாத் துறைகளிலும் முடிவான அதிகாரம் கொண்டதுமான பொது சட்டமன்றம் ஒன்றை நிறுவுவதென்றும், கீழ்ச்சபையில், விஸ்தரிக்கப்பட்ட வாக்குரிமைகளைப் பெற்ற பலரால் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதென்றும் அறிவிக்கப்பட்டது. இந்த பொதுச் சட்டமன்றம் முதன் முதலாகக் கூடும்பொழுதே, பொறுப்பான அரசாங்கம் வேண்டுமென்று கேட்டது. இந்தக் கோரிக்கை 1854-ல் நிறைவேற்றப்பட்டது. 60,000 ஐரோப்பியர்கள் கொண்ட சமுதாயம், குடியேறிய பதினைந்து ஆண்டுகளில், விக்டோரியா காலத்து பிரிட்டனிடமிருந்து எவ்வளவு அதிகச் சுதந்திரத்தை அடைய முடியுமோ, அவ்வளவையும் பெற்றது.

கனடாவிலும், நியூஸீலந்திலும் உள்ள முந்திய நிலைமையினால், சுய ஆட்சி பெறுவதற்குச் சில சிக்கல்கள் இருந்து வந்தன. மற்றொரு ஐரோப்பிய இனமும், சுதேச மக்கள் தொகையும், அந்த நாடுகள் சுய ஆட்சி பெறுவதற்குப் பெரும் தடைகளாக இருந்தன. தென் ஆப்ரிக்காவில், இவ்விதமான நிலைமை இன்னும் நீடித்து, அபாயத்தை விளைவிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியது.

1807-ல் நன்னம்பிக்கை முனையைக் (Cape) கைப்பற்றிய பொழுது, இது இந்தியாவுக்குச் செல்வதற்கு வசதியான தங்கு மிடமாகவும், இராணுவதளமாக அமைவதற்கு வசதியாகவும் இருந்ததென்றே நினைத்தோம். இதைப்போன்ற கருத்தைத்தான் நமக்கு முன் இந்த இடத்தைக் கைப்பற்றிய டச்சுக்காரர்களும் நினைத்தார்கள். அந்த இடத்தை ஒரு குடியேற்ற காலனியாக்க வேண்டுமென்ற எண்ணமே இருந்ததில்லை. இந்த எண்ணம் சிறிதும் எதிர்பாராத சூழ்நிலையால் ஏற்பட்டது, இப்பகுதியைப் பிடிப்பதற்கு முன்பு அங்கே 15,000 டச்சுக்காரர்களும், ஃபிரெஞ்சு புராடஸ்டண்டுகளான ஹ்யூகோனாட்டுகளும் அங்கே வாழ்வதற்குப் போராடிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தைக் கைப்பற்றிய பிறகு, வடக்கிலுள்ள சுதேச இனங்களான, பாண்டு மக்கள் (Bantu Peoples) காபிரிகள் (Kaffirs) ஜுலுக்கள் (Zulus), பெச்சுயானஸ் (Bechunas), பாசுட்டோஸ் (Basutos) பதினெட்டாவது நூற்றாண்டின் கடைசியில், பெர்பர்கள் (Berbers) ஹாடன்டாட்ஸ் (Hotentots) ஆகியோர்களை ஒழித்துவிட்டார்கள். சிலரைக் கடலோரத்திற்கு விரட்டி விட்டார்கள். அதனால் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு கொண்ட மூன்று பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் காலனியின் அரசாங்கம், பிரிட்டிஷ், டச்சு தொடர்புகள், சுதேச மக்களிடம் போராடுதல் ஆகியவைதான் இந்த மூன்று பிரச்சினைகள். நான்காவதாக, சமயப் பிரச்சாரம் செய்கின்றவர்களின் செல்வாக்கையும்கூட கவனிக்கவேண்டியிருந்தது.

டச்சுக்காரர்களின் வீழ்ச்சிக்கு முன்பே, கிறிஸ்துவ மயமாக்கும் முயற்சி அங்கே ஆரம்பிக்கப்பட்டது. மோரேவியன் சகோதரர்களும், லண்டன் பிரச்சாரக் கழகத்தின் சுதேசவாதிகளும் அதற்குப் பிறகு 1815-ல் வெஸ்லியன்கள், பிரெஸ்பிடிரியன்கள், திருச்சபை பிரச்சாரக் கழகம் (Church Missionary Society) ஜெர்மன் லூதரன்கள், ஃபிரெஞ்சு பிரச்சாரகர்கள், ஆகியவர்களின் பிரச்சாரம் அப்பகுதியில் செய்யப்பட்டு வந்தது, அவர்கள் பிரச்சாரம் செய்கின்ற பகுதிகளும் அதிகமாக இருந்தன. காலனிக்கு அப்பாலும், பாசுடோலாண்டில் (Basuto Land) உள்ள

வால் (Vall) வரையிலும், காபீர்கள் (Kaffirs) வசிக்கும் நேட்டாலின் (Natal) கிழக்கு வரையிலும் அவர்களின் பிரச்சார வேலை நடந்தது. சில சமயங்களில் இதனால் மோசமான விளைவுகளும் ஏற்பட்டன. எல்லா இனத்தினருடனும், இவர்கள் ஒரே நிலையில் பழகுவது பாராட்டத்தக்கது, என்றாலும் அவர்களுடைய நம்பிக்கை சில சமயங்களில் முக்கியமான உண்மைகளையும் மறைத்துவிட்டது. அவர்களுடைய கண்களுக்கு வாத்துகளும் அன்னப் பறவைகளைப் போல காட்சி அளித்தன. பல்வேறு சமயப் பிரச்சாரக் கழகங்கள், அவரவர்களின் சுதேசத் தலைவர்களை ஆதரிக்கத் தொடங்கின. காலனிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இப் பிரசாரகர்களுடைய செல்வாக்கு மிகவும் அதிகமாகக் காணப் பட்டது. குறிப்பாக லண்டன் பிரச்சாரக் கழகத்தைச் சார்ந்த (London Missionary Society) ஜான் பிலிப்பின் அரசியல் திறமை யும், அனல் கக்கும் உணர்ச்சியும், காலனி பிரச்சினைகளை அணுகு வதற்குப் பயனுள்ளதாக இருந்தன.

ஆல்பனி (Albany), கிரகாம்ஸ் டவுன் (Grahams Town) என்ற கிழக்கு பகுதிகளில் வெள்ளையர் தொகை 1830-ல் 54,000 பேர் வரையிலும் அதிகரித்தனர். இவர்களுக்கு உதவியாக 1820-ல் குடியேறியவர்களும் இருந்தார்கள். ஆனால், அவர்களிடம் எவ்வித மான ஒற்றுமையுமில்லாததால், பிரதிநிதித்துவ அரசாங்கம் ஏற் படுவதற்கு எவ்விதமான வாய்ப்பும் ஏற்படவில்லை. சிவில் வழக்கு களைப் பொறுத்தவரையிலும் ரோமன்–டச்சு சட்டம் நீடித்தது. ஆங்கிலேயேர்கள் புதிய நீதிமன்றங்களை அமைத்தனர், புதிய நீதிபதிகளையும் நியமனம் செய்தனர். ஆங்கில மொழியை ஆட்சி மொழியாகச் செய்து; நில விற்பனைகளைச் சீர்திருத்தக்காரர்கள் நிர்ணயம் செய்த விலைகளுக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், எங்கே பார்த்தாலும், சுதேச மக்களின் பிரச்சினை வேரூன்றி யிருந்தது. அவர்களை இணைத்துக் கொள்வதா? அல்லது ஐரோப்பிய மயமாக்குவதா? அல்லது அடிமைகளாக்குவதா? அல்லது ஒதுக்கி வைப்பதா என்று கேள்விகள் எழுந்தன. 1828-ல் அறிவிக்கப்பட்ட உத்தரவில், ஹாட்டன்டாஸ், மற்றும் எல்லா கருப்புநிற மக்களுக்கும் சொந்தமாக நிலங்களை வைத்துக் கொள்ளும் உரிமைகளும் வழங்கப்பட்டன. நாடோடிகளாகத் திரிகின்றவர்களைத் தடை செய்யும் சட்டம் ஒன்று வேண்டுமென்ற விருப்பம் காலனி மக்களுக்கு இருந்தது. ஆனால், பிரச்சாரகர் களின் செல்வாக்கினால், அவர்களுடைய விருப்பம் நிறைவேறாமல் போய்விட்டது.

எல்லைகள் இல்லாத நாட்டிலும், படையெடுக்கின்ற காலத்திலும், இந்த சுதேசிகளின் பிரச்சினை காலனி நிர்வாகத்திற்கப் பாற்பட்ட சக்திகளால் கட்டுப்பட்டிருந்தது. கடந்த நூற்றாண்டின் கிளர்ச்சிகள், ஐந்து வன்முறைச் செயல்களின் தலைமை பீடங்களை ஏற்படுத்தின. கடற்கரையோரமாகவும், உட்புறமும், வட கிழக்கில் கேபிர்கள் இருந்தனர். அவர்களுக்கு அப்பால் நானூறு மைல்களுக்கு பாதி காலியான இடங்களும் கடந்து நேட்டால் பகுதியில் சுரண்டிக் கொண்டிருந்த ஆங்கிலேய வர்த்தகர்களையும் தந்தங்களைச் சேகரிக்கின்றவர்களையும் காண முடிந்தது. நேட்டாலுக்கு மேற்கேயும், வடக்கேயும் உள்ள ஜுலு சர்வாதிகாரியான சக்கா (Chaka) ஒழுங்கான இராணுவ முறையில் ஒரு படையை அமைத்து, சமீபத்தில் அங்கிருந்த மற்ற மக்களையெல்லாம் விரட்டி அடித்து விட்டார். டிரேக்கன்ஸ்பர்க் மலைகளை வளைத்து மேற்குப் பகுதியில் மீண்டும் சென்றால். அங்கே செழுமையான பசுடோலேண்ட் இருக்கிறது. இங்கே பல சுதேசத் தலைவர்கள் இப் பகுதியைப் பெறுவதற்காகப் போட்டியிட்டனர். ஆனால் மோஷெஸ் (Moshesh) என்ற திறமைமிக்க, எப்பொழுதும் எச்சரிக்கையாகவும், சகிப்புத் தன்மையுடனும் இருந்த இந்தத் தலைவனுக்கே செல்வாக்கு அதிகமாக அங்கே இருந்தது. பசுடோலேண்டின் மேற்கேயும், ஆரஞ்சு நதியின் வடக்கேயும் கிரிக்காஸ்-ஐ (Griquas) சேர்ந்த பல சமுதாயங்கள் வசித்து வந்தன. அவர்களெல்லாம் பல இனங்களின் கலப்படங்களாகவும், பலதரப்பட்டவர்களாகவும் இருந்தபோதிலும், லண்டன் பிரச்சாரகர்களால் இவர்களுக்கு அரசியல் முக்கியத்துவம் ஏற்பட்டது. பிறகு உருவாக்கப்பட்ட ஆரஞ்சு, டிரான்ஸ்வால் நாடுகளின் வடகிழக்கில் பரந்த புல்தரைச் சமவெளிகள் இருந்தன. லிம்போபோ (Limpopo) வரையிலும் மட்டாபெல் Matabele) மஷத்தினர் வாழ்ந்தனர். இவர்கள் ஜுலு இனத்தின் ஒரு பகுதியினர். சாக்காவின் கொடுமையிலிருந்து தப்பித்து போர்ச்சுகலின் கிழக்கு ஆப்ரிக்காவின் பின்புறமுள்ள பயனற்ற நிலத்தில் குடியேறியிருந்தனர்.

1834-ல் பிரிட்டிஷ் மக்கள் இவர்களைப் பற்றி நல்லெண்ணம் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய நல்லெண்ணமும் கொள்கைகளும் சுதேச மக்களிடம் எவ்வித நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை. அடிமை விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றிய உடன், புதிய கவர்னரான டி' அர்பன் (D' Urban) இப்பகுதியில் அச் சட்டத்தை அமுல் நடத்த அனுப்பப்பட்டார். இதை அமுல் நடத்தும் பொழுது ஆக்கிரமிப்பை ஒருவாறு தவிர்க்க வேண்டுமென்றும், இப்புதிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள

ஆங்கிலேயே அரசாங்கம் மகிழ்ச்சியுறுகிறது என்று அந்த கவர்னரிடம் கூறப்பட்டது. கிரிக்கா இனத்தின் ஒரு தலைவரான வாட்டர் போயர் (Water Boar) என்பவருடன் அப்படி ஒரு ஒப்பந்தம் ஆரம்பத்தில் செய்யப்பட்டது. சமயப் பிரச்சாரகர்களுடைய ஆலோசனையின் பேரில் ஆரஞ்சு நதியைச் சுற்றியுள்ள மேற்குப் பகுதிகளை அவர் ஆண்டு வந்தார். ஆனால் கிழக்கு பகுதிகளில் நிகழ்ந்த காபிர் போரினால், அவருடைய மனமும் மாறிவிட்டது. காபிர் சமுதயாம் சீர்குலைந்து வரும் பல கூட்டங்களால் ஆனதென்றும், அது ஒரு நாடல்ல வென்றும் அந்தக் கவர்னர் கண்டுபிடித்தார். அவர்கள் எல்லாம், ஜுலு இனத்தவருக்குப் பயந்து கூட்டமாக வாழ்ந்து வருகிறார்களென்றும், அவர்களுக்குக் குடியிருக்க அதிக இடம் தேவை என்பதையும் உணர்ந்தார். அதனால், அவருடைய பிரச்சினை அரசியல் சம்பந்தப்பட்டதல்ல; ஆனால் பொருளாதார தொடர்புடையதே என்று கருதினர். காபிர்களுக்கும், மற்றவர்களுக்கும் வசிக்க நிறைய இடம் தேவைப் பட்டது. அவர்களுடைய நிலத் தேவை, அவர்களுடைய ஆடு மாடுகளைப் பொறுத்திருக்கிறது. அங்கே, ஆடுமாடுகளைத் திருடுவது பின்பு அதனால் சண்டை ஏற்படுவது போன்ற நிகழ்ச்சிகள் வழக்கமாக நிகழ்ந்தன. இதைப் போன்ற நிகழ்ச்சிகள் ஸ்காட்லாந்து எல்லையோரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்தன. இவர்களுக்கிடையே ஒரு நடுநிலைமை நிலப்பகுதியை அமைத்துப்பார்த்தார் ஆனால், அவர்களுடைய சண்டைகள் ஓயவில்லை. அதனால் கேய் (Kei) நதிவரையிலும் உள்ளப் பகுதியைப் கைப்பற்றினர். ஆனால் ஆங்கிலேய அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. பழைய எல்லைக் கோட்டிற்கே அவர்கள் வந்துவிட்டனர். டாக்டர் பிலிப்பின் சொற்பொழிவைக்கேட்ட பிறகு காமன்ஸ் சபையின் ஆதிவாசிகளின் கமிட்டியினர், இவ்விதமான ஆக்கிரமிப்புகளுக்கு காரணமாக இருப்பவர்கள், அக் காலனிகளில் குடியேறியவர்களே என்று கூறினர். அத்துடன் தென் ஆப்ரிக்க வரலாற்றில் ஏற்பட்ட மிக முக்கியமான நிகழ்ச்சி, 'பெரும் பயணம்' (Great Trek) ஆரம்பமாயிற்று.

ஒரு வகையில் போயர்கள் தங்களுடைய பயணத்தை ஏற்கனவே ஆரம்பித்து விட்டார்கள். அவர்களிடமிருந்த செழுமையான நிலங்களை குடியேறியவர்கள் கைப்பற்றிக் கொண்டதால் அவர்கள் இப்பயணத்தை ஆரம்பித்தார்கள். குடியேறியவர்கள் எங்கெல்லாம் நல்ல ஊற்றுகள் இருக்கின்றவோ, எங்கெல்லாம் சுதேச மக்கள் கிரிக்கா இனத்தினரைப் போல ஆயுதம் தாங்கிய பலமுள்ள சமுதாயத்தினராக இல்லையோ, அங்கெல்லாம்

அவர்களை விரட்டி விட்டார்கள். எல்லைப்புறங்களிலுள்ள இந்தப் போயர்கள் அவர்களுடைய டச்சு அரசாங்கத்துக்கும், பிறகு ஆங்கிலேயர்களுக்கும் இடமளித்து விட்டார்கள். இவர்களுடைய முறைகளைப் போயர்கள் வெறுத்தார்கள். அவர்களில் சிலர் அடிமைகளையும் வைத்திருந்தார்கள். அடிமைகளை விடுவித்து விட்டதனால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நஷ்டஈடு மிகவும் குறைவாகவே இருந்தது. அல்லது சிலருக்கு நஷ்டஈடு அரசாங்கத்தின் தாமதத்தினால் கொடுக்கப்படவில்லை. இவர்களெல்லாரும் சுதேச தொழிலாளிகள் வேண்டுமென்று கோரினர். ஹாட்டன்டாடுகளை அவர்களுக்கு சமமாக நடத்த வேண்டுமென்ற உத்தரவுகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அவர்களுடைய மொழியும் மற்ற மொழிகளைப் போல வளர்ச்சி அடைந்த மொழியல்ல. அரசாங்கம் நிர்ணயம் செய்திருந்த நிலத்தின் விலை அவர்களுக்கு அதிகமாக்கப்பட்டது. அவர்களிடமிருந்து புதிய வரிகளை வசூல் செய்வதையும், மற்ற வேலைகளை வாங்குவதையும, அவர்கள் வெறுத்தார்கள். 6000 ஏக்கர் அல்லது இன்னும் அதிகமான நிலப் பண்ணைகள் வேண்டுமென்றும், அங்கே அவர்களுடைய குடும்பங்களை குடியேறச் செய்ய வேண்டுமென்றும் விரும்பினர்கள். அவர்கள் சுதேச மக்கள் மீது எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது என்று தடுக்கப்பட்டனர். உண்மையில் சுதேச மக்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் செயலற்று இருந்தது. பேரரசின் மீது அவர்களுக்கு அளவு கடந்த அதிருப்தி ஏற்பட்டிருந்தது. பயங்கரமான எல்லைப்புறங்களில், நிலங்களை அடைவதற்காகப் பேரளவில் மக்களுடைய உயிர்கள் பலியாயின. கிளெனல்கின் (Glenelg) இவ்வித முயற்சி ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 1836-ல் குடியேற்றங்கள் பேரளவில் எல்லைப்புறங்களிலிருந்து கிளம்பி, எங்கே சுதந்திரமாக வாழ முடியும் என்று தங்கள் பயணங்களை ஆரம்பித்தனர். நூற்றுக்கணக்கான வண்டிகளில் அவர்கள் பெண்கள், குழந்தைகள், குருமார்கள், ஆகிய அவர்களுடைய பொருள்களையெல்லாம் ஏற்றிக் கொண்டு சுதந்திரமாக வாழ்கின்ற இடத்தை நோக்கிக் கிளம்பினர். இவர்களையெல்லாம் பாதுகாப்பதற்கு கூடவே போரிடுகின்ற சிலரும் சென்றனர். ரெடிப்ஸ் (Retiefs) மாரிட்ஸ் (Maritz) பாட்கிட்டர்ஸ் (Potgieters) ஆகிய போராடுகின்றவர்களின் இடையிலேயே பால் குரூகர் (Paul Kruger) என்ற பத்து வயது நிரம்பிய பையனும் இருந்தான். இந்தக் கோரமானக் காட்சி எப்பொழுது முடியுமென்று அந்தச் சிறு பையன் ஆவலுடன் இருந்தான். அவர்களுடைய பயணம் நாள் ஒன்றுக்கு ஐந்து மைல் வீதம் மெதுவாகச் சென்றது. ஏனெனில், அவர்களுடைய ஆடுமாடுகளை அதிகத் தொல்லைகளுக்குள்ளாக்க முடியவில்லை. அவைகளை வேகமாகவும் செலுத்த

முடியவில்லை. இவ்விதமாக அவர்களுடைய பயணம் நகர்ந்து வந்தது. 1837-ல் சிலர் வால் (Vall) பகுதியின் வடபுறம் உள்ள புல்தரைச் சமவெளிகளை நோக்கிச் சென்றனர். மற்றும் சிலர் செங்குத்தான டிரேக்கன்ஸ் பர்க்கிலிருந்து இறங்கி நேட்டாலுக்குள் நுழைந்தனர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இந்தப் பிரச்சினை பெரிய குழப்பத்தை அளித்தது. இந்த நிகழ்ச்சிகளால் வரலாற்றிலேயே சிறிது மாற்றம் ஏற்பட்டது. பிரயாணத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் நேரடியாகப் பாண்டு மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் நுழைந்து, அவர்களுடன் மோதினர். அங்கிருந்த மிக்க பலம் பொருந்திய ஜுலுக்களும், மாடேபெல்களும் லேக்ஸுக்கு செல்லுகின்ற சாலையிலும், மற்றொரு பகுதியினர் கிழக்கே இந்தியக் கடலுக்கு செல்லுகின்ற பாதையிலும் அவர்களை மடக்கி சண்டையிட்டனர். சக்காவுக்கு பின் பட்டத்திற்கு வந்த தின்கான் (Dingaan), ஒரு பகுதியினரைப் படுகொலை செய்தார். ஆனால் அதற்கு அவர்கள் பழிக்குப் பழி வாங்கி, தின்கானையும் தூக்கியெறிந்தனர். பல இன்னல்களைக் கடந்து அவர்கள் சென்று கொண்டிருந்தனர். ஒரு சமயம் அவர்களுடைய வண்டிகளெல்லாம் நகராமல் சங்கிலியினால் கட்டப்பட்டிருந்த சமயம், ஜுலுக்கள் வைக்கல் புல்லில் மறைந்திருந்து, பின்பு தீயிட்டுக் கொளுத்தினர். அவர்கள் ஆடு மாடுகளைப் போல புதர்களில் மறைந்திருந்து தாக்கினர். ஒரு பகுதியினர் நேட்டாலுக்குள் நுழைந்து ஆக்கிரமித்தனர், மற்றொரு பகுதியினர் பாசுட்டோக்களை மிகவும் கொடுமைப்படுத்தினர். பிரிட்டிஷ் கொள்கைகளுக்கு விரோதமாக உள்ள எல்லா ஆக்கிரமிப்பாளர்களையும் ஆப்பிரிக்காவின் நடுவில் வேரோடு அழித்து விட்டனர். இதனால் எல்லா சதேச இனங்களும் பீதியடைந்தனர். இவ்வளவு கொடுமை புரிந்தவர்களும் சட்டப்படி பிரிட்டிஷ் குடிகளேயாவர். அவர்களுடைய இந்தப் பாதகமான நிகழ்ச்சிகளால், பிரிட்டிஷ் பாதுகாப்புக்கே அபாயம் நேரிட இருந்தது. அங்குள்ள ஆங்கிலேய மக்களும் கூடப் பல பிரிவினர்களாகப் பிரிந்து, ஒரு நிரந்தரமான அரசாங்கத்தை ஏற்படுத்த வகையில்லாதவர்களாக இருந்தார்கள்.

பதினைந்து ஆண்டுகளாக, நமது கொள்கை, சிக்கனம், மனிதாபிமானம், பேரரசு, உணர்வு ஆகியவற்றில் சிக்கித் தவித்தது. 1838-ல் துருப்புகள் நேட்டாலுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் அவைகள் மீண்டும் திரும்பப் பெறப்பட்டன. காபீர்களை, பல வல்லடிச் செயல்களால் போயர்கள் நடுக்கமுறச் செய்தார்கள். அதனால் 1842-ல் மீண்டும் துருப்புகள் வந்திறங்கின.

1845-ல் அப்பகுதியைக் கைப்பற்றினர். நேட்டால் பயண வாதிகள், ஆரஞ்சு, வால் பகுதிகளிலுள்ளவர்களிடம் சேர்ந்து கொண்டு பழையபடி அவர்கள் கதையை ஆரம்பித்துவிட்டனர். ஆனால், ஆங்கிலேய அரசாங்கம் புதிய ஆக்கிரமிப்புகள் கூடாது என்று அறிவித்து விட்டதால், காலனி புதிய ஒப்பந்த ஏற்பாடு களைச் செய்து கிரிக்காஸ், பாசுட்டோஸ் ஆகிய இனங்களைப் பாதுகாக்க முயன்றது. தீராத நிலப் பிரச்சினைதான் இதற் கெல்லாம் காரணமாக இருந்தது. பலதரப்பட்ட சுதேச இனங் களின் தலைவர்கள் குழப்பமான வகையில் தங்களுடைய உரிமை களை நிலைநாட்ட முயன்றனர். எல்லைகளெல்லாம் நிர்ணயம் செய்யப்படாமல் இருந்தன். பிரிட்டிஷ் பிரதிநிதிகளால் இவற் றைத் தீர்த்து வைக்க முடியவில்லை. அவர்களுக்குப் பக்க பலமாக இராணுவம் இல்லை. 1845-ல் மற்றொரு காபிர் போர் நிகழ்ந்தது. ஹேரிஸ்மித் என்ற திறமைமிக்க புதிய கவர்னர் பதவியேற்றார். அவர் இப்பிரச்சினைகளை வேகமாகத் தீர்க்க முயன்றார். மீண்டும், அவர் காப்ரேரியா (Kaffraria)விலிருந்து கேய் வரையிலும் கைப்பற்றினர். 1848-ல் ஆரஞ்சு, வால், இவற்றுக்கு இடையேயுள்ள பகுதியை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். அப்பொழுது டிரான்ஸ்வால் போயர்கள் பிரிதோரியஸ் தலைமையில் பூம் பிளாட்ஸ் (Boomplaats) என்ற இடத்தில் சண்டையிட்டுத் தோற்றனர். பிரிட்டிஷ் மக்கள் பெரும் பயணவாதிகளை அடியோடு முறியடித்து விட்டதாக நினைத்திருக்கக் கூடும். அதனால் ஒரு திட்டத்தை அமைத்துக் கொண்டு அதைப் பின்பற்றலாம் என்றும் நினைத்திருக்கக் கூடும்.

ஆனால், அப்படி ஏற்படவில்லை. எல்லைக்கோடு ஐரோப்பியர் களால் சரிவரப் பாதுகாக்கப்படவில்லை. வாலிலிருந்து டர்பன் வரை அப்பகுதி நீண்ட தூரத்தை உடையதாக இருந்தது. எங்கேயாவது பிளவு ஏற்படும் சமயத்தில், முழு கட்டமும் சரிந்து விடும் நிலையில் இருந்தது. பாசுட்டோ தலைவனை மோஷெஸ்ஸ அவர்கள் பகைத்துக் கொண்டார்கள். ஆரஞ்சு நதி பகுதியினர் பிரிட்டிஷ் பிரதிநிதியை ஆதரிக்க மறுத்துவிட்டனர். தீவிர வாதிகள் வால் பகுதியினரிடம் பரிவு காட்டினர். 1850-ல் மற்றொரு காபிர்போர், கிழக்குப் பகுதியில் நமது பலத்தை மிகவும் கட்டுப்படுத்தியது. ஏனெனில் மோஷெஸ், மற்றும் அவருடைய பகைவர்களிடையே தகராறு ஏற்பட்டிருக்கும்பொழுது நாம் அவசியமில்லாது அவர்களுடைய பிரச்சினையில் தலை யிட்டோம். மாபெரும் பிரிட்டனின் மன நிலையும் மாறிவிட்டது. சுதேச மக்களுக்குக்காகப் பரிந்து பேசும் எண்ணம் குறைந்து விட்டது. கேப்காலனிக்குச் சுய ஆட்சி தருவது பற்றி பரிசீலனை

செய்தார்கள். ஒரே ஒரு முக்கியமான நிபந்தனையின் பேரில், அதாவது சுய ஆட்சி பெற்ற காலனி அதனுடைய பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டுமே தவிர சுதேச மக்களிடம் அவசியமில்லாது போர் செய்வதை அனுமதிக்காது என்றும், ஏனெனில் மிக தூரத்தில் இருப்பதால் இவைகளையெல்லாம் கவனிக்க இயலாது என்றும் அறிவித்தார்கள். காலனி சீர்திருத்தவாதிகளும் காப் டென் ஆதரவாளர்களும், ரஸல், கிரே ஆகியவர்களிடம் கட்டாயப் படுத்தினர்கள். 1852-ல் ஸேண்ட் (Sand) நதி ஒப்பந்தத்தின்படி, டிரான்ஸ்வால் போயர்களுக்குச் சுதந்திரம் அளித்தார்கள். 1854-ல் பிளோம்ஃபான்டின் (Bloem Fontein) ஒப்பந்தப்படி ஆரஞ்சு சுதந்திர நாடாகியது. முதல் ஒப்பந்தத்தில் 25,000 பேயர்களும், இரண்டாவது ஒப்பந்தத்தில் 15,000 போயர்களும் தனித்து வாழ உரிமைகள் வழங்கப்பட்டன. இரண்டாவதாகக் கூறிய ஒப்பந்தத்தில் மக்களுடைய முழு விருப்பம் சாதகமாக இல்லை என்று தெரிகிறது.

கேப் காலனி கம்பளி வியாபாரத்தால் நல்ல செழிப்பை அடைந்திருந்தது. 1850-ல் அங்கே சுமார் 200,000 ஐரோப்பி யர்கள் குடியிருந்தார்கள். நகராண்மைக் கழகங்களும், திருச் சபைகளும், பள்ளிகளும் நிறுவப்பட்டன. 1853-ல் இயற்றப்பட்ட அரசியல் அமைப்பின்படி பல காலனிகளுக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட மேல் சபையும், சட்ட மன்றமும் அமைக்கப்பட்டன. ஆனல் பொறுப்பாக அரசாங்கம் தரப்படவில்லை. கறுப்பு நிறத்தினரும் வாக்குரிமை பெறக்கூடிய அளவிற்குக் குறைவான தகுதிகளை வைக்கவேண்டும் என்று கலோனியல் அலுவலகம் வற்புறுத் தியது 1856-ல் நேட்டால் ஒரு கிரவுன் காலனியாகக் கருதப் பட்டது. அங்கே, சட்டமன்றத்தில் ஒரு பகுதியினர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

இதைப் பொறுத்த அளவிலும் பேரரசு ஒரு உறுதியான முடிவுடன் இருந்ததென்று கூறலாம். இந்தத் துணைக்கண்டத்தில் பலவிதமான கொள்கைக்கு பலதரப்பட்ட சிறு சிறு ஐரோப்பிய குடியேற்றப் பகுதிகள், இருந்தன. பிரச்சினைகளைத் தீர்க்க பரிகாரங்கள் யோசிக்கப்பட்டன. ஆனல் எல்லாம் கைவிடப் பட்டன. சுய ஆட்சி பெறுவதற்கு முன்பும் இதைவிட பல முக்கிய மான பல விவகாரங்களைத் தீர்க்கவேண்டும். இவைகள் தீர்க்கப் படாதவரையில், கனடாவும், ஆஸ்திரேலியாவும் சாதித்ததை, தென் ஆப்ரிக்கா அடைய முடியாத நிலைமை இருந்துவர லாயிற்று.

சமகாலத்திய நிகழ்ச்சிகள்

1815–27	பாத்தர்ஸ்ட் (Bathurst) போர், காலனிகள் துறை காரியதரிசி.
1819	சிங்கப்பூரை பிரிட்டன் அடைதல்.
	ஃபிளாரிடாவை (Florida) ஸ்பெயின் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தருதல்.
1820	மகமது அலி சூடானைக் கைப்பற்றுதல்.
1821	ஹட்சன் பே, வடமேற்கு கம்பெனிகள் இணைதல்.
1823	மன்ரோ கோட்பாடு.
1827–8	கலோனியல் அலுவலகத்தில் ஹஸ்கிஸன்.
1829	ஸ்வான் (Swan) நதி ஏற்பாடு.
1834	பிரிட்டிஷ் பேரரசில் அடிமை முறை ஒழிதல்.
1836	ஜேம்ஸ் ஸ்டீபன் (James Stephen) காலனிகளின் உதவிக் காரியதரிசி.
1837	கனடாவில் கலகம்.
	பெரும்பயணத்தின் உச்சக் கட்டம்.
1839	டர்ஹாம் பிரபுவின் அறிக்கை.
	பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் ஏடன் வருதல்
1840	வெயிட்டாங்கி (Waitangi) உடன்படிக்கை பி அண்டு ஓ (P & O) நீராவிக் கப்பல்கள் இந்தியாவுக்கு விடுதல்.
1842	ஆஷ்பர்ட்டன் (Ashburton) உடன்படிக்கை ஹாங் காங் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் வருதல்.
1843	நேட்டாலை (Natal) இணைத்தல்.
	கோல்ட் கோஸ்ட் (Gold Cost) பகுதி அரசனுடைய ஆதிக்கத்தில்வருதல்.
	தாகிதி (Tahiti) ஃபிரெஞ்சு பாதுகாப்பு நாடாதல் (French Protectorate)
1846–52	கலோனியல் அலுலலகத்தில் மூன்றுவது கிரேபிரபு.
1848	மெக்ஸிகோ, டெக்ஸாஸ் (Texas) கலிபோர்னியா ஆகிய இடங்களை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தருதல்.
1849	லிவிங்ஸ்டனின் முதல் பயணம்.
	கடற்போக்குவரத்துச் சட்டங்களை ரத்து செய்தல்.
1851	ஆஸ்திரேலியாவில் தங்கம் கிடைத்தல்.
1852	ஸேண்ட் நதி (Sand River) ஒப்பந்தம்.

14. அயர்லாந்து
1815–1848

இங்கிலாந்துக்கு அருகிலேயுள்ள பேரரசின் மற்றொரு பகுதியிலும் இதேவிதமான தகராறுகள், இனம், நிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன. சுயஆட்சி சூத்திரத்தினுள் அடங்காததும், அல்லது அதற்கு என்ன சரியான பொருள் என்றும் அது கேட்கத் தொடங்கியது. பிட் முயற்சி செய்து, கத்தோலிக்கர்களுக்கு விடுதலை கொடுக்கவேண்டுமென்று ஒரு மசோதா தயாரித்தது என்ன காரணங்களால் தாமதம் ஆனது என்பதைப் பார்த்தோம். அந்தத் தாமதம் 1829 வரை நீடித்தது. ஐரிஷ் கத்தோலிக்க மேல் வகுப்பினர் இந்த முப்பது ஆண்டுகளாக ஓ கானெல்லை ஆதரித்ததும், திருச்சபையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதும், விவசாயிகள் கூட்டத்தின் பலத்தைப் பெற்றதும், பிறகு உள்நாட்டுப்போர் ஆரம்பிக்கப்படும் என்று அச்சுறுத்தவே கடைசியாக ஒப்புக்கொண்டதும் தெரிந்ததே. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், இந்தக் கத்தோலிக்க விடுதலை இயக்கத்தால் அவர்களுடைய பலம் அதிகரித்ததென்றாலும், அயர்லாந்தில் உண்மையான குறைகளுக்கும், அதற்கும் தொடர்பில்லாதிருந்தது. இந்தச் சட்டம் இயற்றுவதற்கு முன்பும், பின்பும், அங்கே விவசாயிகளின் குற்றங்களும், கலகமும், கொலையும் மலிந்திருந்தன. இதனால் கேஸல்ரே பல கட்டாய நடவடிக்கைகளையும் விசாரணைச் சட்டத்தைத் தடுத்து நிறுத்தலும் ஊரடங்குச் சட்டம் போடுதலும், இராணுவ நீதிமன்றங்களை நிறுவுதலும் போன்றவற்றை ஏற்படுத்தினர். இதைப்போலவே கிரே, மெல்போர்ன் மந்திரி சபைகள் அடிக்கடி பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது.

புள்ளி விவரங்கள் இப்பிரச்சினையின் மேலான தோற்றத்தையே காட்டுகின்றன. யூனியன் சட்டத்தின்பொழுது அங்கிருந்த ஐந்து மில்லியன் மக்கள் தொகை, 1841-ல் எட்டு மில்லியன்

களாகிவிட்டது. சதுர மைல் ஒன்றுக்கு 365 பேர் வசிக்கக்கூடிய நெருக்கடி மிக்க இடமாகிவிட்டது. ஐரோப்பாவிலேயே இது மிகவும் நெருக்கடியான இடமாகக் கருதப்பட்டது இவர்களில் 70 சதவிகித மக்கள் நிலத்தை நம்பியே வாழ்ந்தனர். பிரிட்டிஷாரின் போட்டி அயர்லாந்து தொழில் வளர்ச்சிக்குப் பாதகமாக இருந்ததால், அயர்லாந்தின் தொழில்களுக்குப் பாதுகாப்பு தரப்பட்டு வந்தது. ஆனால் 1823-ல் இப்பாதுகாப்பும் ரத்தாகிவிட்டது. அதிலிருந்து அல்ஸ்டர் லினன் தொழிலைத் தவிர மற்ற எல்லா தொழில்களும் மிகவும் சீர்குலைந்துவிட்டன. அயர்லாந்து மக்கள்மீது விதித்திருந்த வரிகள், பிரிட்டிஷ் வரிகளைவிட மிகவும் குறைவானதே. ஒரு தனிப்பட்ட ஐரிஷ்காரன், ஆங்கிலேயனை விட நான்கில் ஒரு பங்கு குறைந்த வரியைத்தான் செலுத்துகிறான். அவர்களுக்கு முதலீடு செய்து தொழில் வளங்களில் ஈடுபடுவதற்குப் போதிய மூலதனம் இல்லை. பெரும்பான்மையான ஐரிஷ் நிலக்கிழார்கள் நிலங்களைப்பற்றிக் கவலைப்படாது வரவுக்கு மீறி செலவு செய்துகொண்டும், அடகு வைத்துக்கொண்டும் இருந்தார்கள். நிலங்களில் அவர்கள் இருப்பதே இல்லை. 1846-ல் அங்கே 100 மைல் நீளத்திற்கு ரெயில்வேயுங்கூட போடவில்லை. ஐம்பது சத மக்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அங்குள்ள 8 மில்லியன் மக்களில் 6½ மில்லியன் மக்கள் கத்தோலிக்கர்கள். ஆங்கிலிக்கன் திருச்சபையின் வருமானம் 600,000 பவுன்கள். மூன்றில் ஒரு, ஐரிஷ் திருச்சபை பகுதியில் ஐம்பதுக்கும் குறைவான ஆங்கிலிக்கன்களே இருந்தனர்.

அயர்லாந்தில் எப்பொழுதுமே அபாயம் காத்திருந்தது; அத்துடன் அவமானமும் சூழ்ந்திருந்தது. அங்கிருந்து பேரளவு மக்கள் அமெரிக்காவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் சென்று குடியேறியபோதிலும், சாலை நிறைய இரவலர்களும் வெறுங்கால்களில் அவர்கள் நடந்தும், ஏதாவது திண்ணையிலோ அல்லது புல்வெளியிலோ படுத்து உறங்கியும், உருளைக் கிழங்கையும் தண்ணீரையுமே நம்பி உயிர் வாழ்ந்து வருகின்ற துயரமான நிலையை அங்குச் செல்லுகின்ற ஒவ்வொரு பிரயாணியும் கவனிக்கக்கூடும். எத்தனையோ டஜன் கணக்கான அறிக்கைகளும், கமிஷன்களும், அவர்களுக்குப் பலன் அளிக்கவில்லை. பிரிட்டிஷ் நிறுவனங்கள் அவர்களுக்கு நல்ல பரிகாரங்களைத் தரவில்லை. குற்றம், கொலை, ஆடுமாடுகளை முடமாக்குதல் போன்ற நிகழ்ச்சிகள் வரலாற்றில் நிறைய இடம் பெருகின்றன. பல குற்றக் குழுவினர் தங்கள் முகங்களுக்குக் கருப்பு வர்ணம் பூசிக்கொண்டு சாட்சிகளையும், வாடகைக்கிருக்கின்றவர்களையும், **(ஏனெனில் காலிசெய்த இடங்களில் இவர்கள் குடியேறியதால்)**

பலவிதமாகப் பயமுறுத்தினர்கள். ஜூரி வழக்கில் எவ்வித நம்பிக்கையும் வைக்க முடியாதநிலை ஏற்பட்டது. இந்திய எல்லைப்புறத்தில் காணப்படுவதைப்போல, நாடுமுழுவதும் துப்பாக்கிகளும், ஈட்டிகளும் அவர்களுடைய கூரைகளில் காணப் பட்டன. இதனால் வருடம்தோறும் கட்டாயச் சட்டங்களைக் கொண்டுவர பாராளுமன்றத்தில் முயற்சி செய்தனர்.

இங்கிலாந்தும் அயர்லாந்தும் ஐக்கியமானது ஒரு யுத்த நடவடிக்கை என்று மட்டும் எடுத்துக்கொள்ளாது, இங்கிலாந்தின் செல்வத்தை அயர்லாந்து மக்களின் வறுமையைப்போக்க பயன் படும் என்ற எண்ணத்திலுங்கூட, பிட் இந்த ஐக்கியத்தைக் கொண்டுவந்தார். மேலும் கத்தோலிக்கக் குறைபாடுகளைப் பெரிய அளவில், முறையிட்டு அதற்கு வேண்டிய சமயப் பொறையைத் தேடிக்கொள்ள வாய்ப்பளித்தார். ஆனல். இயற்கையான மனித குணங்களும், அரசியல் நிகழ்ச்சிகளும், வேறுவிதமாக நடந்துவிட்டன. கத்தோலிக்க விடுதலைச் சட்டம் நீண்ட காலம் தாமதமாகிவிட்டதால், அது இயற்றப்பட்ட பிறகும் கொடுக்கப்பட்ட சலுகைகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை. நீதிபதிகளும், காவலர்களும், நகராண்மைக் கழகங்களும் இன்னும் பேரளவில் புராடஸ்டண்டுகளின் கைகளிலேதான் இருந்தனர். ஐக்கியம் வெறும் ஏட்டளவில் இருந்தால் போதாது. உண்மை யாக ஐக்கியம் சாத்திய மென்ருல்தான் ஏற்றுக்கொள்வோம் என்று ஓ கானெல் கூறினர். ஆனல், இதற்கு உண்மை வடிவம் கொடுப்பதென்பது அப்பொழுது கடினமாக இருந்தது. அவர் கத்தோலிக்க பாதிரிகளுக்கு அரசியல் உணர்வை ஊட்டினர். அல்ஸ்டர் கோட்டையில், ஆரஞ்சு கழகத்தார் ஆரம்பத்தில் ஐக்கியத்தை வன்மையாக எதிர்த்தனர். ஆனல், ஐக்கியத்தின் மூலமாகத்தான் அவர்கள் புராடஸ்டண்டு ஆதிக்கம் ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து, இதை ஆதரிக்க முற்பட்டனர்.

'முப்பதுகளிலும்', 'ஆரம்ப நாற்பதுகளிலும்' ஆங்கிலேய–ஐரிஷ் உறவுகள் மிகவும் மட்டமாக இருந்தன. படிப்பதற்கும்கூட மகிழ்ச்சியில்லாதிருந்தன. இவர்களுடைய உறவுகள் கெடுவ தற்கு மூன்று சக்திகள் காரணமாக இருந்தன. டோரிகளின் முட்டுக்கட்டை, பிரிட்டிஷ் பொருளாதார சிந்தனை, ஓ கானெல் என்ற மூன்று சக்திகளே அவைகள். இந்த 'விடுவிப்பவர்' ஃபிளாண்டர்ஸ் சமயப் பள்ளியில் படித்தவர். ரோம் நகரத் துக்குச் செல்லும் சாலையிலே உயிர்துறக்க சித்தமாக இருப்பவர். அவருக்கு அரசியல் வெறியோ, அல்லது புரட்சி எண்ணமோ கிடையாது. இவரும் பொருளற்ற, நிலக்கிழார் வகுப்பைச்

சேர்ந்தவராக இருந்தபோதிலும், '98 கலகத்தில் அவர் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. அவர் விவசாய குற்றங்களை வெறுத்தார். தொழிற்சங்கங்கள் மீது அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவரைச் சூழ்ந்திருந்த கீழானவர்களும், அவருடைய செயல்முறைகளும், அவருடைய சமரச மனப்பான்மையும் மற்ற லட்சியவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. சரமாரியாகப் பொழியும் அவருடைய சொற்பொழிவுகளும், இரத்தக் களறியை வெறுத்தலும், அரசியாரிடமிருந்தும்கூட அவருக்குப் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொடுத்தன. ஓரளவிற்கு மக்களுடைய உணர்ச்சிகளை அவரே தட்டி எழுப்பினர். எனினும், அவ்வுணர்ச்சிகள் கட்டுப்படுத்தப் படவேண்டுமென்றும் அவர் மக்கள் கூட்டத்தை ஒழுங்காக நடத்தி, வன்முறைச் செயல்கள் எதுவுமின்றி, அமைதியாகவே விடுதலைச் சட்டத்தையும், வேறு பல சட்டங்களை ரத்து செய்வதையும் சாதிக்க முயன்றார். அவருடைய முரட்டுத்தனமான பேச்சுகளால், பீல், கிரே, ஆகியோர் இவரைப் பகைத்துக் கொண்டார்கள். ஆனால், அவருடைய சாதுர்யத்தால் இவைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, பல ஆண்டுகளாக அவர் சட்டங்களை ரத்து செய்ய முயற்சி செய்தார்.

அவர் பிரிட்டிஷ் சமயத்தில் இணங்காதவர்களுடனும் தீவிரவாதிகளுடனும் கூட்டு சேர்ந்துகொண்டது, விக்குகளுக்கு சிறிதும் பிடிக்கவில்லை. அவர்களுடன் இணைந்து அவர் சோதனைச் சட்டங்களை ரத்து செய்யக் கோரினர். கத்தோலிக்க விடுதலைச் சட்டம், மற்றும் பல சீர்திருத்தங்கள் வேண்டுமென்றுகோரி, அப்பொழுது பதவியில் இருந்த ரஸலுடன் 1835-ல் ஒரு சமரச ஏற்பாட்டையும் அவர் செய்துகொண்டார். இதன் காரணமாக விக்குகள் ஒன்றுசேர்ந்து பீலைத் தோற்கடித்தார்கள். அயர்லாந்திலுள்ள ஆங்கிலிக்கன் திருச்சபையைப் பாதுகாக்க முடியாதென்று ரஸலும், அவருடைய ஆதரவாளர்களும் நம்பினர்கள். அதற்கேற்ப இருபத்திரண்டு பிஷப் பகுதிகளில் பத்து பகுதிகள் ஒடுக்கப் பட்டன. மேலும் திருச்சபை வரியையும் ஒழித்துவிட்டார்கள். திருச்சபைகள் வசூலித்து வரும் 'டைத்' (Tithe) வரியைப் பொறுத்தவரையிலும் ஐந்து ஆண்டுகள் தீராத போராட்டமும், பலத்த அவமானமும் இருந்தபோதிலும், இப்பிரச்சினையை அப்படியே விட்டு வைக்க முடியவில்லை. ஏனெனில், இந்த வரியினால் ஒவ்வொரு மதகுருமார் ஆட்சிப்பகுதியிலும் ஒரு சிறிய போரே ஏற்பட்டது. உருளைக்கிழங்கு பயிராகும் ஒவ்வொரு விவசாயியுடைய நிலத்திற்கும் ஏற்கனவே 'டைத்' வரியை அந்தப் பகுதியின் மதகுருமார்களுக்கு அளிக்க கடமைப்பட்டிருக்கிறான் என்றாலும், இப்பொழுது ஆங்கிலிக்கன் மதகுருமார்களுக்கும்

அவ்வரியைச் செலுத்த வேண்டியிருந்தது. இந்த வரியை வசூலிக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அர்த்த மற்றதாக இருந்தன. பிரிட்டிஷ் சிப்பாய்கள் மாதா மாதம் அப் பகுதிகளில் அணிவகுத்துச் சென்று, மாட்டையாவது பறிமுதல் செய்வதும், பின்பு விவசாயிகளின் ஆத்திரத்திற்கு ஆளாவதும் வழக்கமான நிகழ்ச்சிகளாகிவிட்டன. ஒரு வகையில் 1838-ல் இயற்றப்பட்டச் சட்டம், ரஸலுக்கும், தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட தோல்வி என்றே கருதவேண்டும். ஏனெனில், இந்தச் சட்டத்தில் திருச்சபைகளின் வருவாயை அரசாங்க நலன்களுக் காகப் பயன்படுத்தும் ஒரு பகுதியை, பிரபுக்களின் தலையீட்டால் எடுத்துவிட்டார்கள். ஆனல், 'டைத்' வரி, நிலம் வைத்திருக் கின்றவன் தான் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப் பட்டதால், விவசாயிகள் சிறிது நிம்மதி அடைந்தனர். அங்கே அமைதியும் நிலவியது. ஆனல், நிலச்சுவான்தார், இவ்வரியைக் கட்டுவதனல், வாடகையை ஏற்றிவிடுதல் போன்றவை வேறு காரணங்களைப் பொறுத்திருக்கின்றன.

ஐரிஷ் காரியதரிசியாகப் பணியாற்றிய முன்கோபி ஸ்டான்லி யைப் பதவியைவிட்டு விரட்டியபிறகு 'மூப்பதுகளில்' பதவியேற்ற விக் அரசாங்கம் முன்னேற்றமான ஆட்சியை அவர்களுக்கு அளித் தார்கள். பொறியியல் அதிகாரியான தாமஸ் டிரம்மண்ட் (Thomas Drummond) உதவிக் காரியதரிசியாகப் பதவி வகிக்கும் பொழுது, பிரிட்டிஷ் மக்களோடு அவர்களுக்கும் சமநிலை உரிமைகள் அளிக்கப்பட்டன. கத்தோலிக்கர்கள் பேரளவில் காவலர்களாக நியமிக்கப்பட்டனர். சம்பளம் தரப்படுகின்ற நீதிபதிகளும் கத்தோலிக்கர்களிடையே இருந்து நியமனம் செய்யப்பட்டனர். ஆரஞ்சு கட்சிக்காரர்கள் ஒடுக்கப்பட்டார்கள். குத்தகைக்காரர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றுமல் காவலர் ஆங்காங்கே பாதுகாப்பு அளித்து வந்தனர் திறமைமிக்க இந்த டிரம்மண்டின் நல்ல வேலைகள் நீடித்து நடைபெறுமல் போய் விட்டன. விக்குகளின் சீர்திருத்தங்களுக்குப் பிரபுக்கள் முட்டுக் கட்டையாக இருந்தனர். பிரபுக்களுக்கு இந்த விவகாரங்களை ஆழமாகக் கவனிக்கின்ற திறமையும் இல்லை. ரயில்வே வளர்ச் சிக்கு அரசாங்க உதவி தரும் திட்டமும், மற்றும் அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல், குடியேற்ற வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற அதிகாரங்களை இரவலர் சட்ட அதிகாரி களுக்கு தரப்படுகின்ற திட்டங்களும் நிறுத்தப்பட்டன. அப் பொழுதிருந்த பொருளாதார சூழ்நிலைக்கேற்ப அதிகப்படியான மக்களை வெளிநாடுகளில் குடியேற ஆதரவு தருவதும், பண்ணை களைப் பெரிதாக்குவதும், விவசாயிகள் தினசரி கூலி பெறுகின்ற

தொழிலாளியாக மாறுவதும் அவசியம் என்று விக்குகள் கருதினர். 1838-ல் அவர்கள் ஒரு இரவலர் சட்டத்தை இங்கிலாந்தில் இயற்றியதைப் போலக் கொண்டுவருவதில் ஆர்வம் காட்டினர். இதனால் ஆங்கிலேயர்கள் கூடித்து ஐரிஷ்காரர்களின் வறுமையைப் போக்க உதவி செய்வது நிற்குமென்றும், பல ஐரிஷ் காரர்கள் இங்கிலாந்தில் வேலை தேடி அலைவதும், அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு நீங்கும் என்றும் கருதினர். ஆனால், இந்தக் காரணத்தைவிட, இந்த மாறுதல் ஏற்படுகின்ற காலத்தில் இரவலர்களுக்கும், வேலையில்லாதவர்களுக்கும், உதவி செய்ய தொழில் இல்லங்கள் அமைப்பதே அடிப்படையான நோக்கமாக இருந்தது. அவர்கள் மற்றுமொரு முக்கியமான சாதனையைப் பீலின் உதவியால் செய்தார்கள். அதுதான் 1840-ல் இயற்றப் பட்ட நகராண்மைக் கழகச் சட்டம் (Municipal Act.) ஆனால், இந்தச் சட்டத்தால் முணுமுணுப்புத்தான் அதிகமாக மக்களிடையே தோன்றியது. இந்தச் சட்டத்தின்படி, ஊழல்கள் மிகுந்த புராடஸ்டண்டு நகராண்மைக் கழகங்கள் ஒழிந்ததென்றாலும், ஆட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களால் நடக்க வேண்டுமென்று கூறப்பட்டது. வாக்குரிமை அளிப்பவர்கள் அந்த தகுதி பெற்றவர்களாக இருப்பதனால், குறைந்த அளவில்தான் அவர்கள் வாக்குரிமை அளிப்பதில் பங்கு கொள்ள முடிந்தது, இந்த முறை பத்து பெரிய நகரங்களில் கொண்டுவரப்பட்டது. ஆனால் காவல், நீதித்துறைகள் அரசாங்கத்தின் ஆதிக்கத்திலேயே இருந்தன.

ஏற்கனவே, பிரிட்டிஷ் கொள்கைகள் அயர்லாந்தின் நிலப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாத வகையில் அமைந்திருந்தன. அதைப்புரிந்து கொள்வதில், அவர்களுக்கு அநுபவம் ஏற்படவில்லை. இப்பொழுது அந்த நிலப்பிரச்சினையால் ஏற்படுகின்ற தீயவினைவுகளைக் கவனிக்காது விட்டுவிட்டனர். 1782-க்கு முற்பட்ட சட்டங்கள் ஐரிஷ்காரர்களுக்கு நிலத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் வாழமுடியாதபடி செய்துவிட்டன. பிரிட்டனுடைய வெளிப்படையான போட்டியில் ஐரிஷ் தொழிற்சாலைகள் பிழைப்பதே அரிதாகிவிட்டன. தெற்கு அயர்லாந்தில் நிலம் ஒன்றுதான் அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிசெய்கின்றது. போர்க்காலத்தில் தானிய விலைகள் அதிகமானவுடன், விவசாயிகளின் தொகையும் மிகவும் பெருகிவிட்டது 1793-க்குப் பிறகு எல்லா அரசியல் சம்பந்தப்பட்ட நிலச்சுவான்தார்களுக்கும் பல வகைகளில் நன்மை ஏற்பட்டது. 40 ஷில்லிங் நிலஉரிமையாளர்களுக்கும் வாக்குரிமை கிடைத்தது. நிலச்சுவான்தார்களுடைய பெருமையும், திறமையும், சமுதாயத்திலே மதிப்பும் அதிகமாக இருந்த போதிலும், இந்த வகுப்பினர் பொருளாதாரத்

துறையிலே பல இன்னல்களை அடைந்தனர். அவர்களுடைய வரலாறு துயரமிக்கது. வறுமைமிக்க நாட்டில் பல மானிய உதவிகளைப் பெற்ற போதிலும், அரசியலில் பிரிட்டனை நம்பியே வாழவேண்டியிருந்தது. மேலும் ஐரிஷ் நிலக்கிழார்கள் பெரும் பாலும் நிலத்தில் இல்லாதவர்களேயாவர். அவர்கள் மேற்கு இந்தியத் தீவுகளில் உள்ள வாடகை வாங்கும் தோட்ட அதிபர் களைப் போன்றவர்களே. இங்கிலாந்திலிருப்பதைப் போல, கட்டிடங்களையும், நிலங்களையும் செம்மையாக்கிக் கொடுப்பதைப் போலல்லாது, ஐரிஷ்காரர்கள் வெறும் நிலத்தை மட்டும் குத்தகைக்கு விட்டு விட்டு வாடகை வாங்கினர்கள். அதனால் என்ன திருத்தங்களை விவசாயிகள் செய்தாலும், அவைகளுக்கான நஷ்டஈட்டை, நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்கக் கடமைப்பட்டி ருந்தார்கள், என்ற விவசாயிகளின் பாதுகாப்பு முறை அல்ஸ்டர் பகுதியில் மட்டும் பழக்கத்தில் இருந்து வந்தது. சில சமயங் களில் குத்தகைக்காரர்கள் அதிக வாடகையைத் தர முடியாது அவதிப்பட்டார்கள். அவர்களுடைய சாகுபடி செலவினங்களை மீட்டு, வாழ்க்கையை ஓட்டுவதே கடினமாக இருக்கும்பொழுது அதிகபட்சமான வாடகையைத் தருவதில் அவர்களுக்கு அதிகத் தொல்லைகள் இருந்தன. மேலும், வாடகையை வசூலிக்கின்ற நிலச் சொந்தக்காரர்கள், அவர்களுடைய நடுவர்கள் மூலமாக வசூலிப்பதால், அவர்களுடைய லாபமும் வாடகையுடன் சேர்த்துக் கொள்ள வேண்டியதாகிறது. ஆனால், ஐரிஷ் விவசாயி தன்னுடைய சிறு விளைச்சலையே போதுமென்று நம்பி வாழ்ந்தான். அவனுடைய குடும்பம் பெருகிவிட்டால், நிலத்தைத் துண்டாக்கு கிறான். வாடகைக் கொடுக்கும் சமயத்தில், டப்ளினுக்குச் சென்று, அங்கிருந்து இங்கிலாந்திற்கு குறைந்த செலவில் செல்லு கின்ற வழியைப் பார்க்கிறான். இங்கிலாந்தில் அறுவடை வேலையில் ஈடுபட்டு, பின்பு திரும்பிவிடுகிறான். ஆனால், பல சமயங்களில் அவர்கள் கூலியைப் பணமாகப் பெறுவதில்லை, அதற்குப் பதிலாக, நிலத்தில் வேலை செய்து வாடகைக்கு ஈடாக்கிவிடுகிறார்கள். அவர்களுடைய குடும்ப வாழ்க்கை சூதாட்டத்தைப் போன்றது. உருளைக்கிழங்குகளைச் சில சமயங் களில் பூச்சிகள் அரித்துவிட்டால், அவர்களுடைய வாழ்க்கையும் பாழாகிறது. மற்றொரு தொல்லையும், விடுதலைச் சட்டத்தைப் பின் தொடர்ந்து ஏற்பட்டது. இந்தச் சட்டத்திற்கு பிறகு 40 ஷில்லிங் உரிமைதார்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வாக்குரிமை பறிபோய்விட்டது. இதனால், நிலக்கிழார்கள் அவர்களுடைய விருப்பப்படி, குத்தகைக்காரர்களைக் குறைக்கவும், அல்லது குத்தகைகளை ரத்து செய்யவும், அல்லது குடியிருப்பதைத் தடுக்கவும், அல்லது பயனில்லாத நிலங்களுக்கு அனுப்பவும்,

முடிந்தது. காலி செய்கின்ற சட்ட உரிமையை அவர்கள் சிறிதும் இரக்கமின்றி பயன்படுத்தினர்கள். சில சமயங்களில் குடியிருப் பவர்கள் ஒரு கத்தோலிக்கருக்கு ஓட்டளித்தாலும், அவர்கள் அகற்றப்பட்டார்கள். இதனால் விவசாயிகள் பற்றற்ற நிலையில் தங்களுடைய நிலங்களிலேயே வேலை செய்தாலும், அவர்களி டையே நிலத்தைச் செம்மையாக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படவில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டாவது அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்ற நிலையில் அவர்கள் உழைத்து வந்தார்கள். அவர்களை வெளியேற்ற கொண்டுவரும் நடவடிக் கையும் சட்ட வரம்பிற்குள்ளேதான் இருக்குமென்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். அதனால் புதிய குத்தகைக்காரர்களைக் கண்டவுடன், அவர்களை ஒதுக்குவதற்கான முறைகளையும், ஆடு மாடுகளை முடமாக்குவதும் கொலை செய்தல் போன்ற குற்றங் களையும் அவர்கள் செய்ய அஞ்சவில்லை. ஐரிஷ்காரர்களுடைய ஒழுக்கத்திற்கும், பிரிட்டிஷ் சட்ட அமைப்பிற்கும் தொடர் பில்லாமல் இருந்தது.

இந்தத் தொல்லைகள் மிக்க பின்னணியைப் பார்க்கும் பொழுது, 'நாற்பதுகளில்' நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகள் அவ் வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றவில்லை. நான்கா வது ஜார்ஜ் அரசன், பீலைப்பார்த்து, 'அரசனின் புராடஸ்டண்ட் மந்திரி' என்று வேடிக்கையாக அழைத்தார். அயர்லாந்தை இனி மேல் இராணுவ பலத்தினால் மட்டும் கட்டுப்படுத்த முடியா தென்றும், வன்முறைகளால் அவர்களைத் திருந்த வைக்க முடியா தென்றும் பிறகு பீல் உணர்ந்தார். பல சட்டங்களை ரத்து செய்ய வேண்டுமென்று ஆர்பாட்டம் செய்கின்ற கத்தோலிக்கர்களிட மிருந்து, சில மட்டமான கருத்துகளை உடைய கத்தோலிக்கர்களை தன் பக்கம் ஈர்ப்பதற்காக பீல் பல நல்ல காரியங்களைச் செய்ய முனைந்தார். மேய்னூத்திலுள்ள (Maynooth) சமயப்பள்ளிக்கு பிட் அளித்த மானியத்தை பீல் அதிகமாக்கினர். (Cork) டப்ளின், பெல்பாஸ்ட் (Belfast) ஆகிய நகரங்களில் அரசியாரின் கல்லூரி களை அமைத்தார். இந்தக் கடவுளில்லாத கல்லூரிகளில், எல்லா சமயங்களும் சமநிலையில் கருதப்படுவதைக் கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். பெரும்பான்மையான பிஷப்புகள் ஓ'கானலை ஆதரித்தார்கள். இந்த மதகுருமார் களுக்கு ஏதாவது அரசாங்கத்திலிருந்து சம்பளம்போன்று கொடுக்கவும் ரஸல் தயாராக இருந்தார். ஆனால், பிரிட்டிஷ் புராடஸ்டன்டுகளின் எதிர்ப்பு மிகவும் அதிகமாக இருந்தது. பீல் மீண்டும் பதவிக்கு வந்தபொழுது, ஓ கானெல் நிறைய நிதி வசூல் செய்து, மறுபடியும் சட்டங்களை ரத்து செய்ய வேண்டு

மென்ற அவரது போராட்டத்தை தேசீய அளவில் ஆரம்பித்தார். கிளாண்டார்ப் (Clontarf) என்ற இடத்தில் 1843-ல் அவர் சொற் பொழிவாற்றிய பின்பு, அவர் பின்வாங்கினர். அவரைக் கைது செய்தும், ஆனல் ஒரு சிறு சட்ட சிக்கலினல் அவரை விடுதலே செய்தார்கள். 1847-ல் அவர் இறப்பதற்கு முன்பே, அவருடைய அரசியல் வாழ்க்கையும் முடிவடைந்தது.

1845-ல் பீல், டெவோன் (Devon) கமிஷனே நியமித்து நில வரிகளே ஆராயச் சொன்னர். இந்த நடவடிக்கை நம்பிக்கை யூட்டும் அளவில் இருந்தது. ஆனல், இந்தக் கமிஷனின் சிபார் சுகள் வேரையே அறுத்துவிட்டன. காலி செய்வதற்கான அதி காரங்கள், செம்மையாக்குவதற்கு தக்க நஷ்டஈடு தரப்படாமல், வாடகையை உயர்த்துதல், போன்ற சிபார்சுகள், அவர்களுடைய நம்பிக்கையையும், நியாயத்தையும் அகற்றுவிட்டன. ஆனல், அவர்களே பிரபுக்கள் சபையினலும், 1846-47-ல் ஏற்பட்ட பஞ்சத் தாலும் அகற்றுவிட்டார்கள். இந்தப் பஞ்சத்தால் அவர்கள் வீழ்ச்சி அடைந்ததுமட்டுமல்லாமல் ஆங்கிலேய-ஐரிஷ் நல்லுற வுகள் நல்முற முடியாத நிலேயும் ஏற்பட்டுவிட்டது. பழைய நில முறையும் அழிந்தது. பலமுறை ஏற்கனவே எச்சரிக்கை செய்தி ருந்தபோதிலும் 1845ல் உருளேக்கிழங்கு சாகுபடி அழிந்துவிட்டது. 1846-ல் முழுவதும் அழிந்துவிட்டது. நல்ல சாகுபடி இதற்குப் பின்பு ஏற்பட்டபோதிலும், ஏற்கனவே பலவீனம் அடைந்திருந்த மக்கள் வயிற்றுக் கடுப்பினலும், காய்ச்சலினலும், உயிரிழந்தனர். 1841-ல் 8 மில்லியன் மக்களாக இருந்தவர்கள், அடுத்த பத்தாண் டில், 6½ மில்லியன் மக்கள் தொகையாகக் குறைந்துவிட்டனர். சுமார் 700,000 பேர் பட்டினியினலும் அல்லது அரை பட்டினியின் விளேவுகளாலும் இறந்தனர். எஞ்சியிருந்தவர்கள் குடியேற்றக் கப்பல்களில், அவர்களுடைய வியாதிகளுடன் கூட்டம் கூட்டமாக ஏறினர். அந்த நாட்டிலிருந்து வருடம் ஒன்றுக்கு 200,000 பேர் வீதமாக வெளியேறினர்கள். இந்தப் பஞ்சம் பின்பு முக்கியத்து வம் அடைகின்ற அரசியல் நிகழச்சியை ஏற்படுத்தியது. அதாவது ஐரிஷ்--அமெரிக்கர்கள் என்ற இனத்தைத் தோற்று வித்தது. நெடுங்காலமாக பிரிட்டிஷ் பொருளாதாரவாதிகள், இங்கே 'ஒழித்தல்' ஏற்படவேண்டுமென்று நினைத்தார்கள் அந்த ஒழித்தல் இப்பொழுது ஏற்பட்டது. 1851-வது முடிவில், முக் கால் ஏக்கரிலும் அதற்கு குறைவாகவும் விவசாயம் செய்துவந்த பண்ணைகள் ஒழிந்தன. பதினைந்து ஏக்கரில் விவசாயம் செய்து வந்த பண்ணைகள் பாதி அளவில் குறைந்தன. 1847-49-ல் சுமார் 35,000 பேர்களுக்கு காலி செய்யும் உத்தரவு இடப்பட்டமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பிரிட்டிஷாரின் இரக்க சிந்தனை அவர்களைக் கைவிட்டுவிட வில்லை. அதே வகையில் பிரிட்டிஷ் பொது நிதியிலிருந்து மூன் பணமும் தரப்பட்டது. சுமார் 700,000 பேர் 1847-ல் மராமத்து வேலைகளில் அமர்த்தப்பட்டனர். பிரிட்டிஷாரின் பரிகாரங்கள் நிலத்தில் வேலை செய்கின்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஐரிஷ் காரர்களின் எதிர்ப்பைக் கவனியாது தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. ஐரிஷ் மக்கள் பஞ்சத்தால் அவதிப்படும் பொழுதும், அங்கிருந்த தானியம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது முரண்பட்ட உண்மையே. மந்திரிகளின் கடிதங்களிலிருந்து என்ன தெரியவருகிறதென்றால், துயருதவி பெறுகின்றவர்கள் தொகை குறைவாக இருக்கவேண்டுமென்பதே. ரயில்வே வளர்ச் சிக்கானத் திட்டம் ஒன்று ஜார்ஜ் பெண்டிக் கொண்டுவந்தார். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இரவலர் சட்டத்தில் ஒரு திருத்தம் ஏற்பட்டு, கால் ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கே துயருதவி தரவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. வாடகைகளைக் கட்டுப்படுத்தவேண்டும், என்ப தற்காக ரஸல் ஒரு சட்டம் கொண்டுவர முயற்சி செய்ததை, கேபினட்டும், பாராளுமன்றமும் எதிர்த்தன. வில்லங்கமுள்ள பண்ணைகள் சட்டம் (Encumbered Estates Act)) 1848-ல் இயற்றப் பட்டது. திவாலான உடைமைகளை ஒழித்ததென்றாலும், அதனால் ஏற்பட்ட விளைவுகள் மிகவும் பாதகமாக இருந்தன. பத்து ஆண்டு களில் புதிய நிலக்கிழார்கள் ஏற்பட்டார்கள். அவர்களில் 80 சத விகிதம் ஐரிஷ்காரர்களே. அவர்கள் சிறிது கடுமையாகவே இருந்தார்கள். ஏழைகளை அவர்கள் குத்தகைகாரர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கென்று இருக்கும் இரவலர் நிதியைப் பெருக்க விரும்பவில்லை. அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றும் வாய்ப்பு ஏற்படின், முழுவதுமே வெளியேற்றி விடுவார்கள் போலிருந்தது.

பஞ்சம் ஏற்பட்ட ஆண்டுகளில், அவர்களுடைய அரசியலிலும் பல உட்பிரிவுகள் ஏற்பட்டன. "யங் அயர்லாந்து" (Young Ireland) என்ற புதிய இயக்கம் ஓ கானெல் (O'Connell) இயக் கத்தைவிட அதிகம் மாறுபட்டது. அவர்களுடைய தலைவர்களில் ஒருவர், மூர்க்கத்தனமான தன்மையுடைய ஜான் மிட்சல் (John Mitchel) என்பவர், அல்ஸ்டரைச் சார்ந்தவர். அவருடைய முடிவு பரிதாபமாக இருந்தது. ஆதிக்க மனப்பான்மையுடைய தாமஸ் டேவிஸ், ஸ்மித் ஓ'பிரியன் (Smith O'Brien) ஆகியோர் புராடஸ்டன்டுகள். அவர்களுடைய உணர்ச்சியும், செயல் முறையும், ஃபிரெஞ்சு, அல்லது இத்தாலிய இயக்கங்களை ஒத்திருந்தன. '98-ல் ஏற்பட்ட கலகத்தைப் போலவோ,

அல்லது ஓ'கானெல்லின் கத்தோலிக்க பரம்பரையிலோ இருப் பதைப்போன்று அவர்களுடைய இயக்கம் இல்லை. அவர்கள், சமய வேறுபாடுகள் அல்லது மற்ற பிரிவுகள் என்று பாராது ஒன்றுபட்ட ஒரு நாட்டை ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்ச்சி யுடன் செயலாற்றினர். நிலப்பிரபுக்களையும் அவர்கள் இயக் கத்தில் சேர்த்து கொள்ளத் தயாராக இருந்தார்கள். ஐரிஷ் வரலாறு, கலைகள், மொழி, வளர்ச்சி அடையவேண்டுமென்று 'நேஷன்' (Nation) என்ற அவர்கள் செய்தித்தாளில் அடிக்கடி பிரச்சாரம் செய்தார்கள். பழைய 'விடுவிப்போனின்' எதேச்சை யான தன்மையை அவர்களுக்கு கட்டோடுபிடிக்கவில்லை. அவருடைய மகனை ஜான் என்பவரும் தந்தையைப் போலவே சர்வாதிகாரியாக விளங்கவேண்டும் என முயன்றார். மேலும் சில பிரிட்டிஷாருடன் தொடர்பு வைத்துக்கொண்டும், திருச்சபை ஆதிக்கத்தை வைத்துக்கொண்டுமிருப்பதை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், அப்படிச் செய்வதால் புராடஸ்டண்டு களின் நட்பை அவர்கள் இழக்க நேரிடும். பாராளுமன்றத்தால் அவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று முடிவாகத் தெரிந்து கொண்டனர். அதனால், அப்பொழுது ஐரோப்பாவில் ஏற்பட்டு வந்த 1848 புரட்சி இயக்கங்களை ஒத்து, இங்கேயும், ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு முன்னணியை ஆரம்பிக்க முயன்றனர். லேலர் (Lalor), மிட்சல் (Mitchel) ஆகியோர், வாடகை கொடுக்காமல் வேலைநிறுத்தம் செய்தால் நிலங்களின் கதி என்னவது என்றும், குத்தகைக்காரர்கள் சங்கம் அமைத்துக் கொண்டால் என்னவது என்றும் சிந்திக்கத் தொடங்கினர். அவர்களுடைய நிதி மிகவும் குறைவானது; அவர்களுடைய பிரிவுகள் மிகவும் மனக்கசப்பானது; அவர்களுடைய குறிக் கோள் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது; அதனால், அவர் களுடைய சதித்திட்டம் அம்பலமானது. அந்த இயக்கத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். மிட்சல், மேகர் (Meagher) ஓ'பிரியன் ஆகியோரும் நாடு கடத்தப்பட்டார்கள். பின்பு அவர்களது வாழ்க்கை அமெரிக்காவில் முடிந்தது. மெக்கீ (McGee) நாளடைவில் கனடாவில் அமைச்சரானார். கேவன் டஃபி (Gavan Duffy) விக்டோரியாவில் பிரதம அமைச்சரானார். அயர்லாந்தின் சுய ஆட்சிக்காக அவர்கள் போரிடத் தயாராக இருந்தார்கள். ஆனால், இன்னும் அரை நூற்றாண்டு காலம் யூனியனில் இருக்கவேண்டி நேர்ந்தது. அப்பொழுது அவர் களுக்கு, எண்ணங்களும், பணமும், தளவாடங்களும் கடல் கடந்து வசிப்பவர்களிடமிருந்து இவர்களுக்குத் தரப்பட்டன.

15. சிந்தனையும் சமயமும் 1830–1860

மூன்றாவது ஜார்ஜ் காலத்திலிருந்த ஆன்மீக வளர்ச்சி நம்ப முடியாத அளவில் அடியோடு மாறிவிட்டது. இந்த மாறிய சூழ் நிலையில்தான் விக் சீர்திருத்தவாதிகளும், பீலும், அவருடைய வாரிசுகளும் தங்களுடைய கடமைகளை ஆற்றினர். இவ்வித மாற்றங்களுக்கு, பரந்த அளவில் பரவிய கல்வி முறையும், மற்றும் சுதந்திரமாக இயங்கும் செய்தித் தாள்களின் பங்கும் பெரும் சக்திகளாக விளங்கியதென்பதையும் உணரவேண்டும். இவற்றைப் புரிந்துகொள்ளவில்லையென்றால், விக்டோரியாவின் பொற்காலத்தையோ அல்லது கிளாட்ஸ்டன், டிஸ்ரேலியின் போராட்டத்தையோ புரிந்துகொள்ள முடியாது.

காமன்வெல்த் ஆட்சிக்குப் பிறகு, இந்தக் காலத்தில்தான் ஆங்கிலேய மக்கள் அதிக சமயபற்றுடையவர்களாகக் காணப் பட்டனர். பல அரசாங்கங்களின் முடிவும், கேபினட்டுகளின் அமைப்பும் பெரும்பாலும் சமயப் பிரச்சினைகளைப் பொறுத்தே அமைந்தன. விக்குகள், டோரிகள், என்ற பழைய பிரிவுகள், பெரும்பாலும், திருச்சபையினரும், அச் சபையில் இணங்காதார் களும் என்ற அடிப்படையில் பொருள் கொள்ளப்பட்டது. ஆனால், இப்பொழுது பல சமயத்தினர் ஒரே கட்சியினுள் இருந்து கொண்டு கட்சியினுள்ளேயே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டனர். இதற்கு முக்கிய காரணம், ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள, புதிய கொள்கைகளான சமயப் பற்றற்றத் தன்மையும், தேசிய ஆர்வமும் ஆகும்.

பிரிட்டனிலுங்கூட சமயத்தின் குரலும், அதன் கொள்கையும் பேரளவில் மாறிவிட்டது. வெஸ்லியனிஸம், ஃபிரெஞ்சுப் புரட்சி, சமயப் பிரச்சாரம், தொழில் மயமாதல் ஆகிய சக்திகள் பழைய அமைப்பை குலுக்கிவிட்டன. அடிப்படை நம்பிக்கைகளுக்கேற்ப,

மக்கள் தங்களுடைய சமயத்தைத் தேர்ந்தெடுக்கத் தூண்டியது. இதனால், சிலர் தீவிரமான கொள்கைகளைப் பின்பற்றினர்; சிலர் இணங்காதவர்களாக மாறிவிட்டனர்; மற்றவர்கள் வலது சாரிக்குத் திரும்பினர், அல்லது கத்தோலிக்க சமயத்தையே மீண்டும் ஆதரித்தனர். 1828–9-ல், சோதனை சட்டங்கள்; நகராண்மைக் கழகச் சட்டங்கள் ஆகியவற்றை ரத்து செய்த உடன், திருச்சபையில் காணப்பட்ட அரசியல் தனிஉரிமை முறிந்துவிட்டது. ஒப்புக்கொள்ளப்பட்ட திருச்சபையைக் கலைத்துவிடப்போவதாக, தீவிரவாதிகள் அச்சுறுத்தினர். சில ஆண்டுகளுக்கு முன்பு, அமைதியை நிலைநிறுத்துகின்ற பலர் திருச்சபையைச்சார்ந்தவர்களாகவே இருந்தனர். இந்த விதமாகச் சமுதாய விதிகளை ஒரே விதமாக பின்பற்ற முடியவில்லை. இணங்காதார் குழுவினரிடமும், இதைப்போன்ற முக்கிய அளவில் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆங்கிலேய பிரஸ்பிடீரியனிசம் (Presbyterianism) இப்பொழுது பலமுள்ள மத்திய ஆதிக்கத் திற்குள் கொண்டுவரப்பட்டது. இச் சமயப் பகுதியினர், அறிவுத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சிறந்த முறையில் முன்னேறியிருந்தனர். அவர்களுடைய தலைமை காரியாலயங்கள் நார்விச்சிலும், பர்மிங்காமிலும் அமைக்கப் பட்டன. அவர்களுடைய முக்கிய அம்சமான சுதந்திரத்தைக் கைவிட்டுவிட்டு, அதிகாரம் பொருந்திய ஒரு மத்திய நிறுவனத் திற்குக் கட்டுப்பட்டு வந்தார்கள். திருச்சபையுடன் ஐக்கிய மாகும் வெஸ்லியின் நம்பிக்கையை ஒதுக்கிவிட்டு, இப்பொழுது நன்கு நிறுவப்பட்ட சமயக் கழகமாகப் பணியாற்றுகிறது. ஆன்மீக எதிர்ப்பு என்ற அதனுடைய கொள்கையை இப்பொழுது மாற்றி அமைத்துக்கொண்டது

மேலும், இந்தக் காலத்தில் ஏராஸ்டியானிசம் (Erastianism) அதாவது திருச்சபையும், அரசும் ஒன்றுபட்ட அமைப்பில் இயங்குவது என்ற கொள்கை சீர்குலைந்தது. இக்கொள்கை ஒரு காலத்தில் இங்கிலாந்தில் நல்ல செல்வாக்கு பெற்றிருந்தது. மீண்டும் அக்கொள்கைக்கு டியூடர்கள் ஆட்சி காலத்தில் முக்கியத்துவம் தரப்பட்டது. 1828–29-க்குப் பிறகு கொள்கை யளவில் இந்த முறையை ஆதரிப்பது என்பது இயலவில்லை. சமய ஒருமைப்பாடு சீர்குலைந்த பிறகு, சீர்திருத்தம் செய்யப்பட்ட பாராளுமன்றத்தில் ஒவ்வொரு திருச்சபையில் இணங்காதவரும் திருச்சபை வரிகளைச் செலுத்திவிட்டு, திருமணத்தை மட்டும் ஆங்கிலிக்கன் திருச்சபையில் வைத்துக்கொள்ள வேண்டு மென்ற கட்டாயத்தைக் கொண்டுவர முடியாது. இன்னும், கெபள் (Keble) போன்றவர் பழைய குறிக்கோளுக்காக எதிர்

நீச்சல் அடித்து வருகிறார்கள். சமீபத்தில் 1839-ல் கிளாட்ஸ்டன் "சமயமும் அரசும்" (Church and State) என்ற நூலை, எழுதி, இந்தப் பழைய கொள்கையை ஆதரிக்க முயன்றிருக்கிறார். ஆனால், திருச்சபைக் கட்சியின் அரசியல் தலைவரான பீல் இந்தக் கொள்கையை விட்டுவிடத் தயாராக இருந்தார். அதற்காகச் சில சலுகைகளையும் தர இருந்தார்.

திருச்சபையினரே மீண்டும் பழைய காலத்திற்குச் சென்று தங்களுடைய கொள்கைகளை மீட்டுக் கொண்டுவர முயன்றாலும், அக்கொள்கைகளை இக்காலத்திற்குப் பயன்படாது என்ற உண்மையை நன்கு புரிந்து கொண்டார்கள். 1840க்கு முன்பே அவர்களுடைய பெருந்தலைகள் மறைந்துவிட்டன. வில்பர்போர்ஸ், அல்லது சார்லஸ் ஸைமன் (Charles Simeon) ஆகியோர் கேம்பிரிட்ஜ் நகரத்திலிருந்தே பெரிய வேலையை விரித்திருந்தார்கள். இப்பொழுதுள்ள அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகள், பழைய தலைவர்களான லிவர்பூலைப் போலவோ அல்லது பெர்ஸிவலைப் போலவோ (Perceval) ஆற்றல் படைத்தவர்களல்ல. இருப்பினும் அவர்கள் பல நிறுவனங்களை அமைத்து, தொழில் மயமான இங்கிலாந்திலும் மற்றும் பேரரசிலும் சமயப் பிரச்சாரத்தைச் செய்து வந்தார்கள். அவர்களுடைய பல பிரச்சாரக் கழகங்கள் சமய சிறு நூல்களையும், பிரச்சார நூல்களையும், விவிலிய நூல்களையும் விநியோகம் செய்தனர். அதற்கான கழகங்கள், 'ரெலிஜியஸ் டிராக்ட்' (Religious Tract), 'சர்ச் மிஷனரி' (Church Missionary) பிரிட்டிஷ், மற்றும் அந்நிய விவிலியக் கழகங்கள் (British and Foreign Bible Societies) பிரச்சாரம் செய்தன. இருப்பினும் அவர்களுடைய அறிவு மனப்பான்மை மிகவும் குறுகியதாகவே இருந்தது. நம்பிக்கையின் அடிப்படையில் உயிர் வாழ்தலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் முயற்சி என்பதும் போன்ற பல மறையாத கத்தோலிக்கக் கொள்கைகளை அவர்கள் இன்னும் விட்டுவிடவில்லை. இவ்விதக் கொள்கைகள் இன்னும் ஆங்கிலிக்கன் சமயப் பிரிவில் வழங்கி வந்தன. சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக, மக்களிடையே கடவுள் நம்பிக்கை கெட்டுவிட்டது. அதனால் சமய உணர்வு மீண்டும் மக்களிடையே பரப்பப்பட்டது. ஆனால், இந்த உணர்வு, பழைமையானதும், கத்தோலிக்க சார்புடையதாகவும் இருந்தது. இதனால் மக்களுடைய மனத்தில் ஒரு புதுமை உணர்வு ஏற்படுகின்ற நிலை ஏற்பட்டது. மனத்தை அச்சிந்தனை வயப்படுத்த வால்டர் ஸ்காட்டின் பங்கும், மனிதனின் உழைப்பை இயற்கையோடு ஒன்று படுத்துகிற வோர்ட்ஸ்வர்த்தின் பங்கும், ஆட்கொள்ளும் கொள்கையைத் தேடிப் பிடிக்கும் கோல்ரிட்ஜின்

பங்கும் இப்புதிய புதுமை உணர்வு மிக்க காலத்திற்குப் பயனளித்தன. ஆனால், சமயமோ புதிய வழிகளில் சென்றாலும், பழைய ஊற்றிலிருந்தே அவைகள் கிளம்பின. தனிப்பட்டவனின் ஒழுக்க வாழ்க்கைக்கு அப்பால் நியூமேனும் (New Man) சமயப் பிரச்சார ஆர்வத்தை மேற்கொண்டார். வில்பர போர்சின் இரண்டு மைந்தர்கள் கத்தோலிக்கர்களாக மாறிவிட்டனர்; மூன்றாவது மகனும் உயர்திருச்சபை பிஷப்பாகப் பணியாற்றினர்.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட புதுவாழ்வின் விளைவாக; ஆக்ஸ் போர்ட் இயக்கம் ஏற்பட்டது. அந்த இயக்கம், பல்கலைக் கழகத் தேர்வுகளை ஒழுங்காகவும், பயனுள்ளதாகவும் நடத்தும்படியும், பட்டங்களை அறிவு வளர்ச்சியின் அடிப்படையில் தரவேண்டு மென்றும் கோரியது. இந்தச் சீர்திருத்தத்தில் ஓரியல் கல்லூரி தான் ஆரம்ப முயற்சி எடுத்துக் கொண்டது. இதில் பங்கெடுத் துக் கொண்டவர்கள் அநேகமாக எதிர்கால பள்ளித் தலைவர் களான, கெபிள், தூய்மையான ஆங்கிலிக்கன், ரக்பியை சேர்ந்த ஆர்னல்டும், வேட்லியுமாவர். இவர்கள் பரந்த திருச்சபையைச் சார்ந்தவர்கள். நியூமேன், ஹரல் ஃபிரவுட் (Hurell Froude) ஆகியோர்களிடையே 1833-ல் பிளவு ஏற்பட்டது. இந்தப் பிளவுக்குக் காரணம், ஆர்னல்டு தாராளமான தேசிய திருச்சபை ஏற்படுத்த வேண்டுமென்றும் அதில் எல்லா புராடஸ் டன்டுகளும் இணையவேண்டுமென்றும் அறிவித்தார். கெபிள் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. 'தேசியக் கொள்கை துறத்தல்' என்பதைப்பற்றி அவர் ஒரு பிரச்சாரம் செய்தார். ஏனெனில் அயர்லாந்தில் விக்குகள் திருச்சபையைத் தாக்கினர்கள்; இங்கிலாந்திலே ஒப்புக்கொள்ளப்பட்ட சமயத் தைக் கலைப்பதாக பயமுறுத்தினர்கள். இக்காலத்திலிருந்தே இவ்வியக்கம் ஆரம்பித்தது. அந்த இலையுதிர் காலத்திலேயே நியூமென் 'காலத்திற்கேற்ற சிறு நூல்கள்' (Tracts for the Times) என்ற வரிசையில் முதல் நூலை வெளியிட்டார்.

இந்த இயக்கம் முதலில் சிறு பகுதியில் வேலை செய்ய ஆரம் பித்தது. ஆரம்பத்தில் பள்ளிகளில் ஏற்படுகின்ற நியமனங் களைப்போன்ற சிறு விவகாரங்களில் அக்கறை கொண்டிருந்த வர்கள், நாளடைவில் அதன் கொள்கைகள் சமுதாயத்தின் இதயத்தையே தொட ஆரம்பித்தன. அந்த இயக்கத் தலைவர்கள் லிபரலிசத்தின்மீது போர் தொடுத்தனர். ஏனெனில் அவர்கள் கடவுள் பற்றில்லாதவர்கள் குற்றம் என்று கூறினர். மற்றும், சமய மறுப்பு தவறான சிந்தனை, சமயப்பொறை ஒரு நற்குணம், அல்லது

பெரும்பான்மையோர் கருத்து எது நல்லதென்று முடிவு செய்யும், சமயப்பற்றற்ற அரசாங்கம் சமயத்தையும் ஆதிக்கம் செய்யும், என்ற எண்ணங்கள்மீதும் அவர்கள் போர் தொடுத்தனர். இக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதற்கு அவர்களுக்கு ஏதாவது ஊன்றுகோல் கிடைக்குமா என்று கவனித்ததில் அவர்களுக்கு மனிதர்களுடைய அறிவிலோ, அல்லது தனி மனிதனின் வீடுபேறு அடையும் நெறியிலோ கிடைக்கும் என்று நம்பினர்கள். ஆனால் அவர்களிடத்திலேயும் நம்பிக்கையில்லாததால், பதினேழாவது நூற்றாண்டின் சூழ்நிலைக்கே மீண்டும் திரும்பினர். அப்பொழுது வீரத் திருச்சபை தொண்டர்களான பிஷப்புகள் ஒருவர் பின் ஒருவராக தங்கள் கடமைகளை ஏற்று பணியாற்றினர். அந்தச் சங்கிலிபோன்ற திருச்சபை பிணைப்பு எப்பொழுதும் இருக்கும். திருத்தொண்டரான அப்போஸல்ஸ் காலத்திலிருந்தே, பக்தி நிறைந்த சமுதாயத்தை ஏற்படுத்தும் ஒரு கனவு இருந்தது. அந்தச் சமுதாயத்தில் உள்ள ஒழுக்கமிக்க சீடர்கள் அதைக் காண் பார்கள். அவர்கள் திருவினைகளைப் படித்திருந்தாலும், இல்லா விட்டாலும் இந்தச் சமுதாயத்தைக் காணத்தான் போகிறார்கள். உண்மையில் இந்தக் கொள்கை மிகவும் பழமை வாய்ந்தது. ஒரு வகையில் இதில் குறிக்கோள் இருந்தது. இக்குறிக்கோள் தனிப் பட்ட முறையில், வாழ்கின்ற மக்களுடன் தொடர்பற்ற சுதந்திர மாக இருந்தது. பீல் அல்லது லண்டனில் பிஷப் புளூம் ஃபீல்ட் (Bloom Field) கட்டாயத்தைப் பொருட்படுத்தி, சமரசத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று கூறினர்.

நியூமேனுடைய சிறு நூல்களைப் படித்தும், அதில் கூறப்பட் டிருக்கும் கொள்கைகளின் சவாலும், நியூமேன், கெபிள், புஸி (என்ற ஹெப்ராய்ஸீட் இயக்கத்தைச் சார்ந்தவரும்) (Pusey the Hebraist) திருச்சபைக்குப் புதிய ஆர்வத்தை அளித்தனர். இந்த இயக்கத்தின் போக்கு, அதன்புற நிகழ்ச்சிகளாலும், தனிப்பட்ட வர்களின் இயல்புகளினாலும், திசை மாறியது முப்பத்தொன்பது விதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்யும் கூக்குரலும், அவை களைக் கல்லூரிகளில் உள்ள இளம்பட்டதாரிகள்மீது திணித் தார்கள். பல கட்டுப்பாடற்ற லிபரல்களை, ஹேம்டன் போன்ற வர்களைப் பதவிகளில் நியமனம் செய்ததும், கிரேன்மர், மற்றும் பல புராடஸ்ட்ண்டு தியாகிகளை நினைவுறுத்தும் சின்னங்களும். ஜெருசேலம் பிஷப் ஆட்சி பகுதிக்கு, ஆங்கிலிக்கன், லூத்தரன் சமயப் பிரிவுகளிலிருந்து இரண்டு இணையான பிஷப்புகளை அமர்த்தும் விநோதமான யோசனையும், 1839-க்கு முன்பே திருச் சபையில் பல பிளவுகளை ஏற்படுத்திவிட்டன. இந்தத் தலைவர் களைப் பின்பற்றுகிறவர்கள் உடனடியான நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று கேட்டார்கள். ஹரல் —பிரூட் (Hurrel Eroude) என்று வரலாற்றுசிரியரின் உடன் பிறந்தான் இளமைப் பருவத்திலேயே இறந்துவிட்டார். அவர் வெளியிட்ட ரிமெய்ன்ஸ் (Remains) என்ற நூலில் சமரசத்தையும் புராடஸ்டண்டிசத்தையும், சமநிலையில் கண்டித்தார். பேலியல் தத்துவஞானியானியான டபிள்யூ. ஜி. வார்ட் (W. G. Ward) என்பவர் அவருடைய வேலையைத் தொடர்ந்து செய்தார். அவருடைய கூர்மையான சொற்கள் புதிய விவாதத்தைக் கிளப்பிவிட்டன.

ஐந்து ஆண்டு காலமாக நியூமேன் ஆங்கிலிக்கன் திருச்சபையில் தயங்கிக் கொண்டிருந்தார். அவருடைய மனத்திற்குள்ளே அதிர்ச்சி ஏற்பட்டது. செயின்ட் அகஸ்டினுடைய வாக்கியம் ஒன்று அவர் மனதிற்கு பட்டது. அது அவருடைய மன நிலையில் இப்படியும் அல்லாது, அப்படியும் அல்லாது தவிக்கும் நிலையைக் கண்டிப்பதுபோன்றிருந்தது, 'வளர்ச்சிதான் வாழ்க்கையின் சான்று' என்று அவருடைய பழைய ஆசிரியர் கூறியது நினைவுக்கு வந்தது. அதனால் அவர், இந்த நிலையில், கோட்பாடு வளர்ச்சி அடைவதற்கான ஆரம்பம் என்று தன்னைத் தேற்றிக் கொண்டார். அதன் அடிப்படையில், தற்கால ரோம் நகரத்தை பழைய கிருத்துவ சமயத்துடன் தொடர்பு படுத்திப் பார்த்தார். அவருடைய அதிகமான கூருணர்ச்சியும், துயரமும், எதையும் முழுமையாக்கின்ற ஆர்வமும் அவருடைய எழுத்தில் இருந்ததால் அவருடைய நூல்கள் மிகச் சிறப்பாகவும், அவருடைய பிரச்சாரம் பதியும் படியாகவும் இருந்தன. இத்திறமையெல்லாம் அவரைப் பொறுமையுடன் காத்திருக்கச் செய்யவில்லை. ஆனால் புஸியின் மேம்பட்ட படிப்பும், சுயநலமற்ற தன்மையும் அவரை நம்பிக்கையுடன் காத்திருக்கச் செய்தன. அல்லது கெபிள், ஆக்ஸ்போர்ட் ஆட்சியாளரின் வரிசையான தாக்குதல்களும், சில தாக்குதல்கள் திறமையற்ற பிற்போக்காளரின் இயற்கையான குணத்தாலும், ஆனால் சில பழிவாங்கும் எண்ணத்துடன் செய்யப்பட்டதாலும் கெபிள் என்பவர், சாதாரண ஆங்கிலேயரின் மனநிலையை உடையவர் என்ற பலத்த ஏமாற்றத்துக்குள்ளானார். 1841-ல் 90ஆவது வரிசை சிறு நூல் வெளியிட்டதில், நியூமேன் முப்பத்தொன்பது விதிகள் கத்தோலிக்க கோட்பாடுகளுக்கு முரண்பட்டதல்ல என்று எழுதியதால், அவரைக் கண்டித்தனர். திருவிணைக் கொள்கைகளில் (Pusey) கொண்டுள்ள அபிப்பிராயத்தால், அவர் பிரச்சாரம் செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டார். ஆத்திர மூட்டும்படி வார்ட் பேசியதால், அவரும் கண்டிக்கப்பட்டார். இவர்களெல்லாம் ஆங்கிலேய திருச்சபையை, கத்தோலிக்கத் திருச்சபை என்று பிரச்சாரம் செய்தார்கள். அவர்களுடைய

தகுதிகளைச் சாதாரண அறிக்கையில் வெளியிட்டார்கள்; சமயக் கொள்கைகளைப் பரப்பும்பொழுது கட்டுப்பாடுடனும், அல்லது வார்த்தைகளை அளந்து பேசுவதாலும் அவர்களெல்லாம் நம்பத்தகாதவர்களென்று குற்றம் சாட்டப்பட்டார்கள். 1845 கடைசியில் நியூமேன் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து கொண்டார். அங்கே அவரைப் பல சீடர்கள் பின் தொடர்ந்தார்கள். 1851-ல் மேனிங் (Manning) என்பவர் ஆர்ச்சடிக்காளை (Archadeacon) பணி புரிந்தார். இதுவரையிலும் ரோமைத் தாக்கிப் பேசிக்கொண்டிருந்தவர் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்டார். இவருடைய ஆர்ச்பிஷப்பிற்கு எதிராக, பிரிவி கவுன்சில், கோராம், (Gorham) என்ற மத குருவை ஆதரித்ததால், இவர் திருச்சபை மாறிவிட்டார். இந்த ஆர்ச்பிஷப், சாதாரண மக்கள் அடங்கிய குழுவினரும்கூட நம்பிக்கையைத் தீர்மானம் செய்யலாம் என்றும் கூறியதே, இதற்குக் காரணம்.

டிரேக்டேரியன்களுக்கு முன்பும் (Tractariana) (அதாவது சமய சம்பந்தமான நூல்களை எழுதி வெளியிடுகிறவர்கள்) ஏராளமான பொருள் செலவில் கோவில்கள் கட்டுவதற்கு முன்பும், திருச்சபையில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ரோமனிசத்தையும் (Romanism) புஸியிசத்தையும் (Puseyism) எதிர்த்து பெரிய எதிர்ப்புப் புயல் வீசிய பிறகும், மக்களுடைய மனத்தில் இந்த இயக்கம் ஆழமாகப் பதிந்திருந்தது. அவர்களுடைய சாதனைகளால் முடியாவிடினும் அவர்களுடைய போர்க் குரலாலும், வாழ்க்கையாலும், மக்கள் மனத்தைக் கவர்ந்தார்கள். ஆனல், இங்கிலாந்தில், எந்தச் சமய இயக்கமும், அல்லது இலக்கிய இயக்கமும் செல்வாக்கு பெற முடியாத நிலை இருந்தது. ஆனல், இந்த இயக்கத்தினல் ஏற்பட்ட அறிவும், பக்தியும், நமது பண்பாட்டிலுள்ள கத்தோலிக்க வழக்காறுகளை வற்புறுத்தியும், செய்த பிரச்சாரத்தில், சமய வாழ்க்கையிலும் மனோபாவத்திலும் புதிய மாற்றம் ஏற்பட்டது. 1852-ல் கூட்டமாக வழிபடுதல் மீண்டும் கொண்டுவரப்பட்டது. 1717 ஆவது ஆண்டிலிருந்தே இவ்விதமான வழிபாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. பேரரசின் பல காலனிகளிலும் சமயப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு, அங்கே மத குருமார்களும் நியமனம் செய்யப்பட்டனர். அவர்கள் அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால், சுதந்திரமாகத் தங்களுடைய சமயத்தை வளர்த்தனர். இவ்விதமான காரணங்களால், திருச்சபை ஜனநாயக காலத்திற்கேற்ப அதன் நிறுவனத்தை அமைத்துக் கொண்டது.

இச்சமயப் புது உணர்வு ஏற்பட்டபோதிலும், ஆரம்ப விக்டோரியா காலத்தில் விபரலிசம் வெற்றிபெற்றது. 1849-ல் வெளிவந்து கொண்டிருந்த மெக்காலேவின் வரலாறு அந்த புரட்சி காலத்து மக்களின் ஆசிகளைப் பெற்றது. ஜனநாயகத்தைப் புகழ்ந்து அவர் எழுதவில்லையென்றாலும், சார்டிஸ்டுகளின் வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்ற கொள்கையை மாயை என்று கண்டித்தாலும், அவர் இங்கிலாந்து மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலித்தார் என்று சொல்லுவதற்கு காரணங்களாக இருந்தவை விக்குகளைப்பற்றி அவர் அளித்த பாராட்டுதல்களும், புராடஸ்டண்டு சமயத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும், இங்கிலாந்தில் வசிக்கின்ற பெருமையும், முன்னேற்றத்தின் மூலமாக உரிமைகள் விஸ்தரிக்கப்படுவதையும் தான் கூறலாம். ஒழுங்கான உரிமையைப் பெறுவதற்கு எதிராக இருந்த எல்லாத் தடைகளையும், பாராளுமன்றம் அகற்றிவிட சித்தமாக இருந்தது. எங்கும் எண்ணச் சுதந்திரம் வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது. ஸ்காட்லாந்திலும் புரட்சிக்குப் பின்பு சமய உணர்வு ஏற்பட்டது. அங்குள்ள பிரஸ்பிடீரியன் கொள்கையான வழிபாட்டுச் சுதந்திரம், மேலும் அந்தச் சமயத்தினர் தேர்ந்தெடுக்கும் சமய குருமார்களை அங்கீகாரம் செய்கின்ற உரிமைகள் மீண்டும் போற்றப்பட்டன. ஆண்ட்ரு தாம்ப்ஸன், பின்பு தாமஸ் சால்மர்ஸ் ஆகியவர்களின் முயற்சியால். சீர்திருத்த வாதிகள், தனிப்பட்டவர்கள் சமயக் கொள்கைகளில் ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டித்தனர். திருச்சபை மன்றம் ஒரு கட்டளையின்படி அச்சபை அங்கத்தினர்களுக்கு ரத்து உரிமை அளிப்பதாகக் கூறியதை, நீதிமன்றங்களும், பிரபுக்களும், அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்காட்லாந்தின் மதகுருமார்கள் அரசாங்க ஆணைகளின்படி நடந்ததால், அதன் சமய மன்றமான கிர்க் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கியது. பத்தாண்டு போராட்டத்திற்கும் பிறகு 1843-இல் சால்மர்ஸ் வெளியேற்றப்பட்ட 400 மதகுருமார்களைச் சேர்த்து ஸ்காட்லாந்தில் சுதந்திரத் திருச்சபை (Free Church of Scotland) ஒன்றை நிறுவினர்.

ஒவ்வொரு நிறுவனத்தின் தனி உரிமைகள் எல்லாம் காலப் போக்கில் மறைந்தன. 1844-ல் பீல் மேய்னூத் சமயப் பள்ளிக்கு அதிக மானியம் கொடுத்துதவினர். இந்தப் பள்ளி ஐரிஷ் கத்தோலிக்க சமயத்தவரால் நடத்தப்படுவது. 1847-ல் நகரத்தின் அங்கத்தினராகப் பேரன் டி ராத்ஸ்சைல்ட் (Baron De Rothschild) என்ற யூதர் தேர்ந்தெடுக்கப்பட்டதால் ஏற்கனவே அமுலில் இருந்த ஒவ்வொரு அங்கத்தினரும் கிருஸ்துவ சமயத்தில் நம்பிக்கையுடையவர் என்று எடுத்துக் கொள்ளும்

பிராமாணமும், இந்தச் சமயத்தில் தளர்த்தப்பட வேண்டியிருந்தது. காமன்ஸ் சபை அங்கத்தினர்களுக்குச் சில சலுகைகள் வேண்டுமென்று கோரியதற்கு, டிஸ்ரேலியும், கிளாட்ஸடனும், பிரபுக்கள் சபையினரும் சேர்ந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். 1858 வரை இந்தத் தகராறு நீடித்து பின்பு ஒரு சமரசம் ஏற்பட்டது. அதன்படி, அந்தந்த சபையினர் அச்சபையினரின் தகுதிகளை நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்பதே. சில சாஸன உரிமைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, 1852-ல் ராயல் கமிஷன் ஒன்றைப் பல்கலைக் கழகங்கள் எப்படி செயலாற்றுகின்றன என்பதை விசாரிக்க அரசாங்கம் நியமித்தது. நீண்டகால சட்டத்தொகுப்பினால், அப் பல்கலைக் கழகங்களில், சிறிது மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. பல்கலைக் குழுவினர், தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், பழைய வழக்காறுகளிலிருந்து படிப்பவர்கள் விடுபட வேண்டுமென்றும், பேராசிரியர் பதவிகள் பலப்படுத்தப்பட்டும், பட்டங்களைப் பெற சமய சோதனைகள் தேவையில்லையென்றும் அறிவிக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்த அலைகளில், மக்களின் தனிப்பட்ட உரிமைகளும்கூட கவனிக்கப்பட்டன. 1856-ல் இறப்புரிமை சான்றும் விவாகரத்தும் பரிசீலனை செய்யப்படுகின்ற நீதிமன்றம் (Lay Court of Probate and Divorce) நிறுவப்பட்டது. இதுவரையிலும் இப் பணிகளைச் சமய குருமார்கள் கவனித்து வந்தார்கள். விவாகரத்துரிமை எல்லா சாதாரணமக்களுக்கும் எளிதாகக் கிடைத்தது. இதற்கு முன்பு இந்த உரிமையைப் பெறவேண்டுமென்றால் சொந்தச் செலவில் பாராளுமன்றத்தின் இசைவு பெற்ற தனிச் சட்டம் வேண்டியிருந்தது. விவாகரத்து செய்து கொண்டவர்கள் மறு விவாகம் செய்து கொள்ளவும் உரிமை தரப்பட்டது.

டிரேக்டேரியன்களுடைய எதிரியான லிபரலிசம் படிப்படியாக வெற்றி பெற்று வந்தது. ஆனால், இன்னும் இங்கிலாந்தில் புரட்சிக் கருத்துகள் மக்களிடையே கற்பிக்கப்படவில்லை. இந்த நீண்ட பரம்பரை 1873-ல் மாபெரும் தலைவரான ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) மரணத்துடன் முடிவடைந்ததாக நாம் கருதலாம். அவருக்குப் பிறகு பயன் கருதுகிறவர்கள் (Utilitarians) அரசியல் சிந்தனையில் முக்கியத்துவம் பெறுகிறார்கள். நியூமேன் இவர்களைப் பற்றிச் சொல்லும்பொழுது, "அவர்கள் கீழாகக் குறிபார்த்தார்கள்; ஆனால் அவர்கள் அதை சாதித்துவிட்டார்கள்" என்று கூறுகிறார். அவர்களுடைய பயன் கருதும் கோட்பாட்டில் குறைகள் காண்பது எளிது. அவர்கள் இயற்கை உரிமைகளைப் பற்றியோ, அல்லது சிந்தனை சுதந்திரத்தைப்பற்றியோ கவலைப்படாது, புற அநுபவங்களில்தான் அதிக

மாகக் கவனம் செலுத்தினர்கள். அதன்படி அவர்கள் மதிப்பில், மகிழ்ச்சியும், துன்பமும் ஆகிய இரண்டு இயல்புகள்தான் உள்ளன. சிந்தனைக் கேற்ப செயலாற்றல் இருப்பதைவிட, புற வாழ்க்கைக்கேற்ப செயலாற்றல் வேண்டுமென்று அவர்கள் கூறினர்கள். அவர்களுடைய கொள்கையின் சுருக்கம், ''அதிகப்படியான மக்களின் அதிகமான இன்பம்'' (the greatest happiness of the greatest number'') என்பதுதான். அவர்கள் தனிப்பட்டவர்களின் உரிமையைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட்டார்கள். ஒவ்வொருவனும் தன்னுடைய மகிழ்ச்சியை அளவுகோலாக வைத்து, அவனுடைய நலத்திற்காகப் பாடுபடுவதுதான், மற்ற மக்களின் மகிழ்ச்சியையும் கருதுகின்ற நல்ல வழியாகும். ஃபிரெஞ்சு முன்னேற்ற சிந்தனையாளர்களிடமிருந்து, இவர்களுடைய கொள்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவர்களுக்கு அரசு என்ற நிறுவனத்திடம் நம்பிக்கை இல்லாததால் தனிப்பட்டவர்களின் உரிமைகளைத் தடைசெய்யும் எல்லா அரசாங்க நடவடிக்கைகளையும் அவர்கள் வெறுத்தார்கள். இதேவிதமாக, எந்த நிறுவனமாக இருந்தாலும் சரி, ஒரு வகுப்பினர், அல்லது சோஷியலிசம், அல்லது சுயநலம், அல்லது தொழிற் சங்கம், ஆகிய நிறுவனங்களிடமிருந்து வருகின்ற ஆணைகளை அவர்கள் வெறுத்தார்கள்.

பயன்கருதுகிறவர்களின் சிந்தனையால், சில மாற்றங்கள் ஏற்பட்டன. இவர்களுடைய சிந்தனை பொது அறிவுக்கு ஏற்றதாக இருந்ததால், சிலகாலம் இதன் செல்வாக்கிருந்தது. சீர்திருத்தச் சட்டத்திலிருந்து 1870 வரையிலும், ஏற்பட்ட சில சட்ட மாறுதல்கள் இவர்களின் கொள்கை அடிப்படையிலே செய்யப்பட்டவைதான். கடும்வட்டி ஒழிப்புச்சட்டம் ஏற்பட்டபோதிலும், கடன் பொறுப்பு கட்டுப்படுத்தல் சட்டமும் இயற்றப்பட்டது. வேலை பாரத்திற்கும், நீண்ட வேலை நேரத்திற்கும் சட்டமியற்றினாலும், கூலி நிர்ணயத்திற்கு எவ்விதச் சட்டமும் இயற்றப்படவில்லை. சட்ட முறைகளில் மாறுதல்களும், மற்றும்பல நடவடிக்கைகளும் தனிப்பட்டவர்களுடைய ஆற்றலையும் விருப்பத்தையும் வெளிக் கொண்டுவர முயன்றனர்.

ஜான் மில் (John Mill) லின் மிகச் சிறப்பான நூல்கள்* மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பெற்றன. அவருடைய நூல்களில் மால்தூசியின் கருத்துகள் மிகவும் அதிகமாகக் காணப்பட்டன. ஆன்மீக வளர்ச்சியடைந்த இவரும்கூட,

* பொலிட்டிக்கல் எக்கானமி *1848* (Political Economy).
லிபர்ட்டி *1859* (Liberty).
ரெப்ரசன்டேடிவ் கவர்ன்மென்ட், *1860* (Representative Government).

மிருகத்தனத்தாலோ, அல்லது தகுதியற்றவர்களால் பெருக்கப் படுகின்ற மக்கள் கூட்டத்தாலோ, மனித இனத்தின் நற்குணங்கள் சீரழிந்து வருவதைக் கண்டு அஞ்சுகிறார். சிறுபான்மை யினரையும், வழக்காறுகளுக்குப் பதிலாக, மக்களின் ஆளுமை சக்தியையும் அவர் ஆதரிக்கிறார். அவர் பெரும்பான்மையினரின் கொடுங்கோல் ஆட்சியையும் வெறுக்கிறார். அதனால் அவர், ஒவ் வொருவனும் தன்னைப் பொறுத்த செயல்களில் சுதந்திரமுடைய வனாக இருக்கவேண்டுமென்றும், மேல்சபை அவசியம் என்றும், கல்வித் தகுதியின் அடிப்படையில் பன்மை வாக்குரிமை வேண்டு மென்றும், விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். இந்த அடிப்படைக் கொள்கைகளில் அவர் மாறவில்லை ஆனால், காலம் மாறும்பொழுது அவரும், மற்றவர்களுடைய மகிழ்ச்சி எப்படி ஏற்படக்கூடும் என்ற அவருடைய சில பழைய கொள்கைகளை மாற்றிக்கொண்டு, சோஷியலிசம் வளர்ச்சி அடைய சில நன்மைகளைச் செய்திருக்கிறார். இந்த வகையில், அவருடைய தந்தையைக் காட்டிலும், அல்லது ரிக்கார்டோவைக் காட்டிலும், சோஷியலிச வளர்ச்சிக்கு அவருடைய கொள்கைகள் பயன்பட்டன.

அதே காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான அறிவு இன்னும் முழு வளர்ச்சி அடையவில்லையென்றபோதிலும், சமயக் கருத்து களுக்கு அது பரம வைரியாக அமைந்தது. விஞ்ஞான வளர்ச்சிக் காக, பிரிட்டிஷ் கழகம் ஒன்று 1831-ல் ஏற்பட்டது. மண்ணியல் ஆய்வுகளை செய்துவந்த லையல் (Lyell) ஆதி மனிதனைப்பற்றி எழுப்பிய சில விஞக்களுக்கு ஆதி ஆகமம் சரியான பதில் ஒன்றும் தரவில்லை. ஃபேரடே (Faraday) எவ்வளவு பக்தி நிறைந்தவராக இருந்தபோதிலும், அவர் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் உண்மைகளை மறைத்து வைத்திருக்க முடியவில்லை; பௌதிக சக்திகள், காந்த சக்திகள், பொருள் ஆகியவை மிக முன்னேற்ற மான மாறுதல்களைச் செய்தன. 1840-க்கு முன்பே சார்லஸ் டார்வின், பீகிள் (Beagle) என்ற இடத்திற்குச் சென்று, அவ ருடைய 'வளர்ச்சி' கோட்பாட்டைப்பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். இவரைப்போல மற்ற அறிஞர்களும் இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்தனர்.

'ஐம்பதுகளில்' சமயக் கொள்கைகளுக்கும், விஞ்ஞானத் திற்கும் வெளிப்படையான போராட்டம் நடந்தது. கிருத்துவ சமயத்திற்குள் புதிய முன்னேற்றக் கருத்துகளின் செல்வாக்கு நுழைந்தது. ஒரு கிருத்துவ சோஷலிஸ்டு பள்ளியின் தலைவரான

எப் டி. மாரிஸ் என்பவரும், சார்லஸ் கிங்ஸிலி (Charles Kingsley) என்ற நாவலாசிரியரும் ஆங்கிலிக்கன் சமயப் பிரிவை, ஜனநாயக உணர்வுடன் தொடர்பு படுத்திக் கூறினர். வைதீகக் கொள்கைகளைப் புறக்கணித்து கற்பித்ததற்காக, லண்டனிலிருக்கும் கிங்ஸ் கல்லூரியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார். ஆக்ஸ்போர்டில் சமயக் கொள்கைகளில் பெரிய போராட்டமே நடந்தது. புளிக்கும், மேல்திருச் சபையைச் சார்ந்த லிட்டனுக்கும் பெரிய தகராறு இருந்து வந்தது. ஸ்டான்லியும், ஜோவெட்டும் பரந்த திருச்சபைக்காகப் போராடினார்கள். 1840-ல் ஜோவெட், டெம்பிள், மார்க் பேடிசன், மற்றும் பலரும், 'கட்டுரைகளும் விமர்சனங்களும்' என்ற சஞ்சிகையில் அவர்களுடைய ஐயங்களை எழுதி வந்தனர். அவர்கள் சமய நூலில் அதிகப்படியான விளக்கம் கூடாதென்று கூறி, அவர்களாகத் தொகுத்த சமயநூல் ஒன்றை திருச்சபைக் கூட்டம் கண்டித்துவிட்டது. உயிரினங்களின் ஆரம்பத்தை ஆய்வு நடத்திக்கொண்டிருந்த சார்லஸ் டார்வினுடைய கோட்பாட்டுக்கு ஆதரவு தரும் வகையில் ஏ. ஆர். வாலஸ் என்பவரும் ஆராய்ச்சி செய்தார். சமயக்கொள்கையான, எல்லாப் பொருள்களும் கடவுள் படைப்பு என்ற உண்மை இப்பொழுது சந்தேகப்படும்படியான நிலையில் இருந்தது.

அந்தச் சமயத்தில், மில், காப்டென், கிளாட்ஸ்டன் ஆகியவர்களுடைய கொள்கைகள் முழுப்பயனையும் அளிக்கவில்லையெனினும், பகுத்தறிவு வாதமும், முன்னேற்றமும் மக்களைக் கவர்ந்திருந்தன. அவர்களின் வேகம் எல்லா இலக்கியப் படைப்புக்களிலும் பரவியிருந்தது. ஆக்ஸ்போர்ட் இயக்கத்தின் பலமான எதிரொலியே, அரசியல் அதிகாரத்தைப் பாராட்டி ஃபிரவ்ட் (Froude) அவருடைய வரலாற்றில் எழுதினர். டென்னிஸன் எழுதிய ''இன் மெமோரியம்'' என்ற செய்யுளிலும், ஜார்ஜ் எலியட் எழுதிய நாவல்களிலும் இந்த முன்னேற்றக் கருத்துகள் பரவியிருந்தன. ஜார்ஜ் எலியட் என்பவர் அவருடைய நூல்களில் கிருத்துவத் தன்மையற்ற துயரார்ந்த எண்ணங்களை அதிகமாக வெளியிட்டார். சில மேலிடங்களிலிருந்து மட்டுமே, இப் புதிய முறைக்கு எதிர்ப்புகள் கிளம்பின. பல கட்டுரைகளிலும், அவர் எழுதிய கிராம்வெல் வாழ்க்கை சரித்திரத்திலும், தாமஸ் கார்லில் தனிச் சுதந்திரவாதிகளின் வாழ்க்கை முறையைக் கண்டித்தார். ஆழமாகப் பதிந்திருந்த அதிருப்திகளை அகற்ற, அரசியல் உரிமையான வாக்குரிமைகளை மட்டும் பயன் படுத்தினால் பயனில்லை என்றும் கூறினர். புறவாழ்க்கை இன்பத்தைக் கண்டித்து, ரஸ்கின் பழமையை நாடினர். பழைய 'காத்திக்' கலையிலும், இடைக்கால வணிகர் கழகங்களிலும், அவர் பொதுநலன்களையும், மக்களுடைய ஒருமைப்பாட்டையும் கண்டார்.

கலைச்சொல்லகராதி

(ஆங்கிலம்–தமிழ்)

A

Aliens Law — அந்நியர் சட்டம்
Anti Corn Law Leagues — தானியச் சட்ட எதிர்ப்பு சங்கங்கள்
Assize of Bread — ரொட்டிச் சட்டம்

B

Bill of Rights — உரிமைகள் மசோதா
Bill of Pains and Penalties — துயரங்களும் தண்டனைகளும் என்ற மசோதா

C

Corn Law — தானியச் சட்டம்
Consolidating Act of 1825 — ஒன்று திரட்டியச் சட்டம் 1825
Chartist Movement — உரிமை சாஸன இயக்கம்
Clerk of the Peace — அமைதி காண் கணக்கர்
Consolidated Fund — இணைப்பு நிதி
Casting Vote — முடிவு வாக்கு
Corresponding Society — கடிதத் தொடர்பு சங்கம்
Catholic Emancipation — கத்தோலிக்க விடுதலை
Commissioners of peace — அமைதியைப் பாதுகாக்கும் அதிகாரிகள்

D

Dissenters — இணங்காதார்கள்
Directory — செயலாண்மைக் குழு, டைரக்டரி

E

Enclosure Movement — வேலியிடும் இயக்கம்
Exchequer — நிதித்துறை, எக்ஸ்செக்கர்

G

Gold Reserve — தங்கக் காப்பு உறுதி
General Warrant — பொதுப்பற்ருணை

H

Habeas Corpus Act. — ஹேபியஸ் கார்பஸ்சட்டம்
Holy Alliance — புனிதக் கூட்டமைப்பு

L

London Revolution Society — லண்டன் புரட்சிக் கழகம்
Laws of Nature — இயற்கைச் சட்டங்கள்
Laisser–Faire — கட்டுப்பாடற்ற வாணிகம்; தடையிலாத வாணிகம்

M

Mutiny Acts. — இராணுவச் சட்டங்கள்

N

National Society for Anglicans — ஆங்கிலிக்கன் தேசியக் கழகம்
Non Conformists — ஒப்புக் கொள்ளாத சமயத்தினர்

O

Orange Order — ஆரஞ்சு சங்கம்

P

Protectorate — பாதுகாவலன் ஆட்சி
Paper Currency — காகிதச் செலவாணி
Post Master General — அஞ்சல் துறை தலைமை அதிகாரி
Poor Law — இரவலர் சட்டம்

R

Regulating Act. — ஒழுங்கு முறைச் சட்டம்
Rights of Man — மனிதனின் உரிமைகள்
Reign of Reason — பகுத்தறிவின் ஆட்சி
Regency Acts. — பராமரிப்பாளர் சட்டங்கள்
Rhine Confederation — ரைன் கூட்டிணைப்பு அரசு

S

Statute of wales — வேல்ஸ் சட்டம்
Septennial Act. — ஏழாண்டுச் சட்டம்
Stamp Duty — முத்திரைப் பத்திர வரி
Stamp Act. — முத்திரைப் பத்திரச் சட்டம்
Seditious Libel — சட்ட எதிர்ப்பு அவதூறு குற்றம்

T

Test Acts. — சோதனைச் சட்டங்கள், டெஸ்ட் சட்டங்கள்

Triennial Act. — மூவாண்டுச் சட்டம்

The Society for Constitutional Information. — அரசியல் சட்டம் சார்ந்த செய்திகள் சங்கம்

U

Unitarians — ஒருமைக் கோட்பாட்டினர்

Utilitarians — பயன் கருதுவோர்

W

Work Houses — தொழில் மனைகள்

Writs of Assistance — உதவி ஆணைகள்

கலைச்சொல்லகராதி

(தமிழ்–ஆங்கிலம்)

அ

அந்நியர் சட்டம்	— Aliens Law
அஞ்சல் துறை தலைமை அதிகாரி	— Post Master General
அரசியல் சட்டம் சார்ந்த செய்திகள் சங்கம்	— The Society For Constitutional Information
அமைதி காண் கணக்கர்	— Clerk of the Peace
அமைதியைப் பாதுகாக்கும் அதிகாரிகள்	— Commissoners of Peace

ஆ

ஆங்கிலிக்கன் தேசியக் கழகம்	— National Society for Anglicans
ஆரஞ்சு சங்கம்	— Orange order

இ

இணைப்பு நிதி	— Consolidated Fund
இணங்காதார்கள்	— Dissenters
இயற்கைச் சட்டங்கள்	— Laws of Nature
இராணுவச் சட்டங்கள்	— Mutiny Acts
இரவலர் சட்டம்	— Poor Law

உ

உரிமைகள் மசோதா	— Bill of Rights
உரிமை சாஸன இயக்கம்	— Chartist Movement
உதவி ஆணைகள்	— Writs of Assistance

ஏ

ஏழாண்டுச் சட்டம்	— Septennial Act.

ஒ

ஒன்று திரட்டியச் சட்டம் 1825	— Consolidating Act of 1825
ஒப்புக்கொள்ளாத சமயத்தினர்	— Non Conformists
ஒழுங்கு முறைச் சட்டம்	— Regulating Act.
ஒருமைக் கோட்பாட்டினர்	— Unitarians

க

கடிதத் தொடர்பு சங்கம்	— Corresponding Society
கத்தோலிக்க விடுதலை	— Catholic Emancipation
கட்டுப்பாடற்ற வாணிகம் (தடையிலாத வாணிகம்)	— Laisser-Faire
காகிதச் செலவாணி	— Paper Currency

ச

சட்ட எதிர்ப்பு அவதூறு குற்றம்	— Seditious Libel
செயலாண்மைக் குழு (டைரக்டரி)	— Directory
சோதனைச் சட்டங்கள்	— Test Acts.

த

தங்கக் காப்புறுதி	— Gold Reserve
தானியச் சட்டம்	— Corn Law
தானியச் சட்ட எதிர்ப்பு சங்கங்கள்	— Anti Corn Law Leagues
துயரங்களும் தண்டனைகளும் என்ற மசோதா	— Bill of Pains and Penalties
தொழில் மனைகள்	— Work Houses

நி

நிதித்துறை	— Exchequer

ப

பகுத்தறிவின் ஆட்சி	— Reign of Reason
பராமரிப்பாளர் சட்டங்கள்	— Regency Acts.
பயன் கருதுவோர்	— Utilitarians
பாதுகாவலன் ஆட்சி	— Protectorate
புனிதக் கூட்டமைப்பு	— Holy Alliance
பொதுப்பற்றுரிமை	— General warrant

ம

மனிதனின் உரிமைகள்	— Rights of Man
முத்திரைப் பத்திர வரி	— Stamp Duty
முத்திரைப் பத்திரச் சட்டம்	— Stamp Act.
மூவாண்டுச் சட்டம்	— Triennial Act.
முடிவு வாக்கு	— Casting vote

ர

ரொட்டிச் சட்டம்	— Assize of Bread
ரைன் கூட்டிணைப்பு அரசு	— Rhine Confederation

ல

லண்டன் புரட்சிக் கழகம்	— London Revolution Society

வ

வேலியிடும் இயக்கம்	— Enclosure Movement
வேல்ஸ் சட்டம்	— Statute of Wales

ஹே

ஹேபியஸ் கார்பஸ் சட்டம்	— Habeas Corpus Act.

பொருட் குறிப்பு அகராதி

அ

அபர்டீன் :
ஜார்ஜ் ஹாமில்டன்–கார்டன் நான்காவது பிரபு (1784–1860) லிவர்பூல் அரசாங்கத்தில் பிரதம அமைச்சர் 232.
வெலிங்டன் அரசாங்கத்தில் 266.
பீல் அரசாங்கத்தில் 309, 318.
தி டைம்ஸ் 336.
ஸ்பானிய திருமணங்கள் 339.
அடிசன் ஜோசப் 215.
அடிலேய்ட் (சேக்ஸி கோபர்க் மீனிங்கன்) நான்காவது வில்லியமின் இராணி (1792–1849) 273.
அடிலெய்ட் தெற்கு ஆஸ்திரேலியா 373.
அலாஸ்கா 255, 366.
அல்பேனி (தென் ஆப்ரிக்கா) 378.
அல்பேனியா 258.
அல்ஜியர்ஸ் 278, 334.
அல்ஸாஸ்: அல்ஸாஸ் லோரேய்ன் 196.
அலெக்சாந்தர் I ரஷ்யப் பேரரசர் (ஜார்) (1777–1801–21)
முதலாவது பால் மன்னரின் மைந்தர் நடு நிலைமை வகுத்தல் 132.
அவரது ஆட்சி 150.
அவரது பேரரசுக் கனவுகள் 158.
அவரது பண்பு நலன் 158.
அவருடைய சமயக் கொள்கை 234.
புரட்சி 254.
கிரீஸ் 258.
அவருடைய சமாதான ஒப்பந்தம் 333.
அமெரிக்கா :
கிரென்வில்லும் குடியேற்றங்களும் 40.
சாத்தமும் குடியேற்றங்களும் 51.
பிரச்சினை வளர்தல் 55, 57, 59, 61.
எல்லைப் பிரச்சினை 62, 70.
வெர்சேய்ல்ஸ் உடன்படிக்கை 77 78.
அயர்லாந்திலிருந்து அமெரிக்காவிற்குக் குடியேற்றம் 137.
அயர்லாந்து :
அமெரிக்கப் புரட்சிப் போர் ராகிங்காம் மந்திரி சபை கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுதல் 71.
அயர்லாந்தும் காப்பாளர் ஆட்சியும் 102, 138.
1792–1801 ஆம் ஆண்டுச் சிக்கல் 136.
1783–9 கேடு பயக்கும் ஆண்டுகள் 138.
அயர்லாந்தும் பிரஞ்சுப் புரட்சிப் போரும் 139.
1798 ஆம் ஆண்டு புரட்சிக் கலகமும் 141–144.
பீல், கிரே ஆகியோரின் அரசாங்கங்களுக்குத் தலைவலி 283, 284.
யூனியன், 391, 387.
ஐரிஷ் இரவலர் சட்டம் 294, 389.
தானியச் சட்டங்களை ரத்து செய்தல் 323.
யங் அயர்லாந்துக் கட்சி 318, 393.
விவசாயிகள் பிரச்சினை 389.
அரசத் திருமணச் சட்டம் (1772) 55, 105
அரசியல் சட்டம் :
18-வது நூற்றாண்டில் 80.

பர்க்கும் அரசியல் சட்டமும் 113–4.
1660–1815க்குள் வளர்ச்சி 201–213.
புதிய துறைகளை உருவாக்குதல் 204.
கேபினட் அரசாங்கம் 205–207.
அமீன்ஸ் உடன்படிக்கை 152.
அமெரிக்க ஐக்கிய நாடுகள்
வெர்சேய்ல்ஸ் உடன்படிக்கை 62, 63.
அமெரிக்காவும், நெப்போலியப் போரும் 162.
1812ஆம் ஆண்டுப் போர் 182.
கேனிங் 254.
மன்ரோ அறிக்கை 255.
மெக்சிகோவுடன் போர் 327.
பிரிட்டிஷ் குடியேற்றம் 346.
ஐரிஷ் குடியேற்றம் 364, 393.
அமெரிக்கப் புரட்சிப் போர் 58–71.
ஐரோப்பிய மாநாடு 62.
லெக்ஸிங்டனும் பங்கர் ஹில்லும் 63.
சுதந்திர அறிவிப்பு 63.
அரசப் பற்றுறுதிக் கூறுகள் 65.
அந்நிய நாடுகளின் தலையீடு 65.
டிராண்டன் 65.
சாரடோகா 66.
யார்க் டவுன் 67.
ஷெல்பர்ன் 74.
வெர்சேய்ல்ஸ் உடன்படிக்கை 77–78,
அயோனியன் தீவுகள் 184, 197.
அயர்லாந்து யூனியன் 387, 391.
அயர்லாந்து டைத் சட்டம் 302.
அல்ஸ்டர் :
அல்ஸ்டரும் நெப்போலியப் போரும் 137.
ஐக்கியம் 387.
வினன் தொழில் 385.
விவசாயப் பிரச்சினை 391.
அல்ஸ்டரும் ஐக்கியமும் 140.
அல்க் மார் மாநாடு (1799) 129.
அல்ம் சண்டை (1805) 160.
அவதூறுச் சட்டம் : (1791) 118.
அலி பாஷா ஜானினைவைச் சேர்ந்த (1741–1822) 184.
அவிக்னன் : பிரான்ஸ் இணைத்துக் கொள்ளல் 117.
அடேர் சர் ராபர் (1763–1855) 109
அடிமை முறையும் அடிமை வர்த்தகமும் :
அமெரிக்கப் புரட்சிப் போர் 123.
1805 ஆம் ஆண்டு கவுன்சில் ஆணை 170–171.
வியன்னா மாநாடும் 197.
முசோரி சமரசம் 248.
வில்பர் போர்சு 251.
அடிமை முறையை ஒழித்தல் 288–289, 368, 384.
பால்மாஸ்டன் 336.
போயர்கள் 382.
அடிமை ஒழிப்புச் சங்கம் : 104.

ஆ

ஆதிக் குடிகள் பாதுகாப்புக் கழகம் 352.
ஆடம்ஸ் ஜான்கு வின்ஸி (1767–1848)
அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 6-வது ஜனாதிபதி 256.
ஆர்மீனியா ; 353
ஆட்ரிய நோபிள்: உடன்படிக்கை (1829) 278.
ஆப்கானிஸ்தான் போர்கள் 304, 328.
ஆல்பர்ட் :
விக்டோரியா இராணியின் கணவன்.
(1819–1861 சேக்ஸி கோபர்க் கோதாவைச் சார்ந்த எர்னஸ்டின் இரண்டாவது மகன்.
அவரது ஆரம்ப கஷ்டங்கள் 306.
பீல் 309.
ஆஸ்டிரியாவுடன் அனுதாபம் 340.
பால்மர்ஸ்டன் 342,

ஆர்க்ரைட் சர் ரிச்சார்ட் (1732-92) 9.
ஆண்டிகுவா : 368.
ஆஸ்டர்லிட்ஸ் சண்டை (1805) 164.
ஆஸ்டன் ஜேன் (1775-1817) 199.
ஆஸ்பர்ன் சண்டை (1809) 199.
ஆண்டோனி கியாம கோ : (1806-76)
இத்தாலிய கார்டினல் 329.
ஆஸ்திரியா :
ஆஸ்திரியாவும் பிரஞ்சுப் புரட்சிப் போரும் 108.
பிரஞ்சுக்காரர்களிடம் பின்னடைதல் 129.
இத்தாலியில் இழக்கும் போரில் ஈடுபடல் 130.
அழிவுற்றது போன்ற தோற்றம் 152
ஆஸ்திரியாவும் 1805-ஆம் ஆண்டுக் கூட்டமைப்பும் 159.
அல்ம் சண்டையில் தோல்வி 160
வல்லரசாகப் போற்றப் படுவதின் அவசியம் 175
இத்தாலியில் பிரத்தியேக உரிமைகளை கேஸல்ரே அநுமதித்தல் 234.
கிரேக்கர்களின் கிளர்ச்சி 236.
கிரேக்காவைக் கைப்பற்றுதல் 328, 340.
துருக்கியப் பகுதிகளின் மீது ரஷ்யாவின் கண்ணோட்டம் 259.
பாமர்ஸ்டன் 341.
ஆர்னல்ட் தாமஸ் (1795-1842) 399.
ஆஸ்டின் ஜான் (1790 1859) 251.
ஆஸ்பர்டன் (1774-1848)
அலெக்சாந்தர், பேரிங், முதல் பிரபு 366, 384.
ஆக்ஸ் போர்டு இயக்கம் 303, 325, 398.
ஆக்லேண்ட் : 376.
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம்: பீலை விலக்குதல் 267
ஆக்ஸ்போர்டு இயக்கம் 398.
ஆறு சட்டங்கள் (1819) 240
ஆரஞ் ஆர்டர் 262, 387, 389.
ஆக்ஸ்போர்டு ஹொரேஸ் வால்போல்
நான்காவது ஏர்ல் (1717-97) 218.
ஆரஞ்சு முறை 142, 144.
ஆஸ்திரேலியா :
மக்கள் தொகை 346, 350.
முதல் 19-வது நூற்றாண்டில் அங்கே ஏற்பட்ட வளர்ச்சி 368, 374.
கைதிகளை அனுப்புதல் நின்றது 372.
ஸ்வான் நதி குடியிருப்பு பிரதேசம் 372, 384.
ஆஸ்திரேலியா அரசாங்க சட்டம் (1850) 374.

இ

இந்தியா
ஒழுங்கு முறைச் சட்டம் 54, 94.
கிளைவின் இரண்டாம் நிர்வாகம் 93.
இந்தியாவும் உள் நாட்டு அரசியலும் 90.
ஃபாக்ஸ் இந்திய மசோதா 100.
பிட் இந்தியச் சட்டம் 100.
ஆப்கானியரும் இந்தியாவும் 94.
பிரிட்டிஷ் இந்தியா உருவாதல் 95.
இந்தூர் 100.
பிரிட்டனுடன் சீக்கியர்கள் சமாதானம் செய்து கொள்ளுதல் 199.
மூன்றாவது மராட்டியப் போர் 248.
இஸபெல்லா : II
ஸ்பெயின் இராணி (1830-33-68-1904)
ஏழாவது பெர்டினண்டின் மகள், 333-338
இலக்கியம் :
மொழி வளர்ச்சி 17, 18-வது

நூற்றாண்டுகளில் 215-218.
இத்தாலி :
ஐக்கிய இத்தாலியை உருவாக்குதல் 340.
பால்மர்ஸ்டன் 341.
இரவலர் சட்டம் :
18-வது நூற்றாண்டில் 19, 20.
ஸ்பீன்ஹாம் லாண்டு த் திட்டம் 125.
19-வது நூற்றாண்டின் துவக்கம் 225, 226.
இரவலர் சட்ட திருத்தம் 293–294, 301.
அயர்லாந்து 311.

ஈ

ஈங்கிள்ஸ் :
பிரடிரிக் (1820-95) 302, 327.
ஈவான்ஸ் :
சர் ஜார்ஜ் டிலேஸி (1787–1870) 332.

உ

உஷாண்ட் சண்டை 1778, 67.

எ

எட்வார்டு VII :
இங்கிலாந்து அரசன் (1841–1901–10) விக்டோரியாவின் முதல் புதல்வன் பிறப்பு 307.
எலன்பரோ : எட்வார்டு லா, முதல் ஏர்ல், (1790–1871) 309.
எல்ஜின், ஜேம்ஸ் புரூஸ். எட்டாவது ஏர்ல் (1811–1863) 364, 366.
எல்டன் ஜான் ஸ்காட் :
முதலாம் ஏர்ல் பிரபு (1751–1838)
அடிங்டன் மந்திரி சபையில் 149
பிட்டின் இரண்டாவது மந்திரி சபையில் 167.
எல்டனும் ராமிலி திட்டங்களும் 179.
லிவர்பூல் அரசாங்கத்தில் பதவி வகித்தல் 232.
தொழில் நெருக்கடி 238.
கட்சியில் பிளவுகள் 243.
கேனிங்கின் மந்திரி சபையில் சேர மறுத்தல் 264.
பீல் இவரைப் புறக்கணித்தல் 266.
எலியட் சர்சில் பட் (1722–77) 36.
என் கீன், டக் டி. (1772–1804) 157.

ஏ

ஏடன் 331, 383.

ஐ

ஐக்கிய ஐரிஷ்காரர் சங்கம் 140, 142, 144.
ஐக்கியச் சட்டம் (1707) 147-148.

ஒ

ஒயிட் பீல்ட் ஜார்ஜ் (1714-70) 28, 29.
ஒன்டோரியா :
கானல் டேல்பாட் 347.
வெளியேற்றம் 354.
ஜனத்தொகை அதிகரிப்பு 354.
வளர்ச்சி 358–60.
டர்ஹாம் அறிக்கை 362.
அமெரிக்கர்கள் நுழைதல் 364, 366.

ஓ

ஓஸ்ட்லர் ரிச்சார்டு (1789–1861) 293, 298.
ஓபிரியன் பிராண்டர் (1805–64) 298.
ஓ கானெல் டேனியல் (1775–1847) 261, 266, 282, 301, 318, 385, 391, 393.
ஓ கானல் பியர்கஸ் (1794–1855) 298, 301.
ஓவன் ராபர்ட் : (1771–1858 223, 230, 299, 302.
ஓபிரியன் ஸ்மித் (1803–64) 394, 395.
ஓ கானெல் ஜான் (1810–58) 395.
ஓல்மட்ஸ் மாசபை (1850) 329.

ஓரியல் கல்லூரி (ஆக்ஸ்போர்டு) 398.

க

கல்வி :
பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் 221.
நெப்போலியப் போருக்குப் பின் ஏற்பட்ட வளர்ச்சி 250.
கலோனியல் அலுவலகம் 350.
கத்தோலிக்கக் கழகம் 262.
கத்தோலிசிசம் :
விவர்பூல் அரசாங்கமும் கத்தோலிக்கப் பிரச்சினையும், 242, 262.
விடுதலை மசோதா நிறைவேறியது, 267.
இங்கிலாந்தில் ஆர்கியிஸ் பெட்டை நிறுவுதல் 325.
கன்சர்வேடிவ்கள் :
பீலினுல் நியமிக்கப்பட்டவர்கள் 281.
டேம் வர்த் அறிக்கை 283.
யங் இங்கிலாந்து கோஷ்டியினர் 321
டிஸ்ரேலி 321.
கம்பர்லேண்ட், ஏர்னஸ்ட். (டியூக், ஹனேவர் அரசன்) (1771–1851) மூன்றாவது ஜார்ஜின் ஐந்தாவது மகன் 265, 270.
கட்ச்–கைனர்ட்ஜு சமாதானம். (1774) 72.
கட்டடக் கலை : 18-வது நூற்றாண்டில் 11.
கம்பர்லாண்ட், ஹென்றி பிரபு : (1745–90)
மூன்றாவது ஜார்ஜின் சகோதரர் 53.
கருன்னு : 174–175.

கா

கேரிஸ்பாட் ஆணைகள் : (1819) 248.
காபீர்கள் : 373, 381, 384.
காரா, ஜியார்ஜி விட்ச் பரம்பரை 327.
கார்லிலி, ரிச்சார்டு. (1790-1843) 398.
கார்லாஸ், டான். (1788–1855) 332.
கார்ல்டன் கிளப் 310
கார்லில், தாமஸ் (1795–1881) 149, 249, 303, 406
காபெட் வில்லியம்: (1762–1835) 131, 177, 178, 230, 233, 241, 268, 271, 273, 281, 295
காப்டென் ரிச்சார்டு (1804–65)
ரயில்வேக்களை அரசாங்க ஆதிக்கத்தினுள் கொண்டு வருதல் 316
எதிர் தானியக் கழகத்தை அமைத்தல் 319.
பீல் 319.
தொழிற் சாலைச்சட்டம் 325.
தேசீய பாதுகாப்பு 343.
காட்ரிஸ்டன், சர் எட்வார்டு (1770–1851)
கடற்படைத் தளபதி 265.
காம்பினேஷன் சட்டம் : (1799) 227, 238, 246.
விவாதங்கள் அச்சிடத் தடை 49
காமன்ஸ் சபையும் வில்க்ஸ் வழக்கும் 39, 47.
சாத்தமும் காமன்ஸ் சபையும் 50.
காமன்ஸ் சபையும் ஃபாக்ஸ் இந்திய மசோதாவும் 79.
1788-ஆம் ஆண்டில் பிளவு 83.
காமன்ஸ் சபையும் ஹேஸ்டிங்சும் 100.
காமன்ஸ் சபை :
அங்கத்தினர்கள் அதிகரிப்பு 203.
பொதுக்கூட்டத்தின் மூலமாக கொடுங்கோன்மை ஆட்சியைத் தடுத்தல் 207
பிரதிநிதித்துவத்தில் சமத்துவமின்மை 211.
கரோலின் ராணி 240.
சீர்திருத்த மசோதா 273, 277.
கார்ன் வாலிஸ், சர் வில்லியம். (1744–1819)

கடற்படைத்தலைவர் 157, 163.
கார்ன்வாலிஸ், சார்லஸ் முதலாம் மார்க்குவிஸ் பிரபு (1738–1805).
அமெரிக்காவில் 65, 67.
இந்தியாவில் 84.
படைக்கல உற்பத்தியில் 121.
அயர்லாந்தில் 145, 149.
கார்ன்வாலிசும், அமின்ஸ் சமாதானமும் 163.
கால்டர் சர் ராபர்ட் (1745-1848) கடற்படைத் தலைவர் 151.
காலிங் உட், கூத்பர்ட்: முதற் பிரபு (1750–1810) கடற்படைத் தலைவர் 163.
காவெண்டிஸ் பிரபு, ஜான் (1732–96) 41, 43, 75.
கான்வே ஹென்றி. (1721–95) 39.
கான்ஸ்டாண்டி நோபில்: 106, 167.
ரஷ்யாவின் கண்ணோட்டம் 334.
கார்க் 392.
கார்ன்வால்: காமன்ஸ் சபையில் பிரதிநிதித்துவம் 211.
காதரைன் இரண்டாம் ரஷ்யப் பேரரசி (1729–62–78) 87, 109, 127.
காம்டன் சார்லஸ் பிராட், முதலாம் ஏர்ல் பிரபு (1714-1794) 39, 41, 44, 50, 73, 80, 84.
காம்போ போர்மியோ: உடன்படிக்கை (1797) 127.
கால்ட் ஜான் (1779–1839) 347.

கி

கிங்ஸ் கல்லூரி, கேம்பிரிட்ஜ் 407.
கிங்ஸ்லி, சார்லஸ் (1819–75) 300, 407.
கியூ 370.
கிளிண்டன் சர்ஹென்றி (1738–95) 63, 67.
கிளேர் (இடைத் தேர்தல்) 265.
கிராகோ 327. 340.
கிரான்யி, ஜான் மேனர்ஸ், மார்குவிஸ் பிரபு (1721–1770) 182.
கிராஸ், பிரான்சிஸ் டி (1722–88) 67, 76.
கிராஷே, வில்லியம் (1788–1867) 14.
கிரீன் ஸிச் மருத்துவ மனை 56.
கிரே சார்லஸ், இரண்டாம் ஏரல் பிரபு (1764–1845)
கிரேயும் நான்காம் ஜார்ஜ் ஜூம் 105.
கிரேயும் பாராளுமன்ற சீர் திருத்தமும் 119, 127.
திறமையாளர் மந்திரி சபையில் 167.
கிரேயும் கத்தோலிக்க விடுதலையும் 169.
ரீஜெண்டின் அழைப்பை ஏற்க மறுத்தல் 183.
கிரிஸ்டல் பேலஸ் 327.
கிழக்கு இந்தியக் கம்பெனி 53, 61, 90, 93, 95, 97, 101.
தனி உரிமை ஆதிக்கம் எடுக்கப் படுதல் 220, 257.
1833-இல் மாறுதல்கள் 283, 285, 336.
கிழக்கு ரெட்போர்ட் 265.
கிப்பன் எட்வார்ட் (1737–94) 214.
கிப்ஸ் சர்ஜார்ஜ் (1791–1847) 372.
கிளாட்ஸ்டன் வில்லியம் எவார்ட், (1809–98).
பீல் அரசாங்கத்தில் 309, தானியச் சட்ட எதிர்ப்பு கழகம் 320. திருச்சபையும் அரசும் என்று அவர் எழுதிய நூல் 398.
கின்னல்க், சார்லஸ் கிராண்ட் பிரபு (1778–1864) 271
கிரகாம், சர்ஜேம்ஸ் (1892–1861) கிரேயின் அரசாங்கத்தில் 271.
சீர்திருத்த மசோதா 271.
ராஜினமா செய்தல் 282
பீல் அரசாங்கத்தில் 309
தானியச் சட்டங்கள் 323.
கிரகாம்ஸ் டவுன் 378.

கிராம் பவுண்ட் 259.
கிராட்டன் ஹென்றி (1746–1820) 261.
கிரீஸ் கிளர்ச்சி 236, 248, 259.
கேவிஸ் 254, 257-259. நெவேரினே போர் 265, டான் பேசிபிக்கோ நிகழ்ச்சி 342.
கிரைஸ்ட் சர்ச் ஆக்ஸ்போர்ட் 352.
கிரைஸ்ட் சர்ச் நியூஜிலாந்து 346
கிரென்வில் பிரபு, வில்லியம் 1759–1834.
வெளி நாட்டு அமைச்சர் 104.
கிரென்வில்லும் அமெரிக்கா வுடன் வாணிக உடன்படிக்கையும் 88.
கிரென்வில்லும் பிரஞ்சுப் புரட்சியும் 117.
கிரென்வில்லும் போர் சூழ்ச்சித் திறமும் 112.
டண்டாசை எதிர்த்தல் 131
கிரென்வில்லும் கத்தோலிக்க விடுதலையும் 149
கிரென்வில்லும் அடிங்டன் அரசாங்கமும் 149-
கிரென்வில்லும் அமீன் சமாதானமும் 152.
கிரென்வில்லும் கேனிங்கும் 169.
கிரென்வில்லும் அடிமை வாணிபமும் 183
ரீஜெண்டின் அழைப்பை ஏற்க மறுத்தல் 182.
கிரென்வில் ஜார்ஜ் (1712–70)· (1763–5) மந்திரி சபை 37.
கிரென்வில்லும் மூன்றும் ஜார்ஜும் 37.
கிரென்வில்லும் அமெரிக்கக் குடியேற்றங்களும் 40–41.
கிரென்வில்லும் பத்திர முத்திரைச் சட்டமும் 40.
கிரென்வில்லும் கிராப்டனின் அரசாங்கமும் 43.
மறைவு 51.
அவர் கொண்டுவந்த தேர்தல் சட்டம் 53
கிராட்டன் ஹென்றி பிட்ஸ் ராய்: மூன்றும் டியூக் (1735–1811).
கிராப்டனும் சாத்தமும் 37.
ராகிங்காமின் முதல் மந்திரி சபையில் 41
பதவியிலிருந்து நீக்குதல் 43.
அமைச்சரவை 43
பெட்போர்டுகளும் கிராப்டனும் 51
ஜீனியசும் கிராப்டனும் 51
வீழ்ச்சி 51–52.
கிரே, சார்லஸ் கிரே இரண்டாவது ஏர்ல் (1764–1745)
விக் கட்சியின் தலைமை 233.
பிரதம அமைச்சராதல் 270
சீர்திருத்த மசோதா 271–277.
1834 வரை பதவியில் இருத்தல் 281.
வெற்றிகரமான வெளி நாட்டுக்கொள்கை 281.
ராஜிநாமா செய்தல் 282.
திருச்சபை சீர்திருத்தம் 286.
பெல்ஜியம் சங்கம் 330.
கேனடா 358 ஓகானெல் 387.
கிரவுச்சி இமானுவேல் டே (1766–1847).
பிரெஞ்சு மார்ஷல் 194.
கிரே ஹென்றி கிரே மூன்றுவது ஏர்ல் (1802–94) 321, 323, 325, 344, 364.
கிஸாட் பிராங் கோயஸ் (1787–1874) 304, 310, 327, 334, 338, 340, 342
கிளாரண்டன் ஜார்ஜ் வில்லியர்ஸ் நான்காவது ஏர்ல் (இரண்டாவதுமுறை கொடுத்தல்) (1800–70) 342.
கிரே சர் ஜார்ஜ் (1812–98) 376, 324.
கிலேவ் ராபர்ட் பிரபு (1725–74).
இந்தியாவில் இரண்டாவது நிர்வாகம் 71.
அவரது இரட்டையாட்சியை வாரன் ஹேஸ்டிங்ஸ் விலக்கல் 96
கிலேவும் கம்பெனி விதிமுறைகளும் 98.
கிளவ்சஸ்டர் கோமகன்; வில்

லியம் ஹென்றி (1743–1805) இளவரசன் பிரடிரிக்கின் மூன்றுவது மகன் 55.
கிரிவோ லேண்ட் 380, 382.

கீ

கீவா 332.
கீட்ஸ் ஜான் (1795–1821) ...
249.
கீழைச் சிக்கல் :
மத்தியதரைக் கடல் போக்கு வரத்துகளில் அக்கறை கொள்ளுதல் 330.

கு

குவாலியர் 90, 99.
குரோட் ஜார்ஜ் (1794-1871) 251, 281.
குவாட்டர்லி 230.
குக் ஜேம்ஸ் (1728–79) 370, 374.
குவேக்கர் :
அமெரிக்கக் குடியேற்றங்களில் 56.
குவேக்கரும் அடிமை முறையும் 104.
குனர்ட் :
சர் சேம்வெல் (1787–1865) 344.
குவீன்ஸ் கல்லூரிகள் :
(அயர்லாந்து) 391.
குவீன்ஸ் லேண்ட் 372.
குயூபெக் :
அரசியல் பிரச்சினைகள் 358.
1837 கலகம் 359
டர்ஹாம் அறிக்கை 362.
எல்ஜின் 365

கூ

கூலிகள் :
19-வது நூற்றாண்டின் துவக்கத்தில் 223, 226. அவை பற்றிய கோட்பாடுகள் 1830-இல் 292
கூட்டுச் சட்டம் (1779) 131.
கெண்ட் :
எட்வார்ட், ஏர்ல் பிரபு (1767–1820).
ஜார்ஜ் III-இன் நான்காவது மகன் 234.
கெபன் ஜான் (1792–1866) 249, 398, 400.
கெரோலின் :
ஆய் பிரன்ஸ்விக் நான்காவது ஜார்ஜின் ராணி (1768–1821) 233.
கெய்ன் பரோ தாமஸ் (1727–88) 2.

கே

கேஸ் காக்னி:
ஈஸாக் (1770–1841) தளபதி 272.
கேட்டன் 212.
கேலி டோனியன் கால்வாய் 239, 249.
கேலிபோர்னியா 328, 384.
கேம்டன், சார்லஸ் பிராட்:
முதல் ஏர்ல் (1714–1794) 210.
கேஜான் (1733–64) 9.
கேஜ் தாமஸ் (1721–87) தளபதி 63.
கேனடா:
ஜனத்தொகை 346.
குடியேற்றம் 246, 350.
பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் வளர்ச்சி 353–66.
பிரிட்டிஷ் அல்லது பிரஞ்சு ஆதிக்கமா என்ற பிரச்சினை 354
சமூக அரசியல் அமைப்பு பிரச்சினைகள் 354–8.
டர்ஹாம் அறிக்கை 360–62.
பிரிட்டிஷ் சட்டம் (1841) 362.
எல்ஜின் 364–6.
அமெரிக்க ஐக்கிய நாடுகள் 365–6.
கேனடா சட்டம் (1791) 348.
கேப் ஆப் குட்ஹோப் :
பிரிட்டன் மீண்டும் கைப்பற்றுதல் 378.
பிரிட்டன் வசம் இருத்தல் 323.
கேனடா:
அரசாங்கம் 55.

எல்லைக்குத் தெற்கே விரிவடைதல் 57.
கேனடாவும் அமெரிக்கப் புரட்சிப் போரும் 63.
அமெரிக்கக் கப்பல்கள் விலக்கப்படுதல் 89.
கேனடாவும் 1812ஆம் ஆண்டுப் போரும் 185.
பிட்டும் கேனிங்கும் 82.
கேனிங்கும் யாகோபிய எதிர்ப்பும் 131.
கேனிங்கும் கத்தோலிக்க விடுதலையும் 133.
கேனிங்கும் அடிங்டனும் 156.
பிட்டின் இரண்டாம் மந்திரி சபையில் 159.
கேனிங்கும் திறமையாளர் அமைச்சரவையும் 167.
கேனிங்கும் அடிமை முறையும் 186.
கேனிங்கும் போர்ட்லாண்டின் அமைச்சரவையும் 171
கேனிங்கும் கேஸில்ரேயும் 176–177.
கேனிங்கும் பர்லிவெலின் அரசாங்கமும் 171.
சீர்திருத்தம் 227.
அரசாங்க பதவியில் மீண்டும் அமர்தல் 232.
வெளிவிவகாரக் காரியதரிசியாதல் 232, 236, 242.
பீட்டர்லூ 239,
கெரோலின்ராணி 241.
அரசியலில் அவர் செல்வாக்கு 251; 252.
அவருடைய அயல்நாட்டுக் கொள்கை 253.
கேபினட் 255.
மன்ரோ கோட்பாடு 255.
கத்தோலிக்கப் பிரச்சினை 261.
பிரதம அமைச்சராதல் 263.
அவருடைய மரணம் 263.
விபரலிசத்தையும். தேசத்தையும் ஆதரித்தல் 331.
கேஸில்ரே ராபர்ட் ஸ்டுவர்ட் 1769–1822
இரண்டாவது வைகவுண்ட் பிரபு
கேஸில்ரேயும் பிட்டும் 131.
அயர்லாந்தில் 145.
கேஸில்ரேயும் கத்தோலிக்க விடுதலையும் 148.
பிட்டும் கேஸில்ரேயும் 155, 157.
கேஸில்ரேயும் திறமையாளர் மந்திரி சபையும் 166.
போர் துறை அமைச்சராக 171,
கேனிங்கும் கேஸில்ரேயும் 176–177.
பதவியிலிருந்து நீங்குதல் 177.
வெளி நாட்டு அமைச்சராதல் 183.
ஐரோப்பாவிற்குச் செல்லுதல் 187.
பூர்வாங்கப் பேச்சுக்கள் 188.
கேஸில்ரேயும், பிரஷ்யாவிற்கு எதிராக உடன்படிக்கையும் 193.
கேஸில்ரேயும் வியன்னா மாநாடும் 197.
லிவர்பூல் ஆட்சி 233.
பிரிட்டிஷ் வெளி நாட்டுக் கொள்கையும், நெப்போலியப் போரும் 234.
கேனிங்குடன் ஒப்பிடுதல் 235.
அவருடைய மரணம் 236, 242.
கிரீஸ் 259.
அடிமை வியாபாரம் 288.
கேட்டோ வீதி சதித் திட்டம்: (1820) 241.
கே ஜோசப்: (1821–78) 313.
கேவூர் கவுண்ட் கேமிலோ: (1810–61) 325.
கேனிங் கைட்டிங் 331.
கேப் பிரிட்டன் தீவு 354.
கேப் காலனி:
பிரிட்டன் வசம் இருந்தது 331.
1820-ல் குடியேறியவர்கள் 346.
இன சமத்துவம் அறிவிக்கப் படுதல் 350.
நட்டால் 382–4.
1853 அரசியல் அமைப்பு 383,

கோ

கோபர்க் குடும்பம் 339.
கோச்ரேன், தாமஸ் பிரபு (1775–1860)
கடற்படை தளபதி 255.
கோல்ரிட் ஜ் :
சேம்வெல் டெய்லர் (1772–1834 228. 248, 303, 398.
கோலின்ஸ், வில்லியம் (1721–59) 219.
கோம்டி, அகஸ்டி (1798–1875) 278.
கோட் ரெச், பிரடிரிக் ராபின் ஸன் வைகவுண்ட் (1782-1859)
நிதித்துறையில் 242, 244.
கேனிங் 263.
பிரதம அமைச்சர் 263, 265.
கிரே 267.
பீல் அரசாங்கத்தில் 309.
கோல்டு கோஸ்ட்
இங்கிலாந்து அரசனிடம் வருதல் 268,
கோக், தாமஸ் லீ செஸ்டர் ஏர்ல் பிரபு (1752–1842) 81
கோராம் ஜார்ஜ் (1787-1857) 402.
சோத் லூயிஸ் (1802–94) 327, 342.
கோடார்டு தாமஸ் (1783 99)
கோடோய் மானுவல் டி (1767–1851) 110, 124.
கோபன் ஹேகன் போர்: (1801) 132.
குண்டு வீச்சு (1807 171.
கோர்ட் ஹென்றி (1740–1800) 14.
கோர்டன் கலகங்கள் (1780) 70.
கோர்பு 173, 180.
கோரம் தாமஸ் : (1668–1751) 19.
கோல்ரிட்ஜ் சாமுவேல் டெய்லர் (1772–1834) 149.

ச

சர்ச்சில் சார்லஸ் (1731–64) 38.
சதே ராபர்ட்: (1774–1813) 230, 295.
சமய டைட்டிங் சட்டம் (1850) 326.
சமயக் கமிஷன் 286.

சா

சார்லஸ் X : பிரான்ஸ் அரசன் 268.
சார்லாட் இளவரசி: (1796–1819)
நான்காவது ஜார்ஜ் 306.
சார்டிஸம் :
துவக்கமும் வளர்ச்சியும் 299.
புதுப்பித்தல் 324.
சாடில்லன் மாநாடு: (1814) 188.
சரண்ட் விச் எட்வார்டு மாண்டேகு, முதலாம் ஏர்ல் பிரபு (1718–92) 37, 46.
சாத்தம் வில்லியம் பிட் :
1766-ஆம் ஆண்டு அமைச்சரவை 33.
சாத்தமும் பத்திரை முத்திர சட்டமும் 43.
சாத்தமும் இந்திய சிக்கலும் 53, 54.
சாத்தமும் அரசனது திட்டமும் 43.
பதவியிலிருந்து விலகி அரசாங்கத்தை தாக்க வருதல் 50.
கிரென்வில்லுடன் சமாதானம் 51.
ராக்கிங்காம் ஒத்துழைக்க மறுத்தல் 52.
சாத்தமும் அமெரிக்கக் குடியேற்றங்களும் 59, 61, 63.
மறைவு 67.
சாத்தம் ஜான் இரண்டாம் ரால் பிரபு. (1756–1835) 85, 121, 175.
சாமாண்ட் உடன்படிக்கை 1814 191–193.
சார்வி மாண்ட் ஜேம்ஸ் கால் பீல்டு, முதலாம் ஏர்ல் பிரபு (1728–99) 135
சார டோகா சண்டை (1777) 65.
சால்பாய் உடன்படிக்கை (1782) 72, 99.

சாண்டோ மிங்கோ 123, 153, 175.
சாக்கா :
(19-வது நூற்றாண்டு.) ஜூலு அரசன் 380.
சால்மர்ஸ் தாமஸ் (1780–1847) 403.
சார்லாட் இளவரசி : (1796–1819)
நான்காவது ஜார்ஜ் 332, 306.

சி

சிமியோன் சார்லஸ் (1759–1836) 374, 398.
சிங்கப்பூர் 330, 384.
சிட்னி 348, 370.
சிரியா 334.
சிங் ஹோல்ம் கெரோலின் (1808–77) 347.
சீக்கியர்கள் 317.
சிட்மவுத்
ஹென்றி அடிங்டன், வைகவுண்ட் (1757–1844) 119, 151, 157.
அவருடைய அரசாங்கம் லிவர்பூல் அரசாங்கத்தில் ஒரு அங்கத்தினர் 232.
தொழில் நெருக்கடி 238.
அவருக்குப்பின் பீல் வருதல் 242.
கேனிங் 252.
சிண்ட்ரா மாநாடு : (1808) 174.
சிவாஜி (1627–80) 90.
சிசால்பைன் குடியரசு 129, 153.

சீ

சீனா: போர்கள் 301, 308, 336-8.
சீர்திருத்த மசோதா (1832) 271, 277.
(1867) 284.

சு

சுவரோஃப் :
அலெக்சாந்தர் (1729-80).
ரஷ்யதளபதி 109, 125, 167.
சுவிட்சர்லாந்து : கேரண்டர் பண்ட் 340.
சூடான் : முகமது அலியினல் கைப்பற்றப்படுதல் 384.

செ

செயிண்ட் ஹெலினா 197.
செயிண்ட்ஜான் நதி 354.
செயின்ட்ஸ், லெஸ் சண்டை (1782) 75.
செயித் சிங் 18வது நூற்றாண்டு 99.
செனிகால் 77, 79.
செர்பியா :
காரா ஜார்ஜ் பரம்பரை 327.
சைடன் ஹேம், சார்லஸ் போலட் தாம்ஸன் பிரபு (1799–1841) 362.

சே

சேண்டர்ஸ் நிபந்தனை : 1831 273.
சேவாய் :
சார்லஸ் ஆல்பர்ட் அரசன் 281.
இத்தாலியக் கிளர்ச்சியை தலைமை தாங்கி நடத்துதல் 340.

ட

டட்லி ஜான்வார்ட் முதல் ஏர்ல் (1781-1833) 265.
டங்கேனன்
ஜான் பான்ஸன்பி வைகவுண்ட் பெஸ்பரோவின் நான்காவது ஏர்ல் (1781–1847) 271.
டர்ஹாம், ஜான் லேம்டன் :
முதல் ஏர்ல் (1792–1840)
அவருடைய தீவிரக் கருத்துக்கள் 251.
கிரே அரசாங்கத்தில் 270-271.
சீர்திருத்த மசோதா 271, 275.
ராஜினமா செய்தல், 282.
வேக் பீல்ட் 352
அவருடைய அறிக்கை 360, 362
மெல்போர்னின் இரண்டாவது அரசாங்கத்தில் இல்லை. 283.

டல்ஹவுஸி ஜேம்ஸ் சாம் சே முதல் மான்குவிஸ் (1812–60) 309.
டல்ஹவுஸி பல்கலைக்கழகம் 354.
டயர்னி ஜார்ஜ் (1761–1830) 253, 263.
டவுன் சென்ட் சார்லஸ் 1725–67, 42, 44, 45, 48, 58, 61.
டக் வர்த் சர் ஜான் (1748-1817) கடற்படைத் தலைவர் 168.
டர்பி அப்ரஹாம் (1677–1717) 13.
டல் ஜத்ரோ (1674–1741) 7.
டாலி ராண்டு :
சார்லஸ் பெனிவெண்டு இளவரசன் (1754–1838) 189, 196.
டன்கன் ஆதம் வைகவுண்ட் பிரபு : (1731–1804) 127.
டன்னிங்
ஜான், முதலாம் ஆஷ்பர்டன் பிரபு. (1731–83) 46, 70.

டா

டால்புடல் 297.
டான், வுல்ப் : (1763–98) 210.
டார்டனல்ஸ் : 334.
டார்வின் சார்லஸ் (1809–82) 199, 407.
டார்ட் மவுத்
வில்லியம் பெக்கி, இரண்டாம் ஏர்ல் பிரபு (1731–1801) 52.
டாண்டன் ஜான்ஜல் ஜேக்விஸ் (1759–94) 118, 118, 149.

டி

டிக்கன்ஸ் சார்லஸ் (1812–70) 300.
டி செண்டர்ஸ் (ஒப்புக் கொள்ளப்பட்ட திருச்சபையில் இணங்காதவர்கள்)
ஓ' கானெல் 387.
விவாகச் சட்டம் 287.
கல்வி 291
டிங்கான் : (19வது நூற்றாண்டு) 382.
டிரினிடாட் 289, 348, 368.
டிரபால்கர் சண்டை (1805) 160, 163.
டில்கிட் உடன்படிக்கை : (1807) 165, 171
டியுனிஷியா 334.
டிண்டால் மாத்யூ (1657–1733) 25.
டிரம்மண்ட் தாமஸ் (1797–1840) 389.
டிப்பி : சர் சார்லஸ் காவான் (1816–1903) 395.
டிரேக்டேரியன்கள் : 402.

டு

டுர்கோ, அன்னி-ராபர்ட் (1721-81) 72.

டூ

டூக் ஜான் ஹார்ன் (1746–1812) 48.
டூ லூஸ் வெலிங்டன் கைப் பற்றுதல் 188.
டூ லோன் 121.

டெ

டெர்பி :
எட்வர்ட்டு ஸ்டான்லி பதினான்காவது ஏர்ல் பிரபு (1798–1869)
கேனிஸ் அரசாங்கத்தில் சேருதல் 263.
கிரே அரசாங்கத்தில் 271.
அயர்லாந்து காரியதரிசி 281, 323.
பீலிட்டுகள் சேர மறுத்தல் 327.
டென்னிசன் ஆல்பிரட் பிரபு. (1809–92) 248 329, 407.
டெம்பிள் பிரடரிக் (1821–1902) (கேண்டர்பரி ஆர்ச்பிஷப்) 407.
டெக்சாஸ் 303, 384.

டே

டேவிட், தாமஸ் (1814–45) 394.
டேம் வர்த் அறிக்கை 283.
டேவான் கமிஷன் (1845) 393.

டேல் பாட் தாமஸ் (1771–1853) 346.
டேலிராண்ட் சார்பிஸ்பிரான்ஸ் டெஸினி விண்ட் (1754–1838) 331
டேஸ்மானியா 371, 374.

டோ

டோரிகள் 35, 6, 84, 113, 179.
கட்சியில் பிளவுகள் 1820-ல் 241, 260, 263
கேனிங் 251.
கத்தோலிக்கப் பிரச்சினை 261, 267.
சீர்திருத்த மசோதா 273.
'வோர்ஸ்' 275.
1832 தேர்தல் 281.
பீல் 309, 317, 321.
டோ ஹெர்டி ஜேம்ஸ் 19வது நூற்றாண்டு 273, 301.
டோர் செஸ்டர் கை சார்லிடன் முதற் பிரபு (1724–1808) 57, 63, 103.
டோன் உல்ப் (1763–98) 139.
டோரண்டோ 364

டை

டைம்ஸ் 253, 277, 285, 336.
டைத் முறை குறிப்பிட்ட தொகையாக நிர்ணயம் செய்தல் 286.
அயர்லாந்தில் பிரச்னை 388, 9.

த

தக்காணம் 90
தலவாரா சண்டை (1809) 174.
தர்லோ, எட்வார்டு முதல் பிரபு (1731–1806) 71, 73, 85.
தயர்ஸ் அடால்ப் (1797–1877) 335.

தா

தாக்தி 338, 345.
தானியச் சட்டங்கள் 89.
லிவர்பூல், ஹஸ்கின் 260, 262.
தானியச் சட்டம் எதிர்ப்புக் கழகம் 300, 301, 302, 312, 318, 319.
பீல் 320.
ரத்தாகுதல் 321–3, 366. 393.
தானியச் சட்ட எதிர்ப்புக் கழகம் 300, 301 315.
தாம்ப்ஸன் ஆண்டி ரூ (1779–1831) 403.

தி

திஸல் உட் ஆர்தர் (1770–1820) 241.
திரோபா காங்கிரஸ் (1820) 235, 248.
திருமணச் சட்டம் (1753) (1836) 287.
திருச்சபை 24, 53, 137.
நான்காவது ஜார்ஜ் மன்னனின் விவாக ரத்து 241
சீர்திருத்தங்கள் 286, 287.
ஆக்ஸ்போர்டு இயக்கம் 302, 325 398–02
19-வது நூற்றாண்டின் முதல் பகுதியில் அதன் நிலைமை 385.
ரஸல் அயர்லாந்தில் 387.
அரசியல் ஆதிக்கம் முறிந்தது 397.
திருச்சபை பிரசாரக் கழகம் 352, 378, 398.

தெ

தென் ஆப்ரிக்கா மிஷனரிகள் 352.
19வது நூற்றாண்டின் முதற் பகுதியில் வளர்ச்சி 378-84
பெரும் பயணம் 380, 384
தெற்கு ஆஸ்திரேலியா 353, 372.

தே

தேர்தல்கள் (பாராளுமன்றம்) 1806, 169; 1826, 233; 1830, 269; 1831, 274; 1832, 281; 1834, 283; 1841, 308.

தேக்கரே, டபில்யூ எம் (1811–63) 327.

து

துருக்கி 152, 168.
பிரிட்டனும், துருக்கியைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட முயற்சியும் 236, 258.
கிரேக்கர்களின் கிளர்ச்சி 259.
ருஷ்யா-துருக்கி போர் (1828) 278
முகமது அலியின் மீது போர்கள் 304.
சமாதான உடன்படிக்கை (1841) 334.
ஹங்கேரியக் கிளர்ச்சிக்காரர்கள் சரணடைய மறுத்தல் 343.

தொ

தொழிற்சங்கங்கள் 4, 32.
19வது நூற்றாண்டின் துவக்கத்தில் 3.
காம்பினேஷன் சட்டத்தை ரத்து செய்தல் 131.
நிறைய முயற்சி எடுத்துக் கொள்ளுதல் 299.
காப்டென் 319.
பயன் கருதுவோரின் கொள்கை 404.
தொழிற்சாலை சட்டம் (1802) 292. (1819) 239, 292. (1833) 293.
தொழிலாளர் நிலைமை :
தொழிற்சாலை சட்டம் 1819, 239.
19-வது நூற்றாண்டின் துவக்கத்தில் தொழிற்சாலைகள் சட்டங்கள், 292, 294.
நிலக்கரிச் சுரங்கச் சட்டம் (1842) 313.
தொழிற்சாலை சட்டம் (1847) 325.
தொழிற் புரட்சி 2, 7, 16.
19-வது நூற்றாண்டின் துவக்கத்தில் 222.
பீல் 312.

ப

பட்லர் :
அலைஜி ஆப் ரெலிஜன் 217.
பக்ஸ்டன். சர் தாமஸ் ஃபாவெல் (1886–1845) 288, 352.
பர்மிங்ஹாம் :
அதிகாரப் பற்றற்ற அதிகாரியைத் தேர்ந்தெடுத்தல் 259.
சீர்திருத்த யூனியன் 267.
சார்டிஸ்டு மாநாடு 301 யூனிடேரி மனசத்தின் தலைமை பீடம் 397.
பம்பாய் 91, 99.
பல்கலைக் கழகங்கள் : சீர்திருத்தங்கள் 220 லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவப்படுதல் 250, 287.
ராயல் கமிஷன் 404.
படை : 18-வது நூற்றாண்டில் படை திரட்டுதல் 5.
திட்டங்கள் 58. அமெரிக்கப் புரட்சிப் போர் 63.
நெப்போலியப் போர்கள் 122.
அயர்லாந்தில் 136. ஆயுள் முழுவதும் பணியாற்றும் முறை ஒழித்தல் 770
வாட்டர்லூவில் 192, 195.
சட்டப்படி இருத்தல் 204.
அதிகப்படுத்தல் 239.
பசுட்டோ லேண்ட் 378.
பக்ஸார் சண்டை (1764) 93.
பஞ்சாப் 90.
படஜோஸ் 184.
பத்திர முத்திரைச் சட்டம் (1765) 40, 58.
பர்க் எட் மண்ட் (1729–97)
பர்க்கும், பூட்டும், கிரான்வில்லும் 34.
ராக்கிங்காமின் செயலாளராக 42.
பர்க்கும் சாத்தம் பிரபு, கிராப்டன் ஆகியோரின் மந்திரி சபையும் 43.

பர்க்கும் சீர்திருத்தமும் 48.
விக்குகளின் தீர்க்கதரிசியாக 53.
பர்க்கும் அமெரிக்க குடியேற்றங்களும் 57, 58, 59.
அவரது பொருளாதாரத் திட்டங்கள் 74.
பர்க்கும் பாராளுமன்ற சீர்திருத்தமும் 75.
பர்க்கும் ஷெல்பர்னின் வீழ்ச்சியும் 78.
அமைச்சராக 112.
பர்க்கும் காப்பாளர் சபையும் 113.
அவர் எழுதிய "Reflections on the Revolution" 110 115. மேதைத் தன்மையும் வாழ்வும் 112, 115.
பிட் மந்திரி சபையை ஆதரித்தல் 119.
வெண்டி கலகத்திற்கு ஆதரவு தருமாறு வற்புறுத்தல் 122.
மறைவு 149,
பாக்ஸ், சார்லஸ் ஜேம்ஸ் (1749–1806)
ஹாலண்டு பிரபுவின் மூன்றும் மகன் விக்குத் தலைவராக 64.
வெஸ்ட் மினிஸ்டரின் பிரதிநிதி 71.
ராகிங்காமும் மந்திரி சபையில் பாதியை அடக்கி ஆளுதலும் 73.
பர்க்கும் ராக்கிங்காமின் மறைவும் 73–75.
பாக்சும் பிராண்சும் 75, 89.
பாக்சும் ஷெல்பர்னும் 78.
அவரது இந்திய மசோதா 79.
பிட்டுடன் நீண்ட காலப் போட்டி 81–83
பாக்சும் நான்காம் ஜார்ஜும் 106.
பாக்சும் பர்க்கும் 115.
பாக்சும் பிரஞ்சுப் புரட்சியும் 117, 119
பாராளுமன்றத்தை விட்டு விலகுதல் 127.
பிரிவு கவுன்சிலிலிருந்து வெளியேற்றப்படல் 131.
பாக்சும் அமீன்ஸ் சமாதானமும் 152.
மூன்றும் ஜார்ஜ் ஏற்க மறுத்தல் 156, 157.
பாக்சும் நெப்போலியனும் 165.
மறைவு 166, 167. பாக்சும் அடிமை வாணிபமும் 172.
பால்மர்ஸ்டன். I
ஹென்றி டெம்பிள். மூன்றாவது வைகவுண்ட் (1784–1865).
லிவர்பூல் அரசாங்கம் 232.
கேனிங் 263,
சீர்திருத்த மசோதா 275.
கிரேயின் வெளி நாட்டுக் கொள்கை 281.
அடிமை வியாபாரம் 288,
பால்மர்ஸ்டன் II
பதவி நீக்கம் (1851) 327, 342.
பெல்ஜியன் கிளர்ச்சி 330–3.
நான்கு நாடுகளின் கூட்டு 332.
கிழக்கு நாடுகளின் பிரச்சினை 334
சீனப் போர் 336–8
பதவிக்கு மீண்டு வருதல்,
பின்பு ஸ்பானிய திருமணங்கள் 338–40.
இத்தாலி 340.
டான் பசுக்கோ 342.
அரண்மனை 342,
பால்டுவின், ராபர்ட் (1804–58) 360, 362.
பாடனி பே 370,
பார்க்ஸ், ஜோசப்ஸ் (1796–1865) 287.
பாராளு மன்றம் 1830 தேர்தல் 269
சீர்திருத்தமசோதா 273–275.
பான்சன்பி, ஜார்ஜ் (1755–1817) 232.
பால் ரஷ்யப் பேரரசர் 127, 129, 131, 151.
பால் லெவிஸ் 9, 11,

பால்மர்தாமஸ் (1747–1802) 119.

பி

பிர்பெக், ஜார்ஜ் (1776–1841) 249.
பிளாக் ஸ்டோன், சர் வில்லியம் (1723–80).
அவருடைய குறிப்புகள் 214.
பிரேஸி, தாமஸ் (1805–70, 316.
பிரைட்–ஜான் (1811–89)
கார்டிஸ்டுகள் 296.
தான்ய எதிர்ப்புச் சட்டம் 319.
பிரிஸ்டல்:
சீர்திருத்த மசோதா 273.
பிரிட்டிஷ் பேரரசு I
அடிமை முறையை ஒழித்தல் 289.
பிரிட்டிஷ் பேரரசு II
அடிமை முறையை ஒழித்தல் 289.
பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதல் பாகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி 345-84.
இங்கிலீஷ் சட்டம், வர்த்தகம், தருமகர்த்தா முறை ஆகியவற்றின் செல்வாக்கு 346,
பிரிட்டிஷ் குடியேற்றம் 346, 350.
1830-இல் புதிய வளர்ச்சி 350,
நில குடியேற்ற கமிஷன் 352:
பிராண்டஸ்- தி 327.
பிரவுனிங் ராபர்ட் (1812–89) 327.
பிளாரிடா 384,
பிரான்ஸ்:
1826-இல் கிரீஸ் பற்றிய உடன்படிக்கை.
1830 புரட்சியும் லூயி பிலிப்பின் தேர்தலும் 330,
1848 புரட்சி, 327, 340.
கீழைசிக்கல் 334.
நல்ல தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள ஆபர்டீன் முயற்சி செய்தல் 338.
இரண்டாவது பேரரசை ஏற்படுத்தல் 340.
பிரான்சிஸ், டான்: (ஸ்பானிய பூர்போர்ன்) 339
பிரவுட், ரிச்சார்ட் ஹெரெல் (1903–336) 398, 400; 406.
பிரிடோரியஸ், ஆண்டிரிஸ் (1799–1853) 284.
பிரின்ஸ் எட்வர்டு தீவு 354.
பிரிச் சார்ட், ஜார்ஜ் (1796–1883 338.
பிட்ஸ் ஜெரால்டு:
வெஸ்லெ பிரபு (1783–1843) 265.
பிட்ஸ் வில்லியம்:
வில்லியம் இரண்டாவது ஏர்ல் (1748–1833) 233.
பிளேஸ், பிரான்சில் (1771–1854) 246, 273, 275, 285, 293, 299.
பிளங்கட், வில்லியம்:
முதல் பிரபு (1764–1854) 261.
பிரிட்டிஷ் அசோசியேஷன் 406.
பிரஸ்:
ஆறு சட்டங்கள் 240, வரி 251
ஸ்டாம்புத் தீர்வை குறைக்கப்படுதல் 285.
பிரஸ்டிலி, ஜோசப் 218.
பிரஷ்யா:
தொழில் வளர்ச்சி 244.
வேய்மார் பாராளுமன்றம் 340.
பிரின்ஸ் கான்சாட் 342.
பிட்வில்லியம் (1759–1806)
பிட்டும் அமெரிக்கப் போரும் 69.
கருவூலத் தலைவராக 75, 87.
பிட்டும் ஷெல்பர்னின் வீழ்ச்சியும் 77–79.
பிட்டும் போர்ட் லேண்டின் மந்திரி சபையும் 79.
பிரதமராதல் 79.
உடன் பணி புரிவோர் 85.
பொருளாதாரக் கொள்கை 85.
பிட்டும் இந்தியாவும் 89.
பாராளுமன்றச் சீர்திருத்தத்திலும் அடிமை முறையிலும் தோல்வி 103–105.

பிட்டும் காப்பாளர் ஆட்சியும் 105.
வெளி நாட்டுக் கொள்கை 107-9.
பிட்டும் பிரஞ்சுப் புரட்சியும் 117
1794 ஆம் ஆண்டு காபினட் 119
சமாதானத்திற்கான முயற்சி 127.
ராஜிநாமா செய்தல் 133.
பிட்டும் கத்தோலிக்க விடுதலையும் 141.
அதிகாரத்தைத் திரும்பக் கைப்பற்றுதல் 155-7,
மறைவும் சாதனைகளும் 165.
பிட்ஸ் மாரிங்கன் 75.
பிட்ஸ் வில்லியம்:
வில்லியம் இரண்டாம் ஏர்ல் பிரபு (1748-1833) 119, 141, 161.
பிட்ஸ் ஜிரால்டு எட்வர்டு பிரபு (1763-98) 143.
சட்ட சீர்திருத்தம் 240
கத்தோலிக்கப் பிரச்சினை 260.
வெலிங்டன் அரசாங்கத்தில் காமன்ஸ் சபையில் கட்சித் தலைவராக இருத்தல் 264.
சீர்திருத்த மசோதா 273.
அவருடைய குறுகிய கால அமைச்சரவை 1834-5;284.
முனிசிபல் கார்பரேஷன் சட்டம் 287.
பெட்சேம்பர் நெருக்கடி 306.
பிரதம அமைச்சராதல் 309-311.
அவருடைய குணாதிசயங்கள் 310-312.
அவருடைய பொருளாதாரக் கொள்கை 312.
பாதுகாப்பு 320.
உருளைக் கிழங்கு பஞ்சம் 321.
ராஜிநாமா செய்தல் 322.
தானியச் சட்டங்களை ரத்து செய்தல் 323,
மரணம் 324.
பியன்னஸ் நெதானியல் (1608-69) 467, 491.
பீஷ் வாக்கன் 89.
பீட்டர் லூ 239.
பீட்டோ, பர் சாம்வேல் (1809-89) 316.

ப

புரோக் சர் ஜசக் (1769-1912) தளபதி 186.
புரோகாம்:
வாக்ஸ் பிரபு, ஹென்றி (1778-1858) இளமை 177, 179.
புரோகாமும் கவன்சில் ஆணைகளும் 185.
அவர் சீர்திருத்தங்கள் 219.
கெரோலின் அரசி 241.
கேனிஸ்சின் அரசாங்கம் 259.
யார்க்ஷயர் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார் 269.
கிரே அரசாங்கத்தில் சான்சலர் 271.
சீர்திருத்த மசோதா 275.
மெல்போர்னின் இரண்டாவது அரசாங்கத்தில் இல்லை 283
சட்ட சீர்திருத்தங்கள் 234.
புல்லர் சார்லஸ் (1896-48) 251, 281, 352. 360, 364.
புனித உடன்படிக்கை 236, 254, 259.
புல்வர், சர் ஹென்றி:
டேவிங் பிரபு மற்றும் புல்வர் (1801-72) 339.
புரட்சி நஷ்ட சட்டம் (1849) 364.

பூ

பூட் ஜான், ஸ்டுவர்டு:
மூன்றும் ஏர்ல் பிரபு (1713-1792).
1761-3 அவரது அமைச்சரவை 34,
பூட்டும் கட்சிகளும் 34-36.
பூட்டும் ஜெர்மானியக் கூட்டுறவும் 36.
பூட்டும் சாத்தமும் 37
பூட்டும் வில்க்ஸும் 38.

பூட்டும் பத்திரைச் சட்டமும் 43.
பூனை 90, 99.
பூம் பிளாட்ஸ் 384.
பூஸி எட்வார்ட் (1800–1882) 401, 406.

பெ

பெண்டிங், லார்ட் ஜார்ஜ் (1802–48) 323, 325, 393.
பெர்முடா 346.
பெய்ரட் 334.
பெந்தாம், ஜெரிமி (1748-1832) 229, 250–251, 278, 291.
பெல்ஜியம் ஹாலந்தை எதிர்த்து புரட்சி செய்தல் 278 லண்டன் உடன்படிக்கை-332.
பெட்போர்டும் மூன்றும் ஜார்ஜும் 37.
பெட்போர்டும் கிரன்விலின் வீழ்ச்சியும் 43.
பெட்போர்டும் பத்திர முத்திரைச் சட்டமும் 43
வில்க்ஸின் தகராறுகளினல் தூக்கப்பெறல் 47.
ஜீனியஸிம் பெட்போர்டும் 48.
மறைவு 51.
பெண்டிகோ 374.
பெண்டிங் பிரபு, வில்லியம் (1774–1839) 184, 188.
பெய்ன், தாமஸ் (1737–1809) 63, 110, 115
பெர்சிவல், ஸ்பென்சர் (1762–1812) பிரதம மந்திரி.
பெர்சிவலும் பிட்டும் அடிங்டன் மந்திரிசபையில் 149.
பெர்சிவலும் திறமையாளர் மந்திரி சபையும் 167.
பெர்சிவலும் போர்ட் லண்டின் மந்திரி சபையும் 171.
தலைவராக 179.
கொல்லப் படுதல் 183
பெர்ரி, ஜேம்ஸ் (1756-1821) 181.
ஆணைகள் 165.
பெரஸ் போர்டு வில்லியம் வைகவுண்ட் பிரபு (1768-1854) தளபதி 182.
பங்கு போடும் நோக்கம் 145.
புரட்சி, 109, 107, 117.
ஹாலந்துடன் இணைக்கப் பெறுதல் 199.
பென்காம், ஜெரிமி (1748–1832) 71, 75.
பெட்ரோ-I பிரேஸில் பேரரசன் (1798–1824) 257.
பென்றின் 265.
பெர்ஸி தாமஸ் (1768–1808) பிஷப், 218.

பே

பேகாட், சர் சார்லஸ் (1781–1843) 362, 364.
பேசல் உடன்படிக்கை (1795) 121, 149.
பேய்ர்டு சர் டேவிட் (1757–1829) தளபதி 167.
பேலன் போர் (1808) 173.
பேங்க் சாசனச் சட்டம் (1844) 315–7.
பேங்க் ஆப் இங்கிலாந்து ரொக்க பணத்தை அளிக்க மீண்டும் வருதல் 238, 244.
அதனுடைய உரிமைகளும், கடமைகளும் 244–6
1834 ஆவது ஆண்டு சீர்திருத்தங்கள் 285.
பேர்ன்ஸ் தாமஸ் (1784–1841) 251.
பேஸின் உடன்படிக்கை (1802) 199.
பேதர்ஸ்ட் ஹென்றி 3-வது பிரபு (1762–1834) 232, 255, 348, 384.
பேய்ன் தாமஸ் (1738–1809) 296.
பேங்க்ஸ், சர் ஜோசப் (1743–1820) 369–70.
பேரடே மைக்கேல் (1791–1867) 406.
பேப்பிஸ் லூயி (1786–1871) 358 360, 364.

பை

பைரன், ஜார்ஜ் கோர்டன் ஆறுவது பிரபு (1788–1824) 199, 234, 248, 249, 257.

பொ

பொலிவர் சைமன் (1783–1830) 248, 255.
பொது சுகாதாரம் பீல் 313–5.

போ

போயர்கள்: அவர்களுடைய பெரும் பயணம் 380–82
பூம் பிளாட்ஸ் என்ற இடத்தில் 384, டிரான்ஸ்வால் ஆரஞ்ச் பிரி ஸ்டேட்டில் அங்கீகரிக்கப்படுதல் 384
போல்டன், மாத்யூ (1728–1809) பீரான்சுடன் ஒப்பந்தம் 149.
போப்பின் பகுதிகளை நெப்போலியன் பெறுதல் 175.
காப்பாளராதல், பிரேசிலுக்குச் செல்லல் 171
போர்ட்லண்டு, வில்லியம் பெண்டிங்க், மூன்றும் டியூக் (1738–1809).
பக்கிங்காமின் முதன் மந்திரி சபை 41.
அவரது முதன் மந்திரி சபை 79.
பிட் மந்திரி சபையில் சேர்தல் 119.
போர்ட்லண்டும் கத்தோலிக்க விடுதலையும் 149.
பிட்டின் இரண்டாவது மந்திரி சபையில் 171–5.
அவரது மந்திரி சபையின் வீழ்ச்சி 175–7.
போல்டன், மாத்யூ (1728–1809) 15, 89.
போலந்தும் மாமன்னர் பிரடரிக்கும் 45
முதலாம் பிரிவினை 71.
போலந்தும், பிரஷ்யர் டான்சிக்கைக் கோருதலும் 109
இரண்டாம் பிரிவினை 109, 149
மூன்றும் பிரிவினை 149
வியன்னா மாநாடு 191.
போனபார்ட், லூயி, ஹாலந்தின் அரசர் (1778–1846) 165.
போனபார்ட், ஜெரோம், வெஸ்ட் பேலிய மன்னர் (1784–1860) 165.
போனபார்ட், ஜோசப், கேபிள்ஸ், ஸ்பெயின் ஆகிய வற்றின் மன்னர் (1768–1844) 165, 173, 181, 187, 199.
போனஸ் அயர்ஸ் 187.
போஸ்டன் 59, 61, 63.
போலிஸ் பீலின் சீர்திருத்தங்கள், 246, 267.
போர்ச்சுகல், கேனிங், 254, 257.
அடிமை வியாபாரத்தை ஒழித்தல் 288
நான்கு நாடுகள் கூட்டு 332.
போக்குவரத்து முதல் ரயில்வே 248, 249.
பென்னி அஞ்சல் முறை அமுலாக்கப்படுதல் 285, 303.
மின்சார செய்தி போக்குவரத்தை மார்ஸ் திருத்துதல் 303.
இரயில்வே முறை பரவுதல் 315.
மின்சார டெலிகிராப் வளர்ச்சி அடைதல் 315.
ஸ்டீம் கப்பல் போக்குவரத்து 340.
போர்ட் பிலிப் 372.
போர்க், ஜேம்ஸ் (1795–1849) 11-வது அமெரிக்க ஜனாதிபதி 362.

ந

நட்டால்:
ஆங்கிலேய முன்னோடிகள் 380.
பெரும் பயணம் 382.
ஆக்கிரமைப்பை கைவிடுதல் 382.
கிரவுன் காலனியாதல் 384.

நா

நான்கிங் உடன்படிக்கை 328, 338
நார்போல்க் தீவு 347.

நான்கு நாடுகள் கூட்டு (1834) 332, (1840) 335.
நந்தகுமார் (1775) 93, 98, 109.
நல்லம் டெம்ப்ஸ் மசோதா 45.
நன்னம்பிக்கை முனை :
குடியேற்றம் பிரிட்டனிடமே இருத்தல் 190.
நார்வே:
வியன்னா காங்கிரஸ் 197.
நார்தர்ன் ஸ்டார் 297, 301.
நாட்டிங்கேம் :
இயந்திரங்களை உடைத்தல் 238.
சீர்திருத்த மசோதா 273.
நார்த் பிரடரிக் குயில் போர்டு ஏர்ல் பிரபு (1732–92)
நார்த்தும் முன்ரோவும் ஜார்ஜின் ஆரம்பகால மந்திரி சபைகளும் 34.
பதவியேற்றல் 35.
கருவூலத் தலைவர் 45.
கிராப்டனைத் தொடர்ந்து வருதல் 51.
நார்த்தும் பிளவுற்ற எதிர் கட்சியும் 53.
நார்த்தும் குடியேற்றங்களும் 57.
ராஜிநாமா செய்தல் 69.
ஷெல்பர்னின் வீழ்ச்சியும், நார்த்தும் 78
ஒழுங்குமுறைச் சட்டமும், நார்த்தும் 98–9.
நார்த் பிரிட்டன் 38, 47.
நார்திங்டன், ராபர்ட் ஹென்ரி. முதலாம் ஏர்ல் பிரபு (1708–72), 42, 43.
நார்விச் 115.

நி

நியூ பிரன்ஸ்விக் 354, 360, 365
நியூ இங்கிலாந்து, கேனடியன் மேரி டைம் மாகாணங்கள் 364, 3.
நியூ சவுத் வேல்ஸ் 370, 372.
நியூஜிலாந்து மோரி போர் 328.
பிரிட்டிஷ் குடியேற்றம் 338.
கிப்பன் வேக்பீல்ட் 347.
நியூஜிலந்து கம்பெனி 352.
நியூ பவுண்ட் லேண்ட் அமெரிக்கர்களது மீன் பிடிக்கும் உரிமைகள் 353.
நியூமென், ஜான் ஹென்றி (1801–90) கார்டினல் 275, 399.
நியூபோர்ட் (மான்) 301.
நிக்கலஸ் I ரஷ்ய ஜார் (1796–1825–55) 248, 259.
நிதி அமைச்சர் (எக்ஸ்செக்சர்) இடைக்காலச் சின்னங்கள் 211.
நிதித் துறை நெப்போலியப் போருக்குப் பிறகு 236.
பீலின் நிதித் துறை சீர்திருத்தங்கள் 311–7.

நெ

நெப்போலியன் I. பிரஞ்சுப் பேரரசர் (1769–1804–15–21) பிறப்பு 71.
இத்தாலிய வெற்றிகள் 123.
மால்டாவைக் கைப்பற்றுதல், எகிப்திற்குச் செல்லுதல் 129.
கான்சலாதல் 129.
சமாதானத்தைப் பயன்படுத்தல், போரை மீண்டும் தொடங்குதல் 153, 163.
பேரரசர் 157.
நெப்போலியனும், ஆஸ்டர்லிட்சும் 165.
ஜீனி, இலாவ், பீரீட்லாண்டு 165.
கண்டத் திட்டம் 171–173
மார்டிரிட்டைக் கைப்பற்றுதல் 173.
நெப்போலியனும் வாக்ராமும் 175.
மேரி லூயியை மணத்தல் 175
போப்பின் நாடுகளை இணைத்துக் கொள்ளுதல் 176
ரஷ்யப் படையெடுப்பு 183.
முடி துறத்தல் 189.
நெப்போலியனும் வாட்டர்லூவும் 194–7.

செயிண்ட் ஹெலினு 197.
மறைவு 248.
நெல்சன் ஹொரேஷியோ, வைகவுண்ட் பிரபு (1758–1805).
கடற்படைத் தலைவர்—செயிண்ட் வின்சென்டில்—125.
நைல் ஆற்றில் 129
நெல்சனும் நேப்பில்சும் 129.
கோபன் ஹேகனில் 133, 151.
நெல்சனும் டூலோனும் 157.
நெல்சனும் டிராபல்கரும் 159–161.
நெப்போலியன் III. பிரெஞ்சு மக்களின் பேரரசன் (1808–51–70–73).
இங்கிலாந்தின் 303.
பாமல்ர்ஸ்டன் 327.
1851 திடீர் தாக்குதல் 342.
நெவாரினே போர் (1827) 265.

நோ

நோவாஸ் கோஷியா 346, 354, 360, 365, 366
நேபிள்ஸ் முராட்டின் இராச்சியம் 189.
நே, மைக்கேல் (1769–1815)
பிரஞ்சு தளபதி 181, 193.

நை

நைல் 129
நைல் ஆற்றுப் போர் 129.

ம

மலாக்கா 330.
மருஷியஸ் 189, 348.
மடாபெலிஸ் 381.
மன்ரோ அறிக்கை 248, 255, 384.
மன்ரு சர்தாமஸ் (1761–1815) 189, 191. 197
மக்கள் தொகை பிரிட்டனில் முதல் ஜனத்தொகை கணக்கு எடுத்தல் 222.
18-ஆம் நூற்றாண்டில் அயர்லாந்தில் 135
பிரிட்டனில் முதல் குடி மதிப்பு 150.
மரிஷியஸ் 91, 81, 189.
மராத்தியர் 90, 9.
மன்ரோ, ஜேம்ஸ் (1758–1831)
ஐந்தாம் அமெரிக்க ஜனதிபதி 185.
மன்ரோ, சர்ஹெக்டர் (1726–1805)
கடற்படைத் தலைவர் 93.
மஸ்ஸினு அண்ட்ரீ (1758–1817)
பிரஞ்சு தளபதி 181.
மக்கள் தொகை:
ஒண்டேரியா 358.
ஆஸ்திரேலியா 374.
நியூஜிலந்து 376.
தென் ஆப்ரிக்கா 379.
பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதற் பகுதியில் அயர்லாந்து 385.

மா

மால்பெஸ்பரி, ஜேம்ஸ் ஹேரிஸ் 3 வது ஏர்ல் (1807–89) 341.
மாரிஸ்-எப்-டி (1805–72) 407.
மாண்ட் பென்சியர், அந்தோணி டக்டே (1824–90) 339.
மாண்ட்ரியல் 354.
மார்னிங் கிரானிகல் 336.
மாடிசன், ஜேம்ஸ் (1751–1836)
நான்காம் அமெரிக்க ஜனதிபதி 185.
மால்டா பிரிட்டனிடம் இருத்தல் 189.
மால்தஸ், தாமஸ் (1766–1834) 229, 291, 299.
சார்மாண்ட். அகஸ்டி (1774–1852)
பிரஞ்சு தளபதி 181, 185.
மார்க்ஸ், கார்ல் (1817–83) 301
மார்னிங் கிரானிகல் 'Morning Chronicle' 177.
மால்டாவும் அமீன்ஸ் உடன் படிக்கையும் 152, 155.
பிரிட்டன் வைத்திருத்தல் 189.
மால் மஸ்பரி, ஜேம்ஸ் ஹாரிஸ், முதலாம் ஏர்ல் பிரபு 127.
அமெரிக்கப் புரட்சிப் போர் 63.

18-ம் நூற்றாண்டில் தொழில் 5.
மக்கள் தொகை 11.
சீர்திருத்தக் கோரிக்கை 112.
மான்ஸ்பீல்டு, வில்லியம் எர்ரே முதலாம் ஏர்ல் பிரபு (1705–93) 49, 65, 103.

மி

மிட்சல்ஜான் (1815–75) 394, 395.
மிடில் செக்ஸ் 45, 47.
மியூர், தாமஸ் (1765–98) 119.
மிராபு, ஹானெரெ, காம்டிடி (1749–91) 110.
மிஷனரிகள் 352.
மில் ஜேம்ஸ் (1773–1836) 218, 251, 295.
மில், ஜான்ஸ் டுவர்ட் (1806–73) 251, 293 328, 407.
மின்டோ, கில்பர்ட் எலியட் இரண்டாவது ஏர்ல் 341.
மீர் ஜாபர் (1765) 93.
மீனய் ஐல சந்தி 249.

மு

முராத் ஜோசிம் (1767–1815) 189, 191, 197.
முஸ்லிம்கள் 91.
முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1835) 287.

மெ

மெகாரட்னி, ஜார்ஜ், முதலாம் ஏர்ல் பிரபு (1737–1806) 101.
மெகாலே, ஸகாரி (1768–1838) 169
மெட்கரல், ஜான் (1717–1810) 16.
மெட்டர்னிக் கிளிமென்ஸ் இளவரசர் (1773–1859)
மெட்டர்னிக்கும் மத்திய ஐரோப்பிய அரசியல் நிர்ணயமும் 191.
சான்சலராக வருதல் 199.
மெட்காப் சார்லஸ் முதல் பிரபு (1785–1846) 362.
மெக்காலே, தாமஸ் முதல் பிரபு (1800–59) 249, 285. 328, 329, 403,
மெகமட் அலி (1769–1849) 248, 259. 303.
மெல்போர்ன், வில்லியம் லேம்ப் இரண்டாவது வைகவுண்ட் (1779 -1848)
கேனிங் அரசாங்கத்தில் சேருதல் 263.
கிரே அரசாங்கத்தில் சேருதல் 271.
சீர்திருத்த மசோதா 275.
கிரேயுக்குப் பின் பதவிக்கு வருதல் 282, 283.
ராஜினமா செய்தல் 283
பதவிக்கு மீண்டும் வருதல் 283.
விக்குகள் வீழ்ச்சி அடையும் நிலைக்கு எடுத்துக்காட்டு 301.
விக்டோரியா 305,
பெட்சேம்பர் நெருக்கடிக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு 306.
மெல்வில் ஹென்றி டண்டாஸ் முதல் வைகவுண்ட் (1742–1811) ஸ்காட்லாந்து 213, பேரசு 348.
மெட்டர்னிக் கினெமென்ஸ், இளவரசன் (1773–1859)
மத்திய ஐரோப்பிய ஏற்பாடு 191
சான்சலராதல் 199.
ஜர்மனியில் லிபரசத்தை ஒடுக்குதல் 235–6.
நான்காவது ஜார்ஜ் 254.
கேனிங்கின் போர்ச்சுக்கீசிய கொள்கை 257.
மெக்ஸிகோ சுதந்திரம் 255.
அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் போர் 328.
மெடன் ஹாம் மடம் 37.
மெதாமஸ்கன் 19–31
மெய்டா சண்டை (1806) 167.
மெல்வில் ஹென்றி டண்டாஸ், முதல் வைகவுண்ட் பிரபு.
மெல்விலும் நார்த்தின் அரசாங்கமும் 51, 69:

வழிக்கறிஞர் பிரபுவாக 73.
மெல்வில்லும் ஷெல்பர்னும் 78.
மெல்வில்லும் போர்ட்லண்டின் மந்திரிசபையும் 79–81.
மெல்வில்லும் பிட்டும் 81, 85.
மெல்வில்லும் ஹேஸ்மங்ஸிம் 101.
மெல்வில்லும் அடிமை முறையும் 105.
மெல்வில்லும் பிரஞ்சுப் புரட்சியும் 157.
போர்த்துறை அமைச்சராக 121, 167.
மெல்வில்லும் போரும் 132.
மெல்வில்லும் கத்தோலிக்க, ஐரிஷ் பிரச்சினைகளும் 139, 145, 149.
கிரன்வில்லும் மெல்வில்லும் 131, 153.
குற்றம் சாட்டப் பெறல் 157, 169, 177
மெல்வில்லும், ஸ்காட்லாந்தும் 213.

மே

மேக்கி, தாமஸ் டி' ஆர்கி (1825–68) 395.
மேரி, லூயி முதலாம் நெப்போலியனின் பட்டத்தரசி (1791–1837) 175.
மேரியா அண்டாய்னத் பதினாறும் லூயின் பட்டத்தரசி (1755–93) 71. 109
மேனூர்டு, சர் ஜான் (1602–90)
மேனூத் 179.
மேற்கத்திய தீவுகள்:
அடிமை வாணிபம் 105
நெப்போலியனியப் போரில் 111, 161
அமீன்ஸ் சமாதானம் 151.
மேரிலேண்ட் அரசினை ஆதரிக்கிறவர்கள் 347.
நோவாஸ் கோஷியாவுக்குச் செல்லுதல்.
மேகர் தாமஸ் (1823-67) 395.
மேற்கு ஆஸ்திரேலியா 372
மேல் கானடா கல்லூரி 360.
மோசேஷ் 19-வது நூற்றாண்டு 382.
மேக்கடம், ஜான் (1756–1836) 249.
மேகிண்டோஷ் சர் ஜேம்ஸ் (1765–1832) 247.
மேக்பெர்ஸன் ஜேம்ஸ் (1736–96) 218.
மேன்செஸ்டர் ஜனத்தொகை 222.
பீட்டர்லூ படுகொலைகள் 238–40.
மேரியா போர்ச்சுக்கல் அரசி (1819–28–53) 257–277.
மேய்னூத் 319, 323, 392.
மேஜினி கிஸப் (1805-72) 278, 329. 340.
மேனிங்ஹென்றி (1808–92) கார்டினல் 402.

மை

மைசூர் 91, 93, 99, 123, 131.
மைனர்க்கா 117, 151.
மோலினெக்ஸ் வில்லியம் (1656–98) 135.

யா

யார்க் 234, 263.
யாகோபிய எதிர்ப்பு 131.
யார்க், பிரடிரிக், டியூக் (1763–1826)
மூன்றும் ஜார்ஜின் இரண்டாம் மகன் 121, 159, 177.
யார்க்டவுன் சண்டை (1781) 67, 69.

யு

யுன்கியர் ஸ்கலஸ்லி உடன் படிக்கை (1733, 301, 334.

யெ

யெங், ஆர்தர் (1741–1820) 7.

ர

ரஸ்கின், ஜான் (1819–1900) 407.
ரஷ்யா :
காதரைன் ஆட்சியில் 107
சுவரோப் துருக்கியரை எறிய மறுத்தல் 109.

ரஷ்யாவும் பிரஞ்சுப் புரட்சியும் 177.
பிரதேச ஆசை 159.
ரஷ்யாவும் 1805 ஆம் ஆண்டு கூட்டிணைப்பும் 159
இலாவும், பிரிட்லண்டும் 165.
டில்சிட் உடன்படிக்கை 165–7
நெப்போலியன் 1812-ஆம் ஆண்டில் படையெடுத்தல் 183.
ரக்பிபள்ளி 250.
ரஸல் லார்ட் ஜான்: முதல் ஏர்ல் (1792–1878)
சீர்திருத்தம் 260.
சோதனை சட்டத்தையும், கார்பரேஷன் சட்டத்தையும் ரத்து செய்தல் 267
கிரே அரசாங்கத்தில் 269
சீர்திருத்த மசோதா 271.
தானியச் சட்டங்கள். 322.
பதவியேற்றம் 523.
பால்மர்ஸ்டனின் வெளி நாட்டு விவகாரம் 234
ரஷ்யா கிரேக்கர்களின் கிளர்ச்சி 236.
பெர்ஷியாவின்மீதும் இந்தியாவின்மீதும் கண் வைத்தல் 257
கிரேக்கப் பிரச்சினையில் கேனிங் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் 259.
ரஷ்யா-துருக்கிப் போர் 1828-277.
நிக்கலஸ் I 333.
ராயல் டைட்டில்ஸ் மசோதா (1876)
1765–6 மந்திரி சபை 31.
சாத்தமும் ராக்கிங்காமும் 37
பதவியிலிருந்து நீக்கப் பெறல் 43.
ராக்கிங்காமும் பெட்போர்டுகளும், ராடிகல்களும் 45, 51, 53.
இரண்டாம் மந்திரி சபை 69, 73
மறைவு 74.
ராடிகல்கள்:
ராடிகல்களும் வில்க்ஸும் 39, 47.
ராடிகல்களும் அமெரிக்கப் புரட்சிப் போரும் 63.
ராடிகல்களும் பர்க்கும் 115.
செல்வாக்கடைதல் 115, 167.
ராடிகல்களும் பிரஞ்சுப் புரட்சியும் 117.
ராடிகல்களும் விக்குகளும் 179.
ராபஸ்பியர் மாக்ஸி மிலியன், பிரான்ஸிஸ்டி (1758–94) 150

ரி

ரிக்கார்டோ டேவிட் (1772 1823) 229, 242, 248, 251 298, 406
ரிச்சார்ட்சன், சேம்வெல் (1689-1761) 218.
ரிக்பி, ரிச்சர்டு (1722–88 46.
ரிச்மாண்டு, சார்லெஸ் லெனாக்ஸ், மூன்றும்டியூக் (1735–1805) 82.
ரிச்மண்ட், சார்லஸ் கோர்டன் லெனாக்ஸ் 5வது டியூக் (1791–1860, 272, 282.

ரு

ருமேனியா சுய ஆட்சி கோரல் 157.

ரெ

ரெலிஜியஸ் டிரேக்ட் கழகம் 398.
ரெயில்வேஸ் 248, 295, 386.
ரென்னி, ஜான் (1761–1821) 16.

ரே

ரேடிக்கல்ஸ்
விக்குகள் 232.
கொள்கைகள் 218, 251.
காலனிகள் 289
சீர்திருத்த மசோதா 273, 277
ரஸல் 283.
1830–சட்டங்கள் 283
கல்வி 289, 291.
சார்ட்டிசம் 299.
புரட்சியும் 340.
ஓ-கானெல் 387.

ரேபர்ன், சர் ஹென்றி (1756–1823) 216.
ரேய்க்ஸ், ராபர்ட் (1735–1811) 220.
ரேனல்ட்ஸ் சர் ஜோஷிவா (1723–92) 2.

ரோ

ரோபக், ஜான் (1801–79) 290.
ரோமன் கத்தோலிக்க நிவாரண மசோதா (1829) 267, 311.
ரோமிலி, சர் சாமுவேல் (1757–1818) 218, 202, 247, 283
ரோம்னி, ஜார்ஜ் (1734–1802) 216.
ரோத்ஸ் சைல்ட்ஸ் 403.
ரோகில் கண்டு 96
ரோட்னி, ஜார்ஜ் முதற்பிரிவு (1719–92) 66, 76.
ரோலண்ட்ஸ், டேனியல் (1713–90) 27.
ரோஸ், ஜார்ஜ் (1744–1818) 85.

ல

லண்டன் மிஷனரி சொசைட்டி : 352, 378.
லங்காஷயர்
அரசியல் யூனியன்கள் 238.
பீல் அங்கே புதிய பணக்காரர்களுக்கு பிரதி நிதித்துவம் செய்தல் 309.
ல' எஸ்ட் ரேன்ஜ், சர் ரோஜர் (1616–1704) 215.
லண்டன் :
காமன்ஸ் சபையில் பிரதி நிதித்துவம் 211.
லண்டனுக்கு பீல் போலீஸ் முறையை துவக்கி வைத்தல் 246.
பல்கலைக் கழகம் தோன்றுதல் 248, 287
லட்டைட்ஸ் 231.
லச்சம் பர்க் 303, 332.
லானர்க் 222.
லாரன்ஸ் சர் தாமஸ் (1769–1830) 216.
லாக், ஜான் (1632–1704) 215, 297.
லாவில்லியம் (1686–1761) 27.
லாம்பி, ஜான் (1693–1722) சர் தாமஸ் (1685–1739) 9.
லாபோண்டேய்ன் சர் ஹூயி : (1807–64) 361.
லான்ஸ் டௌன், ஹென்றி பெட்டி—பீட்ஸ் மாரீஸ், மூன்றும் மார்குவிஸ் பிரபு (1780–1863) திறமையாளர். மந்திரிசபையில் 167.

லி

லியபால்டு I பெல்ஜியம் அரசன் (1790–1831–1865) 306, 310.
லிங்கன் ஆப்ரகாம் (1809–65) 16-வது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனதிபதி 199.
லிவர்பூல், ராபர்ட் ஜென்கின்சன்: சமுதாய சீர்திருத்தம் 228.
நீண்ட காலம் பதவியில் இருத்தல் 232.
பொருளாதாரக் கொள்கை 237–8.
நான்காவது ஜார்ஜின் விவாகரத்து 240–2.
சீர்திருத்தங்கள் பற்றி அவர் வேலை 242.
கேனிங் 251, 257.
அவர் உடல் நலிவுறுதல் 263.
லிண்டர்ஸ்ட், ஜான் கோப்ளே பிரபு (1772–1863) 263, 275, 321.
லியோபால்டு, இரண்டாம் பேரரசர் (1747–90–92) முதலாம் பிரான்ஸிஸ், மேரியா தெரியாவின் மகன் 93 117
லிவர்பூல், சார்லஸ், ஜெங்கின்சன், முதலாம் ஏர்ல் பிரபு (ஹாக்ஸ்பரி பிரபு) (1727–1808) 36 51, 78, 85, 149, 155
லிச் பீல்ட் ஹவுஸ் ஒப்பந்தம் 283.
லிட்டன் ஹென்றி (1829–90) 407

லிவர்பூல், ராபர்ட் ஜெங்கின்சன்:
இரண்டாம் ஏர்ல் பிரபு (1770–1828)
லிவர்பூலும் அமின்ஸ் உடன் படிக்கையும் 152.
பீட்டின் இரண்டாம் மந்திரி சபையில் 157.
லிவர்பூலும் போர்ட்லண்டின் மந்திரி சபையும் 171.
போர்த்துறையில் 177.
பிரதம அமைச்சர் 183.
லிவர்பூலும் நெப்போலியன் திரும்புதலும் 193.

லீ

லீட்ஸ் 211, 222, 298.
லீவன்ஸ் 255, 335. 338, 342.
லீட்ஸ், பிரான்ஸிஸ் ஓஸ்பர்ன், ஐந்தாம் டியூக் (1751–99), 85, 109.
லீப்ஸிக் சண்டை (1813) 187, 199.

லூ

லூயி XVIII
பிரெஞ்சு அரசன் (1755–1814–24)
பதினேந்தாவது லூயி அரசனின் பேரன் 189, 191.
லூயி பிலிப்:
பிரஞ்சு அரசன் (1773–1830–48–50)
பிலிப் கொலிட்டின் மகன், 278, 331, 333, 335. 342
லூயி பதினாறும் பிரஞ்சு மன்னர் (1754–74–93)
பதினேந்தாம் லூயியின் பேரன் 71, 115, 117.
லூயி பதினெட்டாம் பிரஞ்சு அரசன் (1755–1814 48–50).
லூன்வில் உடன்படிக்கை (1801) 127.

லெ

லெய்பாச், காங்கிரஸ் (1821) 236.
லெஹ்ஸன், பேரனஸ் (19-வது நூற்றாண்டு) 306.
லெய்சஸ்டர் இயந்திரங்களை உடைத்தல் 238
லெக்ஸிங்டன் சண்டை (1775) 63
லேலார் ஜேம்ஸ் (1849) 395.
லேம்ப், சார்லஸ் (1775–1834) 248, 303.
லேண்ட்ஸ் வோன், ஹென்றி பெட்டி, பிட்ஸ் மாரிஸ் மூன்றாவது மார்க்குவிஸ் (1780–1863)
கிரே தலைமை வகித்தல் 263.
கிரே அரசாங்கத்தில் 270.
சீர்திருத்த மசோதா 275.
ரஸல் அரசாங்கத்தில் 325
லோக்பரோ, அலெக்சாந்தர் வெடர்பர்ன், ரோஸ்லின் ஏர்ல் பிரபு (1733-1805) 147–149

வ

வங்காளம்:
அக்பர் கைப்பற்றுதல்
வங்காளத்தில் வாரன்ஹேஸ்டிங்ஸ் 71
வங்காளத்தில் முஸ்லிம்கள் 91.
வங்காளத்தில் கிளைவ் 93
ஒழுங்குமுறைச் சட்டமும் வங்காளமும் 95, 97.
இந்திய மசோதாவும் 101.

வில

வில்யல், சர்சார்லஸ் (1767–1849) 406

வா

வார்ட்–டபிள்யூ-ஜி (1812–82) 401.
வாட்டர்போயர் (19-வது நூற்றாண்டு) 380.
வரி விதிப்பு:
வட அமெரிக்காவும் வரி வசூத்தலும் 57, 59,
பிட்டும் வரி வசூத்தலும் 85.
நெப்போலினியப் போரில் 125
பீல் வருமான வரியை புதுப்பித்தல் 311

அயர்லாந்தில் 336.
வால்டேயர் 216.
வால்டர், ஜான் (1776–1847) 295.
வாக்குரிமை:
மூன்றும் ஜார்ஜின் ஆட்சி தொடக்கத்தில் 33.
பிட்டும் வாக்குரிமையும் 103.
பாக்சும், கிரேயும் வாக்குரிமையும் 165.
வாக்ரம் சண்டை (1809) 175.
வாட், ஜேம்ஸ் (1736–1819) 13, மில் 407.
வாடர்லூ சண்டை (1815) 193, 197.
வார்சா, பெரும் கோமகாநாடு, 150, 175.
வார்பர்ட்டன், வில்லியம் (1698–1791) 25.
வால்மி சண்டை (1791) 117.
வால் சரண் 175.
வான்குவ்ர் 109.
வான்சி டார்ட், நிகொலஸ், பகஸ்லி, முதற் பிரபு (1766–1851) 149.
வாக்குரிமை:
பிரதிநிதித்துவத்தில் சமத்துவமின்மை 211.
லிவர்பூல் 259.
ஐரிஷ் சொத்துரிமை தகுதி 267.
சீர்திருத்த மசோதா 271–5 277.
பூட்டும், கிரன்விலும் விக்குகளும் 34, 35.
விலக்யின் வழக்கும் விக்குகளும் 39, 41.
கட்சியாக உருவாதல் 41

வி

விக்குகளும் ராடிகல்களும் 51, 53.
விக்குகளும் அமெரிக்கப் புரட்சிப் போரும் 63.
விக்குகளும் பர்க்கும் 112.
விக்குகளும் பிரஞ்சுப் புரட்சியும் 156, 161.
விக்குகளும் ஐரிஷ் பிரச்சினையும், 139, 141, 143.
விக்குகளும் காப்பாள இளவரசரும் 167.
'மவுண்டன்' கட்சியினர் 167.
விக்குகளும் கத்தோலிக்க விடுதலையும் 169.
விக்குகளும் தீபகற்பப் போரும் 179.
விக்டோரியா சண்டை (1808) 188.
விட்பிரட், சாமுவேல் (1758–1815) 177, 191
விட்னி, இலி (1765–1825) 161.
விண்டாம், வில்லியம் (1750–1810) 119, 136, 149 167.
விமீரா சண்டை (1801) 173.
சமாதானம் (1809) 175.
மாநாடு (1814–15) 191–9.
விக்டோரியா :
இங்கிலாந்து இராணி (1819–37–1901.
கெண்ட் கோமகனை எட்வர்டின் மகன்.
அவருடைய இளமைப் பருவம் 305–7.
முடியாட்சியின் தன்மை 307.
விக்டோரியா ஜர்மன் பேரரசி (1840–1901)
விக்டோரியாவின் முதல் மகன் 307.
விக்டோரியா ஆப் கோபர்க் கோமகள் (1786–1861) 306, 307.
விக்குகள் I
கேனிங் 251.
கிரே அரசாங்கம் 269–71.
சீர்திருத்த பாராளுமன்றம் 279.
1830-ஆவது ஆண்டு சட்டங்கள் 283.
விக்குகள் II
தானியச் சட்டங்கள் 322.
பீலூட்டுகளின் ஆதரவில் நிற்பது 323
ஓ'கானெல் 384, 385.
மெக்காலே 403.

வில்லியம்ஸ் ஹென்றி (1792–1867) 373.
விட்பிரட் சேம்வெல் (1758–1815) 218, 232, 290.
வில்பர் போர்சு. வில்லியம் (1759–1853) 251, 287–9, 228, 352, 398,
வில்கிஸ், ஜான் (1727–97)
இவர் வழக்கில் ஏற்பட்ட சில சட்ட நுணுக்கங்கள் 209.
வில்லியம் IV இங்கிலாந்து அரசன் ஹனேவர் எலக்டர் (1765–1830–37)
ஜார்ஜ் III-இன் மூன்றாவது மகன் பட்டத்திற்கு வருதலும், தேசிய உணர்ச்சியும் 270.
கிரே 271.
சீர்திருத்த மசோதா 273, 277.
மரணம் 305.
வில்க்ஸ், ஜான் (1527–57)
சாத்தமும் வில்க்சும் 38.
சிறைப்படல் 38.
மிடில் செக்ஸின் உறுப்பினராதல் 45.
சிறைப்படல் 47.
காமன்ஸ் சபையும் வில்க்சும் ராக்கிங்காம் விக்குகளும் வில்க்சும் 51.
வில்க்சும் பாராளுமன்றத்தின் மக்களிடையேயுமிருந்த உறவுகளும் 53,
வில்சன் தாமஸ் (1663–1742) 27.
வில்பர் போர்ஸ், வில்லியம் (1759–1833) 119, 131, 69, 81, 103–5.
வில்லியம், ஐந்தாம், ஆரஞ்சு இளவரசன் (1806) 123.
வில்லிவை, பைரிடி (1763–1806) ஃபிரெஞ்சு கடற்படைத் தலைவர் 163.
வில்லி, கிரிஸ் டோபர் (1740–1822) 67.
வினிகர் உளில், 143.
வின்செல்ஸியா, ஜார்ஜ் பின்ச்-ஹேட்டன் 9 வது ஏர்ல் (1791–1858) 267.
விவசாயம்:
19 நூற்றாண்டில் விவசாயத்தின் நிலை 224.
1830-இல் விவசாயத் தொழிலாளர்கள் 269
1840-இல் 313.

வெ

வெலிங்டன் (நியூஜிலந்து) 376.
வெண்ட் வர்த், வில்லியம் (1793–1872) 347, 371.
வெர்டன் உடன்படிக்கை 309.
வெரோனா காங்கிரஸ் (1822) 236.
வெல்லஸ்லி, ரிச்சார்ட் வெல்லெஸ்லி மார்குவிஸ் (1760–1842)
அயர்லாந்தில் 261.
ஆல்தார்ப் 282.
வெலிங்டன், ஆர்தர் வெல்லஸ்லி முதல் டியூக் (1769–1852)
லிவர்பூல் அரசாங்கத்தில் சேருதல் 233.
கத்தோலிக்க விடுதலை 242, 267.
கேனிங்கின் கேபினட் 263.
கேனிங்கைட்டுகளுடன் முறிவு 265.
1830 தேர்தல் 270.
சீர்திருத்த மசோதா 275–7.
பீல் கேபினட்டில் 309.
வெஸ்ட் மினிஸ்டர் ரெவ்யூ 251.
வெஸ்ட் மோர்லண்டு, ஜான் பேன் பத்தாம் ஏர்ல் பிரபு (1759–1841) 141.
வெட்டர்பர்ன் அலக்சாந்தர், லாக்பரோ முதற் பிரபுவும் ரோஸ்வின் ஏர்லும் (1733–1805) 52, 77, 119.
வெண்டிலா 115, 121.
சமாதானம் (1783) 75–2, 99.
வெல்லஸ்லி, ரிச்சர்ட் வெல்லஸ்லி (1760–1842)
திப்புவின் ஆதிக்கத்தை யழித்தல் 131.
வெல்லஸ்லியும் திறமைமாளர் மந்திரி சபையும் 167.

வெளி நாட்டு துறைச் செயலர் 177.
வெல்லிங்டன், ஆர்தர் வெல்லஸ்லி, முதலாம் டியூக் (1769–1852)
வெல்லிங்டனும் திப்புவும் 131.
போர்ச்சுகலில் இறங்கி, வீமீராவில் ஜூனட்டைத் தோற்கடித்தல் 173.
டார்ரஸ், வெட்ராஸ் அரண்கள் அமைத்தல் 181.
விக்டோரியாவில் ஜோசபை முறியடித்தல் 188.
நீலாசைக் கைப்பற்றுதல் 189
வெல்லிங்டனும் வாட்டர்லூவும் 193–7.

வே

வேல்ஸ் ஏ-ஆர் (1823-1913) 407.
வேன்சிடார்ட், நிக்கலஸ் முதல் பெக்ஸிலி பிரபு 233, 242.
வேகான் ஹென்றி (1622-95) 218
வேக்பீல்ட், எட்வார்ட்-கிப்பன் (1796–1862) 251, 347, 351, 359, 373, 374.
வேலஸ் தாமஸ் பிரபு (1768–1844) 236-8. 242.
வேமவுத், தாமஸ்தின், மூன்றும் வைகவுண்ட் பிரபு (1734–96) 45. 47, 51, 67.
வைட் கில்பர்ட் (1720–93) 218.
வேட்லி ரிச்சார்ட் (1787–1863) ஆர்ச் பிஷப் 399.
வோர்ட்ஸ்வர்த், வில்லியம் (1702–1850) 228, 329, 398.

ஹ

ஹண்ட் ஹென்றி (1773–1835) 232, 238, 277.
ஹங்கேரி கோஸத் 303.
கிளர்ச்சி 340.
ஹட்ஸன் ஜார்ஜ் (1800–71) 315.
ஹஸ்கின் வில்லியம் (1770–1830).
லிவர்பூல் அரசாங்கத்தில் 232.
பொருளாதாரக் கொள்கை 237.
கட்சிப் பிளவுகள் 242.
பேரரசு வர்த்தகம் 245.
கத்தோலிக்கப் பிரச்சினை 261.
கேனிங்கின் கொள்கையைப் பின்பற்றுதல் 265.
மரணம் 269.

ஹா

ஹார்டின்ஞ், ஹென்றி : முதல் வைகவுண்ட் (1785–1856)
பீல்ட் மார்ஷல் 309.
ஹட்ஸன்பே கம்பெனி 353.
ஹார்னி ஜீலியஸ் (19-வது நூற்றாண்டு) 298.
ஹாங்காங் 330, 338, 345, 384.
ஹாட்க்ஸ்கின் தாமஸ் (1783–1869) 297;
ஹாடண்டாஸ் 377.
ஹாலந்து ஆரஞ்சு கலகம் 189.
பெல்ஜியம் இணைக்கப் படுதல் 199.
பெல்ஜியம் புரட்சி செய்தல் 269, 278.
ஹாலந்து, ஹென்றி பாக்ஸ் முதல் பிரபு (1773–1840) 232, 269,
ஹார்னர், பிரான்சிஸ் (1778–1817) 232.

ஹி

ஹில், சர் ரவ்லேண்ட் (1795–1879) 285.

ஹீ

ஹீராட் 303.

ஹெ

ஹெகல் ஜார்ஜ் (1770–1831) 248.
ஹெலிகோலேண்ட் 330,

ஹே

ஹேபியஸ் கார்பஸ் சட்டம் 209, 238
ஹேலாம் ஹென்றி (1777–1859) 249.

ஹேப்ஸ்பர்குகள் வியன்ன உடன்படிக்கை 234.
ஹேரோபி டட்லி ரைடர். முதல் ஏர்ல் (1762-1847) 275.
ஹேலிபாக்ஸ் (என். எஸ்.) 354.
ஹேம்டன் ரென் (1893–1868) பிஷப் 326, 400.

ஹோ

ஹோகார்த் வில்லியம் (1697-1764) 216.

ஹி

ஹியூம்; ஜோசப் (1777–1855) 236.

ஸ்

ஸ்காட்லாந்து வாக்குரிமை 213.
திருச்சபை கலைதல் 317,
ஸ்காட், சர் வால்டர் (1771–1832) 199, 220, 278.
ஸ்மித் ஆடம் (1723-90) 215, 216.
ஸ்மித்சர் ஹெரி (1787–1860) 382.
ஸ்மித், சவுத்வுட் (1788–1861) 314.
ஸ்காட், சர்வால்டர் (1771–1832) 199.
ஸ்காட்லாந்தும் பிரஞ்சுப் புரட்சியும் 117, 119.
ஸ்டூவர்ட், சர் சார்லஸ் (1653-1801).
தளபதி 161.
ஸ்டோவெல் பிரபு வில்லியம் ஸ்காட் (1745-1836) 173.
ஸ்பிட் ஹெட் கலகம் 165.
ஸ்பிடால் பீல்டுகள் 41.
ஸ்பீன் உளாம் லண்டு 125, 150.
ஸ்பெயின் பிரஞ்சுத் தலையீடு 236, 248, 254.
புரட்சி 248.
அமெரிக்கக் காலனிகள் 255.
அடிமை வர்த்தகத்தை ஒழித்தல் 286,
கார்லிஸ்டுப் போர்கள் 301.
ஸ்பானியத் திருமணங்கள் 328.
ஸ்பெயினும் வெர்செயில்ஸ் சமாதானமும் 77.
ஸ்பெயினும் பசிபிக்கில் பிரிட்டிஷ் நாவாய் நடப்பும் 109.
நெப்போலியனப் போரில் வலிமையின்மை 121
செயின்ட் வின்சென்டில் கடற்படை அழிதல் 125.
நெப்போலியனுடன் சமாதானம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தப் பெறுதல் 157.
ஜோசப் நெப்போலியனுக்கெதிராகத் தேசீயக் கிளர்ச்சி 173
ஸ்மிடன், நூன் (1724-92) 16.
ஸ்மித், ராபர்ட், காரிங்டன் முதற் பிரிவு (1752-1838) 85.
ஸ்பென்ஸ் தாமஸ் (1750-1814) 230, 297.
ஸ்பிடால் பீல்ட்ஸ் 244.
ஸ்டான்லி ஆர்தர் (1815-81) 407.
ஸ்டீபக், சர் ஜேம்ஸ் (1789-1859) 289, 350.
ஸ்டீபன் ஜோசப் (1805-79) 298.
ஸ்டீபன்ஸன், ஜார்ஜ் (1781–1848) 249, 315.
ஸ்விட்சர்லாந்து பிரான்ஸ் மானியம் வழங்குதல் 127, 153.
நடுநிலைமை உறுதி செய்யப் பெறுதல் 197.
1805 ஆம் ஆண்டு கூட்டிணவு 159.
ஸ்வீடனும் ரஷ்யப் பின்லாந்து படையெடுப்பும் 173.
போன பார்ட் 183.
நார்வேயை இணைத்துக் கொள்ளல் 199.
ஸ்டாக்மார். கிரிஸ்டியன் பேரன்வான் (1787–1863) 306, 342,
ஸ்டர்ஜ், ஜோசப் (1793–1859) 299.
ஸ்டர்ட், சார்லஸ் (1795-1869) 369,

ஷெ

ஷெல்லி பி. பி. (1792-1822) 218, 234, 248, 249.

ஷே

ஷேப்ட்ஸ்பரி, அந்தோனி ஆஷ்லி 7-வது ஏர்ல் (1801–85) 293, 319, 321, 326.
ஷார்ப், கிரான்வில் (1735-1813) 103.
ஷெஃபீல்டு 112, 116, 119.
ஷெல்பர்ன், வில்லியம் (பெட்டி, இரண்டாம் ஏர்ல் பிரபு லான்ஸ் டவுன் முதலாம் மார்குவிஸ் பிரபு) (1737–1805).
பூட்டின் தலைமையில் பதவி யேற்றல் 35.
ஷெல்பர்னும் சாத்தமும் 37.
ஷெல்பர்னும் ராக்கிங்காமின் முதல் மந்திரிசபையும் 41.
கிராப்டனின் மந்திரி சபை யில் 43.
பதவியிலிருந்து வி ல க் க ப் பெறுதல் 49
ஷெல்பர்னும் நார்த்தின் வீழ்ச் சியும் 69.
ஷெல்பர்னும் ராக்கிங்காமின் இரண்டாம் மந்திரி சபையும் 73.
அவரது மந்திரி சபை 75.
அமெரிக்காவுடன் சாமாதா னம் 73–75.
வீழ்ச்சி 78, 79.
ஷெல்பர்னும், அயர்லாந்தும் 137.

ஹ

ஹங்கேரியும் இ ர ண் ட ா ம் ஜோசபும் 107.
ஹண்ட்மான், பெ ஞ் ச மி ன் (1704-76) 13.
நெப்போலியன் கைப்பற்று தல் 155.
பிரஷ்யாவும் ஹனேவரும் 165, 187.
ஹாப்டன், ரால்ப், முதற் பிரபு (1593–1652) 177, 179.
ஹார் கிரேவ்ஸ், ஜேம்ஸ் (1778) 9.
ஹார்டி, தாமஸ் (1752–1832) 115.
ஹார்ரோபி, டட்லி ரைடர், முதலாம் ஏர்ல் பிரபு (1762–1847) 197.
ஹார்னர், பிரான்ஸிஸ் (1778–1817) 177, 179.
ஹாரிஸ், ஹோவல் (1714-73) 27.
ஹாலண்டு, ஹென்றி, மூன்றாம் பிரபு (1773–1840) 167, 179.
ஹாலந்தும் ஆஸ்திரிய வாரி சுரிமை.
ஹாலந்தும் வெர்செயில்ஸ் உடன்படிக்கையும் 77.
ஹாலந்தும் பிரஷ்யாவும் 107.
ஹாலந்தும் பிரஞ்சுப் புரட்சி யும் 119
ஹாலந்தும் அமின்ஸ் உடன் படிக்கையும் 153.
நெப்போலியனால் இணைக்கப் பெறல் 189.
ஆரஞ்சுப் புரட்சி 189.
பெல்ஜியம் இணைதல் 199.
நெப்போலியனும் ஹான்சி யாடிக் சங்கமும் 173
ஹான்வே, ஜோனஸ் (1712–86) 19.

ஹீ

ஹீட், சாமுவேல், முதலாம் வைகவுண்ட் பிரபு (1724–1816) 159.

ஹெ

ஹெய்டி 123, 150.
ஹெல்விடியன் குடியரசு 167.
ஹென்றியார்க் தலைமைக் குரு (1728–1807)
மூத்த போலியின் மகன் 199.

ஹை

ஹைதர் அலி (1722–82) 67, 71, 91, 99.

ஹோ

ஹோ, வில்லியம், ஐந்தாம் வைகவுண்ட் பிரபு (1729–1814) 63, 65.
ஹோலில ஸாரா (1768–97) பிரஞ்சு தளபதி 125, 143.
ஹோஹென்லிண்டன் (1800) 130.

ஜ

ஜமாய்க்கா அடிமை முறை 289.
கலகம் 306.
ஜர்மனி லிபரசித்தை மெட்டர்னிக் ஒடுக்குதல் 234–6.
ஜார்ஜும் வில்லிம் 37–9, 47,
ஜார்ஜும் கிரன்வில் மந்திரி சபையின் வீழ்ச்சியும் 241.
ஜார்ஜும் ராக்கிங்காமின் மந்திரி சபையின் வீழ்ச்சியும் 41.
ஜார்ஜும் அமெரிக்க குடியேற்றங்களும் 44.
ஜார்ஜும் ஜீனியஸிம் அமெரிக்க குடியேற்றங்களும் 49.
அரச திட்டம் 49–51.
கடன்கள் 52.
ஜார்ஜும் அமெரிக்கப் புரட்சிப் போரும் 61, 67.
ஜார்ஜும் நார்த்தின் வீழ்ச்சியும் 69, 73.
ஜார்ஜும் வேல்ஸ் இளவரசரும் 79.
ஜார்ஜும் பாக்ஸ் இந்தியா மசோதாவும் 79.
அதிகாரம் குறைதல் 83, 85.
வெறி பிடித்தல் 86, 105, 149, 153, 177.
காப்பாளர் பிரச்சினை 105–7.
விட்டுக்கொடுக்காத சமாதானத்தை ஆதரித்தல் 131.
ஜார்ஜும் கத்தோலிக்க விடுதலையும் 145, 149, 141, 169
அடிங்டனை முதன் மந்திரியாக ஆக்குதல் 149.
பிட் திரும்ப பதவியேற்றல் 155–7.
ஜார்ஜ் நான்காம், இங்கிலாந்து அரசர், ஹனேவரின் தேர்வாளர் (1762–1820–30)
பாக்ஸும் ஜார்ஜும் 75, 79, 83.
மூன்றும் ஜார்ஜுடன் உறவு, பண்புகள் கடன்கள் 105.
மனவியாருடன் பூசல் 169.
காப்பாளர் அரசாங்கம் 179, 183.
ஜீனியஸ் 49, 51, 53, 71.
ஜீனு சண்டை (1806) 165.
ஜார்ஜ் III இங்கிலாந்தின் அரசன், ஹனேவர் எலக்டர் (1738-60–1820) இரண்டாவது ஜார்ஜின் பேரன், அவர் மரணம் 240.
ஜார்ஜ் IV இங்கில்ாந்து அரசன், எலக்டர் ஆப் ஹனேவர் (1762–1820–30)
அவருடைய தனிப் பட்ட வாழ்க்கை 233–4,
அவருடைய விவாகரத்துத் திட்டம் 240–2.
வெளி நாட்டுக் கொள்கை 255–7.
கேனிங்கை அமைச்சரவையை அமைக்கக் கோருதல் 263, வெலிங்டன் 265.
அவருடைய மரணம் 269.
ஜான்சன் சேம்வெல் (1709–84) 216.

ஜெ

ஜெஃபர்சன், தாமஸ் (1748–1826)
மூன்றும் அமெரிக்க ஜனாதிபதி 150, 185.
ஜெமப்பாய் சண்டை (1792, 117.

ஜென்ஸ், எட்வர்டு (1739-1823) 150.

ஜே

ஜேக்ஸன் ஆண்டிரூ (1767–1845) 7-வது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி 185, 277.

ஜே உடன்படிக்கை (1794) 89.

ஜேக்சன், ஆண்ட்ரூ (1767-1845) ஏழாம் அமெரிக்க ஜனாதிபதி 185.

ஜோ

ஜோசப், இரண்டாம், பேரரசர் (1741–65, 90)
முதலாம் பிரான்ஸிஸ், மேரியா தெரிஸாவின் மகன் 71, 107, 109, 111

ஜோன்ஸி கிரி ஃபிதி (1683-1761) 27.

ஜோவெட் பெஞ்சமின் (1817–93) 407.

ஜூ

ஜூலுக்கள்: 379, 381.

தமிழ் வெளியிட்டுக் கழகம்

சென்னை–9

இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்-II ...	..	சி. வேலாயுதம்	... 9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	...	டாக்டர் திருமதி ஆர். தாமரஜாட்சி	... 12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I	...	தி. சி. மோகன்	... 12—00
4.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-II	...	எம். ஏ. அபூர்வசாமி பி. வி. ஸ்ரீநிவாசன்	... 10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	...	க. முத்தையன்	... 7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II ...	...	சி. வேலாயுதம்	... 11—50
7.	நவீன பாங்கு இயல்	...	க.வெற்றிவேல்	... 7—00
*8.	இந்தியச் செலவாணியும் பாங்கு முறையும்	...	பி. வி ஸ்ரீநிவாசன்	... 5—50
*9.	அரசாங்க நிதி இயல் ...	...	அர. சேஷாசலம்	... 4—75
10.	இந்தியப் பொருளியல்–I	...	எம். பாலசுப்பிரமணியன்	... 10—00
11.	இந்தியப் பொருளியல்–II ...	...	எம். லூர்துநாதன்	... 4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-I	...	சி. சுந்தரராஜன்	... 10—75
13.	நமது பொருளாதாரப் பிரச்சினை-II	...	எஸ். குழந்தைநாதன்	... 10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு–I	...	கீ. சீ. இராமசாமி	... 6—00
15.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-II	...	கீ. சீ. இராமசாமி	... 6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	...	தி. சி. மோகன்	... 5—00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு–I	...	மு. க. சுப்பிரமணியம்	... 11—00

* மூல நூல் (Original Book)

பொருளாதாரம்—தொடர்ச்சி

18.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I ...	மா. குமாரசாமி	...	10—00
19.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I ...	தே. வேலப்பன்	...	10—00
20	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	...	10—00
*21.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆரூடைய பிள்ளை	...	9—50
22.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி ...	கு. ர. கருப்பண்ணன்	...	11—00

வரலாறு

*23.	பிரிட்டன் வரலாறு-I	கி. ர. அனுமந்தன்	...	10—00
*24	பிரிட்டன் வரலாறு-II	கி. ர. அனுமந்தன்	...	9—75
*25.	ஐரோப்பிய வரலாறு-I	டி. வி. சொக்கப்பா	...	4—50
26.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டு காலச் சரித்திரம் ...	வை. விருத்தகிரீசன்	...	15—00
27.	இங்கிலாந்து வரலாறு-I	இரா. அண்ணாமலை	...	13—00
28.	இங்கிலாந்து வரலாறு-II	பா. மாணிக்கவேலு	...	13—00
29.	இங்கிலாந்தின் வரலாறு-I	க. த. திருநாவுக்கரசு	...	15—00
30.	இந்தியாவின் சிறப்பு வரலாறு-I ...	தி. வெ. குப்புசாமி	...	7—50

அரசியல்

*31.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	...	4—75
32.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	...	8—50
33.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ வள்ளுவன் கிளாரன்சு	...	8—50
34.	பன்னாட்டு அரசியல்-I	திருமதி நூர்ஜஹான் பாவா	...	16—00
35.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	வீ. கண்ணையா	...	9—00
36.	பொதுத்துறை ஆட்சி இயல்-II	அ. ஜெகதீசன்	...	7—25

உளவியல்

37. குழந்தை உளவியல்–I	...	கி. ர. அப்புள்ளாச்சாரி	8—00
38. குழந்தை உளவியல்–II	...	கி. ர. அப்புள்ளாச்சாரி	7—00
39. உட்கவர் மனம்	...	சி. ந. வைத்தீஸ்வரன்	7—00
40. இளையோர் உளவியல்–I	...	தி. இரா. அரங்கராசன்	12—00
41. இளையோர் உளவியல்–II	...	தி. இரா. அரங்கராசன்	9—00
42. சமூக உளவியல்	...	என். வேதமணி மாணுவேல்	9—25
43. பிறழ்நிலை உளவியல்	...	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	11—00
44. பித்தரின் உள்ளம்	...	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	3—00

தத்துவம்

45. இந்து சமயத் தத்துவம்	...	ஞா. ராஜர்பகதூர்	5—50

அறவியல்

46. அறவியல்—ஓர் அறிமுகம்	...	கோ. மோ. காந்தி	8—50

அளவையியல்

47. அளவை இயல்—தொடக்க நூல்	...	கி. ர. அப்புள்ளாச்சாரி	2—50

மானிடவியல்

*48. மானிடவியல்	...	ம. சு. கோபாலகிருஷ்ணின்	4—75
49. பண்பாட்டுக் கோலங்கள்	...	கி. பூ. சுப்பிரமணியன்	5—50

சமூகவியல்

சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	...	ஜெ. நாராயணன்	10—00

புவியியல்

*51. ஆசியா–I	...	கொ. சேஷ. நரசிம்மன்	9—50
*52. ஆசியா–II	...	கொ. சேஷ. நரசிம்மன்	8—75
*53. ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	...	ஏ. எஸ். நாராயணன்	8—50

* மூல நூல் (Original Book)

புவியியல்—தொடர்ச்சி

*54.	வட அமெரிக்கா ...	...	குமாரி இரா. அலுமேலு	... 8—25
*55.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	...	திருமதி எச். நியூமன்	... 4—00
*56.	புவிப்புறவியல்-II ...	...	நா. அனந்தபத்மநாபன்	... 6—00
*57.	செய்முறைப் புவியியல் ...	...	சு. ஜெயச்சந்திரன்	... 9—00
*58.	மக்கட் பரப்பியல் ...	...	வி. எஸ். அனந்தபத்மநாபன்	... 6—25
*59.	சமுத்திரவியல் ...	...	கோ. இராமசுவாமி	... 6—50
60.	காலநிலை இயல்-I ...	...	கொ. சேஷ நரசிம்மன்	... 10—00
61.	வளியியலுக்கு ஓர் அறிமுகம் ...	...	கோ இராமசாமி	... 11—00
*62.	புவி அமைப்பு இயல் ...	...	சி, விசுவநாதன்	... 4—75

புள்ளியியல்

*63.	புள்ளியியல்—அறிமுகம் ...	...	சு. வைத்தியநாதன்	... 10—00
64.	புள்ளியியல் முறைகள்-I ...	...	கோ. சண்முகசுந்தரம்	... 10—00
65.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	...	தி. வி. லட்சுமிநரசிம்மன்	... 6—50

விலங்கியல்

*66.	விலங்கியல் ...	...	பெ. மா. அண்ணாமலை இரா. முருகேசன்	... 12—00

பௌதிகவியல்

67.	ஒளி நூல்		ச. சம்பத்து	... 10—00

பொது நூல்கள்

68.	மகாத்மா காந்தி ...	...	சரஸ்வதி தங்கையன்	... 3—25
69.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	...	எஸ். இலட்சுமி	... 3—50
70.	விவசாயப் புரட்சி ...	...	வி. கார்த்திகேயன்	... 8—00
71.	சேமக் கை-நூல் ...	...	ஆ. சுப்பிரமணியன்	... 2—50
*72.	நீரிழிவு—கூயரோகம் ...	...	ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன்	... 2—50

* மூல நூல் (Orignial Book)

தமிழ் வெளியீட்டுக் கழகப் [illegible] வெளியீடுகள், 1966

வரலாறு

கிரேக்க நாட்டு வரலாறு–I, II, III —ஜே. பி. ப்யூரி

அரசியல்

ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர் —பிளாமனட்ஸ்

பொதுத்துறை ஆட்சியலுக்கு ஓர் அறிமுகம்–I, II —லியனர்ட் டி. ஒயிட்

பொருளாதாரம்

பென்ஹாம் பொருளாதாரம்–I, II —ஃபிரடெரிக் பென்ஹாம்

வரவுசெலவுத் திட்டம் —ஆர். ரங்காச்சாரி

தத்துவம்

அறிவு ஆராய்ச்சி இயல் —ஆர். இராமானுஜாச்சாரி

மேலைநாட்டுத் தத்துவம் —ரா. ஸ்ரீ. தேசிகன்

அத்துவித தத்துவம் —T. M. P. மஹாதேவன்

உளவியல்

குமர உள்ளம் —டாக்டர் எம். அறம்

புவியியல்

தென் அமெரிக்கா —எம். என். பத்மநாபன்

தென் கண்டங்கள்–ஆப்பிரிக்கா —எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்

தென்கிழக்கு ஆசியா–புவியியல் —ஜி. கிருஷ்ணமூர்த்தி

கணிதம்

வகை நுண்கணிதம் —டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை

தொகை நுண்கணிதம் —தி. கோவிந்தராசன்

ஆயத்தொலை வடிவகணிதம் —டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை

விஞ்ஞானம்

வானவெளி வெற்றி —டாக்டர் எம். ஏ. தங்கராஜ்

ரேடியோ —டாக்டர் பி. திருஞானசம்பந்தம்

எக்ஸ்-ரே —பெ. ந. அப்புசாமி

பாம்புகள் —பெ. ம. அண்ணாமலை

தாவரம்–வாழ்வும் வரலாறும்–I —டாக்டர் சி. சீனிவாசன்

மருத்துவம்

மகப்பேறும் மாதர் நோயும் —ஏ. கப்ளான்

பாக்டீரியா —சு. சுந்தரம்

பொறியியல்

நீங்களே வீட்டைக் கட்டலாம் —ஆர். எஸ். தேஷ்பாண்டே

சட்டம்

குற்ற இயல் சட்டம் —எம். சண்முகசுப்பிரமணியம்

பொது

கரும்பு —கு. பெரியசுவாமி

உணவும் ஊட்டமும் —தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்

முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் —எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

இவற்றுடன் மேலும் 11 நூல்களும் ஆக 42 நூல்கள்